சிலம்பொலியார்

அணிந்துரைகள்

(தொகுதி – 1)

அணிந்துரையாளர்

முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்

தொகுப்பாசிரியர்

முனைவர் மணிமேகலை புஷ்பராஜ்

பழனியப்பா பிரதர்ஸ்

'கோனார் மாளிகை'

25, பீட்டர்ஸ் சாலை, சென்னை – 600 014.

கிளைகள்

திருச்சி – 620 002 | சேலம் – 636 001

கோயமுத்தூர் – 641 001 | மதுரை – 625 001

ஈரோடு – 638 001.

ISBN : 81-8379-363-0

நூல் விவரப் பட்டியல்

நூலின் பெயர்	சிலம்பொலியார் அணிந்துரைகள் (தொகுதி – 1)
அணிந்துரையாளர்	முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்
தொகுப்பாசிரியர்	முனைவர் மணிமேகலை புஷ்பராஜ்
பொருள்	இலக்கியத் திறனாய்வு
பதிப்பாளர்	பழனியப்பா பிரதர்ஸ் சென்னை – 600 014.
அச்சகம்	ஏஷியன் பிரிண்டர்ஸ், சென்னை – 600 014.
அச்சுப்புள்ளி	10 pt
தாள்	70 ஜி. எஸ். எம். மேப்லித்தோ
நூலின் அளவு	21 x 13.5 செ.மீ. (டெம்மி 1 x 8)
பக்கம்	XLIV + 276 (320 பக்கங்கள்)
முதற்பதிப்பு	ஜூன், 2006
விலை	ரூ. 120–00
© பதிப்புரிமை	ஆசிரியர்க்கு

இலக்கியத் திறனாய்வுக்குச் சிலம்பொலியார் ஒரு கலங்கரை விளக்கம்

– முனைவர் மறைமலை இலக்குவனார்

இக்கால இலக்கியத் திறனாய்விற்காக ஒரு தலைப்பைத் தேர்ந்து பிஎச்.டி. பட்டத்திற்குரிய ஆய்வை நிகழ்த்த வேண்டும் என்னும் விழைவுடன் ஆய்வு மாணவர் ஒருவர் என்னை அணுகினார். நம் ஆய்வாளர்கள் எப்போதும் தலைப்பை ஆய்வு மேற்பார்வையாளர்களிடமே கேட்பது வழக்கம். அதுபோலவே அவரும் என்னிடம் தலைப்பைக் கேட்டார். அப்போது என்னுள்ளத்தில் சட்டென மின்னலிட்ட தலைப்பு, 'சிலம்பொலி செல்லப்பனாரின் திறனாய்வுக் கோட்பாடுகள்' என்பதே யாம்.

இதற்குக் காரணம், தமிழ்த் திறனாய்வில் சிலம்பொலியார் ஆற்றியுள்ள அளப்பரும் பணியின் பெருமையை எடுத்துரைக்க வேண்டிய கடமை ஆய்வாளர்களுக்கு உள்ளது என்பதும், இவ்வகையில் நான் சற்று முந்திக்கொள்ளவேண்டும் எனக் கருதியதுமேயாம்.

✡ ✡ ✡

தமிழில் 'திறனாய்வு' என்றாலே, 'ஆங்கில நூல்களை அடிப்படையாய்க்கொண்டு தமிழ் நூல்களை மதிப்பிடுதல்' என்று பொருள்படும் வகையில் அமைந்துவிட்டது. எழுபதுகளின் இறுதிவரை அட்சன், வின்செசுடர் ஆகியோரின் ஆங்கில நூல்களே வழிகாட்டிநூல்களாய் விளங்கி வந்தமையும், அதற்குப்பின் இன்றுவரை அமைந்துள்ள பாடநூல்கள் ஆங்கில நூல்களின்வழி தமிழை விளக்கும் நூல்களாய்த் திகழ்கின்றமையும் இதற்கு முதன்மையான காரணங்கள் எனலாம். எந்தத் திறனாய்வு

நூலாய் இருந்தாலும் ஆங்கில மேற்கோள்களின் துணையின்றி அமைவதில்லை என்பதும் இங்குக் குறிப்பிட வேண்டிய செய்தியாகும்.

முனைவர் பட்ட ஆய்வாளர்களும் கல்லூரிப் பேராசிரியர்களும் தமிழ் இலக்கியத்தைத் திறனாய்தற்கு ஆங்கில இலக்கிய வாய்பாடுகளையே அடிப்படை அலகு களாய்க்கொண்டு எழுதிவருகின்றமை வெள்ளிடைமலை.

இதன் விளைவாய்த் தமிழ் இலக்கிய மதிப்பீடு செம்மையுறாமலும் செயற்கையாயும் அமைந்துவிட்டதோடு சுவைஞர்களுக்கும் திறனாய்வாளர்களுக்கும் இடையே பெருத்த இடைவெளியும் ஏற்பட்டுள்ளது எனலாம்.

தொன்மைக்காலத்துக்குரிய திருவள்ளுவப்பெருந்தகை நேற்றுத் தோன்றிய பெண்ணியக் கோட்பாட்டின் வழிநின்று சிந்திக்காதது மிகப்பெருந்தவறு எனவும், பாரதியார் தலித்திய நோக்கு அற்றவர் எனவும் கண்டனக்கணைகள் எய்யப் படுவது முறையாகுமா?

ஆழ்ந்திருக்கும் கவியுளம் காணும் கடமையினின்றும் திறனாய்வாளர்கள் பிறழலாமா?

இவை போன்ற வினாக்கள் என் உள்ளத்தை அடிக்கடி அலைப்பது வழக்கம்.

என்னுடைய திறனாய்வு நூல்களில் நானும் ஐரோப்பிய, அமெரிக்கத் திறனாய்வுக் கோட்பாடுகளை விரிவாய் விளக்கியுள்ளேனெனினும் அவை தமிழ் இலக்கிய மரபுக்கு எவ்வகையில் ஏற்புடையவை என்பது குறித்தும் என் விளக்கங்களைத் தவறாது இடம்பெறச் செய்துள்ளேன். மேலும் தொல்காப்பியர், உரையாசிரியர்கள் ஆகியோர் இயம்பியுள்ள தமிழ் இலக்கிய மரபுகளையும் சுட்டி யுள்ளேன்.

ஆயினும், தமிழ் இலக்கியத் திறனாய்வு நூலில் ஆங்கில அறிஞர்களின் மேற்கோள்களைப் பெய்து எழுதும் வழக்கத்தை அறவே தவிர்த்து, முற்றிலும் தமிழ்மை சான்ற நெறி நின்று எழுதுதலே தமிழில் திறனாய்வுக் கோட்பாடுகள் தழைத்தற்கும், சுவைஞர்களைச் செம்மையான நெறியில் ஆற்றுப்படுத்துதற்கும் துணைபுரியும் என்பதே என் கருத்து.

அவ்வகையில் முற்றிலும் தனித்தன்மை வாய்ந்த, தண்ணார் தமிழ்நெறி போற்றும் தமிழ் மரபையே

முழுமையாய்ச் சார்ந்து இலங்கும் திறனாய்வு நெறியைத் தம் நூல்களிலும் கவிதை நூல் மதிப்பீடுகளிலும் போற்றி வருபவரும், என்போன்ற திறனாய்வாளர்களுக்குச் சிறப்புமிக்க வழிகாட்டியாய்த் திகழ்பவரும் சிலம்பொலி செல்லப்பனார் அவர்களேயாவர்.

✡ ✡ ✡

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் கவிதைகள் குறித்து விரிவாயும் விளக்கமாயும் பொழிவுகளை நிகழ்த்துவதுடன் அமைந்துவிடாது பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர்களின் கவித்திறம் குறித்தும் பேருரையாற்றி, வாழும் கவிஞர்களை ஊக்கப்படுத்தும் வள்ளன்மை வாய்ந்தவர், சிலம்பொலியார்.

தமிழ்க்கவிதையில் சங்க இலக்கியம்முதல் இன்றைய பொன். செல்வகணபதிவரை, இரண்டாயிரம் ஆண்டுக்கால இலக்கியப் பெருங்கடலைக் கரைத்துக் குடித்தவர் இவர் ஒருவரே எனல் மிகையன்று.

இவர் ஆற்றிய சீவகசிந்தாமணித் தொடர்பொழிவு, மணிமேகலைத் தொடர்பொழிவு, சீறாப்புராணத் தொடர்பொழிவு ஆகியவற்றைத் தொடர்ந்து கேட்கும் நல்வாய்ப்பைப் பெற்றுள்ளேன். பேசுதற்கு எடுத்துக்கொண்ட இலக்கியம் வழங்கும் நுண்பொருளைத் தேர்ந்து, அதனைப் பல்வேறு இலக்கியங்களுடன் ஒப்புநோக்கிக் கூறி, உரையாசிரியர்போல் புதிய பொருத்தம் வாய்ந்த இலக்கிய நயங்களைக் கூறும் அவரது ஆற்றல் போற்றுதற்குரியது. கணியன் பூங்குன்றன் ஆயினும் கண்ணதாசன் ஆயினும் அவர்கள் வாழையடி வாழையென வந்த தமிழ்மரபில் எத்தகைய தனித்தன்மையைப் பெற்றுள்ளார்கள் என்பது குறித்தும், முந்தைய இலக்கியங்களின் தாக்கம் அவர்களது கவிதையில் காணப்படும் திறம் யாது, பிந்தைய இலக்கியங்களில் அவர்களது தாக்குரவு யாது என்பது குறித்தும் அகச்சான்றுகளும் புறச்சான்றுகளும் வழங்கி ஆய்வுரை நிகழ்த்தும் திறம் சிலம்பொலியார்க்கே சிறப்புற அமைந்துள்ள தனித்திறம் ஆகும்.

இவ்வகையில் அவர் பொழிவுகள் மாலைநேரக் கல்லூரி வகுப்புகளாகவும், என் போன்ற பேராசிரியர்கள் அவர் மாணவர்களாகவும் விளங்கிவருதலும் வெள்ளிடை மலை.

✡ ✡ ✡

அவரது ஆய்வுநுணுக்கம் வாய்ந்த பொழிவுகளும், நடுவுநிலை பிறழா அணுகுமுறையும் அனைத்துக் கவிஞர்களையும் அவர்பால் ஈர்த்ததில் வியப்பில்லை. தமிழ்நாட்டில் கவிதைத் தொகுப்பு வெளியிடுபவர் எவராய் இருந்தாலும், அவர் சிலம்பொலியாரின் அணிந்துரையைக் கேட்டுப் பெற்று அதன்பின்னரே அச்சுக்குக் கொடுப்பது வழக்கம். ஐந்நூறு கவிஞர்களின் நூல்களுக்கு அவர் அணிந்துரை வழங்கியிருப்பார். (நன்கு ஆராய்ந்தால் எண்ணிக்கை இன்னும் அதிகமாகலாமே தவிரக் குறைதற்கு வாய்ப்பில்லை.)

அந்த அணிந்துரைகளையெல்லாம் தொகுத்து வெளியிட்டால் அத்தொகுப்பு இக்காலக் கவிதை குறித்த ஓர் ஆய்வு நூலாய் அமையும் என்னும் கருத்தை அவர் திருமகளார் திருமதி மணிமேகலை அவர்களிடம் தெரிவித்தேன்.

அவர்களும் இத்தகைய எண்ணம் தமக்கு நெடு நாள்களாய் இருப்பதாயும், அணிந்துரை வழங்கப்பட்டுள்ள நூல்களைத் தொகுத்து வருவதாயும் கூறினார்.

அவ்வாறே அவர், அரும்பாடுபட்டுத் தேடிக்கிடைத்த நூல்களின் அணிந்துரைகளைத் தொகுத்து வெளியிட்டுள்ளார். அதன் விளைவாகவே,

'சிலம்பொலியார் அணிந்துரைகள்; தொகுதி–1'

இப்பொழுது உங்கள் கைகளில் தவழ்கிறது.

இத்தொகுப்பில்,

ஈரோடு தமிழன்பன்
கோவி. மணிசேகரன்
அரங்க. சீனிவாசன்
மு. மேத்தா
குன்றக்குடி அடிகளார்

தமிழ்க்குடிமகன்
த. இராமலிங்கம்
பொன். செல்வகணபதி
ந. சுப்பு ரெட்டியார்
விக்கிரமன்

தாராபாரதி
பல்லவன்
சி. இராமசாமி
வாரஸ்ரீ
அழ. வள்ளியப்பா
செல்லகணபதி
செல்வி சித்ரா
தி. லீலாவதி
அமுதபாரதி
கா. மு. ஷெரீபு
சாமி. சிதம்பரனார்
பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
ம. அரங்கநாதன்

ஆகியோர் நூல்களுக்கான அணிந்துரைகள் இடம் பெற்றுள்ளன.

இந்நூல்கள் பல்வேறு வகையின்பாற்படுவன.

காப்பியம், குறுங்காப்பியம், மரபுக் கவிதைத் தொகுப்பு, புதுக்கவிதைத் தொகுப்பு, இலக்கிய விளக்க நூல், ஆய்வு நூல், குழந்தை இலக்கியம், புதினம், சொற்பொழிவுத் தொகுப்பு, கட்டுரைத் தொகுப்பு, சிறுகதைத் தொகுப்பு, திரை இலக்கியம், தன்வரலாறு ஆகிய வகைமைகளில் அமைந்துள்ள நூல்களுக்கான அணிந்துரைகள் இத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

காப்பியம்

அரங்க. சீனிவாசனின் 'காந்தி காதை', மு. மேத்தாவின் 'நாயகம் ஒரு காவியம்' ஆகிய காப்பியங்களுக்கான அணிந்துரைகள் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. இலக்கியத் திறனாய்வைப் பொதுவாக விதிமுறைத் திறனாய்வு, விளக்கமுறைத் திறனாய்வு எனும் இருபெரும் பிரிவுகளில் அடக்கலாம். காந்தி காதையை ஆய்வுசெய்ய முற்படுவோர், தண்டியலங்காரம் கூறும் காப்பிய இலக்கணத்தைக் கட்டளைக்கல்லாய்க்கொண்டு அதன் தரத்தையும் தகுதியையும் எடைபோட்டுப் பார்க்க முயன்றால் அது விதிமுறைத் திறனாய்வாகும். முற்காலக்

காப்பியங்களுக்கும் இக்காலக் காப்பியங்களுக்கும் அடிப்படையும் சமூகப்பின்புலமும் மாறுபட்டவை என்பதால் இத்தகைய விதிமுறைத் திறனாய்வு பொருத்தமற்ற ஒன்றாகும்.

எனவே, இதனைத் தவிர்த்து, ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட காப்பியங்களை முற்றும் கற்றுத்துறைபோகி, அவற்றின் அமைப்பையும் நயங்களையும் நுணுகி ஆய்ந்து, பொருட்சிறப்பாலும் நவிலும் முறையாலும் அவற்றுடன் ஒத்த ஏனைய இலக்கியங்களைச் சுட்டித் தமது ஆய்வை மிகச்சிறப்பாய் நிகழ்த்தியுள்ளார், சிலம்பொலியார். இதனையே வேறு சொற்களில் கூறுவதானால், விளக்கமுறைத் திறனாய்வு, இலக்கியப் பகுப்பாய்வு, இலக்கிய ஒப்பாய்வு ஆகியவை சிலம்பொலியாரின் திறனாய்வுப் போக்குகளாய்த் திகழ்கின்றன எனலாம். ஓர் இலக்கியத்தின் வடிவமைப்பை மட்டுமே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் வடிவமைப்பியல் அணுகுமுறை யாளரும், உள்ளடக்கத்தை மட்டுமே முதன்மையானதாய்க் கருதி அழகியலைப் புறந்தள்ளும் சமூகவியல் அணுகுமுறை யாளரும் இலக்கியத்தின் ஒரு பகுதியை மட்டுமே காண முடியும். இத்தகைய ஒருபாற்கோடல் சிலம்பொலியாரால் கவனமாய்த் தவிர்க்கப்பட்டுள்ளது.

வடிவமைப்பின் அழகில் தோய்ந்து, உள்ளடக்கச் சிறப்பைத் தேர்ந்து, இரண்டும் ஒருங்கியைந்து இலக்கியம் முழுமை பெறுவதை எடுத்துக் கூறும் சிறப்பு சிலம்பொலியார்க்கு மட்டுமே வாய்ந்த சீர்மிகு பண்பாகும். நாம் போற்றிக் கொண்டாடும் ஐரோப்பிய, அமெரிக்கத் திறனாய்வாளர்களிடங்கூட இச்சிறப்பைக் காணல் இயலாது. இருக்கும் நிலையை எடுத்துக்கூறி, நாம் இழந்தவற்றை எண்ணிப்பார்க்கத் தூண்டும் பெரியாரின் அணுகுமுறையும் சிலம்பொலியாரிடம் அமைந்துள்ளமை யால் நூலின் பல இடங்களில் அங்கங்கே நின்று நாம் சிந்தித்துப் பார்க்குமாறு தூண்டிவிடுகிறார்.

எடுத்துக்காட்டுக்கு ஒன்றனைக் கூறலாம். காந்தி காதைக்கு அணிந்துரை வழங்குமிடத்து, தமிழில் நாம் பெருமையாய்ப் போற்றிவரும் இதற்கு முந்தைய காப்பியங்களைப் பட்டியலிடுகிறார். சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை, சீவகசிந்தாமணி, இராமாயணம்,

பெரியபுராணம், வில்லிபாரதம் என்னும் இவ்வேழும் கவிஞர்தம் கற்பனையை அடிப்படையாய்க்கொண்டே புனையப்பட்டவை என்பதையும், அரங்க. சீனிவாசனின் காந்தி காதை வரலாற்றை அடிப்படையாய்க் கொண்டது என்பதனையும் தெரிவிக்கிறார். நாம் போற்றிக் கொண்டாடும் காப்பியங்கள் தமிழின வரலாற்றுக்கும் அக்காலத் தமிழ்ச் சமூகச் சூழலுக்கும் எத்தகைய தொடர்புமற்றவை என்பதை அவர் நமது கவனத்துக்குக் கொண்டுவரும்போதே அக்காப்பியங்கள்பற்றி நாம் கொண்டிருந்த இறுமாப்புச் சுக்குநூறாய் உடைந்து போய்விடுகிறது. தமிழர்தம் தன்மான உணர்வை எடுத்துக்கூறும் சிலப்பதிகாரத்தைத் தவிர ஏனைய காப்பியங்கள் வெறும் கற்பனைப்புனைவுகளே என்னும் உண்மையை உணர்த்துமிடத்துத் தகர்ப்புமையவாத அணுகுமுறையை மேற்கொள்கிறார். சாத்தனாரும் தேவரும், கம்பரும் சேக்கிழாரும், வில்லியும் கொங்குவேளும் அவரவர் காலச் சமூகச் சூழலையும் வரலாற்றையும் எடுத்தியம்பும் வகையில் வரலாற்றுக் காப்பியம் படைத்திருந்தால் நாம் பெருமிதம் கொள்ளக்கூடிய வரலாற்று ஆவணங்கள் கிடைத்திருக்குமே என்னும் எண்ணமும் ஏக்கமும் நம் உள்ளத்தை அலைக்கழிக்கின்றன அல்லவா?

தாம் படித்தவற்றை அல்லது தமக்குப் பிடித்தவற்றை இலக்காய் வைத்துக்கொண்டு, ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட நூலில் அவை இடம் பெற்றுள்ளனவா என்பதைத் தேடிப் பார்த்து விரைந்ததொரு முடிவுக்கு வருதலே இற்றை ஆய்வாளர்தம் அணுகுமுறையாய், செயல்முறையாய் விளங்குகிறது. கடிவாளம் அணிந்துகொண்டு இலக்கிய உலகில் பயணம் மேற்கொள்பவர்களும், பன்னிறக் கண்ணாடிகள் வழியே இலக்கியங்களை நோக்குபவர்களும், தாம் புதிய பார்வை பார்ப்பதாய்ப் பெருமிதம் கொள்வதுடன் பிழைவாய்ந்த முடிவுகளை நிலைநாட்டுதற்கு 'அழிவழக்காடுதலையும் காண்கிறோம்.

தம் சார்புநிலையைச் சற்று ஒதுக்கிவைத்துவிட்டு, ஆய்வுக்கு எடுத்துக்கொண்டுள்ள நூலை முழுமையும் கற்றுத் துறைபோகும் கடப்பாடு ஆய்வாளர்க்கு உளது என்பதைப் பெரும்பாலோர் உணர்வதில்லை.

சிலம்பொலியார் தாம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் நூலைப் பன்முறை பயின்று, அந்நூலின் வடிவமைப்பிலும் பொருட்சிறப்பிலும் ஆழ்ந்து தோய்ந்து, அதன் பின்னரே தமது திறனாய்வை நிகழ்த்துவார் என்பது குறிப்பிடத்தக்கது. ஐந்து காண்டங்களாய்ப் பகுக்கப்பட்டு, ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களால் இயன்ற காந்தி காதையை முழுமையும் முனைந்து கற்று, அதன் முதற்காண்டமாகிய பாலகாண்டத்தைப்பற்றி இருபத்துமூன்று பக்கங்களில் ஓர் அணிந்துரையை வழங்கியுள்ளார், சிலம்பொலியார்.

காந்தியடிகளைக் குறிக்கக் கவிஞர் பயன்படுத்திய சிறப்பு வாய்ந்த சொற்றொடர்களாய் முப்பத்தொரு தொடர்களைச் சிலம்பொலியார் பட்டியலிடுகிறார் (பக். 48-49). நயவுரைகள், கருத்துரைகள் என்று அவர் வகுத்துக் கூறுவதைக் காணும்போது இவ்வணிந்துரை பிஎச்.டி. பட்டத்திற்குரிய ஆய்வுச்சுருக்கம் போலத் தோற்றமளிக்கிறது. அவரது ஒவ்வோர் அணிந்துரையுமே இங்ஙனம் ஆழம் வாய்ந்தே அமைந்துள்ளது.

முந்தையோர் மொழிபொருள் என்னும் தலைப்பில் காந்தி காதையுடன் ஒப்பு நோக்கத்தக்க ஏனைய இலக்கியங்கள் அவற்றின் சூழலும் நயமும் தோன்ற எடுத்துக்கூறப்பட்டுள்ளன. திருக்குறள், குறுந்தொகை, கம்பராமாயணம், அரிச்சந்திர புராணம், நன்னூல், ஈங்கோய்மலை எழுபது, விறலிவிடு தூது எனப் பல்வேறு இலக்கியங்களின் தாக்கம் காந்தி காதையில் அமைந்துள்ள திறத்தை அவர் சுட்டிக்காட்டும்போது, காப்பியப் படைப்பாளி அரங்க.சீனிவாசனின் பன்னூற்புலமை மட்டுமா வெளிப்படுகிறது, அதனை ஆய்ந்து கண்ட சிலம்பொலியாரின் பரந்துபட்ட பன்னூற்புலமையுமன்றோ நம் உள்ளத்தைக் கவர்ந்து நிற்கின்றது.

மு.மேத்தாவின், 'நாயகம் ஒரு காவியம்' என்னும் காப்பியத்திற்கு வழங்கியுள்ள அணிந்துரை சிலம்பொலி யாரின் இலக்கியப் புலமையுடன் இசுலாமியச் சமயநூற் புலமையையும் புலப்படுத்துகின்றது. அணிந்துரையின் பின்னிணைப்பாய் அவர் வழங்கியுள்ள விரிவான அடிக்குறிப்புகள் இக்காப்பியத்தைப் பயிலும் ஏனைய சமயத்தார்க்குப் பெருந்துணை புரியும் என்பதில்

ஐயமில்லை. நமது அணிந்துரைகளை ஆய்வுரைகளாகவே வழங்கும் சிலம்பொலியாரின் ஆய்வுநுட்பத்திற்கு இது மற்றொரு சான்று எனலாம்.

புதுக்கவிதை, மரபுக்கவிதை, இசைப்பாடல் ஆகிய மூன்றனையும் இணைத்து மு.மேத்தா இக்காப்பியத்தைப் படைத்துள்ளார். இதனையும் நயம்படப் போற்றுகிறார், சிலம்பொலியார். "புதுக்கவிதை, மரபுக்கவிதை, இசைப்பாடல் ஆகியவற்றை இணைத்து இக்காவியத்தை 'முக்கனி'த் தோப்பாக்கியிருக்கிறார், மேத்தா. தோப்புக்குள் நுழைவோம். இறைவன், இறுதி நபி, இறைமறை ஆகிய முக்கனிகளையும் சுவைத்து மகிழ்வோம்" என்று வடிவமைப்புக்கும் உள்ளடக்கத்துக்கும் ஒரு பொருத்தத்தைக் கண்டு கூறுகிறார். படைப்பாளனே நினைத்துப் பார்த்திராத புதுமைகளைப் படைப்பில் கண்டு கூறும் இத்திறம் திறனாய்வாளரை ஒரு கூட்டு ஆசிரியராய் - இணையாசிரியராய் - இயங்கச்செய்கிறது.

ஓர் இலக்கியத்தைப் படைத்துக்கொண்டிருக்கும் போதுதான் படைப்பாளி ஆசிரியராய் விளங்குகிறான். அப்படைப்புப்பணி நிறைவுற்றதும் அவன் அப்படைப்புடன் எத்தகைய தொடர்புமற்றவனாகிவிடுகிறான் என்னும் கோட்பாட்டை இங்குச் சுட்டிக்காட்ட விழைகிறேன்.

சிலம்பொலியார் ஒவ்வொரு நூலுக்கும் அணிந்துரை வழங்கும்போது அந்நூலின் இன்னோர் ஆசிரியராய் மாறிவிடுகிறார்.

நபிகள் நாயகத்தின் வாழ்க்கை வரலாற்றை மு.மேத்தா பாடியமைக்கும் ஒரு சுவையான பொருத்தத்தைக் கண்டுபிடிக்கிறார்.

"இந்தப் பூமி உருண்டையைப் புரட்டிவிடக்கூடிய நெம்புகோல் கவிதையை உங்களுள் யார் பாடப் போகின்றீர்கள்?" என்னும் மேத்தாவின் புகழ்பெற்ற பாடல் அடிகளை எடுத்துக் கூறி, 'இவ்வாறு பாடிய கவிஞர் மேத்தா நெம்புகோலையே பாட முன்வந்திருக்கிறார். ஆம். இப்பூமி உருண்டையைத் தம் உரையாலும் செயலாலும் புரட்டி விட்டுள்ள நபிகள் நாயகம்பற்றிப் பாட முன்வந்திருக்கிறார்' எனப் புதியதொரு விளக்கம் வழங்குகிறார், சிலம்பொலியார்.

புதுக்கவிதையில் புகழ் நிறுவியுள்ள மேத்தாவின் நூலுக்கான அணிந்துரையை ஒரு புதுக்கவிதை அமைப்பிலேயே நிறைவு செய்கிறார்.

மேத்தா மேத்தா
இத்தகைய
அரிய காவியங்களை
மேலும் தா மேலும் தா

என்னும் நிறைவு அடிகள் அணிந்துரைக்கு மேலும் சுவை சேர்க்கின்றன.

மேற்குறித்த இரு காப்பியங்களின் அணிந்துரைகளையும் படிப்போர் சிலம்பொலியாரின் திறனாய்வு அணுகுமுறைபற்றிய தெளிவான பார்வையைப் பெறலாம். தமிழ் இலக்கண அளவுகோல்களை அடிச்சட்டமாய்க் கொண்டோ, ஆங்கில இலக்கியத் திறனாய்வு அளவைகளை வரையறைகளாய்க் கொண்டோ படைப்பாளியின் ஆற்றலைக் குறைத்து மதிப்பிடும் விதிமுறைத் திறனாய்வு சிலம்பொலியார்க்கு உடன்பாடான ஒன்றன்று; முன்மாதிரிகளை வைத்துக்கொண்டு இப்படித்தான் ஒரு காப்பியம் அமைய வேண்டும் என்னும் முடிபுமுறைத் திறனாய்வையும் இவர் ஏற்கவில்லை. ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள காப்பியங்களை ஆழ்ந்து கற்று, அவை நல்கும் இலக்கிய இன்பத்தை முழுதுமாய்த் துய்த்து, அதன்பின், 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' எனத் தாம் கற்ற இலக்கியங்களின் கட்டமைப்பையும் அவற்றுள் காணப்படும் இலக்கிய நலன்களையும் நுணுகி ஆய்ந்து, அவற்றை வகைதொகைப்படுத்தி அளிப்பதே சிலம்பொலியாரின் அணுகுமுறையாய் விளங்குகிறது.

இங்கிலாந்திலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் திறனாய்வுக் கண்ணாடிகளை இறக்குமதி செய்து கொள்வோர் இதனைப் பின்பற்றவேண்டும்.

குறுங்காப்பியம்

இந்நூலில் சிலம்பொலியார் வழங்கிய அணிந்துரையினைப் பெற்றிருக்கும் ஒரே ஒரு குறுங்காப்பியம், கா.மு. செரிபு இயற்றிய 'மச்சகந்தி'யாகும். வேறு எக்குறுங்காவியமும் இடம் பெறவில்லை. தேவவிரதன் தன் தந்தை சந்தனு, மீனவர் தலைவன் மகள் மச்சகந்தியைத்

திருமணம் முடிப்பதற்காகத் தனக்குரிய அரசுரிமையைத் தியாகம் செய்துவிட்டுக் 'கடும் சூளுரையாளன்' (வீடுமன்) எனும் சிறப்பினைப் பெறுகிறான். இதுவே, இக்குறுங் காப்பியத்தின் மைய நிகழ்ச்சி ஆகும். இந்நூலுக்கு மச்சகந்தி என்னும் பெயரைக்காட்டிலும் 'வீடுமன் சூளுரை' என்னும் பெயரே (தலைப்பே) பொருத்தமாய் இருக்கும் எனச் சிலம்பொலியார் கருத்துரைக்கிறார். இக்குறுங்காப்பியத்தில் திருக்குறள் கருத்துகள் இடம் பெற்றுள்ள சிறப்பினையும், பாத்திறமும் சொல்லாட்சியும் பாரதியாரை நினைவூட்டும் வகையில் எழுச்சிபெற்றுத் திகழ்வதனையும் சிலம்பொலியார் எடுத்துக் கூறுகிறார்.

கா.மு. செரீபு அவர்களின் முதிர்ச்சியையும் ஆற்றலையும் மனத்துட்கொண்டு, "ஐயா அவர்களின் தெளிந்த புலமை, தீந்தமிழ் நடை, சிந்தனைச் செறிவு ஆகியவற்றிற்கு ஓர் எடுத்துக்காட்டே இக்குறுங்காப்பியம்" எனச் சிறப்பித்துக் கூறுமிடம், வரிசையறிந்து போற்றும் சிலம்பொலியாரின் வள்ளன்மைக்கு ஒரு சான்றாகும்.

மரபுக்கவிதைத் தொகுப்பு

மரபுக்கவிதைத் தொகுப்புநூல்கள் ஆறனுக்கான அணிந்துரைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. ஈரோடு தமிழன்பனின் 'தமிழன்பன் கவிதைகள்' என்னும் நூலுக்கான அணிந்துரை இந்நூலின் முதல் கட்டுரையாய் இடம்பெற்றுள்ளது.

பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர்களுள் பகுத்தறிவியக்க நெறியினின்றும் வழுவாமல், காலத்திற் கேற்ற படிநிலை வளர்ச்சி பெற்று, விரிவான சமூகப் பார்வையும் சமவுடைமை ஓர்மையும் கொண்டு, புத்தம் புதிய அடிக்கருத்துகளும் புதுமை வாய்ந்த கலைநுணுக்க உத்திகளும் தமது கவிதைகளில் மிளிர்ந்திட இற்றைக் கவிதையைச் செழுமைப்படுத்தி வருபவர் தமிழன்பன் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

தமது படைப்புகளால் தமிழுக்குப் பெருமை சேர்த்துவரும் அக்கவிஞரை அவரது இளமைப் பருவத்திலேயே தமிழ்நாட்டுக்கு அடையாளம் காட்டியவர் இருவர். ஒருவர், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்; மற்றொருவர், சிலம்பொலி செல்லப்பனார். பாரி-கபிலர்,

பேகன்-பரணர், அதியமான் - ஔவை என்னும் வரிசையில் சிலம்பொலியார்-தமிழன்பன் என்னும் இணையையும் சேர்த்துக்கொள்ளலாம்.

இன்னார் இனியர் என வேறுபாடு கருதாது தமிழ்நாட்டின் அனைத்துக் கவிஞர்களையும் தலைமேல் வைத்துக் கொண்டாடும் தகைமை வாய்ந்தவர் சிலம்பொலியார் என்பதில் ஐயமில்லை. எனினும், காலமும் சூழலும் இவரையும் தமிழன்பனையும் எழுமையும் பிரியா விழுமிய நட்புடையோராக்கின. ஆழ்ந்த நட்பின் வெளிப்பாடாய்ப் பல சொற்கள் இவ்வணிந்துரையில் இடம் பெற்றுள்ளமைக்குக் காரணம் இதுவேயாகும்.

எழிலார்ந்த கவிஞர்	(பக். 1)
கவிக்கொல்லர்	(பக். 1)
முறைதிறம்பாக் கவிஞர்	(பக். 1)
முத்திறக் கவிஞர்	(பக். 1)
கற்போர் நெஞ்சையாளும் கவியரசர்	(பக். 1)
நம் கவிஞர்	(பக். 2, 4, 6, 9, 15, 16, 17)
நம் பாவலர்	(பக். 2)
நம் புலவர்	(பக். 18)

என்னும் தொடர்கள் இருவருக்குமிடையேயான கெழுதகை நட்பைப் புலப்படுத்துவனவெனினும், நடுவுநிலை வழுவாது திறனாயும் பெருந்தகை சிலம்பொலியார் தலைசிறந்த கவிஞர் ஒருவரைத் தமிழகத்துக்கு அடையாளம் காட்டினார் என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். புரட்சிக் கவிஞரால் போற்றிக் கொண்டாடப்பட்ட இக்கவிஞர், பின்னாளில் அறிஞர் கைலாசபதியாலும் பாராட்டப் பட்டமையும், சென்னைப் பல்கலைக்கழகம் இவர் படைப்புகள் குறித்துத் தேசியக் கருத்தரங்கம் நடத்திச் சிறப்பித்தமையும், இவரை இனியும் இருட்டடிப்புச் செய்ய முடியாது எனத் தெளிந்து சாகித்திய அக்காதெமி விருது வழங்கிப் பாராட்டியமையும் நினைவிற்கொள்ளத்தக்கன.

தம் நண்பர் என்பதற்காகவன்றித் தமிழுக்குப் பெருமை சேர்க்கும் தலைசிறந்த பாவலர் என்பதைத் தொலை நோக்குடன் உணர்ந்தே சிலம்பொலியார் தமிழன்பன் அவர்களை உச்சிமேற்கொண்டு மெச்சியுள்ளார் என்பதை மறந்துவிடக்கூடாது.

தமிழன்பன், கவிதைக்கு வகுக்கும் இலக்கணம், கலைநுணுக்கம் வாய்ந்த அவரது கற்பனைத்திறம், தமிழைப் போற்றும் திறம், வினாக்களைப் படைத்து எதிர்மறை விடைகள்மூலம் செய்திகளை உணர்த்தும் பாங்கு, உவமை, உருவகம், சிலேடை, மடக்கு, திரிபு முதலான அணிகளை அழகுறப் படைத்தளிக்கும் ஆற்றல், கவிதையின்மூலம் இலக்கண விளக்கம் வழங்கும் புதுமை, சுவைமிக்க முரண்கள், மெய்ப்பாடுகள், நுண்ணுணர்வுகள் ஆகியவற்றை நயமுறப் புலப்படுத்தும் சதுரப்பாடு, கவிதையில் அறிவியல் கருத்துகளை இணைத்துக் கூறும் தனித்தன்மை ஆகிய அனைத்தையும் சான்றுகளுடன் இருபத்தொரு பக்கங்களில் எடுத்துக்காட்டித் தமிழன்பன் இக்காலக் கவிஞருள் முதன்மையிடம் பெற்று மிளிர்ந்தொளிரும் பெற்றியர் என்பதனை நிறுவிக்காட்டும் சிலம்பொலியாரின் ஆய்வுத் திறம் பாராட்டுக்குரியது.

தாராபாரதியின் 'புதிய விடியல்கள்' என்னும் கவிதைத் தொகுப்புக்கு வழங்கியுள்ள இவரது அணிந்துரையும் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.

"கவிஞர் தாராபாரதி மரபுக்கும் புதுமைக்கும் ஓர் இணைப்புச் செய்வதுபோல இந்நூலை யாத்துள்ளார்" எனக் கூறுவதுடன், "யாப்புக் குறையாத மரபு வடிவில் புதுமை எண்ணங்களைச் சிறப்பாய்ப் பாய்ச்சியிருக்கிறார்; இதுவே அவர் வெற்றிக்குக் காரணமாகிறது" எனத் தாராபாரதி கவிதையின் தனித்தன்மையையும் அறுதியிட்டுரைக்கிறார்.

தமிழ், ஒருமைப்பாட்டுணர்வு, ஏழ்மைக்கொடுமை, பெண்விடுதலை முதலான அடிக்கருத்துகளில் தாராபாரதி படைத்துள்ள கவிதைகளை நயத்துடன் விளக்கியுள்ளார்.

பல்லவனின் 'நெற்றியில் ஓர் எரிமலை' என்னும் தொகுப்புக்கு இவர் வழங்கியுள்ள அணிந்துரையும் இந்நூலில் இடம் பெற்றுள்ளது. கவிஞர்களை மனந்திறந்து பாராட்டும் மாண்பும், வானளாவ வாழ்த்தும் வள்ளன்மையும் சிலம்பொலியார்க்கே உரிய சிறப்பியல்புகள் என்பதற்கு இவை போன்ற அணிந்துரைகள் தக்க சான்றாய் விளங்குகின்றன.

"திரு.பல்லவன் 'இலக்கிய வீதி'யின் அரிமாக்கவிஞர்" எனவும், "அன்று நாட்டை ஆண்ட பல்லவர் ஆட்சிப் பகுதியில் இன்று பாட்டை ஆளுகின்ற பல்லவர் ஒருவரைக்

காண்கிறோம்'' எனவும் போற்றிக் கொண்டாடும் பெருந்தன்மையைக் காணும்போது எத்தகைய முற்சாய்வும் விருப்பு வெறுப்பும் இன்றிக் கவிஞர்களைச் சிறப்பிக்கும் இவரது சீர்மிகு பண்பு நம் உள்ளத்தைக் கவர்கின்றது.

இதுபோலவே சி. இராமசாமியின் 'சந்தனக்காற்று' என்னும் தொகுப்புக்கு வழங்கியுள்ள அணிந்துரையில், ''இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர்களுள் ஒருவராய் எதிர்கால இலக்கிய வரலாறு கவிஞர் இராமசாமியைக் குறிப்பிடும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை'' எனப் பாராட்டுவதும், வாரஸ்ரீயின் 'சந்தனச் சரங்கள்' என்னும் தொகுப்புக்குரிய அணிந்துரையில் ''தன்னம்பிக்கைமிக்க கவிஞர் வாரஸ்ரீ அழுதொத்த கவிதைகளை அள்ளிஅள்ளி வழங்குவார் என்னும் அழுத்தமான நம்பிக்கையைக் கொள்ள இந்நூல் சான்று பகர்கின்றது'' என வாழ்த்துவதும் கொல்லிமலைச்சாரலில் தோன்றிய சிலம்பொலியார், புலவரைச் சீராட்டுவதையே தமது உயிர்மூச்சாய்க் கொண்டவர் என்பதைப் பறைசாற்றுகின்றன.

குழந்தை இலக்கியம்

இக்காலக் குழந்தையிலக்கிய முன்னோடிகளுள் ஒருவராகிய அழ. வள்ளியப்பா அவர்களின் 'சிரிக்கும் பூக்கள்' என்னும் தொகுப்புக்கு வழங்கியுள்ள அணிந்துரையில், தமிழில் குழந்தை இலக்கியம் இன்று பெற்றுள்ள சிறப்பினையும், அதன் தோற்ற வளர்ச்சியையும், அழ.வள்ளியப்பாவின் தலைமைவாய்ந்த பங்களிப்பையும் விரிவாய் எடுத்துரைக்கிறார்.

"கவிமணி, குழந்தை இலக்கியத்திற்கு வித்திட்டார்; முளைத்து வளர்ந்துள்ள குழந்தைக்கவிதையெனும் ஆலின் அடிமரமாயும் ஆணிவேராயும் இருப்பவர், அழ. வள்ளியப்பாவே ஆவர். இன்று நூற்றுக்கணக்கில் அந்த ஆலின் விழுதுகள் கவிதை நிலத்திலூன்றிக் கவின் செய்கின்றன'' என்னும் வரிகளில் தமிழ்க் குழந்தை இலக்கிய வரலாற்றையே சுருங்கக் கூறிவிட்டார் சிலம்பொலியார் எனலாம்.

கற்பிக்கும் ஆசிரியர், ஒலிநய உத்தியர், நாட்டுப் பற்றாளர், சீரிய சிந்தனையாளர், உயரிய உவமையாளர்,

நயமிகு நகைச்சுவையாளர், கவின்மிகு கதையாளர், நன்னம்பிக்கையாளர், சுவைத்தேன் கவியாளர் எனப் பல்வேறு நிலைகளில் குழந்தைகளுக்குப் பாடல்களை யாத்துள்ள அழ.வள்ளியப்பாவின் ஆளுமைத் திறத்தையும் அவர்தம் கவிதைச் சிறப்பையும் விரிவாய் விளக்கியுள்ளார்.

இத்துறையில் அழ.வள்ளியப்பாவின் வழிநின்று குழந்தைக் கவிதைகள் படைத்துள்ள செல்ல கணபதியின் 'ஆடிப்பாடுவோம்' என்னும் தொகுப்புக்கு வழங்கியுள்ள அணிந்துரையும் இந்நூலில் இடம் பெற்றுள்ளது. பல்வேறு மேற்கோள்களை நூலினின்றும் காட்டி நூலின் சிறப்பை எடுத்துக் கூறியபின், ''குழந்தைகள் ஆடிக்கொண்டு பாடுவதற்கும், பாடிக்கொண்டு ஆடுவதற்கும் ஏற்ற பாடல்களைத் தாமும் குழந்தையாகவே மாறித் தந்திருக்கிறார். விளையாட்டாகவே குழந்தைகட்கு விழுமிய கருத்துகளை நெஞ்சில் பதியவைப்பதில் கவிஞர் முழு வெற்றி பெற்றுள்ளார்'' எனச் சிறப்பானதொரு முடிவுரையை வழங்குகிறார். இவ்விரு அணிந்துரைகளும் கவிஞர் இருவர் படைப்பு குறித்த மதிப்பீடுகளாய் மட்டும் அமையாமல், தமிழில் குழந்தையிலக்கியத்தின் வளர்ச்சியும் வரலாறும் குறித்த ஆய்வாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

புதுக்கவிதை

செல்வி சித்ராவின், 'வெளுக்கப்பார்க்கும் கிழக்கு' என்னும் புதுக்கவிதைத் தொகுப்புக்கான அணிந்துரை இந்நூலில் இடம் பெற்றுள்ளது.

"செல்லும் நெறியறியாது வேண்டா வழியில் செல்லும் இளைஞர்கள், சுதந்தரம் பெற்றும் பெறாத பெண்ணினம், பொதுநலப் போர்வையில் தன்னலம் தேடும் கொடுமை, சாதிக்கொடுமை ஆகிய இவற்றை ஆரங்களாய்க்கொண்டு தம் கவிதை வட்டங்களைக் கவிஞர் வரைந்துள்ளார். ஆரத்துக்கு ஏற்ப வட்டப்பரப்பு விரிவடையும். செல்வி சித்ராவின் கவிதைவட்டமும் மேலும் மேலும் விரிந்து பெருகவேண்டும்'' என்னும் அறிவுரை கலந்த பாராட்டு கனிவு நிறைந்த வழிகாட்டுதலாய் அமைகின்றதன்றோ?

திரையிலக்கியம்

திரைப்பாடல்களையும் காலத்தை வென்று நின்று நிலவும் இலக்கியங்களாய்ப் படைத்தளிக்கமுடியும்

என்பதனை உடுமலை நாராயணகவி, கம்பதாசன், மருதகாசி, பட்டுக்கோட்டையார், கண்ணதாசன் முதலிய கவிஞர்கள் சாதித்துக் காட்டி இன்றைய கவிஞர்களுக்கு வழிகாட்டியாய் விளங்குகின்றனர். பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் தமது இளமைப் பருவத்திலேயே காலத்தின் அழைப்பை ஏற்றுச் சென்றுவிட்டாரெனினும் காலத்தை வெல்லும் தரமும் திறமும் மிக்க கவின்சுவைப்பாடல்கள் பலவற்றை நமது சிந்தனைக்கு விருந்தாய் வழங்கிச் சென்றுள்ளார். அவர் பாடல்களைத் தொகுத்து கே.ஜீவபாரதி வெளியிட்ட தொகுப்பிற்குச் சிலம்பொலியார் வழங்கியுள்ள நீண்ட அணிந்துரை (37 பக்கங்கள்) அவர் பாடல்களில் இவர் கொண்டுள்ள ஈடுபாட்டையும், அவர் மேல் இவர் கொண்டுள்ள பெரும் மதிப்பையும் புலப்படுத்து கின்றது. பாரதிதாசன் பரம்பரைக் கவிஞருள் ஒருவராய்ப் பட்டுக்கோட்டையார் மிளிரும் திறத்தையும், பொது வுடைமைக் கொள்கையை எளிய சொல்லாட்சியில் உயிர்த்துடிப்பு மிக்க உவமைகள்மூலம் உள்ளத்தில் சென்று தைக்கும் வகையில் அவர் பாட்டுக்கட்டிய பாங்கினையும் நயமுற விளக்குகிறார். அவர் பாடல்களைக் காலவரிசைப் படுத்திய ஜீவபாரதியைப் பாராட்டியதுடன் பாரதிதாசன், கண்ணதாசன் ஆகியோர் பாடல்களையும் இவ்வாறு காலவரிசைப்படுத்தி வெளியிட வேண்டியதன் தேவையை விளக்கி வலியுறுத்துகிறார். திரையிலக்கியம்பற்றி ஆய்வு நிகழ்த்த முற்படுவோர் சிலம்பொலியாரின் இவ் வணிந்துரையைத் தவறாது பயின்று தமது ஆய்வின் செல்நெறியைச் செம்மையுற வகுத்துக்கொள்ளலாம்.

ஏனைய இலக்கியங்கள்

இலக்கிய விளக்க நூல், ஆய்வு நூல், புதினம், சொற்பொழிவுத் தொகுப்பு, கட்டுரைத் தொகுப்பு, சிறுகதைத் தொகுப்பு எனப் பல்வேறு வகைமைகளில் அமைந்த நூல்கள் பலவற்றிற்கு அணிந்துரை வழங்கியுள்ளார், சிலம்பொலியார். இவற்றின் ஆழத்தையும் அருமையினையும் விளக்கப் புகுந்தால் தனி ஒரு நூலாகவே விரிந்துவிடும். கோவி.மணிசேகரனின், 'குடவாயிற்கோட்டம்' என்னும் புதினத்திற்கு வழங்கியுள்ள அணிந்துரையில் வரலாற்றுக் குறிப்புகள் முழுமையும் பின்பற்றப்படாமல் ஆசிரியரின் கற்பனை அளவிறந்து திகழும் நிலையை விளக்குகிறார்.

தமிழர்கள் கட்சி, சமயம், சாதி எனப் பிளவுபட்டு மோதிக்கொள்ளும் இன்றைய நிலையை எண்ணி வருந்தும் சிலம்பொலியார் இவ்வணிந்துரையின் நிறைவுப்பகுதியில் குறிப்பிடும் கருத்து பெரிதும் போற்றத்தக்கது.

"தமிழ் மன்னர்கள் ஒருவர்க்கொருவர் விட்டுக் கொடுத்து வாழும் பாங்கினைக் கொண்டிருந்தால் தமிழகம் அமைதிப் பூங்காவாய் என்றுமே திகழ்ந்திருக்க முடியும். சிறுசிறு செய்திகளில் மாறுபாடு கொண்டமையால் நிகழ்ந்த போர்கள் எத்தனை! நேரிட்ட அழிவுகள் எவ்வளவு! பண்டைய வரலாறு வருங்காலச் சமுதாயத்திற்குப் பாடமாய் அமைகின்றதன்றோ? அவ்வகையில் பண்டைய நிலையறிய, அதிலிருந்து இன்றைய சமுதாயம் எண்ணிப் பாடம் கொள்ள இக்கதை பெருந்துணை செய்கிறது எனலாம்" என்னும் சிலம்பொலியாரின் கூற்று, பற்பல வேறுபாடுகளைக் கற்பித்துக்கொண்டு தமக்குள் முட்டி மோதிக்கொள்ளும் இன்றைய தமிழ்ச்சமுதாயம் குறித்து அவர் கொள்ளும் கவலையைப் புலப்படுத்துவதுடன், தமிழினம் ஒன்றுபடவேண்டும் எனத் தாயுள்ளத்துடன் ஏங்கும் அவரது அருள்நோக்கையும் காட்டுகிறது.

குன்றக்குடி அடிகளாரின் நூல் வரிசைத் தொகுதி-1, மு.தமிழ்க்குடிமகனின் 'பாவேந்தர் கனவு', த. இராம லிங்கத்தின் 'யாமறிந்த புலவரிலே...', பொன். செல்வ கணபதியின் 'அண்ணாவின் மேடைக்கலை', ந.சுப்பு ரெட்டியாரின் 'நினைவுக்குமிழிகள்-1' போன்ற உரைநடை நூல்களுக்கும் இலக்கியச்சுவை ததும்பும் அணிந்துரைகளை வழங்கியுள்ளார். நூலின் சிறப்புகளைக் கூறுவதுடன் அமையாது நூலாசிரியர்களின் ஆளுமை நலனையும் இயம்பியுள்ளார்.

"வள்ளுவநெறி, தந்தை பெரியாரின் தன்மானக் கொள்கை, கார்ல்மார்க்சின் பொருளாதாரச் சிந்தனை ஆகியவற்றின் ஒன்றிணைந்த வார்ப்பாய் அடிகளார் திகழ்ந்துவந்தார்." (பக். 87-88)

"தமிழியக்கத்தில் பாவேந்தர் வாணிகர்க்குக் கூறியுள்ள வற்றை நடைமுறைப்படுத்துதற்கான வழிமுறைகளை மட்டுமே இந்நூல் விரித்துரைக்கிறது. ....வணிகர்க்கென ஒரு நூல் வகுத்ததுபோலவே பிறர் ஒவ்வொருவரும்

செய்யவேண்டியவைபற்றித் தமிழ்க்குடிமகனார் தனித்தனி நூல் வெளியிடவேண்டுமென்பது தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு." (பக். 94)

"எல்லோருக்குமே தனித்து எடுத்துச் சொல்லும் நடை அமைந்துவிடுவதில்லை. 'இராமலிங்கம் நடை' என்று சொல்லத்தக்க நடை நண்பர்க்கு வாய்த்திருப்பதை அறிய முடிகிறது." (பக். 102)

''அண்ணாவின் பேச்சுபற்றி நெஞ்சையள்ளும் முறையில் ஆய்வுசெய்துள்ள அறிஞர் செல்வகணபதி அண்ணாவின் கட்டுரைகள், சிறுகதைகள், நாடகங்கள், புதினங்கள் எனப் பல்வேறு தலைப்புகளிலே ஆய்ந்து, இது போன்று அருமையான-சுவையான-பயனுள்ள நூல்களைத் தரவேண்டும் என்னும் வேண்டுகோளோடு வாழ்த்தி மகிழ்கிறேன்." (பக். 111)

"பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் எதுபற்றியும் எத்தனை தொகுதிகள் வேண்டுமானாலும் எழுதக்கூடிய அறிவும் ஆற்றலும் வாய்ந்தவர்கள். அவர்கள் எழுதும் அத்தனையும் முத்தனையனவாகவே இருக்கும். (பக். 119)

என்னும் கூற்றுகளில் மிளிரும் நேயமும் அன்பும் அறிவார்ந்த தூண்டுதலும் படைப்பாளர்க்குப் பயன் நல்கும் ஊக்க ஊற்றாயும் படிப்போர்க்குப் படைப்பாளரை இனங்காட்டும் ஒளிவிளக்காயும் திகழ்கின்றன அல்லவா?

விக்கிரமன் கதைகள் என்னும் சிறுகதைத் தொகுப்புக்கு இவர் வழங்கியுள்ள அணிந்துரை, எழுத்தாளர் விக்கிரமனின் படைப்பாற்றலை எடுத்தியம்புவதுடன் தமிழ்ச் சிறுகதை வரலாற்றையும் வகைப்பாட்டையும் விளக்குகிறது.

'சிறுகதைச் சேக்கிழார்' என விக்கிரமனைப் போற்றும் பெருந்தகைமையும் இத்தன்மைத்தே.

காலஞ்சென்ற பேராசிரியர் முனைவர் திருமதி லீலாவதி அவர்களின், 'இதுதான் ஹைக்கூ' என்னும் ஆய்வுநூலுக்கு வழங்கியுள்ள அணிந்துரையில் நூலை அப்படியே சுருக்கிக் கொடுத்துவிட்டார். இஃது சிலம்பொலியாரின் தனித்தன்மை எனலாம். நூல் வெளியீட்டு விழா ஒன்றில் உரையாற்றினால் அந்நூலில் உள்ள செய்திகள், அந்நூலைப்பற்றிக் கூறக்கூடிய செய்திகள்

யாவற்றையும் கூறிவிடுவார். அவருக்குப்பின் பேசுதற்கு யாருக்கும் எந்தச் செய்தியும் இராது. ஆய்வில் ஆழமும் செய்வன திருந்தச் செய்யவேண்டும் என்னும் துடிப்புமே இதற்குக் காரணங்கள் எனலாம்.

அமுதபாரதியின், 'ஹைக்கூ அந்தாதி'க்கு வழங்கப்பட்டுள்ள அணிந்துரை அவ்விலக்கியத்தின் இலக்கணத்தையும் இலக்கிய நலனையும் திறம்படக் கூறுவதால் இவ்வகையில் மேலும் பல இலக்கியங்கள் படைத்தற்குத் தூண்டுகோலாய் அமைகின்றது.

சாமி. சிதம்பரனாரின் 'குறுந்தொகைப் பெருஞ் செல்வம்' என்னும் நூலுக்கு வழங்கியுள்ள அணிந்துரை (32 பக்கங்கள்) நீண்டதாய் அமைந்து, அவர்மேல் இவருக்குள்ள பெருமதிப்பைப் புலப்படுத்துகின்றது. செந்தமிழ்க்காவலர் சி.இலக்குவனாருக்குத் தமிழாசிரியராய்த் திகழ்ந்த சாமி. சிதம்பரனார் தன்மதிப்பு இயக்கத் தூண்களுள் ஒருவர் ஆவார். எனவே, அவரது நூலை விரிவாய் ஆய்தற்கு முனைந்த சிலம்பொலியார் இன்னொரு குறுநூலே இயற்றிவிட்டார்.

சிலம்பொலியாரின் திறனாய்வு முறைகள்

தம் அணிந்துரைகள் அனைத்தையும் ஆய்வுரைகளாகவே வழங்கியுள்ள சிலம்பொலியார் பின்வரும் அணுகுமுறைகளைப் பின்பற்றுதல் தெளிவாய்த் தெரிகிறது.

இலக்கிய நலங்காணல்

இலக்கியப் பகுப்பாய்வு

இலக்கிய ஒப்பாய்வு

படைப்பாக்க நெறிமுறைகளை ஆய்ந்தறிதல்

வடிவமைப்பியல் ஆய்வு

சமூகவியல் ஆய்வு

ஏதேனும் ஓர் அணுகுமுறையை மட்டுமே பற்றியிராது ஓர் ஆய்விலேயே . இத்துணை அணுகுமுறைகளையும் பின்பற்றுதல் இவர்க்கு வாய்ந்த தனிச்சிறப்பு. சமூகவியல் அணுகுமுறைக்கு மார்க்சியக் கோட்பாடுகளைக்காட்டிலும் பெரியாரியக் கோட்பாடுகளையே இவர் பெரிதும் துணைகொள்கிறார்.

இவரது ஆளுமைநலனாய்ப் பின்வருவன இவ்வணிந் துரைகள்மூலம் தெற்றெனப் புலனாகின்றன.

1) எத்தகைய முற்சாய்வையும் தவிர்த்தல்.

2) படைப்பாளர்தம் அகவை, சமூகத் தகுநிலை நோக்காது அனைவரையும் ஒப்ப மதித்தல்.

3) படைப்பின் சிறப்புகளை மட்டுமே எடுத்துரைத்தல்.

4) மேலும் பல படைப்புகள் பல்கிப் பெருகும் வகையில் புதிய படைப்புகளுக்கான வழிமுறைகளைப் பரிந்துரைத்தல்.

5) விரிந்து பரந்த தமது புலமையின் துணையால் புதிய பல நயங்களைக் கண்டறிந்து கூறுதல்.

6) தமிழ் இலக்கியப் பரப்பில் ஒரு படைப்பு பெறுமிடத்தையும், அப்படைப்பில் அமைந்துள்ள முந்தைய இலக்கியங்களின் தாக்கத்தையும், பிந்தைய இலக்கியங்களில் அதன் தாக்குரவையும் கண்டறிந்து கூறுதல்.

திறனாய்வாளன் போற்றவேண்டிய திறனாய்வு நெறிகள் யாவை எனத் தெளிவுடன் அறிந்துகொள்ளுதற்கு இவர் அணிந்துரைகள் கலங்கரை விளக்கமாய் அமைந்துள்ளன எனலாம்.

ஆய்வு நேர்மை, ஆய்வு நாகரிகம், ஆய்வில் நம்பகத்தன்மை என்றெல்லாம் பேசிக்கொண்டிருப்போர் அவையெல்லாம் ஒருசேர இங்கே அமைந்திருத்தலைக் கண்டு, சிலம்பொலி செல்லப்பனார் காட்டும் நெறியைப் பின்பற்றினால் தமிழ் ஆய்வு தழைத்துச் செழித்தோங்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

அப்பொன்னாள் விரைவில் மலர்தற்குச் 'சிலம்பொலியார் அணிந்துரைகள்' சீரிய வழி காட்டும்.

சிலம்பொலியார் காட்டும் திறனாய்வு நெறி பரவுக.

இலங்கு புகழ் இலக்கியங்கள் ஓங்குக.

வெல்க தமிழ்!

தொகுப்பாளரின் உரை

– முனைவர் மணிமேகலை புஷ்பராஜ்

இதுவரை தமிழில் பல்வேறு துறைகளிலும் வெளிவந்துள்ள ஏறத்தாழ அறுநூற்றுக்கு மேற்பட்ட நூல்களுக்கு என் தந்தையார் திரு. சிலம்பொலி சு. செல்லப்பனார் ஆராய்ச்சி முன்னுரைகள், மதிப்புரைகள், அணிந்துரைகள் அளித்துள்ளார் என்கின்ற செய்தி தமிழ்கூறும் நல்லுலகில் உள்ள பலரைப் போன்றே எனக்கும் மலைப்பையும் வியப்பையும் ஏற்படுத்திய ஒன்றாகும்.

என் தந்தையாரைக் காணவரும் தமிழறிஞர்களிடம் உரையாடுகின்ற வாய்ப்பு எனக்கு அடிக்கடி கிடைத்தது; கிடைத்தும் வருகிறது. சென்னையில் நடைபெறும் இலக்கிய நிகழ்ச்சிகளுக்கெல்லாம் அவருடன் செல்லும்போது அவருக்கு நெருங்கிய நண்பர்களாயுள்ள தமிழ்ச்சான்றோர் பலரையும் சந்தித்துப் பேசுகின்ற வாய்ப்புக் கிட்டியது; கிட்டிக்கொண்டுமிருக்கிறது. அவர்களுடன் உரையாடும் வேளைகளில், என் தந்தையார் அளித்துள்ள அணிந்துரைகள்பற்றிப் பேச்சு எழுவதுண்டு; அணிந்துரைகள் மிகவும் சிறப்பாய் உள்ளன என்றும், அவற்றையெல்லாம் யாராவது தொகுத்து வெளியிட்டால் தமிழிலக்கிய உலகிற்கும், வரும் தமிழ்த் தலைமுறையினர்க்கும் பயனுள்ளதாய் அமையுமென்றும் அவர்கள் சொல்லக் கேட்டபோது, நாமே அவற்றைத் தொகுக்கலாமே என்ற எண்ணமும் ஆவலும் என்னுள் எழுந்தன.

என் எண்ணத்தை என் தந்தையாரிடம் வெளிப் படுத்தியபோது இசைவளித்தார். முதற்கட்டமாய்த் தந்தையார் அணிந்துரைகள் அளித்துள்ள நூல்களைத் தேடி,

அணிந்துரைகளின் படியினை எடுக்கும் பணியைத் தொடங்கினேன். என் தந்தையாரின் நூலகத்திலேயே சில நூல்கள் கிடைத்தன. என் தந்தையாரின் நூலகம்பற்றி இங்குக் குறிப்பிடுவது பொருத்தமாய் இருக்குமென்று கருதுகிறேன். தமிழ்நாட்டில் தனிப்பட்டவர்கள் வைத்திருக்கும் நூலகங்களுள் மிகச்சிறப்பானவையாயும் பெரியனவாயும் உள்ள மிகச்சில நூலகங்களுள் என் தந்தையார் தம் வீட்டில் வைத்திருக்கும் நூலகமும் ஒன்றாகும் எனில் அது மிகையன்று. அவர் நூலகத்தில் இலக்கியங்கள், இலக்கணங்கள், அகராதிகள், நிகண்டுகள், கலைக்களஞ்சியங்கள் என வகைவகையான அரிய நூல்கள் பத்தாயிரத்திற்கும்மேல் உள்ளன. தந்தையாரின் நூலகத்தில் மாக்கவி பாரதிக்குப்பின் தமிழில் வெளிவந்த மரபுக் கவிதை நூல்கள் மட்டும் ஈராயிரத்துக்கும் மேல் உள்ளன. சென்ற நூற்றாண்டின் பிற்பகுதி தொடங்கி எழுந்துள்ள புதுக்கவிதை நூல்கள் ஆயிரத்துக்கும் மேற்பட்டு உள்ளன. இன்னும் கூடுதலாகவே இருந்தன. எல்லா நூல்களையும் சேர்த்து வைக்க வீட்டில் போதிய இடமில்லையாதலின் ஆயிரக் கணக்கான நூல்களை நன்கொடையாய் அளித்துவிட்டார். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கும், நண்பர்களுக்கும், வெளிநாடுகளிலிருந்து வரும் தமிழார்வலர்களுக்கும் ஏராளமான நூல்களைத் தந்துவிட்டார். அதனால் அவர் அணிந்துரை எழுதிய நூல்கள் பல அவரிடம் இல்லாமல் போயின. எனவே, வெளி நூலகங்களில் தேடி எடுக்க வேண்டியதாயிற்று.

என் கணவர் திரு. புஷ்பராஜ் அவர்கள் சென்னையில் கன்னிமாரா நூலகம், தேவநேயப் பாவாணர் நூலகம், மறைமலையடிகள் நூலகம் போன்ற பெரிய நூலகங்களிலும் இன்னும் பல்வேறு சிறிய நூலகங்களிலும் நூல்களைப் பெற்று, என் தந்தையாரின் அணிந்துரைகளைப் படியெடுத்து வந்தார். சென்னையில் அவர் சென்று தேடாத நூலகமே இல்லை எனலாம். நூலகங்களிலும் இருபது முப்பது ஆண்டுகட்கு முற்பட்டு வெளிவந்த நூல்கள் கிடைக்க வில்லை; கிடைத்தவரை படியெடுத்துக் கொணர்ந்தார்.

ஓரளவுக்கு அணிந்துரைகள் சேகரிக்கப்பட்டதும், அவற்றைப் பதிப்பித்து வெளியிடுவதுபற்றி எண்ணிக் கொண்டிருந்த வேளையில், பழனியப்பா பிரதர்ஸ் திரு. சுப்பு அவர்கள், என் தந்தையாரின் அணிந்துரைகளைச் 'சிலம்பொலியார் அணிந்துரைகள்' என வெளிக் கொணரலாம் எனச் சொன்னபோது அளவிடற்கரிய மகிழ்ச்சி அடைந்தேன்.

என் தந்தையார் சிலம்பொலி செல்லப்பனார் நாடறிந்த நாவலர்; முதல்நிலை இலக்கியப் பொழிஞர்; தமிழ் இலக்கிய மேடைப் பேச்சுக் கலையில் மிகவும் வல்லவர்; கேட்போர் பயனடையும்வண்ணம் வியத்தகு வகையில், கையில் எந்தவொரு குறிப்புமில்லாமல் தமிழை அருவியாய்க் கொட்டும் ஆற்றல் பெற்றவர். இவரின் நினைவாற்றலும், ஆழ்ந்த தமிழறிவும், பேச்சுமுறையும் பாராட்டத்தக்கவை. மேடைப் பேச்சின்மூலமும் இடையறா இலக்கியச் சொற்பொழிவுகள் வாயிலாயும் தமிழின் பெருமையினையும் இலக்கிய வளத்தையும் பட்டி தொட்டிமுதல் பன்னாட்டுத் தமிழ் மன்றங்கள்வரை பரப்பித் தமிழன்னைக்குப் பெரும் தொண்டாற்றி வருபவர். "சாவில் தமிழ் படித்துச் சாகவேண்டும் எந்தன், சாம்பலது தமிழ்மணந்து வேகவேண்டும்" எனும் யாழ்ப்பாணத்துக் கவிஞர் சச்சிதானந்தனின் பாடலடிகளை மேடைதோறும் முழங்கி மக்கள் மனத்தில் தமிழ் உணர்வை விதைத்தவர்.

தமிழ் கூறும் நல்லுலகில் இவர் ஆற்றிவரும் தொடர் சொற்பொழிவுகள் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன. பொதுவாக இராமாயணம், மகாபாரதம் போன்றவையே தொடர் சொற்பொழிவுகளாய்ச் செய்யப்பெறும். ஆனால், என் தந்தையார் மற்றவர்கள் பெரும்பாலும் எடுத்துரைக்காத இலக்கியங்கள் குறித்துத் தொடர்சொற்பொழிவு ஆற்றியுள்ளார். சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, சிற்றிலக்கியங்கள், பாரதிதாசன் கவிதைகள், இராவண காவியம் ஆகிய இலக்கியங்களைப்பற்றிப் பல கிழமைகள் தொடர்ந்து

பேசியிருக்கிறார். இசுலாமியக் காப்பியங்களான சீறாப்புராணம், இராஜநாயகம் ஆகியவற்றை மிக விரிவாய்த் தொடர் சொற்பொழிவு செய்துள்ளார். இவர் அவற்றை எடுத்துரைத்த சிறப்பினை இசுலாமியப் பெருமக்கள் வியந்து போற்றியதோடு, 'சீறாச் செல்வர்' எனும் சிறப்புப் பட்டத்தையும் வழங்கினர். இந்த அளவு பல்வேறு இலக்கியங்களைக் குறித்துப் பல கிழமைகள் தொடர்ந்து சொற்பொழிவாற்றியவர்கள் இவரையன்றி வேறு எவரும் இலர் என்றே சொல்லலாம்.

"தமிழகமெங்கும் சுற்றிச் சுழன்று சிலப்பதிகாரத்தின் மாண்பினையும் செந்தமிழின் மேன்மையினையும் திறம்படப் பல மேடைகளில் முழங்கிச் சீரிய செயல் புரிபவர், நண்பர் சிலம்பொலி செல்லப்பன்'' என முத்தமிழறிஞர், டாக்டர் கலைஞர் அவர்களும்,

"அன்பிலும் பண்பிலும் சிறந்து விளங்கும் சிலம்பொலி செல்லப்பன் தாம் பெற்றுள்ள பட்டத்திற்கேற்பத் தேசியச் சொத்தான சிலம்பைப் பட்டிதொட்டிதோறும் ஒலித்து வருகிறார்" எனச் சிலம்புச்செல்வர் ம.பொ.சி. அவர்களும்,

"நமக்கினிய அன்பர் சிலம்பொலி செல்லப்பன் அவர்கள் ஆங்கிலத்துடன் அருந்தமிழ் கற்ற அறிஞர்; தமிழ் ஆர்வலர்; தமிழ்த்தொண்டர்; தமிழ் தழீஇய பண்பாளர்" எனத் தவத்திரு குன்றக்குடி அடிகளாரும் என் தந்தையாரைப் பாராட்டியுள்ளனர்.

பேரறிஞர் அண்ணா, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்., முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் ஆகிய மூன்று முதல்வர்களும் இவர் தமிழ்ப்பணியைப் போற்றிப் பாராட்டி யுள்ளனர்.

தமிழ்ப்பணியே தமது தலையாய பணி எனக் கடமையாற்றி வரும் இவருக்குத் தமிழே பேச்சு, தமிழே மூச்சு, தமிழே உயிர்.

இவர்போல் நூல்களுக்கு அரிய விரிவான ஆராய்ச்சி அணிந்துரைகள் வழங்கியவர் எவருமிலர் என்று சொன்னால் அது மிகையன்று. இத்தகைய அணிந்துரைகளைத் தொகுக்கும் பணியை மேற்கொண்டது வாழ்க்கையில் எனக்குக் கிடைத்த பேறுகளுள் ஒன்று என்று கருதுகிறேன்.

இந்நூல், சில தொகுதிகளாய் வெளிவருகின்றது. ஒவ்வொரு தொகுதிக்கும் சிறந்த தமிழறிஞர் ஒருவர் அணிந்துரை வழங்கியுள்ளார். அணிந்துரை வழங்கியுள்ள பேராசிரியப் பெருமக்கட்கு என் பணிவான வணக்கத்தை உரித்தாக்குகின்றேன். அணிந்துரைகள் அடங்கியுள்ள நூல்களுக்கு அணிந்துரை எழுதியுள்ள அறிஞர்கள் அவற்றை மிகச்சிறந்த திறனாய்வுரைகளாகவே விரிவாய், வளமாய், இலக்கிய முத்துகளாய் வழங்கியிருக்கின்றனர். இவ் அணிந்துரைகள் அப்பெருமக்களின் அயரா உழைப்பையும், அரிய தமிழ்ப்புலமையையும், திறனாய்வுத் திறனையும் மற்றும் என் தந்தையார்மீது அவர்கள் கொண்டுள்ள அன்பினையும் வெளிப்படுத்துகின்றன. குறுகிய காலத்தில் மிகச்சிறப்பான அணிந்துரைகளை வழங்கியுள்ள இப் பெருமக்களுக்கு மீண்டும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பதிப்புலகில் பழனியப்பா பிரதர்ஸ் பெருமைக்குரிய மூத்த நிறுவனம்; தரமான நூல்களைமட்டுமே வெளியிடுவதைக் குறிக்கோளாய்க் கொண்டது. இந்நூலை மிக அழகாயும் அருமையாயும் வெளியிட்டிருக்கும் இப்பதிப்பகத்தார்க்கு குறிப்பாய் அமரர் பழனியப்பச் செட்டியார், அவர் இளவல் திரு. மெ. செல்லப்பன், மகன் திரு. ப. செல்லப்பன், மருகர் திரு. இராம. சுப்பு ஆகியோர்க்கு என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூலை உருவாக்குவதில் துணைநின்ற ஏசியன் அச்சக மேலாளர் வெற்றியூர் திரு. சுப. திருஞானம், செம்மையாய்

மெய்ப்புத் திருத்தம் செய்து நூற்பதிப்பில் பெருந்துணைநின்ற திரு. பெ. நடராசன் (தேனி திருமாவளவன்) அவர்களுக்கும், கணினி ஒளிஅச்சு அமைத்துத்தந்த திருமதி லோகாம்பிகை ஜெய்கிருஷ்ணன் அவர்களுக்கும் என் நன்றி.

என் முயற்சிகளுக்கு ஊக்கம் தந்து, என்றும் துணைநிற்கும் என் அன்புத் தந்தையார்க்கும், கணவர் திரு. நா. புஷ்பராஜ் அவர்களுக்கும், மகன் பு. கிருபாவுக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றி.

அணிந்துரையாளரின் முன்னுரை

– சிலம்பொலி சு. செல்லப்பன்

அணிந்துரை பண்டு பாயிரம் என வழங்கப்பட்டது. நூலின் தொடக்கத்தில் நூலாசிரியரோ மற்றவரோ அந்நூல்பற்றி எழுதிய பாயிரம் இருக்கவேண்டும். எத்துணைச் சிறப்புடையதாயினும் பாயிரம் இல்லாத நூல் ஒன்றனை நூல் என்றே கருத இயலாது என்கிறது, நன்னூல் இலக்கண நூற்பா[1]. எந்நூல் உரைப்பினும் அந்நூலுக்குப் 'பாயிரம் உரைத்து உரைக்க' என்பது மரபு என்கிறார், உரையாசிரியர் இளம்பூரணர்.

பாயிரம் என்பது நூலைப்பற்றிய சிறுகுறிப்பு. அதற்கு வரலாறு என்றும் பொருள் கூறுவர். ஒரு நூலைப் பயில விரும்புவோர் அதுபற்றிய வரலாற்றினை அறிய அவாவுதல் முறைமை (கடமை)யாதலின் பாயிரம் நூலுக்கு இன்றியமை யாததோர் உறுப்பாகிறது[2].

முகவுரை, பதிகம், அணிந்துரை, நூன்முகம், புறவுரை, தந்துரை, புனைந்துரை என்னும் பெயர்களாலும் பாயிரம் வழங்கப்பெறும்[3].

நூலுக்கு முகமாய் (முகப்பாய்) இருப்பதால் முகவுரை;

நூலிலுள்ள பல்வகைப் பொருள்களையும் பதித்திருப்பதால் பதிகம்;

நூலுக்கு அழகு சேர்ப்பதால் அணிந்துரை;

நூலின் தொடக்கமாய் இருப்பதால் நூன்முகம்;

நூலுக்குப் புறத்தேயிருந்தும் செய்திகளைச் சொல்வதால் புறவுரை;

நூலில் சொல்லப்படாத பொருளைத் தந்துரைப்பதால் தந்துரை;

1. நன்னூல், 54
2. கோ. வில்வபதி, நன்னூல் உரை
3. நன்னூல், 1

நூலின் பெருமையைப் புனைந்து கூறுதலால் புனைந்துரை
என்னும் பொருளில் பாயிரத்திற்கு வேறு பெயர்கள் வழங்கப்படலாயின. நூற்பொருள், நூலாசிரியர் பெயர் முதலாயவற்றை முன்னின்று காட்டுவதால் பாயிரம் அப்பெயர் பெற்றது.

தொல்காப்பியத்திற்குப் பனம்பாரனார் வழங்கியுள்ள பாயிரந்தான் இன்று கிடைப்பவற்றுள் மிகவும் தொன்மை வாய்ந்தது. அவர் பாயிரத்தின் பொருள் :

"வடவேங்கடம் தென்குமரி இவற்றிற்கிடைப்பட்டது தமிழ் பேசும் மக்கள் வாழும் தமிழகம். இந்நாட்டினகத்தே வழங்கும் பேச்சு வழக்கு, செய்யுள் வழக்கு ஆகிய இருவகை வழக்குகளையும் அடிப்படையாய்க்கொண்டு இந் நூலின்கண் எழுத்திலக்கணமும் செய்யுளிலக்கணமும் பொருளிலக்கணமும் ஆராய்ந்து உரைக்கப்பட்டுள்ளன.

"செந்தமிழ் நாட்டின் இயல்பொடு பொருந்த இந்நூல் செய்யப்பட்டுள்ளது. இந்நாட்டில் பழங்காலந்தொட்டு வழங்கிவரும் முந்தைய நூல்கள் அனைத்தையும் கற்றும் தெளிந்தும் ஆய்ந்தும், அங்ஙனம் ஆய்ந்தறிந்தவற்றை யெல்லாம் தொகுத்தும் இந்நூல் செம்மையாய் எழுதப் பெற்றுள்ளது.

"இது நிலந்தருதிருவிற்பாண்டியன் எனும் வேந்தன் அவையில் அரங்கேற்றப்பட்டது. இவ்வரங்கேற்றம், அறம் உரைக்கும் நாவினையுடையவரும் நான்மறை வல்லுநரு மாகிய அதங்கோட்டாசான் தலைமையில் ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்றோர் குழுமியிருந்த அவைமுன் நிகழ்ந்தது.

"தொல்காப்பியர் எனும் தம் இயற்பெயரே நூற்பெயராய் விளங்குமாறு, 'தொல்காப்பியம்' என்னும் இந்நூலை இவர் இயற்றியுள்ளார். தொல்காப்பியர் ஐந்திரம் கற்ற அறிவாற்றலுடையவர்; இவர் பல்துறை சார்ந்த நுண்ணறிவும் மிகுபுகழும் கொண்டு தூய துறவியாய் விளங்கிய பெரியவர்."

வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து

வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடிச்
செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்
புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்
நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து
அறங்கரை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட் டாசாற்கு அரில்தபத் தெரிந்து
மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி
மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த
தொல்காப் பியனெனத் தன்பெயர் தோற்றிப்
பல்புகழ் நிறுத்த படிமை யோனே![1]

தொல்காப்பியத்திற்குத்தான் முதன்முதலில் பாயிரம் எழுதப்பட்டது போலும்! அதனாற்றான் தொல்காப்பியர் பாயிரத்திற்கு இலக்கணம் வகுக்கவில்லை எனக் கருதலாம். பாவலரேறு பாலசுந்தரனார், "பாயிரம் என்பது செய்யுள் வகையோ நூல்வகையோ ஆகாமையின் தொல்காப்பியர் அதுபற்றி விளக்கவில்லை எனக் கருதலாம்" என்கிறார்.[2]

பனம்பாரனார் பாயிரத்தில் தொல்காப்பிய நூல் வழங்கும் எல்லை, முன்னோர் நூலின் வழி, நூல் நுவலும் பொருள், நூல் எழுந்த காலம், நூலைக் கேட்போர், நூலை ஆக்கியோன் பெயர், நூற்பெயர் என்பன அடங்கியுள்ளன. இதனையொட்டியே தொல்காப்பியத்திற்குப் பின்னர் எழுந்த இலக்கண நூலாகிய நன்னூலில் அதன் ஆசிரியர் பவணந்தி முனிவர் பாயிரத்திற்கு இலக்கணம் வகுத்துள்ளார். பாயிரத்தைப் பொதுப்பாயிரம், சிறப்புப் பாயிரம் என இரு பிரிவாய்ப் பிரித்துள்ள அவர், சிறப்புப் பாயிரத்திற்கு வகுத்துள்ள இலக்கணம் தொல்காப்பியப் பாயிரத்தை அடிப்படையாய்க் கொண்டுள்ளது என்பதனை அறிய முடிகிறது.

ஆக்கியோன் பெயரே, வழியே, எல்லை,
நூற்பெயர், யாப்பே, நுதலிய பொருளே,
கேட்போர், பயனோ(டு) ஆயஎண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத்(து) இயல்பே.[3]

---

1. பனம்பாரனார், தொல்காப்பியப் பாயிரம்
2. ச. பாலசுந்தரம், தொல்காப்பியம் எழுத்ததிகாரம், காண்டிகையுரை
3. நன்னூல், 47

தொல்காப்பியத்திற்குப் பிறகு சங்ககால இலக்கியங்களில் பாயிரமோ, பதிகமோ, இவற்றையொத்த பகுதியோ இல்லை. சங்க இலக்கியங்கள் தனிப்பாடல்களின் தொகுப்பு. ஆதலின், பாயிரம் இடம் பெறவில்லை. ஆயினும், தொகுத்தோர், தொகுப்பித்தோர்பற்றிய விவரங்கள் கிடைத்துள்ளன. அதுவுங்கூட முழுமையாய்க் கிடைக்க வில்லை. பதிற்றுப்பத்தில் மட்டும் ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் பதிகம் அமைந்துள்ளது. பாடலைப் பாடியோன், அவன் பெற்ற பரிசில், அப்பரிசிலின் பெருமை ஆகிய செய்திகளும், பாடப்பட்டுள்ள மன்னன் பெருமையும் அவன் ஆட்சியாண்டுகளும் கூறப்பட்டுள்ளன.

தமிழின் முதற்காப்பியமாய சிலப்பதிகாரத்தில்தான் விரிவான பதிகத்தைக் காணமுடிகிறது. அப்பதிகம் சிலப்பதிகாரக் காப்பியம் எழுந்த வரலாற்றையும், நூலின் அமைப்பையும், நூல் எழுதப்பட்டதற்கான நோக்கத்தையும், சிலப்பதிகாரத்தில் அடங்கியுள்ள பொருள்பற்றியும் தெளிவாய்ச் சுட்டுகிறது.

மணிமேகலைக் காப்பியப்பதிகம், காப்பியத்திலுள்ள ஒவ்வொரு காதையின் சுருக்கத்தை ஓரிரு அடிகளில் கூறுகிறது. இளங்கோவடிகள் கேட்பச் சாத்தனார் இதனைப் பாடியருளியதாயும் கூறப்பட்டுள்ளது.

சீவகசிந்தாமணிப்பதிகம் கடவுள் வாழ்த்துடன் தொடங்குகிறது. கடவுள் வாழ்த்தோடு தொடங்கும் பதிகத்தை முதன்முதலில் சீவகசிந்தாமணியில்தான் காண முடிகிறது. கதைத்தலைவன் வரலாற்றினைப் பதின்மூன்று இலம்பகங்களில் இக்காப்பியம் எடுத்துரைக்கிறது. ஒவ்வொரு கலம்பகத்தின் கதைச்சுருக்கம் ஒவ்வொரு விருத்தப்பாவில் கூறப்பட்டுள்ளது.

கம்பராமாயணத் தற்சிறப்புப்பாயிரம் கடவுள் வாழ்த்து, அவையடக்கம், நூல் வந்த வழி ஆகியவற்றைக் கூறுவதோடு, நூலின் பெயர், நூற்பயன், நூல் அரங்கேறிய் இடம் ஆகிய செய்திகளையும் கூறுகிறது.

இதையடுத்துத் தோன்றிய காப்பியங்களும் இதே போக்கில் பாயிரத்தைக் கொண்டுள்ளன.

ஒரு நூலின் சிறப்புப்பாயிரத்தை அந்நூலாசிரியருக்கு ஆசிரியர், நூலாசிரியருடன் ஒருங்கு கற்ற ஒருசாலை

மாணாக்கர், நூலாசிரியரிடம் பயின்ற மாணவர், அந்நூலுக்கு உரை வகுப்பவர் ஆகிய இந்நால்வருள் ஒருவர் இயற்றுதல் முறைமை.

தன்னா சிரியன்; ;தன்னொடு கற்றோன்;
தன்மா ணாக்கன்; தகும்உரை காரனென்று
இன்னோர் பாயிரம் இயம்புதல் கடனே![1]

ஆயின், இக்காலத்தே இந்நால்வர் என்பது மாறி, பெரும்பான்மை நூலாசிரியர் தாம் விரும்பும் தக்கார் ஒருவரிடம் அணிந்துரை பெறுவது நடைமுறையாயுள்ளது. இன்னார் எழுதினால், அவர் பெருமையால் அல்லது செல்வாக்கால், பதவியால் அந்நூலுக்குப் பெருமை கிட்டும் என்ற எண்ணம் கொண்டும் அணிந்துரைகள் பெறப்படுகின்றன.

பாயிரம் பண்டை நாளில் பா வடிவில் அமைந்தது. அதுவும் ஆசிரியப்பாவானும் வெண்பாவானும் இயற்றுதல் மரபாயிருந்தது.

பாயிரத்(து) இலக்கணம் பகருங் காலை,
நூல்நுதல் பொருளைத் தன்னகத் தடக்கி,
ஆசிரிய மானும் வெண்பா வானும்
மருவிய வகையால் நுவறல் வேண்டும்.[2]

அந்நாளில் அனைத்துமே பா வடிவில் எழுதப்பட்டதால் இவ்விதி பொருந்துவதாயிருந்தது. இன்றோ கட்டுரை, சிறுகதை, புதினம், நாடகம் எனப் பல திறத்தன உரைநடை வடிவில் உள்ளன. அதனால் அணிந்துரைகளும் உரைநடையிலேயே உள்ளன.

செய்யுள் நூல்களுக்காவது அணிந்துரை செய்யுளிலேயே இருப்பின் மரபு காக்கப்பட்டதாகும். அணிந்துரை தருவோர் செய்யுளியற்றக்கூடியவராய் இருந்தால்தான் இஃது இயலும்; அத்தகையவரை அணுகி அணிந்துரை பெறுவது பொன்மலர் நாற்றமுடைத்தாம்! எந்நூல் எவ்வகையில் அமைந்திருக்கிறதோ அவ்வகையிலேயே அணிந்துரை அமைய முயற்சி செய்யலாம். அப்படிச் செய்யின் அணிந்துரை வரலாற்றில் அஃது ஒரு புதுமைப் படைப்பாய்த் திகழும். நாடக நூலின் முன்னுரை அல்லது

1. நன்னூல், 51
2. நச்சினார்க்கினியர், தொல்காப்பியப் பாயிர உரை.

அணிந்துரை நாடக வடிவில் இருக்கலாமே! இந்நிலையிருந் திருப்பின் நூற்றுக்கணக்கான என் அணிந்துரைகள் எழுந் திருக்கவே வாய்ப்பில்லை! இவ்வணிந்துரை நூற்றொகுதிகள் வெளிவரும் நிலையும் உருவாகியிராது. ஆயினும், அப்படிப் பட்டதொரு முயற்சி தோன்றவேண்டும் என்பது என் அவா.

அணிந்துரை இன்று நுழைவாயில், அழகுரை, மதிப்புரை, ஆய்வுரை, சுவையுரை, சிறப்புரை, பொருளுரை முதலாய பெயர்களாலும் வழங்கப்பட்டு வருகின்றது.

இப்போது வெளிவரும் நூல்களுள்ளும் சிலவற்றில் அணிந்துரைகளைப் பா வடிவில் காணமுடிகிறது. அணிந்துரை 'சாற்றுக்கவி'யாயும் உள்ளது. நூலின் பெருமையை அக்கவி சொல்வதால் அது சாற்றுக்கவி என வழங்கப்படுகிறது. துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றிய திருவெங்கைக் கோவை எனும் நூலுக்கு,

கற்றோர்க்(கு) இனியதொரு தமிழமுதாய் அகப்பொருளின்
கருத்தாய்க் காண
முற்றாரும் மணற்கேணி தொட்டென்ன அணிகள்பல
முனைந்து தோன்றி
சொற்றோறும் நயம்பெருகத் திருவெங்கை நாயகன்நற்
துணைய டிக்கே
வற்றாத பேரன்பிற் கோவையாம் ஒருநூலை
வகுத்திட் டானால்

எனப் பெரும்புலவர் கா. நமசிவாய முதலியார் சாற்றுக்கவி அளித்துள்ளார். இக்காலப் பெரும்புலவர்கள் தாம் படைத்துள்ள நூல்களுக்குப் பலரிடம் சாற்றுக்கவிகள் பெற்றுள்ளதை அறியமுடிகிறது.

18, 19ஆம் நூற்றாண்டுகளில் ஓலைச்சுவடிகளைத் தேடிக் கண்டெடுத்துப் பண்டைய நூல்களைப் பதிப்பித்த சி.வை. தாமோதரம் பிள்ளை, டாக்டர் உ.வே.சாமிநாதையர் போன்றவர்கள் தாங்கள் பதிப்பித்த நூல்களில் நீண்ட முகவுரைகள் எழுதியுள்ளனர். அவற்றில் அவர்கள் நூல்களைப் பதிப்பிப்பதற்கு ஓலைகளைத் தேடியலைந்த தொல்லைகள், பார்வையிட்ட ஓலைகள் முதலியவற்றை விரிவாய்க் குறிப்பிடுவதோடு, அந்நூல்களிலிருந்து அறியக் கிடக்கும் முக்கியச் செய்திகளையும் குறிப்பிட்டுள்ளனர்.

டாக்டர் உ.வே. சாமிநாதையர் பதிப்பித்துள்ள நூல்களில் மிக நீண்ட முகவுரையைக் காணமுடிகிறது;

முகவுரைபற்றிய அவர் கருத்தும் புலனாகிறது. "அக்காலத்தில் அச்சிடப்பெற்ற தமிழ்ப்புத்தகங்கள் பலவற்றில் முகவுரை முதலியன காணப்படவில்லை. அவை இருந்தால் படிப்பவர்க்கு மிக்க உபயோகமாயிருக்கும் என்பதை உணர்ந்த நான் (சிந்தாமணிக் காப்பியத்தைப் பதிப்பித்த போது) அதற்கு அங்கமாக அவற்றை எழுதிச் சேர்த்துப் பதிப்பிக்கலாமென எண்ணினேன். என்ன என்ன விஷயங்களை முகவுரையில் எழுதவேண்டுமென்பதைப் பற்றி ஆலோசித்தேன். நூலைப் படிப்பதற்குமுன் அதிலுள்ள முக்கியமான செய்திகளையும், நூலின் பெருமையையும், உரையின் தன்மை முதலியவற்றையும் படிப்போர்கள் தெரிந்துகொள்ளுவது நலமென்பது என் கருத்து" என உ.வே.சா. தம் சிந்தாமணிப்பதிப்பின் முகவுரையில் குறிப்பிடுகிறார்.[1]

அவரது இக்கருத்துக்கேற்பவே அவர் பதிப்பித்துள்ள நூல்களின் முகவுரைகள் அமைந்திருப்பதைக் காண்கிறோம். அவரது சிலப்பதிகாரப் பதிப்பின் முகவுரையில் ஒரு பகுதி : "இக்காலத்தில் வேறொரு வகையாலும் அறிதற்கியலாத இசையிலக்கண வகை, நாடக இலக்கணம், பரத இலக்கணம், அவிநய வகைகள், நகர் அமைப்பு, கோயிலமைப்பு முதலியன; ஐவகைத் திணைகளின் அமைதிகள், இன்னின்ன சாதியார் இன்னின்ன தொழில்கள் செய்தார் என்பது, பலவகை நீதிகள், சமயக் கோட்பாடுகள், இராசபக்தி, ஆச்சிரம அமைதி, ஆசிரிய பக்தி, மாணாக்கரியல்பு, ஆபரண வகை, தானிய வகை, ஊர்தி வகை, கருவி வகை, மந்திர வகை, பூ வகை, செடி வகை, கொடி வகை, மர வகை ஆகிய இவையும் இவைபோல்வன பிறவும் இந்நூலால் (சிலப்பதிகாரத்தால்) அறியலாகும்" என எழுதியுள்ளார். நூலுள் அடங்கியுள்ள செய்திகளை, பழக்கவழக்கங்களைத் தொகுத்து முகவுரையில் தரவேண்டும் என்பது அவரது எண்ணமாய் இருந்திருக்கிறது.

அவர் எவ்வெந் நூல்களுக்கு முகவுரை எழுதுகிறாரோ, அவற்றுக்கு இலக்கண விளக்கம் அளிக்கவேண்டியிருப்பின் அவற்றையும் தருகிறார். தூது நூல்களுக்கு முகவுரை எழுதும்போது தூது இலக்கணங்களையும், பிற தூதுகளைப் பற்றிய பொதுச் செய்திகளையுங்கூட வெளிப்படுத்தி

1. டாக்டர் உ.வே. சாமிநாதையர், என் சரித்திரம், பக். 608

யுள்ளார்; சில இடங்களில் நூலாசிரியர் கருத்து இன்னவாயிருக்கும் என்பதையும் புலப்படுத்துகிறார். புகையிலைவிடு தூது பதிப்பின் முகவுரையில், "இந்நூல் 59 கண்ணிகளையுடையது. இத்தூதில் புகையிலையின் பெருமைகள் 53 கண்ணிகளில் சொல்லப்படுகின்றன. தூது விடும் செய்தி ஏனைய ஆறு கண்ணிகளில் சுருக்கமாய் அமைந்துள்ளது. இதனால் இதைப் பாடிய புலவர் புகை யிலையைச் சிறப்பிப்பதற்காகவே இதனைப் பாடியிருக்க வேண்டும் என்பது தெரிகிறது" என எழுதுகிறார்.[1]

இவர் காலத்தில் நூல்களைப் பதிப்பித்த பிற ஆசிரியர்கள் இவரைப் போன்று நீண்ட முகவுரைகள் எழுதவில்லையாயினும் சற்றொப்ப இதே போக்கில் எழுதியிருக்கக் காண்கிறோம்; சிலர் மிகுவிரிவான முகவுரை எழுதியுள்ளதையும் காணமுடிகிறது. ரா. இராகவய்யங்கார் தாமியற்றியுள்ள 'பாரிகாதை'யின் முகவுரையில் பாரி, கபிலர் ஆகியோர்பற்றிச் சங்க இலக்கியங்களில் கிடைக்கும் குறிப்புகளை விரிவாய்த் தந்துள்ளதோடு முகவுரையிலேயே காப்பியக்கதை முழுவதையும் சுருக்கமாய்த் தந்துள்ளார்.

மனிதன் ஒருவனுக்கு முகம்போல நூலுக்கு முகவுரை அமைகிறது. முகத்தை நோக்கி ஒருவரது அகநிலைமையைத் தெரிந்துகொள்கிறோம். அவ்வாறே முகவுரையைக்கொண்டு நூலின் உள்ளடக்கத்தைச் செவ்வையாய் அறிந்துகொள் கிறோம்.

மாளிகை, கட்டட வேலைப்பாடமைந்ததாயினும் அதற்குப் பொலிவூட்ட அழகிய ஓவியம் இன்றியமையாதது. ஒரு நகரம் மிகவும் பெரியதாய் அமைந்திருந்தாலும் அதற்கு மேலும் பெருமை சேர்க்கக் கோபுரத்தோடு கூடிய தலைவாயில் இன்றியமையாதது. பெண்கள் இயற்கையிலேயே அழகுடையவர்களாயினும் அவ்வழகுக்கு அழகூட்ட அணிகலன் இன்றியமையாது இருப்பதுபோல் ஒரு நூல் சிறப்புடையதாயினும் அதற்கோர் அணிந்துரை இன்றியமையாததாம்!

---

1. டாக்டர் உ.வே. சாமிநாதையர், புகையிலைவிடு தூது பதிப்பு, பக். 3

மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும்
ஆடமைத்தோள் நல்லார்க் கணியும்போல் – நாடிமுன்
ஐதுரையா நின்ற அணிந்துரையை எந்நூற்கும்
பெய்துரையா வைத்தார் பெரிது.[1]

முகவுரைகள் குறித்துப் பிற நாட்டறிஞர்களும் இவற்றையொத்த கருத்துகளையே கூறியிருக்கக் காண்கிறோம்.

"முகவுரைகள் முன்வாயில்களைவிட முக்கியத்துவம் வாய்ந்தவை. அவை நூலின் நோக்கத்தைத் திறந்து காட்டும் சாவிகளாயும், ஆசிரியரின் இலக்கியப் பயணத்தைக் காட்டும் அருங்கருவிகளாயும் அமைந்துள்ளன.[2]

அணிந்துரை என்பது நூலின் நுழைவாயில் என்பதால் அஃது அந்நூலைப் படிப்போரை நூலினுள் நுழையத் தன் கவர்ச்சியால் ஈர்க்கக்கூடியதாய் இருக்கவேண்டும். காண்பதற்கினிய தோரணவாயில் உள்மாளிகையின் நேர்த்தியினை உணர்த்தி நிற்கும்.[3]

ஒரு நாடகத்தின் விறுவிறுப்பூட்டக்கூடிய தொடக்கம் போலவும், ஓர் இசைக்கூத்திற்கு வாய்த்த நேர்த்தியான இசைக்கருவிகள் போலவும் படிப்பவரை மனமகிழச் செய்வதற்கு சிறந்த அணிந்துரை இன்றியமையாத ஒன்றாம்.[4]

இத்தாலியர்கள் முன்னுரையை நூலின் தாளிதக்கூட்டு என வழங்குகிறார்கள்; பக்குவமாய்த் தாளிக்கப்பட்டால் அது படிப்பவர்க்குப் பெரும் பசியை உருவாக்கி, நூல் முழுவதையும் விழுங்கச் செய்துவிடும்.[5]

அணிந்துரைபற்றிய இக்கருத்துகள், என் அணிந்துரைகளின் தன்மையை எண்ணிப் பார்க்கப் படிப்போர்க்குத்

---

1. நன்னூல் 55

2. George Arthur Buttrick (Editor),. Interpreters' Bible, P. XVII

3. A Preface being the entrance of a book should invite by its beauty. An elegant porch announces the splendour of the interior - Disraeli.

4. A good preface is an essential to the reader into good humour, as a good proloque is to a play; or a fine sympony to an opera. - Disraeli.

5. The Itallians call the preface 'the sauce of the book' and if well seasoned, it creates an appetite to the reader to devour the book itself. - Disraeli

துணைசெய்யும் என்று நம்புகிறேன். பண்டைய இலக்கண நூலார் கூறியுள்ள அணிந்துரை இலக்கணங்களை முற்றிலும் பின்பற்றி அணிந்துரைகளை நான் எழுதியுள்ளேன் எனச் சொல்லுதற்கியலாது; ஆயினும், அணிந்துரையைப் படிப்போர்க்கு அந்நூலை முற்றாய்ப் படிக்க வேண்டும் எனும் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அதை எழுதியிருப்பதாகவே கருதுகிறேன்.

தமிழ்த்தாய்க்கு அணி சேர்க்கும் நன்னோக்கில் நூல்கள் எழுதும் அன்பர் பலர் தம் படைப்புகட்கு 'அணிந்துரை' அளிக்குமாறு எனக்கு அன்புக் கட்டளை யிட்டனர். அதனையேற்று நூற்றுக்கணக்கானவர்களின் நூல்களுக்கு அணிந்துரை எழுதும் நல்வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

"நான்கு பக்கங்கள் மட்டுமே அணிந்துரைக்கு ஒதுக்கி யுள்ளோம்; அதற்குள் அடங்குமாறு எழுதித் தரவேண்டும்" என்று கூறியவரும் உண்டு; "எவ்வளவு விரிவாய் வேண்டுமானாலும் எழுதுங்கள்" என்று கூறியவர்களும் உண்டு. ஆதலின், என் அணிந்துரைகள் 4 பக்கங்களிலிருந்து 40 பக்கங்கள் வரையினவாய் அமைந்திருக்கக் காணலாம். நான் எழுதித் தந்ததை முழுமையாய்ச் சேர்க்க முடியாமல் சிலர் அளவைக் குறைத்து, சில பகுதிகளை நீக்கி அச்சிட்டதும் உண்டு. அவ்வாறு விடுபட்டவை இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. எந்த அளவினதாய் இருந்தாலும் அணிந்துரையை அந்நூலுக்கு ஓர் அணியாய் இருக்கும் முறையிலேயே எழுதியுள்ளேன் என நம்புகின்றேன்.

நான் எழுதிய அணிந்துரைகளைத் தொகுத்து நூலாக்க வேண்டுமென என் மகள் திருமதி மணிமேகலை கூறியபோது, அணிந்துரை நூலாக வேண்டுமா எனச் சற்றுத் தயங்கினேனாயினும், பேராசிரியப் பெருமக்கள் பலர், 'உங்கள் அணிந்துரையைப் படித்தால் நூலை முழுமையாய்ப் படித்ததுபோன்ற நிறைவைத் தருகிறது; ஆதலின், அவற்றைத் தொகுத்து வெளியிடுவது பயனுடையதாகவே இருக்கும்' என்றனர்; ஆதலின், இந்நூல் வெளிவருகிறது.

நான் எழுதித்தந்த அணிந்துரைகளின் படிகளை வைத்துக்கொள்ளும் பழக்கம் எனக்கில்லாது போயிற்று. இஃது ஒரு பெருங்குறையே! என் மகளும், மருமகன் திரு. புஷ்பராஜ் அவர்களும் நூலகங்கட்குச் சென்று, நூல்களைத்

தேடியெடுத்து, ஐந்நூறுக்கு மேற்பட்ட அணிந்துரைகளைப் படியெடுத்துச் சேர்த்தனர். இன்னும் தேடுதல் பணி நடந்து கொண்டுள்ளது. கிடைத்தவற்றை முதலில் அச்சிட்டு நூலாக்க முனைந்துள்ளனர்.

அணிந்துரை எழுதுதற்கென நான் ஒரு தனித்த முறையை மேற்கொண்டுள்ளேன். கொடுக்கப்பட்ட நூலை முழுமையாய்ப் படித்து, முதலில் அதன் உட்பொருளை மனத்தில் உள்வாங்கிக்கொள்வேன். இரண்டாம் முறை படித்து, அணிந்துரைக்குத் தேவைப்படும் முக்கியப் பகுதிகளைக் குறித்துக்கொள்வேன். பின்னர், அக்குறிப்பு களை நோக்கி, அவற்றை விரிக்கவோ சுருக்கவோ இடமுண்டா என ஆய்வேன். அடுத்து, எம்முறையில் எழுதுவது எனச் சிந்திப்பேன்; பிற இலக்கியங்களுடன் ஒத்திட்டுப் பார்க்க இடமுளதா என்பதையும் அறிவேன். அதன் பின்னரே எழுதத் தொடங்குவேன்.

ஆசிரியர் கருத்துகள், அவர் படைப்புகளில் வெளிப்படுவது தவிர்க்க இயலாததாகும். படிப்போர் அவற்றோடு உடன்படலாம் அல்லது முரண்படலாம். நான் வழங்கும் அணிந்துரைகளில், நூலில் உள்ள கருத்து முரண்பாடுகளையோ கொள்கை வேறுபாடுகளையோ சுட்டிக்காட்டி முன்நிறுத்துவதில்லை. அவற்றை எண்ணிப் பார்க்கும் பொறுப்பைப் படிப்போர்க்கு விட்டு, நூலின்கண் காணும் சிறப்புக்கூறுகளை மட்டும் சுட்டிச் செல்வேன். என் அணிந்துரைகள் பெரும்பாலும் பாராட்டுரைகளாகவே இருக்கும். 'அணிந்துரை திறனாய்வுரையினின்றும் வேறுபட்டது. திறனாய்வுரை குறைநிறைகளைச் சுட்டிக் காட்டுவது. அணிந்துரை நூற்பொருளின் அழகைக் கூறுவது' என்னும் கருத்துடையேன் நான். இப்பாராட்டு முறையால் ஏற்படும் பெரும் நன்மை ஒன்றுண்டு. படிப்போர், நூலுள் ஆர்வத்துடன் நுழைவதற்கு விருப்பமூட்டும் தூண்டு கோலாய் இஃது அமைவதே அந்நன்மையாம்.

"கன்னல் பொருள்தரும் தமிழே, நீ ஓர் பூக்காடு; நான் அங்கோர் தும்பி" என்பார், பாவேந்தர் பாரதிதாசன். பூக்காட்டில் உள்ள பிறவற்றைப் பொருட்படுத்தாமல், பூக்களில் உள்ள தேன்துளிகளை மட்டுமே வண்டு சுவைத்துண்ணுகிறது; தான் சுவைத்துண்டதோடு மட்டும் அமையாமல் தேனடையாய்ச் சேர்த்தும் வைக்கிறது.

அதுபோன்றே நானும் அன்பர்களின் நூல்கள் என்னும் பூக்காட்டில் நுழைந்து, சிறப்புக் கூறுகளாகிய தேன் துளிகளைச் சுவைத்துண்டு மகிழ்கிறேன்; அவற்றைத் தொகுத்து அணிந்துரை எனும் தேனடையாயும் தருகிறேன். தேனடையின் தேனுண்டு மகிழ்வோர், அத்தேன் எடுக்கப்பட்ட பூக்காடுகளுக்குள் நுழைந்து நிறையவே தேனுண்ண வேண்டும் என்பது என் அவா!

அணிந்துரைகளை எழுதச் சொல்வதன் வாயிலாய், நான் ஏராளமான நூல்களைப் படிப்பதற்கும் இன்பம் துய்ப்பதற்கும் வழியேற்படுத்தித் தருகின்ற நூலாசிரியர்கட்கு என் உளமார்ந்த நன்றி.

அணிந்துரைகளை முயன்று தேடித் தொகுத்துள்ள என் அருமை மகள் மணிமேகலைக்கும், மருகர் புஷ்பராஜுக்கும், இவர்களை இப்பணியில் ஈடுபடத் தூண்டுகோலாயிருந்த இவர்கள் மகனும் என் பெயரனுமாகிய செல்வன் கிருபாவுக்கும் நான் பெரிதும் கடப்பாடுடையேன்.

அணிந்துரை நூற்றொகுதியை வெளியிடத் தமிழகத்தின் புகழ்மிக்க பதிப்பகமாகிய பழனியப்பா பிரதர்ஸ் ஏற்றுக்கொண்டதை நான் எனக்குக் கிடைத்த பெருமையாகவே கருதுகிறேன். இதற்கு ஒரு காரணம் உண்டு. எனக்குச் 'சிலம்பொலி' எனும் பட்டத்தைத் தந்தவர் சொல்லின் செல்வர் இரா. பி. சேதுப்பிள்ளை ஆவார். அவர் எழுதிய அனைத்து நூல்களையும் வெளியிட்டுப் பெருமை சேர்த்துள்ளவர்கள், பழனியப்பா பிரதர்ஸார் ஆவர். என்னைப் பாராட்டிய சொல்லின் செல்வரால் பாராட்டப் பெற்றுள்ள பழனியப்பா பிரதர்ஸ் என் எழுத்துகளை நூலாக்கி வெளியிடுகிறது என்பதைவிடப் பெரிய மகிழ்ச்சி எனக்கு வேறு என்ன இருக்கமுடியும்? இந்நிறுவனத்தைச் சார்ந்த அனைவர்க்கும் என் நெஞ்சுநிறை நன்றி.

இந்நூலைப் படிப்பதன் வாயிலாய் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள அனைத்து நூல்களையும் படித்த நிறைவு, படிப்போர்க்கு ஏற்படும் என்று நம்புகிறேன்.

பதிப்புரை

கொங்குதமிழ் நாட்டினிலே
தோன்றியநல் தமிழாறு!
இசையோடு பாய்ந்தோடும்
இன்னிசைத் தேனருவி!
வைகைநதித் தமிழ்ச்சேயை
வளர்க்கின்ற தாய்ச்செவிலி!
மேடைதொறும் நற்றமிழின்
புகழ்பாடும் பூங்காற்று!
சங்கமெனும் கடல்கடைந்து
தமிழமுதம் தரும்நெடியோன்!
புலமையெனும் பூந்தடத்தில்
பூத்தசெந் தாமரை!
பாத்தோறும் தேனெடுத்துக்
கூடுகட்டும் கோத்தும்பி!
தமிழோடு தனைக்கரைத்த
செம்புலப் பெயல்நீரான்!
இத்தகைய
சிறப்புகள் அத்தனையும்
சேர்ந்தொன்றாய் உருவானான்
சிலம்பொலியாம் செல்லப்பன்
எனுந்திருப் பெயர்கொண்டான்!

கவிதையொடு கட்டுரைகள்
காப்பியம்நல் திரைஇசையும்
தகவுடைய சிறுகதைகள்
தன்வரலா றாய்வுநூல்
என்றுபல துறைநூல்கள்
இவன்தோய்ந்தே ஆராய்ந்து
சொல்லழகும் பொருளழகும்
துள்ளிவரும் கருத்தழகும்
பல்சுவையும் நடமிடவே
அணிந்துரைகள் வனைந்துள்ளான்!
பரந்துள்ள கடல்நீரைப்
பருகிட்ட குறுமுனிபோல்
விரிந்துள்ள நூற்சிறப்பை
வித்தகமாய்த் தான்தொகுத்துச்
சிறுதுளியாம் பனித்துளியில்
பெரும்பனையும் தோன்றுதல்போல்

அணிந்துரையில் முழுநூலை
அடக்கிஇவன் காட்டிவிட்டான்!

இந்நூல்
கல்லூரி மாணவர்க்குக்
கரைகாட்டும் ஒளிவிளக்கு!
கற்பிக்கும் ஆசானுக்(கு)
உற்றதொரு ஊன்றுகோல்!
ஆய்வுநூல் மாணவர்க்கு
அரியதொரு புதையலாகும்!
கல்லாரைக் கற்றாராய்க்
கரைசேர்க்கும் பெருந்தோணி!
கருத்துபல கசிந்தூறும்
கன்மலையின் சுனையாகும்!
அணிந்துரைகள் அணிவகுக்க
அழகியதோர் நூலாக
எம்மொழியாம் தமிழ்மொழியில்
இதுபோல வந்ததில்லை!

எனவே இவன்
தன்திறத்தால் தமிழ்மொழியைத்
தானுயர்த்தி வைத்தானா?
தானுரைத்த தமிழாலே
தானுயர்ந்து நின்றானா?
எம்மாலே பதிலுரைக்க
இயலாது பெரியோரே!
உம்மாலே விடைகூற
ஒல்லுமோ இயம்பிடுக!

நன்னூல்கள் தருவதுவே
நமதுகடன் என்றிருக்கும்
பன்னூலின் தாயகமாம்
பழனியப்பா பிரதர்ஸார்
இந்நூலைத் தமிழன்னைக்(கு)
ஏற்புடைய ஆரமெனச்
சூட்டுதற்கு முன்வந்தோம்
தொடர்ந்தெம்மை ஆதரிப்பீர்!
பாத்திரத்தை எடுத்துவைத்துப்
பருகிடவே முன்வைத்தோம்!
பாத்திறமும் பல்திறமும்
பயன்துய்த்து மகிழ்ந்திடுக!

— **பதிப்பகத்தார்**

அணிந்துரை அடங்கல்

வ.எண்	நூற்பெயர்	பக்கம்
	சிறப்புரை	III
	தொகுப்பாளரின் உரை	XXIII
	அணிந்துரையாளரின் முன்னுரை	XXIX
	பதிப்புரை	XLI
1.	தமிழன்பன் கவிதைகள் *தமிழன்பன்*	1
2.	குடவாயிற்கோட்டம் *கோவி. மணிசேகரன்*	22
3.	காந்தி காதை *அரங்க. சீனிவாசன்*	47
4.	நாயகம் ஒரு காவியம் *மு. மேத்தா*	70
5.	குன்றக்குடி அடிகளார் நூல் வரிசை –தொகுதி–1 *பதிப்பாசிரியர் : தவத்திரு பொன்னம்பல அடிகளார்*	82
6.	பாவேந்தர் கனவு *மு. தமிழ்க்குடிமகன்*	90
7.	யாமறிந்த புலவரிலே... *த. இராமலிங்கம்*	95
8.	அண்ணாவின் மேடைக்கலை *பொன். செல்வகணபதி*	105
9.	நினைவுக் குமிழிகள்–1 *ந. சுப்பு ரெட்டியார்*	112
10.	விக்கிரமன் கதைகள் *விக்கிரமன்*	120

வ.எண்	நூற்பெயர்	பக்கம்
11.	புதிய விடியல்கள் *தாராபாரதி*	131
12.	நெற்றியில் ஓர் எரிமலை *பல்லவன்*	137
13.	சந்தனக் காற்று *சி. இராமசாமி*	148
14.	சந்தனச் சரங்கள் *வாரஸ்ரீ*	155
15.	சிரிக்கும் பூக்கள் *அழ. வள்ளியப்பா*	163
16.	ஆடிப்பாடுவோம் *செல்ல கணபதி*	172
17.	வெளுக்கப் பார்க்கும் கிழக்கு *செல்வி சித்ரா*	177
18.	இதுதான் ஹைகூ *தி. லீலாவதி*	184
19.	ஹைக்கூ அந்தாதி *அமுதபாரதி*	189
20.	மச்சகந்தி *கா. மு. ஷெரீப்*	196
21.	குறுந்தொகைப் பெருஞ்செல்வம் *சாமி. சிதம்பரனார்*	202
22.	பட்டுக்கோட்டையார் பாடல்கள் (தொகுப்பு) சே. *ஜீவபாரதி*	234
23.	தமிழ் விருந்து மூன்று *ம. அரங்கநாதன்*	271

"ஆயிரம் முகத்தான் அகன்றது ஆயினும்
பாயிரம் இல்லது பனுவல் அன்றே!"

- நன்னூல்

1

தமிழன்பன் கவிதைகள்

என் அரும் நண்பர், ஈரோடு தமிழன்பன், எழிலார்ந்த கவிஞர். இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞரான பாவேந்தர் பாரதிதாசனாருடன் நெருங்கிப் பழகியவர்; அவரால் பாராட்டப்பெற்றவர். இந்நண்பருடைய (தொடக்ககால மரபுக்) கவிதைகளுக்கான சுவையுரை அளிப்பதில் எல்லையற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

திரு. தமிழன்பன் அவர்களுடைய கவிதைகளில் நான் பெரிதும் ஈடுபடக் காரணம், அவர் புதிய சிந்தனைகளை, பழைய இலக்கண நெறியிலிருந்து இம்மியும் வழுவாது .வடித்துத் தருதலேயாம்! அணிகள் செய்யப் பொன் ஏற்றது. பல ஆண்டுகட்கு முன் செய்யப்பட்ட அணிகலன்களின் வடிவ அமைப்பு இன்றைய நாகரிகப் போக்கிற்கு ஏற்றதாய் இல்லாமல் இருக்கலாம். அதே அணிகலன்களை இன்றைய போக்கிற்கேற்பப் புதிய வடிவங் களில் அமைத்துக்கொள்ள முடியுமன்றோ? அதை விடுத்து அணிகலன்கள் செய்யப் பொன் ஏற்றதன்று என்று சொல்வது பொருந்தாக் கூற்றாகும். அப்பொன்னுடன் பல்வேறு மணிகளையும் சேர்த்துப் பாங்குறச் செய்யப்படும் புதிய அணிகள் போற்றி வரவேற்கத் தக்கனவே! நம் நண்பர் பழைய இலக்கணப் பொன்கொண்டு புதுமைக் கருத்தணிகளைப் பொலிவு துலங்கச் செய்கின்ற கவிக்கொல்லர்!

இவர் முறை திறம்பாக் கவிஞர் மட்டுமன்று, முத்திறக் கவிஞரும் ஆவார். ஆம்! கவிதை புனைதல்; கதைகள், கட்டுரைகள் வரைதல்; கேட்போர் உள்ளம் ஈர்க்கப் பேசுதல் ஆகிய மூன்று துறைகளிலும் முத்திரையைப் பதித்துக்கொண்டவர். நாற்கவியே நாற்படையாய், ஆறுறுப்பே அமைச்சவையாய், ஆர்வமிகு சொல்லே அணிமுரசாய், கற்பனை வளமாம் கவிதைக் குடைக் கீழிருந்து கற்போர் நெஞ்சையாளும் கவியரசர் இவர்!

உள்ளத் துள்ளது கவிதை – இன்ப
உருவெ டுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில் – உண்மை
தெரிந்து ரைப்பது கவிதை[1]

எனக் கவிதைக்கு இலக்கணம் வகுக்கிறார், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. அக்கவிதையிலக்கணத்திற்கு இலக்கிய வடிவம் தரும் நம் கவிஞர், இந்நூலின் பல இடங்களில் கவிதை எவ்வாறு அமையவேண்டும் என்பதுபற்றி விளக்கமுறக் கூறியிருக்கிறார்.

பத்தழகும் ஒத்துவரப் பாடிவைத்த
பழக்கொத்து[2]

ஆகக் கவிதை விளங்க வேண்டும். பாட்டைத் தேராக்கும் நம் பாவலர் அதன் பாங்கினை அழகுற எடுத்தோதுகின்றார். பயன், இனிமை இரண்டும் பாட்டுத் தேரின் சக்கரங்கள்; இனிய ஓசை இழுத்துச் செல்லும் குதிரை; உணர்ச்சி அக்குதிரையை ஓட்டும் சாட்டை. பட்டாலும் துகிலாலும் பொன்னாலும் மணியாலும் அழகுபெற ஒப்பனை செய்யப்பட்டால்தானே தேர் நம் பார்வையை ஈர்ப்பதாய் இருக்கும்! பாட்டுத் தேருக்கும் நம் எண்ணத்தை ஈர்க்க, வண்ணம் வேண்டுமன்றோ? கற்பனையே அந்த வண்ணம்! எதுகை, மோனை என்பன மின்னுகின்ற தோரணங்கள். தேரோடும் வீதி எது? கற்போர் நெஞ்சங்களே பாட்டுத் தேரோடும் பரந்துபட்ட வீதியாகும்.

கவிதையைத் தேராக்கிய கவிஞர், கவிஞர்களை முத்தமிழாம் கடற்பரப்பில் நீரை மொள்ளும் முகிலினமாய்க் காணுகின்றார். கவிமுகில், கற்பனையாகிய காற்றில் ஆடி அசைந்து மேலே சென்று, உணர்ச்சி என்ற மலையில் தவழ்கிறது; கருத்தாகிய மின்னல் மின்னிப் பாமழையாய்ப் பொழிகிறது.

முத்தமிழாம் கடற்பரப்பில் மொண்டு கொண்டு
தக்கபடி கற்பனைப்பொன் காற்றில் ஆடித்
தலைநிமிர்ந்த உணர்ச்சிமலை மேல்த வழ்ந்து
பக்குவமாய் இடியோசை முழக்கி நெஞ்சில்
பளிச்செனவே கருத்துமின்னல் போட்டி ருட்டை
எக்காலும் தோன்றாமல் வென்றொ ழித்தே
இன்மழைபெய் முகிலினமே![3]

---

1. கவிமணி தேசிக விநாயகம், மலரும் மாலையும், பக். 18
2. தமிழன்பன் கவிதைகள், பக். 1
3. மேலது, பக். 4

பாவலர்கள் பஞ்சாங்கம் கற்றவர்களாம்! ஆம்! எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்று வகுக்கப்பட்டுள்ள ஐந்து (பஞ்ச) அங்கங்களையும் ஆய்ந்துணர்ந்தவர்களாயிருப்பதால் அவர்களைப் பஞ்சாங்கம் (பஞ்ச + அங்கம் - ஐந்திலக்கணம்) கற்றவர்கள் என்றுரைப்பது பொருத்தந்தானே!

> கொஞ்சுகவிப் புலவரெல்லாம்.....
> பஞ்சாங்கம் கற்றவர்கள்.....[1]

பாக்கள் உணர்வுகளின் பொதிவிடம் என்பதைக் கவிஞர்,

> ....உணர்வுத்தீப் புகைதா னேபா?[2]

என்று குறிப்பிடுகின்றார். இங்ஙனம் பாக்களுக்கும், பாவலர் களுக்கும் இலக்கணம் சொல்லுகின்ற கவிஞரின் பாடல்களில் இன்பம் தத்தித் தவழும், உணர்ச்சி இழையோடும், கற்பனை கவின் செய்யும், எதுகை மோனை எழிலைக் கூட்டும் என்பதில் எள்ளளவும் ஐயம் தோன்ற இடமில்லையன்றோ?

அவருடைய இக்கவிதை நூலில் உள்ளவற்றுள் சிறந்த பகுதிகள் - சுவையான பகுதிகள் - என்று குறிப்பிட வேண்டு மாயின் நூல் முழுவதையும் திருப்பிச் சொல்ல வேண்டியதாகவே முடியும்! கற்கண்டுக் கட்டியினில் இனிக்கும் இடம் இதுதான் என்று சுட்டிக் காட்ட முடியுமா? படிக்கும் இடமெல்லாம் பாகுச் சுவையேற்றும் பாட்டுக்கட்டி, இக்கவிதை நூல். வள்ளலார், இறைவனைக் குறிக்கக் கூறும் அடிகள் இக்கவிதை நூலுக்கு அப்படியே பொருந்துவன.

> தனித்தனிமுக் கனிபிழிந்து வடித்துஒன்றாக் கூட்டிச்
> சர்க்கரையும் கற்கண்டின் பொடியும்மிகக் கலந்தே,
> தனித்தநறுந் தேன்பெய்து, பசுப்பாலும், தெங்கின்
> தனிப்பாலும் சேர்த்தொருதீம் பருப்பிடியும் விரவி,
> இனித்தநறு நெய்யளைந்தே, இளஞ்சூட்டின் இறக்கி
> எடுத்தசுவைக் கட்டியினும் இனித்திடும்தெள் ளமுதாய்[3]

இலங்குகிறது இந்நூல்.

தெரிந்த செய்திகளையே கவிதை அடிகளில் புலமை மொழியில் - கேட்கும்போது உள்ளம் புளகாங்கிதம் அடைகிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள், "அறிந்ததனை அறிந்ததுதான் என்றாலும் 'எத்தனை அழகம்மா!' என்று அறிந்தோரையே மகிழ

1. தமிழன்பன் கவிதைகள், பக். 69
2. மேலது, பக். 65
3. திருவருட்பா, இராமலிங்க அடிகள், அருள் விளக்க மாலை, பாடல். 17

வைக்கும் அருங்கலையே கவிதையாகும்'' எனக் கவிதையின் தன்மையைக் களிப்புடன் கூறுகிறார்கள். கல்லூரி கண்ட கருமுத்து தியாகராசர் புகழ் என்றும் நிலைத்திருக்கும் என்பதை, நிலைத்துள்ள பொருள்களோடு ஒப்பிட்டுத் தமிழன்பன் தமிழ் மணக்கப் பாடுவதைப் பார்க்கும்போது நம் நெஞ்சமெல்லாம் மணக்கிறது.

என்றுவரை வெண்ணிலவில் குளிர்இ ருக்கும்
என்றுவரை செங்கதிரில் ஒளியி ருக்கும்
என்றுவரை இமயமலை நிமிர்ந்தி ருக்கும்
என்றுவரை கடல்களிலே அலையி ருக்கும்
அன்றுவரை இவர்புகழும் நின்றி ருக்கும்[1]

இதைப் படிக்கும் நமக்கு, "அன்றுவரை இவர் கவியும் நின்றிருக்கும்'' என்ற ஓர் அடியையும் சேர்த்துக்கொள்ளத் தோன்றுகிறது.

சுவைபுதிது, பொருள்புதிது, வளம்புதிது
சொற்புதிது, சோதி மிக்க
நவகவிதை, எந்நாளும் அழியாத
மகாகவிதை...[2]

என்று தம் கவிதைகளைப்பற்றிப் பாரதியார் குறிப்பிடுவார். அம்மாக்கவிஞனின் பேரப்பிள்ளை நம் கவிஞர் தமிழன்பன். ஆம்! பாரதியின் பரம்பரை பாரதிதாசன்; பாரதிதாசனாரின் பரம்பரை தமிழன்பன்! பேரப்பிள்ளை, தந்தையார்க்கும் பாட்டனார்க்கும் பெருமை சேர்க்கும் வகையில் புகழ் பரப்பக்கூடியவர் என்பதை இந்நூலில் அவர் வடித்துள்ள சொல்லாட்சிகள், சிந்தனையோட்டங்கள், எண்ணப் பொலிவுகள் ஆகியவற்றிலிருந்து அறிய முடிகிறது.

கலையுள்ளம் கொண்டுள்ள கோவலனைக் 'கலைப்பூ மேயும் சுரும்பு மகன்' எனக் குறிப்பிடுமிடத்திலும்; இளமையை 'வாழ்க்கை நூலின் முகவுரை' யாய்க் கூறுமிடத்திலும்; தாமரையை 'நீர்விளக்கு' என்னுமிடத்திலும்; சிந்தனையின்றி இருக்க விழைந்தேன் எனச் சொல்லவரும்போது 'கண்மூடி, நெஞ்சை, ஒய்வு நீர் ஓடைக்குள்ளே உந்திட நினைந்தேன்' என்று குறிப்பிடு மிடத்திலும்; இன்னும் நூலின் பக்கந்தோறும் பாவலர் தமிழன்பனின் சிந்தனை வளம் பசுமையாய்ப் படர்ந்திருப்பதைக் காணலாம்.

1. தமிழன்பன் கவிதைகள், பக். 2

2. பாரதியார் பாடல்கள், வெங்கடேசு ரெட்டப்ப பூபதிக்குச் சீட்டுக்கவி

அல்லிப்பூக் கண்ணிரண்டைக்
குற்றாலம் ஆக்கி
அழவல்ல பெண்ணினமே![1]

என்று அவர் விளிக்கும் அடிகளில், சொல்லொழுங்கு குற்றாலம் போல் ஒழுங்குறக் குளிர்ந்து செல்வதைக் காண முடிகிறது!

வறண்ட நிலம்! மழை பெய்து அருவி பெருக்கெடுத்தோடி எங்கும் பசுமையைத் தோற்றுவிக்கிறது! அதைக் கூற வரும் கவிஞர் எங்கும்,

புத்தழகு குத்தகை பிடித்தா டிற்று[2]

என்று குறிப்பிடுகின்றார். இதைப் படிக்கும் நம் உள்ளத்தை மகிழ்ச்சி குத்தகை பிடிக்காமல் விட்டுவிடுமா?

பெண்களைத் தையல் என்றும் குறிப்பிடுவர். தையல் என்பதற்குத் தைத்தல் என்னும் பொருளும் உண்டு. காதலன் ஒருவன் தன் காதலி தையல்தான் - தைப்பவள்தான் - என்றான். இரண்டை இணைத்து, ஊசியால், நூல் நுழைத்துத் தையல் இட வேண்டும். அவளோ, தன் காதலை அவன் உள்ளத்தோடு சேர்த்து, பார்வையாகிய ஊசியில், நினைவு என்னும் நூலைக் கோத்து ஆர்வத்தோடு தைக்கின்ற அன்புத் தையலாம்!

பார்வைக்கூர் ஊசியினால்
பழச்சாற்றுக் காதலினை
நேர்வைத்தென் னுள்ளத்தில்
நினைவுப்பொன் னூலெடுத்தே
ஆர்வத்தை யல்போட்ட
அன்புத் தையல்.[3]

என்னே அழகிய கற்பனை!

கவிஞர்க்குத் தாய்மொழி தமிழின் மேல் உள்ள பற்று, நூல் முழுவதும் மின்னலிடுவதைக் காண முடியும். "சதையைத் துண்டு துண்டாய் வெட்டியெறிந்தாலும் உள்ளத்தில் ஏற்றியுள்ள உரிமை வேட்கையை உன்னால் உருக்குலைக்க முடியாது" என வெள்ளையனைப் பார்த்து இந்தியக் குடிமகன் கூறுவதாய்ப் புதுமைக் கவிஞர் பாரதியார் பாடியுள்ளார்.

1. தமிழன்பன் கவிதைகள், பக். 87
2. மேலது, பக். 8
3. மேலது, பக். 41

சதையைத் துண்டுதுண் டாக்கினும் என்னெண்ணம்
சாயுமோ? – ஜீவன் – ஓயுமோ?
இதயத் துள்ளே இலங்கு மகாபக்தி
ஏகுமோ? – நெஞ்சம் – வேகுமோ?[1]

இது பாரதி பாடல்.

நம் கவிஞரோ, "உனக்கேன் சொந்த மொழி" என்று கடிந்து தம்மைத் தூக்கிலிட்டாலும் அந்த மொழிமீது தாம் கொண்டுள்ள சொந்தத்தை இழக்க முடியாது என்கிறார். எது அந்த மொழி? அதுதான் அவருடைய சிந்தனையைப் பற்றும் மொழி; பற்றும் மொழியிடந்தானே பற்றுவைக்க முடியும் - பணிய முடியும். அந்த மொழிக்காதல்தான், 'செகதீசன்' என்ற அவருடைய பெயரைத் 'தமிழன்பன்' என்றாக்கியுள்ளது. தாய்மொழி தமிழ் குறித்து அவர் பாடுவதை அவருடைய சொற்களிலேயே அறிவதுதான் சிறப்பு!

சொந்த மொழியேன்? எனக்கேட்டுத் தூக்கிடினும்
சொந்த மொழியேன்! சுவைதோய்வேன் – சிந்தனையைப்
பற்றாக் குறைமொழிபால் பாயவிடேன்! பைந்தமிழே
பற்றா யிருப்பேன் பணிந்து.[2]

சொந்த மொழியேன் - இச்சொற்றொடரை முதல் அடியில் சொந்த + மொழி + ஏன்? என்றும், இரண்டாம் அடியில் சொந்தம் + ஒழியேன்! என்றும் பிரித்துப் பொருள் கொண்டு இக்கவிதையை நுகர வேண்டும். முதல் அடியில் உள்ள வினாக்குறியும், இரண்டாம் அடியில் உள்ள வியப்புக்குறியும் நமக்கு உணர்த்தும் வீரத்தையும் பாசத்தையும் எண்ணியெண்ணி இறும்பூதெய்துகிறோம். மொழிவளம் கூறும் இவ்வெண்பா, தமிழர்கள் அனைவரும் நாள்தோறும் காலையில் எழுந்ததும் வண்டமிழைப் பரவ வாய்விட்டுப் பாடி உருகவேண்டிய ஒப்பற்ற ஒன்றாகும்.

தானழிய நேர்ந்தாலும் தாய்மொழியைக் காக்க வேண்டிய தன்மையை,

தாய்மொழிக்குத் தீமையெனில் சற்றும் நெஞ்சம்
தரிக்காமல் நெருப்பாகும் மக்கள் போல[3]

என்னும் அவருடைய கவிதை அடிகள் விவரிக்கின்றன. தூய்மை என்ற சொல்லை நினைக்கும்போதே அவருக்குத் தமிழின் தூய்மைதான் கண்முன் நிற்கிறது. மழையின் தூய்மைத் தன்மையைப் பாடவரும் அவர்,

1. பாரதியார் பாடல்கள், தேசபக்தர் சிதம்பரம் பிள்ளை மறுமொழி
2. தமிழன்பன் கவிதைகள், பக். 85
3. மேலது, பக். 7

பிறமொழிகள் கலவாத தமிழைப் போலப்
பிறங்குகின்ற தனித்தூய்மை...[1]

என்று போற்றி மகிழ்கின்றார்.

இசைகொண்ட இன்றமிழ்!
பண்ணால் பழுத்த பசுந்தமிழ்!
செம்மையிலே மூத்த செழுந்தமிழ்!

என்றெல்லாம் தமிழின் தன்மை, தொன்மை குறித்து அவர் பாடி மகிழ்வதை நூல் முழுவதும் பரக்கக் காணலாம்.

தாய்மொழியைக் காக்கும் பணியில் ஈடுபட்டு உயிர் விட்ட மொழிக்காவலர்கள், கவிஞரின் கண்களில் கண்ணீரைத் தோற்றுவிக்கின்றனர். அவர் பேசுகிறார்

எண்ணற்றோர் இந்நாட்டில் இறந்துபோனார்;
எதிர்நாட்டைக் கவர்கின்ற முயற்சியாலா? – இல்லை;
இன்றமிழைப் பரப்புகின்ற முயற்சியாலா? – இல்லை;
எதிர்ப்பாளர் தமையெதிர்த்த முயற்சியாலா? – இல்லை.

பின் எதனால், எவரால்? எண்ணிப் பார்க்கவே மனம் நடுங்குகிறது! அவரெல்லாம்,

தன்னாட்டில் தன்மொழியைக் காப்ப தற்குத்
தான்தேர்ந்து பதவிதரப் பெற்றுக் கொண்ட
புன்மையரால் தடைப்பட்டார்! அடிக்கப் பட்டார்!
பொருந்தாத முறையிலவர் சுடவும் பட்டார்![2]

வன்கொடுமைக்கு இதனைவிட எடுத்துக்காட்டு இவ்வுலகில் இல்லை என வாய்விட்டுப் புலம்புகின்றார். இத்தகைய கவிஞர்களின் கண்ணீர்தான் கன்னித்தமிழை அரியணை யேற்றியது என்றுரைப்பது மிகையன்று என எண்ணுகிறேன்.

தாய்மொழியை மறப்பது மாபெரும் மன்னிக்கமுடியாக் குற்றமாகும். கோவலன், தன் மனைவி கண்ணகியை மறந்து மாதவியிடம் சென்றான் என்பதைப் பாடும்போது,

தாய்மொழியை மறந்தவன்போல் ஆனான்! வேற்றுத்
தகவற்ற மொழிமணந்த கீழோன் ஆனான்[3]

என்று பாடித் தாய்மொழியை மறக்கும் இழிதகைமையைச் சாடுகிறார்.

---

1. தமிழன்பன் கவிதைகள், பக். 10
2. மேலது, பக். 57
3. மேலது, பக். 20

கவிஞர் வினாக்களை எழுப்பி எதிர்மறை விடைமூலம் செய்திகளை உணர்த்தும் ஆற்றல் வியந்து போற்றுதற்குரியது. வினாக்களை விடுப்பதோடு அவர் வேலை முடிவுறுகிறது. விடைகளோ நமக்கு வியன்மிகு கருத்துகளை நல்குகின்றன. தமிழ்மொழியின் பெருமையைக் காக்க விழையாது தம் பதவியைக் காத்துக்கொள்வதில் நாட்டம் கொண்டிருந்த மொழிப் பற்றற்றோருடைய ஆட்சியில் மொழி காக்க முயல்வோர் இடுக்கணுக்கு ஆளாவது இயல்பே. அடக்குமுறை செய்வது அவர்கட்கு இயல்பு என்பதை இரு வினாக்களில் நமக்கு உணர்த்திவிடுகிறார்.

பங்குனியில் குளிர்காற்றா வீசும்? கொல்லப்
பாய்புலிவாய் அருட்பாவா பாடும்?...[1]

உருவத்தால் ஒத்திருக்கும் இரண்டனுள் பயனால், ஒன்று மற்றொன்றைவிடப் பெருமை பெறுவதுண்டு. கணுக்கள் இருப்பதால் கரும்பும் மூங்கிலும் ஒன்றுதான். ஆயினும்,

......................கழனிக்
கரும்பின் இனிப்பைக் காட்டுமா மூங்கில்?[2]

கரும்புச்சாற்றினும் சுவைமிக்க வினா இது! மயிலுக்கும் தோகையுண்டு; கரும்புக்கும் தோகையுண்டு. ஆனால், கரும்புத் தோகை,

விரித்து விழிக்கு விருந்து படைக்குமா?[3]

பூசிய சாயம் மழையில் அழிந்துபோகும். ஆனால், மயிலின் சாயம் மழையில் அழியுமா? (அவருடைய வினாக்களைப்பற்றி எழுதும் போது எனக்கும் வினா எழுப்பவேண்டும்போல் தோன்றியதால் இவ்வினா) அழியாதன்றோ? அவர் பாடுகிறார் :

புளிதான் கரையும் நீரில்! பொன்போல்
மேய்ந்து திரியும் மீனுமா கரையும்?[4]

இந்தியை நீக்கித் தமிழ், ஆங்கிலம் என்னும் இருமொழிக் கொள்கை சட்டமாய் இயற்றப்பட்டுவிட்ட பிறகு இனி இந்தி நுழைய இடமேயில்லை. இதைக் கூற வருபவர்,

நாட்டுவாழ்த் துக்குப்பின்
நடக்குமா கூட்டம்?—[5]

1. தமிழன்பன் கவிதைகள், பக். 66
2. மேலது, பக். 106
3. மேலது, பக். 107
4. மேலது, பக். 109
5. மேலது, பக். 178

எனக் கேட்கிறார். நாட்டு வாழ்த்தின் பின் கூட்டம் இல்லை. இரு மொழிச் சட்டத்தின் பின் இந்தியில்லை.

மரங்களை வளர்ப்பது சுவையுள்ள கனிகளைப் பெறுதற்கே யன்றித் தூக்கிட்டு மாண்டு மடிவதற்காக அன்றே; மதங்கள் அறம் வளரத் துணை செய்யவேண்டுமேயன்றி மக்கள் ஒருவரோ டொருவர் மோதி அழிய வழி வகுத்துவிடக் கூடாது.

மரம்வளர்த்தல் கனிகளுக்கா,
தூக்கிட்டு மடிவதற்கா?
அறம்வளர்க்கத் தான்மதங்கள்;
அடித்துக்கொண் டழிவதற்கா?[1]

இன்னும் இனிப்பான வினாக்கள் பல இந்நூலில் உள்ளன. அவற்றுள் சிலவற்றைக் கீழே குறிக்கிறேன்.

உலர்ந்தபழம் பிழிந்தால்தேன் ஊற்றா பொங்கும்?

உடலிளைத்து மெலிவுறினும் புலியின் பக்கம்
ஓடிவந்து நாய்மோத்தல் உண்டா?....

புழுதிகளைப் பொன்மாடத் திருத்த லாமா?

சுரும்பென்ன வறும்பூவைச் சூழ்ந்தா பாடும்?

இரண்டிமைகள் பிளக்காமல் காட்சி யுண்டா?

வருவதுண்டா சேற்றினிலே
சந்தனத்து மணக்கிளர்ச்சி?

அருவி மலை ஏறுமா?

அண்ணாவுக்கு உடல் நலமில்லாமையை அறியும் கவிஞரின் உள்ளம் வருந்துகிறது. அவ்வருத்தம் வினா வடிவில் வெளிப்படு கின்றது.

வேருக்குக் காய்ச்சலென்றால்
வெம்பாதா பூவெல்லாம்?
நீருக்குப் பிணியென்றால்
நிம்மதியா மீன்களுக்கு?[2]

செய்திகளைப் புதிய கோணத்தில் கண்டு கூறுவதில் நம் கவிஞர் சமர்த்தராயிருக்கின்றார். கணிகையர்களை,

நெடுங்காம நிலையத்தில் பலர்ப டிக்கும்
புத்தகங்கள்! இரவுக்கோர் வரவு பார்க்கும்
பூவையர்கள்! ஒளிமுத்துக் கோவை யர்கள்

என்றும்; மாதவியை,

1. தமிழன்பன் கவிதைகள், பக். 159

2. மேலது, பக். 184

"காளையர்கள் மனக்கடலில் மிதக்கும் கப்பல்" என்றும்; மின்னலை, "முகில் தின்னும் வெள்ளைப் புழு" என்றும்; பூக்களைத் "தென்றல் படுத்த மெத்தைகள்" என்றும்; செவிகளை, "முறைதவறிப் பிறர்பேசும் பேச்சை, ஒற்றியெடுக்கும் பிழையொற்றுத் தாள்கள்" என்றும்; ஐம்பொறிகள் உள்ளமையால், ' நமது உடலோர் பஞ்சாப்பே!' என்றும்; அண்ணல் காந்தியடிகளை, 'ஆன்மிக நியூட்டன்' என்றும் குறிப்பிடும் இடங்களில் கவிஞரின் புதிய சிந்தனையோட்டத்தை நம்மால் காண முடிகிறது.

கவிதைகட்கு அழகூட்டுவன அணிகள். அணி நலம் இல்லாக் கவிதை தொலைநோக்கியில்லாத விண்ணாராய்ச்சி நிலையம் போன்றதென்பர். இந்நூலில் அணிகள் அனைத்தும் உள்ளன. எனினும், விரிவஞ்சிச் சிலவற்றை மட்டுமே இங்கே குறிப்பிடுவேன். அணிகளின் தாய், உவமையணி; அரிய பல உவமைகள் இந்நூலில் ஆங்காங்கே தென்படுகின்றன. கவிஞர், நாற்காலியில் கண்களை மூடியவண்ணம் சாய்ந்திருக்கிறார். சுற்றிலும் நல்ல இருள்; சிந்தனையிலிருந்து விடுபட்ட அவர் கண்களைத் திறக்கிறார். பார்வையில் எதுவும் படவில்லை. இந்நிலையைக் குறிப்பிட அவர் கையாளும் உவமை புதுமையிலும் புதுமை!

.... ஆற்றில்
விடுத்திட்ட வலை,மீன் இன்றி
மீண்டது போலப் பார்வை
எடுத்திடும் காட்சி இன்றி
எய்திய தென்னை மீண்டும்[1]

காட்சியைக் கவ்வாக் கண்ணுக்கு மீனைக் கொள்ளா வலை உவமையாக்கிக் காட்டப்பட்டுள்ளது. இதைப் படிக்கும்போது கவிஞருடைய கவிதை வலைப்படும் மீனாய் இருந்திட நம் உள்ளம் துடிக்கின்றது.

முயற்சி செய்தாலும் முடியாததற்கு எடுத்துக்காட்டு வேண்டுமா? இதோ தருகிறார் :

நிழல்தன்னைக் கையாலே எடுப்ப தற்கு
நினைந்தாரின் முயற்சிபோல் விழலா யிற்று![2]

அகந்தை கொள்வோர் விரைவில் அழிவர் - எதைப் போல?

உப்பினால் செய்து கடலிலே விட்ட
கப்பலைப் போல[3]

1. தமிழன்பன் கவிதைகள், பக். 74
2. மேலது, பக். 149
3. மேலது, பக். 112

இவருடைய உருவகங்களைப் படிக்கும் போது இவர் உருவகத்திற்கு ஓர் உருக்கொடுக்கவே உருவெடுத்தாரோ என்று எண்ணிடத் தோன்றுகிறது. விண்மீன்களை இவர் உருவகப் படுத்திக் கூறுவது நம்மை வியப்புக்குள்ளாக்குகிறது!

வானம் எழுதிய காதல் வரிகளின்
அச்சுக் குலைந்த எழுத்துச் சிதறல்!

பகலோன் தழுவிய விண்ணில் உடலில்
நகக்குறி செய்த ஒளிவ டுக்கள்!

விசும்புக் குடையில் விழுந்த ஓட்டைகள்!

இரவுப் பெண்ணாள் நிலாப்பா னையில்
கடைந்த தயிரின் சிதறல் துளிகள்!

நிலாவி ளக்கருகில் நெருங்கிப் படிக்கும்
வான வகுப்பு மாணவர் கூட்டம்![1]

இவ்வாறாய் ஐம்பதுக்கும் மேற்பட்ட அரிய உருவகங்கள் விண்மீன்களைப்பற்றி மட்டும் இடம் பெறக் காண்கிறோம்.

சிலேடை, மடக்கு, திரிபு போன்ற இக்காலக் கவிதைகளில் அருகிவருகின்ற அணிகளைக்கூட அழகுபெறக் கவிஞர் கையாள்கின்றார். வந்த சொல்லே திரும்ப வரல், மடக்கு. ஒரு சொல் அல்லது சொற்றொடர் பலபொருள் தந்து செய்யுளின் கருத்தோடு பொருந்த வருவது, சிலேடை. சொற்களின் முதல் எழுத்துகள் மட்டும் மாறுபட்டு மற்றவை ஒத்திருத்தல் திரிபு எனப்படும்.

மாதுறவு சரியாக அமையா விட்டால்
மாதுறவு பூண்பதன்றி வழியு முண்டா?
மாதருக்குக் கொண்டிருக்கும் மாத ருக்கு
மணவாளன் எடுபிடியாள்![2]

முன் உள்ள மாதுறவு என்பதை, மாது + உறவு எனக் கொண்டு, மாதின் உறவு சரியாய் அமையாவிட்டால், பெரும் துறவு (இரண்டாம் அடியில் உள்ள மாதுறவு - மா + துறவு எனப் பிரிக்கப்படுகிறது.) கொள்வதைத் தவிர வழியேது? வெகு தருக்குக் (மா + தருக்கு) கொண்டிருக்கும் மாதர்களுக்கு (மாதருக்கு) மணவாளர்கள் எடுபிடியாள்களாகத்தாமே இருக்க முடியும். சிலேடையாகவும் மடக்காகவும் கொள்ள இடம் தரும் அரிய அடிகள் இவை.

1. தமிழன்பன் கவிதைகள், பக். 29-31

2. மேலது, பக். 120

திருவோடு வாழ்பவரும் அதிகம் பெற்றால்
திருவோடு கையேந்தி வருவார் ஊரின்
தெருவோடு; துருப்பிடித்தால் இரும்புக் கோட்டை,
திண்டாடிச் சரியாதா?[1]

குடும்ப நலத்திட்டத்தை விளக்குதற்கேற்ற அருமையான அடிகள் இவை. செல்வச் செழிப்பில் (திருவோடு திரு + ஓடு) மிதப்பவராயினும், அளவுக்கு மிஞ்சி அதிகம் பிள்ளைகளைப் பெற்றெடுத்தால் இறுதியில் ஓடேந்திப் (திருவோடு) பிச்சை கேட்கும் நிலைக்கு இழிந்துவிடுவர்! மடக்கும் திரிபும் கலந்த சுவை அடிகள்! அளவுக்கு மிஞ்சி மனத்தைத் திரியவிட்டு மக்களைப் பெற்றெடுத்தால் வாழ்வு மடங்கிவிடும் எனக் காட்டக் கவிஞர் மடக்கையும் திரிபையும் இங்குக் கொண்டார் போலும்! துருப்பிடித்தால் என்பதை, துரு + பிடித்தால், துருப்பு + இடித்தால் எனப் பிரித்துச் சிலேடையாகவும் கொள்ளலாம்.

இவர், இலக்கண வழுவற்ற கவிதைகள் இயற்றுபவர் என்பதோடன்றி, இலக்கணக் கருத்துகளைக் கவிதைப் பொருளோடு பொருத்திக் கவிதையிலேயே இலக்கண விளக்கம் செய்யும் இனிய தமிழ்ப்புலவருமாவார்.

நான்கு சீர் கொண்டது, அளவடி. முச்சீர் கொண்டது, சிந்தடி. வெண்பாவில் முதல் மூன்று அடிகள் நாற்சீர் கொண்ட அளவடிகளாயும், கடைசி அடி முச்சீர் கொண்ட சிந்தடியாயும் அமையும். அளவடியும் சிந்தடியும் வெண்பாவில் சேர்ந்திருக்க அனுமதி உண்டு. இந்நிலவுலகிலோ நிதி மிகுந்தோர் அது குறைந்தோரை அருகிருக்க அனுமதிப்பதில்லை.

சீர்நிறைந்த அளவடியும் சீர்கு றைந்த
சிந்தடியும் வெண்பாவில் சேர்ந்தி ருக்கும்!
பாரினிலே நிதிநிறைந்தோர் அதுகு றைந்தோர்
பக்கத்தில் இருப்பதற்குச் சரியென் பாரா?[2]

பாட்டு அனுமதிப்பதைப் பார் அனுமதிப்பதில்லை!

பகாப்பதம் பிரிக்க முடியாதது - இஃது இலக்கண விதி. கவிஞர் தம்மைக் கற்பனைக் கணவனாக்கிக்கொண்டு (ஆம்! கணவன் தன்மையை அவர் கற்பனையில்தான் அறிய முடியும்! இன்னும் மணமாகாதவர்! நூலில் அகப்பொருட்கருத்துகளை

1. தமிழன்பன் கவிதைகள், பக். 117
2. மேலது, பக். 17

அனுபவித்தறிந்தவர்களைவிட அழகுறப் பாடியிருக்கிறாரே என்றால், அந்த வகையில் அவர் திருத்தக்க தேவர்!) காதலியுடன் பேசுகிறார்

அன்பே! பகாப்பதம்நாம்!
ஆர்பிரிப் பாரிங்கே![1]

கணவனும் மனைவியும் பகாப்பதமானதன் விளைவு? அவரையே கேட்டேபோமே!

மனைவி கூறுகிறாள்,

..................பகாப் பதத்து
மொழிப்புணர்ச்சி போலன்பன் வாழ்வில் ஒன்றி
முழுகியுள்ளேன்![2]

ஒன்றிய வாழ்க்கையின் பயன், புதிய உயிர்! உலக வழக்கில் பெண்கள், 'முழுகியுள்ளேன்' என்ற சொல்லுக்குக் கொள்ளும் பொருளை நினைந்து இவ்வடிகளைப் படிக்கும்போது நாமும் இன்பத்துள் முழுகிவிடுகிறோம்! இந்நாட்டிற்கு வந்த வெள்ளையர்கள்....

.... நெடிலடியாய்க்
கழிநெடிலாய் வளரலுற்றார்.[3]

நாற்சீர் கொண்டது, அளவடி. ஐந்து சீர் கொண்டது, நெடிலடி; ஐந்துக்கும்மேல் சீர்கள் கொண்டது, கழிநெடிலடி. வந்தவர்கள் மேன்மேலும் வளர்ந்தார்கள் என்பதை இலக்கணக்குறிப்பைக் கொண்டு விளக்கும் திறம் வியத்தற்குரியதாயுள்ளது. பேரறிஞர் அண்ணாவைப் புகழுமிடத்தில் குறிப்பிடுவார்

அடியிலே கழிநெடில்போல்
அறிவிலே பெரியவன்;
அன்பிலே அளபெடை;
ஆற்றலில் வினைச்சொல்தான்!
தன்னடக்கத் தால்மாத்
திரைக்குறுக்கம்! என்றும்
திரிதலும் கெடுதலும்
தீண்டாத தோன்றல்;
புரிந்து நல்லியல்புடன்
புணர்ச்சியே கொண்டவன்![4]

1. தமிழன்பன் கவிதைகள், பக். 38
2. மேலது, பக். 114
3. மேலது, பக். 156
4. மேலது, பக். 168

முன்பு காணப்படும் சொற்கள் பலவும் இலக்கண உலகில் முதன்மை பெறுவன என்பதை நாமறிவோம்!

இலக்கணம் கவியின் மானம் என்ற கருத்தினாற்போலும், 'மானம்' என்ற தலைப்புள்ள கவிதையில் மற்றெல்லாத் தலைப்புகளிலும் உள்ளவற்றைக்காட்டிலும் அதிக இலக்கணக் குறிப்புகள் தந்துள்ளார். மானமில்லாது வாழ்பவன் உயிரில்லா உடற்கூடு! இதை அவர் இலக்கண முறையில் கூறுவது கேளீர் :

அருங்கவியில் உயிரில்லா எழுத்தை எண்ணி
அலகிடுதல் இலக்கணத்தார் வழக்க மில்லை!
பெருமானம் அற்றவரை எண்ணிப் பார்க்கும்
பிழைச்செயல்கள் நுழைபுலத்தார் செய்வ தில்லை!
வருபாட்டில் அசைச்சொல்போல் பயனி ழுந்து
வாழ்வதுமோர் வாழ்வாமோ?[1]

தமிழ் நெஞ்சம் மானம் நீக்கவரும் சிறு செயலை ஏற்காது என்பதை,

வினைச்சொல்போய் வேற்றுமையை ஏற்ப தில்லை!
வெண்பாப்போய்ப் பிறதளையை மணப்ப தில்லை![2]

என்ற அடிகளில் உளஞ்சிலிர்க்க உரைக்கிறார். சேரமான் கணைக்காலிரும்பொறை சிறைப்பட்டும் தன்மானத்தை இழந்தானில்லை! நிலை குலைந்தாலும் மனம் குலையா மானத்தன்! காவலன் சிறிது நேரம் தாழ்த்திக் கேலி செய்து கொடுத்த நீரைச் சேரன் ஏற்காத தன்மையைப் பெருமையோடு கவிஞர் பாடுகிறார்:

ஒலிகுறைந்த உகரமுயிர் எழுத்துத் தான்,ஓர்
ஒற்றெழுத்தாய் மாறாது! சந்த னக்கோல்
மெலிந்தாலும் சந்தனந்தான்! பிரம்பா காது!
மேலோர்கள் கெட்டாலும் மேலோ ரேதாம்![3]

உகரம், ஒலி குறைந்தாலும் - மாத்திரையிற்சுருங்கி மெய்யெழுத் திற்குரிய மாத்திரயைப் பெற்றாலும் - அஃது உயிர் எழுத்துத்தான்; மெய்யெழுத்தாய் மாறிவிடாது! சேரன், உடலால் சிறையுண்டிருப் பினும் உள்ளத்தால் மன்னனே! இவ்வடிகளைப் படிக்கும்போது "அரைக்கினும் சந்தனம் தன்மணம் மாறாது", "கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே" என்ற பழந்தமிழ்ப் பழமொழிகள் நம் கண்முன்னே நடமிடுகின்றன. பாக்களில் ஒலி குறையும் போது நெட்டெழுத்து அளபெடுத்து ஒலி நிறைக்கும். அஃதே போல் தம்மினத்தின் புகழ் குறையும் போது தமிழ்மானம் தலையெடுத்து அதை நிலை நிறுத்தும்.

1. தமிழன்பன் கவிதைகள், பக். 50
2. மேலது, பக். 51
3. மேலது, பக். 52

மொழிமுதலில் இடைகடையில் ஒலிகு றைந்தால்
முன்வந்து நெட்டெழுத்தே அளபெ டுக்கும்!
பழிவந்து தன்னினத்தின் புகழ்கு றைந்தால்
பைந்தமிழின் பேராண்மை தலையெ டுக்கும்![1]

முரண், பாட்டில் அழகு செய்யும். ஆனால், முரண்பாடு நாட்டை அழிவு செய்யும்!

முரண்,பாட்டில் நயஞ்செய்யும்!
முன்னேறும் நாடோ
முரண்பாட்டில் தேய்ந்தழியும்![2]

முரண், பாட்டில் அழகு செய்வதை அவருடைய பாடல் அடிகளைக்கொண்டே காண்போம். கணவன், மனைவி தேன் இரவுப் பொழுதுகளைச் செலவு செய்தார்கள். செலவு - இரவுப் பொழுது; அதனால் ஏற்பட்ட வரவு - இரு சேய்கள்.

தேனிரவுப் பொழுதுகளைச் செலவு செய்து
செங்கரும்புச் சேயிரண்டு வரவு வைத்தோம்.[3]

ஒரு துறையில் பெருமை பெற்று, நடைமுறையில் உள்ள சொற்களைத் தம் கவிதைகளில் நிரலே அமைத்துச் சுவைப் படுத்திக்காட்டும் தன்மை நம் கவிஞர்க்குண்டு. இசைத்துறையில் பாட்டுக்குப் பல்லவி, அனுபல்லவி, சரணம் ஆகியவை உண்டு என்பதை அறிவோம். நெருப்பைப்பற்றிப் பாடும்போது கவிஞர் இச்சொற்களை எழிலுற எடுத்தாளுகின்றார். நெருப்பு பேசுகின்றது : "வாழ்வு என்ற பாட்டில் நான் பல்லவி - அஃதாவது, தொடக்கம். நானின்றேல் - அடுப்புப் பற்றி எரியாவிடில் - உணவேது? பல்லவியாய் நானில்லாவிட்டால் அநுபல்லவியாய்ப் பசியும் நோயும் தொடரும்; அந்த அநுபல்லவியை நீளவிட்டால் சரணம் மரணமாய் இருக்கும்."

பல்லவியில் நானின்றேல் பஞ்சம் சேரும்!
அநுபல்ல விதான்நோய்,பின் பாட்டில் கேட்கும்;
நல்லதொரு சரணம்,ம ரணந்தான்![4]

கணிதத்தின் அடிப்படைச் செய்கைகளாய்க் கருதப்பெறும் கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் ஆகிய நான்கையும் சேர்த்துக் 'கூழ்' என்ற தலைப்பில் 127ஆம் பக்கத்திலும், சித்திரை முதல் பங்குனிவரையுள்ள மாதங்களின் பெயர்களை அச்சொற்கள்

1. தமிழன்பன் கவிதைகள், பக். 52
2. மேலது, பக். 160
3. மேலது, பக். 117
4. மேலது, பக். 64

வேறு பொருளில் வரும்படி 'மயில்' என்ற தலைப்பில் 106ஆம் பக்கத்திலும் பாடியுள்ளவற்றைப் படிப்போரின் கவனத்திற்குக் கொண்டுவர விழைகின்றேன்.

நம் கவிஞர் சங்க இலக்கியங்களில் தோய்ந்து திளைத்தவர் ஆதலின், சங்கக் கருத்துகள் அவருடைய பாடல்களில் வந்து படிவதை நம்மால் உணர முடிகிறது.

> .... சிறிய கொம்பை
> வருத்துபலாப் பெரும்பழம்போல் கடன முத்தம்
> வாட்டுமில்லம்[1]

என்ற அடிகள் நமக்குச்

> சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கி யாங்கிவள்
> உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே![2]

என்ற குறுந்தொகை அடிகளை நினைவூட்டுகின்றன. மயிலைப் பற்றி அவர் பாடும்,

> ஈர நொச்சி இணையடி பெயர்த்தே
> ஆடினாய்....[3]

என்னும் அடிகளும் குறுந்தொகையை அடியொற்றிச் செல்லுகின்றன!

தொல்காப்பியம் கூறும் எண்வகை மெய்ப்பாடுகளும் இந்நூலில் ஏற்ற வகையில் இடம் பெற்றிருப்பதைப் படிப்போர் அறிய முடியும். ஒரு சுவையை மட்டும் இங்கு விளக்குவேன். சுவைகளுள் பாடுதற்கு அருமையானது நகைச்சுவை. அதுவும் தரம் குறையா நகைச்சுவையைப் பாடுதல் அருமையினும் அருமை. மயிலின் மூக்கும் நீண்ட கழுத்தும் சேர்ந்த தோற்றம் கவிஞர்க்கு ஏழினை (7) நினைவூட்டுகிறது. மங்கையும் மயிலும் ஒன்று என்பர். ஆனால், மங்கையின் கழுத்து மயிலின் கழுத்தைப்போல் நீண்டிராமல் குறுகியுள்ளதே - ஏன்? கவிஞர் கூறும் காரணத்தைப் படிக்கும் நம் உள்ளம் நகைக்கிறது. வாய்விட்டுச் சிரிக்கச் செய்யும் சிரிப்பைவிட உள்ளத்தைச் சிரிக்கச் செய்யும் சிரிப்பே சிறந்ததாகும். பெண்ணின் கழுத்து நீண்டிருந்தால், அக்கழுத்து மூடும் அளவுக்குப் பொன் நகைகளைக் கொண்டுவந்து பூட்டு என்று கணவனை நச்சரிப்பாளாம்.

> ஏழைப்பெண் தன்கழுத்தும்
> இன்னும்மிக நீண்டிருந்தால்

1. தமிழன்பன் கவிதைகள், பக். 119
2. குறுந்தொகை, 18 3-4
3. தமிழன்பன் கவிதைகள், பக். 107

அக்கழுத்து மூடும்
அளவிற்குப் பொன்னணிகள்
தக்கபடி வாங்கிவா
தங்கக் கழுத்தினிலே
தங்கவை என்றிடுவாள்!
கைப்பிடித்தோன் தன்கழுத்தை
மங்கை அறுப்பாள்
மனம்வெறுத்தே என்றுதான்![1]

அவளுக்குக் குட்டைக் கழுத்தாயிற்று என்று குறிப்பிடுகின்றார். இக்கருத்து, பாவுலகில் நம் கவிஞர் தமக்கு வழிகாட்டியாய்க் கொண்டுள்ள பாவேந்தர் பாரதிதாசனாருடைய அடிகளை நினைவிற்கொண்டு பாடியதாகும். முன்னோர் மொழிந்த நற்பொருளைப் பொன்னேபோற் போற்றிப் பெருக்க வேண்டுவது இன்றியமையாத ஒன்று. தந்தையின் சொத்தைப் பெருக்க வேண்டுவது மைந்தன் கடமையன்றோ? பாரதிதாசனார் பெண்ணின் கழுத்து குட்டையாய் இருப்பதற்குக் காரணம் சொல்வார்

அயலான் வீட்டில் அறையில் நடப்பதை
எட்டிப் பார்க்கா திருப்ப தற்கே
இயற்கை அன்னை இப்பெண் கட்கெல்லாம்
குட்டைக் கழுத்தைக் கொடுத்தாள்! உனக்கோ,
கறையொன் றில்லாக் கலாப மயிலே
நிமிர்ந்து நிற்க நீள்கழுத் தளித்தாள்![2]

பெண்கள் பிறர் பேசுவதைக் கேட்பதில் ஆர்வம் கொண்டவர்கள் என்பதைச் சுட்டிக்காட்டினார், பாரதிதாசனார். பெண்கள் நகையணிய வேண்டுமென்ற தணியாத ஆசை கொண்டவர் என்ற கருத்தைப் புலப்படுத்துகின்றார், தமிழ் அன்பன்!

திருக்குறளில், 'புலவி நுணுக்கம்' என்ற அதிகாரத்தில் தலைவி, தலைவனோடு கொள்ளும் ஊடலைப் படித்து உள்ளம் மகிழ்ந்திருக்கிறோம். காதலன் பூச்சூடி வருகிறான். காதலி, "இந்த அழகை யாரோ ஒருத்திக்குக் காட்டுவதற்குச் சூடினீர்" என்று சினம் கொள்கிறாள். காதலன், "யாரையும்விட நாம் மிக்க காதல் கொண்டிருக்கிறோம்" என்றாலோ, உடனே அவள், "யாரைவிட? யாரைவிட?" என்று கேட்டு ஊடல் கொள்கிறாள். அவன், "இப்பிறப்பில் யாம் பிரியமாட்டோம்" என்கிறான். அவளோ, "அவ்வாறாயின் இனிவரும் பிறவியில் பிரிந்துவிட வேண்டும் என்ற

1. தமிழன்பன் கவிதைகள், பக். 103
2. பாரதிதாசன் கவிதைகள், முதல் தொகுதி, மயில்.

எண்ணமோ?" என்று கூறிக் கண்ணீர் வடிக்கிறாள். "உன்னையே நினைந்துள்ளேன்!" என்று அவன் கூறுகிறான். "நினைப்புக்கு முன் மறப்புண்டே! அவ்வாறாயின் என்னை மறந்தீரோ?" என்று ஊடுகிறாள். அவன் தும்மினான். "நூறாண்டு" என வாழ்த்துகிறாள். உடனே, "யார் நினைத்ததால் நீர் தும்மினீர்?" என்று கேட்டு அழுகிறாள். அவளுடைய ஊடலுக்கு அஞ்சி அவன் தும்மலை அடக்கப் பார்க்கிறான். அவளோ, "உம்மவர் உம்மை நினைப்பதை எமக்குத் தெரியாமல் மறைக்கின்றீரோ?" என்று வினவுகிறாள். அவளைக் கெஞ்சி வணங்கி ஊடல் தீர்க்க முனைந்தாலோ, "நீர் மற்ற மகளிர்க்கும் இத்தன்மையானவராய்த்தாமே இருப்பீர்" என்று சினம் கொள்கிறாள். பேசினால்தானே வம்பு! பேசாமல் இருப்போம் என்று நினைத்து அவளுடைய அழகை அமைதியாய் நோக்குகிறான். அப்பொழுதாவது ஒப்பினாளா? "நீர் யாரை நினைத்து ஒப்புமையாய் என்னைப் பார்க்கின்றீர்?" என்று சினந்து கொள்கிறாள். அவன் நிலை இரங்கத்தக்கதாகிவிடுகிறது! இக் குறளோவியம் அனைவரும் அறிந்ததே. அதைக் கருத்திற்கொண்டு நம் அன்பரும் ஒரு புதிய பொலிவுள்ள ஓவியத்தைப் படைக்கிறார். 'மலரழகி' என்கிறான், ஆண். மனைவி கேட்கிறாள் : "நானென்ன வண்டின் எச்சிலா?". "கரும்பே" இது காதலன் வருணிப்பு. "கரும்பே என்கிறீரே; என் உடலில் கணுக்கள் இருக்கின்றனவா? போதுமே இந்த உவமை." இது அவள் கூற்று. கொடி அவளே (கொடியவளே) என்று கூறி அருகில் வந்தால், "கொடியவளை ஏன் மணந்தீர்?" எனக் கேட்கிறாள். "தங்க வடிவாளே!" (தங்கம் போன்ற வடிவையுடையவளே!) எனக் குழைகிறான். "என்னை வாளென்றா வைகின்றீர்?" எனச் சினம் காட்டுகிறாள். "ஈர நிலவே" என அழைக்கின்றான், அவன். உடனே, "என் முகத்தில் மறு என்ன கண்டீர்?" என்கிறாள், அவள். "முடித்து வைத்த ஓவியமே!" என்று அவன் தொட வந்தாலோ, "ஓவியம் ஊமையாயிற்றே! நான் ஊமையல்லள், அத்தான்" என்று ஒதுங்கிச் செல்கிறாள்.

> பிறைவளைவு நகவிரலால் தீண்ட, இன்பப்
> பேறுதரும் எழில்யாழே!

என்று அவன் கூற, அவள், "அத்தானே! என்னுடம்பில் ஏது கூனல்?" என்று கேட்கிறாள். எதைச் சொன்னாலும் எதிர்ப்பு! என்செய்வான் பாவம்! கணவன் பேச, அதற்குத் தான் கூறும் விடையாய் ஒருத்தி மனத்துக்குள் எண்ணுவதாய் இக்காட்சியை நம் புலவர் அமைத்துள்ளார். புலவி நுணுக்கத்திற்குப் பிறகு குறளில் ஊடலுவகை உண்டே! இங்கு இல்லையா என்றால், இருக்கிறது. இத்தனையும் கேட்டு அவன் மனம் தளர்ந்து கடைசியில்,

நறையொழுகும் பாவேந்தன் பாட்டே! என்பார்;
நானவரை இறுகணைப்பேன்! தருவேன் செந்தேன்!

பாவேந்தர் பாட்டு ஊடல் தீர்க்கும் ஒப்பற்ற மருந்தாகிறது!

தலைவர்களின் தன்மைகளை எடுத்துரைப்பதில் தனிப் போக்குக் கொண்டவர், தமிழன்பன். அண்ணல் காந்தியடிகள் குறள்நெறியில் வாழ்ந்தவர் என்பதைக் குறிக்கிறார் :

சந்தனத் திருமேனி
தாங்கிவந்த நம்காந்தி
தாள்கொண்டு குறளுரை
எழுதாமல் தனதுவாழ்
நாள்கொண்டு எழுதியவன்!
நடைசிறந்த உரையாளன்![1]

தாள்கொண்டு உரை எழுதாமல் வாழ்நாள் கொண்டு குறளுக்கு உரை வரைந்தவர், காந்தியடிகள்.

பேரறிஞர் அண்ணாவின் எழுச்சியை, வளர்ச்சியை வாய்விட்டுப் பாடி மகிழ்கிறார்.

தேய்த்தார்கள் அண்ணாவை
இரத்தினமாய்த் திகழ்ந்திட்டான்!
காய்ந்தவர்கள் அரைத்தார்கள்
சந்தனமாய்க் கமழ்ந்திட்டான்![2]

காய்ந்தவர்கள் - இதனைக் காய்ந்தவர்கள் என்றும், காய்ந்து அவர்கள் என்றும் படித்து மகிழலாம்.

தண்ணீருள் அழுத்திவிடத்
தாமுயன்றார், அவனோ,நல்
எண்ணெயைப் போல
எழுந்துவந்தான்; அவன்குரலை
அடக்குதற்குப் பாடுபட்டார்!
தும்மலையார் அடக்கியுள்ளார்?
படுக்கவைக்கப் பார்த்தார்கள்
தஞ்சைப்ப துமையானான்!
மண்ணுக்குள் மறைத்துவிட
மனமிருண்டோர் முயன்றார்கள்;
கண்பறிக்கும் வயிரமென
வெளிவந்து காட்சிதந்தான்!
மலைமுகட்டைக் கைத்துண்டால்
மறைத்துவிட முடிந்திடுமா?[3]

1. தமிழன்பன் கவிதைகள், பக். 153

2. மேலது, பக். 174

3. மேலது, பக். 174-175

இப்பகுதியை விளக்கினால் இதுவே தனி நூலாய் மாறிவிடும் என்பதால் இத்தோடு நிறுத்துகிறேன்.

மாண்புமிகு கலைஞர் அவர்களின் எழுத்தாற்றலை விவரிக்கும் கவிஞர், அவரெழுத்தை - உயிர் எழுத்து, மெய் யெழுத்து, உயிர்மெய்யெழுத்து, முதல் எழுத்து, சார்பெழுத்து, ஆய்த எழுத்தாய் - தமிழ் எழுத்தின் இலக்கணமாய்க் காணுகிறார்.

துடிப்புள்ள உன்னெழுத்தோ
உயிரெழுத்து! துரோகிகளின்
பொய்யெ ழுத்தை
அடித்தோட்டும் மெய்யெழுத்து!
படிப்பவரின் உயிர்மெய்யை
ஆட்டி வைக்கும்
விடிவெழுத்து! தூயநெறிச்
சார்பெழுத்து! வெற்றிபெறும்
முதல்எ ழுத்தாம்!
ஒடிந்துவிழப் பகையறுக்கும்
ஆயுதஎ ழுத்துன்றன்
உயரெ ழுத்தாம்![1]

இப்படிப் பல்வகையிலும் புதுமை புகுத்தும் கவிஞர் அறிவியல் கருத்துகளைக் கவிதை வழி கூற முடியும் என்பதிலும் ஒரு முன்னோடியாய் விளங்குகிறார். மழையைப்பற்றிப் பாடும்போது அது வானமாகிய கல்வி ஆய்வறையிலிருந்து கவிழ்ந்து கொட்டும் பாதரசமோ என்கிறார்!

.... வானில் கல்வி
ஆய்வறையில் இருந்துகவிழ்ந் திட்ட முல்லை
வெள்ளைநிறப் பாதரசம், இந்த மண்ணில்
விரைந்துமழை யாகியதோ![2]

எவன் ஒருவன் கவிதையைப் படிக்கும்போது தன்னை மறந்து ஓங்கிய இன்பம் எய்துகிறானோ அவன் தன் வாழ்நாள் முழுதும் ஓர் அடிகூடக் கவிதை எழுதாதவன் ஆயினும் அவனே உண்மைக் கவிஞன் ஆவான் என்கிறார், அறிஞர் ஒருவர்.

"He who finds elevated and lofty pleasure in the feeling of poetry is a true poet, though he never composed a line of verse in his entire life-time".

- Mad. Dudevant.

1. தமிழன்பன் கவிதைகள், பக். 143
2. மேலது, பக். 11

இதுவரை நான் ஓரடிகூட, கவிதை யாத்தவனல்லன். ஆயினும், தமிழன்பன் கவிதைகளில் உள்ளமுருக்கும் இன்பம் காண்கின்றேன். ஆதலின், நானும் கவிஞனே! உங்களையும் இந்நூலைப் படித்து ஓங்கிய இன்பமெய்தி உண்மைக் கவிஞர்களாய்த் திகழ உவகையோடு அழைக்கின்றேன்.

நூல்ஆக்கம்	கவிஞர் ஈரோடு தமிழன்பன்
வகைமை	மரபுக் கவிதைகள்
வெளியீடு	மங்கள நூலகம், சென்னை. (1970)

குறிப்பு *இந்நூல் மரபுக் கவிதைத் தொகுப்பு. கவிஞர் தமிழன்பன் இப்போது புதுக்கவிதை பாடுபவர்களுள் முன்னணியில் இருந்து வருகிறார். மேலும், இத் தொகுப்பு வெளிவந்தபோது திருமணமாகாதவர்; இப்போதோ தாத்தாவாக உள்ளார்.*

2

குடவாயிற்கோட்டம்

அருமை நண்பர் கோவி. மணிசேகரன் அவர்களின் வரலாற்றுப் புதினமான 'குடவாயிற்கோட்டம்', 'தினமணிக்கதிர்' நடத்திய போட்டியில் முதற்பரிசு பெற்றுள்ளது. இப்புதினத்தைத் திறனாய்வு செய்ய வேண்டிய பொறுப்பை நண்பர் எனக்களித்துள்ளார். அவர் அன்புக்கு நன்றி. இக்கதையின் சுருக்கம் வருமாறு

இரும்பொறை, சேரமாமன்னன். கோதைமார்பன் அவன் தம்பி. கொங்குநாட்டுக் குறுநில மன்னனிடமிருந்த 'கல்கவணை' என்னும் புதிய போர்க்கருவியைப்பற்றி அறிந்துவர அண்ணனால் ஒற்றனுப்பப்பட்ட கோதைமார்பன், அங்கு வந்திருந்த மங்கலபுரத்துக் குறுநில மன்னன் மூவனின் மகள் நீலவல்லியைக் கண்டு காதல் கொண்டான். மூவன் மூர்க்கன்; சேரனோடு மாறுபட்டவன். சேர இளவல் என்று தெரிந்தும் நீலவல்லி கோதைமார்பனைக் காதலித்தாள்.

தமிழ்நாட்டில் வளர்ந்து வந்த சைன, பௌத்த மதங்களின் வளர்ச்சியைத் தடுக்க முனைந்த சோழப் பேரரசன் செங்கணான் சிவத்தொண்டியற்றும் முறையில் நாடு முழுதும் எழுபது கோயில்களைக் கட்ட முடிவு செய்தான். முதலாவதாய்த் திருவானைக்காவில் சிவாலயம் தோற்றுவிக்க எண்ணி, அதன் தொடக்க விழாவில் கலந்துகொள்ளுமாறு தமிழ்ப் பெருமன் னர்கள், குறுநில மன்னர்கள் ஆகிய அனைவர்க்கும் அழைப் பனுப்பினான்.

அண்டை நாடுகளுடன் நட்புப் பூண்டு தமிழகத்தை அமைதிப் பூங்காவாய் ஆக்கவேண்டுமென்ற எண்ணம் கொண்ட இரும்பொறை, சோழனின் அழைப்பையேற்று உறையூருக்குப் புறப்பட்டான். கோவில் தொடக்கவிழாவில் கலந்துகொள்வதோடு செங்கணானின் தங்கை நல்லினியைத் தன் தம்பி கோதைமார்ப னுக்கு மணம்பேசிச் சோழ-சேரப் பேரரசுகளை உறவினால்

இணைக்கவும் சேரமான் முடிவு செய்தான். இரும்பொறை புறப்படும்போது கோதைமார்பன் தலைநகரில் இல்லை. மூவனுடன் அவன் மகள் நீலவல்லியும் உறையூருக்குப் புறப்பட்டுள்ளாள் என்பதறிந்து அவளைக் காண்பதற்கு அண்ணனிடம் எதுவும் சொல்லாமல் அண்ணியிடம் மட்டும் வஞ்சி சென்று வருவதாய்க் கூறிச் சென்றிருந்தான்.

பயணத்தில் காட்டிடையில் கோதைமார்பன் மங்கலபுரத்து ஒற்றன் ஒருவனைக் கொன்றான். இறந்தவனிடம், மூவனிடம் சேர்ப்பிக்க வேண்டிய ஓலை ஒன்றிருந்தது. நீலவல்லியை எவ்வாறு காண்பது என்று ஏங்கிக்கொண்டிருந்தவனுக்கு இஃது ஓர் அரிய வாய்ப்பாயிற்று. ஒற்றன் அணிந்திருந்த உடைகளுடனும் ஓலைகளுடனும் மூவனைக் காணச் சென்றவன் மூவனுடன் நீலவல்லியும் இருக்கக் கண்டான். காதலர்களின் கண்கள் பேசிக் கொண்டன. மகளிடம் பேச்சுப்போக்கில் அவளைக் கோதைமார்ப னுக்கு மணமுடிக்குமாறு சேரனுக்கு ஓலை அனுப்பியதாகவும், அதற்கவன் மறுத்துவிட்டதாகவும், இனி அவளைச் சோழர் தானைத் தலைவனும் குறுநில மன்னனுமான பழையனுக்கு மணம் முடிக்கப்போவதாகவும் மூவன் கூறினான். காதலர் இருவரும் இது கேட்டுக் கலக்கமுற்றனர். நீலவல்லியின் தோழியின் துணை கொண்டு அன்றிரவு பெண்ணுடை பூண்டு நீலவல்லியை அவள் அறையில் கோதைமார்பன் சந்தித்தான். தந்தையைத் தன் திருமணத்திற்கு இணங்க வைக்கமுடியும் என நீலவல்லியும், தமையனை ஒப்பச்செய்ய இயலுமெனக் கோதைமார்பனும் கூறிக்கொண்டனர். காதலர் உள்ளங்களில் களிப்பு நிரம்பியது. மறுநாள் மூவனுடன் கோதைமார்பன் பயணம் செய்து கொண்டிருக்கும் வேளையில் மூவனுடைய ஒற்றர் தலைவர் நெடுவேட்டுவன் அங்கு வர, இனி உடனிருப்பது இடர் விளைக்கும் என்ற எண்ணத்தால் கோதைமார்பன் குதிரையைத் தட்டிவிட்டுப் பறந்தான். நெடுவேட்டுவன்மூலம் அதுவரை உடன்வந்தவன் சேர இளவல் என்றறிந்த மூவன் பெருஞ்சினம் கொண்டான்.

திருவானைக்காவில் அகிலாண்டேசுவரி ஆலயப்பணி தொடங்கிற்று. விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் சோழ மன்னனின் பட்டத்து யானை மதம் கொண்டது. பாகர்கள் அடக்க முடியாது தவித்தனர். மக்கள் கதி கலங்கிக் கொண்டிருந்தபோது மாறுவேடத்தில் ஆங்கிருந்த கோதை மார்பன் யானையை அடக்கினான்; பின்னர் ஏற்பட்ட சந்தடியில் தன்னை வெளிக் காட்டிக்கொள்ளாமல் மறைந்துவிட்டான்.

இரும்பொறை, நீலவல்லி ஆகிய இருவர் மட்டுமே அவனை இனம் கண்டுகொண்டனர்.

சித்தர் ஒருவர் அங்குத் தோன்றி, கருவறைக்குக் கால்கோள் செய்ய ஓர் இடத்தைக் காட்டினார். அவ்விடத்தில் பள்ளம் தோண்டியபோது அங்கே ஒரு வாள் புதையுண்டிருக்கக் கண்டனர். அவ்வாள் தெய்வ அருளால் கிடைத்ததாய் எண்ணிச் சோழன் மகிழ்ந்தான். மூவன் சித்தரை மதியாது சினந்து பற்களைக் கடித்தான். சித்தரோ, "இவனுடைய முடிவு பற்களில் நின்று சரித்திரம் பேசும்" எனக் கூறி மறைந்தார்.

சேரமான் இரும்பொறையும் சோழன் செங்கணானும் கோதைமார்பனுக்குச் சோழனின் தங்கை நல்லினியை மணம் முடிப்பதென உறுதி செய்தனர். ஊருக்குத் திரும்பும் முன்னே தன் காதலி நீலவல்லியைக் கண்டு கூறிப் போக, அவள் தங்கியிருந்த மாளிகைப்பக்கம் வந்த கோதைமார்பன் நெடுவேட்டுவனால் கைது செய்யப்பட்டான். கைது செய்யப்பட்ட கோதைமார்பன் மாறுவேடத்தில் இருந்தமையால் அவனை அங்குள்ளோர் அறிந்துகொள்ள இயலாததாயிற்று. நெடுவேட்டுவன் அவனை அறிவான்; கைது செய்யப்பட்டவன் கோதைமார்பன் என்பதையும், அவனிடம் நீலவல்லி காதல் கொண்டிருப்பதையும் எடுத்துரைத்து, அரசவை விசாரணைமூலம் சேர குல மானத்தைச் சிதைக்க வேண்டும் என்றும் கூறி மூவனுடைய வெகுளியைப் பெருக்குவித்தான்.

மறுநாள் எண்பேராயமும் ஐம்பெருங் குழுவும் கூடிய அரசவையில் ஐய நிலையில் பிடிபட்ட கோதைமார்பன் விசாரிக்கப்பட்டான். மூவன் அவனை வீரமற்றவன் எனப் பழிக்க, அவனோ முந்தைய நாளில் யானையை அடக்கியவன் தானேயென மெய்ப்பித்தான். மேலும், தன்னை இழித்துப் பேசிய மூவனைத் தாக்கக் கோதைமார்பன் பாய்ந்தான். அதுவரை பொறுமையா யிருந்த இரும்பொறை தன் இளவலைத் தடிகொண்டு தாக்கித் தடுத்தான். விசாரிக்கப்பட்டோன் சேர இளவல் என்பதறிந்ததும் அவையோர் வருந்தினர்.

தன்னை இழிவுபடுத்திய மூவனைப் பழிக்குப் பழி சூழ்வதாய் வஞ்சி இளவல் வஞ்சினமுரைத்தான். காதலனுக்கு நேர்ந்த இழிவை நீலவல்லி அறியாதவாறு மூவன் மறைத்தான். பழையனிடம் தனிமையில் நீலவல்லியை அவனுக்கே மணமுடிப்பதாய்க் கூறி, தான் சேரனோடு போர் தொடுத்தால் பழையன் படையோடு வரவேண்டும் என அறிவித்து மூவன்

தன்னூர் திரும்பினான். கோதைமார்பனும் அண்ணனுடன் தலைநகர் திரும்பினான்.

மூவனின் மூர்க்கத்தனத்தால் போர் மேகம் சூழக்கண்ட இரும்பொறை, 'கணைக்கால்' என்ற புதிய போர்க்கருவியைக் கண்டுபிடித்தான். அஃது ஒரே வேளையில் ஆயிரக்கணக்கான அம்புகளை எய்து எதிரிகளைக் கொல்லவல்லது. அக்கருவியைக் கண்டுபிடித்தமையால் இரும்பொறை, 'கணைக்கால் இரும்பொறை' எனப் பாராட்டப்பட்டான்.

குமரிமுனை சென்றிருந்த புலவர் பொய்கையார், சேரன் சோழநாடு சென்றிருப்பதறிந்து வழியில் செங்கணானைச் சென்று கண்டார். தன்னைப்பற்றிப் பாடுமாறு செங்கணான் புலவரை வேண்டினான். புலவரோ, "இரும்பொறையைப் பாடிய வாயால் இன்னொருவரைப் பாடமாட்டேன்" என்றிட்டார். எனினும், திருவானைக்காவில் பெற்ற தெய்வ வாளையுடைய அவனை வெற்றிகொள்ள ஈரேழு பதினான்கு புவனத்திலும் எவருமிலர் என வாழ்த்தினார். புலவர் சேரநாடு சேர்ந்து இதைப்பற்றிப் பொறையனிடம் கூறியபொழுது அவன் புலவரிடம், "அது எப்படி? உங்கள் நண்பன் இரும்பொறையை மறந்துவிட்டீர்களா?" என்றான். புலவரோ, "இல்லை! நீங்கள் சமாதானம் பூண்டுவிட்ட தால் போரைப்பற்றிய பேச்சுக்கு இடமேது? புலவன் வாக்கு சத்தியமாய்ப் பொய்க்காது" என்றார்.

கோதைமார்பன் மூவனோடு போர் தொடுத்து வெற்றி கண்டான். தொண்டி நகரின் கோட்டைக் கதவுகளில் இழைப்பதற்காக மூவனின் பற்களைப் பிடுங்குமாறு கட்டளையிட்டான். நீலவல்லி கெஞ்சினாள். சேர இளவல் இரங்கவில்லை. காதலை வெளிப்படுத்தி வேண்டினாள். காதல் வேறு, கடமை வேறு என்றான். பல் பிடுங்கப்பட்ட மூவன் மாண்டான். தந்தையின் கொலைக்குப் பழிக்குப் பழி வாங்கப் போவதாய் நீலவல்லி வஞ்சினம் கூறினாள். அவளைக் கழுமலச் சிறையில் அடைப்பதாகக் கூறிச் சிறைபிடித்து நாடு திரும்பினான், கோதைமார்பன்.

வழியில் செங்கணானின் மகன் நல்லிடிக்கோன், கோதை மார்பனைச் சந்தித்து, நீலவல்லியைச் சிறையெடுத்தது அறமன்றென்றும், அவளைச் சோழர் தானைத்தலைவன் பழையன் மணக்க இருப்பதால் விடுவிக்க வேண்டுமென்றும் சோழ மன்னர் எழுதியிருந்த ஓலையைத் தந்தான். கோதைமார்பன் மறுத்து விட்டான். ஆயினும், நீலவல்லி விடுபட்டு நல்லிடிக்கோனுடன்

சோழநாடடைந்தாள். கோதைமார்பன் தலைநகர் திரும்பியதும் மூவனின் பற்கள் கோட்டைக் கதவுகளில் இழைக்கப்பட்டன.

சோழன், சேரனுக்கு முடங்கல் எழுதினான். நீலவல்லியின் மணம் விரைவில் முடிய வேண்டுமென்றும், இழுக்கு நேர்ந்த ஒருவன் மகளைத் தன் தானைத் தலைவன் மணப்பது முறையன்றென்பதால் மூவனின் பற்களைச் சோழநாட்டுக்கு அனுப்ப வேண்டும் என்றும் ஓலையில் கண்டிருந்தது. கோதைமார்பன் இணங்கவில்லை. மந்திராலோசனை கூடியது. முடிவில், "மூவன் பல்லை அனுப்புவதற்கில்லை; உடனடியாய் நீலவல்லியை அனுப்பி வைக்கவும்" என்று ஓலை சென்றது. ஓலையைக் கண்ட செங்கணான் கொதிப்படைந்தான். அமைச்சர் அமைதிப்படுத்தினார். நீலவல்லியை அனுப்பி வைக்கலாம் என்றும், அவளுக்கு மானக்குறைவு ஏற்பட்டால் அது காரணமாகப் படையெடுக்கலாம் என்றும் அவர் கூறினார்.

நீலவல்லி சேர நாட்டுக்கனுப்பப்பட்டாள். அவளைக் கோதைமார்பன் சிறையிலடைத்தான்; உடன் வந்த தூதுவர்கள் கொணர்ந்த ஓலையை ஆற்றில் எறிந்தான். அதை அறிந்த செங்கணான் தெய்வவாளைத் தரித்துத் தானே சேரநாட்டின்மீது படை நடத்தினான்.

பொய்கையாரின் வாக்குப் பொய்க்கக்கூடாது என்பதில் இரும்பொறை உறுதியாய் இருந்தான்; தான் வெற்றி பெற்றால் தெய்வவாள் குறித்துப் பொய்கையார் கூறியது பொய்யாகிவிடுமே! தமிழ்ப்புலவன் சொல் பொய்க்காதிருக்கத் தான் தோல்வியை ஏற்க முடிவு செய்தான். கோதைமார்பன் கணைக்கால் கருவியைப் பயன்படுத்தற்கிடமில்லாமல் இரவோடிரவாய்த் தன்னிடமிருந்த அம்புப் பொதிகளுக்குத் தானே தீ மூட்டி அழித்தான். போரில் சேரர் படைத்தலைவர்கள் மாண்டனர்; சோழர் தானைத் தலைவன் பழையனும் மாண்டான். இரும்பொறை தோற்றுப் பிடிபட்டான்! கோதைமார்பன் தப்பிச் சென்றான்! குடவாயிற் கோட்டச் சிறையில் கணைக்காலிரும்பொறை அடைக்கப் பட்டான்!

பொய்கையார், 'களவழி' பாடிச் செங்கணானை மகிழ்வித்தார்; பரிசாய்ச் சேரன் விடுதலையைக் கோரினார். அவர் சிறைவீடு செய்ய வருவதற்கு முன்னர்த் தண்ணீர் கிடைக்காது தன்மானமிழந்த தன்மையை எண்ணி மருகிச் சேரன் உயிர்விட்டான். விடுதலை செய்ய விரைந்து வந்த பொய்கையார் தம் நண்பனின் உயிரற்ற உடலைக் கண்டு கதறினார். அவன்

இறந்தானாயினும் என்றும் இறக்காத பாட்டொன்றை இறப்பதற்கு முன்னர் எழுதி வைத்துச் சென்றிருந்தான்!

நல்லினி பௌத்த அறம் பூண்டாள்! எம்மத நெறியைத் தவிர்த்துச் சிவநெறியைப் பரப்பச் செங்கணான் கோவில் கட்டினானோ அதே பௌத்த மதத்தைச் சார்ந்ததன்மூலம், தனக்கு மணம் பேசியவனைத் தவிக்கவிட்ட அண்ணனைப் பழிவாங்கிவிட்டாள்! புலவன் வாக்குப் பொய்க்காமல் இருக்கச் சேரமான் கணைக்காலிரும்பொறை தோற்ற கதையை அறிந்த செங்கணான் அவமானத்தில் கூனிப்போனான்.

சிறையில் இரும்பொறையின் உடலைச் சூழ்ந்து செங்கணானும் பொய்கையாரும் இருந்த வேளையில் கோதைமார்பன் அங்குத் தோன்றினான். அவனைக் கண்ட பொய்கையார் விக்கியழுதார். "பெருமானே! அண்ணன் இக்கவிதைமூலம் சாகாச் சரித்திரமாகிவிட்டார். இந்த ஓலை நறுக்கு, சோழரை யுகயுகாந்திரத்துக்குப் பழி வாங்கிக்கொண்டே இருக்கும்" என்றான், கோதைமார்பன்.

கோதைமார்பன் கைகளைச் சோழமன்னர் தம் கண்களில் ஒற்றிக்கொண்டார்! இக்காட்சியை இரும்பொறையின் ஆவி கண்டு மகிழ்ந்தது! இவ்வாறு 'குடவாயிற்கோட்ட'க்கதை முடிவடைகிறது.

வரலாற்றுப் புதினங்கள்

வரலாற்றுப் புதினங்கள் பல இப்பொழுது வெளிவரத் தொடங்கியுள்ளன. வரலாற்று அறிவில்லாதார் இப்புதினங்களைப் படிக்கும்பொழுது, அவற்றுள் வரலாற்றுப்பகுதிகள் யாவை, கற்பனைப்பகுதிகள் யாவை என்று அறிய இயலாமற் போய்விடுகிறது. புதின ஆசிரியர்களின் சொல்லாட்சியும் கதைக் கட்டுக்கோப்பும், அவற்றிலுள்ள அனைத்தும் உண்மை நிகழ்ச்சிகளே என்றெண்ணிடச் செய்கின்றன. எனவே, வரலாற்றுப் புதினங்களின் இறுதியில், உண்மை வரலாற்றுப் பாத்திரங்களும் செய்திகளும் யாவை, கற்பனைப் படைப்புகள் யாவை என்பன பற்றிய தெளிவான குறிப்பு இருக்க வேண்டுவது மிகமிக இன்றியமையாதது. இக்குறிப்பு இரு வகைகளில் பயன்படும். ஒன்று, உண்மை வரலாறு சொல்ல; மற்றொன்று, ஆசிரியரின் கற்பனை வளத்தை அறிய.

கோவையான வரலாற்றுப் பகுதிகளைக் கருப்பொருளாய்க் கொண்டுள்ள புதினங்களிலேயே கற்பனை நிகழ்ச்சிகளைப் பிரித்தறிய முடிவதில்லையெனின், வரலாற்றுத்தெளிவும்

விளக்கமும் போதிய அளவில் கிடைக்கப்பெறாத காலத்திய செயல்களை மையமாய்க் கொண்டுள்ள இந்நெடுங்கதையில் உண்மை எது, கற்பனை எது என்று பிரித்துப் பார்ப்பது எளிய செயலன்றே!

இப்புதினத்தைப் பொறுத்தவரை உண்மை வரலாற்றுக் குறிப்பு மிகக் குறைவு. ஆசிரியர் தம்முடைய எழுத்தோட்டத்தால் கதையை வளர்த்துள்ளார். சேரமான் கணைக்காலிரும்பொறை சோழன் செங்கணானால் கைது செய்யப்பட்டுச் சிறை வைக்கப் பட்டான்; கணைக்காலிரும்பொறை நீர் கேட்டு அதைப் பெறக் காலந்தாழ்ந்தமையால் உயிர் விட்டான். செங்கணான் சிவத்தலங்கள் கட்டியவன். கணைக்காலிரும்பொறையை யடுத்துக் கோதைமார்பன் பட்டத்துக்கு வந்தான். குறுநில மன்னன் மூவனை வென்று, அவன் பற்களைச் சேரன் தன் கோட்டை வாயிற்கதவில் பதித்து வைத்தான். பாண்டிய நாட்டுக் குறுநில மன்னனான பழையன், சோழர்களின் தானைத் தலைமையேற்றிருந்தான் என்பவை மட்டுமே வரலாற்றுக் குறிப்புகளாய் நமக்குக் கிடைக்கின்றன. சோழன் செங்கணானுக்கு நல்லிடிக்கோன் என்ற மகன் இருந்ததாய் அன்பில் செப்பேடு கூறுகிறது. மற்றச் செய்திகள் யாவும் ஆசிரியரின் கற்பனைகளே!

கதையில் இடம் பெறும் இரு முக்கியப் பெண் பாத்திரங்களும் ஆசிரியருடைய சொந்தப் படைப்புகள்! - நீலவல்லியும் நல்லினியும் - 'கோவி'யின் கற்பனையில் தோன்றிய நல்லிசைப் பெண்மணிகள். எனவே, அவர்களையொட்டி எழுந்ததாய்க் கூறும் நிகழ்ச்சிகள் அனைத்தும் புனைந்துரையே! கற்பனைப் படைப்பான நீலவல்லி நஞ்சு குடித்துச் சிறையிலே மடிகிறாள்; நல்லினி துறவறம் ஏற்கிறாள்.

வரலாற்றுச் சான்றுகள்

இக்கதையில் வரும் மாந்தர்களைப்பற்றிய செய்திகள் தமிழ்நாட்டு வரலாற்றில் தொடர்ச்சியற்றவையாயும் மாறுபாடு களுக்கிடமளிப்பவையாயும் காணப்படுகின்றன. ஆயினும், கிடைக்கும் ஆதாரங்களைப் பொருத்தமுறப் புனைந்து ஆசிரியர் கதையை வளர்த்துச் செல்கிறார்.

சேரமான் கணைக்காலிரும்பொறை தொண்டியைத் தலைநகராய்க்கொண்டு ஆண்டவன். இவன் தன்னொடு பகைத்துப் போர் செய்த மூவனைக் கொன்று அவன் பல்லைப் பிடுங்கித் தன் கோட்டை வாயிலில் பதித்தான் என்ற செய்தியைப் பொய்கையார் பாடியுள்ள நற்றிணைப்பாடல் கூறுகிறது.

——— மூவன்
முழுவலி முள்ளெயி றழுத்திய கதவில்
கானலந் தொண்டிப் பொருநன்[1]

மூவனுடைய வலியை அடக்க இரும்பொறை அனுப்பிய படையைக் கோதைமார்பன் தலைமையேற்று நடத்தியதாய்க் கதையாசிரியர் கற்பனை செய்துள்ளார். மூவனின் பல்லைப் பிடுங்குமளவுக்குக் கோதைமார்பன் சினங்கொள்ள வேண்டிய காரணங்களையும் அவர் கதைப்போக்கில் பொருத்தமுற விவரித்துக் காட்டியுள்ளார்.

இச்சேர மன்னனுடைய பாசறையில் ஒரு நாள் இரவில் யானைக்கு மதம் கண்டது. உறங்கிக்கொண்டிருந்த வீரர்கள் விழித்தெழுந்து, செய்வதறியாது திகைத்து மருண்டனர். செய்தியறிந்த சேரமான் விரைந்து போந்து யானையை அடக்கினான். அதன் பிறகு வீரர்கள் திரையவிந்த கடல் போல ஆரவாரமடங்கி இனிது உறங்கினர். இச்செய்தியையும் அதே நற்றிணைப் பாடல் அறிவிக்கின்றது.

.... பாசறை
நெஞ்சு நடுக்குறூஉம் துஞ்சா மறவர்
திரைதபு கடலின் இனிதுகண் படுப்பக்
கடாஅங் கழீஇய கதனடங்கு யானைத்
தடவுநிலை யொருகோடு..[2]

இதிலிருந்து, யானைகளை அடக்குவதில் இரும்பொறை வல்லவன் என்பது புலனாகிறது. அவன் தம்பி கோதைமார்பனுக்கும் இவ்வாற்றல் இருப்பது இயல்பேயாம். அவனுடைய இவ்வாற்றலை வெளிப்படுத்தச் சோழனின் மதங்கொண்ட பட்டத்து யானையை அவன் அடக்கியதாய் ஆசிரியர் தம் புதினத்தில் படைத்துக்கொள்கிறார்.

வரலாற்றில் சோழன் சேரன்மீது படையெடுத்ததற்கான காரணம் அறியக்கூடியதாய் இல்லை. யாது காரணத்தாலோ பெரும்பகையுண்டாக இருவரும் பொருதனர். இப்போர் நிகழ்விடம்பற்றி வரலாற்றாசிரியர்களிடையே கருத்து வேற்றுமை யுள்ளது, "போர் நிகழ்ந்த இடம் குணவாயிற்கோட்டம் எனத் தமிழ் நாவலர் சரிதையும், வெண்ணிப்பறந்தலை என நற்றிணை முன்னுரையும், திருப்போர்ப்புறமெனப் புறநானூற்றுக்குறிப்பும் கூறுகின்றன." ஆயினும், போர் நிகழ்விடம் கழுமலம் என்பதே பெரும்பான்மைக் கருத்தாகும்.

1. நற்றிணை 18 : 2- 4
2. மேலது, 18 : 5 - 9

கோதைமார்பனைக் கணைக்காலிரும்பொறையின் தம்பியாக ஆசிரியர் காட்டுகிறார். இது குறித்தும் வரலாற்றில் தெளிவான சான்று தென்படவில்லை. "பொய்கையார் சோழனைப் பாடி, சேரனது விடுதலையை வேண்டிப் பெற்றார். சிறைவீடு செய்யப் பொய்கையார் வந்து சேர்வதற்குள் இரும்பொறை உயிர் விட்டான். நடந்ததறிந்து செங்கணான் வருந்தினான். பின்னர் அனைவரும் சேரநாடு சென்று, அரசியற்குரியாரை ஆராய்ந்து, கோதைமார்பன் உரியனாதல் கண்டு முடி சூட்டினர்" என்ற கருத்தினை திரு. ஔவை துரைசாமிப்பிள்ளை அவர்கள், 'சேரமன்னர் வரலாறு' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்கள். கணைக்காலிரும்பொறையின் உயிர்நண்பரான பொய்கையார் கோதைமார்பனைப்பற்றிப் பாடியுள்ள இரு பாடல்கள் புறநானூற்றில் காணப்படுகின்றன. இதனாலும் கோதைமார்பன் இரும்பொறைக்குப் பின் பட்டத்துக்கு வந்தவன் என்பது புலனாகிறது. கோதைமார்பன் இரும்பொறையின் மகனாகவோ தம்பியாகவோ பங்காளியாகவோ இருந்திருக்க வேண்டும். கதையாசிரியர் அவனுக்குத் 'தம்பி' இடத்தைத் தந்து கதையைப் புனைந்துள்ளார்.

முறையான வரலாறு இல்லாத தன்மையால், "சேரமான் இறக்கவில்லை; பொய்கையாரின் வேண்டுகோட்படி அவர் அன்பு காட்டும் அரசனான சேரமானைச் சிறையினின்றும் விடுவித்து அவர்பால் ஒப்படைத்துச் செங்கணான் மகிழ்ந்தான்" என்னும் கருத்தை வெளிப்படுத்துவாரும் உண்டு. கீழ்க்காணும் கவிதை அடிகள் இக்கருத்துக்கு ஆதாரமாய்க் கொள்ளப்படுகின்றன.

களவழிக் கவிதை பொய்கை உரைசெய்ய, உதியன்
கால்வழித் தளையை வெட்டி அரசிட்ட அவனும்[1]

.... இன்னருளின்
மேதக்க பொய்கை கவிகொண்டு வில்லவனைப்
பாதத் தளைவிட்ட பார்த்திபனும்[2]

"மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார் உயிர் நீப்பர் மானம் வரின்" என்ற திருக்குறளுக்கு இலக்கணமாய் விளங்கியவன், இரும்பொறை. "குழவியிறப்பினும்[3]..." என்ற பாடல் மூலம் மானவிளக்கம் தந்த அம்மாமன்னன் சிறையிலே மாண்டான் என்பதுதான் பொருத்தமானதும் ஏற்றுக்கொள்ளக்கூடியதுமாகும். "வயிற்றுத் தீத்தணிய தாம் இரந்து உண்ணும் தன்மையுடையாரை"

1. செயங்கொண்டார், கலிங்கத்துப்பரணி, 195
2. ஒட்டக்கூத்தர், விக்கிரம சோழனுலா, 26-28
3. புறநானூறு, பாடல், 74

அரசகுலம் பெற்றெடுக்குமா என்றெழுதிய கை, பிச்சையெனத் தந்த அரசைப் பெற்றது என்று கூறுவது முறையாகாது. இதைக் கருத்திற் கொண்டு இக்கதையில் ஆசிரியர் அவன் இறந்தும் தன் கவிதையால் இறவாத் தன்மை பெற்று விளங்குவதை அழகுறச் சித்திரித்திருப்பது மிகவும் பொருத்தமானதாம்.

சோழன் செங்கணானை, "கழல் மன்னர் மணிமுடிமேல் காகம் ஏறத் தெய்வவாள் வலங்கொண்ட சோழன்" என்றும்,

இருக்கிலங்கு திருமொழிவாய் எண்டோள் ஈசற்கு
எழில்மாடம் எழுபதுசெய்து உலகம் ஆண்ட
திருக்குலத்து வளச்சோழன் [1]

என்றும் திருமங்கையாழ்வார் பாராட்டுகின்றார். இதைக் கருவாய்க் கொண்டு, செங்கணான் திருவானைக்கா ஆலயம் எழுப்பத் தொடங்கிய நிகழ்ச்சியிலிருந்து ஆசிரியர் கதையைத் தொடங்கு கிறார். தெய்வவாள் கிடைத்ததை ஒரு நிகழ்ச்சியாகவும் சித்திரித்துக் காட்டுகிறார்.

பழையனைப்பற்றிய செய்திகளும் வரலாற்றில் கோவை யாய் இல்லை. பழையன் பாண்டிய நாட்டுக் குறுநில மன்னன். அவன் தலைநகர் மோகூர் என்று கூறப்படுகிறது.

மழையொழுக் கறாஅப் பிழையா விளையுள்
பழையன் மோகூர்.....[2]

என்று பாடுகிறது, மதுரைக்காஞ்சி. அகநானூற்றுப்பாடல்கள் பழையனின் தலைநகர் போஒர் என்று குறிப்பிடுகின்றன.

.... வென்வேல்
மாரி அம்பின் மழைத்தோல் பழையன்
காவிரி வைப்பிற் போஒர் அன்ன.....[3]

.... காவிரிப் படப்பைப்
புனன்மலி புதவிற் போஒர் கிழவோன்
பழையன்.[4]

எனவே, மோகூர்ப் பழையன், போரூர்ப் பழையன் என இருவர் இருந்தனர் எனத் தெரிகிறது. மோகூர்ப் பழையனுக்கும் போரூர்ப் பழையனுக்கும் உள்ள தொடர்புபற்றிய தெளிவு வரலாற்றில் இல்லை.

---

1. திருமங்கையாழ்வார், பெரிய திருமொழி, 6 : 8
2. மதுரைக்காஞ்சி, 507 - 508
3. அகநானூறு, 186
4. அகநானூறு, 326

பழையன் காக்கும் கருஞ்சினை வேம்பின்
முழாரை முழுமுதல் துமியப் பண்ணி[1]

என்று பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பதிகம் கூறுகிறது. இளங்கோவடிகளும்,

பழையன் காக்கும் குழைபயில் நெடுங்கோட்டு
வேம்புமுதல் தடிந்த ஏந்துவாள் வலத்துப்
போந்தைக் கண்ணிப் பொறைய![2]

என்று குறிப்பிடுகின்றார். இவற்றால் பழையன் ஒருவன் சேரன் செங்குட்டுவனால் வெல்லப்பட்டவன் என்று தெரிகிறது. கணைக்காலிரும்பொறையும் பழையன் ஒருவனைத் தோற்கடித்துள்ளான். இவ்விரு பழையர்களிடையேயுள்ள தொடர்புமுறை குறித்தும் நம்மால் முழுமையாய் அறிய இயலவில்லை.

கணைக்காலிரும்பொறைக்குத் துணையாய் நன்னன், ஏற்றை, அத்தி, கங்கன், கட்டி, புன்றுறை என்போர் தானைத் தலைவர்களாய் நின்று போர் செய்தனர். அப்போரில் சோழனின் தானைத் தலைவனான பழையன் மாண்டான் என்ற செய்தியைக் குடவாயிற் கீரத்தனார் இயற்றியுள்ள அகநானூற்றுப் பாடல் ஒன்று விளக்குகிறது.

நன்னன், ஏற்றை, நறும்பூண் அத்தி,
துன்னருங் கடுந்திறற் கங்கன், கட்டி,
பொன்னணி வல்விற் புன்றுறை, என்றாங்(கு)
அன்றவர் குழீஇய அளப்பருங் கட்டூர்ப்
பருந்துபடப் பண்ணிப் பழையன் பட்டெனக்
கண்டது நோனான் ஆகித் திண்டேர்க்
கணையன் அகப்படக் கழுமலம் தந்த
பிணையலங் கண்ணிப் பெரும்பூட் சென்னி![3]

இப்பாடலில் கழுமலப்போரில் மேற்சொன்ன வீரர்கள் உடன்றனர் என்று கூறப்பட்டுள்ளது. பழையன் அஞ்சாது போரிட்டான். பருந்துகள் பெருங்கூட்டமாய்ச் சுற்றித் திரியுமாறு களம் முற்றும் பிணங்கள் வீழ்ந்தன. ஆயின், பழையன் இப்போரில் இறந்தான். அஃதறிந்த சோழன் பெருஞ்சினம் கொண்டு களம் புகுந்து கணையனையும் அவன் காத்து நின்ற அரணையும் கைக்கொண்டான் எனப் பாடல் பகர்கிறது. இப்பாடலில் உள்ள கணையனைக் கணைக்காலிரும்பொறை என்றும், பெரும்பூட் சென்னியைச் செங்கணான் என்றும் கொண்டால்தான் மேலுள்ள

1. பதிற்றுப்பத்து, பதிகம், 5
2. சிலப்பதிகாரம், 27 124-126
3. அகநானூறு, 44

கூற்று பொருந்துவதாகிறது! பெரும்பூட்சென்னி செங்கணானே என்பதை வலியுறுத்த வேறு இலக்கியச் சான்றுகள் தென்படவில்லை. இங்ஙனம் தெளிவாய் வரையறுத்துக் கூற இயலாத வரலாற்று நிகழ்ச்சிகளை மையமாய்க்கொண்டு ஆசிரியர் தம் கதை வட்டத்தைத் திறம்பட ஒழுங்குறத் தோற்றமளிக்கும் வண்ணம் வரைந்துள்ள பாங்கு பாராட்டுதற்குரியது.

கதையிடையே ஆசிரியர் தம்முடைய ஆராய்ச்சி முடிவாய் ஒரு கருத்தைக் குறிப்பிடுகின்றார். இரும்பொறை என்ற சேர மன்னன், 'கணைக்கால்' என்ற ஒரு வகைப் போர்க்கருவியைக் கண்டுபிடித்ததால் கணைக்காலிரும்பொறை என்று வழங்கப் பட்டிருக்க வேண்டுமென்று முடிவு செய்கிறார். இதற்கு அவர் ஆதாரமாய்க் கொள்வது கொங்கரிடமிருந்த, 'கல்கால் கவணை' என்ற கருவியாம். கொங்கர்களிடம் கல்கால் கவணை இருந்ததை,

ஆரெயில் அலைத்த கல்கால் கவணை
நாரறி நறவிற் கொங்கர் கோவே[1]

என்ற பதிற்றுப்பத்து அடிகள் புலப்படுத்துகின்றன. பண்டை நாள்களில் மதில்மேல் அமைக்கப்பெறும் பொறிகளோடு, படைகொண்டு செல்லுமிடத்து உடன்கொண்டு போகப்படும் பொறிகளும் இருந்தன. அவற்றுள் கல்கால் கவணை ஒன்று. இது கற்களை இடையறாமல் விடும் கவண்; பெருங்கற்களை வைத்து நெடுந்தொலைவில் மிக விரைய எறிந்து பகைவர் அரண்களைச் சீரழிக்கும் இயல்புள்ளது. மக்களால் எறியப்படும் கவண் போலல்லாது இப்பொறி தானே பெருங்கற்களை வீசியெறியும். கல்லைத் தானே எறியும் பொறி இருந்ததுபோல இடையறாது அம்புகளை ஆயிரக்கணக்கில் செலுத்தும் பொறி ஒன்றிருந் திருக்கலாம் அன்றோ? கல்லையெறியும் பொறி, 'கல்கால்' என்று வழங்கப்பட்டதால் கணைகளை எறியும் பொறி, 'கணைக்கால்' என்று வழங்கப்படுதல் இயல்பேயாம். கணைகளை எறியும் அப்பொறியை இரும்பொறை கண்டுபிடித்தமையால் அவன், 'கணைக்கால் இரும்பொறை' என்று வழங்கப்பட்டான் என்பது ஆசிரியரது துணிபு. கல்காலுடன் கணைக்காலைத் தொடர்பு படுத்தி, சேரனது பெயர்க்காரணத்துக்குத் தரும் விளக்கம் மிகவும் பொருத்தமுடைய்தாய்த் தென்படுகின்றது. எனினும், இஃது ஆராய்ச்சிக்குரியதே. இவ்வாறு பல வரலாற்றுச் செய்திகளை நினைந்து பார்க்கவும், ஆய்வு செய்யவும் தூண்டுவதாய் இப்புதினம் அமைந்துள்ளது.

---

1. பதிற்றுப்பத்து, 88 : 18 – 19

கதைமாந்தர்கள்

கதையை அறிவது போலவே கதைமாந்தர்கள், அவர்களுடைய குணவியல்புகள், படைப்புமுறை ஆகியவற்றை அறிவதும் இன்றியமையாதது. இக்கதையில் சேரமான் இரும்பொறை, சோழன் செங்கணான், கோதைமார்பன், மூவன், நீலவல்லி, நல்லினி ஆகியோரை முக்கியக் கதைமாந்தர்களாய்க் கொள்ளலாம். கதை இவர்களைச் சுற்றியே சுழல்கிறது. கதையின் வளர்ச்சிக்குக் காரணமாய் இருப்பவர்களும் இவர்களே! ஆசிரியர் படைத்துக் காட்டியுள்ள இவர்களுடைய குணவியல்புகள் வருமாறு

சேரமான் இரும்பொறை

இவர் சேர நாட்டுக் குணவாயிலிலிருந்து பயணம் புறப்படும் நிலையில் கதை தொடங்குகிறது; சோழ நாட்டுக் குடவாயிற் கோட்டத்தில் இறப்பதோடு கதை முடிவடைகின்றது. "ஏழடி உயரம்; இரும்பனைய தோள்கள்; அகன்ற முகம்; அறிவுசான்ற நெற்றி; கனல் கக்கும் கண்கள்; பருத்த மூக்கிற்கேற்ற கனத்த மீசை; விரிந்த மார்பகம்; வீங்கிய கரங்கள்; கடைந்தெடுத்த தொடைகள்; கால்களில் வீரகண்டாமணி" - இவையே இவருடைய தோற்றம். பகை மறந்து அரசுகள் ஒற்றுமையுடன் வாழ வேண்டுமென்ற உயர் குணம் கொண்ட உத்தமர். "போரைத் தூண்டுவது எளிது; அமைதியை நிலைநாட்டுவது அரிது" என்றெண்ணி அமைதி காக்கும் அரிய செயலை மேற்கொண்டார். சோழன் செங்கணான் கோயில் திருப்பணிகளைச் செய்து முடிக்க ஆகும் ஐந்தாண்டு காலத்தில் நாட்டில் அமைதி கோரி மன்னர்களை வேண்டியபோது இரும்பொறை, "சோழரே! நீங்கள் ஐந்தாண்டுகளுக்கு இந்த வரத்தைப் பெற வேண்டும் என்று நினைக்கிறீர்கள். நானோ, என்றென்றைக்கும் அமைதி நிலவுமானால் தமிழகம் முன்னேற வாய்ப்புண்டு என்று கருதுகிறேன்" என்றார். இவருடைய அமைதிப்பற்றை இச்சொற்கள் விளக்குகின்றன. ஆயினும், இவருடைய முயற்சி வெற்றி பெற்றது என்று சொல்வதற்கில்லை. அமைதியில் நாட்டம் கொண்டுள்ள இவரையே படையெடுக்கச் செய்துவிடுகிறது நாட்டுச்சூழல்; அமைதியை விரும்புபவராயினும் பிறர் படையெடுப்பால் தம் நாடு பாழாகிவிடக்கூடாது என்பதற்காக, எதிரியை முரியடிக்கக் 'கணைக்கால்' என்ற புதிய கருவியைக் கண்டுபிடிக்கிறார்; புலவர் பொய்கையாரிடம் எல்லையற்ற ஈடுபாடு கொண்டவர். தெய்வ வாளைப் பெற்ற செங்கணானை வெல்ல ஈரேழு பதினான்கு உலகங்களில் எவரும்

இலர் என்று சொன்னதோடு 'புலவர் வாக்குப் பொய்க்காது; இது சத்தியம்' என்றார், பொய்கையார். அவர் சத்தியம் என்று சொன்னது பொய்த்துவிடக்கூடாதே என்பதற்காகத் தம்மையே தோல்விக்கு ஆளாக்கிக்கொண்டார், இத்தமிழ்த்தியாகி!

வீரரான இம்மன்னர், "உயிர் நீப்பர் மானம் வரின்" என்ற குறள் அடிக்கு இலக்கணமாயினார். எந்தப் புலவருடைய சொல் பொய்க்கக்கூடாது என்று தம்மைச் சிறைப்படுத்திக்கொண்டாரோ அதே புலவர் இவருடைய விடுதலைக்கான ஆணையைப் பெற்றுச் சிறை விடுவிக்கச் சென்றார். ஆனால், விடுதலையை அனுபவிக்க இவர் உயிர்தான் இல்லை.

சோழன் செங்கணான்

இறைபணியே நிறைபணி என்றெண்ணும் இயல்பினன்; சைவமும் வைணவமும் தழைத்தோங்கிய நாடு சமணத்தாலும் சாக்கியத்தாலும் நிலையிழந்து போனதைத் தடுக்க ஆலயமெழுப்பி அறப்பணி செய்ய முனைந்தான். மங்கலச்செயலுக்கு, வேறுபாடு கருதாது அனைவர்க்கும் அழைப்பனுப்பினான். ஒருவர்க்கொருவர் மாறுபட்ட கருத்துள்ளவர்களாயினும் அவர்களைத் தன்னளவில் ஒரே நிறையில் வைத்தெண்ணும் பாங்கினன். மூவனுக்கும் சேரர்க்கும் பகைமையிருப்பினும் அவ்விருவரையும் தன் நண்பர்களாகவே எண்ணி மதித்தவன். மூவன்மீது சேரர் போர் தொடுத்தபோது, அஃது அவர்களுடைய உள்நாட்டு நடப்பு என ஒதுங்கி நின்றவன். கோதைமார்பன், மூவனின் பல்லைப் பிடுங்கியது போரறம் என ஒப்புக்கொண்டானாயினும் பெண்ணைச் சிறையெடுத்ததை விரும்பவில்லை. தன் சேனைத் தலைவன் மணக்க இருப்பவளை இழிவுபடுத்தினர் என்பதற்காகச் சேர நாட்டின்மீது படையெடுத்தான். இவனும் இரும்பொறையைப் போலவே புலவர் சொல்லுக்கு மதிப்பளித்தவன். தன்னால் சிறை பிடிக்கப்பட்டவனைப் புலவரின் வேண்டுகோளுக்காக விடுதலை செய்யவும் ஒப்புக்கொண்டவன்.

கோதை மார்பன்

வீரமாவழகன்! இவன், "தோளசைத்தால் வான் நடுங்கும்! வாளெடுத்தால் இந்த வையமே நடுங்கும்." நீலவல்லியின் மனங்கவர்ந்த நித்தியப் பேரழகன்! காதலில் நனைவுற்று அதற்காக எதையும் இழக்கச் சித்தமாயிருப்பவன்! காதலியைக் காணப் பெண் வேடமும் ஏற்றவன். காதலிற்சிறந்தது போன்றே வீரத்திலும் வெற்றி விளைவித்தவன். அடங்கா யானையை அடக்கியவன்.

உறையூரில் அரசவையில் இவன் காட்டிய வீரம் அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தது. "பேடிபோல் அலறுகிறான்! வீரமற்ற வமிசத்தில் வந்தவன் போலும்" என்று மூவன் எள்ளியுரைத்ததும் ஆர்த்தெழுந்த கோதைமார்பனை அடக்க அத்தாணி மண்டபத்தில் யாராலும் முடியவில்லை. சீறியெழுந்த சிங்க வீரனை அண்ணன் இரும்பொறையால்தான் அடக்க முடிந்தது! அண்ணன் அடித்ததும், "வரமளிக்க வேண்டிய தெய்வமே என்னைத் தண்டித்துவிட்டது" என்று கூறும்போது பாசத் துடிப்புத் தென்படுகிறது. "மூவனே! இந்த ஒவ்வோர் அடிக்கும் நீ காரணம் சொல்ல நேரிடும்" எனச் சூளுரைத்த அந்தத் துடிப்பினூடே அவனுடைய சினத்துடிப்பு வெளிப்படுகிறது. அவ்வாறே மூவன் பதில் சொல்ல நேரிட்டது! படையெடுத்து அவனை வென்றதோடு பற்களையும் பிடுங்கினான். அவன் சினத்தின்முன் காதல் வலிமையற்றுவிட்டது. நீலவல்லியின் வேண்டுதல் பயன் விளைவிக்கவில்லை. அவளையே சிறையில் அடைத்தான். தான் வீரன் என்பதை எந்நிலையிலும் மறவாதவன். காதலியின் கண்ணீரின் முன் வீரம் தோற்கவில்லை. அதே போன்று அவன் தெய்வமாம் அண்ணன் மாண்டு கிடப்பதைக் கண்டு பொய்கையார் கதறியழுதபோதும், "சாவுக்குப் புலவன் கண்ணீர் சிந்தலாம்; வீரன் மரியாதைதான் செலுத்த வேண்டும்" என்று கூறி வீரப் பண்புக்கு எடுத்துக்காட்டானவன்!

மூவன்

மங்கலபுரத்துக் குறுநிலத் தலைவன். "முரட்டுத் தனமானவன்; மூவன் என்றாலே அரக்கன் என்பார்கள்!" "கருங்காலி மரத்தில் கடைந்தெடுத்தது போன்ற தோள்களை யுடையவன்! கறுத்துக் கம்பீரத் தோற்றத்துடன் கனத்த மீசை கொண்டவன்." "மூர்க்கத்தனமும் அரக்கத்தனமும்" ஆட்சி செய்யும் உடலினன். ஆத்திரமூட்டினால் நெஞ்சிலுள்ள செய்திகள் அத்தனையையும் வெளிக்கொட்டிடும் இயல்பினன். யுத்த வெறி கொண்டவன். "யுத்தம் உலகின் நாகரிகத் தருமம்; யுத்தமில்லாத களமும், வெற்றி கொள்ளாத அரசனும், வரமளிக்காத தெய்வமும், பிள்ளை பெறாத பெண்போல மலட்டுக்குச் சமானம்" என்பது அவன் சித்தாந்தம். உயிருக்குயிராய் விரும்பும் மகள் வாழ்வு பாழானாலும் கவலையில்லை; கோதைமார்பனைக் கொன்று ஒழிக்க வேண்டுமென்ற கருத்தினன்; அவனுடைய அரக்கத்தனம் அவனையே அழித்தது.

நீலவல்லி

மூவனின் மகள். கோதைமார்பனைக் கவர்ந்த காந்தம்; "அள்ளக் குறையாத அமுதப் பேரழகி! நிலாவினும் ஒளி படைத்த முகத்தினள்; நீள்விழிப் பார்வைச் சுகத்தினள்!" அவள், கதையின் முற்பகுதியில் தென்றலாகவும், பிற்பகுதியில் சுழன்று வீசும் சூறாவளியாகவும் காட்சியளிக்கிறாள். மூர்க்கன் மகளாயினும் பாசம் நிறை நெஞ்சினள்! தந்தைக்கும் காதலனுக்குமிடையே போர் மூண்டது. முதல் நாள் போரில் கோதைமார்பனுக்குத் தோல்வி. "ஐயகோ! அவர் தோற்றுவிட்டால் அவருக்கு விலங்கிட்டுக் கொண்டுவந்து என் முன்னாலேயே சித்திரவதை செய்வாரே, தந்தை. கடவுளே! யாருக்கென்று வெற்றிப் பிரார்த்தனை செய்வேன் நான்!" இக்கூற்றில் அவளுடைய காதலன்பும் தந்தையன்பும் போட்டியிடுவதை நாம் காண முடிகிறது. போருக்கே காரணம் கோதைமார்பன்தான்; போரைத் தான் நிறுத்த விரும்பியும் அவன் இசையவில்லை என்று கூறி மூவன் அவள் காதல் நெஞ்சில் கலக்கத்தையூட்டினான். என்னதான் அரக்கனாயிருந்தாலும் தந்தையின் பல் தன் நேரிலேயே பிடுங்கப்பட்டு அவன், 'நீலவல்லி' என்று பெருங்குரலெழுப்பி மாண்ட பிறகு, அவள் மாறியதில் தவறு கூற முடியாது! அவளுடைய இதயத்தில் எழுதப்பட்ட கோதைமார்பன் என்ற உயிரோவியம் அவனுடைய போர் வெறியால் அழிக்கப்பட்டது. தந்தையின் பல்லைப் பிடுங்கிய செய்கை பண்பாடற்றது என்றாள். கோதைமார்பனோ, 'போர் நாகரிகம்' என்றான். காதலி, " 'என் தந்தை' என்று கூறியுமா இக்கொடிய செயல்" என்றாள். 'வஞ்சினம்' என்றான் சேர இளவல். "அப்புறம் காதலாவது கத்தரிக்காயாவது; இதுவும் ஒரு காளிச்சினம்" என்று அரற்றிப் 'பழிக்குப் பழி' வாங்குவதாய் வஞ்சினமுரைத்தாள். கோதைமார்பனால் சிறைபிடிக்கப்பட்டும் சேர நாட்டுக்கு அழிவைத் தேடித் தந்தாள். நஞ்சுண்டு தன் வாழ்வையும் முடித்துக்கொண்டாள்.

நல்லினி

சோழ மன்னன் தங்கை. "நீலவல்லியைப் போல் கவர்ச்சி மிக்க அழகியல்லள்; ஆயினும், திருமகளைப் போன்று அமைதியான அழகு பொருந்தியவள்; அவளுடைய அழகு வழிபடத்தக்க பேரழகு; இனக்கவர்ச்சியைத் தூண்டி மயக்கவல்ல அழகன்று." இப்புதினத்தில் அமைதியே வடிவமான கதையுறுப்பினர் ஒருவர் உண்டு என்றால் அவள் நல்லினியே. கோதைமார்பனுக்கு அவளை மணம்பேசி முடித்த அளவிலேயே

அவனைக் கணவனாய் ஏற்றுவிடுகிறாள். சேர நாடு என்றதுமே மகுடிகேட்ட நாகம்போல மயங்குகின்றாள். கோதைமார்பன், அரசவையில் அடிபட்டதும் துடிதுடித்த அவள், அவனருகிலேயே யிருந்து பணிவிடை செய்கிறாள். பணிவிடை செய்துவருகையில் கோதைமார்பன் பேச்சுப்போக்கில், "மூவன் மகள் எப்படிப் பட்டவள்?" என்று வினவினான். "அதை ஏன் நீங்கள் கேட்கிறீர்கள்?" - வெடுக்கென மறுமொழி அவளிடமிருந்து வருகிறது. இவ்விடத்தில், "என்னதான் குழந்தை மனம் படைத்தவ ளானாலும் இந்தக் கேள்வி கிள்ளி எழுப்பத்தானே செய்யும்" என்று ஆசிரியர் எழுப்பும் வினா நியாயமானதே! இறுதியில் தன் எண்ணம் நிறைவேறாததைக் கண்ட நீலவல்லி புயலெனச் சீறினாள்; நல்லினியோ சாந்தம் தவழத் துறவறமேற்றாள்.

துணைமாந்தர்கள்

கதையில் துணைமாந்தர்களாய்ப் பழையன், நல்லிடிக்கோன், பூவானி, பொய்கையார், சித்தர் ஆகியோரைக் குறிப்பிட்டுக் கூறலாம். பூவானி பொறுப்புள்ள தோழி. நல்லிடிக்கோன் செங்கணான் புதல்வன். கோதைமார்பனிடம் தூது சென்று திரும்புகின்ற அளவில் அவன் பணி முடிவுறுகிறது. பழையன் குறுநில மன்னன்; சோழனின் தானைத் தலைவன்; வீரனாய் இருக்கின்றானே தவிர விவேகமுள்ளவனாய்த் தெரியவில்லை; எதையும் ஆய்ந்து முடிவெடுப்பவனாய்த் தெரியவில்லை. மூவன் விரித்த வலையில் எளிதில் பிடிபடுகிறான். சோழப் பேரரசனிடம் மூவனுக்குத் துணையாகப் படையுடன் செல்ல வேண்டுமென்று வாதிட்ட அவன், நல்லினியின் வாதத்தின்முன் தலைகுனிகிறான். மொத்தத்தில், "அவன் ஒரு வீரன்; வல்லவன், வேலவன், வெற்றித் திருமகன்." அவனைப்பற்றிக் கதை ஆசிரியரின் இக்கணிப்பே நம் கணிப்புமாய் இருக்கிறது. அவர் கூறுகிறார் : "என்ன இருந்து என்ன பயன்? நீலவல்லி விஷயத்தில் இத்தனை பலவீனமாய் இருந்து விட்டானே. அவன்மீதும் குற்றமில்லை; காதலுக்கும் மடமைக்கும் பெயர்தானே வித்தியாசம். இது ஒருதலைக் காதலானாலென்ன, இருதலைக் காதலானாலென்ன? மருந்தற்றது; மருத்துவனும் அற்றதாயிற்றே!" அவனுடைய காதல் விவகாரம் பெரும் படையெடுப்புக்குக் காரணமாய் அமைந்து சேரனின் உயிர் குடித்தது!

சித்தரும் பொய்கையாரும் கதைத் துணைமாந்தர்கள் என்றுரைக்கத் தக்க நிலையிலிருந்தாலும் அவர்கள் கதையின் உயிர்ப்பொறியாய் விளங்குகிறார்கள்.

திடீரெனத் தோன்றிய சித்தர், சோழன் தெய்வ வாள் பெறக் காரணமாயினார்! பொய்கையார் தெய்வ வாள் பெற்ற சோழனை வெல்ல ஈரேழு உலகத்திலும் எவருமிலர் என்று கூறி வாழ்த்தினார். அந்த வாக்குப் பொய்த்துவிடக்கூடாது என்பதற்காகவே சேரமான் தோல்வியை விரும்பி ஏற்றான்! தெய்வ வாளும், அதைக் கண்ட பொய்கையார் வாழ்த்தும் கதைத் திருப்பத்துக்குக் காரணமாயிருப்பதால் சித்தரையும் பொய்கையாரையும் கதையுடலின் நாடி எனக் குறிப்பிடலாம்.

"பளீர் பளீர் என்று மின்னல் பறிப்பது போன்ற பிரம்போசையுடனும் பாதக்குறட்டின் அடியோசையுடனும்" சித்தர், கதையில் இருமுறை தோற்றமளிக்கிறார். கதையின் முடிவினை வெளிப்படையாய் இல்லாமல் குறிப்பால் உணர்த்திச் செல்கின்றார். மூவனை, "அவனுடைய முடிவு பற்களில் நின்று சரித்திரம் பேசும்" என்றும், சோழனைச் "சாகாத சரித்திரத்துக் குரியவன்" என்றும், சேரனை, "மானஸ்தன்" என்றும் குறிப்பிட்டு மறைகிறார். இம்மூன்று கூற்றுகளுந்தாம் இக்கதைக் கோபுரத்தின் கலசங்கள் என முடிவில் உணர்கிறோம்.

நடை

ஆசிரியரின் நடை தங்குதடையற்ற ஆற்றொழுக்கு; அவருடைய நடை, இரைச்சலிடும் கடலலையன்று; தெளிந்த நீரோடையில் தென்றலசைக்க நேரிடும் சிறு நெளிவு; சிறு சொற்றொடர்கள்; ஆயினும், மனத்தை ஈர்க்கும் பாங்கு. புதினத்தில் உள்ள அவருடைய சில சொற்றொடர்களையே கீழே சான்றாக்கி யுள்ளேன்.

"நாவில் சொல் மலர்ந்தாலும் நெஞ்சில் கனல் மணந்தது மன்னர்க்கு."

"புறத்தே புன்னகையும் அகத்தே புயலுமாய்ச் சேர மாதேவி விடைகொடுக்கிறாள்."

"மூன்று நாழிகைப் போது முணுமுணுக்கும் நேரத்தில் கரைந்துவிட்டது."

"தந்தை முன்னால் காதலனைப் பார்த்த நீலவல்லி தன்னை மறந்தாள்; நிலை தளர்ந்தாள்; குலை நடுங்கினாள்."

"நெஞ்சு கறுவியது; நினைவு கனன்றது."

"கோதைமார்பன் மனத்தில்? அரட்சியும் மருட்சியும் அலைமோதின."

"பொறி கலங்கியறியாத மூவன் இந்தச் செய்தி கேட்டுக் கதி கலங்கிப் போனான்."

"சேரமானுக்கு நெஞ்சு வீங்கியது; நிலைமை கூனிக் குறுகச் செய்தது."

"சிங்கம் சிலைத்தது; மாவீரம் மலைத்தது; அழகிய கோதை மார்பகத்தே துடிக்கும் நெஞ்சம் அலைத்தது."

அரிய உரைகள்

புதினத்தில் அரிய உரைகள் பல ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன. மணி பதித்த அணியென அவை ஆசிரியரின் நடைக்கு மெருகூட்டுகின்றன.

"மூட்டம் போடும் மேகங்கள் எல்லாம் மழையைப் பொழிவதில்லை."

"கரை புரண்ட மகிழ்ச்சிக்கு ஆளானவர்களிடையே குறும்புத்தனமான செய்கை முகிழ்ப்பது இயற்கை."

"தேரின் அச்சு முரிவு ஏற்பட்ட பிறகு திருவிழா என்ன வேண்டிக் கிடக்கிறது?"

"சொல்லில் மலர்வது காதலல்ல; முயற்சியில் மணப்பதுதான் காதல்."

"அழகில் காதலில்லை; காதலில் அழகிருக்கவேண்டும்."

"குடியர்களுக்குக் குடித்தால்தான் போதை; மூர்க்கமும் பிடிவாதமும் கொண்டவர்கள் எந்த நேரமும் போதையுள்ள வர்கள்."

"ஆலோசனை செய்யாதவன் அவசரக்காரன்; ஆலோசனைக்கு வருத்தப்படுகிறவன் முன்யோசனை இல்லாதவன்."

"மனம் நிலையாய் இருக்கிறவரை பெண், தெய்வமாய்க் காட்சி தருகிறாள்; இதுவே மாற்றம் கண்டு தடுமாறிவிடுமானால்...."

ஆசிரியர் சொற்றொடரை முடிக்கவில்லை. முடிவைப் படிப்போர் பாங்குக்கு விட்டுவிடுகிறார்.

நயவுரைகள்

விரிவுரை கூறத்தக்க காவிய நடையும் புதினத்தில் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன. அணி திகழும் வரிகள் நம்மைச் சுவையிலாழ்த்துகின்றன. நீலவல்லியின் அழகை ஆசிரியர், "நெஞ்சத்தில் கூடு கட்டித் தேன் சொரியும் தித்திக்கும் பேரழகு"

எனக் குறிப்பிடுகிறார். இப்புதினத்திலும் நம் நெஞ்சத்தில் கூடு கட்டித் தேன் சொரியும் அடைவரிகள் பல இனித்திடக் காண்கிறோம். உருவக நடைக்கோர் எடுத்துக்காட்டு நீலவல்லி சிவிகையில் செல்ல, கோதைமார்பன் அவள் கண்களில் படும்படியாய்க் குதிரைமீது செல்கிறான். அந்நிலையை ஆசிரியர், "நான்கு விழிகளும் வழிநெடுக நயனமொழி பேசிக்கொண்டன. எழுத்தற்ற அந்த மொழிக்குத்தான் எத்தனை வலிமை..... ஒவ்வோர் இமைப்பும் ஒவ்வோர் அத்தியாயம்; ஒவ்வோர் அசைவும் ஒவ்வொரு பாகம்" என்று குறிப்பிடுகிறார். காதல் இலக்கியத்தில் கண்ணசைவைப் பாகமாக்கி, இமைப்பை அத்தியாயமாக்கி, அதன் வழி தம் எழுத்துகளில் நம்மைக் காதல் கொள்ளச் செய்து விடுகிறார், நண்பர் 'கோவி' அவர்கள். காலம் விரைந்து பல மாற்றங்களை நிகழ்த்தியதென்பதை நயம்பட, "காலத்தேர் கடகடவென்று நாள்களை நசுக்கி, வாரங்களை விழுங்கி, மாதங்களை ஏப்பம் விட்டது" என்று குறிப்பிடுகிறார். 'கடகட' என்பது விரைந்து என்றும், 'கடகட' என்ற ஒலியுடனென்றும் இருவகையாகப் பொருள் கொள்ள இடம் தந்து இனிக்கின்றது.

இலக்கியப் பிழிவு

காவிரியைப்பற்றியும் உறையூரைப்பற்றியும் உள்ள பகுதிகள் நம்மைச் சங்க இலக்கியங்களோடு தொடர்புகொள்ளச் செய்கின்றன. காவிரி, அலை தவழச் செல்லும் அழகைப் "பூவிரி சூழ் காவிரியாள் புதிய தெம்பை அலைகளில் ஏற்றி, வெள்ள நடை பழகுகிறாள்" என்றவர் எழுதும்போது,

> மருங்கு வண்டு சிறந்தார்ப்ப
> மணிப்பூ ஆடை யதுபோர்த்துக்
> கருங்க யற்கண் விழித்தொல்கி
> நடந்தாய் வாழி காவேரி

என்ற சிலப்பதிகார அடிகள் நம்முன் நிழலாடுகின்றன.

"சோற்று வளம் படைத்த சோழ நாட்டைக் காண்கிறோம். கோள்நிலை திரிந்து கோடை நீடித்தாலும் தன்னிலை திரியாத் தமிழ் மணக்கும் காவிரியாறு வளைய வந்துகொண்டிருக்கிறது. அதன் பசுமை நிறைந்த கரையில் பவித்திரமாய் விளங்கும் சோழர் தலைநகராம் உறையூரைப்பற்றி அறியாதார் யார்?....

"கார் தவழும் கோபுரமும், கதிர் தங்கும் சோலைகளும், தேரோடும் வீதிகளும், திருநிறைந்த பெண்களும் நிறைந்த

உறையூர்க் கோநகரம் கண்கொள்ளாக் காட்சியாய் விளங்கியது" - இவ்வரிகள் சங்க இலக்கியங்கள், இடைக்கால இலக்கியங்கள் ஆகியவற்றின் பிழிவு என்றால் மிகையாகாது. சொற்றொடருக்குச் சொற்றொடர் சங்கப் பாக்களையும், பெரியபுராணம் போன்ற அருந்தமிழ் நூல்களையும் நமக்கு நினைவூட்டுகின்றன.

நன்றிப் புலப்பாடு

புகழேந்திப்புலவர் தம்மை ஆதரித்த சந்திரன் சுவர்க்கியைத் தாமியற்றிய நளவெண்பாவில் தக்க இடங்களில் குறிப்பிட்டு நன்றிக்கடனாற்றினார். கம்பரும் தம்மை ஆதரித்த சடையப்ப வள்ளலின் பெயரைத் தாமியற்றிய காவியம் இருக்கும்வரை இருக்கத்தக்கதாய் இராமாயணத்தில் பல இடங்களில் போற்றிப் புகழ்ந்துள்ளார். திரு. 'கோவி' அவர்களும் தாம், 'தினமணிக் கதிர்' இதழுக்கென இக்கதையை எழுதியமையால் கதையிடையே 'தினமணி கதிர்' இடம்பெறச் செய்துள்ளார். 'தினமணிக் கதிர்' என்ற எழுத்துக் கூட்டல்தான் இலக்கணத்திற்குப் பொருந்தியது. என்ன காரணத்தாலோ இதழ் நடத்துவோர் ஒற்றின்றித் 'தினமணி கதிர்' என அச்சிடுகின்றனர். அவர்கள் கொண்டுள்ள அச்சொற் றொடர் அவ்வாறே வெளிவரத் தக்கவகையில் 'கோவி' அவர்களும் 'தினமணி, கதிர் பரப்பி மூன்று நாழிகைப் போது முத்தாய் உருண்டது' எனப் பத்தொன்பதாம் அத்தியாயத்தைத் தொடங்கு கிறார். சூரியனாகிய 'தினமணி' தன் கதிர் பரப்பி மூன்று நாழிகை முடிவுற்றது என்ற பொருளில் எழுதி, 'தினமணி கதிர்' என்ற சொற்றொடரை இவ்விடத்தில் இலக்கணப் பிழையற்றதாகவும் செய்துவிட்டார்.

நிழலிடும் நிகழ்ச்சிகள்

பொன்னிறப் பூக்களைக் கண்டுவந்த 'வேர்ட்ஸ்வொர்த்', வீட்டில் சாய்வு நாற்காலியில் ஓய்வாய் அமர்ந்திருந்தபோது அப்பூப்படலம் தன் மனத்திரையில் முகிழ்த்தெழுவதைக் கூறி மகிழ்ந்துள்ளான். அரிய காட்சியின் வலிமை அத்தகையது! அவ்வாறே காட்சிச் சிறப்பால் இந்நூலிலும் சில பகுதிகள் நாம் மீண்டும் எண்ணிப் பார்த்து மகிழத்தக்க வகையில் அமைந் திருப்பதைக் காண்கிறோம்.

நீலவல்லியின் தோழி பூவானியிடம் கோதைமார்பன் நீலவல்லியைச் சந்திக்க வேண்டுமெனக் கூறியிருந்தான். இதைப் பூவானி நீலவல்லியிடம் கூறினாள். கேட்ட நீலவல்லி, "இதைக் கேட்டுமா என்னை உறையூரில் அவரைச் சந்திக்கச் சொன்னாய்"

என்றாள். அதற்கு அவள் கூறும் மறுமொழி பன்முறையும் நம்மை எண்ணிப் பார்க்கச் செய்கிறது. அவள், "உங்களுக்குத்தான் காதல்; எனக்குக் கண்கள் நன்றாய் இருக்கின்றன" என்கிறாள். காதலுக்குக் கண் இல்லை என்பர். அதனாலே, 'உங்களுக்குச் சிந்தனையில்லை. இங்குச் சந்தித்தால் மற்றவர் என்ன நினைப்பர்; தந்தை யறிந்தால் என்னாவது?' என்றெல்லாம் பொருள்பட, "உங்களுக்குத்தான் காதல்" என்ற சொற்றொடரில் கூறிவிடும் பாங்கு தனிப் பாங்கே!

கோதைமார்பன் காட்டிடையில், மங்கலபுரத்து ஒற்றனுடையில், நீலவன் என்ற பெயருடன் மூவனுடன் பேசிக் கொண்டு வரும்போது மூவன், "நீலவா! உனக்கேன் மீசையில்லை; மங்கலபுரத்து ஒற்றர்களுக்கு மீசை ஒரு மங்கலச் சின்னமல்லவா?" என்றான். அதற்குக் கோதைமார்பன், "அரசே! நான் புதிதாய் ஏற்பாடு செய்யப்பட்டவன்..... அடுத்த முறை சந்திக்கும்போது மீசையுடன் சந்திப்பேன்" என்றான். இக்காட்சியை மற்றோரிடத்தில் ஆசிரியர் அழகு பெறப் பொருத்திக் காட்டுகிறார். உறையூரில் மாறுவேடத்தில் கைது செய்யப்பட்ட கோதைமார்பன் விசாரிக்கப் படுகிறான். முதல் நாளில் யானையை அடக்கியவன் தானே எனக் கூறுகிறான்! தன்னுடைய பொய்க் குறுந்தாடியைப் பொருத்தி முன்னாளில் இருந்த தோற்றத்தைக் காட்டினான். "அப்படி யென்றால் கனத்த இந்த மீசையும் பொய்தானா?" என்று அமைச்சர் கேட்டார். கோதை மார்பன் கூறினான் "மூவரை ஒரு சமயம் சந்தித்தபோது மீசை முக்கியம் என்று குறிப்பிட்டார்! நான் அடுத்த முறை சந்திக்கும்போது மீசையுடன் சந்திப்பதாய்ச் சொன்னேன்! இப்போது மீசையுடன் அவரை நேருக்குநேர் சந்திக்கின்றேன்" என்றான். முன்னிகழ்ச்சிகளைப் பின்னிகழ்ச்சிகளோடு இணைத்துக் காட்டும் 'கோவி'யின் திறத்திற்கு இந்த இடத்தை எடுத்துக்கொள்ளலாம்.

மானம்பற்றிக் கோதைமார்பன் வாயிலாய்க் 'கோவி' அவர்கள் வெளிப்படுத்தும் கருத்து, மனம் பன்முறையும் அசைபோட்டு அரைத்து விழுங்க வேண்டிய ஒன்று "உலகில் யாசகமாய்க் கொடுக்க முடியாதவை மூன்று. ஒன்று, உயிர் எமனுக்குச் சொந்தமானது. இன்னொன்று, தாய்-தந்தைக்குச் சொந்தமானவள். மூன்றாம் பொருள், மனைவி - ஒருவனுக்கே சொந்தமானவள். இந்த மூன்றுக்கும் உயரியது - மேலானது என்ன தெரியுமா? மானம்! அதை யாராவது யாசிக்கக் கொடுப்பார்களா". மானம் கருதி உயிர் விட்ட அரசன் கணைக்காலிரும்பொறையின் முன்னர் மானத்திற்கு இப்படியொரு விளக்கம்! இவ்வாறு பல்வேறு

நலன்களைப் பக்கம் பக்கமாய் விரித்துச் செல்ல மனம் இடம் தரினும் சுருக்கம் கருதி இவ்வளவில் நிறுத்த விழைகிறேன்.

பயன்

எழுத்தாளர்களுடைய எழுத்துகள், அவை கதைகளானாலும் கவிதைகளானாலும் புதினங்களானாலும் சமுதாயத்திற்கு ஒரு பயனை நல்கக்கூடியனவாய் இருக்க வேண்டும். உலக வரலாற்றில் புதினங்கள் பல சமுதாய மறுமலர்ச்சிக்குப் பெரிதும் பயன்பட்டுள்ளன. விக்தர் ஹியூகோ எழுதிய 'ஏழை படும் பாடு' பிரெஞ்சுப் பிரபுத்துவத்தை எதிர்த்தெழுந்த புரட்சிக்கு வித்து எனலாம். 'Uncle Tom's Cabin' என்ற புதினம் அமெரிக்காவில் அடிமை வணிகத்தை அகற்றுவதில் பெரும் பங்கேற்றது எனக் குறிப்பிடலாம். இவ்வாறு சமுதாய மறுமலர்ச்சி என்ற அளவு கோலைக்கொண்டு இப்புதினத்தை அளப்பதற்கில்லை. பண்டைச் சமுதாய நிலையைப் படம்பிடித்துக் காட்டுமளவில் இதன் பயன் நிறைவுறுகிறது.

இக்கதையின் உறுப்பினர்கள் அனைவருமே ஏனோ தாம் கொண்ட கொள்கையில் தோல்வி கண்டவர்களாகவே உள்ளனர். தமிழகமெங்கும் அமைதி பூக்க வேண்டுமென்பதில் ஆர்வங் கொண்ட சேரமான் போர் தொடுக்க வேண்டியவனாகிறான்; சிறைப்பட்டு மடிய வேண்டியவனுமாகிறான். அவனுடைய அமைதிக் கொள்கை அடிபட்டுப் போகிறது.

சோழன் செங்கணான் சமண, பௌத்த மதங்கள் நாட்டில் வளர்வதைத் தடுக்கச் சிவத்தொண்டியற்ற முற்படுகிறான். ஆனால் அவனுடைய கொள்கை தோற்றுப்போகும் வகையில் அவன் தங்கை நல்லினியே பௌத்தத் துறவியாகிறாள்.

கோதைமார்பன் தன் தமையனை எப்படியும் இணங்க வைத்து நீலவல்லியை மணம் முடிப்பதாய் உறுதி கூறுகிறான். முடிவோ, அவன் அவளை மணக்காதது மட்டுமன்று, சிறைப்படுத்திச் சீரழிக்கவும் செய்கிறான்.

மூவனோ சேரரைப் பூண்டோடொழிப்பதைக் குறிக்கோளாய்க் கொள்கிறான். இலக்குத் தவறித் தானே 'பல் பிடுங்கப்பட்டவன்' என்ற பழிச்சொல்லுக்காளாகி மடிகிறான்.

கோதைமார்பனை மணந்து சேர அரசுக் கட்டில் ஏற முடியுமென்ற ஆசையோடிருக்கும் நீலவல்லி, எந்த நாட்டில்

அரசியாய் உலவ வேண்டுமோ அந்த நாட்டுச் சிறையில் நஞ்சுண்டு மடிய வேண்டியவளாகிறாள்.

மணம் பேசி முடிக்கப்பட்டும் கோதைமார்பனை மணாளன் நிலையில் வைத்து இன்பம் துய்க்க வாய்ப்பில்லை நல்லினிக்கு.

நீலவல்லியை மணக்கவேண்டும் என்ற பழையனின் ஆசையும் நிறைவேறவில்லை.

புலவர் பொய்கையாரும், "சேரரும் சோழரும் நட்புப் பூண்டனர்; இனிப் பகைமை கொள்ளார்" என்ற பூரிப்பில் இருந்தார். அவர் எண்ணம் நிறைவேறாதது மட்டும் அன்று; அவருடைய வாழ்த்தே அருமை நண்பன் சேரமானின் முடிவுக்குக் காரணமாகவும் அமைந்துவிடுகிறது.

கதை உறுப்பினர்கள் அனைவரும் வாழ்க்கையில் தம் உயிர்க் கொள்கையாய் எதைக் கொண்டார்களோ அதில் தோல்வி கண்டவர்கள் ஆகின்றனர்.

நன்மையான குறிக்கோள்களை அடைவதில் தோல்வியைத் தழுவிய கதைமாந்தர்கள் தீய விளைவுகளை அடக்கிய செயல்களில் வெற்றிக்குரியவர்களாய் இருக்கின்றனர். மூவனை அழிப்பதாய் வஞ்சினம் கூறிய கோதைமார்பன் அதில் வெற்றி பெறுகிறான். மங்கலபுரம் அழிகிறது. நீலவல்லி, காதலில் வெற்றியுறாவிட்டாலும், 'தந்தையைக் கொன்றவனைப் பழிக்குப் பழி வாங்குவேன்' என்று கூறியதில் வெற்றி பெறுகிறாள்; சேர நாட்டை அழிவுக்குள்ளாக்குகிறாள்.

இவைகொண்டு ஆசிரியர் ஓர் உண்மையைத் தெளிவுபடுத்த விழைகிறார் என எண்ணத் தோன்றுகிறது. நாட்டை ஆளும் மன்னர்கள் தம் சொந்தப் பெருமை, சிறுமைகளைப் பெரிதென எண்ணியதால் நாட்டமைதி சிதைந்ததைக் குறிப்பால் இக்கதை மூலம் அவர் சுட்டிக்காட்டுகிறாரெனக் கொள்ளலாம். தமிழ் மன்னர்கள் ஒருவர்க்கொருவர் விட்டுக்கொடுத்து வாழும் பாங்கினைக் கொண்டிருந்தால் தமிழகம் அமைதிப் பூங்காவாய் என்றுமே திகழ்ந்திருக்க முடியும். சிறுசிறு செய்திகளுக்கெல்லாம் மாறுபட்டதால் நிகழ்ந்த போர்கள் எத்தனை! நேரிட்ட அழிவுகள் எவ்வளவு! பண்டைய வரலாறு வருங்காலச் சமுதாயத்திற்குப்

பாடமாய் அமைகிறதன்றோ? அவ்வகையில் பண்டைய நிலையையறிய, அதிலிருந்து இன்றைய சமுதாயம் எண்ணிப் பாடம் கொள்ள இக்கதை பெருந்துணை செய்கிறது எனலாம்.

முறையான தமிழ்நாட்டு வரலாறு எழுதப்படும் வேளையில் இரும்பொறை, செங்கணான் கால நிகழ்ச்சிகளின் ஆராய்ச்சிக்கு இஃது ஒரு நோக்குநூலாய்த் திகழும் என்பதில் ஐயமில்லை. வரலாற்றாராய்ச்சிக்கு வித்திடும் நூல்களைப் படைத்தளிக்கும் 'கோவி'க்கு நம் உளமார்ந்த நன்றி.

நூல் ஆக்கம்:	புதினவேந்தர் கோவி. மணிசேகரன்
வகைமை	வரலாற்றுப் புதினம்
வெளியீடு	திருமகள் நிலையம், சென்னை. (1972)

3

காந்தி காதை

காந்தி காதை

சிலம்பு தந்த இளங்கோ, மேகலை புனைந்த சீத்தலைச் சாத்தனார், பெருங்கதை யாத்த கொங்குவேள், சிந்தாமணி செய்த திருத்தக்க தேவர், இராமகாதை வழங்கிய கம்பர், பெரியபுராணம் இயற்றிய சேக்கிழார், பாரதம் பாடிய வில்லிபுத்தூரார் என்ற வரிசையில் இன்று வாழ்ந்து வரும் காப்பியப் பெரும்புலவராய் அரங்க. சீனிவாசன் மிளிர்கிறார். இவருடைய காப்பியப் புனைதிறனுக்கு இக்காந்தி காதை தக்கதொரு சான்றாய் விளங்குகிறது. முன்னர்க் குறிப்பிட்டுள்ள காப்பியங்களின் நிகழ்ச்சிகள் இவ்வாறுதாம் நடந்தவை எனக் கணிக்கப்பட்ட வரலாறு அன்று. ஆதலின், அவற்றை இயற்றியோர் தத்தம் கற்பனைத் திறத்திற்கேற்ப நிகழ்ச்சிகளைப் படைத்துச் சுவை சேர்த்தனர். ஆனால், அரங்க. சீனிவாசனார் எடுத்துக்கொண்டுள்ள காப்பியத்தின் நிகழ்ச்சிகள் கணிக்கப்பட்ட உண்மை வரலாறு ஆகும். எனவே, நிகழ்ச்சிகளைக் கவிஞர் தம் விருப்பம்போல் படைத்துக்கொள்ள வாய்ப்பு இல்லை. அவ்வாறு செய்யின் அது வரலாற்றுப் பிழையாகிவிடும். உண்மை நிகழ்ச்சிகளை வரலாற்றுக்கு மாறுபடாமலும், அதே வேளை, அவற்றைக் காப்பிய நயங்களுடனும் பாடவேண்டிய கட்டாயம் நம் கவிஞருக்கு ஏற்பட்டுள்ளது. கம்பிமேல் நடப்பவர்போல் வரலாற்றையும் காப்பியப் பண்புகளையும் சமநிலைப்படுத்தி இக்காப்பியப் புனைவில் புலவர் வெற்றி பெற்றிருக்கிறார் என்பது மறுக்க முடியாத உண்மை. இக்காப்பியம், "எழுத்து அசைகள் சீர் தளைகள் அடி தொடைகள் சிதையாமலும், ஈரைம் பொருத்த முடன் இனிய சொற்கள் இணைந்து நிற்கவும், குறளினுக் கொப்பான பொருளடக்கம் கொண்டதாயும், பாவினங்கள் பரவி வரவும், அணி நலம் அமையவும்" பாடப்பட்டுள்ளது. யாப்புக் கோப்பும், தங்கு தடையற்ற நடையோட்டமும், சந்தச் சிறப்பும்,

கற்பனை வளமும் நிறைந்த காவியமாய்க் 'காந்தி காதை' விளங்குகிறது.

காப்பியத்தலைவன்

காப்பியத் தலைவராகிய காந்தியடிகளின் இனிய தோற்றம், மனம் கவரும் புன்முறுவல், அன்பு நெறி, அருள் உள்ளம் ஆகியவற்றைக் கவிஞர் கூறும் திறத்திலிருந்து அத்தலைவர் கவிஞரின் உள்ளத்தை முற்றிலுமாய் ஆட்கொண்டிருக்கிறார் என்று புலப்படுகிறது. காந்தியடிகளைக் குறிக்கக் கவிஞர் கூறியுள்ள சொற்றொடர்களுள் சில கீழே தரப்படுகின்றன. அவை கவிஞரின் அடிமன ஆழத்திலிருந்து சொற்கள் ஊற்றெடுத்துக் காந்தி புகழ் பாடுவதை நமக்கு அறிவிக்கின்றன.

முன்னவர் மோகனர்[1], சாந்தமலை மோகனர்[2], தவமுனி மோகனர்[3], பழிப்பறு மோகனர்[4], மன்னிய மோகன வரதர்[5], இன்மொழியாளர் மோகனர்[6], ஏந்தல் காந்தி எம் மோகனர்[7], கருணையால் உயர் காந்தி மோகனர்[8], காலனைக் கடந்து ஒளிர் காந்தி மோகனர்[9], அருந்தவத்தின் அம்மான் திருமோகனர்[10] தெய்விக முனி[11], ஞானமுனி[12], சாந்த முனி[13], தேசின் மிக்க காந்தி முனி[14], மறுத்தவிர்வார்[15], முதுபுகழ்க்காந்தி[16], சத்திய வடிவினார்[17], குன்றா வாய்மையாளர்[18], உண்மை காப்பவர்[19], மெய்க்கலை வேட்கையார்[20], பொய்யினைக் கடிந்த சொல்லார்[21], சத்தியம் சாதிக்கும் சித்தர் ஆனவர்[22], தாரணி காக்க வந்திடும் அண்ணல்[23], அவித்த ஐம்புலத்து அண்ணல்[24], தூமனக்காந்தி அண்ணல்[25], கன்னல் மொழி அண்ணல்[26], ஆர்வம் தம் நாட்டிற்கு ஆக்கும்

1. காந்தி காதை, பாடல் 42:1
2. மேலது, 33:4
3. மேலது, 726:1
4. மேலது, 1017:1
5. மேலது, 721:1
6. மேலது, 1005:3
7. மேலது, 129:4
8. மேலது, 120:1
9. மேலது, 60:1
10. மேலது, 785:1
11. மேலது, 1167:1
12. மேலது, 945:4
13. மேலது, 46:1
14. காந்தி காதை, பாடல் 55:1
15. மேலது, 943:4
16. மேலது, 34:1
17. மேலது, 754:1
18. மேலது, 867:1
19. மேலது, 722:4
20. மேலது, 1081:4
21. மேலது, 892:4
22. மேலது, 784:2,3
23. மேலது, 1004:1
24. மேலது, 1076:3
25. மேலது, 745:1
26. மேலது, 949:2

அண்ணலார்[1], திட மனத்து அண்ணல் பெம்மான்[2], ஏத்தரும் பிரான்[3], அருளுக்கு வடிவானார்[4], அன்பின் வாரிதி[5], ஞான வாரணம்[6], வாராது போல வந்த மாதவர்[7], தூய குணத்தோன்றல்[8], சான்ற குணத்து எம்பெருமான்[9], கனியும் நெஞ்சின் கருணை உருவினார்[10], தராதலத்துத் தனிச்சுடர் ஆகிய பிரான்[11], மா புத்தாரமுது ஆன மகான்[12], அறிவெனும் எழிற்சுடர் உற்றார்[13], தேனுண்ட செஞ்சொலினார்[14], இராட்டினம் தடக்கை ஏந்தித் தனிவழி காட்டுவார்[15], சரித்திரம் படைக்க வந்தார்[16], இப்பாருக்குப் புகலாகப் பிறந்தவர்[17], பாரதம் காக்க வந்த பண்ணவர்[18], மண் நலம் கூர வந்த வான்சுடர் விளக்கு[19], மாந்தர் உள்நலம் கனியப் பொங்கும் உயர் அருள் ஊற்று[20], இப்புவி தூய்துற அடர் அழுக்கைக் கழுவும் அடிகளார்[21], இதயந்தோறும் வாழும் எம் காந்தி எனும் அறப்பேருருவம்[22], நல்வித்து அறத்துக்கு என வந்த ஞானச் சுடராம் நாயகனார்[23], பூ வியப்புறவே வந்த புண்ணியப் பெருமான்[24], இந்தியத்தாய் முடிக்கு மணிமுடி சூட்டுவார்[25], அரசியலில் அறிவியலை அருளாலே இணைத்து உண்மை முரசு முழங்கிய ஞானமுனி காந்தி[26], வெருவந்த புல்லடிமை வெந்தளைகள் அத்தனையும் ஒருவந்தம் ஒல்லைகெட உதித்த பிரான்[27], இதிகாசம் இங்கோர் இரண்டோடு மூன்றாவது என நிற்கவே அதிவாய்மை வடிவாகி வாழ்வாங்கு வாழ்ந்திட்ட அருள் மோகனர்[28], குணங்கள் வந்து எம்மைக் கொள்க எந்தம்மை என்று பிணங்கி நின்றடையும் நெஞ்சின் பிரான்[29], முனிவராகி உலகிற் கருங்கவசம் ஆகிவந்த அருள் மூர்த்தியார்[30], பெருமை நாடு பெறஇங்கு உதித்தனர் இருநிலத்துக்கு இவர் திலகம்[31].

1. காந்தி காதை, பாடல் 507:3
2. மேலது, 501:4
3. மேலது, 727:3
4. மேலது, 927:4
5. மேலது, 498:1-2
6. மேலது, 498:2
7. மேலது, 62:1
8. மேலது, 916:1
9. மேலது, 944:3
10. மேலது, 583:1
11. மேலது, 47:1-2
12. மேலது, 36:1
13. மேலது, 1036:4
14. மேலது, 928:4
15. மேலது, 777:2-3
16. மேலது, 521:4
17. காந்தி காதை, பாடல் 915:4
18. மேலது, 498:3
19. மேலது, 495:1
20. மேலது, 495:2-3
21. மேலது, 775:2-3
22. மேலது, 13:2-3
23. மேலது, 875:1
24. மேலது, 17:3
25. மேலது, 778:1-3
26. மேலது, 49:1-2
27. மேலது, 61:1-2
28. மேலது, 65:1-2
29. மேலது, 913:1-2
30. மேலது, 1156:4
31. மேலது, 776:1-2

காணும் பொருளெலாம் அவனே!

இடி இடிக்கிறது. கவிஞர், அந்த முழக்கம், "அடிமைத் தளையை அகற்றிட எழுந்திடீர்" என அண்ணல் முழங்கியது போன்று இருந்தது என்கிறார்[1]. பகைத்து வந்தவரும் தம் பகைமையை விட்டு உறவாகும் வண்ணம் மோகனர் காட்டுகின்ற முறுவலைப் போல மின்னல் மின்னியதாம்[2]. வையம் வாழ்வுற வந்த வரதர், துய்ய வாய்மையின் சுருதியினைச் சொரிந்ததுபோல மழை ஒழுகியதாம்[3]. மோகனர் திரு உள்ளம் போலத் துறையில் நீர் தெளிந்து நின்றதாம்[4]. காந்தி அடிகள் தம் உள்ளத்தே இருந்த அவக்குணங்களை அகற்றி அருட்குணங்களைப் பெருகச் செய்ததுபோல் வயலில் களைகள் பிடுங்கப்பட்டுப் பயிர்கள் வளர்க்கப்பட்டனவாம்[5]. இவ்வாறு காணும் அனைத்திலும் காப்பியத் தலைவனின் குணங்களைக் காட்டுவது மிகவும் சிறப்பாய் உள்ளது.

சைவக்குரவர் நால்வருள் ஒருவரான சுந்தரரைக் கூறுமிடத்தில் கவிஞர் அச்சுந்தரர் நம் அண்ணல் காந்தி அடிகளை ஒத்திருந்தார் எனக் கூறி, தம் காப்பிய நாயகன் பெருமையை உயர்த்துகிறார். இறைவனை இசைத்திடும் திறத்திலும், இறைநெறி காட்டிடும் அருளிலும், மோகன வடிவிலும் "முற்றும் எம் மோகனர் நிகர்ப்பார் - ஒழுக்கமே சிறந்த சுந்தரர்" [6] என்பது கவிஞர் கூற்று. ஒழுக்கமே சிறந்தவர் சுந்தரர். அந்த உயர்ந்தவர் மோகனரை முற்றும் நிகர்த்திருந்தாராம். காப்பிய நாயகனின் பெருமையைக் கவிஞர் கூறும் இம்முறை தனிச்சிறப்பு வாய்ந்ததாய்த் திகழ்கிறது. காந்தியடிகள் உதித்து, வாய்மை வழியில் நடந்து காட்டியதால், கவிஞரின் கற்பனைக் கதை எனக் கருதப்பட்ட அரிச்சந்திரன் கதையை உலகம் உண்மைக் கதையே என நம்பத் தொடங்கியது[7] எனக் கூறுவதன் வாயிலாய்க் காந்தியடிகளின் வாய்மை வாழ்க்கையைக் கவிஞர் உச்ச நிலைக்குக் கொண்டுசெல்வதை அறிய முடிகிறது.

---

1. காந்தி காதை, பாடல் 114
2. மேலது, 116
3. மேலது, 118
4. மேலது, 135
5. மேலது, 145
6. மேலது, 110:3-4
7. மேலது, 726

காண்டச் சுருக்கம்

காந்தி காதை 5 காண்டங்களையும், 5000க்கு மேற்பட்ட பாடல்களையும் கொண்டு ஒரு 'பார காவியமாய்'த் திகழ்கிறது. இக்காப்பியத்தின் முதற்காண்டமாகிய பாலகாண்டத்தில் இந்தியத் திருநாட்டின் பெருமை பேசப்படுகிறது; காந்தியார் தோன்றுவதற்கு முன்னர் இப்பெருமைமிகு நாட்டில் நிலவி வந்த இழிநிலை எடுத்துக் காட்டப்படுகிறது; காந்தியடிகளின் பரம்பரை உரைக்கப்படுகிறது. காந்தியடிகள் பிறந்தார்; பள்ளியில் நேர்மையுடன் நடந்துகொண்டார்; சிரவணனின் கதையைப் படித்து 'ஈன்றவர் பணி செய்வதே நாரணன் பணி' என உணர்ந்தார்; அரிச்சந்திரன் நாடகத்தைப் பார்த்துச் 'சத்தியம் காக்க' உறுதி பூண்டார்; காந்தியார் தம் 13ஆவது வயதில் சிறுமி கத்தூரியை மணந்தார்; புகை பிடித்தார்; காசு திருடினார்; ஆயினும், அவை தவறு என்பதை உடனுக்குடன் உணர்ந்து அடுத்த முறை செய்யாது காத்துக்கொண்டார். தீய நண்பன் காந்தியாரைக் கணிகை வீட்டிற்கும் அழைத்துச் சென்றான். நல்லவேளை! அத்தீமையைச் செய்யாது காந்தியார் தப்பினார். காந்தியாரின் இளமைப் பருவத்திலேயே அவர் தந்தையார் மறைந்தார். காந்தியார் தம் சிறு வயதிலேயே பல சமயத்தாரோடும் பழகி மனத்தெளிவு கொண்டதனால் 'ஒழுக்கமே அறத்துக்கு அடிப்படை' என்ற உண்மையை உணர்ந்தார். இவ்வாறாய்க் காந்தியடிகளின் பிறப்பு, வளர்ப்பு, இளமைப் பருவ நிகழ்ச்சிகள் ஆகியவற்றைக் கூறுவதாய் அமைந்துள்ளது, முதற்காண்டமாகிய பால காண்டம்[1].

நயவுரைகள்

'நயவுரைகள் தேடிக் கொழிக்கும் கவிவாணர் நாவும்' என்பார், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. நம் கவிவாணர் அரங்க. சீனிவாசனார் கொழித்துள்ள நயவுரைகள் ஒன்றா இரண்டா, எடுத்துச் சொல்ல! அவை காப்பியத்தில் தொட்ட இடமெல்லாம் கண்ணில் தட்டுப்படுகின்றனவே! சான்றுக்குச் சில எடுத்துரைப்பேன்

காந்தியடிகள் பெயரைச் சொன்னாலே சொல்பவர் நாக்கு தூய்மையுறுமாம். அத்தகைய தூயவர்-தூய்மையை ஊட்டுபவர் அடிகள் என்பதை,

---

1. இந்த ஒரு காண்டம்பற்றியே இக்கட்டுரை புகல்கிறது.

எம்மான்தன் இசையால்என் நாத்தூய்மை ஆம்[1]

எனக் குறிப்பிட்டு மகிழ்கிறார்.

ஞானமாம் விளைவினுக்கு நாற்றங்கால் ஆன நாடு[2]

எனச் சொல்லி, உலகெங்கும் ஞானத்தை விளைவிக்க இருக்கும் நாடு இந்திய நாடுதான் என்பதைச் சுட்டுகிறார்.

சிரவணன் இறந்த செய்தியைக் கண்ணிழந்த அவன் பெற்றோரிடம் தசரதன் கூறவேண்டும். இறந்தான் என்று நேரடியாய்க் கூறாமல்,

நுந்தம் பதமலர்த் தொண்டு செய்யும்,
ஒருதவம் இழந்தான் மைந்தன்[3]

எனத் தசரதன் குறிப்பாய்க் கூறுவது பண்பு நலம் செறிந்த கூற்றாகும்.

அரிச்சந்திரனை,

நெஞ்சுக்கு வாய்மை நெடும்பூண் எனஅணிந்தோன்[4]

என்று கூறுவதும், வசிட்டன் வாயால் அரிச்சந்திரனை,

விள்ளரிய நீதிஎனும் வெள்ளமது பாயும்
பள்ளம்என லாகிஉயர் பண்புகள் நிரம்பும்
வள்ளல் அவன்......[5]

எனப் புகழ வைப்பதும் மிகவும் சிறப்புடையனவாயுள்ளன.

முனிவன் அரிச்சந்திரனை உதைக்கிறான். அப்போதும் அரிச்சந்திரன் முகம் கடுத்திலன். மாறாய்,

(உன்) அடிசிவப் புறும்என அங்கையில் வருடினன்[6]

எனக் கவிஞர் குறிப்பிடும் இடம் நெஞ்சைத் தொடுவதாயுள்ளது.

தானமெனக் கொடுக்கப்பட்டதை மீண்டும் கேட்டுப் பெற்றுக்கொள்வதை,

தன்னது கக்கல் மீண்டும் உண்ணும்நாய் தரத்துச் செய்கை[7]

எனச் சொல்வது சிறந்த உவமையுடன் பிணைந்த கருத்தாய் மிளிர்கிறது.

---

1. காந்தி காதை, பாடல் 21 : 3
2. மேலது, 79 : 4
3. மேலது, 535 : 3-4
4. மேலது, 641 1
5. மேலது, 591 : 1-3
6. மேலது, 623 : 2
7. மேலது, 701 : 3

நாட்டின் பெருமை, மங்கையர் அழகு, புலமையின் பெருமை ஆகியவற்றைப் பேசுமிடங்களில் புலவரின் வாக்கு தன்னிகரற்று விளங்குகிறது. உலகம் பசு என்றால், அதன் பால் சுரக்கும் மடி பரத கண்டமென்கிறார். உலகில் பயன் நிறைந்ததாய் - பலரையும் வாழ வைக்கக்கூடியதாய் - இருப்பது பரத கண்டம் என்பதைப் 'பசுவின் மடி' என்பது புலப்படுத்தி நிற்கிறது.

பெருத்துஅலை யெறியும் நீர்சூழ் பெரும்புவி என்னும் ஆவின்
செருத்தலைப் போன்று, நான்று திகழ்வது—பரதகண்டம்[1]

வையகம், வானகம் ஆகிய இரண்டன் அழகும் தன் உடலில் பொருந்த, வெண்மதியானது நிலத்திற்கு வந்ததொப்ப இருந்ததாம், கிளியோபாத்ராவின் அழகு.

வையகத்து அழகு முற்றும் வானகத்து அழகு முற்றும்
மெய்யகத்து அமைய, இங்கோர் வெண்மதி நிலம்போந் தன்ன
தையல் – அக்கிளியோ பாத்ரா[2]

விளங்கினாளாம்.

முன்னர் உதித்த முத்தமிழ்ப் புலவர்களெல்லாம் ஒருருவாய்த் திரண்டு உருவெடுத்ததொப்ப விளங்கினராம், வில்லிபுத்தூரார்.

முன்னர்இங் குதித்த முத்தமிழ்ப் புலவர்
முறைமையின் ஒருவடி வாகிப்
பின்னர்இங் குதித்த பெற்றியின் பெருமை
பெருகிய வில்லிபுத் தூரன்[3]

என்பது அரங்க. சீனிவாசனார் வில்லிபுத்தூராருக்கு அளிக்கும் பாராட்டுரையாகும். புலவர் ஒருவரின் பெருமையை இதனினும் மேம்பட்டுக் கூறச் சொற்களுமுண்டோ?

வீரத்தை வெளிப்படுத்தும் பாடல்களில் சொற்களே வீறு கொண்டு நிற்கின்றன. சான்சி அரசி தோன்றிய போதே வீரத்துடன் தோன்றினாள் என்பதை, துளசி தோன்றும்போதே மணத்துடன் தோன்றுவதுபோல அவளும் பிறக்கும்போதே வீரத்துடன் பிறந்தாள் எனப் பாராட்டுகின்றார்.

துளவமென் முளையைப் போலத் தோன்றிய போதே வீரம்
அளவிய மனத்தாள்; சான்சி அரசி.[4]

அது மட்டுமா? சாவினும் தளராது போரிட்ட வீரர்களின் ஆற்றலைக் குறிப்பிடும் பாடல்களில் வீரம் கொப்புளிக்கக் காண்கிறோம்.

1. காந்தி காதை, பாடல் 76 : 3-4
2. மேலது, 85 1-2
3. மேலது, 100 : 1-2
4. மேலது, 265 : 1-2

வெங்கழுவில் ஏறுகையிலும் வெருவி லாதார் –
"இங்குடல்இ ழிந்திடினும், எம்உரிமை வேட்கை
மங்கிடுவது அன்றுபின் வளர்ந்திடுவது" என்றே –
சிங்கம்என ஆருயிர்சி ரித்துஉதவி னாரே![1]

வீரர்கள் சாவிலும் தளராமல் எதிரியிடம், "சதையைத் துண்டுதுண் டாக்கினும் என்னெண்ணம் சாயுமோ? சீவன் ஓயுமோ?" என வீர உரை பகர்ந்து போரிடும் ஆண்மையை இப்பாடலில் கண்டு மெய்சிலிர்க்கிறோம்.

நல்லோர் வாழும் வாழ்க்கை எத்தகையதாய் இருக்கும் என்பதைச் சிரவணனின் பெற்றோர் வாய்மொழியாய்க் கவிஞர் உரைத்திருப்பதை நினைந்து மனத்திற்கொள்ள வேண்டும். அவர்கள் கூறுகிறார்கள்

நாவிற்க டுஞ்சொல் அறியேம்;எ வர்க்கும்
நலிகின்ற தீமை நயவேம்;
பாவிக்கும் அன்பு புரிவேம்;அ டுத்த
பகைவர்க்கும் நன்று விழைவேம்![2]

உயர்ந்த உள்ளங்களின் இயல்புகள் இவ்வாறுதாம் இருக்கும் என்பதை இவ்வடிகள் நமக்குப் படம்பிடித்துக் காட்டுகின்றன.

வினாக்கள்

கவிஞர் அரங்க. சீனிவாசனார் இக்காப்பியத்தில் தொடுத்துள்ள வினாக்கள் பல. அவ்வினாக்கட்கு 'ஆம்' என்றும், 'இல்லை' யென்றும் மறுமொழி சொல்வதன்மூலம் நாம் பெறுகின்ற கருத்துமணிகள் ஏராளம்! ஒருசில வினாக்களை மட்டும் இங்கே பார்வைக்காகப் படைக்கிறேன்.

உதவிலர் எனினும் வாளா இருப்பதும் உதவி அன்றோ?[3]

கருவம்மேல் எழுந்த காலை கண்ணொளி மழுங்கி டாதோ?[4]

காமம்மேல் எழுந்த காலை அறிஞரும் கலங்கி டாரோ?[5]

நஞ்சுண நேரும் போதும் ஞானியர் நடுங்கு வாரோ?[6]

விஞ்சிய அறத்தைப் பாவம் வெல்லுமோ?[7]

---

1. காந்தி காதை, பாடல் 283
2. மேலது, 557 : 1-2
3. மேலது, 271 1
4. மேலது, 400 : 4
5. மேலது, 1104 4
6. மேலது, 406 : 4
7. மேலது, 407 : 4

என்றும்ஓர் நன்றி தன்னை மறப்பரோ, இதயம் பெற்றார்?[1]
நிறத்தினில் வேல்பாய்ந் தாலும், தளர்வரோ நிறையின் மிக்கார்?[2]
நறுமலர் எங்குச் சேரினும் யாரே நயவாரே?[3]

..............கடிய ஊழின்
பெறுவலி கடப்பார் உண்டோ பிறப்பெனும் பிணிப்பில் வீழ்ந்தார்?[4]

..............அறவொழுக்கம்
உடைமை யாகப் பெற்றவருக்கு உளத்தில் காமம் நிலைத்திடுமோ?[5]

உடன்பிறந் தவரே நாட்டின் உரிமையை எதிர்த்து நின்றால்
திடம்படு வேற்றார் நம்மைச் சிதைப்பதில் வியப்பும் உண்டோ?[6]

வெள்ளநீர் வற்றி விட்டால், மென்கயத்து உலவு மீனைப்
புள்ளினம் அலகில் கவ்விப் புசித்திடத் தடைஒன் றுண்டோ?[7]

கூர்மருப் பெருமை ஒன்று குளித்துடன் கலக்கு கின்ற
நீர்நிலை தெளிவ துண்டோ? நெடுவிடாய் தணித்தற் காமோ?[8]

இன்ன லேனும் இறையவன் ஆணையைச்
சென்னி ஏந்த மறுப்பரோ சீரியோர்?[9]

நேயமிக நாம்வணங்கும் நிலையுடையார் இடத்தினிலே
தீயனவே கண்டாலும் சீரியோர் வெறுப்பாரோ?[10]

ஞான நோன்பு நயந்தவ ருக்கெலாம்
தூநல் அங்கியும் தோய்தடந் தான்கொலோ?[11]

கருத்துரைகள்

வினாக்களைத் தொடுத்ததுபோலவே பல அரிய கருத்துகளையும் தந்திருக்கிறார், நம் கவிஞர். அவை அனைத்தும் சிறந்த அறவுரைகளாய், ஆக்க உரைகளாய் விளங்குகின்றன. உயர்ந்த கவிதையுள்ளத்திலன்றி இவை தோன்ற முடியா

வாழ்வு கண்டு மகிழன்மின்; வல்லையே
தாழ்வும் உண்டு.[12]

தாழ்வது எத்துணை, அத்துணைதான் உயர்வு.[13]

உழைப்பவர் அன்றி, உழைப்பை உறிஞ்சித்
தழைப்பவர் இல்லை.[14]

---

1. காந்தி காதை, பாடல் 411 : 4
2. மேலது, 417 4
3. மேலது, 458 4
4. மேலது, 532 3-4
5. மேலது, 878 3-4
6. மேலது, 273 1-2
7. மேலது, 276 1-2
8. காந்தி காதை, பாடல் 404
9. மேலது, 434 3-4
10. மேலது, 520 3-4
11. மேலது, 563 3-4
12. மேலது, 183 1-2
13. மேலது, 171 1
14. மேலது, 212 1-2

மூன்றுலகு எதிர்த்த போதும் மூதறம் வெல்லும்.[1]
பிறந்தவர் ஒருநாள் மாய்வர்; பேருல கியற்கை யாகும்.[2]
பிரிய நேரினும் செய்ந்நன்றி பேணுதல்
பெரியவர்க்குப் பெருங்கடன் ஆகுமால்.[3]
சோதனை மெய்காப் பார்க்கே தோன்றுதல் இயற்கை.[4]
வாதனை தனிலும் பாடம் கற்பரால் மாசில் நெஞ்சோர்.[5]

இராட்டை

இராட்டை காந்தியடிகளின் வாழ்க்கையோடு இரண்டறக் கலந்தது. ஆதலின், உயர்ந்த பொருள்கள் பலவற்றையும் இராட்டையாய்க் கவிஞர் காணுவது சிறப்பாய் இருக்கிறது. சக்கரங்கள், கதிர், பஞ்சு, நூல் என்பன இராட்டையோடு தொடர்புடையன. கவிஞருக்குப் பரதகண்டமே இராட்டை யாய்த் தென்படுகிறது. ஆம்! இமயம் பஞ்சுக்குவியலாகிறது; மலைமுடிகள் கதிர்களாகின்றன; அம்முடிகளிலிருந்து அருவி ஒழுகுதல், நூற்கப்படும் நூலாகிறது.[6] ஐவகை நிலங்களும் கவிஞருக்கு இராட்டையாகவே தென்படுகின்றன. வயலும் வயல் சார்ந்ததுமான மருதத்தின் ஏரிகள், இராட்டை; புனல், பஞ்சு; நீர்மடை, இராட்டையின் கதிர்; அம்மடைவழிச் செல்லும் நீர் ஒழுக்கு, நூல்.[7] மலையும் மலைசார்ந்ததுமான குறிஞ்சியும் இராட்டையே! எவ்வாறு? குன்று இராட்டையானால் அதன் முடி, கதிர்; குன்றில் படியும் வெண்மேகம், பஞ்சுக் குவியல்; குன்றில் முடியிலிருந்து விழுகின்ற அருவி, நூல்.[8] காடும் காடுசார்ந்ததுமான முல்லையிலோ தேன்கூடு, இராட்டை; மரக்கிளை, கதிர்; ஒழுகும் தேன்தாரை, நூல்.[9] கடலும் கடல்சார்ந்ததுமான நெய்தலிலோ திருக்கை மீன்கள், இராட்டையின் சக்கரங்கள்; நீர்ச்சுழிகள், கதிர்கள்; நுரை, பஞ்சு.[10] மணலும் மணல்சார்ந்ததுமான பாலையிலோ வெண்மணல், பஞ்சாகிறது; சூறைக்காற்று, கதிராகிறது; கானல் நீர் நூற்கப்படும் நூலாகிறது.[11] இவ்வாறு ஐவகை நிலங்களையும் இராட்டையாக்கி, அவற்றைக் கொண்ட இந்திய நாட்டையும் இராட்டையாகவே சிறப்பித்திருப்பது போற்றற்குரியது.

---

1. காந்தி காதை, பாடல் 414 : 4
2. மேலது, 547 1
3. மேலது, 427 3-4
4. மேலது, 895 1
5. மேலது, 895 4
6. மேலது, 78
7. காந்தி காதை, பாடல் 154
8. மேலது, 166
9. மேலது, 173
10. மேலது, 180
11. மேலது, 191

இராட்டையில் ஒரு பெரிய சக்கரமும் ஒரு சிறிய சக்கரமும் கயிற்றினால் இணைக்கப்பட்டிருக்கும். பெரிய சக்கரத்தைச் சுழற்றச் சுழற்றச் சிறிய சக்கரமும் அதனோடு சேர்ந்து சுற்றும். காந்தியடிகளுடைய வாழ்க்கையில் இதனைக் கவிஞர் அருமையாய் இணைக்கிறார். காந்தியாரின் துணைவியார் கத்தூரிபாய் இராட்டையின் சிறிய சக்கரம் போன்றவர். பெரிய சக்கரமாகிய காந்தியாரின் இயக்கத்துக்கேற்பச் சிறிய சக்கரமாகிய கத்தூரிபாய் இயங்கினார் என்று ஆசிரியர் கூறுவது எண்ணி எண்ணி இன்புறும் பகுதியாய் உள்ளது.

> பெரியதோர் உருள்சு ழன்றால் பிணித்திடும் பாசத் தாலே
> அரியநல் லிராட்டை தன்னில் அமைந்தசிற் றுருளும் தானே
> திரிதரச் சுழலு மாப்போல், செறிதரு பாசத்து, ஆவிக்கு
> உரியவர் இயங்கும் வண்ணம் இயங்கிடும் உணர்வின் மிக்கார்[1]

என்பதே அவ்வினிய பகுதி. இராட்டையையே பெரிய பலமாய்க் கொண்டவரின் வாழ்க்கையை இராட்டையாலேயே விளக்குவது பாராட்டுக்குரிய ஒன்றாம். தமிழ் என்ற இராட்டையில் கவித்துவம் என்னும் பஞ்சினைக்கொண்டு, சொற்கள் என்னும் கதிரினால் நூற்ற கவிதை நூலாகவே இப்பகுதி நமக்குக் காட்சியளிக்கக் காண்கிறோம்.

முந்தையோர் மொழிபொருள்

முந்தையோர் இலக்கியங்களில் திரு. அரங்க. சீனிவாசனார் நன்கு தோய்ந்து திளைத்தவர் என்பதை அவருடைய இக்காப்பியம் தெற்றென விளக்குகிறது. கானகத்தில் சூர்ப்பனகை பசும்புல் லிடையே நிற்கும் இராமனைக் காண்கிறாள்; அவன் அழகில் மயங்குகிறாள். இராமனின் திருவடி பட்டதால் புவி மடந்தை கூச்சமுற்று மயிர்க்கூச்செறிந்ததே பூமியில் தென்படும் புல் என்று அவள் உள்ளூர நினைக்கிறாள். பூமித்தாயின் உரோமச் சிலிர்ப்பே புற்களாம்!

> உடுத்தநீர் ஆடையள்; உருவச் செவ்வியள்;
> பிடித்தரு நடையினள்; பெண்மை நன்(று),இவன்
> அடித்தலம் தீண்டலின்; அவனிக்(கு) அம்மயிர்
> பொடித்தன போலும்,இப் புல்,என்று உன்னுவாள்[2]

என்பது கம்பராமாயணப் பாடல். நாட்டியற்படலம் பாட வருகின்ற நம் கவிஞரும் இதே கருத்தைக் குறிப்பிடக் காணலாம்.

---

1. காந்தி காதை, பாடல் 756
2. கம்பரா., சூர்ப். 238

என்ன புண்ணியம் செய்தனம், எந்தைமோ கணர்தம்
பொன்அ டித்துகள் நம்உடல் பொருந்துதற்கு என்றே,
அன்னை மாநிலம், உடல்புள கரும்பியது எனவும்,
இந்ந றுந்தரை எங்ஙணும் செழித்தன பசும்புல்.[1]

அண்ணல் காந்தியின் திருவடிகள் பட்டதால் பூமித்தாய்க்கு ஏற்பட்ட உடற்சிலிர்ப்பே பசும்புல் எனக் கம்பர் வழியில் நம் கவிஞரும் பேசிடக் காண்கிறோம்.

காட்டில் கரிய நிறப் பாறையின்மேல், அருகிலிருந்த வேங்கை மரத்தின் பூக்கள் உதிர்ந்து கிடக்கின்றன. கரிய கற்களின்மீது பொன்னிறமுள்ள பூக்கள் கிடப்பதானது பொன்நிறக் கோடுகளைப் பெற்றுள்ள புலிக்குட்டிகள் வேங்கை மர நிழலில் படுத்திருந்தவொப்பத் தோன்றும் என நெடுவெண் ணிலவினார் குறுந்தொகையில் பாடிடக் காணலாம்.

கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்
இரும்புலிக் குருளையின் தோன்றும் காட்டிடை[2]

என்பன அக்குறுந்தொகைப்பாடலடிகள். இக்கருத்தினை அரங்க. சீனிவாசனார் குறிஞ்சி நில வளத்தைப் பாடும்போது சிறப்பாய் எடுத்தாண்டுள்ளார்.

வேங்கை நல்மலர் பாறையில் வீழ்ந்தன கிடத்தல்
தூங்கும் ஓர்புலி யாம்எனத் தூங்கல்மால் யானை
வீங்கு பேரொலி விளைந்திட விரைந்து அயல்ஓடும்.[3]

வேங்கை மலர்கள் பாறையின்மீது கிடப்பது, புலி படுத்திருப்பதுபோலத் தோன்றியதால் அதைக் கண்டு யானை பயந்தோடுகிறதாம்!

என்ன நேர்ந்தாலும் சத்தியம் தவறமாட்டோம் என அரிச்சந்திரனும் சந்திரமதியும் கூறுவதாய் உள்ள அரிச்சந்திர புராணப் பாடல் வருமாறு

பதிஇ ழந்தனம், பாலனை இழந்தனம், படைத்த
நிதிஇ ழந்தனம், இனிநமக் குளதென நினைக்கும்
கதிஇ ழக்கினும் கட்டுரை இழக்கிலேம் என்றார்;
மதிஇ ழந்துதன் வாயிழந்(து) அருந்தவன் மறைந்தான்.[4]

அரங்க. சீனிவாசனார் இப்பாடற்போக்கில் இக்காதையில் தாம் பாடியுள்ள அரிச்சந்திரன் கதையில் ஒரு பாடலைப் படைத்திருக்கக் காணலாம். என்ன கேடு நேர்ந்தாலும் தான்

1. காந்தி காதை, பாடல் 125
2. குறுந்தொகைப் பாடல் 47 : 1-2
3. காந்தி காதை, பாடல் 156 : 1-3
4. அரிச். புராணம், மயான. 130

தருவதாய்க் கூறிய பொருள்களைத் தவறாது தருவேன் என அரிச்சந்திரன் கூறுமிடத்தில்,

மனைஇ ழக்கினும், மைந்தனைத் தேவியை
எனைஇ ழக்கினும், இன்பதம் நல்கும்நல்
வினைஇ ழக்கினும், மேற்சொன்ன கட்டுரை
தனைஇ ழக்கிலென்? பொன்தரு வேன்ஐயா![1]

என்ற பாடலை அரிச்சந்திர புராணப் பாடற்போக்கில் கவிஞர் பாடியிருக்கிறார். நன்னூல், மாணாக்கர்க்கு இலக்கணம் சொல்லுமிடத்தில்,

சித்திரப் பாவையின் அத்தக(வு) அடங்கிச்
செவிவா யாக, நெஞ்சுகளன் ஆகக்,
கேட்டவை கேட்டவை விடாதுளத்(து) அமைத்துப்,
'போ'எனப் போதல், என்மனார் புலவர்[2]

என்று குறிப்பிடும். சித்திரத்தில் உள்ள ஓவியம் போல் இருந்து, செவியை வாயாய்க்கொண்டு, கேட்கும் பொருளை நெஞ்சத்திலே கொள்ளவேண்டும் என்னும் இந்த இலக்கணத்தை, காந்தியார் மேல் ஏற்றி, அவர் கல்வி பயிலும் இயல்பை அரங்க. சீனிவாசனார் கூறியுள்ள பாடல் வருமாறு

'உரை'என உரைப்பார் பாடம்; உண்ணுவ தொப்ப ஆர்வம்
மருவிஓ வியத்துப் பாவை மானவே அடங்கி நிற்பார்;
இருசெவி வாயாப், நெஞ்சே வயிறென, இனிது துய்த்த
பொருளெல்லாம் பொதிந்து கொள்வார்; 'போ'எனப் போவார் அம்மா![3]

திருஈங்கோய் மலையில் ஓர் இனிய காட்சி! ஓரிடத்தில் தரை பளிங்குபோல் உள்ளது. அங்கிருந்த மரத்தில் தொங்கும் கனிகள் அத்தரையில் நிழலுருவில் தென்படுகின்றன. நிழலுருவில் தென்படும் அக்கனிகளை ஒரு குரங்கு உண்மைப் பழங்கள் என்றெண்ணி மற்றக் குரங்குகளுக்குக் காட்டுகிறது. எல்லாக் குரங்குகளும் நகங்களால் தரையைக் கீறி அப்பழங்களைப் பறிக்க முயல்கின்றன. பழமாய் இருந்தால்தானே பறிக்க முடியும்! குரங்குகளின் நகங்கள் பளிங்குத் தரையில் பட்டுத் தேய்ந்ததுதான் மிச்சம்! இக்காட்சியை ஈங்கோய் மலை எழுபது,

கல்லாக் குரங்கு பளிங்கிற் கனிகாட்ட
எல்லாக் குரங்கும் உடன்ஈண்டி – வல்லே
இருந்துகிராற் கற்கிளைக்கும் ஈங்கோயே! மேனிப்
பொருந்தஅராப் பூண்டான் பொருப்பு[4]

1. காந்தி காதை, பாடல் 637
2. நன்னூல், 40
3. காந்தி காதை, பாடல் 910
4. ஈங். எழுபது, 29

எனக் குறிப்பிடும். அந்நூலிலேயே மற்றொரு காட்சி. கொம்பு நீண்ட களிறு ஒன்று பாறையில் தன் நிழலைக் கண்டு, அது மற்றொரு யானை என்று சீறிப் பாய்ந்து குத்துகிறது; அதனால் கொம்பு முரிகிறது. கொம்பு முரிந்துள்ள இவ்வியானை மீண்டும் தன் நிழலைக் காண்கிறது. நிழலில் கொம்பு இல்லாமையால் அதைப் பெண்யானை எனக் கருதி இதுவரை பெண் யானையுடனன்றோ போரிட்டுவிட்டோம் என்று வெட்கப்பட்டு நிற்கிறதாம். இத்தகு பாடல்களில் ஊன்றித் திளைத்ததால்தான் அரங்க. சீனிவாசனார் குறிஞ்சி நில வளத்தைக் குறிப்பிடுகையில்,

விண்ட வெண்பளிங் கிடைத்தனது உருநிழல் வேறோர்
சண்ட யானைஎன்று உடற்றி,மெய் தளர்வுறும் களிறு[1]

எனப் பாட முடிகிறது.

விறலிவிடு தூது என்னும் சிற்றிலக்கியத்தில் கணிகை ஒருத்தி தன்பால் வந்தவர்களிடம் பெரும் பொருள் கவரும் நோக்குடன் அவர்களுடைய கலவியைப் புகழ்ந்து பேசும் இடம் வருகிறது. சுப்ரதீபக் கவிராயர் இதனை,

சுற்றிக் கிரணத் தொடிவளைக்கை யால்தனது
நெற்றிக் கொருபால் நெரித்திட்டாள் – கற்றதொழில்
காட்டினீர் ஐயா,என் கண்திட்டி பட்டதின்பம்
பூட்டினீர், கண்டேன் புருஷரையும் – நாட்டிலே
உங்களைப்போ லேகலவிக்கு உத்தரிக்க வல்லார்யார்?
இங்குவரக் காணேன் இதுவரைக்கும்[2]

என்று பாடுகிறார்.

காந்தியாரைத் தீய நண்பனொருவன் கணிகை வீட்டுக்கு அழைத்துச் சென்றான் என்பதைப் பாடுமிடத்தில் அரங்க. சீனிவாசனார் கணிகையர் இயல்பை விரிவாய்ப் பாடுகிறார்.

பாயற் போரில் வல்லவர் உன்போற் பலர்உண்டோ?
தோயத் தோய உன்னிடம் இன்பச் சுவைகண்டேன்;
நேயக் காமன் நீ,பிறர் நாய்கள் நிசம், என்றே
மாயப் பொய்யால் வந்தவ ரைத்தன் வலைவீழ்ப்பாள்![3]

எனக் கணிகை ஒருத்தி கூறுவதாய் உள்ள இப்பாடலில் விறலிவிடு தூது காட்டும் வேசியர் இயல்பின் சாயல் காண்கிறோம்.

பாண்டியன் அறிவுடை நம்பியின், "படைப்புப் பல படைத்து" எனத் தொடங்கும் புறநானூற்றுப்பாடலில் வரும்,

1. காந்தி காதை, 157 3-4
2. கூளப். விறலி. தூது, 580-82
3. காந்தி காதை, 993

குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்கள்... ... ...[1]

என்ற அடிகள் அரங்க. சீனிவாசனாரிடம், "குறுகுறு கையால் கூழினைத் துழாவி உண்ணும் சிறுவர்"களாய் உருவெடுத் திருக்கின்றன.

"வில்லினை எடடா! அந்தப் புல்லியர் கூட்டத்தைப் பூழ்தி செய்திடடா" என்ற பாரதியின் வாக்கு, நம் கவிஞரிடம், "வில்லினை எடடா என்று விசயனுக்கு அன்று சொன்ன சொல்லினை மறப்பதுண்டோ?" [2] என வடிவெடுத்திருக்கிறது.

குறள் கருத்தினையும் குறளடிகளையும் ஆசிரியர் பல இடங்களில் கையாண்டுள்ளார்.

ஈன்றவரை மறைத்துண்ட ஏலாத படிற்றொழுக்கம்
ஆன்றபெரும் பூதங்கள் ஐந்தும்அகத் தேநகவும்[3]

என்பதில்,

வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
அஞ்சும் அகத்தே நகும்[4]

என்ற குறள் எடுத்தாளப்பட்டுள்ளது.

இவ்வாறாய்ச் சங்க காலம் தொட்டு, இன்றைய இலக்கியம் வரையுள்ள அனைத்திலும் அரங்க. சீனிவாசனார் சிறந்த பயிற்சியுள்ளவர் என்பதை நாம் தெளிவாய் உணர முடிகிறது.

உவமைகள்

கவிதைகள் அழகு பெறுவது சிறந்த அணிகளாலேயாம். அணிகளுள் எல்லாம் முதலில் வைத்து எண்ணப்படுவதும் கவிதைகளுக்கு இன்றியமையாது தேவைப்படுவதும் உவமையாம். புலவர்களின் புலமைத் திறன் அவர்கள் கையாளும் உவமைகளால் உயர்வு பெறுகிறது. அரங்க. சீனிவாசனார் இக்காதையில் மிக அரிய, புதிய உவமைகளைக் கையாள்வதன்மூலம் நம் உள்ளங்களைக் கொள்ளை கொள்கிறார்.

மணற்பாங்கின் இயல்பை ஆசிரியர் விளக்க வருகிறார். எவ்வளவுதான் மழை பொழிந்தாலும் அம்மழைநீரைத் தேக்கி வைத்து மணல்நிலம் பயன் பெறுவதில்லை. மாறாய் அந்நீரைச் சோரவிட்டுப் பின்னர் கொளுத்தும் வெயிலால் கொதிப்படைந்து

1. புறநானூறு, 188 : 3-6
2. காந்தி காதை, 254 : 1-2
3. காந்தி காதை, 944
4. குறள், 271

விடுகிறது. இம்மணலின் தன்மை, தம்மிடத்தில் எவ்வளவு செல்வம் சேர்ந்தாலும் அதனைத் தீய நெறியில் போக்கிவிட்டுப் பின்னும் அல்லலுறும் புல்லறிவாளரின் செய்கையைப் போல் உள்ளது என்று ஆசிரியர் உவமை வாயிலாய் உரைக்கின்றார். சிறுமைக்குணம் படைத்தோரிடம் செல்வம் சேரினும் அதனை நல்வழியில் அவர்கள் பயன்படுத்திக்கொள்ளமாட்டார்கள் என்பதுதான் கருத்து. இக்கருத்துக்குத்தான், ஆசிரியர் மணல் நிலத்தின் தன்மைக்குச் சிறியோர் இயல்பை உவமையாய்க் காட்டியிருக்கிறார். அஃதாவது, பொருளை உவமையாகவும் உவமையைப் பொருளாகவும் மாற்றிப் பாடியுள்ளார்.

பொருளே உவமம் செய்தனர் மொழியினும்
மருளறு சிறப்பின் அஃதுஉவம மாகும்[1]

என்ற தொல்காப்பிய விதிப்படி அமைந்து இப்பகுதியில் கருத்துப்பொருள் மேலும் வலுவடைவதை நாம் உணர்ந்து மகிழ்கிறோம். இதோ அப்பரிமாற்றப் பாடல்

செல்வம் எத்தனை சேரினும் சோரவிட்டு
அல்லல் கூர்ந்திடும் ஆதரைப் போல்,முகில்
நல்கும் நீரை நளிமணல் ஈரவிட்டு,
எல்லி யின்கதி ரால்வெம்பும் என்றுமே![2]

தாமரை பூத்த தடாகம்; அழகிய மலர்கள். ஆயினும், தடாகத்தில் நோய் செய்யும் கிருமிகளும் இருக்கத்தானே செய்கின்றன. அதுபோல, நாட்டு விடுதலைக்காக உயிரையே துச்சமெனக் கருதிப் போராடிய வீரர்களிடையே அவர்களைக் காட்டிக் கொடுத்த துரோகிகளும் இருக்கவே செய்தனர் என்ற உண்மையை,

எண்ணிலா வீரர் தம்மை ஈன்றநம் பார தத்தாய்
கண்ணிலாத் துரோக வஞ்சக் கயவரை யும்பெற் றாளே;
தண்ணிய பொகுட்டுச் செந்தா மரைமலர் தந்த பொய்கை
உள்நெளி கிருமி தானும் உதவிய தன்மை ஒத்தே[3]

என்ற உவமையால் விளக்குகிறார்.

இந்தியர்களுள் சிலர் வெள்ளையர்கள் தம்மைச் சுரண்டுவதை அறியாராய், எளியவர் உழைப்பை உறிஞ்சிக் கொழுக்கின்றனர். வெள்ளையன் தங்களைக் கொள்ளை கொள்ள இருக்கிறான் என்பதை அறியாத பேதைகளாய் இவர்கள்

1. தொல்., உவம. 9
2. காந்தி காதை, 189
3. மேலது, 270

இருக்கின்றனர். பாம்பின் வாயிலே சிக்கிய தேரை, தான் பாம்புக்கு இரையாக இருப்பதை அறியாமல், அருகே பறந்த ஒரு கொசுவினைத் தனக்கு இரையெனப் பிடிக்க நாக்கை நீட்டியதைப் போன்றதே மேலுள்ள பேதையர் செயல் என்ற அரியதோர் உவமையைப் படைத்துக் காட்டுகிறார், அரங்க. சீனிவாசனார்.

அரவின்வாய்த் தேரை,தன் இறுதி ஆய்கிலாது,
'இரை'எனக் கொதுகினை எடுக்க முந்தல்போல்,
பரர்தமைச் சுரண்டுதல் பார்க்கும் கண்ணிலார்;
ஒருசிலர் எளியர்தம் உழைப்பு உறிஞ்சினார்.[1]

கத்தூரியும் காந்தியும் சாந்தி முழுத்தத்தின் போது காதலின்பம் துய்த்ததைக் கவிஞர் புதியதோர் உவமைமூலம் புலப்படுத்துகிறார். நண்பகலிலும் நள்ளிரவிலும் எவ்வாறு கடிகாரத்தின் முள்கள் ஒன்றன்மீது ஒன்று படிந்து ஒன்றி யிருக்குமோ அவ்வாறு ஒன்றி இன்பம் துய்த்தார்களாம்!

'கள்'என் றிடும்இன் மொழித்திருவும், 'கண்'என் றிடும்எம் பெருமானும்,
நள்ளென் பகலில், நள்ளிரவில், நாடிக் கூடும் மணிப்பொறியின்
முள்ளென் றிடவே ஊற்றின்பம் முகிழ்க்க, மலர்க்கை நெகிழாமல்
உள்ளென் புருக உயிர்உருக உடலும் ஒன்றாய்க் கலந்தனரே![2]

காதலர்கள் இணைந்திருப்பதைக் காட்ட இதைவிடப் பொருத்தமான உவமை ஏது? இன்னும் சில நயமான உவமைகள்:

நலம்கிளர் மேகம் பருகிய கடல்நீர்
ஞாலத்துக்கு அமுதம் ஆவதுபோல்.[3]

வற்றிய குளத்துமீன் வவ்வும் புள்ளெனப்
பற்றிய நாட்டினைப் பாழ்ப டுத்தினர்.[4]

பாரதம் என்னும் பவித்திர மான படர்வானில்
பூரண மான பொன்மதி போலும் போர்பந்தர்.[5]

நீடிய வாய்மையும் நிறைஅ கிம்சையும்
கூடிய காட்சிபோல் குளிர்ந்து தோன்றினார்.[6]

வருணனைகள்

கற்பனையோடு கலந்த பல வருணனைகள் இக்காதையில் நிறைந்துள்ளன. எல்லாமே நம் நெஞ்சை அள்ளுவனவாய் உள்ளன. இருப்பினும், கவிஞர் விவசாயி என்பதால், விவசாயச் செயல்களை உள்ளடக்கிய அவருடைய கற்பனைகள் இன்ப விளைச்சலை மிகுதியாய்த் தந்துள்ளன. வயலில் இருக்கும்

---

1. காந்தி காதை, 320
2. மேலது, 866
3. மேலது, 101 : 2
4. காந்தி காதை, 294 : 3-4
5. மேலது, 452 : 3-4
6. மேலது, 811 : 3-4

நண்டுகள் வயல் வரப்பில் துளைகளை உண்டாக்குவதால் அவ்வயல்நீர் அத்துளைகளின் வழியாய் அண்டை நிலத்திற்கு ஓடிவிடும். அந்நண்டுகளைச் சாகடித்துத் துளைகளை அடைக்க உழவர்கள் வரப்பின் கங்குகளை வெட்டி உயர்த்துவர். இதைக் கருத்திற்கொண்டு புலவர்,

விடுத லைப்பெரு முதற்சமர் வீறிய காலை,
கெடுத லைச்சில கீழவர் செயமுணைந் ததுபோல்,
நெடுவ ரப்புநீர் நிரம்பிட எடுத்தன துளைப்பான்
முடுகும் ஞெண்டுஇறக் கங்குஅரிந்து உயர்த்தினர் முன்போல்.[1]

விடுதலைப் போராட்டத்தால் விளைந்த பயன், கீழவர் சிலரின் செயலால் அயலார்க்குப் பயன்படுவதாய் அமைந்து விட்டது என்பதை நண்டுகளைக்கொண்டு விளக்குகிறார். நண்டுகளை விவசாயிகள் நசுக்குவதுபோல் சுதந்தரப் போராட்டப் பயனை நாசமாக்கும் இவ்வீணர்களும் நசுக்கப்பட வேண்டியவர்களே என்ற குறிப்பும் இங்கே சுட்டப்படுகிறது.

களையெடுத்தபின் பயிர் வளர்வது, நெய் பூசப்பட்ட மகளிரின் கூந்தல் வளர்வதைப் போல் விளங்குவதாய்க் கூறுவது சிறந்த கற்பனை. வயல், தலை என்றால், பயிர், கூந்தலாகிறது; தண்ணீரோ, தடவப்பட்ட எண்ணெயாகிறது களையெடுக்கும் கை, கூந்தலை வாரிவிடும் சீப்பாகிறது.[2]

வாழை ஈன்ற தாறு கீழுள்ள கன்றினைத் தொட்டு நிற்கிறது. அக்காட்சி தாய்மரம் தன் கன்றிடம், "உழவர்கள் நீர் பாய்ச்சும் உதவியை நினைந்து அதற்குக் கைம்மாறாய் என் உயிரை ஈந்தும் இந்தப் பழங்களை உதவுகிறேன். என்னை அடுத்து வருகின்ற நீயும் இதே பண்பினை மேற்கொள்ளல் வேண்டும்" என்று சொல்வது போன்றிருக்கிறதாம்.

மடுத்து நீர்விடும் உதவியை நினைத்து,கைம் மாறாத்
தொடுத்த பல்பழம் உயிர்துறந்து ஈகுவம், இதுபோல்
அடுத்து நீவிரும் ஆற்றுமின்; என்றுதம் கன்றுக்கு
எடுத்து ரைப்பன போன்றன – ஈன்றன கதலி.[3]

குலை தள்ளியதும் வாழை வெட்டப்படும் என்ற நிலையில் அது தன் கன்றுக்கு நீதி சொல்வதாய் அமைந்துள்ள இக்கற்பனை, உள்ளம் உருக்குவதாய் உள்ளது.

1. காந்தி காதை, 141
2. மேலது, 146
3. மேலது, 152

இலக்கணம்

அரங்க. சீனிவாசனார் நூம் ஓர் இலக்கியப் பெரும்புலவர் என்பதை இலக்கணக் குறிப்புகளைத் தம் கவிதைகளில் பெய்து காட்டுவதன்வழி நிறுவிக் காட்டுகிறார். இவர் இலக்கண வழுவற்ற கவிதைகளை இயற்றுபவராய் இருப்பதோடு இலக்கணக் கருத்துகளைக் கவிதைப் பொருளோடு இணைத்து விளக்கம் செய்யும் இனிய தமிழ்ப்புலவராயுமுள்ளார்.

"ஒரு சொற்றொடரில் எழுவாய் இல்லாதிருந்தால், புலவர் அதற்குரிய எழுவாயைத் தோன்றா எழுவாய் என்று சொல்லி, அதைச் சேர்த்துப் பொருள் கொள்வர். அதுபோல, என்னுடைய வாக்கில் நயம் குறைந்திருந்தாலும் சான்றோர் அந்நயத்தை வருவித்துப் பொருள்கொள்வர்"[1] என்று சொல்லுமிடத்தில் தோன்றா எழுவாயின் இலக்கணத்தை இலக்கியத்தோடு சேர்த்து விளக்குகிறார்.

விகாரமும் விரும்பிக் கொள்வார்; வேற்றுமை பலவும் ஏற்பார்;
தகாதுஎனக் குறையை நீக்கார்; அல்வழி தழுவு கிற்பார்;
புகாமல்அன் மொழியைத் தள்ளார் இலக்கணப் புலவர்[2]

என்ற இப்பாடலில் விகாரம், வேற்றுமை, குறை, அல்வழி, அன்மொழி முதலியவை எல்லாம் சான்றோர்க்கு ஒவ்வாதவை எனினும் இலக்கணக் குறிப்புகள் என்ற அடிப்படையில் புலவர்களே ஏற்றுக்கொள்ளுகின்றனர்; அதுபோல, என் சொற்களில் குறையிருப்பினும் நயம் கொணர்ந்து போற்றிக் கொள்க என்று ஆசிரியர் கூறுவது அவரின் இலக்கண அறிவுச் செறிவை நமக்குக் காட்டுகிறது.

இந்திய நாட்டின் முப்புறம் மட்டுமே கடல் அமைந்திருப் பதற்குக் காரணம், கடல் இலக்கண விதியை அறிந்து இருப்பதே என நலம் காட்டுகிறார், கவிஞர். பொருள் நிலையில் ஒரு சொல் மூன்று முறைக்குமேல் அடுக்கி வரக்கூடாது என்பது இலக்கண விதி. அதற்குமேல் அடுக்கி வருமாயின் அஃது இலக்கணத்திற்குப் புறம்பாகும். கடல் இவ்விலக்கண விதியை அறிந்திருத்தலாற்றான் மூன்று முறை அடுக்கியதாய், அஃதாவது, மூன்று பக்கம் மட்டும் நிறைந்ததோடு நின்றுகொண்டதாம்.

அரும்பொருள் நிலையில் மூன்றே அடுக்கினுக்கு எல்லை என்று
விரும்பிய இலக்கணத்தின் விதியினை உணர்ந்து போலும்[3]

---

1. காந்தி காதை, 31
2. மேலது, 30
3. மேலது, 73 :

கடலுக்கு இலக்கணம் தெரிந்திருப்பதால் அது மும்மருங்கில் மட்டும் அமைந்தது எனக் கவிஞர் கூறுவது அருமையிலும் அருமை.

சந்தப்பாடல்களில் சொற்களின் சந்தி நடுவில் வல்லொற்று வந்தால் இசையின்பம் கெடும் என்பது இலக்கண விதி. தேசபக்தர் இடையே சிற்சில மட்டிகள் தோன்றி முன்னோர் வளர்த்த புகழைச் சிதைத்துவிட்டனர் என்று கூறுவதற்கு இவ்விலக்கண விதியை ஆசிரியர் பயன்படுத்திக்கொள்கிறார்.[1]

காந்தியும் கத்தூரியும் இரு மோனைகள் தொடர்ந்து நிற்றல்போல் ஒருவரையொருவர் தொடர்பவராயும், சொல் ஒன்று பொருள் இரண்டாய் வரும் சிலேடைபோல் உயிர் ஒன்று, பொருள் இரண்டுமாய் வாழ்ந்து வருபவராயும் இருந்தனராம்.

முரண்அற வரும்இணை மோனை போலவும்
இருபொருள் ஒருங்குறும் சிலேடை என்னவும்[2]

அவர்கள் வாழ்ந்தார்கள் என்று சொல்லுமிடத்தில் இணை மோனை, சிலேடை ஆகிய இலக்கணக் குறிப்புகள் இடம் பெறுகின்றன.

இரு குறள்வெண்பாக்களின் இடையே ஆசும், தனிச் சொல்லும் சேர்ந்தால் அவை இரண்டும் இணைந்து ஒரு வெண்பாவாகும். அதேபோல், தனித்தனியாய் இருந்த காந்தியும் கத்தூரியும், அன்பு, ஆர்வம் என்ற இரண்டனால் இணைக்கப்பட்டு ஒன்றாயினர்.

இருகுறள் கூடி நேரிசை வெண்பா எனஆக,
மருவுத னிச்சீர் ஆசிடை யுற்ற வகையேபோல்,
ஒருவுகி லாது காதலர் ஆவி ஒன்றாகப்
பெருகிய அன்போடு ஆர்வம் உளத்திற் பெருகிற்றே.[3]

இருவரும் இணைந்து ஒன்றானதால் அவர்கள் வாழ்க்கை நேரிசை (நேரிய புகழ்) கொண்டதாய் அமைந்தது என்ற குறிப்பும் இங்கே புலப்படுத்தப்பட்டுள்ளது.

புனைதிறன்

பாடுவது காந்தி கதையேயாயினும், பூமாலைகளில் இடையிடையே பசுந்தழைகளையும் புனைந்து மாலையின் அழகை மிகுதிப்படுத்துவதுபோல், இடையிடையே வேறு

1. காந்தி காதை, பாடல் 272
2. மேலது, 817 1-2
3. மேலது, 864

கதைகளையும் ஆசிரியர் பொருத்தமுற இணைத்திருப்பது பாராட்டுக்குரியது. இராமாயணத்தில் அகலிகை கதை, இரணியன் கதை இணைக்கப்பட்டிருப்பதுபோல் காந்தி காதையின் முதற்காண்டத்தில் சிரவணன் கதையும் அரிச்சந்திரன் கதையும் பொருத்தமுறக் கோக்கப்பட்டுள்ளமை ஆசிரியரின் காப்பியப் புனைதிறனுக்குச் சிறந்த சான்றாம். காந்தியார் சிரவணன் கதையைப் படித்தார், அரிச்சந்திரன் நாடகத்தைப் பார்த்தார் என்று கூறவரும் ஆசிரியர், அவ்வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொண்டு சிரவணன் கதையை 47 பாடல்களிலும்[1] அரிச்சந்திரன் கதையை 126 பாடல்களிலும்[2] பாடியிருப்பது பாராட்டுக்குரியது. காந்தி கதையோடு அரங்க. சீனிவாசனார் இயற்றியுள்ள சிரவணன் கதையையும் அரிச்சந்திர புராணத்தையும் நாம் இங்குப் பெறமுடிகிறது. இக்கதைகளை அவர் பாடியதோடு அமையாது அக்கதைகளால் காந்தியடிகள் பெற்ற படிப்பினையைக் காப்பியத்தில் பல பாக்களில் தொகுத்து இணைத்திருப்பதும் அருமையாய் உள்ளது.

காந்தியாருக்கும் கத்தூரிக்கும் மிக இளம் வயதில் திருமணம் நடந்தது என்பதைக் கூறுமிடத்தில் குழந்தை மணத்தின் கொடுமைகளை எடுத்துரைத்துக் கண்டித்தலும், அதே போன்று காந்தியார் புகை பிடித்தார் என்னுமிடத்தில் புகை பிடித்தலின் தீமையை எடுத்துரைத்தலும் ஆசிரியர்க்குக் காப்பியத்தில் நீதிகளைத் தக்கவாறு புனைந்து காட்டுவதில் உள்ள திறமையை நன்கு விளக்குகின்றன.

இக்காப்பிய முதற்காண்டத்தில் ஒரு பிள்ளைத்தமிழும் அடங்கியிருக்கிறது. காந்தியடிகள் பிறந்ததைக் கூறுமிடத்தில் காப்புப் பருவம், செங்கீரைப் பருவம், தாலப் பருவம், சப்பாணிப் பருவம், முத்தப் பருவம், வருகைப் பருவம், அம்புலிப் பருவம், சிற்றிற்பருவம், சிறுபறைப் பருவம், சிறுதேர்ப் பருவம் எனப் பத்துப் பாடல்களில்[3] காந்தி பிள்ளைத்தமிழைக் காப்பியப் போக்கில் இணைத்துச் சென்றிருக்கிறார். பேரிலக்கியம் படைக்க வந்தவர் அதன் இடையில் வாய்ப்பைப் பயன்படுத்தி இங்ஙனம் ஒரு சிற்றிலக்கிய (பிள்ளைத்தமிழ்) அமைப்பையும் படைத்துக் காட்டுவது ஒரு புதிய கவிதை உத்தியாகவே உள்ளது.

---

1. காந்தி காதை, பாடல் 521-567
2. மேலது, 584-709
3. மேலது, 493-502

இன்பச் செல்வம்; இன்னருள் மேகம்; எளியோர்தம்
துன்பச் சும்மை கொண்டு சுமக்கும் சுமைதாங்கி;
புன்பொய்க் கங்குல் போகம லர்ந்த புதுச்சோதி;
அன்புக்கு இல்லம்; அம்புவி போந்தது அறம்வாழ

எனத் தொடங்கி நான்கு பாடல்களில்[1] காந்தி அடிகளின் மாண்பை விளக்கியிருப்பது அற்புதமாயுள்ளது. காப்பியத் தலைவனின் இயல்புகளையெல்லாம் அழகுறத் தொகுத்துக் காட்டியிருப்பது ஆசிரியரின் தனித் திறமையைப் புலப்படுத்துகிறது.

அவையடக்கம்

அவையடக்கம் சொல்வது காப்பிய மரபு. கற்றறிந்தோர் முன்னிலையில் தாம் பாடுவதற்குத் தகுதி பெற்றிருக்கவில்லையென்றும், கேட்போர் தம் புலமையை நோக்காது, கூறும் பொருளைக் கருதித் தம்மைப் பொறுத்திட வேண்டும் என்றும் சொல்வது அவையடக்கம். ஆனால், தமக்குப் பாடத் திறமையில்லை என்று சொல்கிற அப்பாடல்களே புலவரின் திறமையையெல்லாம் வெளிப்படுத்தப் போதுமானவையாயிருப்பதை அறியலாம். கம்பர் தாம் இராமாயணத்தைப் பாடுவதானது, "ஒரு பூனை பாற்கடல் முழுவதையும் நக்கிக் குடிப்பேன் என்று சொல்வதற்கு ஒப்பாகும்" என்பார். புகழேந்திப்புலவர், தாம் நளன் கதையைப் பாடுவது, மதம் பிடித்த யானையைத் தாமரைத் தண்டினால் பிணைத்துக் கட்டுவதற்கு ஒப்பாகும் என்று குறிப்பிடுவார். வன்னிய புராணம் பாடிய வீரப்பப் பிள்ளை கற்றறிந்த புலவோர்முன் தாம் பாடுவது, அன்னத்தின் முன் கொசு பறப்பதற்கு ஒப்பாகும் என்கிறார். நாயகப் பேரொளியைப் பாடிய புலவர் முகைதீன், 'வில்லை அறியாதான் வேட்டைக்குச் சென்றாற்போல், சொல்லை யறியாதான் சோடித்த கவிதை இது' என அவையடக்கம் பாடியுள்ளார். மரபுக்கேற்ப அரங்க. சீனிவாசனார் பாடியுள்ள அவையடக்கப் பாடல்கள் அவருடைய புலமைத் திறனுக்குச் சான்று பகர்கின்றன. அவர், "காந்தியாரின் புகழ் என்ற அமுதை என் கவிதை என்ற மட்கலத்தினுள் அடைத்து வைத்திருக்கிறேன். ஆன்றவர் கலத்தை நோக்கி, அமுதினை இகழமாட்டார் அன்றோ?"[2] என்று குறிப்பிடுகிறார். "அமுதத்தை அஃது இருக்கும் கலம் சிறப்புடையதன்று என்பதற்காக எவரேனும் கைவிடுவரோ? மாட்டாரன்றோ! அது போன்றே என் கவிதை சிறப்புடையதாயிராதாயினும் அதன்

1. காந்தி காதை, 486-89
2. மேலது, 27 4

உட்பொருளாகிய காந்தியெனும் அமுதத்தை விரும்பாதவர் இருக்க முடியுமோ?" என வினாவுகிறார்.

மேலும், "பசு இளைத்திருந்தாலும் கொழுத்திருந்தாலும் பால் சுவையுடையதாய்த்தானே இருக்கும். அதுபோன்று, என் பாடலாகிய பசு எத்தகையதாயினும் அது கொண்டுள்ள பொருளாகிய பால் இனிமையானதேயாதலின் பருகுதற்குரிய தாகிறது" என்றும் குறிப்பிடுகிறார்.

வடிவிலை எனினும் சேதா வழங்குபால் கசப்பதில்லை[1]

என்பது அக்கவிதை அடி. திறமை இல்லை என்று சொல்கின்ற அவருடைய இப்பாடல்களே அவருடைய சிறந்த பாடல் திறமையைப் புலப்படுத்தி நிற்கக் காண்கிறோம்.

நானும் கவிஞருடைய பாங்கிலேயே சொல்வது பொருத்த மாயிருக்கும் என எண்ணுகின்றேன். பசுவும் நன்றாயிருக்கிறது; பாலும் சுவையாயிருக்கிறது. பசு பொழிந்துள்ள பாலில் சிறு அளவே நாம் இங்குப் பருகி மகிழ்ந்திருக்கிறோம். எல்லாப் பாலையும் உண்டு மகிழ்ந்திட ஏக்கமுற்றிருக்கிறோம். முழுப் பாலையும் எவ்வாறு பருகுவது? முடியுமா என்று யாரும் ஐயுறல் வேண்டா. இஃது அன்புப்பால் அறப்பால் வாழ்வுக்கு வளமூட்டும் தமிழ்ப்பால். எனவே, அரங்க. சீனிவாசனாரின் கவிதைப்பசு பொழிந்துள்ள கன்னித்தமிழ்ப் பாலைச் சுவைத்து இன்புற வேண்டும் என்று அனைவரையும் அன்போடு வேண்டுகிறேன்.

நூல் ஆக்கம்	அரங்க. சீனிவாசன்
வகைமை	காப்பியம்
வெளியீடு	திருவள்ளுவர் பதிப்பகம், திருச்சி. (1979)

1. காந்தி காதை, பாடல், 28 1

4

நாயகம் ஒரு காவியம்

இந்த
பூமி உருண்டையைப்
புரட்டி விடக்கூடிய
நெம்புகோல் கவிதையை
உங்களில்
யார் பாடப் போகின்றீர்கள்?

என்று வினாத் தொடுத்த கவிஞர் மேத்தா, 'நெம்புகோலையே' பாட முன்வந்திருக்கிறார். ஆம்! இப்பூமி உருண்டையைத் தம் உரையாலும் செயலாலும் புரட்டிவிட்டுள்ள நபிகள் நாயகம்[1] பற்றிப் பாட முன்வந்திருக்கிறார்.

*

நாயகம் ஒரு காவியம் எழுதியுள்ளார். அது கலிமா மொழிதல், தொழுகை, நோன்பு, கட்டாயக் கொடை, புனிதப் பயணம் எனும் ஐந்து[2] காண்டங்களைக் கொண்டுள்ள 'இசுலாம்' எனும் பெருங்காப்பியமாகும்.

ஐந்து காண்டங்களைக்கொண்டுள்ள அக்காப்பியத்தை உலகில் உள்ள ஐந்து கண்டங்களும் ஏற்றுப் போற்றுகின்றன.

காவியம் எழுதியுள்ள நாயகத்தையே ஒரு காவியமாய்க் காண்கிறார், கவிஞர் மேத்தா!

இறையுரை[3] இனிக்கின்ற கவிதை நடையில் இறங்கியது. அதை வழங்கிய நபிகள் நாயகத்தின் வரலாற்றை இனிக்கின்ற கவிதையில் தருகிறார், கவிஞர் மேத்தா!

*

1, 2, 3... விளக்கங்களைக் கட்டுரை இறுதியில் உள்ள அடிக்குறிப்பில் காண்க.

'கண்ணீர்ப் பூக்களை'த் தொடுத்து மாலையாக்கித் தந்த மேத்தா, இங்கே, மாந்தர் இனம் கண்ணீரைப் பெருகவிட்டு, மனத்திலுள்ள 'கறை'களை அகற்றிக்கொள்ள வேண்டும் என்கிறார்.

தண்ணீரில் போகாத
தடித்த கறைகளுண்டு;
கண்ணீரில் கழுவினால்
கரையாத கறையுண்டோ?

* * *

அவையை அடக்கும் பாடல்களுக்கு உரிமை பூண்டவர், கவிஞர் மேத்தா! இந்த நூலில்தான் முதன் முதலாய் அவையடக்கம் பாடுகிறார்! முதலவனின் தூதரைப் பாடும்போது அடக்கம் தோன்றுவது இயல்புதானே!

ஒருபிச்சைப் பாத்திரம்
அட்சய பாத்திரமாக
ஆசைப்படுகிறது!

என அடக்கத்தோடு சொன்னாலும், இக்காவியம் அட்சய பாத்திரமாகவே அமைந்திருக்கிறது என்பதைப் படிப்போர் உணர்வர்.

* *

காவியத் தலைவர் தோன்றிய நாடு, நகர்பற்றிப் பாடுவது காவிய மரபு. நாடும் நகரமும், எல்லா நலமும் நிறைந்தனவாகவும், எவ்விதக் குறையும் இல்லாதனவாகவும் பாடப்பட்டிருக்கும். மேத்தா, மரபைவிட உண்மையை மதிப்பவர். ஆகவே, பெருமானார் தோன்றியபோது அரபு நாடு எவ்வாறிருந்ததோ, அவ்வாறே கவிநயத்தைக் குழைத்துக் கூறியுள்ளார்.

அன்றைய அரபு நாட்டு மக்கள்,
தானம் செய்ததெல்லாம்
சமாதானத்தை.

*

மூட நம்பிக்கை
அங்கே
முடி சூடியிருந்தது.

*

வாழ்க்கை அங்கே
மூர்க்கர்களால்
முன்மொழியப் பட்டது;
முரடர்களால்
வழிமொழியப் பட்டது.

மேத்தா சொக்க வைக்கும் நடைக்குச் சொந்தக்காரர். அவர் பேனாவை எடுத்து உதறினால் சிந்துகின்ற மையே எழிற்கோலமாய் அமைந்துவிடும் போலிருக்கிறது!

அன்னை அலீமா[4] முகம்மதுவுக்குப் பாலூட்டி வளர்த்தவர். அவர் முகம்மதுவை மீண்டும் தாயிடமே சேர்த்தார் என்பதை,

மலரைக்
கொடியிடமே கொண்டு
சேர்த்தார்

என்கிறார், கவிஞர்.

தாத்தா மார்பில் குழந்தை தொங்குவதை,

தங்கநிலா ஓடிவந்து தொங்கும் மார்பில்

என்கிறார்.

அபூதாலிப்[5] மரணமடைந்தார் என்பதை,

விழிவிளக் கிரண்டு வெறும்விளக் கானது

என நயம்படக் கூறுகிறார்.

குறைஷியர்கள்[6] முகம்மது (ஸல்) அவர்களுக்குக் கொடுமை இழைக்கின்றனர். அபூதாலிபுக்குப் பெருமானாரின் பெருமை புரிகிறது. ஆனால், குறைஷியருக்கு எதிராய் அவரால் ஏதும் செய்ய முடியவில்லை. இதனை மேத்தா சொல்லும் முறையே ஒரு தனி அழகு.

பண்அருமை பாட்டருமை தெரியும்; ஆனால்
பாட இந்த ஊமையினால் முடிய வில்லை.

அபூதாலிபு மனம் குமைகிறார் என்பதைச் சொல்லும் பாடல் அடிகள் இவை.

பெருமானார் இல்லத்தினுள்ளே இருக்கிறார். இல்லத்தைச் சுற்றி அவரைக் கொல்ல வந்தவர்கள் சூழ்ந்திருக்கிறார்கள். இதனை,

வெண்புறா வீட்டுக் குள்ளே
வெளியிலோ வேடர் கூட்டம்

என விளக்குகிறார்.

இசுலாமிய நெறிக்குரிய சொற்களை உரிய இடங்களில் அருமையாய்ப் பொருத்தி அழகு சேர்க்கிறார், கவிஞர்.

கை கொடுத்த
இவருடைய
'கை'
தொழுகை

*

பாங்குடன் அக்குயில் 'பாங்கு'[7] சொல்லவோ?

பெருமானாரிடம், "உங்களுக்கு முன் தோன்றினோர் 'அற்புதங்களைச் செய்திருக்கின்றனர். நீங்கள் செய்த அற்புதம் என்ன?" என்றனர். அதற்கு அவர், "என்னுடைய அற்புதம் நான் கொண்டுவருகிற 'இறை மறையே"[8] என்றார். நாயகம் அற்புதங்களைக் காட்டி மயக்கவில்லை. மறைமொழியைக் கூறி அழைத்தார். அம்மறைப்பொருள் வந்து இறங்கப் பெருமானார் ஒரு துறைமுகமாய் இருந்தார்.

இவர்
இறைவனின் துறைமுகம்;
இங்கேதான்
திருமறை
இறக்குமதியானது

என்னும் மேத்தாவின் உரை எங்கெங்கும் ஏற்றுமதி செய்யப்பட வேண்டிய பொருளாகும்.

நகைச்சுவையைப் பாடுவது அருமையான செயல். கவிஞர் மேத்தா நுட்பமான நகைச்சுவையைப் பாடுவதில் வல்லவரா யிருக்கிறார். பெருமானார் மதீனா[9] புறப்பட்டதும், அவரைப் பிடித்துத் தருபவர்க்கு நூறு ஒட்டகங்கள் அன்பளிப்புத் தரப்படும் எனக் குறைஷிகள் தெரிவித்தனர். நூறு ஒட்டகங்களுக்கு ஆசைப்பட்டவர் அவரைப் பல இடங்களிலும் தேடுகிறார்களாம்! இதைக் கவிஞர் நகைச்சுவை ததும்பச் சொல்கிறார் :

பேரீச்ச மரத்தைப் பார்த்தால்
பெருமானார் போலத் தோன்றும்!
ஒரீச்ச மரத்திற் குள்ளே
ஒளிந்துளார் என்று தோன்றும்!

பக்கத்தில் சென்று பார்த்தால்
பைத்திய மாகத் தோன்றும்!
தக்கது தகாத தென்னும்
தரமிலா ஆசை தூண்டும்!

*

பெருமானார் திருவடிகள் தம்மிடம் வாராவோ என மக்களும் தவிக்கிறார்கள்; உயிரற்ற பொருள்களும் தவிக்கின்றன ஆம்!

பெருமானார், அபூபக்கருடன்[10] மதீனா செல்லும்போது தம் எதிரிகளிடமிருந்து மறைய இடம் தேடுகிறார்கள்! வழியிலிருந்த

'தௌர்' " குகை, பெருமானார் என்னிடம் வரமாட்டாரா என ஏங்கித் தவிக்கிறதாம்!

கல்உருக முள்உருகக்
கனிந்து வரும் கால்விரல்கள்
உள்ளுருக உயிர்உருக
உட்புகுந்து வாராதோ?

பெருமானார் மதீனா சேர்ந்ததும் அவர் எங்குத் தங்குவது என்ற வினா எழுந்தது. பெருமானார் தாம் ஏறிவரும் ஒட்டகம் எங்குப் படுக்கிறதோ அங்குத் தங்குவதாய்க் கூறுகிறார். ஒட்டகம் வீதி வழியே செல்கிறது. ஒவ்வொரு வீட்டாரும், 'இங்கு நில்; இங்கு நில்' என வேண்டுகிறார்கள்! தம் வீட்டருகே ஒட்டகம் வரும்போது இங்கு நிற்கும் என மலர்ந்த முகம், தாண்டிவிட்டாலோ கூம்பி விடும்.

தம்வீட்டை நெருங்கும்; மக்கள்
தாமரைப் பூவைப் போல்வார்!
தம்வீட்டைக் கடந்த பின்னோ
தாம்அரைப் பூவாய்ப் போவார்.

உயர்திணையும் அஃறிணையும் ஒரே நிலையில் நாயகத்தின்பால் மதிப்புக் கொண்டிருப்பதை இப்பாடல்கள் உணர்த்துகின்றன.

உவமை, மணியின் நாக்குப் போன்றது. நா அசைவால் மணியோசை எழுவதுபோல, உவமைகளால் கவிதை இனிமை பெறும். மேத்தாவின் உவமைகள் இயல்பானவையாயும், அதே வேளை புதுமையானவையாயும் இருப்பதை உணர முடிகிறது.

கதீஜா[12] நாச்சியார், பெருமானாரிடம் தம் காதலைக் கூறிவரத் தோழியைத் தூதனுப்புகிறார். தோழி திரும்பும் முன், 'அவர் என்னை ஏற்பாரா, திருமணத்திற்கு இசைவாரா?' என அடுத்தடுத்து வினாக் கணைகள் மனத்தைத் தாக்குகின்றன. அவற்றிற்கு விடை தெரியவில்லை. இதை விளக்க மேத்தா கையாண்டுள்ள உவமை அருமையிலும் அருமை!

வாள்மீது வாள்பாய் கின்ற
மாபெரும் போர்க்க ளம்போல்,
கேள்விமேல் கேள்வி பாயும்;
கேடயம் எதுவும் இல்லை!

இருள் செறிந்திருக்கிறது. எவ்வாறு?

பெண்குலத்தார் பின்னலெலாம் ஒன்றாய்ச் சேர்த்துப்
பின்னியதைப் போல்அடர்ந்த இருளின் கூட்டம்!

* *

கற்பனை, காவியப் பறவைக்குச் சிறகு போல. கோலத்தால் வாயிலை அழகூட்டுவதுபோல, சிறந்த கற்பனைகளால் மேத்தா தம் கவிதைக்கு வளம் சேர்த்திருக்கிறார்.

பெண்ணின் கண்கள் கயல்மீன்கள்! அவள் கிணற்றுநீரைக் குனிந்து பார்க்கிறாள். தண்ணீரில் தெரியும் முக நிழலை மீன் வலையாகவும், கண் நிழலை அவ்வலையில் சிக்கியுள்ள மீன்களாகவும் கருதி, கிணற்று மீன்களெல்லாம் அவ்வலையில் சிக்காதிருக்க மூழ்கி மறைகின்றனவாம்!

காதள வோடும் கண்கள்
கயல்களே என்று நம்பி,
மாதரை வலைகள் என்று
மறைந்திடும் கிணற்று மீன்கள்!

மேத்தா எழுப்புகின்ற சில வினாக்கள் நம் 'சிந்தை உடல் அணு ஒவ்வொன்றும் சிலிர்க்கச்' செய்கின்றன.

அருவியின் நீரை நீரால்
அணைகட்ட முடியு மாமோ?

*

கடல் வேறாய் அலைவேறாய் உறைவ துண்டோ?

*

கன்றுக் குட்டிக்கு நுகத்தடியா?

*

வீசிடும் தென்றல் காற்று
விசிறிக்கா ஆசை கொள்ளும்?

*

வைகறையே அழுக்கானால் இருள்து வைக்க
வருபவர் யார்?

*

பெருமானார் வாழ்க்கை நிகழ்ச்சிகளை மேத்தா உள்ளம் உருகிப் பாடுவதோடு, நம் உள்ளங்களையும் உருக வைக்கிறார்.

அண்ணலாரின் கொள்கையை ஏற்றுக்கொள்ளாத குறைஷியர்கள், ஒருநாள் இரவில் அவரைக் கொல்ல அவர் வீட்டினைச் சூழ்ந்துள்ளார்கள். தங்கள் பொருள்களையெல்லாம் பாதுகாப்பாய் வைத்திருக்குமாறு எவரிடம் கொடுத்திருக்கிறார்

களோ அவரையே - அண்ணலாரையே - அவர்கள் கொல்ல முனைந்திருக்கிறார்கள். ஆம்; அண்ணலார் நடத்தையில் அவர்களுக்கு அவ்வளவு நம்பிக்கை![13] முகம்மது, தம் படுக்கையில் அலியாரைப்[14] படுக்க வைத்து, தாம் தப்பிச் செல்லும்போது,

அவரிடம் மக்கள் தந்த
அடைக்கலப் பொருளை யெல்லாம்
அவரவர்க் களித்து யத்ரிப்[15]
அடைந்திட

அலியாரிடம் கூறிச் சென்றார். உலக வரலாற்றிலேயே இத்தகைய நம்பிக்கையாளராய் - அல்அமீனாய் - நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தவிர வேறு எவரையும் கூற முடியாது!

இத்தகைய அரிய பல நிகழ்ச்சிகளை மேத்தா நம் ஊனில் உயிரில் பதிய வைக்கிறார்!

வரலாற்றைச் சொல்லிச் செல்கையில் சில நிகழ்ச்சிகள் பற்றித் தம் உள்ளக் கருத்தைச் சொல்ல, 'கவிக்குரல்' என்றதொரு தலைப்பை மேத்தா ஏற்படுத்திக்கொண்டிருப்பது இக்காவியத்தில் ஒரு புதுமை.

அண்ணலாரும் அபூபக்கரும் மறைந்திருந்த தௌர் குகையின் முகப்பில் சிலந்தி ஒன்று வலை பின்னியது. அதைக் கண்ட எதிரிகள் அக்குகையினுள் ஆள்கள் நுழைந்திருக்க முடியாதென அகன்றனர். பெருமானார் பிழைத்தார்.

பட்டொளி வீசிப்
பறக்கும் வெற்றிப்
பதாகைக்குத்
துணி நெய்யத்தான்,
அன்றுஅச் சிலந்தி
நூல் நூற்றதோ?

என இங்கே 'கவிக்குரல்' எழுகிறது.

மக்காவிலிருந்து அண்ணலார் மதீனா சென்ற 'பயணம்' பற்றிய கவிக்குரல் இதோ :

பாதைகளில் நடப்பதுண்டு
'பயணம்'.
மக்காவிலிருந்து மதீனாவுக்கு
நபிகள் பெருமானார்
நடத்திய பயணமோ,
பாதையினை வகுத்த
'பயணம்'.

காவியத்தில் உள்ள ஒன்பது 'கவிக்குரல்'கள் ஒன்பான் மணிகளாய்க் கவிஞரின் உள்ளத்தை நமக்கு வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன.

பெருமானார்
எழுதப் படிக்கத்
தெரியாதவர்தான்
ஆனால்
இவர்தான்
பூமியின் புத்தகம்

உலகம் படிக்கும் ஒப்பற்ற புத்தகமாய்ப் பெருமானார் இருந்து வருகிறார். அப்புத்தகம் நம் ஆயுள் முழுதும் படித்தாலும் படித்து முடிக்க முடியாத புத்தகம். அப்புத்தகத்தின் முக்கியப் பக்கங்களை நாம் படிக்க வகை செய்திருக்கிறார், மேத்தா. அதற்காக அவருக்கு நன்றி சொல்வோம்.

கதீஜா அம்மையார் அண்ணலாரை மணக்க விரும்புவதைச் சொல்லுமிடத்தில் காதல் களிநடம் புரிகிறது.

அண்ணலாரின் படை அணிவகுத்துச் செல்வதைச் சொல்லும் பாடல்கள் வீரத்திற்கு விளக்கமாய் அமைந்துள்ளன.

குறைஷியர் மிரட்டியபோதும், "என் தம்பி மகன் செய்வதே சரி" என அபூதாலிப் சொல்வதில் பெருமிதம் தோன்றுகிறது.

தாயிபில் முகம்மது கல்லால் அடிபட்டதைச் சொல்லும் போது துக்கம் நம் தொண்டையை அடைக்கிறது.

தெளர் குகையில் பெருமானாரும் அபூபக்கரும் மறைந்திருந்தபோது, எதிரிகள் குகை வாயிலில் நின்றதைக் கூறும்போது, நம் நெஞ்சு 'படக்படக்' என அச்சத்தால் துடிக்கிறது.

அண்ணலாரைக் கண்போல் காத்துவந்த கதீஜா நாச்சியாரின் மறைவைக் கூறுமிடத்தில் நம் கண்களில் நீர் வழிகிறது.

இவ்வாறாய் எல்லா உணர்வுகளையும் படிக்கும்போதே நம் உள்ளங்களில் ஊற்றெடுக்கச் செய்துவிடுகிறது, மேத்தாவின் கவிதை வளம்.

பெருமானாரை நானிலம் போற்றும் நம்பிக்கையாளராய், இனிய இல்லறத் தலைவராய், மறை பெற்ற இறை தூதராய்,

கொள்கை வழுவாக் குரிசிலாய், பரணி பாடும் படைத்தளபதியாய், மனித நேய மாமணியாய் விளக்குகின்ற இக்காப்பியம் அமைப்பும் அழகும் இலக்கணமும் முற்றிலும் பொருந்தியுள்ளதாயுள்ளது.

நடைத்தெளிவும் எளிமையும் நம்மை வியக்கச் செய்கின்றன. எளிய நடையிலும் கம்பீரமான கருத்துகளைச் சொல்ல முடியும் என்பதற்கு மேத்தாவின் கவிதைகள் எடுத்துக்காட்டுகளாயுள்ளன. ஆழமிக்க தெளிந்த நீரினுள் கிடக்கும் பொருள், மேலெழுந்து அண்மையில் இருப்பதாய்க் காட்சி தருவதுபோல, நடையின் தெளிவால் அரிய பொருளையும் மேத்தாவின் கவிதை எளிமையாய்ப் புரிய வைத்துவிடுகிறது.

காவியத்தில் புதிய புதிய உத்திகள் கையாளப்பட்டுள்ளன. படிக்கும்போதே நெஞ்சில் பதிந்துவிடுகின்ற சொல்லோவியங்கள்; வாய்விட்டு ஓதத் தோன்றும் ஓசைநயம் - இவை காவியத்தின் தனிச் சிறப்புகளாய் உள்ளன.

புதுக்கவிதை, மரபுக்கவிதை, இசைப்பாடல் ஆகியவற்றை இணைத்து இக்காவியத்தை 'முக்கவி'த் தோப்பாக்கியிருக்கிறார், மேத்தா! தோப்புக்குள் நுழைவோம்! இறைவன், இறுதிநபி, இறைமறை ஆகிய முக்கனிகளையும் சுவைத்து மகிழ்வோம்!

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப்பற்றி மேத்தாவின் உள்ளத்தே தோன்றிய கருத்து ஊற்றுகள் ஒன்றிணைந்து 'காவிய ஆறாய்' ஓடி வருகின்றன. ஆற்றுநீரை அள்ளிப் பருகுவோம்; அகமெலாம் குளிரச் செய்வோம்!

பெருமானார் எனும் மூலிகைப் பண்ணையில் உள்ள சிறந்த மூலிகைகளை எடுத்து மேத்தா, தம் கவிதைக் கல்வத்தில் இட்டு ஒன்றாக்கி, 'மனப்பிணி' நீக்கும் மருந்தினை ஆக்கித் தந்துள்ளார். மருந்தை உட்கொள்வோம்; மனநலம் பெறுவோம்!

*

அறிவுரை கூறுவோர், 'அவர்போல் நடக்கவும்; இவர்போல் நடக்கவும்' என்று கூறுவதையே காண்கிறோம். 'என்னைப்போல் நட' என்று சொன்ன பெருமைக்குரியவர், பெருமானார். அதே போல, 'காவிய மெழுதுவோர் என்னைப்போல் எழுத வேண்டும்' என மேத்தா துணிவுடன் சொல்வதற்கு ஏற்றதாய் இக்காவியம் இருக்கிறது என்பது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை.

உலகிலே மலைகள் பல இருந்தாலும் இமயம் மட்டுமே தலையோங்கி நிற்கிறது. விண்ணிலே மீன்கள் பல விளங்கினாலும் முழுநிலவே தண்ணொளி வீசிப் பெருமை பெறுகிறது. கவிஞர் மேத்தா, கவிதைப் படைப்புப் பல படைத்திருந்த போதிலும், அவற்றுள் 'நாயகம் ஒரு காவியம்' இமயமாய் உயர்ந்து நிற்கிறது; முழு மதியாய் ஒளி வீசுகிறது.

மேத்தா! மேத்தா!
இத்தகைய
அரிய காவியங்களை
மேலும் தா! மேலும் தா!

அடிக்குறிப்பு

1. முகம்மது நபி (ஸல்) அவர்கள்-நபிகள் நாயகம், இறுதி நபி, பெருமானார், அண்ணலார், இறைதூதர் என்றெல்லாம் வழங்கப்படுவதுண்டு. ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் என்பது சுருக்கமாய் 'ஸல்' எனக் குறிக்கப்படுகிறது. இதன் பொருள், "இறைவனுடைய நல்லாசியும் சாந்தியும் அவர்கள்பால் உண்டாவதாகுக" என்பதாம். முகம்மது நபி பெயருடன் 'ஸல்' இணைத்து எழுதப்பட வேண்டும்.

2. கலிமா மொழிதல், தொழுகை, நோன்பு, கட்டாயக் கொடை, புனிதப் பயணம் எனும் ஐந்தும் இசுலாமியர்களின் ஐம்பெரும் முக்கியக் கடமைகளாகும்.

கலிமா மொழிதல் இசுலாத்தின் அடிப்படைத் தத்துவங்களைக் கூறும் உரைகள் கலிமா என்று கூறப்படுகின்றன. இசுலாத்தின் அடிப்படை மறைமொழியாகிய கலிமா இரு சொற்றொடர்களால் ஆனது. அவை, "லா இலாஹ இல்லல்லாஹு, முகம்மதுர் ரசூலுல்லாஹி' என்பனவாம். இதுவே முதலாவது கலிமா. இதனுடைய பொருள், "வணக்கத்துக்குரியவன் அல்லாஹ்வைத் தவிர எவருமிலர்; முகம்மது அவர்கள் அவனுடைய திருத்தூதர்" என்பதாம்.

தொழுகை இசுலாமியர்கள் ஒவ்வொரு நாளும் ஐந்து வேளை தொழுகை நடத்த வேண்டும்.

நோன்பு இசுலாமிய நெறிப்படி இருள்பிரியத் தொடங்கும் புலர்காலையிலிருந்து இருள் பரவத் தொடங்கும் இரவுத் தொடக்கம்வரை எதையும் உண்ணாமலும், பருகாமலும், உடலுறவு கொள்ளாமலும் இருத்தல் நோன்பு எனப்படுகிறது. இரமலான் மாதம் முழுவதும் இசுலாமியர் நோன்பு நோற்பர்.

கட்டாயக் கொடை ஸக்காத் எனப்படும் இது, கட்டாயக் கொடை அல்லது ஏழை வரி எனப்படும். ஸக்காத் என்பது செல்வர்கள் தங்கள் பொருளின் ஒரு பகுதியை (40 இல் ஒருபங்கு) ஏழைகட்கு அளிப்பதாகும்.

புனிதப்பயணம் ஹஜ் எனப்படும். இது மக்காவை நாடிச் செல்லும் புனிதப்பயணம். வசதி படைத்த முசுலிம், தம் வாழ்நாளில் ஒரு முறையாவது மக்கா சென்று வரவேண்டும் என்பது கடமையாக்கப்பட்டுள்ளது. (மக்கா-நபிகள் நாயகம் பிறந்த இடம்.)

3. திருக்குர்ஆன் இசுலாமியர்களின் வேதம்; இது முகம்மது நபிக்கு இறைவன் அருளியதாகும்.

4. அரபு நாட்டில், பெற்ற குழந்தையைத் தாய்மார்கள் பிற பெண்களிடம் பாலூட்டி வளர்க்கக் கொடுப்பதுண்டு. அலீமா என்பார் முகம்மதுவை நான்கு ஆண்டுகள் பாலூட்டி வளர்த்தார்.

5. அபூதாலிபு - முகம்மதுவின் பெரிய தந்தை.

6. குறைஷியர் - முகம்மதுவின் முந்தையோருள் ஒருவர் பிஃறு. குறைஷ் என்னும் சொல்லுக்குச் சுறுசுறுப்பு என்பது பொருள். பிஃறு சுறுசுறுப்புடன் வாணிபத்துறையில் பொருளீட்டியதால் இவர் 'குறைஷ்' என வழங்கப்பட்டார். இவர் தலைமுறையிலிருந்து இவர் வழிவந்தவர் குறைஷியர் என வழங்கப்பட்டனர். நபிகள் நாயகம் இம்மரபில் தோன்றியவர்.

7. பாங்கு 'பாங்கு' என்பது இசுலாமியர்களின் தொழுகைக்குரிய அழைப்பொலி. இது அரபு மொழியில் 'அதான்' என்றும், பார்சி மொழியில் 'பாங்க்' என்றும் சொல்லப்படுகிறது. ஓர் உயரமான இடத்திலிருந்து உரத்த குரலில் கூறித் தொழுகைக்கு அழைப்பதுவே பாங்கு எனப்படுகிறது. இவ்வாறு அழைப்பவர், முஅத்தீன் (அழைப்பாளர்) எனப்படுவார்.

8. இறைமறை - திருக்குர்ஆன்.

9. மதீனா முகம்மது மக்காவிலிருந்து சென்று சேர்ந்த இடம்.

10. அபூபக்கர் முகம்மது நபியின் உயிர்த்தோழர். முகம்மதுவுடன் மதீனா சென்றவர் இவரே. முகம்மதுவுக்குப்பின் அரசுக் கட்டிலேறி ஆட்சி நடத்தியவர்கள் கலீபாக்கள் என்று வழங்கப்பட்டனர். அபூபக்கர் முதலாவது கலீபா.

11. தௌர் முகம்மது மக்காவிலிருந்து தப்பி அபூபக்கருடன் மதீனா நோக்கிப் புறப்பட்டுச் சென்றார். எதிரிகள் பின் தொடர்ந்து துரத்தி வந்த போது, இருவரும் 'தௌர்' மலையிலிருந்த ஒரு

குகைக்குள் சென்று ஒளிந்தனர். அக்குகையின் வாயிலில் சிலந்தி ஒன்று, வலை பின்னி, வாயில் முழுவதையும் அடைத்தது. முகம்மதுவைத் தேடிவந்த பகைவர், குகை வாயிலில் சிலந்திக்கூடு சிதையாமல் இருந்ததால் உள்ளே யாரும் சென்றிருக்க முடியாதென அங்கிருந்தும் அகன்றனர். சிலந்தி வலை முகம்மதுவைக் காப்பாற்றியது.

12. கதீஜா மக்கா நகரில் இருந்த செல்வச் சீமாட்டி. இருமுறை மணந்து கைம்பெண் ஆனவர். முகம்மதுவைத் தம் பொருள்களை விற்றுவரத் தம் அலுவலராய்ச் சிரியாவுக்கு அனுப்பினார்; முகம்மதுவின் நேர்மையை அறிந்து, அவரை விரும்பித் திருமணம் செய்துகொண்டார். திருமணத்தின்போது முகம்மதுவின் வயது 25. கதீஜாவின் வயது 40.

13. முகம்மது, மக்கமா நகரில் எல்லாராலும், 'அல்அமீன்' (நம்பிக்கைக்குரியவர்) என்று வழங்கப்பட்டு வந்தார்.

14. அலியார் : முகம்மதுவின் பெரிய தந்தையார் அபூதாலிபின் மகன்; ஐந்து வயதிலிருந்தே முகம்மதுவின் வீட்டில் வாழ்ந்து வந்தார். பின்னாளில் நபிகள் நாயகத்தின் மகள் பாத்திமா நாச்சியாரை மணந்துகொண்டவர்.

15. யத்ரிப் : இன்றைய மதீனா, அன்று யத்ரிப் என்று வழங்கப்பட்டு வந்தது.

நூல் ஆக்கம்	கவிஞர் மு. மேத்தா
வகைமை	காவியம்
வெளியீடு	மல்லிகை புதிப்பகம், சென்னை. (1994)

(5)

குன்றக்குடி அடிகளார்
நூல் வரிசை, தொகுதி–1

உலகில் இன்று இல்லெனினும் உலகெங்கும் வாழும் தமிழர்களின் நெஞ்சங்களிலெல்லாம் புகழுருவாய் என்றென்றும் நிலைத்திருப்பவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார். பூ என்றால் தாமரை, ஊரென்றால் உறையூர் என்றாற்போல, 'அடிகளார்' என்று சொன்னால் அது, சென்ற நூற்றாண்டின் இடைப்பகுதி தொடங்கிக் குன்றக்குடி தவத்திரு. தெய்வசிகாமணி அருணாசல தேசிக அடிகளார் அவர்களையே குறிப்பதாயுள்ளது. 'வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்' என்று கண்ணகியை இளங்கோவடிகள் குறிப்பது போல, மடங்களின் தளத்தை விடுத்து மண்ணில் கால் வைத்தறியா ஆதீனத் தலைவர்கள் பலரும் உள்ள இக்காலத்தில், கல்லிலும் முள்ளிலும், காட்டிலும் மேட்டிலும், கழனியிலும் புழுதியிலும் மக்களோடு மக்களாய் ஒன்றிப் பழகியும் மக்கள் நலப்பணிகளாற்றியும் வந்த ஆதீனத் தலைவர் குன்றக்குடி அடிகளார் ஒருவரேயெனில் மிகையன்று.

Leigh Hunt என்பார் எழுதிய ஆங்கிலக் கவிதை ஒன்று, 'Abu Ben Adhem, may his tribe increase' எனும் முதலடியுடன் தொடங்குகிறது. ஒரு நாள் இரவில் அபூ பென் ஆதம் தன் அறையினுள் நுழைந்த ஒளிக்கற்றையில் தேவதை ஒன்று தங்கத் தகட்டில் ஏதோ எழுதிக்கொண்டிருப்பதைப் பார்த்து, 'என்ன எழுதுகிறீர்?' என்று கேட்டான். தேவதை, உலகில் கடவுளை யார் மிகுதியும் பூசை செய்கிறார்களோ அவர்கள் பெயர்களை எழுதிக் கொண்டிருப்பதாய்க் கூறியது. அப்பட்டியலில் அவன் பெயர் இல்லை. 'மக்களுக்குத் தொண்டு செய்யும் ஒருவன்' எனத் தன் பெயரை இறுதியில் சேர்த்துக்கொள்ளுமாறு அவன் வேண்ட, தேவதையும் அவ்வாறே எழுதிச் சென்றது. மறுநாளும் முன் நாள் போலவே தேவதை தோன்றியது. அதன் கையில் ஓர் ஏடு இருந்தது.

அதில், கடவுள் யாரை மிகவும் நேசிக்கிறார் எனும் பெயர்ப் பட்டியல் இருப்பதாய்த் தேவதை கூறியது. அபூ பென் ஆதம் தன் பெயர் அப்பட்டியலில் உள்ளதா என்று கேட்டபோது அவன் பெயரே முதற்பெயராய் இருப்பதாய்த் தெரிவித்துத் தேவதை மறைந்தது. மக்கள் தொண்டே இறைவனுக்குச் செய்யும் உண்மையான பூசை என்பதை இக்கவிதை விளக்குகிறது.

"உழவன் உழவு செய்யும் இடத்திலே, தொழிலாளி கல்லுடைக்கும் இடத்திலே இறைவன் இருக்கிறான்; அவர்களுடன் வெயிலிலும் மழையிலும் காய்கிறான், நனைகிறான்; அவன் ஆடையில் தூசி படர்ந்திருக்கிறது. இறைவன் அங்கேயிருக்க, தாழிடப்பட்டு அடைபட்ட கோவிலில் இருளடைந்த மூலையில் யாரைப் பூசிக்கிறாய்? வெளியே வா; அவன்போல நீயும் புழுதியில் இறங்கு; நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்து உன் இறைவனைக் கண்டுகொள்" என்பது இரவீந்திரநாத தாகூரின் கீதாஞ்சலிப் பாடல் ஒன்றன் கருத்து. மக்களுடன் மக்களாய் ஒன்றி உழைப்பதே உண்மையான இறைவழிபாடு என்பது இதன் கருத்து.

"உங்களுடைய பக்தியும் முக்தியும் யாருக்கு வேண்டும்? உங்களுடைய சாத்திரங்கள் என்ன சொல்லுகின்றன என்பதுபற்றி யாருக்குக் கவலை? என்னுடைய நாட்டுமக்களை உயர்த்துவதற் காக நான் ஆயிரம் முறை வேண்டுமானாலும் நரகத்துக்குச் செல்லத் தயார். நான் யாருடைய ஊழியனும் அல்லன். தன் முத்தியைப்பற்றி நினையாது பிறருக்கு உதவிபுரிந்து பணி செய்பவனுக்கே நான் பணியாள்" என்பது சுவாமி விவேகானந்தர் வாக்கு. மக்களுக்கு உதவுதலே மெய்யான முக்தி என்பதை இது விளக்குகிறது.

ஏசு, தம்மால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களிடம், "தாழ்ந்த நிலையிலுள்ள என் உடன்பிறந்தார்களாகிய மக்களுள் ஒருவருக்கு நீங்கள் எதைக் கொடுக்கிறீர்களோ அதை எனக்கே கொடுக் கிறீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார். அதேபோல, அவரால் ஏற்கப்படாதவர்களிடம், "மிகவும் தாழ்ந்த நிலையிலுள்ள என் உடன்பிறந்தவர்களுள் ஒருவருக்கு நீங்கள் எதைச் செய்யாதிருந்தீர்களோ அதை எனக்கே செய்யா திருந்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார். அஃதாவது, ஏழைக்குக் காட்டும் அன்பே, இறைவனுக்குச் செலுத்தும் அன்பு என்பது விவிலியக் கருத்தாகும்.

இத்தகைய கொள்கைகளின் ஒட்டுமொத்தத் தொகுப்பே நம் அடிகளார். அவருடைய எழுத்துகள் அனைத்தையும் பல தொகுதிகளாய் வெளிக்கொணரும் சீரிய பணியை மணிவாசகர் நூலகம் மேற்கொண்டிருக்கிறது. திருக்குறள்பற்றி அடிகளார் ஆற்றிய உரைகள், அவர் எழுதிய கட்டுரைகள், தனித்தனிக் குறளுக்கு அவர் தந்த விளக்கங்கள் ஆகியவற்றைக் கொண்ட இம்முதல் தொகுதி, அடிகளாரின் வள்ளுவச் சிந்தனைகளாய் அமைந்திருக்கிறது.

அடிகளார், திருக்குறளை அற நூலாய், நீதி நூலாய் மட்டும் காண்பதோடு நின்றுவிடக்கூடாது; அதனை வாழ்வியல் நூலாய்க் கொண்டு, வள்ளுவர் வழியில் நடந்தால் வையகம் தழைத்தோங்கும் என வலியுறுத்தி வந்தவர். "திருவள்ளுவர் நெறியில் இந்த வையகம் நடைபோடுமானால், இன்று இந்த உலகத்தை வருத்தும் துன்பங்கள் அனைத்தும் அகலும்; அன்பு வளரும்; அறம் வளரும்; பண்பாடு வளரும்; இந்த உலகம் இடையீடின்றி இயங்கும். இந்த உலகம் அழியாது; என்றும் நிலைபெற்று விளங்கும்" என, வள்ளுவர் வழியில் நடையிடுவதுதான் உலகம் உய்ய வழி என உறுதிபடக் கூறுகிறார்.

"இன்னமும் திருக்குறளுக்கு உரையெழுதிக்கொண்டிருக்கின்றோம்; அல்லது விவாதங்கள் நடத்திக்கொண்டிருக்கின்றோம்! ஆனால், திருக்குறள் நெறியை வாழ்வியல் நெறியாக்கச் சமூகம் முயலவில்லை" என வேதனைப்படுகிறார்.

"திருக்குறளை ஒரு சிறந்த இலக்கியம் என்றே பலர் கருதுகின்றனர். அஃது உண்மையேயானாலும் திருக்குறள் ஓர் இலக்கியம் மட்டுமன்று; திருக்குறள் பல்துறை தழுவிய ஒரு முழு நூல்; அறிவியல் சார்ந்த நூல். திருக்குறளை இதுவரையில் யாரும் அறிவியல் முறையில் அணுகவில்லை" என அங்கலாய்க்கிறார்.

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' - இது திருவள்ளுவர் காலத்தின் உயரிய கோட்பாடு. இக்கோட்பாடு உலகில் இடம் பெற்றால்தான் வெள்ளையர் கறுப்பர், தீண்டத்தக்கவர் தீண்டத்தகாதவர் என்று மனித குலத்தினை ஆட்டிப் படைக்கும் தீமைகள் மாயும்.

கடவுள் அருச்சனைகளால், ஆராதனைகளால், படையல்களால் திருப்தி செய்யத்தக்கவரல்லர் என்ற வள்ளுவத்தின் கொள்கை இடம் பெற்றால்தான் வாழ்க்கையோடியைந்த அறிவியல் சமயம் உலகில் வளரும்.

வாழ்வாங்கு வாழ்தலே சிறந்த வழிபாடு என்ற வள்ளுவத்தின் சமயநெறி வெற்றி பெற்றால்தான் சமுதாயத்தில் புரோகிதர்கள் உலவமாட்டார்கள்; சமய நிறுவனங்கள் தோன்றா; அவற்றுக்குள் ஆதிக்கப் போட்டிகளும் இரா.

வள்ளுவத்தின் சமயம் வெற்றி பெறுமானால் தொண்டு நிறுவனங்கள் எங்கும் தோன்றும்; தொண்டர் குலம் தழைக்கும்; மனித குலமும் தழைக்கும்; எனவே, வள்ளுவத்தின் சமயம் உலகப் பொதுச் சமயமாய் மலரும் நாளே மனித குலத்திற்குப் பொற்காலம் படைக்கும் நன்னாளாகும்!" அடிகளார் கூறியுள்ள இந்நன்னாள் மலர அவர் கூறியுள்ள கருத்துகள் நூல் முழுதும் விரவிக் கிடக்கின்றன.

கொடுமை தீர்க்க மாந்த குலம் போராடவும் வேண்டும் எனும் புரட்சிகரச் சிந்தனை கொண்டவராய் அடிகளார் விளங்கினார். சாணக்கியர், பிளேட்டோ, அரிஸ்டாட்டில் ஆகியோரின் அரசியல் கருத்துகளுடன் வள்ளுவத்தை ஒப்பிட்டு அவர்களுடைய கருத்துகளைவிடத் திருக்குறள் நெறி மேம்பட்டிருப்பதை அடிகளார் நன்கு விளக்கியுள்ளார்.

கார்ல் மார்க்சு, 'மூலதனம்' எனும் நூலை எழுதியுள்ளார். அதில் நன்கு தோய்ந்த அடிகளார், "இந்தியாவின் பொருளாதார முன்னேற்றத்தை விரும்புகின்றவர்கள், வள்ளுவத்தையும் மூலதனத்தையும் ஒருசேரக் கற்றுத் தெளிய வேண்டும். வள்ளுவமும் மார்க்சியமும் காட்டும் புதியதோர் உலகத்தை அமைக்கும் பணியில் போர்க்குணத்துடன் ஈடுபடவேண்டும்; போரிட வேண்டும். சுகவாழ்வுப் போக்கிலிருந்தும் நுகர்பொருள் சந்தைகளிலிருந்தும் வெளியேறிச் சமூகச் சிந்தனையைப் பெற்று,

வயிற்றுக்குச் சோறிட வேண்டும் – இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்

என்னும் பாரதியார் கனவை நனவாக்கப் போரிடவேண்டும்" என எழுச்சி கொள்ளச் செய்கிறார்.

குறட்பாக்களுக்கு அடிகளார் தரும் விளக்கங்கள் எளிய நடையில் பொருட்செறிவுடன் விளங்குகின்றன. "செயல்கள் அனைத்திற்கும் சிந்தனையே அடிப்படை. சிந்தனையின் நிலைக்களன் மனம். நாம் செய்யும் செயல்கள் பலவற்றில் தூய்மை காணவேண்டும் என்று தனித்தனியாய் முயல்வதைவிடச் செயல்கள் அனைத்திற்கும் பொறுப்பாய் உள்ள சிந்தனையைத் திருத்தி, மனத்தை மாசின்றி வைத்துக்கொள்வது நல்லது; சிறந்தது.

இதன்மூலம் நாம் செய்யும் அறங்களும் மிகச்சிறந்து விளங்கும்" - இது, 'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்' என்னும் குறளடிக்கு அடிகளார் தந்துள்ள விளக்கம்.

அடிகளாருடைய எழுத்துநடை தனித்த தன்மையுடையது. எளிய தொடர்கள்; எதிரிலிருந்து பேசுவதுபோன்ற உணர்வைத் தோற்றுவிப்பது; பேச்சும் எழுத்தும் ஒன்றுபோலவே அமைந்த பாங்குடையது. "உன்னுடன் பழகியவர்கள் உனக்குக் கொலையனைய கொடுந்துன்பங்களைச் செய்யும் பொழுதும் செய்பவர்மீது சினவற்க; பகை கொள்ளற்க; யாதொரு தீமையும் செய்யற்க; அந்த நேரத்தில் அவர் செய்த ஏதாவது ஒரு நன்மையை நினைத்துக்கொள். அந்த நினைப்பு, கொடுமை செய்தார்மாட்டு அன்பைக் காட்டத் தூண்டும்; பகையை மாற்றும்; பண்பாடு வளரும். இத்தகு வாழ்வே மானுடத்தின் சிறந்த வாழ்வு; சால்பு மிகுதியும் உடைய வாழ்வு."

நகைச்சுவையே பேச்சு என்றுள்ள இக்காலத்தில் அடிகளார் பேச்சில் நகைச்சுவை மிகமிக அருகியே தோன்றும். ஆனாலும், மக்கள் கூட்டத்தின் சிந்தனையைச் சிறிதும் சிதறவிடாது தம்பால் ஈர்த்துத் தேனில் படிந்த வண்டுபோலத் திளைக்கச்செய்யும் திறமை அவருடைய கருத்துச் செறிவான பேச்சுக்குண்டு.

தக்க எடுத்துக்காட்டுகள் வாயிலாய் அவர் செய்திகளை விளக்குவது ஒரு தனிப்பாங்கு. "அன்பு எப்போதும் உலகத்தைத் தழீஇயது; உலகையே உறவாய்க் கொண்டது. தேநீர் அருந்துபவர்கள் 'கப்-சாசர்' பார்த்திருப்பீர்கள். கப்பில் தேநீர் சூடாய் இருக்கும். சாசரில் ஊற்றினால் சூடு ஆறிவிடும். ஆதலால், சூடான தேநீரைச் சாசரில் ஊற்றிக் குடிப்பது அன்றாடக் காட்சி. சுருங்கியவெல்லாம் துன்புறும்; அழிவுறும். விரிந்த எல்லாம் வளரும்" - அவருடைய எடுத்துக்காட்டு விளக்கத்திற்கு இஃதோர் எடுத்துக்காட்டு.

அடிகளாருடைய பேச்சிலும் எழுத்திலும் வரையறை களாய்ப் பலவற்றைக் காணமுடியும் :

"அறம் என்பது மனித வாழ்வின் தீமையை அகற்றித் துன்பங்களை விலக்கி இன்பத்தைத் தருவது."

"நாகரிகம் என்பது உலகை இடையறாது உய்த்து நடத்தும் ஒரு சிறப்புடைய உணர்வு வழிப்பட்ட ஒழுக்கமாகும்."

"துறவு என்பது ஒரு வாழ்க்கை முறை. எந்த ஒன்றன்பாலும் அளவற்ற ஆசை வைப்பின் தீதாய் முடியும்."

"ஒருவரின் சாதனையை அனுபவித்த ஒருவர் மகிழ்ந்து, தம் உள்ளம் நெகிழ்ந்து மொழியும் சொற்களே புகழ்."

வறுமை, பசிக்கொடுமைபற்றி நினைக்க நேர்ந்தால் அடிகளாருடைய கண்களில் துன்பக் கண்ணீர் மளமளவென வழியும். உணர்ச்சி வயப்பட்டு அவருடைய பேச்சும் அப்போது கலங்கும். அந்த வேளை அந்த ஞானிக்குள்ளும் ஒரு தேம்புதல் உண்டாகும். வறுமை தீரவில்லையெனில் கடவுள்தான் எதற்கு என்றுகூடக் கேட்கிறார். "கடவுள் புரோகிதர்களிடத்தில் சிக்கி விட்டார்; சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் தருவதில்லை. காரணம், பூசாரிக்குப் பணப்பெட்டி நிறைய வேண்டும். அவர் வல்லார் பக்கம் சார்ந்து, மாட்டாதாரை ஒதுக்கி, வல்லாரின் செல்வக் குவிப்புக்குக் கடவுளைக் காட்டி நியாயம் கற்பித்துக் கொடுத்து வளர்கின்றார். கடவுள் நம்பிக்கையுடையோரின் நீதிக்குப் புறம்பான இச்செயல்தானே நாத்திகத்தைத் தோற்று வித்தது? கடவுள் தோன்றிய பிறகு, 'இன்றும் வருவது கொல்லோ?' (வறுமை இன்றும் வருமோ?) என்றால் கடவுள் நெறி எதற்காக?" - கடவுள் பெயரால் ஏய்த்துப் பிழைப்போர்மீது அடிகளார் ஏவுகின்ற வினாக்கணை இது.

சமய நிலையங்களே வழிமாறியுள்ள நிலையையும் சாடுகிறார். "இன்று நம்முடைய சமய நிலையங்களில் சூழ்ந் திருக்கின்ற குறைகளுள் தலையாயது மடைப்பள்ளியின் ஆட்சியேயாகும். ஐம்புலன்கள் ஆர அருளாரமுதத்தை அனுபவிக்க வேண்டிய திருக்கோவில்களில் பொறிகளுக்குத் தீனிபோடும் சூழ்நிலை" - இஃது அடிகளாரின் கவலை.

கள்ளங்கபடமற்ற உள்ளம்; தெளிந்த சிந்தனை; கேட்பவர் காதுகளில் சென்று தைக்கும் எடுப்பான குரல்; உடல் குலுங்கக் 'கடகட' எனச் சிரிக்கும் இயல்பு; காண வருபவர்க்குக் கையில் பழம் கொடுக்கும் தோழமை; கூட்டங்களை முடித்துக்கொண்டு திரும்பும்போது இரவில் வழியில் எங்காவது ஒரு மரத்தடியில், கட்டித் தந்த இட்டலிப் பொட்டலத்தைத் தாமே விரித்து, உடனிருக்கும் நண்பர்களுக்கும் தந்து, தாமும் உண்ணும் எளிமை. குன்றக்குடி அடிகளாரைத் தவிர இத்தகைய துறவி வேறு எவரையேனும் காண முடியுமா? இல்லை. எண்ணித்தான் பார்க்க முடியுமா? வள்ளுவ நெறி, தந்தை பெரியாரின் தன்மானக்

கொள்கை, கார்ல் மார்க்சின் பொருளாதாரச் சிந்தனை ஆகியவற்றின் ஒன்றிணைந்த வார்ப்பாய் அடிகளார் திகழ்ந்து வந்தார்.

ஏறு விடாமல்! ஏறு மென்மேல்!.....
அறிவை விரிவுசெய்; அகண்ட மாக்கு;
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை!...

உலகம் உண்ணஉண்; உடுத்த உடுப்பாய்;
புகல்வேன் உடைமை மக்களுக்குப் பொது;
புவியை நடத்து; பொதுவில் நடத்து;
வானைப் போல மக்களைத் தாவும்
வெள்ள அன்பால், இதனைக்
குள்ள மனிதர்க்கும் கூறடா தோழனே!

எனும் பாவேந்தர் பாரதிதாசனின் பாடல், அடிகளாரின் நெஞ்சம் கவர்ந்த பாடல்களுள் ஒன்று.

புவியைப் பொதுவில் நடத்த வேண்டுமானால் வள்ளுவமே ஆட்சிமுறையாக வேண்டும் என்பதை அடிகளார் அழுத்தந் திருத்தமாய்க் கூறிவந்துள்ளார். "குரு நானக்கின் சீக்கிய வேதம் இன்று பாஞ்சாலத்து மக்களை வழி நடத்தும் மறை; அந்தச் சட்டத்திற்கு முரணில்லாமல்தான் இந்திய அரசியல் சட்டம் செயற்பட வேண்டும். இஃது அவர்கள் பெற்ற வெற்றி. முகம்மதியர்கள் அத்தகைய வெற்றி பெற்றுள்ளார்கள். கிறித்தவர்களும் வெற்றி பெற்றுள்ளார்கள். ஆனால், தமிழ் மக்கள் இழிநிலையில் கற்பித்துக் கூறும் இந்துச் சட்டத்தின்படிதான் இன்று நடத்தப்பட்டு வருகிறார்கள். வள்ளுவத்தின் வழியில் அன்று" என வள்ளுவர்வழியில் நம் ஆட்சிமுறை அமையவேண்டு மென்பதை வலியுறுத்திக் கூறுகிறார்.

இந்நூலில், அவர் கூறியுள்ள கருத்துகள் வள்ளுவ ஆட்சி முறையைத் தோற்றுவிக்கத் துணை செய்யும் எனும் துணிவோடு செயற்படுவோம்!

அடிகளாருடைய அனைத்து எழுத்துகளையும் ஒருசேர ஒரே இடத்தில், ஒரே வேளையில் காணும் வகையில் பதிப்பிக்க முன்வந்துள்ள மணிவாசகர் பதிப்பக உரிமையாளர், பதிப்புச் செம்மல் ச. மெய்யப்பன் அவர்களைத் தமிழுலகு நன்றியுடன் பாராட்டக் கடமைப்பட்டுள்ளது. மேலை நாட்டுப் பதிப்புகளைப் போல அடிகளாரின் நூல்களை அழகிய கட்டமைப்புடன் பேழையினுள்ளே தொகுதி-1, தொகுதி-2... எனப் பல தொகுதி

களில் காணுகின்ற வாய்ப்பினை உருவாக்கியுள்ள திரு.மெய்யப்பன் அவர்களை உளமாரப் போற்றி மகிழ்கிறேன்.

பதிப்பாசிரியர் குழு உறுப்பினர்கள் முனைவர் தெ.முருகசாமி, நா. சுப்பிரமணியம், குன்றக்குடி பெரியபெருமாள், மரு.பரமகுரு, க. கதிரேசன் ஆகியோர் நற்பணியாற்றியுள்ளனர்; நிறைந்த பாராட்டுகள்.

மணி மாலையின் முதல் மணி ஒளி பெறுவோம்! நலமடைவோம்!

நூல் ஆக்கம்	தவத்திரு பொன்னம்பல அடிகளார் (பதிப்பாசிரியர்)
வகைமை	கட்டுரை
வெளியீடு	மணிவாசகர் பதிப்பகம், சென்னை.(1999)

6

பாவேந்தர் கனவு

தமிழே,

இருளினை வறுமை நோயை
இடறுவேன் என்னு டல்மேல்
உருள்கின்ற பகைக்குன் றைநான்
ஒருவனே எதிர்ப்பேன்! நீயோ
கருமான்செய் படையின் வீடு
நான் அங்கோர் மறவன்... ....[1]

எனப் பாடியுள்ளார், பாவேந்தர் பாரதிதாசனார். செம்மாந்த இப்பாடலடிக்கு இன்று சுட்டிக் காட்ட ஏற்றவராய் விளங்கிவருகின்ற நம் தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் மாண்புமிகு மு. தமிழ்க்குடிமகனார் அவர்கள்,

அதிர்ந்தெழுக! தமிழுக்குத்
துறைதோறும் துறைதோறும்
அழகு காப்பாய்!
இதுதான்நீ செயத்தக்க
எப்பணிக்கும் முதற்பணியாம்
எழுக நன்றே[2]

எனப் பாவேந்தர் வழி நின்று தம் எழுச்சி உரைகளால் தமிழ் மக்களை நாளும் நற்றமிழால் ஊக்குவித்து வருகிறார்.

துறைதோறும் துறைதோறும் தமிழுக்கு அழகு சேர்க்கும் பணிகளுள் ஒன்றாய்க் கடைகளில் உள்ள பெயர்ப்பலகைகள் எளிய இனிய தூய தமிழில் அமைய வேண்டுமென்பதற்குத் தமிழ்க்குடிமகனார் கூறியுள்ள கருத்துகளின் தொகுப்பே இவ்வரிய நூல்.

"பாவேந்தர் பாடல்களில் நயம் காணவும், அவற்றை மேடைகளில் திறனாய்ந்து கேட்பவர்க்குச் சுவையூட்டவும் மட்டும்

1. பாரதிதாசன், அழகின் சிரிப்பு, 'தமிழ்'
2. பாரதிதாசன், தமிழியக்கம், பாடல் 3

முயல்வது பாவேந்தர்க்குச் சிறப்பளிப்பதாகாது. அவரது கனவுகளை நனவாக்க வேண்டும்; அவரது இலட்சியங்கள் செயற்படுத்தப்படவேண்டும்" என மாண்புமிகு தமிழக முதல்வர் முனைவர் கலைஞர் அவர்கள் பேசியிருப்பதைச் சுட்டிக்காட்டி, பாவேந்தர் கனவுகளுள் ஒன்றான, "அறிவிப்புப்பலகையெலாம் அருந்தமிழ்ச்சொல் ஆக்குவதேயன்றி, அச்சொல் குறையற்ற தொடராய், குற்றமற்ற சொல்லாய் அமையுமாயின் மறுவற்றுத் திகழாளோ செந்தமிழ்த்தாய்" என்பதை நனவாக்கத் தூண்டுவதே இந்நூலின் நோக்கம்.

"தணிப்பரிதாம் துன்பமிது, தமிழகத்தின் தமிழ்த்தெருவில் தமிழ்தான் இல்லை" என்ற பாவேந்தரின் ஏக்கத்தைக் களையவும், "சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்" எனும் பாரதியின் வாக்கினை நிறைவேற்றவும் இந்நூல் எழுந்துள்ளது.

மாண்புமிகு தமிழ்க்குடிமகனார் பெயர்ப்பலகைகள் தமிழில் அமைய வேண்டுமென்பதுபற்றி எழுதிய கட்டுரையைத் 'தினமணி' நாளிதழ் வெளியிட்டபோது அதை ஏற்றுப் போற்றியும், திருத்தம் சொல்லியும், மறுத்துரைத்தும் தினமணியில் வெளிவந்த 'வாசகர் கடித'ங்களைத் தொகுத்து, அவற்றுள் வரவேற்றுச் சொல்லிய கருத்துகளுக்கு மேலும் வலிமை சேர்க்கும் வகையில் கருத்துகளை இணைத்தும், திருத்தம் சொல்லியிருப்போரின் கருத்துகளுள் ஏற்கத் தகுந்தவற்றை ஏற்றும், மறுத்துளோர் தருக்கங்களின் பொருந்தாத் தன்மையைத் தக்க சான்றுகளுடன் புலப்படுத்தியும், தாம் கொண்ட கருத்தின் வலிமையையும் இன்றியமையாத் தன்மையையும் மிக அருமையாய் ஆசிரியர் இந்நூலில் நிலை நாட்டியுள்ளார்.

தமிழ் வளர்ச்சிக்குப் பல பணிகள் உள்ளன. அவற்றுள் பெயர்ப்பலகையைத் தமிழில் அமைக்க வேண்டுமென்பது ஒன்று. அந்த ஒன்றன் விளக்கமாகவே பேரவைத் தலைவரின் கடிதம் அமைந்துள்ளது. அதை மறந்து, செய்தியை நேரடியாய் எதிர் கொள்ளாமல் அப்பாற்பட்டுப் பொருந்தாப் போக்கிலே எழுதியுள்ளோர்க்கு, அவர்களும் உளங்கொள்ளுமாறு பொருத்த மான மறுமொழிகளைத் தமிழ்க்குடிமகனார் உரைத்திருப்பது நூலின் தனிச் சிறப்பாகும்.

" 'தமிழை அடித்தளத்திலேயே உலுக்கிக் கீழே தள்ளிவிட முயலும் செயற்பாடுகளை எதிர்த்துச் செயற்பட்டாக வேண்டும்' என்பது ஏற்புடைய கருத்து. ஆனால், இதைச் செய்துவிட்டுத்தான்

பெயர்ப்பலகைக்கு வரவேண்டுமென்பதில்லை. இது ஒரு பணி; அது ஒரு பணி; எல்லாவற்றையும் கவனித்து ஆங்காங்கே திருத்தம் செய்வது எங்கள் பணி" எனப் பொறுப்புடனும் அழுத்தத்துடனும் அவர் கூறியிருப்பதை மறுப்பாளர்கள் உணரவேண்டும்.

"எவ்வளவு பெரிய பதவியில் இருந்தாலும் கொள்கையை விடாமலும், ஏந்திய இலட்சியத்தை இடையில் விட்டுவிடாமலும் வாழ்வதே நெறி என்று கருதுபவன் நான்'' எனத் தமிழ்க் குடிமகனார் கூறுவதன்வழி அவர், 'நின்ற சொல்லர்' என்ற நற்றிணைத் தொடருக்கு உயிரூட்டியுள்ளார் எனலாம்.

ஓதலுக் கெல்லாம் மறுப்பா என்னருமை நாடே
உணர்வுகொள் உள்ளத்தில் உடலுயிரில் நீயே

என்பது பாவேந்தர் பாடல். சொல்வதற்கெல்லாம் மறுப்பா? தமிழில் எழுதுங்கள் என்று சொன்னால் எழுதுவதற்கு எவ்வெவ்வாறு முயலலாம் என்று உடன்பாட்டு முறையில் எண்ணுவதை விடுத்து, இருக்கும் சில சிக்கல்களைத் தேடிக் கொணர்ந்து எதிர்மறை முறையில் எண்ணுவதே சிலருக்கு வழக்கமாகிவிட்டது. ஏதோ அனைத்தையும் தமிழில் செய்து விட்டதுபோலவும், இவர்கள் சொல்லும் இரண்டொரு சிக்கல்கள் மட்டுமே இன்னும் தீர்க்கப்படாமல் இருப்பன போலவும், இவற்றுக்கென்ன வழி என்று கேட்பதுபோலவும் சிலர் வம்பு கலந்து பேசுவது வழக்கமாகிவிட்டது. செய்ய வேண்டியவற்றை யெல்லாம் விரைந்து செய்வோம்! எதிர்நேரும் சிக்கல்களை ஏற்ற வகையில் தீர்ப்போம் எனும் நம்பிக்கையை நாட்டவர்க்கு ஊட்டுவதற்கே இந்நூல் எழுந்துளது!

"பலரும் தாங்கள் செய்வது தவறு என்று உணராமலேயே செய்கின்றனர். வாணிகர்கள்கூட எடுத்துச் சொன்னால் நல்ல தமிழில் பலகையை அமைத்துக்கொள்வார்கள். இதுவரை பிறர்க்கு எடுத்துச் சொல்லவில்லை; எடுத்துச் சொல்லாமையே குற்றம்" என்பதைச் சுட்டி, இனியேனும் "எடுத்துச் சொல்வோம்; தெருவெங்கும் தமிழ் மிளிரச் செய்வோம்" என்ற உள்ள உந்துதலை ஆசிரியர் ஏற்படுத்தியுள்ளார்.

பாவேந்தர் ஒரு தமிழ்க் கனவு காண்கிறார். எங்கும் மகிழ்ச்சிக் குரல். ஆண்களும் பெண்களும் பெருந்திரளாய்ப் பரந்த வெளியில் கூடியுள்ளனர். தமிழ் வளர்க்கக் கோடி கோடியாய்ப் பொற்காசு குவிகிறது. கூட்டத்தில் ஒருவர், 'தமிழ் நம் உயிர் அன்றோ?' என்கிறார். வையமே கிழியும்படியாய் 'ஆம்ஆம்' என்கின்றனர் அனைவரும். 'தமிழர் ஒற்றுமை' என்ற வினாக்குறியை ஒருவர்

எழுப்புகிறார். 'அது நமக்குத் தேனன்றோ?' என்ற இனிப்பு மொழி எங்கும் எதிரொலிக்கிறது. சிங்கப் புலவர்களை ஒன்றுசேர்த்துச் சங்கம் அமைக்கின்றனர், தமிழ் மக்கள். கவிஞர்கள் கற்கண்டு மொழியில் வாழ்வியல் நூல்களும் அறிவியல் நூல்களும் வரைந்து குவிக்கின்றனர்; காற்றில் தமிழ்! இசை மேடையில் தமிழ்! எங்கும் தமிழ், எதிலும் தமிழ்! இன்பத்தில் திளைத்திருக்கும் இவ்வேளையில் அக்கனவின் இடையே,

காதல் ததும்பும் கண்ணா என்தனைக்
கோதைஒ ருத்தி கொச்சைத் தமிழால்
புகழ்ந்தாள் என்று பொறாமல் சோர்ந்து
வீழ்ந்தான்! உடனே திடுக்கென விழித்தேன்
அந்தோ! அந்தோ! பழைய
நைந்த தமிழரொடு நானிருந் தேனே[1]

என்று பாடுகிறார்.

தமிழர்கள், மொழியை உயிரென ஓம்ப வேண்டும்! ஒன்று பட்டுச் செயலாற்ற வேண்டும்! கொச்சைத் தமிழில் பேசும் கொடுமை ஒழியவேண்டும் என்பன பாவேந்தரின் உள்ள உணர்வுகள். இவை கனவுகளாய் இருக்கின்றனவே தவிர இன்னும் நனவாகவில்லை என்பதைத்தான் தமிழ்க்குடிமகனார் தம் கட்டுரை வாயிலாய் எடுத்துரைத்து, இனியேனும் ஒன்றுபட்டு நலம் சேர்ப்போம் வாரீர் என அழைக்கிறார்!

அடக்கமும் அமைதியும் கொண்ட மு.வ. அவர்களே, நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் இல்லாதவர்கள் கடையைப் புறக்கணிக்கச் சொல்லியிருப்பதைச் சுட்டிக்காட்டி, "எங்கள் உணர்ச்சிகளை மதியுங்கள்; தமிழ்ப்பற்றை வாழ்த்துங்கள்; இந்தச் செயல் முயற்சியை வரவேற்றுப் பயன்படுத்துங்கள்" எனத் தமிழ் மக்களை வேண்டிக்கொள்கிறார். தமிழர்கள் இவ்வேண்டு கோளை வரவேற்று நிறைவேற்றுவர் என்பது உறுதி. வேண்டு மென்றே குறை சொல்வோர் அங்கொருவர் இங்கொருவராய் இருக்கவே செய்வர். பற்றாளர்களின் தொடர்ந்த செயற்பாடு புறத்தே நிற்போரையும் இழுத்தணைத்து ஒன்றிணைக்கும் என்ற நம்பிக்கையுடன் பாடுபட இந்நூல் ஓர் ஒளி விளக்காய் வழிகாட்டுகிறது.

"பாவேந்தர் நூற்றாண்டு விழா நிறைவுக்குள் விளம்பரப் பலகைகள் யாவும் இனிய தமிழில், எளிய தமிழில், நல்ல தமிழில் அமைந்து நாமெல்லாம் மகிழும் வகை செய்வதற்கு அனைவரும்

1. பாரதிதாசன் கவிதைகள், தொகுதி-1, தமிழ்க்கனவு

முன்வாருங்கள்" எனும் தமிழ்க்குடிமகனாரின் அழைப்பையேற்று இந்த உயர் பணியை உயிர்ப்பணியாய்க் கொள்வோம் என்று அனைவரும் உறுதி பூணுவோம்.

'தமிழியக்கத்'தில், பாவேந்தர் வாணிகர்க்குக் கூறியுள்ள வற்றை நடைமுறைப்படுத்துதற்கான வழிமுறைகளை மட்டுமே இந்நூல் விரித்துரைக்கிறது. மங்கையர், முதியோர், அரசியல் சீர் வாய்ந்தோர், புலவர்கள் இன்னும் பலரும் தமிழ் வளர்ச்சிக்கு என்ன செய்யவேண்டும் என்பதையும் பாவேந்தர் பாடியுள்ளார். வாணிகர்க்கென ஒரு நூல் வகுத்ததுபோலவே பிறர் ஒவ்வொருவரும் செய்ய வேண்டியவைபற்றித் தமிழ்க்குடிமகனார் தனித்தனி நூல் வெளியிட வேண்டுமென்பது தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு.

இவ்வெதிர்பார்ப்பினை விரைவில் நிறைவேற்றித் தர அவரை அன்புடன் வேண்டுவோம்.

நூல் ஆக்கம்	முனைவர் மு. தமிழ்க்குடிமகன்
வகைமை	கட்டுரை
வெளியீடு	திருமகள் நிலையம், சென்னை. (1990)

7

யாமறிந்த புலவரிலே...

இலக்கியச்சுடர் த. இராமலிங்கம் எழுதியுள்ள, 'யாமறிந்த புலவரிலே...' என்னும் இந்நூலைப் படித்து முடித்ததும் என் உள்ளத்தில் தோன்றிய எண்ணங்களை உணர்ச்சிகளை உங்களோடு பகிர்ந்துகொள்ள விழைகிறேன்.

பாரதியார்

பாரதியார், 'காலம் தந்த கவிஞர்'. அண்டிப் பிழைக்க வந்த ஆங்கிலேயர்களால் இந்நாட்டு மக்கள் ஆட்டிப்படைக்கப்பட்டு, உரிமையிழந்து உழன்றபோது உரிமைக்குப் போராடக் குரல் கொடுத்தவர், பாரதியார். கொடுமை ஒன்று தலைவிரித்தாடும் போது அதனை மாய்க்க ஒரு சக்தி தோன்றியே தீரும் என்பதை,

> மக்கள் தொகுதி எக்குறை யாலே
> மிக்க துன்பம் மேவு கின்றதோ
> அக்குறை தீர்க்கும் ஆற்றல்வாய்ந் தோனைச்
> சிக்கென ஈன்று சீர்பெறல் இயற்கையாம்

எனப் பாவேந்தர் பாடுவார். ஜாரின் கொடுமையைத் தாங்காத உருசியா இலெனினை ஈன்றெடுத்ததுவும், செல்வச் சில்லோர் நல்வாழ்க்கைக்காக எல்லா மக்களும் வாட்டி வதைக்கப்பட்டபோது, 'குடிகள் குடிகளுக்காகவே' என்று குரல் கொடுக்க விக்தர் ஹியூகோ பிரான்சில் தோன்றியதுவும் இயற்கையே என்கிறார், பாவேந்தர். அவ்வகையில்,

> தமிழகம் தமிழுக்குத் தகும்உயர் வளிக்கும்
> தலைவனை எண்ணித் தவங்கி டக்கையில்
> இலகு பாரதிப் புலவன் தோன்றினான்

என்றும் அவர் குறிப்பிடுவார். மூவேந்தர்களாலும், முழுதுணர்ந்த புலவர்களாலும் வளர்க்கப்பட்ட தமிழ், உரிமையிழந்து, உள்ள பெருமையையும் இழந்து நின்ற நேரத்தில், அதனைத் தம் தோளேந்திக் காத்த சிறப்பு பாரதியாரையே சாரும் என உளமுருகிப் பாராட்டுகிறார், பாவேந்தர்.

வாளேந்தும் மன்னர்களும், மானியங்கொள்
புலவர்களும், மகிழ்வாய் அந்நாள்,
தாளேந்திக் காத்தநறும் தமிழ்மொழியை,
தாய்மொழியை, உயிரை; இந்த
நாளேந்திக் காக்குநர்யார்? நண்ணுநர் யார்?என
அயலார் நகைக்கும் போழ்தில்,
தோளேந்திக் காத்தஎழில் சுப்பிரமணிய
பாரதியார் நாமம் வாழ்க

என்பது பாவேந்தர் வாக்கு. 'தமிழின் புகழைக் காக்க வந்த கவியரசன்' எனத் தம்மையே பாரதியார் சொல்ல வேண்டிய தருணத்தில் சொன்னதுமுண்டு.

புவியனைத்தும் போற்றிடவான் புகழ்படைத்த
தமிழ்மொழியைப் புகழி லேற்றும்
கவியரசர் தமிழ்நாட்டுக் கில்லையெனும்
வசைஎன்னால் கழிந்த தன்றே!

எனப் புவியரசனாகிய எட்டயபுர மன்னருக்குத் தாம் எழுதிய கடிதத்தில் கவியரசர் பாரதி குறிப்பிட்டிருக்கக் காண்கிறோம்!

முப்பெரும் புலவர்கள்

சங்கம் எனும் தொட்டிலில் வளர்ந்து, மூவேந்தர்களால் வளர்க்கப்பட்டுச் சிறந்திருந்த தமிழ், தன் ஆட்சியுரிமையை இழந்து அடிமைப்பட்டுக் கிடந்த நேரத்தில், அதன் முன்னைப் பெருமை வந்து சேர்வதோடு இன்னும் புதுமையுற்று விளங்க வேண்டுமெனத் தளராது பாடுபட்டவர், பாரதியார். தமிழில் ஆயிரக்கணக்கில் புலவர்கள் இருந்தபோதும் பாரதியாரின் உளங்கவர்ந்தவர்களாய் மூவரே முன் நிற்கின்றனர்.

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததிலை;
உண்மை,வெறும் புகழ்ச்சி யில்லை....

என்று பாடுகிறார், பாரதியார். தமிழ்க்கவிஞர்கள் மட்டுமன்று; உலகக் கவிஞர்களுள்ளே கம்பர், திருவள்ளுவர், இளங்கோவடிகள் எனும் மூவருக்கு ஒப்பானவர் இலர் என்பது பாரதியின் முடிந்த முடிபு.

ஆத்திசூடி

தமிழ் இலக்கிய வரலாற்றில் இடைக்காலத்தில் வாழ்ந்தவராய்க் கருதப்பெறும் ஔவையார் பல அறநூல்களை இயற்றியுள்ளார். அவற்றுள் ஒன்று, ஆத்திசூடி. அகர வரிசையில் உயிர், உயிர் மெய்யெழுத்துகளை முதலெழுத்துகளாய்க்கொண்டு,

உறுதிப் பொருள்களை எளிய இருசீர் ஓரடிச் சூத்திரங்களால் இந்நூல் உணர்த்துகிறது. ஓர் அடிக்கு ஒரு கருத்தாய் 109 அடிகளைக் கொண்டுள்ளது. இந்நூல். 'அரிய பெரிய நீதிகளைச் சுருங்கக் கூறுவதான இவ்வளவு சிறிய நூல் வேறெம்மொழியிலும் காணுதல் அரிது' என்பர், அறிஞர். அதனால்தான்,

ஔவைக் கிழவி நம்கிழவி
அமிழ்தின் இனிய தமிழ்க்கிழவி
செம்மை நெறிகள் பற்பலவும்
தெரியக் காட்டும் பழங்கிழவி

என, கவிமணி தேசிக விநாயகனார் ஔவைப் பாட்டியைப் போற்றிக் குழந்தைகட்கு அறிமுகம் செய்து வைக்கிறார்.

மணிக்கோவை

நண்பர் இராமலிங்கம் இந்நூலை ஆக்கியிருப்பதில் ஒரு தனிச்சிறப்பு உள்ளது; பாரதியின் பாடற்சரட்டில் கம்பர், திருவள்ளுவர், இளங்கோ என்னும் மும்மணிகளையும் கோத்து ஓர் அழகிய மணிக்கோவையாய்த் தந்திருக்கிறார். பாரதியின் ஆத்திசூடி அடி ஒவ்வொன்றை ஒரு கட்டுரையின் தலைப்பாய்க் கொண்டு, அத்தலைப்புப் பொருளோடு இக்கவிஞர்களின் கருத்தை இணைத்துக் காட்டியிருப்பது அருமையிலும் அருமை. மணிக்கோவை செய்வோர் மணிகளை அடுக்குவதில் ஓர் ஒழுங்கு முறையைக் கையாள வேண்டும். இல்லையேல், தோற்ற அழகு குறையும். திரு. இராமலிங்கம் மும்மணிகளை 5, 10, 5 என அடுக்கி அணியமைப்பில் சமச்சீர் முறையைத் திறம்படக் கையாண்டுள்ளார். பாரதியாம் சரடு 1, கம்பர் மணி 5, திருவள்ளுவர் மணி 10, இளங்கோ மணி 5 என 21 (சரடு 1, மணி 20) கட்டுரைகளை இந்நூல் கொண்டுள்ளது.

பாரதியின் 5 ஆத்திசூடிகளுக்குக் கம்பராமாயணத்திலிருந்தும், 10 ஆத்திசூடிகளுக்குத் திருக்குறளிலிருந்தும், 5 ஆத்திசூடிகளுக்குச் சிலப்பதிகாரத்திலிருந்தும் செய்திகளை எடுத்து விளக்கம் தந்துள்ளார்.

பாரதியின் ஒவ்வோர் ஆத்திசூடி அடிக்கும், பாரதியின் பாடல்களில் பயின்றுவரும் கருத்துகளைத் தந்திருப்பதால் 21 கட்டுரைகளிலும் பாரதியின் கருத்துகளைப் பரந்த அளவில் காண முடிகிறது. பாரதியின் ஆத்திசூடிக்குப் பாரதியின் பாடல்களிலிருந்தே கிடைக்கும் விளக்கமும், கம்பராமாயணம், திருக்குறள், சிலப்பதிகாரம் ஆகிய காப்பியங்கள்வழி கிடைக்கும்

விளக்கங்களும் இணைந்தனவாய்க் கட்டுரைகள் வரையப் பட்டிருக்கின்றன. இந்நான்கு புலவர்களையும் திரு.இராமலிங்கம் ஊன்றிக் கற்று, கூர்ந்து நோக்கியிருப்பதை நூல் நமக்குத் தெளிவாய் உணர்த்துகிறது.

கம்பனில் ஆத்திசூடி

'அச்சம் தவிர்'[1] எனும் பாரதியின் புதிய ஆத்திசூடிக்குக் கம்பனில் பிரகலாதனும் இரணியனும் எடுத்துக்காட்டப்பட் டுள்ளனர். பிரகலாதனின் அச்சமற்ற தன்மை அவனை உயர்ந்தோ னாக்கியது; இரணியனின் அச்சமற்ற தன்மையோ அவனுக்கு மரணத்தைத் தந்தது. என்றாலும், இருவருமே, 'அச்சம் தவிர்'என்ற தொடருக்கு மிகவும் பொருந்தியவர்களாகின்றனர்.

சீதையைக் காக்க இராவணனை எதிர்த்து வீழ்ந்த சடாயு, 'தீயோர்க்கு அஞ்சேல்'[2] எனும் மொழிக்கு விளக்கமாகிறான். சடாயு வீழ்ந்தான் என்றாலும் தீயோனை, தீமையை இறுதிவரை உறுதியாய் நின்று எதிர்த்தான். அறத்தினால் வீழ்ச்சியே நேரிட்டாலும் அது மாட்சியேயாம்.

பதவிக்காக எதையும் செய்யத் துணியும் உலகில், தனக்கு வந்த பதவியை ஏற்காது, அப்பதவிக்குரியவன் அதனை அடையும் வரை, இரவும் பகலும் தவம் புரிந்த பரதன், 'தவத்தினை நிதம்புரி'[3] என்னும் தொடருக்குப் பெருமை சேர்க்கிறான்.

நெஞ்சில் பட்டதை எதற்கும், எந்நிலையிலும் அஞ்சாமல் பேசுவது, 'நேர்படப் பேசு'[4]தலாம். மாரீசனும் வீடணனும் இராவணனிடம் நேர்படப் பேசினர். வாலி இராமனிடம் நேர்படப் பேசினான்.

சினம் மனிதனுடன் பிறந்தது. அது சேர்ந்தாரைக் கொல்லி என்றாலும் சினம் கொள்ள வேண்டிய இடத்துக் கொள்ளத்தான் வேண்டும். 'ரௌத்திரம் பழகு'[5] என்பதை இலக்குவனிட மிருந்துதான் கற்றுக்கொள்ள வேண்டுமென்ற அளவுக்குச் சினத்தின் எல்லைக்கோட்டுக்கே செல்லுகின்ற இலக்குவனை, இராமன் படிப்படியாய்ப் பக்குவப்படுத்தியதால் கனிந்தவனா கிறான்.

---

1. பாரதியார், புதிய ஆத்திசூடி 1
2. மேலது, 45
3. மேலது, 53
4. மேலது, 61
5. மேலது, 95

திருவள்ளுவரில் ஆத்திசூடி

கற்க வேண்டியவற்றைக் கற்ற பின்னர் மக்களை நேசிக்கும் பண்புடன் வாழ்தலே, 'கற்றது ஒழுகு'[1]தல் ஆம்.

காலத்தைக் கணித்து, சரியான காலத்தில் செயலாற்றுவது முன்னேற்றத்திற்கு அடிப்படை. உரிய வாய்ப்பு நேரும்போது நழுவ விடாது பற்றிக்கொள்ள வேண்டும். சரியான நேரத்தை உணர்ந்து பற்றிக்கொள்ளாவிடில் அது நமக்கு இழப்பாகும். காலம் அறிதலோடு காலத்தை அழியவிடவும் கூடாது என்பதை, 'காலம் அழியேல்'[2] தெளிவாக்குகிறது.

மனிதன் உயர்வு பெற வேண்டும்; உயர்ந்தபின் அந்நிலையைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். சுயநலமில்லாச் சிந்தனையும், நெறி பிறழாத செயலும், சோர்விலாத உழைப்பும், ஆணவமிலாத அடக்கமுமே, 'குன்றென நிமிர்ந்து நில்'[3] என்ற மொழியை உண்மையாக்க அமையவேண்டிய அடிப்படை ஆகும்.

செய்கின்ற செயலுக்கு நோக்கம் வேண்டும். அறிவின் துணை கொண்டு காரணங்களையும் விளைவுகளையும் முறையாய் ஆராய்ந்து முடிவெடுத்த பின்னர், கலக்கம் எதுவுமின்றிச் 'செய்வது துணிந்து செய்'[4]ய வேண்டும்.

மக்கள் ஒன்றுபட்டு வாழவேண்டும். சுயநலமும் ஆணவமும் ஒற்றுமையைக் குலைக்கும். உள்ளும் புறமும் ஆராய்ந்து நட்புக்கொள்ள வேண்டும். நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதில் வெற்றி பெற்றுவிட்டால், 'சேர்க்கை அழியேல்'[5] என்பதற்கு இடமே இல்லை.

புறங்கூறும் பழக்கத்துடன் உயிர் வாழ்வதைவிட இறந்து போதல் உயர்வினைத் தரும் என்கிறார், திருவள்ளுவர். கண்டிக்கப்பட வேண்டிய தீமைகளுள் எல்லாம் மிக வன்மையாய்க் கண்டிக்கப்பட வேண்டியது புறங்கூறுதலே! எனவே, 'தூற்றுதல் ஒழி'[6]க்கப்பட வேண்டும்.

'தேசத்தைக் காத்தல் செய்'[7] என்பது, பாரதி நாட்டு விடுதலையைக் கருத்தில் கொண்டு பாடியதாகும். அவ்வாறு

1. பாரதியார், புதிய ஆத்திசூடி 13
2. மேலது, 14
3. மேலது, 17
4. மேலது, 31
5. மேலது, 32
6. மேலது, 47
7. மேலது, 49

விடுதலை பெற்ற நாட்டை எங்ஙனம் வளப்படுத்திக் காக்க வேண்டும் என்றும் பாடுகிறான். நாடா வளத்ததாய் நாடு இருக்க வேண்டுமானால் குறையாத விளைபொருளும், பண்பார்ந்த மக்களும், ஏற்றத்தாழ்விலாப் பொருள் வளமும் வேண்டும் என்கிறார், திருவள்ளுவர். அங்ஙனம், 'தேசத்தைக் காத்தல் செய்'[1]தல் நம் கடமையாகும்.

நினைத்தது அனைத்துமே நிறைவேறிடா; சில வேளைகளில் தோல்வியும் நேரலாம்; அத்'தோல்வியில் கலங்கேல்.'[2] உறுதியான நெஞ்சம் நினைத்ததைச் சாதிக்கிறது. திண்ணிய நெஞ்சம், தோல்விகளைச் சரியான கோணத்தில் எதிர்கொள்ள வைக்குமானால், தெளிந்த நல்லறிவு எண்ணியதை நிறைவேற்றி விடுகிறது.

'விதையினைத் தெரிந்திடு'[3] ; அப்போதுதான் நல்ல விளைவு கிடைக்கும். அது போலவே, எந்தச் செயலும் அதற்குரியவர்களைத் தேர்ந்து தெளிந்துகொண்டால்தான் வெற்றி பெறும்.

இளங்கோவில் ஆத்திசூடி

கொடுமையைக் கண்டு ஒதுங்கிவிடாமல், செய்தவள் அரசனே ஆயினும் அதிகாரத்துக்கு அஞ்சி நடுங்கிடாமல், இறுதிவரை முயன்று நீதிபெற்ற கண்ணகி, 'கொடுமையை எதிர்த்து நில்'[4] எனும் பாரதியின் ஆத்திசூடி அடிக்குக் காட்டாய் அமைகிறாள்.

சொல்வதை ஆராய்ந்து சொல்லாவிட்டால் விளைவுகள் தீயனவாகிவிடும். பாண்டியன் நெடுஞ்செழியனின் தெளியாச் சொல் இழைத்த கொடுமைகளை எண்ணும்போது 'சொல்வது தெளிந்து சொல்'[5] என்பதன் ஆழம் புரிகின்றது.

பழமை என்பதாலேயே ஒன்றைப் பின்பற்றவேண்டும் என்பதில்லை. ஆராய்ந்து, நல்லதாயின் கொள்வதும், அல்லதாயின் தள்ளுவதுமான சிந்தனை வேண்டும். தொன்றுதொட்டு வந்த மரபை அப்படியே பின்பற்ற வேண்டும் என்பதை மறுத்து,

---

1. பாரதியார், புதிய ஆத்திசூடி 49
2. மேலது, 52
3. மேலது, 105
4. மேலது, 22
5. மேலது, 34

'தொன்மைக்கு அஞ்சேல்'[1] என்று தன் மனம் சொன்ன வழி நடந்ததால் பரத்தையர் குலத்தில் தோன்றிய மாதவி பத்தினியாக முடிந்தது.

நற்பண்புகள் நிறையப்பெற்ற கோவலன், புலனின்பத்திற்கு அடிமையாகித் தன் மனை மறந்த ஒரு செயல், இறுதியில் அவன் உயிரே பறிபோவதற்குக் காரணம் ஆயிற்று என்பதை எண்ணும்போது, 'பீழைக் கிடங்கொடேல்'[2] என்னும் மொழியின் பொருள் பொதிந்த தன்மை புலனாகிறது.

தான் ஆராயாது வழங்கிய தீர்ப்பால் வளையாத செங்கோல் வளைந்தது என்பதை உணர்ந்ததும் உடனே உயிர் நீத்தான், பாண்டியன் நெடுஞ்செழியன்; 'மானம் போற்று'[3] எனும் மணிமொழிக்கு இலக்கியமாகவும் அமைந்தான்.

இவ்வாறு பாரதி ஆத்திசூடியின் இருபது தொடர்களுக்கு விரிவுரையாகவும் ஆய்வுரையாகவும் கட்டுரைகள் அமைந்து, நூலை அணி செய்கின்றன. மாமண்டபத்தின் அழகிய நுழைவாயில் போல இக்கருத்துக் கோட்டத்தின் நுழைவாயிலாய், 'யாமறிந்த புலவரிலே...' என்னும் முதல் கட்டுரை அமைந்திருக்கிறது.

பொன்மொழித் தொகுப்பு

இந்நூலைக் கட்டுரைத் தொகுப்பு என்பதைவிடத் திரு. இராமலிங்கம் அவர்களின் பொன்மொழித் தொகுப்பு என்று கூறுவது பொருத்தமாய் இருக்கும். அவருடைய இலக்கிய, அரசியல், சமுதாயத் தொண்டுகளில் நேர்ந்த பட்டறிவினால் அவருள்ளத்தே அவ்வப்போது அரும்பி, முகிழ்த்து, முதிர்ந்து வெளிப்போந்த சிறந்த மணித்தொடர்களை அவர் இந்நூலுள் தொகுத்துத் தந்திருக்கிறார்.

விதை, வேர் விடுவதற்கு முன்னாலேயே எப்படி விழுது விடும்? (பக். 13)

உள்ள உறுதி, சிந்தனைத் தெளிவு ஆகிய இரண்டும் இருப்பவனை அச்சம் நெருங்குவதில்லை. (பக். 21)

மனம் சலனம் அடைந்தால் மதியை இருள் மூடிவிடும். (பக். 35)

---

1. பாரதியார், புதிய ஆத்திசூடி 51
2. மேலது, 68
3. மேலது, 76

தான் செய்தது சரியன்று என்பதை உணர்ந்துவிட்ட ஒருவனை, மேலும் குற்றம் சொல்லிக்கொண்டிருப்பது பண்பன்று அன்றோ? (பக். 48)

கல்வி, கடந்த கால வரலாற்றைச் சொல்கிறது; நிகழ்கால அறிவியலைக் காட்டுகிறது; எதிர்கால நம்பிக்கையை உணர்த்துகிறது. (பக். 63)

பொறுமை கொள்ளவேண்டும்; ஆனால், ஒதுங்கிவிடக்கூடாது.
காத்திருக்க வேண்டும்; ஆனால், தூங்கிவிடக் கூடாது.
பக்குவம் பெறவேண்டும்; ஆனால், கோழையாகிவிடக் கூடாது.
காலத்தை உணரவேண்டும்; அதைத் தவற விட்டுவிடக் கூடாது.
(பக். 73)

நட்பு என்பது ஒரு தவம்; தன்னைக் கரைத்துக் கொள்பவனுக்கே அது வாய்க்கிறது. (பக். 93)

பொருள் நமக்காக இருக்கிறது; பொருளுக்காக நாம் இல்லை. பொருள் நமக்குள் இருக்கலாம்; பொருளுக்குள் நாம் இருக்கக் கூடாது. (பக். 98)

செயல் இல்லாத் திட்டம் ஏட்டுச்சுரைக்காய்; திட்டம் இல்லாச் செயல் சேற்றுச் சுரைக்காய். (பக். 116)

வீழ்ந்தாலும் அருவியாய் விழ வேண்டும்; ஓடினாலும் ஆறாய் ஓட வேண்டும். (பக். 121)

நடக்க வேண்டும் என்று ஆசைப்பட்டுவிட்ட குழந்தை, வீழ்ந்து காயப்படுவதைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. (பக். 123)

பிறரை வெல்பவன் வீரன் என்றால் தன்னை வெல்பவனே மாவீரன் ஆகிறான். (பக். 156)

இவ்வாறான அறவுரைகளும், பொருள் மொழிகளும், காண்டேகரின் புதினங்களில் நிறைந்திருக்கும். நண்பர் இராமலிங்கத்தின் கட்டுரைகள் அவ்வாறு அமைந்து சிறப்புற்று விளங்குகின்றன.

நடையழகு

மறைமலையடிகளார் நடை, திரு.வி.க. நடை, அண்ணா நடை, மு.வ. நடை எனத் தமிழர்கள் சிலருக்கே தனியானதொரு நடையொழுங்கு அமைவதுண்டு. எல்லோருக்குமே தனித்து எடுத்துச் சொல்லும் நடை அமைந்துவிடுவதில்லை. 'இராமலிங்கம் நடை' என்று சொல்லத்தக்க நடை நண்பர்க்கு வாய்த்திருப்பதை அறிய முடிகிறது. நறுக்குத் தெறித்தாற்போன்ற சிறுசிறு தொடர்கள்; 'அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத்

தறித்த குறள்' என்பது போலப் பொருட்செறிவு வாய்ந்த தன்மை; முற்றிய கரும்பைப் பிழிந்தெடுத்தது போன்ற இனிமை; எழுதியிருப்பதைப் படிப்பதுபோல இல்லாமல், எதிரே நின்று இராமலிங்கம் பேசுவது போலவும் நாம் கேட்டுக்கொண்டிருப்பது போலவுமான ஒரு நிலையைத் தோற்றுவிக்கின்ற தனி அழகு; வெற்றுத்தொடர் என்று எதுவுமே இல்லாத, உயிர்த்துடிப்புள்ள நடை; அறிவுரைகளை இயம்புகின்ற பெருமிதப் பாங்கு; அநீதியைச் சாடுகின்ற ஆத்திரப் பாங்கு; செய்திகளை உரியவாறு புரிய வைக்கும் தெளிவுப் பாங்கு; பொருத்தமுறக் கருத்துகளை இணைத்துச் சொல்லும் கோவைப் பாங்கு என அனைத்தும் ஒன்றுகூடிய செம்மாந்த நடை, நண்பர் இராமலிங்கத்திற்கு வாய்த்திருக்கிறது.

ஆய்வு நுணுக்கம்

நூலில் ஆங்காங்கே அரிய ஆய்வுக் கருத்துகளைத் தூவிச் செல்கிறார், நண்பர் இராமலிங்கம்.

> வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
> துணைவலியும் தூக்கிச் செயல்

என்னும் குறளில் 'துணைவலி' என்பது இருபொருளைத் தருகிறது என்கிறார். நமக்கு அமையும் துணையின் ஆற்றல், மாற்றானுக்கு அமையும் துணையின் ஆற்றல் என அதனை நன்கு விளக்கம் செய்கிறார்.

பொற்கொல்லனின் சொல்லைக் கேட்டு ஆராயாது தீர்ப்பு வழங்கினான், பாண்டிய மன்னன். பொற்கொல்லனின் பேச்சைக் கேட்கும் நமக்கே பல 'ஓட்டைகள்' அவன் பேச்சில் தென்படுகின்றன என்று எட்டுச் செய்திகளை ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். ஆசிரியர் சிறந்த வழக்கறிஞர் என்பதை இந்தப் பகுதி நிறுவுகிறது.

வரையறை

சில சொற்களுக்கு அருமையான வரையறைகளையும் ஆசிரியர் ஆங்காங்கே தந்து செல்கிறார். "அறிவின் துணை கொண்டு காரணங்களையும் விளைவுகளையும் ஆழமாய் ஆராய்ந்து, ஐயம் ஏதுமின்றித் தெளிதலே சிந்தனை" என்ற வரையறை நம்மைச் சிந்திக்கத் தூண்டுகிறது.

வாழ்க! வளர்க!

"வளர்ந்து வருபவனை, நல்லது செய்ய முயல்பவனைப் பாராட்ட வேண்டியது நமது கடமை. வளரும் பயிருக்கு உரம்

போல அது அவனுக்கு உதவுகிறது" என வள்ளுவர் குறளுக்கு விளக்கம் தந்திருக்கிறார், நண்பர் இராமலிங்கம். இராமலிங்கம் வளரும் பயிர் அன்று, வளர்ந்து விளைந்துள்ள பயிர். இப்பயிரின் விளைவைத் துய்ப்பதுதான் இப்போது நமது கடமை!

பதிப்பு வேந்தர்

தமிழகத்தில் அருமையான, பயனுள்ள நூல்களை வெளியிட்டுப் பதிப்புத்துறை வேந்தராய் விளங்கி வருபவர் வானதி திருநாவுக்கரசு அவர்கள். சிறந்த சிந்தனையாளர் இராமலிங்கத்தின் சிறந்த கருத்துகளைச் சிறந்த பதிப்பகமாகிய 'வானதி' வெளியிடுவது சிறப்புக்குச் சிறப்பு சேர்ப்பதாகும்!

நூல் ஆக்கம்	இலக்கியச்சுடர் த. இராமலிங்கம்
வகைமை	கட்டுரை
வெளியீடு	வானதி பதிப்பகம், சென்னை. (1991)

8

அண்ணாவின் மேடைக்கலை

கலைகள் அறுபத்து நான்கென்று கூறுவது மரபு. 'ஆய கலைகள் அறுபத்து நான்கு', 'எண்ணெண் கலைகள்' என்ற தொடர்களை அறிவோம். அறுபத்து நான்கு கலைகளுள் பேச்சுக் கலையும் ஒன்று. இக்கலையை, 'கட்டுரை வகை' - அஃதாவது, நினைப்பதைத் தொகுத்துக் கூறும் பேச்சு வன்மை - என மணிமேகலைக் காப்பியம் குறிப்பிடுகிறது.

பேச்சின் சிறப்புப்பற்றியும், பேச வேண்டிய முறைபற்றியும் தமிழிலக்கியங்களில் ஆங்காங்கே குறிப்புகளைக் காண்கிறோம். கருத்துகளை ஒழுங்காய்ச் சேர்த்து இனிமையாய்ச் சொல்ல வல்லாரைப் பெற்றால் அவருடைய ஏவலை உலகத்தார் விரைந்து கேட்பர் எனப் பேச்சாற்றலின் வலிமையைத் திருவள்ளுவர் விளக்குகிறார்.

> விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
> சொல்லுதல் வல்லார்ப் பெறின்

எனும் திருக்குறளைப் பேச்சுபற்றிப் பேசும்போது நாம் குறிப்பிடாமலிருப்பதில்லை.

பண்டைய தமிழகத்தில் மேடைப் பேச்சுகள் இருந்தன என்பதற்கு இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. விழா நாள்களில் அறிஞர்கள் மேடைகளில் ஏறி மக்களுக்கு அறிவுரைகள் சொல்லு மாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். பட்டிமண்டபங்களில் ஆழமான கருத்துகள் தருக்கமுறையில் விரிவாய் விவாதிக்கப் பட்டுள்ளன.

"குளிர்மணல் பரப்பிய பந்தல்களிலும், மரங்கள் தாழ்ந்து நிழல்தரும் ஊர் மன்றங்களிலும் புண்ணிய நல் அறநூல்களை விளக்கும் அறிஞர்கள் கூடி உரையாற்றுங்கள்; அவரவர் சமயத் திற்கு இசைந்த உட்பொருள் அறிந்த சமயவாதிகள் பட்டி

மண்டபத்தே வாதிட வேண்டியவற்றை அறிந்து வாதிட்டுத் தீர்வு காணுங்கள்.

தண்மணற் பந்தரும் தாழ்தரு பொதியிலும்
புண்ணிய நல்லுரை அறிவீர் பொருந்துமின்;
ஒட்டிய சமயத்து உறுபொருள் வாதிகள்
பட்டிமண் டபத்துப் பாங்கறிந்து ஏறுமின்;

என விழா நாள்களில் முரசறையப்பட்டதை மணிமேகலை தெரிவிக்கிறது.

கேட்போர் உளங்கொளவும், எக்கருத்தை எடுத்துச் சொல்ல வேண்டுமோ அதைச் செப்பமாகவும் கூறுபவனைச் 'சொல்லின் செல்வன்' என இராமாயணம் பாராட்டியுள்ளது.

சொல்வது பொய்யே என்றாலும் பேச்சாற்றல் கொண்டவன் அதனையே மெய்யாய்க் காட்டிவிடுவான்; மெய்யே ஆனாலும் எடுத்துச் சொல்லும் ஆற்றலில்லாத இடத்து அது பொய்யாய்ப் போய்விடுவதுமுண்டு.

பொய்யுடை ஒருவன் சொல்வன் மையினால்
மெய்போ லும்மே! மெய்போ லும்மே!
மெய்யுடை ஒருவன் சொலமாட் டாமையால்
பொய்போ லும்மே! பொய்போ லும்மே!

எனும் மொழி, பேச்சாற்றலின் இன்றியமையாமையைப் புலப் படுத்துகிறது.

நாட்டு விடுதலைப் போராட்டக் காலத்தில்தான் மேடைப் பேச்சு ஓர் இயக்கமாகவே உருவெடுக்கலாயிற்று. விடுதலைக்காகப் பாடுபட வேண்டிய இன்றியமையாமையை எடுத்துக்கூறி, போராட்டங்களில் மக்கள் பங்கு பெறவேண்டுமென அழைப்பு விடுக்க ஊருக்கு ஊர் மேடையமைத்து, மக்களைத் திரட்டிப் பேசவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. நாவன்மை மிக்க தலைவர்கள் நாடு முழுவதும் சுற்றிச் சுழன்று பேசி வந்தனர்.

நாட்டு விடுதலைப்போர் காரணமாய் மேடைப் பேச்சு பெருமளவில் பரவிய நிலை ஏற்பட்ட அந்தக் காலத்தில் திராவிட இயக்கத்தினரால் தமிழ்நாட்டில் மேடைப் பேச்சு மிகப்பெரும் செல்வாக்குப் பெறலாயிற்று. இந்த இயக்கத்தின் வளர்ச்சிக்குப் பேச்சு ஒரு பெருந்துணையாய் அமைந்தது என்பது மறுக்க முடியாதது.

பல கல் தொலைவு பயணம் செய்தும், பணம் தந்து சீட்டுப் பெற்றும் பேச்சுக் கேட்கும் நிலையைத் திராவிடர் இயக்கம் உருவாக்கியது. இயக்கத்தில் முன்னோடிப் பேச்சாளர்கள் ஆயிரக்

கணக்கில் இருந்தனர். மலைகள் பல இருந்தாலும் ஓர் இமயம் உயர்ந்து நிற்பது போலப் பேரறிஞர் அண்ணா இந்நூற்றாண்டுப் பேச்சாளர்களுள் ஓர் இமயமாய் நிமிர்ந்து நின்றார்.

அத்தகைய சிறப்புக்குரிய, 'அண்ணாவின் மேடைக் கலை' பற்றிக் கவிஞர் பொன். செல்வகணபதி அருமையான ஆராய்ச்சி நூலைப் படைத்தளித்திருக்கிறார்.

திரு. செல்வகணபதி மேலை நாடுகளின் மேடைக்கலை வரலாற்றைச் சொல்லி, அந்நாடுகளில் பேச்சு ஒரு கலையாய்ப் போற்றி வளர்க்கப்படுவதை விரிவாய் எடுத்துரைக்கிறார்.

பண்டைய கிரேக்க உரோம நாடுகளில் சொற்பொழிவுக் கலை பழங்காலத்திலேயே சிறப்புற்றுத் திகழ்ந்திருக்கிறது. பிளேட்டோ, ஐசோக்கிராட்டீஸ், டெமஸ்தனிஸ் போன்றோர் தலைசிறந்த பேச்சாளர்களாய் விளங்கியுள்ளனர். அரிஸ்டாட்டில் சொற்பொழிவுக் கலையின் தத்துவங்களையெல்லாம் தொகுத்து, முறைப்படுத்தி ஒரு நூலாய் எழுதினார். சாக்ரடீஸ் தெருத் தெருவாய்ச் சென்று, மக்களுடன் பேசி, அறிவுரை கூறி வாழ்நாளைக் கழித்திருக்கிறார்.

அதுபோலத் தமிழில் சொற்பொழிவுக்கலைபற்றிய வரலாறு இல்லையென்றாலும், பண்டுதொட்டே பேச்சுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தது என்பதைப் பல இலக்கியச் சான்றுகள் வாயிலாய், செல்வகணபதி நிறுவிக் காட்டியிருக்கிறார்.

தொல்காப்பியத்தில் ஆளப்பட்டுள்ள 'நெடுமொழி' என்னும் சொல் இன்று வழங்கி வருகிற சொற்பொழிவு என்னும் சொல்லுக்கு இணையாய் அன்று வழங்கிய சொல் என்பதை மிக நுண்ணிதாய் ஆய்ந்து வெளியிட்டுள்ளார்.

இந்நூலுள் பல சுவையான செய்திகளைச் செல்வகணபதி தந்திருக்கிறார். அண்ணாவின் முதல் மேடைப் பேச்சு சென்னை பச்சையப்பன் கல்லூரியில் நிகழ்ந்தது. சென்னையில் நகைச்சுவை வேந்தர் என்.எஸ்.கிருஷ்ணன் சிலையைத் திறந்து வைத்துப் பேசியதே அவருடைய இறுதி மேடைப் பேச்சு. அவர் பயின்ற கல்லூரியில் அவரது முதல் மேடைப் பேச்சும், அவருக்கு நல்ல நண்பரான ஒருவரின் நினைவோடு இறுதி மேடைப் பேச்சும் அமைந்திருந்தன என்பதை நூலாசிரியர் சுட்டிக்காட்டுகிறார்.

அண்ணா தம் பேச்சுகளில் எத்தகைய உத்திகளைக் கையாண்டுள்ளார் என்பதை நண்பர் செல்வகணபதி மிக விரிவாய் ஆராய்ந்துள்ளார். உவமை, உருவகம், நகைச்சுவை, கதை

சொல்லல், மேற்கோள் காட்டுதல் எனப் பல பெரும் தலைப்புகளைக்கொண்டு, அவை ஒவ்வொன்றையும் பல உட்பிரிவுகளாக்கிச் சிறப்பான செய்திகளைத் தந்திருப்பது அவருடைய நுணுக்கமான ஆராய்ச்சித் திறனை வெளிப்படுத்து கிறது. ஒவ்வொன்றையும் தக்க சான்றுகளுடன் விளக்கியுள்ளார்.

கூட்டத்தின் தொடக்கத்திலேயே நகைச்சுவைமூலம் அவையினைக் கவர்ந்துவிடும் அரிய ஆற்றல் அண்ணாவுக்கு உண்டு. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில், 'ஏ தாழ்ந்த தமிழகமே' என்னும் தலைப்பில் உரையாற்ற அண்ணா அழைக்கப்பட்டிருந்தார். அண்ணாவை அறிமுகப்படுத்திப் பேசிய சி.டி.தண்டபாணி அண்ணாவை, 'புரட்சியின் சிகரம்' என்றார். அண்ணா, பேச்சைத் தொடங்கும்போதே, "தோழர் தண்டபாணி என்னைப் புரட்சியின் சிகரம் என்றார். புரட்சி இவ்வளவு குள்ளமாயிராது. புரட்சியின் சிகரம் என்றால் இங்கே அமர்ந்திருக்கும் டாக்டர் சிதம்பரநாதன் அவர்களுக்குப் பொருந்தும். (டாக்டர் அ. சிதம்பரநாதன் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர். அவர் மிகவும் உயரமானவர்.) ஆகவே, நான் புரட்சியின் சிகரத்திற்குப் பக்கத்திலே மலைச்சாரலிலே நின்று கொண்டு பேசுகிறேன்" எனப் பேசிக் கூட்டத்தில் கலகலப்பை உண்டாக்கினார்.

அதே பேச்சின் இடையே அண்ணா ஓர் அருமையான இன்பியல் நகைச்சுவைக் காட்சியையும் காட்டுகிறார். "தமிழ் வகுப்பு நடந்துகொண்டேயிருக்கும். தெய்வயானையை விட்டுவிட்டு வள்ளியைத் தேடிக்கொண்டு முருகன் போவதுபோல் மாணவர்கள் வாத்தியாரை விட்டுவிட்டு வெளியே போய்விடுவார்கள்" என்றார், அண்ணா.

அண்ணா அமைதியாய்ப் பேசினாலும், கேட்கும் மக்களை உணர்ச்சிவயப்படச் செய்துவிடுவார். 1961, செப்டம்பர் 15 இல் அண்ணாவின் 53ஆவது பிறந்தநாள் விழா தஞ்சையில் கொண்டாடப்பட்டது. அவருடைய வயதைக் குறிப்பிடும் வகையில் கூட்டத்தில் 53 பரிகள் வழங்கப்பட்டன. அண்ணா பேசும்போது சொன்னார் : "இந்தப் பரிசுகளை எனக்கு அளித்தது பெரிதன்று. இதைவிட மகத்தான சக்தி வாய்ந்த பரிசு ஒன்றை நீங்கள் எனக்கு அளித்தாகவேண்டும். உங்கள் கண்ணீரை என் கல்லறையின்மீது சிந்துவீர்களேயானால் அதுவே நீங்கள் தரும் பெரும் பரிசாகும். இந்த ஆண்டு பிறந்த நாளைத் தஞ்சையில் உங்களுடன் கொண்டாடுகிறேன். அடுத்த ஆண்டு என் பிறந்த

நாளை எந்தச் சிறையிலாவது கொண்டாடுவதாய் இருந்தால் அதுவே எனக்கு மகிழ்ச்சி தரும்" என்றார். இவ்வுரை கேட்டவரிடையே உருக்கமான எழுச்சிமிக்க உணர்வை ஊட்டியே தீரும்.

இவ்வாறு, தாம் சொல்லும் ஒவ்வொரு கூற்றுக்கும் அண்ணாவின் பேச்சைச் சான்றாய்க் காட்டி, அண்ணாவின் பேச்சுக்கலை வன்மையை அருமையாய்ப் புலப்படுத்தியிருக்கிறார், செல்வகணபதி.

சொற்பொழிவாளரின் தோற்றம் நல்ல முறையில் அமைந்திருக்க வேண்டும். தோற்றப் பொலிவு அவையோரிடத்தில் ஒரு கவர்ச்சியை உண்டாக்குவது இயல்பு. அண்ணா அவர்களோ குள்ளமானவர். ஆடையைச் சரியாய் உடுத்தாமல்கூட மேடைக்கு வருவார். இருந்தும், அவர் பேச்சு வேறு எவர் பேச்சினும் சிறந்து நின்றது. வேறு எதிலும் சிந்தையைச் செலுத்துவதற்கின்றித் தம் பேச்சுடன் ஒன்றுகின்ற நிலையை அவையினரிடம் ஏற்படுத்தி விடுவதால் - மகுடி முன் பாம்பாய் அவையைக் கவர்ந்து விடுவதால் - அவருடைய தோற்றம், உடையணியும் முறை முதலியனபற்றி எவரும் பொருட்படுத்துவதேயில்லை. சொல்லப் போனால், கசங்கிய ஆடையுடன் வருவதும், முகமழிப்புகூட இல்லாமல் வருவதுங்கூட அவர் பேச்சினுடைய சிறப்பினால் அவருக்குப் பெருமையைத் தேடித் தந்திருக்கின்றன என்பதை நூலாசிரியர் சுட்டிக் காட்டுகிறார்.

மேடையில் முதன்மைப் பேச்சாளராய் இருப்பவர் - தலைமையிடம் பெற்றிருப்பவர் - மற்றவர் சிறப்பாகப் பேசி விட்டால் எங்கே தம் பேச்சு எடுபடாமல் போய்விடுமோ என்பதால், அவர்களை அதிகம் பேசவிடாமலும், சிறப்பாய்ப் பேசுகின்ற நேரத்தில் தடுத்து நிறுத்திக்கொள்ளச் சொல்வதுங்கூட உண்டு. அண்ணா அவர்களோ, மேடையில் தமக்கு முன்னர் யார் பேசினாலும், எவ்வளவு சிறப்பாகப் பேசினாலும் மேலும் அவரை ஊக்கப்படுத்துபவராகவே இருப்பார். காரணம், யார் எவ்வளவு உயர்வாகப் பேசினாலும் அவர்களையெல்லாம் விஞ்சிப் பேசுகின்ற சொல் திறனும் கருத்து வளமும் அவரிடம் இருந்தன. முதலில் பேசியவர் மிகச் சாதாரணமாய்ப் பேசினாலும், அந்தப் பேச்சிற்குத் தம் பேச்சினூடே புதிய புதிய விளக்கங்களைத் தந்து, அந்தப் பேச்சாளரை மக்கள் உயர்வாய்க் கருதுமளவுக்குச் செய்துவிடுவார். இப்படிப் பேச்சேணிப்படியில் அவரால் ஏற்றிவிடப்பட்டோர் பல்லாயிரவர்.

இத்தகைய உயர்ந்த குணமுள்ள அண்ணாவின் சிறந்த பேச்சுகளைத் தொகுத்து, அவை கொண்டு 'மேடைக்கலை' எப்படி அமைய வேண்டுமென்பதை மிக அழகாய் எடுத்துரைத்துள்ளார், செல்வகணபதி.

பேச்சாளர் ஓயாமல் படிக்க வேண்டும்; சிந்திக்க வேண்டும்; கருத்து வளத்தைப் பெருக்கிக்கொள்ள வேண்டும்; தாம் அறிந்த கருத்துகளை நன்கு சிந்தித்து, ஆய்ந்து, முதலில் தம்முடைய உள்ளத்தில் பத்திரமாய்ப் பதித்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு பதித்துக்கொண்டவற்றை மற்றவர்க்கு எடுத்துச் சொல்லும் ஆற்றலை வளர்த்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு சொல்லும் சொல், கேட்பவரைத் தம்பால் ஈர்த்து, உணர்ச்சிப் பெருக்கில் ஆழ்த்தி, செயல்படத் தூண்டுவதாயும் அமைய வேண்டும். அவ்வாறான பேச்சு மக்களை மகிழ்விப்பதற்காக மட்டும் அமைந்து விடாது சமுதாய மேம்பாட்டிற்குப் பயன்படுவதாயும் அமைய வேண்டும்! இத்துணையும் அமையப்பெற்றவரே பேச்சுலகில் தலைமையிடம் பெற முடியும். பேரறிஞர் அண்ணா அவர்கள் இத்துணையையும் இம்மியளவும் குறையாமல் பெற்றிருந்தார் என்பதை விளக்குவதே பொன். செல்வகணபதியின் இந்நூல்.

மேடைப் பேச்சில் சிறந்து விளங்க எண்ணுபவர்களுக்கு நண்பர் செல்வகணபதியின் இந்நூல் ஒரு சிறந்த வழிகாட்டி. அண்ணா கையாண்ட ஒவ்வோர் உத்திக்கும் அண்ணாவின் சொற்பொழிவுகளிலிருந்தே மேற்கோள் காட்டி நூலுக்கு மெருகூட்டியுள்ளார். அண்ணா தம் வாழ்நாள் முழுதும் பேசிய பேச்சுகள் அனைத்தையும் ஒருசேரக் கேட்ட நிறைவை இச்சிறுநூல் உண்டாக்குகிறது.

ஆய்வு நூல் என்பதால் ஆசிரியர் சில சிறந்த முடிவுகளைத் தந்துள்ளார். "அண்ணா என்ற பெயரை எண்ணுவார் எவருக்கும் உடனடியாய் நினைவுக்கு வருவது அவரது சொற்பொழிவுத் திறனே! பல்துறை ஆற்றல் பெற்றவர் அண்ணா என்பது உண்மையே எனினும், அவர் ஆற்றல்களுள் இமயமாய் விளங்குவது சொற்பொழிவு செய்யும் ஆற்றல்தான்" என்னும் கருத்தைக் கூறுவதோடு அதற்கான தரவுகளையும் முறையாய்த் தந்திருக்கிறார்.

"தமிழால் பாரதி தகுதி பெற்றார்; தமிழ் பாரதியால் தகுதி பெற்றது" என்பார், பாவேந்தர். நண்பர் செல்வகணபதி பாவேந்தர் பரம்பரைக் கவிஞர்; அதனால் அவர் அடியொற்றி,

"சொற்பொழிவுக் கலையால் அண்ணா பெருமை பெற்றார்; சொற்பொழிவுக் கலையை அண்ணா பெருமைப்படுத்தினார்" என ஆசிரியர்வழி மாணவராய் நிற்கிறார்.

அண்ணாவின் பேச்சுபற்றி நெஞ்சையள்ளும் முறையில் ஆய்வு செய்துள்ள அறிஞர் செல்வகணபதி, அண்ணாவின் கட்டுரைகள், சிறுகதைகள், நாடகங்கள், புதினங்கள் எனப் பல்வேறு தலைப்புகளிலே ஆய்ந்து, இதுபோன்று அருமையான - சுவையான - பயனுள்ள நூல்களைத் தரவேண்டும் என்னும் வேண்டுகோளோடு வாழ்த்தி மகிழ்கிறேன்.

திருச்சி மாநாட்டில், அண்ணா அவர்கள் நாவலரை நோக்கி, "தம்பீ, வா! தலைமை தாங்க வா" என அழைத்தது போல நாமும், "கவிஞரே, வருக! கணக்கற்ற நூல்களைத் தருக" எனப் பொறுப்பிலிருத்தி அவர் பணிக்கு உறுதுணையாய் நிற்போமாக!

நூல் ஆக்கம்	கவிஞர் பொன். செல்வகணபதி
வகைமை	கட்டுரை
வெளியீடு	பாரதி பதிப்பகம், சென்னை. (1998)

⑨

நினைவுக் குமிழிகள்–1

பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் தம் வாழ்க்கை வரலாற்றை, 'நினைவுக் குமிழிகள்' என்னும் தலைப்பில் வரைந்துள்ளார். முதல் தொகுதியாகிய இந்நூலில் அவர் பிறப்பு, பிள்ளைப்பருவ நிகழ்ச்சிகள், பள்ளி - கல்லூரிப் படிப்பு, துறையூர் உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியராய் அமர்த்தப்பெற்றமை ஆகிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. மற்றவை அடுத்த தொகுதிகளில் தொடரும்.

பேராசிரியர் ரெட்டியார் மூன்றாண்டுப் பருவம் நிரம்பும் முன்னரே தந்தையாரை இழந்தவர்; எளிய குடும்பத்தில் வளர்ந்தவர். என்றாலும், தம் கடின உழைப்பால் படிப்படியாய் முன்னேறி இன்று கல்வியுலகு பாராட்டுகின்ற உயர்ந்த நிலையில் திகழ்கின்றார். தம் வாழ்க்கைப் பயணம்பற்றி அவருடைய மனம் அசை போட்டதன் விளைவே இந்நூல். நீர்ப்பரப்பில் மழை சிறு தூறலாய் விழும்போது குமிழிகள் தோன்றுவதில்லை. பெருந்துளிகளாய் விரைந்து விழும்போது மட்டுமே அழுத்த மிகுதியால் குமிழிகள் தோன்றுகின்றன. பேராசிரியர் ரெட்டியாருடைய வாழ்க்கைப் பரப்பில், எண்ணத்தில் நிற்கின்ற அழுத்தமான நிகழ்ச்சிகள்மட்டுமே இந்தக் குமிழிகளாய் உருப்பெற்றுள்ளன. குமிழியை நோக்கும்போது அதனுள் நமது உருவத்தையும் காண முடியும். அதேபோல், இந்நூற்குமிழியைப் படிக்கும்போது பேராசிரியர் ரெட்டியாரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளுடன் அந்த வயதில் நம்முடைய வாழ்வில் நடந்தவையும் நம் மனத்திற்குள் நிழலாடவே செய்யும்.

தங்கள் பெருமைகளைக் கூறிக்கொள்வதற்கு மட்டுமே வரலாறு எழுதுவாருண்டு; தங்களுக்கு நேர்ந்த இன்னல்களை மட்டுமே சொல்லி உலகம் தங்களைக் கண்டுகொள்ளவில்லையே என்னும் ஏக்கத்தைப் புலப்படுத்துவாரும் உண்டு. பேராசிரியர் ரெட்டியார், உயர்வோ தாழ்வோ, நடந்ததை நடந்தவாறே ஒளிவு மறைவின்றி வெளியிட்டுள்ளார்கள். தம் இளமைப்பருவப்

படிப்புபற்றிய செய்திகளை ஓவியப்படுத்துவதுபோலத் துல்லிய மாகவும் அழகாகவும் சித்திரித்துள்ளார். வெறும் நிகழ்ச்சிக் கோவையாய் அமைந்துவிடாமல் ஒரு கட்டுரைக் களஞ்சியம் போன்று படிக்கப் படிக்க நிறைவேற்படுத்தும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது.

பேராசிரியர் தம் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை மட்டுமே அடுக்கிச் செல்லவில்லை. ஒவ்வொரு நிகழ்ச்சியைக் குறிக்கும்போதும் அது தொடர்பான பின்னணிகளுடன் அனைத்து விவரங்களையும் அழகு மிளிரும் சொல்லோவியமாய்த் தீட்டிச் செல்கின்றார். இந்நூலினைப் பேராசிரியர் சுப்புரெட்டியாரின், 'தன் வரலாறு' என்பதைவிட 1920, 1930களில் தமிழ்நாட்டுச் சிற்றூர்களின் நிலை, மக்களின் வாழ்க்கைமுறை, திண்ணைப் பள்ளிக்கூடங்களில் கல்வி கற்றுத் தந்த முறை, உயர்நிலைப் பள்ளி-கல்லூரிகளில் கல்வி நிலை போன்றவற்றையெல்லாம் படம் பிடித்துக் காட்டுகின்ற சமூக வரலாற்று விளக்க நூல் என்று கூறுவது பொருத்தமாய் இருக்கும். ஆசிரியரின் அன்னையார் பிறந்த ஊர் பெரகம்பி என்பதும், ஆசிரியரின் சொந்த ஊர் கோட்டாத்தூர் என்பதும் வெறும் செய்தியாய் மட்டும் இடம் பெற வில்லை. அந்த ஊர்களுக்கே ஆசிரியர் நம்மை அழைத்துச் செல்கின்றார். அந்த ஊர்களில் வாழ்ந்தது போன்ற உணர்வுகளையும் தோற்றுவித்துவிடுகின்றார்.

திண்ணைப்பள்ளியில் நடைபெறும் சிறப்பான நிகழ்ச்சிகளாய்ப் பிள்ளையார் சதுர்த்தி, சரசுவதி பூசை ஆகிய இரண்டைச் சொல்லலாம் என்பது ஆசிரியர் கூறவரும் செய்தி. ஆனால், ஆசிரியர் அந்தச் செய்தியைத் தெரிவிப்பதோடுமட்டும் நில்லாது இவ்விரு விழாக்களையும் ஏன் கொண்டாடுகின்றோம், எவ்வாறு கொண்டாடுகின்றோம் என முழு விவரங்களையும் தந்துவிடுகின்றார். இதேபோல், சிற்றூர்த் திருவிழாக்களான கரக ஆட்ட விழா, கண்ணன் பிறப்பு, காமன் பண்டிகை போன்ற வற்றைக் குறிப்பிட்டு அவற்றை விளக்குகின்றார். கோலிக்குண்டு, கிட்டிப்புள், பம்பரம், கார்த்தி சுற்றுதல், பீச்சுக்குழல் ஆகிய சிறுவர் விளையாட்டுகளும் இதில் இடம் பெறுகின்றன.

பேரர்சிரியர் ரெட்டியார் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பேராசிரியராய்ப் பணிபுரிந்தவர். அதில் பெற்ற பட்டறிவு கொண்டு தம் பள்ளிப் படிப்பு, கல்லூரிப் படிப்பைப்பற்றிக் கூறும்போது இன்றைய கல்விமுறைகள், கற்பிக்கும் முறைகள்பற்றிய விளக்கங்களைச் சுவையாய் எடுத்துச் சொல்லித் தாம் படித்தபோதிருந்த நிலையுடன் ஒப்பிட்டு, அவற்றின் குறை

நிறைகளை எடுத்துக் காட்டுகின்றார். அவருக்குப் பாடஞ் சொல்லித் தந்த ஆசிரியர்களை நினைவுகூரும் வகையில் அவர்கள் சொல்லித் தந்த பாடங்களை நூலாசிரியர் நமக்குச் சொல்லித் தந்துவிடுகின்றார். அதனால் அறப்பளீசுர சதகம், குமரேச சதகம், விவேக சிந்தாமணி, நல்வழி, நன்னெறி போன்ற நூல்களிலிருந்து பல பாடல்களுக்கான விளக்கங்களைப் பெற்று மகிழ்கின்றோம்.

தமிழாசிரியர் குமார வீரய்யர், "கூட்டொருவரையும் வேண்டாக் கொற்றவ!" எனும் கம்பராமாயணப் பாடலை அன்று இவருக்கு நடத்திய திறத்தைக் கூறி, இன்று நாமும் இப்பாடலின் பொருள் நயத்தை உணர்ந்து மகிழுமாறு செய்கின்றார். கற்பிக்கும் முறையில் கற்பித்தால் கணக்குப் பாடத்தைவிட எளிதான பாடம் இல்லை எனலாம். ஆசிரியர் சரிவர விளக்கும் திறனில்லாதவராகும் போதுதான், 'கணக்கு பிணக்கு' என்னும் மொழி தோன்றுகின்றது. கணக்கைப் பிணக்கின்றி நடத்தியதால் இவருடைய கணித ஆசிரியர் திரு. கே. இராமச்சந்திர ஐயர் இவர் உள்ளத்தில் குறிக்கோள் ஆசிரியராய் நிரந்தர இடத்தைப் பெற்றுள்ளதை அறிய முடிகின்றது. அவருடைய கற்பிக்கும் ஆற்றலை இந்நூலாசிரியர் கூற்றாகவே அறிவது சிறப்பாம். "வரலாற்று ஆசிரியர் கதை சொல்லுவது போல் ஆரம்பக் கணிதத்திலுள்ள கணக்கின் சூழ்நிலையை உண்டாக்கிவிடுவார். இலாப நட்டம், கூட்டுவட்டி, வட்டிக் கணக்கு, கூட்டு வாணிகம் ஆகியவற்றைக் கற்பிப்பது அற்புதமாய் இருக்கும். வகுப்பறையில் இருப்பதை மறந்து அங்காடித் தெருவில் இருப்பது போன்ற சூழ்நிலையை உண்டாக்கி விடுவார். நாங்களே முதல் போட்டுக் கூட்டு வாணிகம் நடத்துவது போலவும், கந்துவட்டிக் கந்தசாமிக் கடையில் வட்டிக்குக் கடன்வாங்குவது போலவும், காஃபிப் பொடிக் கடையில் காஃபித் தூளில் சிக்கிரித் தூளைக் கலப்பது போலவும், சருக்கரை மூட்டைகள் போன்ற சரக்குகள் வண்டியில் வந்து இறங்குவது போலவும் உணர்ச்சியை எழுப்பிவிடுவார்." - இவ்வாறு கற்பிக்கும் செய்திகளை வாழ்க்கையுடன் இணைக்கும்போது, கருத்துகள் மனத்தில் ஆழமாய்ப் பதியத்தானே செய்யும்!

"இன்று பெரும்பாலும் இலக்கணம் மாணாக்கர் காதில் புகாத உலக்கையாகவே இருக்கின்றது. மாணாக்கர் இலக்கணத்தைச் சிம்ம சொப்பனமாய்க் கருதுகின்றனர். இதற்கு இலக்கணம் காரணமன்று; கற்பிக்கும் ஆசிரியர்களே இந்நிலைக்குக் காரணம். இலக்கணத்தை அநுபவ முறையில் இலக்கியப் பாடத்துடன் இணைத்துக் கற்பித்தால் மாணாக்கர்கள் கட்டாயம் இலக்கணத்தை விரும்புவர். நல்ல முறையில்

கற்பித்தால் ஏனைய பாடங்களைக் கற்பதுபோல் அதிக இன்பத்தையும் பெறுவர்" என்கின்றார், இந்நூலாசிரியர்.

இவருக்கு இனிமையாய் இலக்கணம் சொல்லித் தந்த ஆசிரியரை நினைக்கும் போது, எனக்கு இலக்கணம் போதித்த என் ஆசிரியரும் என் நினைவுக் குமிழியில் தோற்றமளிக்கின்றார். என்னுடைய தமிழாசிரியர் வேற்றுமை உருபுகள்பற்றிப் பாடம் நடத்தும்போது முதல் வேற்றுமை உருபு, இரண்டாம் வேற்றுமை உருபு இன்னின்ன என்று சொல்லி நடத்தமாட்டார். ஒருகதை சொல்வதுபோலத் தொடங்குவார். "ஒரு மன்னன், ஒரு மைந்தனைப் பெறும் விருப்பினால், தனக்குரிய மதுரை மாநகரின் நீங்கி, மாதவத்தோரது மதங்கி வனத்தில், மலரவனே! மலரவனே! என மாதவம் புரிந்தனன்." இதைச் சொல்லிப் பார்; இதில் எட்டு வேற்றுமைகளும் உள்ளன என்று விளக்குவார். "மன்னன் - முதல் வேற்றுமை; மைந்தனை - 'ஐ' இரண்டாம் வேற்றுமை உருபு; பெறும் விருப்பினால் - 'ஆல்' மூன்றாம் வேற்றுமை உருபு; தனக்கு – 'கு' நான்காம் வேற்றுமை உருபு; மதுரை மாநகரின் – 'இன்' ஐந்தாம் வேற்றுமை உருபு; மாதவத்தோரது - 'அது' ஆறாம் வேற்றுமை உருபு; மதங்கி வனத்தில் - 'இல்' ஏழாம் வேற்றுமை உருபு; மலரவனே! மலரவனே! - இது எட்டாம் வேற்றுமை யாகிய விளி வேற்றுமை; தெரிகிறதா?" என்பார். இவ்வாறு இலக்கணத்தைச் சொல்லித் தந்தால் இலக்கணம் இனிப்பின் கொடுமுடியாய் விளங்காதா?

தம் வாழ்க்கை நிகழ்ச்சிகளைச் சொல்லிச் செல்லும் போது இலக்கியச் செய்திகளை இணைத்துச் சொல்வது இந்நூலாசிரியர்க்குக் கை வந்த கலையாய் விளங்குகிறது. சிற்றூரில் ஆரம்பக் கல்வி கற்ற இவரையும், இவர் அண்ணன் மகன் கணபதியையும் இவர்களின் ஆசிரியர் வி.கே. அரங்கநாத ஐயர் அவர்களே முசிறிக்கு அழைத்துச் சென்று உயர்நிலைப் பள்ளியில் சேர்த்தார் என்பதை நயமாய் எழுதுகின்றார். வசிட்டரிடம் கல்வி கற்ற இராமலக்குமணர்களை விசுவாமித்திரர் வேள்வி காக்க அழைத்துச் சென்றார். இராமலக்குமணர்கள் வசிட்டரிடம் பயிலாத சில அரிய வித்தைகளை விசுவாமித்திரரிடம் கற்றனர் என்பது இராமாயணம். பேராசிரியர் ரெட்டியாரையும், அவர் அண்ணன் மகனையும் அவர்கள் ஆசிரியர் உயர்நிலைப் பள்ளியில் சேர்க்க முசிறிக்கு இட்டுச் சென்றது, "வசிட்டரே இராமலக்குமணர்களைக் கூட்டிச் சென்று விசுவாமித்திரரிடம் விட்டது போன்று இருந்தது" என எழுதி நயம் கூட்டுகின்றார்.

முதலில் புரியாதிருந்த ஒரு செய்தி பின்னர் புரிய வந்தது என்று கூறுமிடத்தில், "இந்தப் புதிர் அப்போது பிரம்ம சூத்திரம் போல் இருந்தாலும் நாளடைவில் அஃது பாஷியம் போல் விளக்கம் அடையும் என்பதை என்னால் அப்போது அறியக் கூடவில்லை" என எழுதுவதன்வாயிலாய்ச் சூத்திரம், பாஷியத்தின் இயல்பை நுண்மையாய் விளக்குகின்றார்.

கல்லூரியில் படித்த காலத்தில் உணவு விடுதியில் தங்கியிருந்தபோது, 'பிட்சு' எனும் இளைஞன் ஒருவன் அங்குப் பணியாளாய் இருந்தான். அவன் சலிப்பு ஏதுமின்றி விருப்புடன் இவர்கள் இட்ட வேலைகளையெல்லாம் செய்தான். அதனை இலக்கிய நடையில், அவன், "பாரதியார் சித்திரிக்கும் 'கண்ணன்-என் சேவகனை"ப் போன்றே பணியாற்றினான் என்பார்!

"'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்னும் முழக்கம் எம்மருங்கும் கேட்டாலும் நாம் சில சாதாரணப் பிழைகளைக் கூடக் களைவதில்லை. களைவதில் முயற்சி எடுத்துக் கொள்வதுமில்லை. அதனால் விளம்பரங்கள், அறிக்கைகள், வெளியீடுகள் இவை 'பிழை மலிந்த சருக்கங்களாய்க்' காணப் பெறுவதை நாம் எம்மருங்கும் பார்க்கிறோம்" என்கின்றார். 'பிழை மலிந்த சருக்கம்' என்னும் தொடராட்சி, நயத்தைத் தந்தாலும் இந்நிலை கவலைக்குரியதன்றோ? இதனைப் போக்கவேண்டுவது தமிழர் கடமையன்றோ?

பேராசிரியர் ரெட்டியார் எப்போதுமே நகைச்சுவையாய் உரையாடும் இயல்புடையவர். அவருடைய நகைச்சுவைப் பேச்சால் ஓயாது நகைத்தவண்ணமேயிருக்க வேண்டியிருக்கும் என்பதை அவரிடம் உரையாடியோர் நன்கு உணர்வர். எழுத்திலும் அந்த நகைச்சுவை இழையோடுவதை நூல் முழுதும் காணமுடிகின்றது. அவர் சிறுபிள்ளையாய்ப் பாட்டி வீட்டில் வளர்ந்தபோது காலையில் பால் கறக்கும்போது முதலில் இவருடைய தம்ளரில்தான் கறந்துவிடுவார்களாம். சிறிது வெப்பத்துடன் உள்ள அந்தப் பசுப்பாலை அப்படியே பருகுவாராம்! இதனை, "மகேசுவரப் பால்பூசை காலை ஆறு மணிக்குள் எனக்குத்தான் முதலில்" என நயமாய் எழுதிச் செல்கின்றார்.

இவர் துணைவியாரின் ஊரான பொட்டணத்தில் நல்லப்ப ரெட்டியார் என்று ஒருவர்; அவர் வீட்டுத் திண்ணையில் அவருடன் நம் நூலாசிரியர் பேசிக்கொண்டிருப்பது வழக்கம். திரு. நல்லப்ப ரெட்டியார் பேச்சில் வல்லவர்; உலகியலை நன்கறிந்தவர். அவரால் உலகியல்பற்றிய எவ்வளவோ செய்திகளை அறிந்துகொள்ள முடிந்தது என்பதை, "இவர் திண்ணை ஒரு பி.டி.ஐ. (P.T.I)

அலுவலகம்போல் செயற்பட்டு வந்தது" என்று நகைச்சுவையாய்க் குறிப்பிடுகின்றார்.

மற்றோர் இடத்தில், "நூலின் தமிழ்நடை நன்றாய் ஆற்றொழுக்காய் அமையவில்லை; மேடு பள்ளங்களுள்ள சரளைச் சாலையில் நடப்பது போன்ற அநுபவத்தைத் தந்தது" என்பார். 'மேடு பள்ளங்களுள்ள சரளைச் சாலை' என்னும் தொடராட்சி பொருத்தமான உவமையாய் அமைவதோடு நடையைப்பற்றிய நகைப்பையும் உண்டாக்கிவிடுகின்றது.

இடையிடையே வரும் முதுமொழிகளும் நயவுரைகளும் நடைக்கு உயிரூட்டுகின்றன. 'குருடன் இராஜ விழி விழிப்பது போல', 'சாணேற முழஞ்சறுக்கியது', 'தப்பித்தது தம்பிரான் புண்ணியம்', 'பணம் பத்துவிதம் செய்யும்', 'கூட்டத்தில் கோவிந்தா போடுகிற மாதிரி', 'குருவிக்குத் தகுந்த இராமேசுரம்', 'கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி', 'கடன் வாங்கியும் பட்டினி', 'பள்ளிக் கணக்கு புள்ளிக்கு உதவாது', 'கெடுமதி கண்ணுக்குத் தெரியாது', 'வினாச காலத்திற்கு விபரீத புத்தி', 'பூசாரியைப் பார்க்க முயல்வதைவிடச் சுவாமியைப் பார்ப்பது மேல்', 'பரம்பரை ஆண்டியோ பஞ்சத்தில் ஆண்டியோ' போன்ற மொழிகளைத் தக்க இடங்களில் பொருத்தமாய்க் கையாண்டு செய்திக்குச் சுவைகூட்டி நடைக்கு விறுவிறுப்பூட்டியுள்ளார், ஆசிரியர்.

சிறப்புப் பட்டப் படிப்பில் (பி.எஸ்சி. ஆனர்ஸ்) சேர இவர் மறைத்திரு ஜெரோம் டி. செளஸா (முதல்வர்) அவர்களை அடிக்கடி நேரில் பார்த்துக் கெஞ்சினாராம். பத்து நாள்கள் தொடர்ந்து சென்று வந்ததை, "குழந்தைப்பேறு இல்லாத ஓர் இளம்பெண் அரச மரத்தைச் சுற்றி வழிபாடு செய்வதைப்போல் விடாமல் பாதிரியார் விடுதிக்குப் போவதும் வருவதுமாய் இருந்தேன்" என்றெழுதுவார். இவருடைய ஆர்வத்தையும் அக்கறையையும் காட்ட இதைவிடச் சிறந்த உவமை சொல்ல முடியாது.

'சாதி அமைப்பு ஒழிக்கப்பெறாதவரை நாட்டிற்குக் கதிமோட்சமே இல்லை' என்பது இவர் கொள்கை. தந்தை பெரியாரின் அடிச்சுவட்டை ஓரளவு பற்றியவரல்லவா?

> பயிற்றிப் பலகல்வி தந்து – இந்தப்
> பாரை உயர்த்திட வேண்டும்

என்பது பாரதியின் கல்வித் திட்டம். இந்தத் திட்டம் வெற்றிகரமாய் நிறைவேற வேண்டுமானால் தாய்மொழியிலேயே எல்லாப் பாடங்களையும் கற்பித்தல் வேண்டும். விலைப்பாலைவிட முலைப்பால் நல்லதன்றோ என்பது போன்று இன்றைய

வாழ்க்கைக்குத் தேவையான இன்றியமையாக் கருத்துகளை இடையிடையே பொதித்து வைத்துள்ளார்.

இளமைப் பழக்கம் எப்போதும் நிலைக்கும் என்பர். இவர் கல்லூரியில் படித்த காலத்தே ஒரு குயர் தாள் ஒன்றரை அணாவுக்குக் கிடைக்கும். இத்தாள்களை 1/4 புல்ஸ்கேப் அளவில் வெட்டிக் கோப்புகளில் போடுவதற்கேற்பத் துளையிட்டு வைத்துக் கொள்வாராம். ஒரு நாளுக்குத் தேவையான தாள்களை, வகுப்பிற்கு எடுத்துச் செல்லும் கோப்பில் கோத்துக்கொண்டு, ஆசிரியர் கொடுக்கும் குறிப்புகளைத் தேதி போட்டு எழுதும் பழக்கத்தை மேற்கொண்டிருந்தாராம். இந்தப் பழக்கம் இன்றும் இவரிடம் தொடர்கின்றது. அன்று (1934இல்) வாங்கிய துளையிடும் கருவி இன்றும் (1988இல்) இவரிடம் பயன்பட்டு வருவதைப் பெருமையுடன் எழுதிக் களிக்கின்றார்.

உரியவர்கள் படிக்க நேர்ந்தால் தம்மீது சினம் கொள்வார்களே என்பதுபற்றியெல்லாம் கவலைப்படாமல் எதனையும் மறைக்காமல், தாம் சொல்ல நினைத்ததைச் சொல்லிவிடுகின்ற இயல்புடையவர் இவர்.

"என் தாய் மாமனுக்கு வாழ்க்கைப்பட்ட அம்மையாரும் சற்றுக் கடுமையானவர்கள். அவர்களின் சிரித்த முகத்தை நான் ஒருநாளும் பார்த்ததில்லை" என மாமன் மனைவிபற்றிக் கூறுவதும்;

"இராமநாதபிள்ளை, கரும்பலகையில் $\frac{PV}{T} = \frac{P_1V_1}{T_1}$ என்னும் வாய்பாட்டை எழுதி விளக்கினார். அவருக்கு விளக்குவதற்கு வேண்டிய ஆங்கில அறிவு இல்லையா, அவர் விளக்கத்தைப் புரிந்துகொள்ளுவதற்கேற்ற ஆங்கில அறிவு என்னிடம் இல்லையா என்பது அந்த ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். நான் 'விளங்கவில்லையே' என்றேன். மேடையிலிருந்து இறங்கி வந்து என் கன்னங்கள் வீங்குமளவுக்கு மாறி மாறி அறைந்தார். மீண்டும் மேடையேறி அதே பாடத்தையே படித்தார். சொல்வதையே சொல்லும் கிளிப்பிள்ளையானாரேயன்றி வேறு விதமாய் மாற்றிச் சொல்லும் திறமை அவரிடம் இல்லை என்பதை உணர்ந்தேன்" எனத் தமக்கு வேதியியலைக் கற்பித்த ஆசிரியர் பற்றிக் கூறுவதும் இதற்குச் சான்றுகளாம்!

தமக்குத் தலைமையாசிரியப்பணி கிடைத்தது என்று ஆசிரியர் கூறுவதோடு இந்நூல் நிறைவுறுகின்றது. ஆசிரியப்பணி

இவருடைய உள்ளம் கவர்ந்த பணி. "ஆசிரியப்பணி என்பது சீதாசிரியனின் பொறுப்பைப் போன்றது. அப்பணியுடன் ஒரு பொறுப்பும் இணைந்தே வருகின்றது. நாம் என்றும் அப்பணிக்கு நம்மைப் பொருந்துமாறு அமைத்துக்கொள்வதே அது" என்பது ஆசிரியப்பணிபற்றிய ஆசிரியர் கருத்து. ஆசிரியப்பணி ஏற்ற அவர் அதனைத் திறம்பட அனைவரும் போற்றும் வகையில் கடமையுணர்வுடன் செய்து வந்தார் என்பதை அனைவரும் நன்கு அறிவர்.

பேராசிரியர் ரெட்டியார் அவர்களிடம் காரைக்குடியில் அழகப்பர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் மாணவனாய் இருக்கும் நற்பேறு எனக்குக் கிட்டியது. 1952-53இல் அவர் மாணவனாய் இருந்தேன். "நான் காரைக்குடியில் பயிற்சிக் கல்லூரியில் பணியாற்றியபோது ஒரிருவரைத் தவிர எல்லோருமே உற்சாகமாய் வகுப்புகளைக் கையாண்டோம். அதிகமாய் நூல்களைப் பயின்றோம்; அற்புதமாய்க் கற்பித்தோம்" என்னும் பேராசிரியர் ரெட்டியார் கூற்று நூற்றுக்கு நூறு உண்மை என்பதை அவரிடம் பயின்ற மாணவன் என்ற முறையில் என்னால் துணிந்து கூறமுடியும்.

அவர் மாணவன் என்னும் ஒரு தகுதி கருதியே எனக்கு இந்நூலுக்கு அணிந்துரை எழுதும் பெருவாய்ப்பினை ஆசிரியர் நல்கியுள்ளார். அவருக்கு என் உளமார்ந்த நன்றி.

இற்றை நாள்வரையிலான நிகழ்ச்சிகளையும் நினைவலை களையும் ஆசிரியர் ஐந்து தொகுதிகளில் வெளியிட உள்ளார்கள். பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் எதுபற்றியும் எத்துணை தொகுதிகள் வேண்டுமானாலும் எழுதக்கூடிய அறிவும் ஆற்றலும் வாய்ந்தவர்கள். அவர்கள் எழுதும் அத்தனையும் முத்தனையன வாகவே இருக்கும். இப்பெருந்தகை இன்னும் பல தொகுதிகளை நினைவுக் குமிழிகளாய் வெளியிடுகின்ற வகையில் நெடுநாள் வாழ்ந்து தமிழுக்குத் தொண்டாற்ற வேண்டுமெனும் என் பெருவிருப்பினைத் தெரிவித்து வணங்கி அமைகின்றேன்.

நூல் ஆக்கம்:	பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்
வகைமை	தன் வரலாறு
வெளியீடு	பாரி நிலையம், சென்னை. (1988)

10

விக்கிரமன் கதைகள்

பூக்காட்டில் கொய்த மலர்

டாக்டர் விக்கிரமன் தமிழகத்தின் தலைசிறந்த புதின எழுத்தாளர்களுள் ஒருவர். அவர் எழுதியுள்ள வரலாற்றுப் புதினங்கள் மிகுபுகழ் பெற்றவை. புதினம் எழுதுவதையே போக்காய்க் கொண்டுள்ள அவர், இடையே பல சிறுகதைகளையும் எழுதியுள்ளார். 1945ஆம் ஆண்டு தொடங்கி 1984ஆம் ஆண்டு வரையிலான கால எல்லையில் அவர் எழுதியுள்ள சிறந்த 30 சிறுகதைகள் தொகுக்கப்பெற்று இந்நூல் வடிவம் பெற்றுள்ளன.

சமூகச் சிறுகதையாளர்

புதினங்களுள் வரலாற்றுக் கதைகளையே தேர்ந்தெடுத்துக் கொண்டுள்ள அவர், சிறுகதைகளில் சமூக நிகழ்ச்சிகளையே படம் பிடித்துக் காட்டுகிறார். இந்நூலிலுள்ள 30 கதைகளுள் இரண்டு மட்டுமே வரலாற்றுச் சாயல் கொண்டுள்ளன. நெடுங்கதைகட்கு வரலாற்று நிகழ்ச்சிகளையும், சிறுகதைகட்குச் சமூக நிகழ்ச்சிகளையும் கருவாய் அமைத்துக்கொள்வதை இவர் இயல்பாய்க் கொண்டுள்ளார் என்பது தெரிய வருகிறது.

சிறுகதைத் தோற்றம்

மேனாட்டு இலக்கியத் தாக்குரவால் தமிழில் சிறுகதை இலக்கியம் தோன்றியதென்பர். உரைநடையில், மேனாட்டார் கூறியுள்ள இலக்கணப்படி அமைந்த சிறுகதைகளைப் பொறுத்தவரை இக்கூற்று உண்மையானதாகலாம். ஆனால், தமிழில் இலக்கியங்கள் தோன்றிய காலந்தொட்டே சிறுகதைகள் இருந்து வந்துள்ளன. மருத்துவம், கணிதம், சோதிடம் போன்ற அறிவியல் சார்ந்த கலைகள்கூடத் தமிழில் செய்யுள் வடிவில் எழுதப்பட்டு வந்துள்ளன. தமிழ்க்காப்பியங்கள் இன்றைய நெடுங்கதை என்றும்,

தனிப்பாடல்கள் பல இன்றைய சிறுகதை என்றும் சொல்லத்தக்க வகையில் அமைந்துள்ளன.

ஒரு சிறிய இல்லத்தே தூணைப் பற்றி நின்றவண்ணம் இளமகள் ஒருத்தி முதிய தாய் ஒருத்தியிடம் கனிவாய், "நின் மகன் எங்குளன்?" எனக் கேட்கிறாள். முதியவளோ, "அவனா! போர்க்களத்திலேயல்லவா அவன் இருப்பான். புலியிருந்த குகை போன்று இதோ அவன் இருந்த வயிறு" எனத் தன் வயிற்றைக் காட்டினாள். ஆறு அடிகள் கொண்ட புறநானூற்றுப்பாடல் ஒன்றன் கருத்து இது.[1] வீரச்சுவையை எடுத்தியம்பும் சிறுகதை தானே இது!

ஒருவனும் ஒருத்தியும் தம்முளே காதல் கொள்கின்றனர். அவன் அவளைச் சந்திக்க விழைகிறான். ஒரு நாள் பகற்போதில் அவன் அவள் வீட்டின் முன்னே வந்து நின்று, 'உண்ணுநீர்' கேட்கிறான். தாய் தன் மகளிடம், செம்பில் நீர் கொடுத்தனுப்புகிறாள். வெளியே நீர் கேட்பவன் தன் காதலன் என்றறியாமலேயே அவள் நீர் எடுத்து வருகிறாள்; அவனைப் பாராமலேயே செம்பை நீட்டியதும் அவன் செம்பைப் பற்றாது அவள் கையைப் பற்றுகிறான். காதலன் என அறியாத அவள், "அம்மா" என வாய் விட்டுக் கூவுகிறாள். கைப்பற்றியவன் காதலன் தான் என்றறிந்ததும் அன்னையை அழைத்துவிட்டோமே என்று துணுக்குறுகிறாள். மகளின் குரல் கேட்டு வெளிவந்த அன்னை, 'என்ன' என்று கேட்டபோது மகள், "ஒன்றுமில்லை, அம்மா! நீர் தந்தேன். குடிக்கும் போது அவருக்கு விக்கிக்கொண்டது" என்றாள். தாயோ பரிவுடன் அவன் தொண்டையை நீவிக் கொடுக்க, அப்போது காதலர் இருவரும் கண்களால் பேசிக் கொள்கின்றனர் என்பது ஒரு கலித்தொகைப்பாடல் ஓவியம்.[2] இவ்வாறு வாழ்க்கையின் அக, புற நிகழ்ச்சிகள் சிறுகதை ஓவியங்களாய்ச் சங்க இலக்கியங்களில் ஆங்காங்கே மிளிர்வதைக் காணலாம்.

சிறுகதை வளர்ச்சி

சிறுகதை இலக்கியம் இப்போது மிகவும் வளர்ந்த நிலையில் உள்ளது. முதன் முதலில் வீரமாமுனிவர் 18ஆம் நூற்றாண்டில் பரமார்த்த குரு கதை எழுதினார்; 19ஆம் நூற்றாண்டில்

---

1. புறநானூறு, 86
2. கலித்தொகை, 51

தாண்டவராய முதலியார் பஞ்ச தந்திரக் கதைகளை எழுதினார்; வீராசாமிச் செட்டியார் இயற்றிய விநோதரச மஞ்சரியிலும் பல கதைகள் உள்ளன. இவற்றை இன்றைய சிறுகதைகளோடு ஒப்பிட இயலாது. 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாரதியார் சில சிறுகதைகள் எழுதினார். வ.வே.சு. ஐயரும் எழுதினார். இவை சிறுகதை இலக்கிய வித்துகள் எனலாம். பின்னர்ப் புதுமைப்பித்தன், கு.ப.ரா. போன்றோர் எழுதிய காலத்தே சிறுகதை இலக்கியம் பலரைத் தன்வழி ஈர்த்து அவ்வழியில் நடைபோடத் தூண்டியது. 'கல்கி' எழுதத் தொடங்கியதும், அரசியலாயினும் பொருளாதாரமாயினும் அன்றிச் சமூக சீர்திருத்தமாயினும் அதனைச் சிறுகதையில் அடக்கிச் சுவைக்கச் செய்யமுடியும் என்னும் நிலை மலர்ந்தது. பல்வேறு துறைகளிலும் சிறுகதை தன் கால்களை அகலப் பதிக்கலாயிற்று.

இதழ்கள் சிறுகதையின் வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிந்தன எனலாம். 'மணிக்கொடி' போன்ற இதழ்கள் சிறுகதை எழுதுவதற்குப் பேரூக்கம் அளித்தன. எந்த இதழாயினும் அதில் சில சிறுகதைகள், ஓரிரு தொடர்கதைகள் இருந்தாக வேண்டும் என்பது இன்றியமையாததாகிவிட்டது. எனவே, இதழ்கள் பெருகப்பெருகச் சிறுகதை எழுதுவோரின் எண்ணிக்கையும் மிகுதியாயிற்று. சிறந்த கதைகள் வெளிவரும் இதழ்களே மக்களிடம் செல்வாக்குப் பெறுகின்றன என்பதால் சிறந்த கதையாசிரியர்களை நாடி அவர்களின் கதைகளைப் பெற்று வெளியிடும் நிலை இன்று மலர்ந்துள்ளது. ஆசிரியர்கள் கதைகளை எழுதி அவற்றை நேரடியாய் நூலாய் வெளியிடும் நிலை பெரும்பாலும் இல்லையென்றே சொல்லலாம். இதழ்களில் வெளிவந்த கதைகளே பின்னர்த் தொகுக்கப்பட்டு நூலாய் வெளிவரும் நிலை நிலவி வருகிறது. இந்நூலும் திரு. விக்கிரமன் அவர்கள் அமுதசுரபி, கல்கி, குண்டூசி, ஜ்வாலா, சுதேசமித்திரன், தினமணி ஆகிய இதழ்களில் எழுதியுள்ள கதைகளின் தொகுப்பேயாம். இவ்வகையில் சிறுகதை வளர்ச்சிக்கு இதழ்களின் தொண்டு பெருந்தொண்டு எனலாம்.

கதைத் தொடக்கம்

ஒரு நிகழ்ச்சியை அல்லது உரையாடலைத் தோற்றுவித்து அதிலிருந்து கதை எழுதுவது என்ற முறையில் டாக்டர் விக்கிரமனுடைய கதைகள் அமைகின்றன.

விக்கிரமனும் அவர் நண்பரும் பேசிக்கொண்டிருக்கின்றனர். "அதிர்வெடியுடன் பழகும் வாணக்காரனின் உள்ளம் ஒவ்வொரு நொடியும் பெருந்துன்பத்தை அனுபவித்துக்கொண்டிருக்கும்" என்று கூறிய நண்பரிடம், தமக்கு அதிர்வெடியைக் கேட்டாலே பயம் என்றபோதிலும் நண்பருடைய வாயைக் கிண்டிவிட, "தொழில் செய்பவனுக்குத் துன்பமென்னப்பா?" என்கிறார். உடனே நண்பர், வாணக்காரன் ஒருவன் கதையைச் சொல்ல ஆரம்பிக்கிறார்.

ஆசிரியர் மருத்துவ மனையில் படுக்கையில் படுத்திருக்கிறார். பக்கத்துப் படுக்கையில் சின்னக் கவுண்டன் படுத்திருக்கிறான். அவனுடனேயேயிருந்து பெண் ஒருத்தி கண்ணும் கருத்துமாய் அவனைக் கவனித்து வருகிறாள். கவுண்டரிடம் ஆசிரியர், "கவுண்டா.... உனக்குத் தொண்டு செய்யும் உன் மனைவி கண்ணகி, நளாயினியைப் போலக் கணவனைப் பாதுகாக்கிறாளப்பா" என்றதும், கவுண்டர் எழுந்து வந்து, ஆசிரியர் படுக்கையருகே அமர்ந்துகொண்டு, "சாமி! இவ இன்னும் என் மனைவியாகலே...." எனத் தொடங்கித் தாமும் அவளும் அங்கிருக்க நேர்ந்ததுபற்றிய கதையைச் சொல்கிறார். இதுவே, 'பொல்லாத மனசு' என்னும் கதை.

இந்நூலிலுள்ள பெரும்பான்மைக் கதைகள் இவ்வாறே அமைந்துள்ளன. ஆசிரியர் கதையைத் தொடங்கக் கையாளும் ஒரு தனித்த உத்திமுறை இது எனலாம்!

கதை முடிப்பு

சிலர், பிரச்சினைகளை எழுப்பி, அவற்றிற்கு முடிவு சொல்லாமலேயே, படிப்போர் மனநிலைக்கேற்ப முடிவு காணும் வகையில் கதையை முடித்துவிடுவதுண்டு. திரு. விக்கிரமனோ கதைகட்குத் தெளிவான முடிவுகளைத் தந்துவிடுகிறார். இந்நூலில் கடைசிக் கதை, 'வீரமும் ஈரமும்' என்பது. மதுரை திருமலை நாயக்கர்மீது மைசூர் மன்னர் நரச ராஜா படையெடுத்து வருகிறார். அப்போது திருமலை நாயக்கர் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையிலிருக்கிறார். சேதுமன்னர் சடைக்கதேவருக்குத் திருமலை பெருங்கொடுமை இழைத்திருந்தமையால் இராமநாதபுரம் சேதுபதியின் படை மைசூர்ப் படைகளுடன் சேர்ந்து கொள்ளுமோ எனப் பயங்கொள்ளுகிறார், திருமலை. நாயக்கரின் மூத்த மனைவி மாறுவேடத்தில் சென்று சேதுபதி மன்னனைக் காண்கிறாள். இராமநாதபுரம் படை திருமலைக்கு உதவியாய் மதுரை நோக்கி வருகிறது என்ற அளவில் இக்கதை முடிகிறது.

திருமலை மன்னன் வென்றானா இல்லையா என்ற முடிவு கதையில் சொல்லப்படவில்லை. இந்த ஒரு கதை மட்டுமே முடிவு எப்படி அமைந்ததோ என்று முடிவு செய்ய இயலா வகையில் அமைந்துள்ளது. மற்ற எல்லாக் கதைகளிலுமே முடிவினை நாம் அறியமுடிகிறது. தெளிந்த முடிவுடன் கதை புனைவது திரு.விக்கிரமனின் கதை முடிப்பு உத்தியாய் விளங்குகிறது.

கதைக்கரு

கதை எழுதுவதற்கு ஏதேனும் ஒரு செய்தி அல்லது நிகழ்ச்சி அடிப்படையாயிருக்க வேண்டும். அது கதைக்கரு எனப்படுகிறது. மனித உணர்ச்சிகள், குறைபாடுகள், முரண்பாடுகள் ஆகியவை கதைக்கருவைத் தோற்றுவிக்கின்றன. கதாசிரியர்கள், வாழ்வில் தாங்கள் காண்பவற்றையும் உணர்பவற்றையும் கருவாய்க்கொண்டு தம் கற்பனையையும் இழையோடவிட்டுக் கதைகளைப் புனைந்து விடுகின்றனர். வாழ்வில் நடந்த சம்பவங்களைக் கதைகளாய் எழுதலாம்; கற்பனையாகப் புனைந்தும் எழுதலாம். சிறு கதைகளில் கற்பனைப் புனைவுகளைவிட உள்ளது கூறலே சுவை பயக்கும் என்பதைக் கருத்திற்கொண்டு டாக்டர் விக்கிரமன் வாழ்வியல் நிகழ்ச்சிகளையே கதைகளாய்ப் படைத்துள்ளார். நடக்க முடியாச் சம்பவங்கள் அல்லது அதீத கற்பனைகள் எனச் சொல்லுமளவுக்கு இத்தொகுப்பில் எக்கதையும் இல்லை.

இளமையிலேயே மனைவி தம்மை நிரந்தரமாய்ப் பிரிந்து வாழ்ந்த சூழலிலும் சிறிதும் சலனமின்றி ஒழுக்கமே உயிரென வாழ்ந்து வந்த வீணையாசிரியர் கேசவராம் ஒருகணம், தம்மிடம் இசை பயிலும் வாணியிடம் தவறாய் நடக்க நினைத்துத் தூங்குகின்ற அவளைத் தொடுகிறார். உடனே அவர் மனச்சாட்சி உறுத்த மீண்டு போய், "சிவசக்தி! உலக மாதா! என்னைக் காப்பாற்றிவிட்டாய், தேவி! இருந்தாலும் இந்த விரல்கள் பாவம் பண்ணிவிட்டன. இதற்குத் தண்டனை வேண்டும்" என்று, எரியும் கற்பூரத்தினால் தம் கைவிரல்களைச் சுட்டுக்கொள்ளுகிறார். இத்தகைய கேசவ ராமர்கள் இன்றும் இருக்கத்தான் செய்கிறார்கள் (நல்லதோர் வீணை கதை).

இவ்வாறு, தாம் அறிந்த உணர்ந்த நிகழ்ச்சிகளை உள்ளத்தே பதித்து, தாம் படைக்கும் கதைமாந்தர்களோடு ஒன்றுகலந்து, உணர்வுப்பூர்வமாய்த் திரு.விக்கிரமன் அவர்கள் எழுதுகிறார்களாதலின் கதைகள் அனைத்தும் உரமூட்டமும் உயிரோட்டமும் கொண்டு விளங்குகின்றன.

உள்ளடக்கம்

"எந்தக் கதைக்கும் ஒரு தொடக்கம், இடையிலே சில சம்பவங்கள் அல்லது மனோ தர்மத்தினால் ஏற்பட்ட பின்னல், ஆரோகண அவரோகண கதிகள் (ஏற்ற இறக்க நிலைகள்), முடிவு முதலியவற்றை ஆசிரியர் தம் விருப்பம்போல் கையாண்டு கதைக்கு ஒரு முழுமையான வடிவம் கொடுக்க வேண்டும். கதைக்கு வேண்டியது உண்மைக்கு - எதார்த்த நிலைக்கு - புறம்போகாத கதை அமிசம் - அஃதாவது, நடைமுறைச் செய்திகளைப்பற்றி எழுதுவது நல்லது" என்னும் சிதம்பர ரகுநாதனின் இலக்கியத் திறனாய்வு உரைப்பதுபோல இவருடைய கதைகள் நடைமுறைச் செய்திகளையே உள்ளடக்கமாய்க் கொண்டுள்ளன.

குடும்பக் கதைகள்

பொழுதுபோக்கிற்கெனவே எழுதப்பட்ட கதைகள், ஆழ்ந்து சிந்தித்து அறியவேண்டிய உணர்ச்சிக் கதைகள், சமுதாயக் குறைபாடுகளை நையாண்டி செய்யும் அங்கதக் கதைகள், கொள்கை பரப்புக் கதைகள், மனித வாழ்க்கையைப் பல்வேறு கோணங்களில் படம் பிடித்துக் காட்டும் குடும்பக் கதைகள், குறிப்பிட்ட சில குறிக்கோள்களுக்காக எழுதப்பட்ட கதைகள், தனி மனிதனின் மனப்போராட்டங்களை விவரிக்கும் கதைகள், வாழ்வின் மேம்போக்கான சலசலப்புகளை ஒதுக்கிவிட்டு உயர்ந்த பண்புகளை விளக்கும் வழிகாட்டிக் கதைகள் எனக் கதைகளைப் பல்வேறு வகையாய்ப் பாகுபடுத்துவர்.

டாக்டர் விக்கிரமனின் கதைகளில் இத்துணை தன்மைகளும் ஆங்காங்கே காணக் கிடக்கின்றனவெனினும் பொதுவாய் இந்நூலிலுள்ள இவருடைய கதைகள் குடும்ப நிகழ்ச்சிகளை - பிரச்சினைகளை - வெளிப்படுத்தும் கதைகளாகவே இருந்திடக் காண்கிறோம்.

இளைஞன் ஒருவன் தன் முறைப்பெண்ணை மணப்பதற்கு அப்பெண்ணின் தந்தை உடன்பட மறுக்கிறார். அவ்விளைஞன் இசைப்பெருமையால் நிறையச் சம்பாதிக்கத் தொடங்கியதும் தன் மகளை அவனுக்கு மணம் முடித்துத்தர அவர் முன்வருவதையும், ஆனால், அவ்விசையே அவ்விளைஞன் முடிவுக்குக் காரணமாய் அமைய, அப்பெண் பெரும் வருத்தத்திற்காளாவதையும் ஒரு கதை சுட்டுகிறது (புதுவெள்ளம்).

குழந்தையின் இடைவிடா அழுகையினையும், அதன் காரணமாய் மனைவி பேசுவதையும் நச்சரிப்பாய்க் கருதியவன்,

அவர்கள் சில நாள் பிரிந்தவுடன், அந்தக் கூச்சலிடையே இருப்பதுதான் நிம்மதி என்றுணர்வதை ஒரு கதை செப்புகிறது (நிம்மதி).

தங்கைக்கு அவள் விரும்பியவனையே மணம் முடித்து வைக்க முன்வருகிறான், அண்ணன். தந்தையோ பிடிவாதமாய் அவளை மற்றொருவனுக்கு மணமுடிக்க ஏற்பாடு செய்கிறார்; இதனால் வீட்டைவிட்டே வெளியேறி வெளிநாடு சென்ற அண்ணன், முடிவில் தங்கை தான் விரும்பியவனையே மணக்க நேர்ந்த செய்தியறிந்து, தன் இலட்சியம் வெற்றியடைந்துவிட்டது என்று மகிழ்வதுபற்றியது, ஒரு கதை (கதையும் கல்யாணமும்).

ஒரு சுவை ஆட்சி

புதினம் வேறு; சிறுகதை வேறு. புதினம் பல சுவைகளைக் கொண்டதாயும் பல நிகழ்ச்சிக் கோவையாயும் இருக்கும். சிறுகதையில் ஒரு சுவைதான் மிகுந்து நிற்கும். பிற சுவைகளின் சாயல் இடையிடையே இருக்கலாமெனினும் ஒரு சுவை மட்டுமே மேலோங்கி நிற்கவேண்டும்.

கேசவன், அச்சுக்கூடத்தில் பணிபுரிபவன். மணமாகி இரண்டாண்டுகளாகியும் மனைவியை எங்கும் அழைத்துப் போகக்கூட முடியாதபடி வேலை. வெளியே சென்றால் கையில் செலவுக்குக் காசில்லாதது மற்றொரு காரணம். கிராமத்திலிருந்து மைத்துனி வந்திருக்கிறாள். அவளை அழைத்துச் சென்று கடற்கரையைக் காட்ட மனைவி வற்புறுத்த, அன்று வேலை நிறுத்தத்தினால் ஓய்வு கிடைக்க, மனைவியையும் மைத்துனியையும் அழைத்துக்கொண்டு கிளம்புகிறான். மைத்துனிக்கு எதையும் வாங்கிக் கொடுக்கக் காசில்லாத நிலைமை; கடைவீதியில் ரிப்பனைப் பார்த்த மைத்துனி அதை வாங்கித் தருமாறு கேட்டும் முடியாத ஏக்கம். அவள் ஊருக்குத் திரும்பப் புறப்படுகின்ற அன்றாவது அதை வாங்கித் தரவேண்டுமென எண்ணுகிறான்! அவளை இரயில் நிலையத்துக்கு அழைத்து வருமாறு மனைவியிடம் சொல்லிவிட்டு நடந்தவன், வழியே ஒருவர் அவனைக் கூலியாள் எனக் கருதிப் பழக்கூடையை எடுத்து வரச் சொல்ல, அதைத் தூக்கிப் போய்த் தந்ததில் கிடைத்த ஆறணாவைக் கொண்டு நீல ரிப்பன் வாங்கிக்கொண்டு ரெயில் நிலையத்துக்கு விரைகிறான். அங்கே அந்தப் பெண், தலையில் நீல ரிப்பனோடு நிற்கிறாள். கேசவனுக்கு வியப்பு! மனைவி பார்வதி அவ்வப்போது அரையணா, காலணாவாகத் தான் சேர்த்து வைத்ததைக்கொண்டு அதனை வாங்கித் தந்திருப்பதை உணர்கிறான். உடனே பூரிப்புடன்

"பார்வதி! இப்படித் திரும்பேன்" என்று கூறிக்கொண்டே அவள் முகத்தைத் திருப்பிப் பூவைச் சூட்டுகிறான். மனைவியின் பின்னலின் நுனியிலே கட்டித் தொங்கிய சணலை அறுத்தெறி கிறான்; ரிப்பனைக் கட்டுகிறான். பார்வதியின் முகம் வெட்கத்தால் சிவக்கிறது; கேசவனுக்கோ மனத்தில் பெரிய நிம்மதி உண்டாகிறது. இப்படியொரு கதை (நீல ரிப்பன்).

இக்கதையில் 'கையில் காசில்லையே' என்ற அவலச்சுவை மட்டுமே பேரிடம் பெறுகிறது. மனைவி தலையில் பூச்சூடி, ரிப்பன் கட்டும் போது கேசவன் மனத்தில் ஏற்படும் மகிழ்ச்சி, பெருமிதச் சுவையைத் தருகிறது எனினும், கதையின் உயிர்ப்புச் சுவையாய் விளங்குவது அவலச்சுவையேயாம்! இவ்வாறே மற்றக் கதைகளிலும் ஒன்பான் சுவைகளுள் ஏதேனும் ஒரு சுவை மட்டுமே மற்றச் சுவைகளினும் மேம்பட்டுக் கதையின் முக்கியச் சுவையாய் அமைந்திருப்பதை உணரலாம்.

ஒரே நிகழ்ச்சியின் விளக்கம்

"சிறுகதையின் ஜீவநாடி ஒன்று. அதில் எடுத்தாளப்படும் சம்பவம் அல்லது நிகழ்ச்சி தனிப்பட்ட ஒன்றாய் இருக்கவேண்டும்" என்கிறார், புதுமைப்பித்தன். "வாழ்வின் ஒரேயொரு அமிசத்தை மட்டும் பெரிதுபண்ணுகிறது, சிறுகதை. எடுத்துக்கொண்ட ஒரு பொருளை மட்டுமே செதுக்கிச் சித்திரவேலை செய்யப்படுகிறது, சிறுகதையில்" என்றும் சிறுகதைக்கு இலக்கணம் வகுப்பர், ஆய்வாளர். இந்த இலக்கணத்துக்கு உட்பட்டனவாகவே இந்நூலிலுள்ள அனைத்துக் கதைகளும் அமைந்திருக்கக் காண்கிறோம்.

கூட்டுக் குடும்பத்தில் மூர்த்தி, வேதா எனும் கணவன் மனைவி, தனித்து ஒருநாள்கூடப் பேசி மகிழ்ந்து இன்பமாய் இருக்கக் குழந்தைகள், நாத்தனார், மைத்துனி என அக்குடும்பத்தின் பெருக்கம் இடந்தரவில்லை. அவர்கள் எல்லாம் வெளியூர் சென்றுவிட்ட ஒருநாள், இன்றாவது நிம்மதியாய் ஊரைச் சுற்றிப் பார்ப்பதோடு மனம்போலப் பேசி மகிழலாம் என்று வெளியில் புறப்படுகின்றனர். பணத்தை எடுத்துச் செல்ல மறந்துவிட்டதை வழியிடையே அறிந்து, வீடு சென்று பணத்தை எடுத்துக்கொண்டு திரும்பலாம் என வந்தனர். அங்கோ பம்பாயிலிருந்த மூர்த்தியின் அத்தை, குழந்தைகளுடன் வந்து நின்றாள். அதற்கு மேல் எங்கே வெளியே போக நேரம்! "கடைக்குப் போய்க் காய்கறி வாங்கி வாருங்கள். நான் அடுப்பை மூட்டுகிறேன்" என்கிறாள், வேதா! (ஒருநாள் நிம்மதி).

கூட்டுக் குடும்பத்தில் கணவன் மனைவி தனித்திருக்க முடியாத ஒரு பிரச்சினை மட்டுமே இக்கதையில் விவரிக்கப் படுகிறது. மற்றக் கதைகளும் இப்படியே.

கதைப்பெயர்

கதைகட்குப் பெரும்பாலும் நிகழ்ச்சிகளின் முக்கியத்துவத் தின் அடிப்படையில் பெயர்கள் தரப்படுவது வழக்கம். டாக்டர் விக்கிரமன் அவர்களும் இந்தப் பொதுப் போக்கையே கையாண்டுள்ளார்.

இரயிலில் தங்கை வீட்டுக்குப் புறப்பட்டாள் பெண் ஒருத்தி. குழந்தை விடாமல் அழுதது. விகாரமான தோற்றமுடைய ஒருவனைக் காட்டி, "பூச்சாண்டி பிடித்துக்கொள்வான்; அழாதே" என்று அக்குழந்தையின் தாயும் தந்தையும் அழுகையை அடக்குகின்றனர். 'பூச்சாண்டி என்கிறோம்! அவனுக்கும் பெண்டாட்டி குழந்தைகள்னு இருக்காதா' என நினைக்கிறாள், அக்குழந்தையின் தாய்! மாலையில் அவள் தன் வீடு திரும்பும்போது அந்தக் கோர உருவமுடையவனை வழியில் காண நேர்கிறது. அருகே அவன் மனைவி. அவன் இவள் குழந்தையைப் பார்த்து, "குழந்தே! அழாம இருந்தியா?" என்று கேட்கிறான். நீண்ட பற்கள்; கோர முகம்; அவனைச் சுற்றிக் குழந்தைகள் கும்மாளமிட்டுக் கொண்டிருந்தனர் எனச் சொல்கிறது, ஒரு கதை (பூச்சாண்டி). உறவுக்கு அருவருப்பு இல்லை என்பதைக் கூறும் இக்கதையில் அவனைப் பூச்சாண்டியாய்க் காட்டி, குழந்தையை அடக்கியதால் கதையின் பெயர் 'பூச்சாண்டி' எனத் தரப்பட்டுள்ளது.

ஆனால், ஒரு கதையில் (ஜீவநாதம்) மட்டும் ஒரு புது முறையைக் (அதுதான் பழைய முறை என்கிறார், ஆசிரியர்) கையாண்டுள்ளார். அவரே குறிப்பிடுகிறார் : "ஜீவமாலாவுக்கும் ரங்கநாதத்துக்கும் திருமணம் நடந்தது. நீங்கள் சந்தேகக் கண்ணோடு பார்ப்பது எனக்குத் தெரியும். இந்தக் கதைக்கு 'ஜீவநாதம்' என ஏன் பெயர் கொடுத்தேன் என்றுதானே? பழைய காலமுறை மீண்டும் வரட்டுமே என்றுதான் கதைநாயகி ஜீவமாலாவையும் நாயகன் ரங்கநாதம் பெயரையும் சேர்த்து விட்டேன்! எப்படி என் கற்பனை?" எனக் கேட்டு இந்தக் கதைக்குப் பெயரமைந்த விதத்தை விளக்கிவிடுகிறார்.

ஒருவன் ஒருத்தியைக் காதலிக்கிறான். காதலியோ, காதலனிடம் அவன் தாயைக் கொன்று அவளுடைய இதயத்தை எடுத்து வந்தால்தான் மணப்பேன் என்கிறாள். காதல் வெறி

கொண்ட அவனும் தாயைக் கொன்று அவளுடைய இதயத்தை அறுத்தெடுத்துக் கையிலேந்தியவண்ணம் காதலியை நோக்கி ஓடுகிறான். இடையிலே கல் தடுக்கிக் கீழே வீழ்கிறான். அப்போது அந்தத் தாயின் இதயம், "மகனே! மெதுவாய்ச் செல்லக்கூடாதா? கீழே வீழ்ந்ததில் அடிபட்டுவிட்டதா? வலிக்கிறதா? நிதானமாய்ப் போ, அப்பா" என்றதாம்! இஃது ஒரு பிரெஞ்சுக் கதை. "பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு" என்னும் பழமொழியை மெய்ப்பிப்பதாய்த் தாயன்பின் சிறப்பை விளக்குகிறது, இக்கதை.

தாயன்பை இதே போன்று அருமையாய் விவரிக்கிறது நம் ஆசிரியரின் 'தெய்வத்தாய்' என்னும் கதை. தாயன்பு என்றும் எந்நிலையிலும் குறையாத - குறை காணாத - ஒன்று என்னும் ஒரு செய்தியை மட்டுமே 'தெய்வத்தாய்' தெளிவுபடுத்துகிறது.

சிறுகதைச் சேக்கிழார்

ஒவ்வொரு கதையையும் ஏதோ ஒரு குறிக்கோளுடன் எழுதிச் செல்கிறார், ஆசிரியர். தொழிலைத் திறமையுடன் செய்தால் மட்டும் போதாது, அதனைத் தூய்மையுடன் செய்யவேண்டும்; இல்லையேல் அழிவுதான் மிஞ்சும் என்பது ஒரு கதையின் கருத்து (வாணக்காரன்).

மஞ்சட்கயிற்றைக் கழுத்தில் முடிந்து போட்டால்தான் கணவன் - மனைவி. அதன் முன்னர் அவர்கள் ஓரிடத்திலிருக்க நேர்ந்தாலும் அந்த உரிமையை எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதைச் சுட்டுகிறது, மற்றொரு கதை (பொல்லாத மனசு).

எந்தச் சூழ்நிலையிலும் பெண் ஒருத்தி உறுதியாய் இருந்தால் கற்பு நெறி வழுவாது வாழ முடியும் என்பதை விளக்குகிறது, ஒரு கதை (ஜன்னலுக்கு வெளியே).

வாழ்வில் தவறே செய்யாதவர் சந்தர்ப்பச் சூழ்நிலைகளால் தவறும்போது அத்தவற்றுக்காக இரங்கி அத்தவற்றினை ஒத்துக் கொள்ளும்போது அவர் இதயம் பிழைத்துவிடுகிறது என்பதைச் சுட்டுகிறது, ஒரு கதை (பிழைத்த இதயம்).

இவ்வாறு எந்தக் கதையைத் தொட்டாலும் அங்கே ஒரு கொள்கைப் பிடிப்பு - மரபு வழுவா நெறிமுறை இருந்திடக் காண்கிறோம். சுகி சுப்பிரமணியம் அவர்கள் புதுமைப்பித்தனைச் சிறுகதை வள்ளுவர் என்றும், கு.ப.ரா.வைச் சிறுகதை மன்மதன் என்றும் குறிப்பிட்டுள்ளார். பெரியபுராணத்தில் சேக்கிழார் ஒவ்வோரடியார் வரலாற்றிலும், 'இறைநெறியை' மையமாய்க் கொண்டு கதை கூறிச் செல்லும் பாங்கில் நம் டாக்டர் விக்கிரமன்

அவர்கள், நம் 'பண்பாட்டு நெறியை' மையமாய்க்கொண்டு கதைகள் புனைந்து செல்வதால் இவரை நாம் சிறுகதைச் சேக்கிழார் எனப் பெருமையோடு குறிப்பிடலாம்.

"சிறுகதையின் வடிவ அமைப்பிலே மிகவும் முக்கியம் என்னவென்றால், வார்த்தைகளைச் சிதறாமல் இயக்குவது; உறுதியற்ற முறையில் கதையை வளர்த்துவதும், அவசியமற்ற விதத்தில் தொடர்பற்ற நிகழ்ச்சிகளை அல்லது உணர்ச்சிகளை அல்லது கருத்துகளை அடுக்குவதும் கதையைச் சுமைதாங்கியாக்கி அப்படியே கீழே இறக்கிவிடும்" எனத் திரு. மீ.ப.சோமு அவர்கள் சுட்டியுள்ள நிறையை மேற்கொண்டும், குறைக்கு இடமின்றியும் என்றும் நிலைத்து நிற்கக்கூடியனவாய் இத்தொகுப்பில் உள்ள கதைகள் விளங்குகின்றன.

எடுத்துக்கொண்ட கருத்தைப் படிப்போர் உள்ளத்தே நிலை நிறுத்தும் வகையில் அமைந்த பாத்திரப் படைப்புகள், நுட்பமான கருத்துகளைத் தெளிந்த நீரோட்டம் போல் இட்டுச் செல்கின்ற இங்கிதமான நடை, ஒரு மையத்தைச் சுற்றிச் சுழல்கின்ற உணர்ச்சிகளுக்கு உருவம் கொடுக்கின்ற கட்டுக்கோப்பான வடிவம், பொழுதுபோக்குக்காகவன்றிக் குறிப்பிட்ட நோக்கத்துடன் சமூகத்தின் உள்ளோட்டத்தை உயிர்ப்பாய்க்கொண்ட பொருளடக்கம் ஆகியவை டாக்டர் விக்கிரமனின் சிறுகதைகளின் சீரிய பண்புகளாகும்!

இச்சிறுகதைச் சேக்கிழார் தொண்டு மேன்மேலும் சிறந்து அதன்வழி நாடு நலம் பெறுவதாகுக.

நூல் ஆக்கம் :	டாக்டர் விக்கிரமன்
வகைமை	சிறுகதை
வெளியீடு	விக்கிரமன் பதிப்பகம், சென்னை.(1986)

11

புதிய விடியல்கள்

தாராபாரதி

அருமை நண்பர் தாராபாரதி அவர்கள் இன்றைய முன்னணிக் கவிஞர்களுள் ஒருவர்; தமக்கென ஒரு தனித்த பாங்கினைக்கொண்டு எழுதி வருபவர். மரபுக் கவிஞர்கள், புதுக்கவிஞர்கள் என இரு வகையினர் இன்றைய கவிதையுலகில் இயங்கி வருகின்றனர் என்பதை நாமறிவோம். பொதுவாய் மரபுக் கவிதைகளில் யாப்பமைதிக்கும், புதுக்கவிதைகளில் கருத்து வீச்சுக்கும் முக்கியத்துவம் தரப்படுகிறது எனக் கூறப்படுவதுண்டு. இதனால் மரபுக் கவிதைகளில் கருத்துவீச்சு இல்லையென்றோ, புதுக்கவிதைகளில் எவ்வித ஒழுங்குமுறையும் இல்லையென்றோ கூறிவிட முடியாது. பாரதியும் பாரதிதாசனும் மரபுக் கவிதைகளில் வேகமாய்க் கருத்தைச் சொல்லி வெற்றி பெற்றிருக்கிறார்கள்! அதுபோன்றே இன்றைய புதுக்கவிஞர்கள் பலரின் கவிதைகளில் சிறந்த சொல்லொழுங்கை நாம் காண முடிகிறது.

கவிஞர் தாராபாரதி மரபுக்கும் புதுமைக்கும் ஓர் இணைப்புச் செய்வதுபோல இந்நூலை யாத்துள்ளார்; புதுக்கவிதைப் பாங்கில் மரபுக் கவிதைகளைப் படைத்துத் தந்திருக்கிறார்! இந்நூலில் புதுக் கவிதையின் வேகத்தையும் காண முடிகிறது; மரபுக் கவிதையின் யாப்பமைதியையும் சுவைக்க முடிகிறது. யாப்புக் குறையாத மரபு வடிவில், புதுமை எண்ணங்களைச் சிறப்பாய்ப் பாய்ச்சியிருக்கிறார்! இதுவே அவருடைய வெற்றிக்குக் காரணமாகிறது.

தலைப்புகளின் தனித்தன்மை

கவிஞரின் கவிதைத் தலைப்புகளே கலையழகுடன் மிளிருகின்றன. நாட்டைச் சூழ்ந்திருக்கும் தீமை இருள் அகன்று நன்மையொளி பரவ வேண்டுமெனும் கவிஞரின் ஆர்வம் இந்நூலுக்குப் 'புதிய விடியல்கள்' என்னும் தலைப்பைத் தந்திருக்கிறது. உள்தலைப்பு ஒவ்வொன்றிலும் தனியழகு

பொலிகிறது! நடுகல், வீரர்களின் பெருமையை உணர்த்த நடப்படுவது என்பதை நாமறிவோம். இமயம் நம் நாட்டுக்குப் பெருமை தருவது; எண்ணிப் போற்றத் தக்கது; ஆதலால், அதனை 'இமயம் ஒரு நடுகல்' எனச் சிறப்பிக்கிறார். 'வியர்வை வாகனம்', 'மூலையில் முடக்கிய மூலதனம்' என ஏழைகளை இலக்கியத் தலைப்புகளாக்கியுள்ளார். சாதி வேண்டாதது; 'எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம்' எனும் இனிய கனி இருக்கச் சாதியெனும் இன்னாத காய் தேவைதானா எனச் சிந்திக்கச் 'சாதிக் காய்' என்னும் தலைப்பைத் தந்துள்ளார். 'சாதிக்காய்' என்பது ஒரு மருந்துப் பொருள். 'சாதி' நோயை ஒழிக்க ஒரு 'சாதிக்காய்' நாடுவோம் என்ற உட்பொருளையும் அத்தலைப்பு தாங்கி நிற்கிறது. வயது முதிர்ந்தும் திருமணம் பெறாத பெண்களைப் 'பூவாத தாவரங்கள்', 'தேனிலவு காணாத தேய்பிறைகள்' எனத் தலைப்பிட்டுப் பாடியுள்ளார்.

இவையும் இன்னும் இவருடைய மற்றக் கவிதைத் தலைப்புகளும் இலக்கிய நயம் செறிந்தனவாய்த் தனியழகுடன் மிளிர்கின்றன.

தமிழ்

தாய்மொழி தமிழே! எந்தன்
  தனிமொழி முதலே வாழ்க

என, 'உலகத் தாய்மொழி தமிழே' என்ற அரங்கேற்றத்தோடு நூலைத் தொடங்கியுள்ளார்.

காய்மொழி சிலவற்றுள்ளும்
  கனிமொழி நீதான் என்பேன்!

என்பதாலே உல்க மொழியில் காய்த்த - அஃதாவது, முற்றிய மொழிகள் சிலவே; அவற்றுள் கனிந்து விளைந்த மொழி தமிழே எனத் தமிழின் தொன்மையையும் இனிமையையும் தனித்தன்மை யினையும் விளக்குகிறார்.

இலக்கிய நயம்

கவிஞரின் கவிதைகளில் இலக்கியத்திற்குக் கூறப்படும் அத்துணை நயங்களும் சிறந்து காணப்படுகின்றன.

வானத்தை,

விஞ்ஞானி களுக்கோர்
  விரிவுரைக் கூடம்நீ
மெய்ஞ்ஞானி களுக்கு
  வீட்டுவசதி வாரியம்நீ

என உருவகப்படுத்தியிருப்பது சிறப்பாய் உள்ளது. விஞ்ஞானிகளின் ஆராய்வுக்கு விண் இருப்பிடமாய் இருப்பதால் அஃது அவர்களின் விரிவுரைக்கூடமாகிறது. மெய்ஞ்ஞானிகள், வீட்டின்பத்தை விரும்புபவர்கள்! ஆதலின், வானத்தை மெய்ஞ்ஞானிகளின் 'வீட்டு வசதி வாரியம்' என்றுரைப்பது மிகவும் சுவையாய் உள்ளது.

இமயமலை பனி நிறைந்தது. சூரிய வெப்பத்தால் பனி உருகி நீராகி ஆறாய் உருவெடுக்கிறது. இதைக் கவிஞர்,

பகலவன் அருகில் வந்து
　　பனியாடை தொடுவான்; நாணம்
மிகவரும்; உருகிப் போவாய்!
　　மேலாடை உன்னை விட்டு
நெகிழ்ந்திட அருவி என்னும்
　　நீராடை புனைந்து கொள்வாய்

என அருமையான கற்பனையாக்கித் தருகிறார்!

ஒருமைப்பாட்டுணர்வு

'பாரதம் ஒரு வீடு' எனும் கவிதை ஒருமைப்பாட்டுணர்வை மிக அருமையாய் எடுத்துரைக்கிறது. பாரதத்தை ஒரு வீடாக்கி, அதிலுள்ள ஒவ்வொரு மாநிலத்தையும் அவ்வீட்டின் பகுதிகளாய் அவ்வவ் மாநிலங்கட்குரிய சிறப்புத் தன்மையுடன் இணைத்துச் சொல்வது பாராட்டத்தக்கது. மைசூர், சந்தன வாயிற்படியாகிறது; காசி, பூசையறையாகிறது; காஷ்மீர், வீட்டுத் தோட்டமாகிறது; தஞ்சாவூர், உணவுக்கூடமாகிறது! இவற்றின் நயம் அறிந்து இன்புறற்குரியது.

உற்றவர் அறுபது கோடியினர்
　　உறவாய் வாழ்வது ஒருவீடு

எனப் பாரதத்தைக் குடும்பமாக்கிப் பாடிப் பரவசம் எய்துகிறார்!

ஏழ்மைக் கொடுமை

ஏழைகளின் நிலையை இவர் துல்லியமாய்ப் படம் பிடிக்கிறார். உலகத்தைத் தாங்குகின்றவன் உழைப்பாளி. ஆனால், அவன் எதை எதையெல்லாம் தாங்க வேண்டியிருக்கிறது தெரியுமா?

இவன்முதுகு சுமைதாங்கி;
　　இருதோளும் இடிதாங்கி;
இவன்வயிறு அடிதாங்கி;
　　இருக்கின்றான் உயிர்தாங்கி.

என்ன அவலம்! பாலுக்கும் ஆடையுண்டு; ஆனால், பாமரர்க்கோ ஆடையில்லை!

தேகத்தை மூடுதற்குத்
திறமில்லை; வானம்நீ
மேகப் பருத்தியினால்
மேலாடை நெய்துகொடு

என்றன்றோ ஏழை ஏங்க வேண்டியதாயிருக்கிறது. 'நூலுக்குக் கஞ்சியுண்டு; ஆனால், நொடித்தவர்க்கோ அதுவும் இல்லையே!' , 'வற்றிவிட்ட முகத்தின்மேல் வற்றாக் கண்ணீர்!' இந்த முரண் மாறுவது எந்நாள் எனக் கவிஞர் ஏங்குகிறார். இவ்விழிநிலை மாறப் புரட்சி தேவை எனக் குரல் கொடுக்கிறார். அப்புரட்சிக்குக் காவியங்களைவிடக் களப்பலிகளே மிகுந்த சேவை செய்யும் என்பதையும் கவிஞர் தெளிவாக்குகிறார்.

உங்கள் எழுத்தாணி
ஊசியைக் கொண்டு
எங்கள் கிழிசல்களை
என்றேனும் தைத்ததுண்டா?

என்னும் வினா எழத் தொடங்கிவிட்டது. எழுத்தூசிகள் கிழிசல்களையல்ல, புத்தாடைகளையே தைத்துக் கொடுக்கும் நிலை மலர வேண்டும். ஆம்! எழுத்தாளர்களின் எழுதுகோல் புத்துலகம் காண வழி வகுக்க வேண்டும்!

பெண் விடுதலை

பெண்களின் துன்பங்களை இக்கவிஞர் மனமுருக எடுத்துரைக்கிறார். ஏழ்மையினால் பெண்கள் பலர் உரிய காலத்தில் திருமணமின்றி மூத்துத் தமியராய் வாடுவதைக் கண்டு வருந்துகிறார்.

பூப்படைந்த பின்புமவர்
பூவாத தாவரங்கள்!
காப்பில்லை என்பதனால்
கனியாத தனிமரங்கள்!

உள்ளத்தில் 'தங்கம்' இவள்
உடலிலது குறைந்ததனால்,
தள்ளுபடி ஆகின்றாள்;
தன்விதியை நோகின்றாள்

என்றெல்லாம் இவர் எழுத்து வீணை துன்ப ஒலி எழுப்புகிறது.

நந்தவனம் குடியிருந்த
நங்கையிவள் கூந்தலுக்கு
எந்தவன மும்இன்று
ஏன்பூக்க மறுக்கிறது?

எனும் அடிகள் கைம்மையின் கொடுமையைக் கண்முன் நிறுத்துகின்றன. இவ்வடிகளில் ஓடும் ஏக்க இழையோட்டம் நெஞ்சை உலுக்குகிறது!

வெள்ளையர்களை ஆகஸ்டுப் புரட்சியினால் அகற்றி நாட்டுக்கு விடுதலை தந்தோம்; ஆனால், நம் 'வெள்ளையர்'க்கு - அஃதாவது, வெள்ளையுடை தரிக்கும் விதவையர்க்கு - இன்னும் விடுதலை தரவில்லையே, ஏன் என நியாயமான வினாவை எழுப்புகிறார். இந்த 'வெள்ளைகளை' அகற்றுதற்கும் ஓர் ஆகஸ்டுப் புரட்சி தோன்றத்தான் வேண்டுமென்கிறார்.

கவிஞர் நெஞ்சம்

கவிஞரின் நெஞ்சத்தை அவருடைய கவிதை அடிகளிலிருந்து நாம் நன்குணர முடிகிறது.

நெஞ்சக் கதவைத் திறந்துவிடு – ஒரு
நேசக் காற்று வீசட்டும்

என்பதில் கவிஞரின் மனித நேய உணர்வை அறிகிறோம்!

சமயக் குறிகளுக்குச்
சமக்குறியே தெரியாதா?

ஒற்றுமையை வளர்ப்பதற்கு மாறாய் மக்களிடையே சமயங்கள் வேற்றுமைக்கு வித்திடுகின்றனவே. சமன் பாட்டெண்ணமில்லாத சமயங்கள் தேவைதாமா என்னும் எண்ண வீச்சை இங்கே காண்கிறோம்!

கவிஞர்களின் எழுதுகோல் காலத்துக்கொவ்வாக் கருத்துகளை எழுதி வீணாகக் கூடாது. புதியதோர் உலகு தோன்ற, கெட்ட போரிடும் உலகத்தை அழிக்கக் கவிஞர்களின் படைப்பு அடிகோல வேண்டும்.

கதிரறுக்கும் பொன்னிமகன் வருங்கா லத்தில்
கதிரியக்கப் புதுமைபல படைக்க வேண்டும்!
முதுகுசுமை தூக்குகின்ற முத்தன் பிள்ளை
மூளைமாற்றுச் சிகிச்சையினைத் தொடங்க வேண்டும்!
மிதிவண்டி ஓட்டுகின்ற மீரான் செல்வன்
மின்னல்களில் மின்சாரம் திரட்ட வேண்டும்!
நதிக்கரையில் மீன்பிடிக்கும் தாமஸ் பெண்தான்
நாளைக்குச் செவ்வாயில் நடக்க வேண்டும்!

இந்த எண்ண ஒளியைப் பரப்பவே தாராபாரதியின் 'புதிய விடியல்' தோன்றியுள்ளது! புதிய விடியலைப் பெறுவோம்; புத்துணர்ச்சி கொள்வோம்!

தாராபாரதியின் கவிதை மலர்களில் நான் அஞ்சிறைத் தும்பியாய் ஆழ்ந்து, காமஞ் செப்பாது கண்டது மொழிந்துளேன்! நீங்களும் இம்மலர்களில் தேன் தும்பியாய்த் திளைத்து மகிழ வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். மதுராந்தகம் 'இலக்கிய வீதி', நண்பர் தாராபாரதியின் கவிதைப்பணியை ஊக்கி வருகிறது. அவ்வரிய அமைப்பை இயக்கிவரும் நண்பர் இனியவன் அவர்களையும், இந்நூலைச் சிறந்த முறையில் உருவாக்கி வெளிக் கொணர்ந்ததன்மூலம் தாராபாரதியின் கவிதைகளை நாட்டு மக்களுக்கு அறிமுகம் செய்யும் அருணோதயம் பதிப்பக உரிமையாளர் திரு. அருணன் அவர்களையும் பாராட்டி மகிழ்கிறேன்.

நல்லதொரு கவிஞரை நல்லதோர் இலக்கிய அமைப்பு பாராட்டி வளர்க்கிறது; அவர்தம் நூலை நல்லதொரு பதிப்பகம் பதிப்பித்துச் சிறப்புச் செய்கிறது; இந்த நற்பணியில் நானும் பங்கு கொண்டு மனநிறைவடைகிறேன்.

வாழ்க தாரா பாரதி! வளர்க அவர்தம் கவிதைத் தொண்டு!

நூல் ஆக்கம்	கவிஞர் தாராபாரதி
வகைமை	மரபுக் கவிதை
வெளியீடு	அருணோதயம், சென்னை. (1982)

(12)

நெற்றியில் ஓர் எரிமலை

அரிமாக் கவிஞர்

திரு. பல்லவன், 'இலக்கிய வீதி'யின் அரிமாக் கவிஞர். சமுதாய உணர்வோடு எழுச்சி மிக்க பாடல்களைப் படைக்கின்ற இன்றைய கவிஞர்களுள் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க பெருமைக் குரியவர்; முன்பு, 'மயில் தோகை'யை விரித்து அதன் எழிலைக் குழந்தைகட்குக் காட்டியவர்; இப்போது, 'நெற்றியில் ஓர் எரிமலை'யை வெடிக்க வைத்துப் பெரியவர்களைக் குமுறி எழச் செய்துள்ளார்.

கவிஞர் பல்லவன் அவர்கள், இன்று சமுதாயத்தில் நடக்கும் கொடுமைகளை அறிந்திருந்தும் அறியாதவர்கள் போல இருப்போரை, 'அறிந்தவர்கள் இப்படி அடங்கிக் கிடப்பது அழகன்று' என அவர்களின் சிந்தனையைக் கிளறிச் செயற்படத் தூண்டுகின்ற உந்துசக்திக் கவிதைகளை உருவாக்கித் தந்துள்ளார்.

தமிழின் வலிமை - ஏழையின் துயரம் - பெண்ணடிமைப் பேதைமை - சமுதாயக் கொடுமை - நாட்டின் நிலைமை எனப் பல்வேறு திசைகளில் பல்லவனின் கவிதை நோக்கு பயணம் செய்துள்ளது.

காளி வந்து நாவில் எழுதியதால் கவிஞர் ஆனவர் அல்லர், பல்லவன். காணுகின்ற காட்சிகள் அனைத்துமே சிந்தனைத் தூண்டல்களாய் அமைந்ததால் கவிஞரானவர் அவர். குயிலின் இனிய குரலோ, மயிலின் மகிழ்வு நடமோ, அருவியின் ஆர்ப்பு ஓசையோ, அன்றி மற்ற அழகோவியங்களோதாம் கவிதை தருமென்பதில்லை. சமுதாயத்தின் எந்த ஓர் அவலமும் மனத்தை உலைக்களமாக்கும்போது கவிதைப்பொறிகள் தெறிக்கவே செய்யும்.

வெல்லும் சொல்வேந்தர்

தம் படைப்பாற்றலில் கவிஞர் பல்லவன் தளராத நம்பிக்கை கொண்டுள்ளார். "புதியதோர் உலகம் செய்வோம்; கெட்ட போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்" என்று பாடினார், பாவேந்தர் பாரதிதாசன். அவர்வழி வந்துள்ள பல்லவன் அவர்களும்,

"சிந்தனையால் புத்துலகைப் படைப்பேன்"

"எதிரிஇல்லா மண்ணுலகத்தைப் படைத்தென்றன்
எழுத்தால் வெல்வேன்"

என முழங்கும் தன்னம்பிக்கைக் கவிஞராய் விளங்கிடக் காண்கிறோம்!

தீமைகள் சூழும்போது கவிஞர்கள் உள்ளம் பாசறையாய் மாறிக் கவிதைப் படைக்கலங்களை உருவாக்கித் தருகின்றது.

கவிதை எனக்கொரு கைவாள் – மார்பில்
கவசம் எனக்கு வாய்மை;
புவியில் தீமைகள் வீழ – நான்
போர்செய்யும் ஓர்படை வீரன்;

என்கிறார், கவிஞர் கே.சி.எஸ். அருணாசலம். கவிஞர் பல்லவனோ,

பற்றும் தீயில் பழுக்கக் காய்ச்சிப்
பலமுறை அடித்தாலும் – நான்
பளபளக்கும் கூர்வாளாய் மாறிப்
பகையைச் சாய்த்திடுவேன்

என்கிறார். கவிதை என்பது வெறும் எழுத்தன்று; அஃது இருட்காட்டை அழிக்கும் கனல்; புதிய உலகுக்கு விதை; புவியின் கொடுமைக்கு எதிர்ப்பு எனக் கவிதை அமைய வேண்டிய தன்மையைக் கூறிடும் அவரது கவிதைகள் அந்தப் பண்புகளை நிச்சயம் பெற்றிருக்கும் என்பதில் ஐயத்திற்கு இடமேது?

கவிஞன் என்போன் வெறும் கற்பனையாளனாய் மட்டும் இருந்துவிடக்கூடாது. உண்மை அல்லாதவற்றுக்குத் துணை போவதோ, வயிற்றை நிரப்புவதற்காக வரிசையற்றவர்களைப் பாராட்டவோ கூடாது. தீமையை எரிக்கும்வண்ணம் தீப்பொறி பறக்கும் கவிதைகளை அவன் பாட வேண்டும்; இவை கவிஞர்க்குப் பல்லவன் கூறுவன. பல்லவனோடு நெருங்கிப் பழகியவர்கள் அவர் இக்கருத்துகளின் ஒட்டுமொத்தத் தொகுப்பு என்பதனை நன்கறிவர். நூலைப் படிப்பவர்களும், இவர் புனைந்துரைக்க வில்லை - பொய் புகலவில்லை - சத்தியமே சொல்லியிருக்கிறார் என்பதை ஒப்புவர். வெல்ல வேண்டிய கருத்துகளை வெல்லும்

சொற்களால் சொல்லியுள்ள சொல்வேந்தராய் விளங்குகிறார், பல்லவன். அன்று நாட்டை ஆண்ட பல்லவர் ஆட்சிப்பகுதியில் இன்று பாட்டை ஆளுகின்ற பல்லவர் ஒருவரைக் காண்கிறோம்! போர்க்களத்திலே நிற்கும் வீரன் சூளுரைப்பது போல, பல்லவனும்,

கண்ணைப் பறித்தும் கைகால் முரித்தும்
கடுஞ்சிறை இட்டாலும் – நெற்றிக்
கனலும் எரிமலை கக்கும் தீயால்
கயவரை எரித்திடுவேன்!

எனச் சூளுரைத்துப் பாக்களத்திலே பகையைப் பூண்டோ டொழிக்கப் போர் மேற்கொள்கிறார்.

பாப்படையல் இடுகின்ற பாவலர்

தன் காலத்து முக்கிய நிகழ்ச்சிகளைக் கவிஞன் பாடாமல் இருக்க முடியாது. அப்படிப் பாடாவிட்டால் அவன் கவிஞனும் அல்லன். தாய்மொழிக்குத் தீமை வந்து நேர்ந்ததும், அதைத் தகர்த்தெறிய வீரர் பட்டாளம் கொதித்தெழுந்ததும் இவர் கால முக்கிய நிகழ்ச்சிகள். ஆகவே, தமிழின் பெருமை, அதை அழிக்க முயன்ற சக்திகளை அழித்தொழிக்க வேண்டிய இன்றியமையாமை பற்றியெல்லாம் கவிஞர் பல்லவன் விரிவாய்ப் பாடியுள்ளார்.

தமிழை, 'மூப்பறியா மாமகளே! உலக முதன்மொழியே! உள்ளுணர்வின் மெய்ப்பாடே' என உளமுருகிப் போற்றுகிறார்.

தமிழுக்குப் பூவால் படையல் இட்டால், அஃது ஒரு பொழுதுக்குள் வாடிவிடுமே என்பதால் அழியாத பாவாலே படையல் இடுவதாய் அறிவிக்கிறார்.

பூப்படையல் இட்டால் பொழுதுக்குள் வாடுமென்று
பாப்படையல் இட்டேன் பணிந்து

என்னும் அவருடைய இப்பாடலடியில் நாட்டுப்புறப் பாடல் மணம் கமழ்ந்திடக் காண்கிறோம்.

தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

தமிழின்பால் அவர் கொண்டுள்ள பற்றை-பிடிப்பை,

ஈட்டியால் குத்திக் குத்தி
என்னுடல் கிழித்த போதும்,
காட்டிலே எனைவி டுத்துக்
கண்களைப் பறித்த போதும்,
மொழியினை அடகு வைத்து
மூச்சுடன் வாழ மாட்டேன்–

எண்ணற்ற துன்பங்கள் விளைந்தாலும் மொழியினை இழிவுக்கு ஆளாக்கி உயிரோடு உலவமாட்டேன் என்ற துடிப்பு மிக்க இக்கவிஞரைப் பெற்றிருக்கும் நாட்டில், இன்று சொந்த நலனுக்காக மொழியினை அடகு வைக்க முற்படும் மூட மதியினரும் இருக்கத்தானே செய்கின்றனர்; இதைப் போக்க வழியே இல்லையா? பல்லவனின் இப்பாடலடிகளில், 'நைந்தாயெனில் நைந்து போகும் என் வாழ்வு, நன்னிலை உனக்கெனில் எனக்கும் தானே' எனும் பாவேந்தரின் குரல் வழிமொழியப்பட்டிருப்பதை அறிகிறோம். பாவேந்தர் வழி வந்தவர்களால் இவ்வாறன்றி வேறு எவ்வாறு பாட முடியும்?

> உயிர்ப்பற்றுப் போம்வரையில் ஒண்டமிழே உன்மீது
> உயிர்ப்பற்று வைத்து உவந்திருப்பேன்.

உயிரே போவதாயினும் தமிழே உன்மீது உயிர்போல் பற்றுடையவனாவேன் என்பது பொருள். உயிர்ப்பற்று - இதனை முதல் அடியில் உயிர்ப்பு + அற்று என்றும், இரண்டாம் அடியில் உயிர் + பற்று என்றும் பிரித்துப் பொருள் கொள்ளவேண்டும். முதல் அடியில் காணப்படும் வீரமும், இரண்டாம் அடியில் காணப்படும் பாசமும் நம் உள்ளங்களைக் கொள்ளை கொள்வன.

தெருக்களில் தமிழ் இல்லை; திருக்கோவிலில் தமிழ் இல்லை. போக்க என்ன வழி? தமிழினை நினையாதவனைத் தமிழன் என்று நினையாதே;

> தமிழினை, வாய்மறுப்போன்
> தமிழனே இல்லைஇல்லை!

இதுவே பல்லவ வழி!

'பெண்ணிற் பெருந்தக்க யாவுள?' என்று புகழ்ந்தான் வள்ளுவன். 'மங்கையராய்ப் பிறக்க மாதவம் செய்யவேண்டும்' என்கிறார், கவிமணி. பெண்மை உயர்வென்று பேரிகை கொட்டினான், பாரதி. ஆனால், இந்த நிலத்தில்தான்,

> பெண்சிசுவைக் கொல்லும்
> அருவருப்பு நடக்கிறது
> அவமானம் தொடர்கிறது

என்று இன்றைய நிலையைச் சுட்டுவதோடு, கவிஞர் பல்லவன்,

> கண்ணிரண்டில் ஒன்றைநாம் காயப் படுத்துவதோ?
> வண்ணமா மயிலின் வலக்காலை ஒடிப்பதுவோ?

என ஆத்திரம் பொங்கக் கேட்பதோடு, இந்த இழிநிலை மறைய,

புறப்படுக பெண்ணினமே புது உலகம் படைப்போம் என்ற எழுச்சிக் குரலை எழுப்பி அவர்களை வெற்றிப் பாதையில் வீறுநடை போட அழைக்கிறார்.

பெண்கள் ஆண்களின் ஆசைச் சொற்களில் மயங்கி, தங்களை இழந்து தாய்மை எய்தியதும், கயவர்கள் அவர்களை ஏமாற்றி ஓடிவிடுகின்றனர். இந்நிலையில் அப்பெண்கள் தற்கொலைக்கு ஆளாகின்றனர் அல்லது பெற்றெடுக்கும் குழந்தையைக் கொன்று குப்பைத் தொட்டியில் வீசி எறிகின்றனர்!

சொக்கவைக்கும் சொற்களிலே சுருண்டு போகும்
தோகையரின் உடலணைத்து மோகம் தீர்ந்தால்,
சக்கையெனத் தள்ளிவிடும் கயவ ராலே
தாயானார் நாடுவதும் என்னைத் தானே!

என்று ஒரு குப்பைத்தொட்டி கூறுவது போல, கவிஞர் ஐ. உலகநாதன் பாடியுள்ளார். திருமணத்தின் முன்னரேயே இத்தகைய நிலைக்கு ஆளான இளநங்கை ஒருத்தியைப் பல்லவன் தம் கவிதையில்,

இன்பத்தில் எனைமறந்தேன்; இன்றுசுமை தாங்கி;
இருந்தாலும் இளம்பிறைக்கு இருப்பேன் உயிர்தாங்கி

என நம்பிக்கையோடு வாழச்செய்கிறார். தவறிவிட்டாலும் தன் கடமையிலிருந்து வழுவாது தாய்மையைப் போற்றி வாழும் மன உறுதி படைத்த பெண்ணைப் படைத்துக் காட்டிப் பல்லவன் புதுமை செய்கிறார்! குழந்தையோ, தாயோ மாளும் நிலையை மாற்றி, இருவருமே வாழுகின்ற மனத்திண்மை கொண்டவராய் மங்கையரை மாற்றிக் காட்டி, வாழ்க்கையில் நம்பிக்கையோடு கொடுமைகளை எதிர்த்துப் போராடத் தூண்டுகிறார்.

சாதிக் கொடுமைகள் வேண்டா

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்றார், திருவள்ளுவர். வள்ளலாரும் சாதியைக் கடிந்தார்; சித்தர்கள் பாடிப் பார்த்தனர்; ஆழ்வார்கள், நாயன்மார்கள் சாடிப் பார்த்தனர். 'சாதிக் கொடுமைகள் வேண்டா' எனப் பாரதிதாசன் கூறிப் பார்த்தார். என்றாலும், ஆட்டம் போடும் சாதிப் பேயை நம்மால் அடக்க முடியவில்லை; மாறாய், அது இப்போது நம்மேல் ஏறி நின்று ஆட்டம் காட்டுகிறது. எனவே, இனிச் சொல்லிக்கொண் டிருப்பதில் பயனில்லை!

எல்லோரும் மனிதசாதி யாக மாற
இனியேனும் செயல்படுவோம்

எனச் செயற்பட அழைக்கிறார், கவிஞர் பல்லவன். மனிதனை மனிதன் என்று சொல்லுகின்ற மதிப்புயர்ந்த நாளை உருவாக்கும் புரட்சியினால் இந்தப் பொல்லாங்கைத் தீர்க்க முடியும் என்பது பல்லவன் வாக்கு! பல்லவன் வாக்காவது உடனே பலிக்கட்டும்! சாதிச் சனியன் ஒழியட்டும்!

அழகின் சிரிப்பு

இயற்கை எழிலைப் பாடாத கவிஞரிலர். கவிஞர் பல்லவன் மட்டும் விதி விலக்கு ஆகிவிட முடியுமா? கற்பனையைக் கலந்து, காணாததை எல்லாம் காட்டாது, உள்ளதை உள்ளவாறே பாடி உள்ளங்களைக் கொள்ளை கொள்கிறார்.

மான்துள்ளும்; மாஞ்சோலைக் கிளிகள் கொஞ்சும்;
    மணிப்புறாக்கள் சோலையிலே பெடையைக் கெஞ்சும்;
மீன்துள்ளும் பொய்கையிலே; நெஞ்சை அள்ளும்
    மெல்லியபூங் கொடியிடையைத் தென்றல் கிள்ளும்;
கான்முயல்கள் குதித்தோடும், பனிநீ ராடும்;
    கடக்களிறு மடப்பிடியைக் கானில் தேடும்;
தேன்மணக்கும் பூக்காடு வரலாற் றேடு
    தென்திசையின் புகழ்வீசும் எங்கள் வீடு!

ஆயிரம் முறை படித்தாலும் அலுப்புத் தட்டாத அற்புதப் பாடல் இது. சொற்கள் இங்கே கொஞ்சுகின்றன; நெஞ்சைக் கிள்ளுகின்றன. சங்கப் புலவர்களின் செம்மாந்த நடை இவருடைய இயற்கைபற்றிய பாடல்களில் தஞ்சம் புகுந்துள்ளது.

உலகம் உவக்க இவர் உதயத்தை வாழ்த்துவது நம் இதயத்தை நெகிழ்விக்கிறது. பொதிகை மலையில் பிறக்கும் தென்றல் இவருடைய பாடல்களில் குளிர்ச்சியைத் தேக்குகிறது.

தென்னங் கீற்றில் ஊஞ்சல் ஆடி
தெங்கின் பாளை உதிர்க்கிறது!
தேனடை தொட்டுத் தீஞ்சுவை மாந்தி
தென்பாங் கிசைத்துத் திரிகிறது;
சின்ன முல்லைப் பூவை மோந்து
சிந்தை மயக்கம் கொள்கிறது;
சித்திர மகவு நித்திரை கொள்ள
சிறகை அசைத்துச் செல்கிறது!

இயற்கைபற்றிய பல்லவனின் பாடல்கள் இன்பத்தை அள்ளிச் சொரிகின்றன.

புதுமைச் சிந்தனை

செய்திகளைப் புதிய கோணத்தில் கண்டு கூறுவதில் பல்லவன் வல்லவராயிருக்கிறார். சில கவிதைகளைப் படிக்கும்

போது புதிர் போலத் தோன்றும். அதன் தலைப்பை நோக்கியதும் புதிர் மறைவதோடு நம்மையறியாது புன்னகையும் தோன்றும்!

எளியவர்களின் இலவசப் பத்திரிகைகள்!
கிறுக்கல் மைனர்களின் அந்தரங்க டயரிகள்!
அரசியல் வாதிகளின்
அவசர அவசிய அசோக சாசனங்கள்

எனும் சிற்பியின் கவிதை அடிகளைப் படிக்கும் போது இவர் என்ன சொல்ல வருகிறார் என்று மயங்குகிறோம்! ஆனால், 'சுவர்கள்' என்னும் தலைப்பை நோக்கியதும் ஒவ்வோர் அடியும் சாசனமாய் ஒலிக்கிறது.

காதல் சபையில்
பேச்சுக்கு எதிராக நிறைவேறும்
நம்பிக்கை இல்லாத் தீர்மானம்

எனும் கவிக்கோ அப்துல் ரகுமானின் இந்த அடிகளைப் படிக்கும் போது ஏதோ என்று எண்ணுகின்ற நாம், 'முத்தம்' என்னும் தலைப்பைப் பார்த்ததும் முத்தத்தினும் இன்ப வெறி கொள்ளுகின்றோம்! செய்தி, தலைப்பினால் விளக்கம் பெறும் இந்த உத்தியில் 'கண்கள்' பற்றி ஓர் அருமையான பாடலைப் பாடியிருக்கிறார், பல்லவன். கண்கள் பேசுகின்றன என்கிறோம்! கண்கள் பேசுமா? பேசும். ஆம்! அன்பை வெளிப்படுத்திப் பேசுகின்றன. அந்தப் பேச்சை நாம் காண முடியுமே தவிரக் கேட்க முடியாது. ஆகவேதான், பல்லவன் கண்களை,

'மெதுவாய்ப் பேசும் அன்பின் நாக்குகள்'

என்கிறார். அடுத்த வீட்டில் இருப்பவர் யார் என்று கேட்டால் தெரியாது என்று சொல்வதே பெருமையென்பது நகர நாகரிகம்! கண்களைக்கொண்டு இதனை நையாண்டி செய்கிறார், பல்லவர்.

அருகுஅருகு இருந்தும் சந்தித்து அறியா
நகர மாந்தர்கள்; நம்கண் மணிகளே!

அடுத்தடுத்து இருந்தாலும் சந்தித்தறியாத நகர மக்களைப் போன்றே அடுத்தடுத்து இருந்தும் ஒன்றோடொன்று சேர்ந்தறியாத சந்தித்தறியாதவையாய்த்தானே கண்களும் இருக்கின்றன. போலி நாகரிகம் நகர மக்களைத் தடுப்பது போல, மூக்கு கண்களைத் தடுத்துவிடுகிறது. முகத்திற்கு மூக்கு இன்றியமை யாதது. ஆனால், போலி நாகரிகத்தின் மூக்கை நாம் உடைத்தெறியலாம் அல்லவா?

இனிய சந்தங்கள்

பாடலுக்குச் சந்தம், உணவுக்கு நெய் போல. கவிஞர் பல்லவன் பல இனிய சந்தப் பாடல்களை இந்நூலுள் தந்துள்ளார்.

வெய்யோன்வர ஐயோவென வெகுண்டேபனி நடுங்கும்

என அரிய எழுத்தோவியத்தை வரைந்து காட்டுகிறார்.

நெய்யின் மணம் தைப்பொங்கலில்
நினைத்தால்மனம் இனிக்கும்.

சந்தத் துள்ளலில் பல்லவனின் இப்பாடல் தெள்ளமுதாய் இனிக்கிறது. மணம், மனம் எனும் சொற்களை இணைத்துக் காட்டியுள்ள திறம் போற்றத்தக்கதாயுள்ளது.

ஆயிரத்தில் ஒருவர்

பல்லவனின் இந்நூலில் பாடலைத் தொகுத்திருக்கும் பாங்கு தனிச் சிறப்புடையதாயுள்ளது. தமிழ், இயற்கை, காதல், பல்சுவை என்ற தலைப்புகளில் தொகுதி தொகுதியாய்ப் பாடல்களைப் பார்த்துள்ள நாம், வகைக்கொரு பாடலாய் அங்கொன்றும் இங்கொன்றுமாய் இந்நூலில் பாடல்கள் கோக்கப்பட்டிருப்பதை நோக்கும் போது மகிழ்கிறோம். காதலுக்கென்றே நூலின் பெரும்பகுதியை ஒதுக்கியிருக்கும் நூல்கள் பலவற்றை நாம் பார்த்திருக்கலாம். இங்கோ, காதல் என்ற தலைப்பில், இரண்டே இரண்டு பாடல்கள் மட்டுமே உள்ளன. என்றாலும், அவை இந்நூலின் இரு கண்களாய் ஒளி வீசி நிற்கின்றன. ஆயிரம் ஆயிரம் காட்டி அவை தம் காதலிக்கு ஒப்பாக மாட்டா என்கிறார், கவிஞர்.

ஆயிரம் கைகள் எதிர்த்தாலும் – அவளை
அடையா(து) என்னுயிர் போகாது;
ஆயிரம் ஆண்டு வாழ்வெதற்கு? – ஓர்நாள்
அவளுடன் வாழ்ந்தால் அதுபோதும்!

ஆயிரமாயிரம் கவிதைகளுக்கு ஈடாய் அவருடைய இந்த ஒரு கவிதை போதும் என்பதால் இக்கவிஞரையும் ஆயிரத்தில் ஒருவர் என நாம் போற்றி மகிழலாம். 'எப்பொழுதும் என் நெஞ்சைப் பிணித்துக்கொண்டுள்ளவளும், அழகிய கூந்தலையும், பெருந்தோள்களையும் கொண்டவளும், இளையவளுமாகிய தலைவியின் மென்மை வாய்ந்த உடம்பினை ஒரு நாள் இயையப்பெற்றால் போதும், அதன்பின் அரைநாள் வாழ்க்கையையுங்கூட விரும்பேன்'' என்று தலைவன் ஒருவன் கூறுவதாய்க் குறுந்தொகையில் நக்கீரர் பாடல் ஒன்று உண்டு.

கேளிர்! வாழியோ! கேளிர்! நாளும்என்
நெஞ்சுபிணிக் கொண்ட அஞ்சில் ஓதிப்
பெருந்தோள் குறுமகள் சிறுமெல் ஆகம்,
ஒருநாள் புணரப் புணரின்
அரைநாள் வாழ்க்கையும் வேண்டலன் யானே! (குறுந். 280)

நக்கீரரின், 'ஒரு நாள் புணரப் புணரின் அரைநாள் வாழ்க்கையும் வேண்டலன்' என்ற அடிகளோடு, 'ஆயிரம் ஆண்டு வாழ்வெதற்கு - ஓர் நாள் அவளுடன் வாழ்ந்தால் அது போதும்' எனும் பல்லவனின் பாடலடிகளை ஒப்பிடும்போது 'சங்க மரபு' அவரிடம் இயல்பாய்ப் படிந்திருப்பதை உணர முடிகிறது.

சீரிய சிந்தனையாளர்

நாட்டு நடப்புப்பற்றிய அனைத்துச் செய்திகளிலும் கவிஞர் தம் கருத்தைச் செலுத்தியிருக்கிறார். "இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக இவ்வுலகு இயற்றியான்" என்றார், திருவள்ளுவர்.

நடித்தே மக்களை ஏய்ப்பவனை
வெடித்தே பூமி விழுங்காதோ?...
கயவர் உலவும் உலகமிதைக்
கடலே பொங்கி அழிக்காதோ?

எனப் பல்லவன் வெடித்துக் குமுறுகிறார்.

புரட்சி எண்ணங்களைக் கவிஞன் புனைய வேண்டு மென்பதால் இயற்கையழகையோ காதலின்பத்தையோ பாடக் கூடாது என்பதன்று; அவற்றை மட்டுமே பாடிக்கொண்டிருந்து விடக்கூடாது என்பதுதான். பல்லவன் எத்தகைய பாடல்களைப் பாடினாலும் அவற்றில் கவிதை நயமும் மனித நேயமும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்திருப்பதைக் காண்கிறோம்! பூ, மண், சந்தன மரம் ஆகியவற்றைக்கொண்டு பகையை நட்பாக்குவோம் என்னும் அருமையான பாடத்தைக் கற்பிக்கிறார், பல்லவன்.

நெருப்பினால் நெருப்பணைக்க நிச்சயம் முடிவதில்லை
ஒருபிழை மறைக்கமேலும் ஒருபிழை செய்யவேண்டா!

என்னும் இவ்வரிய தத்துவத்தை எவ்வளவு வேண்டுமானாலும் பாராட்டலாம்.

பன்முகக் கவிஞர்

உடல் ஊனம் ஊனமன்று; உயிர்ப்பின்றி முடங்கிக் கிடப்பதே ஊனமாகும்.

முடியாது என்பதே மனஊனம் – நீ
முயலா மைதான் அவமானம்

என்கிறார். 'இலக்கிய வீதி'யின் மற்றோர் அரிமாக் கவிஞராகிய தாராபாரதியின்,

வெறுங்கை என்பது மூடத்தனம்
விரல்கள் பத்தும் மூலதனம்

என்ற கருத்தோடு பல்லவனின் கருத்தும் இங்கே இணைந்து இரண்டும் கை கோத்துச் செல்லுகின்றன.

நிலையாமை குறித்து, 'நாலடி' கூறியுள்ள நயமான கருத்துகளைப் பல்லவனும் கூறியுள்ளார். நிலையாமையைக் கூறுவது அதுபற்றியே சிந்தித்து அழுங்குவதற்கு அன்று. நிலையாமையை நினைந்து, என்றும் நிலைத்திருப்பதான புகழைத் தேடிக்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்கேயாம்!

மனித நேயம் நிறைந்த கவிஞராய்ப் பல்லவன் விளங்குகிறார். உருசியாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் மக்கள் மாண்டதை எண்ணிக் குமைகிறார். ஜாராட்சியின் கொடுமையைத் தீய்த்த மக்களுக்கு நீ கொடுமை செய்துவிட்டாயே பூமித்தாயே என வேதனைப்படுகிறார். அவர்கள் செத்தொழிந்த போதிலும்,

'எருவாகித் தாய்மண்ணின் வளத்தைச் சேர்ப்பர்'

என்பதிலே கவிஞர் தம் கவித்துவத்தை முழுமையாய் வெளிப்படுத்திவிடுகிறார்.

வறுமைக்கோடு! சீ! சீ! இது வெட்கக் கேடு! இமயக் கோட்டைவிட இந்த வறுமைக் கோடன்றோ உயர்ந்து நிற்கிறது! என்று வேதனைப்படும் கவிஞர், 'எல்லார்க்கும் எல்லாம் என்னும் எண்ணம் நிறைவேற அனைவரும் இணைந்து நிற்போம்' என்று செயற்பாட்டுக்கும் குரல் கொடுக்கிறார்.

மனிதன் நம்பிக்கையோடு வாழவேண்டும். காலத்தை வீணாக்காமல் கடமையைச் செய்வோமானால் காலமே நம்மை ஒரு நாள் கௌரவப்படுத்தும் என்று வழிகாட்டிடும் கடமை வீரராகவும் கவிஞர் திகழ்கிறார்.

நீதிக் கருத்துகளையும் கவிஞர் சொல்லத் தவறவில்லை. 1 முதல் 9 வரையிலான எண்களைக்காட்டி, அவற்றுள் ஒன்று என்ற எண் மட்டுமே நிமிர்ந்து நிற்கிறது. பணிந்தும் படிந்தும் வளைந்தும் வணங்கியும் நிற்கும் மற்றைய எண்களைவிட நான் என நிமிர்ந்து நிற்கும் 1, மதிப்பில் குறைந்துதானே போகிறது.

பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து

என்னும் திருக்குறளுக்கு அரியதோர் விரிவுரையாய் - விளக்கவுரையாய் - இஃது அமைந்திருக்கிறது.

அம்மா நறுந்தமிழே! ஆசைத்தீப் பற்றியதால்
இம்முயற்சிக் குட்பட்டேன்! யாதறிவேன்? – உன்மகன்
சொன்மாலை யாத்துன் கவடி அடிவைத்தேன்
நன்மொழியே! வாழ்த்தெனக்கு நல்கு!

எனத் தமிழ்த்தாயின் காலடியில் தம் கவிதையைப் படையலாக்கு கிறார். பகட்டும் விளம்பரமும் கொண்டவர்களுடைய பாடல் களை ஏற்பதைவிட எளிமையும் பணிவும் கொண்ட இவர் போன்றோர் கவிதைகளைத் தமிழ்த்தாய் மணிமுடியாகவே ஏற்பாள் என்பதில் ஐயமில்லை.

பல்லவக் கவிஞர் வாழ்க! பயன்மிகு நூல்கள் பலவற்றைத் தொடர்ந்து தருக என்பதே நம் வேண்டுகோள்.

நூல் ஆக்கம்	கவிஞர் பல்லவன்
வகைமை	மரபுக் கவிதை
வெளியீடு	மூவேந்தர் அச்சகம், சென்னை. (1991)

13

சந்தனக் காற்று

தென்றல் சோலைக்குள் நுழைகிறது; அங்கிருந்து வாவிக்குள் புகுகிறது; அங்கே பூத்துள்ள மலர்களைத் துழாவுகிறது; பின்னர், மல்லிகையும் முல்லையும் பூத்துக் கிடக்கும் பந்தரின்மேல் தாவுகிறது. இந்நீண்ட பயணத்தால் மணத்தையும் குளிர்ச்சியையும் சேர்த்துக்கொள்கிறது. கலைகள் இருக்குமிடந்தோறும் அங்கங்கே தங்கி ஆராய்கின்ற அறிவாளனைப் போல, மெல்ல மெல்ல வீசுகிறது.

பொங்கரில் நுழைந்து, வாவி
புகுந்து,பங் கயம்து ழாவி,
பைங்கடி மயிலை முல்லை
மல்லிகைப் பந்தர் தாவி,
கொங்கலர் மணம்கூட் டுண்டு,
குளிர்ந்து, மெல்லென்று தாவி,
அங்கங்கே கலைகள் தேரும்
அறிவன்போல் இயங்கும் அன்றே!

என்பது பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற்புராணப் பாடல்.

பிறவிக்கவிஞர் இராமசாமியின் கவிதையோ, தமிழ், மலையில் பிறந்து, சிறுவர் பகுதி என்னும் சோலையுள் நுழைந்து, இயற்கைக் குளத்தில் நனைந்து, காதல் மலர்களைத் துழாவி, தத்துவத் தேனில் படிந்து, சமூக மலர்ப்பந்தரில் படர்ந்து, பல்சுவைகளையும் அள்ளிக்கொண்டு சந்தனக்காற்றாய் உலவி, படிக்கின்ற நெஞ்சங்களைக் குளிரச்செய்கிறது; பாடுகின்ற வாய்களை மணக்கச்செய்கிறது.

பிறவிக்கவிஞர் இராமசாமி அவர்களை நான் நன்கு அறிந்தவன். அவருடைய பல்வேறு பண்புகள் என்னை ஈர்த்துள்ளன என்றாலும் அவருடைய தன்னம்பிக்கையை அறிந்து பெருமிதம் கொள்கிறேன். ஏழ்மை அவரைச் சூழ்ந்துள்ள போதிலும், என் முனையளவும் தாம் கொண்ட கொள்கையி

லிருந்து வழுவாத நெஞ்சினராயிருக்கிறார். பணம் அவருக்குத் துணை நிற்கவில்லையென்றாலும், குணம் அவரைக் குன்றென உயர்த்துகிறது. 'என் பாட்டுத் திறத்தாலே இப்பாரினை வெல்வேன்-வெற்றி சூடுவேன்' என்னும் அவருடைய கவிக்குரலை மெய்ப்பிப்பார் என்பதற்கு அவருடைய மற்ற நூல்களோடு, இச்சந்தனக் காற்றும் ஒரு சான்றாய்த் திகழ்கிறது.

அஞ்சமாட்டேன், அஞ்சமாட்டேன்,
    அஞ்சமாட்டேன் நாட்டிலே,
அக்ரமத்தை எடுத்துரைக்க,
    அஞ்சமாட்டேன் பாட்டிலே (பக். 77)

என்பது, ஏதோ பாட வேண்டும் என்பதற்காகப் பாடியது அன்று. இஃது அவருடைய உள்மனக் குமுறல்.

கவிதையே பயிராகக்
    கனித்தமிழே உயிராகப்
புவிதனில் நாளுமே கொண்டவன்
    புகழினை வாழ்வினில் கண்டவன்!

என்று தம்மைத்தாமே அவர் சொல்லியிருப்பது நூற்றுக்கு நூறு உண்மை.

சங்ககாலப் புலவர்முதல் இன்றைய கவிஞர்வரையுள்ள தலைசிறந்த கவிஞர்களுடைய கருத்துத் தாக்கம் பிறவிக்கவிஞரின் உள்ளிருந்து அவரை ஊக்குவித்துப் பாடச்செய்கிறது. பாவேந்தர் பாரதிதாசன்,

தமிழ்ப்பெண்ணே தமிழ்ப்பெண்ணே
    தமிழை ஏன்படித்தாய்?
தமிழ் 'படித்'தேன் அதை உண்ணத்தான்
    தமிழ் படித்தேன் நான்

எனப் பாடுகிறார். தமிழ் படித்தேனாய் இனிக்கிறது; ஆகவே, தமிழ் படித்தேன் என்கிறாள், தமிழ்ப்பெண். இப்பாடல் அடி, கவிஞர் இராமசாமியைப் பெரிதும் கவர்ந்திருக்கிறது. ஆதலின், அவ் வடியைத் தம் ஒரு பாடலுக்குத் தலைப்பாய்த் தந்து, படித்தேனின் சுவையையும் விஞ்சுமாறு அப்பாடலைப் பாடியுள்ளார்.

நாமக்கல் கவிஞர், நாடு விடுதலை அடைவதற்கு முன்பே, ஆங்கிலம் ஆட்சிமொழியாய் அரசோச்சிய காலத்திலேயே, தமிழ் பண்டைய நிலையைப் பெற வேண்டும்; அகில உலகமும் அதன் பெருமையை அறிய வேண்டுமெனப் பாடினார்.

திருமுடி சூட்டிடுவோம்–தெய்வத்தமிழ் மொழிக்கு (திரு)
அன்னையை மீட்டுமவள் அரியணை மீதிருத்தி
அகிலம் முழுதுமவள் மகிமை விளங்கச் செய்வோம்!

முன்னைப் பெருமைவந்தே இன்னும் புதுமையுற்றே
முத்தமிழ்ச் செல்வியவள் சித்தம் குளிர்ந்திடவே (திரு)

என்பது அவர் பாடல். நாடு விடுதலை பெற்றது. தமிழ்நாட்டில் 'தமிழே ஆட்சிமொழி' எனச் சட்டமியற்றிப் பல்லாண்டுகள் ஆயின. ஆயினும், ஆர்வமின்றி அதனை முற்றிலுமாய்ச் செயற் படுத்த முடியவில்லையே எனும் வேதனை கவிஞரைப் பெரிதும் வருத்துகிறது.

அரசாணை தன்னைச்செயல் படுத்திடுங்கள் – தமிழ்
அன்னையை அரியணையில் அமர்த்திடுங்கள்
கரம்கூப்பி வணங்குகிறோம் கேட்டிடுங்கள் – எங்கள்
கருத்தினை மனம்வைத்தே ஏற்றிடுங்கள்!

கவிஞர் வணங்கிக் கேட்பதை, மனத்தில் வைத்து அரசாணையைச் செயற்படுத்த அனைவரும் முயலல் வேண்டும்.

இயற்கையைப் பண்டைப் புலவர்களையொப்ப, தன்மை நவிற்சியாய்ப் பாடுவதில் கவிஞர் இராமசாமி வல்லவராய் இருக்கிறார். மதுரையில் வைகறையில், "குலமகளிர் எழுந்து தம் இல்லறக் கடன்களை ஆற்றக் கதவுகளைத் திறப்பர்; பள்ளி எழுச்சி முரசு ஒலிக்கும்; ஏறுகள் தம்முள் மாறுபட்டு முழங்கும்; சேவல்கள் கூவும்; அன்னச்சேவல், மயிற்சேவல் ஆகியவை தத்தம் பேடைகளை அழைக்கும்; பிடியோடு பெரும் யானைகள் பிளிறும்" என இயற்கை நிகழ்ச்சிகளை நக்கீரர் தொகுத்துக் காட்டுகிறார். இம்மாபெரும் கவிஞரை ஒப்பவே, நம் பிறவிக் கவிஞரும், 'ஒரு விடியற்காலை'யைப் பாடுகிறார்!

காகங்கள் கரைந்தனவே;
  காரிருளும் மறைந்ததுவே;
யூகங்கள் பிறந்தனவே;
  எல்லாரும் விழித்தனரே!
சேவல்கள் கூவினவே;
  செங்கதிரோன் எழுந்ததுவே;
பூவையர்தம் வாசலிலே
  புதுக்கோலம் இட்டனரே!... (பக். 32)

எனத் தொடரும் இப்பாடல், இந்நூலிலுள்ள பாடல்கள் அனைத்தினும் என் நெஞ்சை அள்ளுவதாய் உள்ளது. விடியற் காலை நிகழ்ச்சிகளை நம் கண் முன்னே ஒவியமாக்கிக் காட்டுகிறது, இப்பாடல். இப்பாடல் ஆங்கிலத்திலும், பிற வேற்று மொழிகளிலும் மொழிபெயர்க்கப்படுமாயின், நம் கவிஞர், இயற்கையைப் பாடுவதில் உலகப் பெருங்கவிஞர்களுள் ஒருவராய் வைத்து எண்ணப்படுவார் என்பது உறுதி.

'செங்கதிரோன் எழுந்ததுவே' என்பதைச், 'செங்கதிரோன் எழுந்தனனே' என்றெழுதியிருப்பின் இன்னும் துடிப்புள்ளதாய் - பெருமிதம் கொண்டதாய் - இருந்திருக்கும்.

இரவை, இளங்கோ அடிகள்,

கதிரவன் மறைந்தனனே
காரிருள் பரந்ததுவே

எனப் பாடுகிறார். அதே பெருமித நடையில், நம் கவிஞர்,

காகங்கள் கரைந்தனவே
காரிருளும் மறைந்ததுவே

எனப் பாடியிருப்பதைப் படிக்கும்போது, அவருடைய கவிதை நயம் உடலைப் புல்லரிக்கச் செய்கிறது.

கவிஞரின் எல்லாப் பாடல்களிலும் - குறிப்பாய்க் காதல் பாடல்களில் - நாட்டுப்புறப்பாடல் பாங்கு களிநடம் புரிகிறது. காதலியைக் காணாத காதலனுக்கு ஒருநாள் கழிவது ஓர் ஊழியாய்த் தோன்றும்! காதலியைப் பிரிந்த காதலன்,

நாளொன்று போவதற்கு நான்பட்ட பாடு
தாளம் படுமோ? தறிபடுமோ? யார்அறிவார்?

எனச் சொல்வதாய்ப் பாரதியார் பாடுகிறார். காதலி அருகே இல்லாத காதலனை நம் கவிஞர்,

உலையிட்ட அரிசியைப்போல் – நானிந்த
உலகத்தில் உழல்கின்றேன் (பக். 47)

எனக் கொதிக்கச் செய்கிறார்.

குறுந்தொகைத் தலைவி, தலைவனிடம், 'இப்பிறப்பில் மட்டுமன்று; மறுபிறவியிலும் நீயே என் கணவன்; நானே உன் நெஞ்சு நிறைந்திருப்பவள்' என்று பேசுகிறாள்.

இம்மை மாறி மறுமை ஆயினும்
நீஆ கியர்என் கணவனை
யான்ஆ கியர்நின் நெஞ்சுநேர் பவளே!

இஃது அக்குறுந்தொகைப் பாடல்.

கவிஞர் இராமசாமி படைத்துள்ள காதல் தலைவனோ ஏழேழ் பிறவியிலும் தன் காதலியோடு ஒன்றிணைய விழைகிறான்.

ஆழ்கடலின் முத்து – நீ
அன்பில் கிடைத்த சொத்து
ஏழ்பிறவி யெடுப்பேன் – நான்
இணைய உன்னுடன் துடிப்பேன்! (பக். 52)

'யாக்கை நிலையாதது; இதனை நினைந்து, இருக்கும் காலத்தே நல்லறங்களைச் செய்யுங்கள்' என்கிறது, நாலடி.

புல்நுனிமேல் நீர்போல் நிலையாமை எண்ணெண்ணி
இன்னினியே செய்க அறவினை; – இன்னினியே,
நின்றான், இருந்தான், கிடந்தான்,தன் கேளலறச்
சென்றான் எனப்படுத லான்.

'இப்பொழுதுதான் நின்றான்; அமர்ந்தான்; படுத்தான்; உடனே உயிர் பிரிந்துவிட்டது' என்று சொல்லுமளவுக்குள்ளது, இவ்வுடல். இந்நிலையாமையை நினைந்து, இருக்கும் போதே நல்லன செய்யுங்கள் என்பது பாடலின் பொருள். இதே கருத்தைத்தான் திரு.இராமசாமி சொல்ல வருகிறார். நாலடியாரைப் போல மென்மையாய் அறிவுரை கூறுவது போல அவர் பாடல் அமையவில்லை. நெஞ்சில் சுருக்கெனத் தைப்பது போல, படித்தவன் மறக்க நினைத்தாலும் விடாது அவன் மனத்தே உழன்றுகொண்டிருக்கும் வகையில் அழுத்தம் திருத்தமாய்க் கூறுகிறார். 'மண்ணுக்குப் போன பின்னர்!' எனும் பாட்டு கருத்தாழம் கொண்டதாய் - ஆனால், எளிய நடையில் அமைந்து சிந்தனையைத் தூண்டுகிறது.

இன்னுயிர்தான் பிரிந்துவிடும் என்றெண் ணாமல்
இன்பத்தைத் துய்த்திடவே பாவம் செய்தால்,
மண்ணுக்குப் போனபின்னர் யாது செய்வார்?
மனிதர்களே! நெஞ்சத்தில் நினைத்துப் பார்ப்பீர்! (பக். 54)

மனிதர்கள் இப்பாடலைக் கணந்தோறும் நினைந்து பார்க்க வேண்டும்.

புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும்

என்பது திருக்குறள். புறம் தூய்மையாய் இருக்க நீரில் குளிக்க வேண்டும். அகம் தூய்மையாய் இருக்க வாய்மையில் பழக வேண்டுமென்கிறார், வள்ளுவர்.

துணிவெளுக்க மண்ணுண்டு – எங்கள்முத்து
  மாரியம்மா, எங்கள்முத்து மாரி!
தோல்வெளுக்கச் சாம்பருண்டு – எங்கள்முத்து
  மாரியம்மா எங்கள்முத்து மாரி!
மணிவெளுக்கச் சாணையுண்டு – எங்கள்முத்து
  மாரியம்மா எங்கள்முத்து மாரி
மனம்வெளுக்க வழியில்லை – எங்கள்முத்து
  மாரியம்மா எங்கள்முத்து மாரி!

எனத் துணியையும் தோலையும் மணியையும் வெளுக்க வழிகாணும் பாரதியார் மனத்தை வெளுக்க வழிகாண முடியாது திகைக்கிறார். இப்பெரும்புலவர்கள் வழிவரும் நம் கவிஞரும் மனத்தூய்மையோடு வாழ்வதே அறம் என்பதை நன்கு விளக்குகிறார்.

சலவைக் கட்டியால் துணிவெளுத்தீர்;
சாணையைக் கொண்டே மணிவெளுத்தீர்;
குளிர்ந்த நீரால் உடல்வெளுத்தீர்;
குவலயம் போற்றிட எதுபுரிந்தீர்?

பொய்கூ றாமல் இருந்திடணும்;
புன்மைச் செயல்கள் தவிர்த்திடணும்;
மெய்யே பேசி வாழ்ந்திடணும்;
மேன்மையாய்க் கருணை புரிந்திடணும்!

என மனத்தை வெளுக்க அருமையான மருந்தையும் கூறியிருக்கிறார்.

சமூக முன்னேற்றத்திற்கான சிறந்த பல கருத்துகளைக் கவிஞர் திறம்படக் கூறியிருக்கிறார். சமூகக் கேடுகளைக் காணும்போது அவர் இதயம் குமுறுகிறது.

இதயம் குமுறுதடா – என்
இதயம் குமுறுதடா!

எதற்கெடுத் தாலும் லஞ்சம் வாங்குதல்,
ஏழையி னிடத்தும் அதனைப் பெறுதல்,
மதுவைக் குடித்தே தெருவில் ஆடுதல்,
மானத்தை விற்றே பணத்தைத் தேடுதல்— (பக். 80)

இவற்றையெல்லாம் பார்க்கையில் நேர்மையாளரின் இதயம் குமுறாமல் என்ன செய்யும்?

பொற்றுப்புடை மனிதர்கள் கடமை ஆற்றாமல்
புனிதராய் வாழ்க்கையில் நடிக்கையிலே—

பொறுக்க முடியவில்லை - நெஞ்சம் பொறுக்க முடியவில்லை என்றும் ஏங்குகிறார்.

ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டா
ஒருவரையும் பொல்லாங்கு சொல்லவேண்டா—

என இளம் பருவத்தில், 'வேண்டா' என்று கூறும் பாடலைப் படித்திருக்கிறோம். பிறவிக்கவிஞரோ, எதிர்மறையில் கூறாமல் உடன்பாட்டு முறையில் கூறியுள்ளார்.

பொய்யென்றும் பேசாம லிருத்தல் வேண்டும்;
புறங்கூறித் திரியாமை என்றும் வேண்டும்;

மெய்யன்பர் போற்றிடவும் வாழ்தல் வேண்டும்;
மேதினியில் பன்மொழியும் கற்றல் வேண்டும்.

இவ்வாறு 'வேண்டும்.... வேண்டும்' எனக் கூறியிருப்பதை நம் உள்ளத்தே என்றும் இருத்திக்கொள்ள வேண்டும்.

கவிஞர் இராமசாமி அவர்கள் யாப்புப் பயின்று கவிதை எழுதுபவர் அல்லர். உள்ளத்தில் ஊறியெழும் உணர்ச்சிகள் அவரிடம் தாமே கவிதையாய் உருப்பெறுகின்றன. அவருடைய கவிதைகள் ஓடுகின்ற ஆறல்ல; தாமே பொங்கியெழும் ஊற்றுகள். கவிதை நூலை எடுத்துப் படிக்கத் தொடங்கினால் நம்மையறி யாமலே வாய் பாடவும் செய்யும்.

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர்களுள் ஒருவராய் எதிர்கால இலக்கிய வரலாறு கவிஞர் இராமசாமியைக் குறிப்பிடும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

நூல் ஆக்கம்	கவிஞர் சி. இராமசாமி
வகைமை	மரபுக் கவிதை
வெளியீடு	தணிகேசன் பதிப்பகம், சிறுபாக்கம்.(1994)

14

சந்தனச் சரங்கள்

அறுசுவை உணவு

"**க**னியிடை ஏறிய சுளை, கழையிடை ஏறிய சாறு, பனிமலர் ஏறிய தேன்" ஆகிய சுவைகளை ஒன்றாய்ப் பிசைந்ததொப்ப இனிக்கிறது, கவிஞர் 'வாரஸ்ரீ'யின் இந்நூல். தேர்ந்தெடுத்த சொற்களின் சேர்க்கை நம் நெஞ்சைத் தென்றலென வருடிக் குளிர்விக்கிறது. அண்மைக் காலத்தில் மரபுவழி அமைந்த அழகுணர்வுப் பாடல் நூல் ஒன்றைக் கேட்டால், கவிஞர் 'வாரஸ்ரீ'யின், 'சந்தனச் சரங்களைத்' தயக்கமின்றி எடுத்துக் கொடுக்கலாம். கொஞ்சு தமிழ்ச்சொற்கள் குலவி நடமிடுகின்ற அமிழ்த அரங்கம் இது. நூலின் இயல்களை 'நீர்க்குடும்பமாக்கி' இணைத்திருப்பதே ஒரு தனி அழகு. தமிழ் ஓடை, இயற்கைப் புனல், காதல் நதி, கவியருவி, அரங்க வெள்ளம், இசை ஆறு என ஆறு பகுதிகள் கொண்டு அறுசுவை உணவாய் இந்நூல் திகழ்கிறது.

செந்தமிழ் வளம்

தமிழைக் கவிஞர், 'தென்னவர் திருவே! மன்னவர் வளர்ப்பே! தேன்மலர்ப் பொழிலே! முகிலெழும் குளிரே! கறையிலாப் பொருளே! சொற்பத மின்னலே!' என அழகிய அடைமொழிகளால் போற்றிப் புகழ்கிறார். வளமான சொற்கள் கவிதைகளில் வந்து விளையாடுகின்றன.

> தாயே, சின்னவன் மொழிக்கு ஷேயும்
> செழித்திட வணங்கு கின்றேன் (பக். 5)

எனத் தமிழைக் கவிஞர் வாழ்த்தி வேண்டுகிறார். இவருடைய வேண்டுதலைத் தமிழ்த்தாயும் ஏற்றிருக்கிறாள்! ஆம், சந்தனச் சரங்களில் செந்தமிழ் செழுந்தமிழாய் மணம் வீசுகிறது.

> தமிழுக்கும் அமுதென்று பேர் – அந்தத்
> தமிழ்இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்

எனத் தமிழை உயிராய் முதலில் பாடியவர், பாவேந்தர் பாரதிதாசன். அவரையொட்டி இக்கருத்தைக் கவிஞர்கள் பலரும் பாடியுள்ளனர். நம் கவிஞர்க்கு உடல், குருதியோட்டம் அனைத்துமே தமிழாயிருக்கிறது.

சொந்த உடம்(பு) உதிரம் உலவும் நறும்
செந்தமிழ் எங்கள் ஆவி (பக். 7)

எனத் தமிழையே மூச்சாய் உரைக்கிறார்.

கண்ணனைக் காதலியாக்கி மகிழ்ந்தவர், மாக்கவி பாரதி. 'வாரஸ்ரீ'யோ தமிழைக் காதலியாக்கிக் கண்டு களிக்கிறார்.

காப்பியத்தைக் கச்சாக்கி கவர்ச்சியுடன் எதிர்நின்றாய்,
காத லுற்றேன்;
பாப்புலத்து நூல்நெசவில் பாவாடை போட்டுநின்றாய்,
பாசம் வைத்தேன்;
மாப்புகழைச் சேலையென மங்கலமாய் உடுத்திநின்றாய்;
வளர்த்தேன் ஆசை!
மூப்பில்லாக் காதலியே! முந்தானை பற்றிவிட்டேன்,
முழுதாய்த் தாங்கு! (பக். 9)

காதல் ஊற்றெடுத்துப் பாசத்தைத் தூண்டி ஆசையை வளர்த்ததனால் முன்றானையைப் பற்றிக்கொண்ட முத்தமிழ்க் காதல் இது. 'முந்தானை பற்றிவிட்டேன், முழுதாய்த் தாங்கு' என்பதிலே உள்ள வேண்டுதலை, உருக்கத்தை, ஏக்கத்தைச் சொற்களால் எடுத்தியம்ப முடியாது. காலத்தை வென்று என்றும் நிற்கக்கூடிய கற்பனை இது.

கற்பனை ஊற்று

நூல் முழுதும் கற்பனை ஊற்றெடுத்துப் பாய்ந்துளது. மலர் சுற்றும் வண்டு, நிலவு சூழ்ந்த மீன்கள், கடலிற்படிந்த முகில், மலையிழியும் அருவி, குளிர்வீசு தென்றல் என இயற்கை எழிலில் கவிஞர் உளந்தோய்ந்து பாடியுள்ள பாடல்கள் தேன், கனி, தித்திக்கும் கற்கண்டு.

மலை முகட்டில் மழை பொழிவதைக் காப்பியப் பெரும் புலவர்கள் பலரும் அழகுபட வருணித்துள்ளனர். "பொன் மயமான இமயமலைமீது மேகம் வெண்ணிறத் தாரைகள் வீழ்த்தியதை, அம்மலை பொன் மயமாய் இருத்தலால் அப்பொன்னைத் தோண்டி எடுத்துக்கொள்ளக் கருதி, வெள்ளி மயமான தோண்டு கருவியை வானம் வீழ்த்தியது போலும்" என்பார், கல்வியிற்பெரிய கம்பர். "மலை உச்சியின் மேல் வெள்ளியாற்செய்த வெண்மை யான மேகங்களை வானத்தில் எங்கும் வரிசைப்படி அமைத்தது

போன்று மழைநீர்த் தாரைகள் சொரிந்தன" என்பார், செந்தமிழ்ச் சேக்கிழார். கவிஞர் 'வாரஸ்ரீ'யின் கற்பனை இப்பெருங் கவிஞர்களை ஒத்தும் - ஏன், விஞ்சியும் - செல்கிறது. மலை முகடு, தாகத்தால் தவிப்பதாய் மரங்களாகிய கைகளை அசைத்துச் சாடை காட்டுகிறதாம்! அதைக் காணுகின்ற மேகம் மலையின் தாகத்தைத் தணிக்கத் தண்ணீரை ஊற்றுகிறதாம் (பக். 17). மரங்கள் அசைய மேகம் மழையைக் கொட்டியது என்பதை இவ்வாறாய்க் கற்பனை செய்த புலவர் இதுவரை இலர் எனலாம். கவிஞர் 'வாரஸ்ரீ'யின் கற்பனைகள் தனித்தன்மை கொண்டவையாய் இருக்கின்றன.

மலர்ந்தும் மலராத காலைப் பொழுது. இருள் தன் கட்டுக் குலைகிறது. இருளால் கடலும் வானும் தனித்துக் காண முடியாதிருந்த நிலையில் புலர்காலை, தொடுவானை ஒரு மெல்லிய கோடாய்த் தோற்றுவிக்கிறது. இந்தக் காட்சியைக் காணும் 'வாரஸ்ரீ'யின் கற்பனை வானைவிட விரிந்து செல்கிறது. இரவில் கடலும் வானமும் காதல் விளைத்தனவாம். கடல் உதடு முத்தமிட்ட அடையாளந்தான் (தழும்புதான்) தொடுவானக் காலை வெளிச்சமாம்.

கடலுதடு முத்தமிட்ட தழும்பு – விடியல்
  கலைக்கின்ற மேகமலர் அரும்பு!

'இத்துணை இளவயதுக் கவிஞரா இவ்வளவு முதிர்ந்த கற்பனைக்குச் சொந்தக்காரராய் இருக்கிறார்' என்று வியந்து போகிறோம்! இவ்வாறு எங்கெங்கும் இவருடைய கற்பனையாட்சி நடப்பதைக் காண்கிறோம்!

சொற்கள் இந்தக் கவிஞர் விருப்பம் போல எழிலோவியங்களை வரைந்துவிடுகின்றன. மல்லிகைப்பந்து விரிந்தது போல இரவிலே நிலாப்பூ, உருக்கிய தங்கப் பூவாய் காலைக் கதிரவன் தோற்றம், அகலிலே சுடரும் அழல் போன்ற அழகிய கோள் மலர்கள், விண்ணிலிருந்து உதிரும் பூக்களாய் மழைத்துளிகள் என வானத்தைத் 'தொங்கு தோட்டம்', 'கவிழ்ந்த பூமி' என்று சொல்லியிருப்பதைப் (பக். 23) பெரிதும் பாராட்டலாம்.

அகன்றதோர் கரிய வானம்
  அதுஒரு கவிழ்ந்த பூமி...

விருப்புடன் இயற்கை வேயும்
  விண்ணெனும் தொங்கும் தோட்டம்...

என்பவை கவிஞருடைய 'இருசுடர்' அடிகள்.

பழைய செய்தியேயாயினும் அதை 'வாரஸ்ரீ' சொல்வதிலே ஒரு புதுமை! மின்னல் இடை என்று சொல்வது இயல்பு. இவரோ 'மின்னல் தோன்றினால் இளமையான பெண்ணின் இடைக்கு வளமையான உவமை கிடைக்கிறது' என்கிறார்.

> இருவிழியில் அதன்வடிவம் தோன்றும் என்றால்
> இளமையவள் இடையினுக்கோர் உவமை கிட்டும் (பக். 29)

'வாரஸ்ரீ'யின் காவடிச்சிந்துப்பாடல்களில் அண்ணாமலை ரெட்டியாரின் முடுகிய ஓட்டத்தையும், பாரதி, பாரதிதாசனின் ஆற்றொழுக்கு நடையையும் காணமுடிகிறது.

புதுமைப் படைப்பு

அரசனது உடைமைகளாய்ப் படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் ஆகிய ஆறனைத் திருவள்ளுவர் குறிப்பிடுகிறார். ஆனால், பிற்காலத்தில் பெயர், நாடு, நகர், ஆறு, மலை, ஊர்தி, படை, நட்பு, முரசு, தார், கொடி ஆகியவற்றை அரசனுடைய பத்து உறுப்புகளாய் வரையறுத்துக்கொண்டு, அவற்றைப்பற்றி ஒவ்வொரு வெண்பாவாய் மொத்தம் பத்து வெண்பாக்கள் பாடித் தொகுப்பது தசாங்கம் எனப்பட்டது.

இந்நூற்றாண்டின் மகாகவி பாரதியார், 'பாரததேவி திருத்தசாங்கம்' பாடினார். அவரையடுத்துக் கவிஞர் இராய சொ., 'காந்தி திருத்தசாங்கத்தையும்'; கவியரசு வைரமுத்து, 'அண்ணா திருத்தசாங்கத்தையும்'; கவிஞர் என்.வி. இளஞ்செழியன் என்பார், 'கந்தகிரி தசாங்கத்தையும்' பாடியுள்ளனர். இந்நூல்கள் மேலே கூறிய பத்து அங்கங்களையும் முறையாய் வைத்து, வெண்பாக்களால் இயற்றப்பட்டுள்ளன.

கவிஞர் 'வாரஸ்ரீ' அவர்களோ, 'கன்னித் தசாங்கம்' எனக் கன்னியின் முகம், புருவம், விழிகள், நாசி, இதழ்கள், கன்னம், கூந்தல், நகில்கள், இடை, பதம் என ஒரு கன்னியினுடைய பத்து உறுப்புகளைக் குறித்து ஒவ்வொன்றுக்கு ஒரு வெண்பாவாய்ப் பாடியிருப்பது முற்றிலும் புதுமையான முயற்சி. அவருக்கு இது கன்னி முயற்சி! (பக். 33)

முகத்தை,

> 'காதலை மொட்டவிழ்க்கும் வட்டநிலா'

என்றும், புருவத்தை,

> கார்அணிந்த உன்புருவம் கண்ணை அணைப்பதுபோல்
> ஆரணங்கே என்னை அணை

என்றும், இடையை,

இடுப்பிலன்றோ காந்தத்தின் ஈர்ப்பு

என்றும், பாதத்தை

..........ஒடும்வெண்
பஞ்சுமுகில் தொட்டதில்லை பைங்கொடியே உன்பாதத்தைக்
கொஞ்சம்என் கையில் கொடு

என்றும் பாடியுள்ள திறத்தை வியக்காமல் இருக்கமுடியாது. இவற்றுக்கும் மேலாய்க் கூந்தலைப் பாடும்போது, "பெண்ணே! உன் கூந்தலுக்கு இயற்கை மணம் உண்டா இல்லையா என்பதை ஆய்ந்துகொண்டிருக்க எனக்கு இப்போது நேரமில்லை. ஆகையால்,

......தேன்குழலீ ஈயானேன்
மொய்ப்பதற்கு வாஇங்(கு) என்முன்

என்கிறார். கூந்தலுக்கு இயற்கை மணம் உண்டா இல்லையா என்றதோர் ஆராய்ச்சியைப் பண்டைய மன்னன் ஒருவன் நடத்தியதாய்ச் சொல்லப்படும் கதையை அருமையாய் நுழைத்து, தன் காதலின் வேகத்தைக் காட்டத் தேன்குழலீ! என விரைந்தழைக்கின்ற அழகே அழகு! தேன்குழலீ! என்ற தொடராட்சியில்தான் எத்துணை பொருட்செறிவு! தேன்குழலீ என விளிப்பதாகவும் இருக்கிறது; தேன் நிறைந்த பூக்களை அணிந்துள்ள கூந்தலையுடையவளே என்னும் பொருளைத் தருவதாயும் இருக்கிறது. "பூக்களைத் தேனீக்கள் மொய்க்கின்றன. நானோ உன் கூந்தலை மொய்ப்பதற்கு ஈயாகப் பறக்கிறேன். ஓடோடி வா" எனத் துடிக்கிறார், கவிஞர்.

கூந்தலின் மணம் இயற்கையா செயற்கையா என்று ஆய்ந்து சொன்ன புலவனுக்கு மன்னன் பொற்கிழி கொடுத்ததாய்க் கதை. நான் ஒரு மன்னனாய் இருந்திருந்தால் 'வாரஸ்ரீ'யின் இப்பாடலுக்கு 'வைரமுடிப்பையே' தந்திருப்பேன். நான் மன்னன் அல்லனே! ஆகவே, என்னால் கொடுக்க முடிந்ததோ, 'புகழ் முடிப்பு' மட்டுமே!

புலமை நலம்

இன்பத்துப்பாலில் திருவள்ளுவர், தலைவி ஒருத்தி, "தலைவன் பிரிந்து சென்றுள்ளதால் அவனை நனவில் காண முடியவில்லை; என்றாலும், கனவில் காண்பதால்தான் என் உயிர் நிற்கிறது" என்று கூறுவதாய்ப் பாடியுள்ளார். மேலும் அத்தலைவி, "நனவில் வந்து நல்காத அவர், கனவில் தோன்றி வருத்துவது ஏன்?" என்றும் நைந்துருகுவாள். சிலப்பதிகாரத்தில் கானல் வரியில் ஒரு பாடல்; தலைவனைப் பிரிந்திருந்ததால் தலைவிக்குத் தூக்கம் இல்லை. தூங்கினால் அவனைக் கனவிலாவது காணலாம்.

ஆனால், இமைகளோ மூட மறுக்கின்றனவே; ஆகவே, நீர்க்கழியில் உள்ள நெய்தல் பூவை நோக்கி, "பூவே! என்னைப் போல் உனக்குப் பிரிவுத் துன்பம் இல்லை. ஆகவே நீ தூங்கியிருப்பாய். அப்போது என் தலைவன் வந்ததை நீ கனவில் கண்டாயா, சொல்" எனத் தன் பிரிவுத் துன்பத்தை ஆற்றாது அரற்றுகிறாள்.

புன்கண்கூர் மாலைப் புலம்பும்என் கண்ணேபோல்
துன்பம் உழவாய் துயிலப் பெறுதியால்
இன்கள்வாய் நெய்தால்! நீஎய்தும் கனவினுள்
வன்கணார் கானல் வரக்கண்(டு) அறிதியோ

என்பது அக்கருத்தமைந்த அருமையான பாடல். தலைவி கனாக் காண்பதையும், தலைவனைக் காணாது வருந்துவதையும் வள்ளுவரும் இளங்கோவும் பாடியுள்ளனர். கவிஞர் 'வாரஸ்ரீ'யின் கவிதையில் காதலன் கனவு காண்கிறான். அந்தக் கனவையே காதலியிடம் சென்று, தன் வருத்தத்தைக் கூறுமாறு தூதாய் அனுப்புகிறான். சென்ற கனவு சென்றதுதான், திரும்பவே இல்லை! திரும்பி வந்திருந்தால், "என்ன ஆயிற்று, அவள் ஏன் இன்னும் வரவில்லை?" என்று கனவையாவது ஏசலாம். இப்போது அதுவும் வரவில்லையே! எதைப் பிடித்து ஏசுவது?

தூதாக்கிப் பலமுறைகள்
  துரத்தினேன்நான் கனவுகளை
  தோகைமயில் என்னுடனே பேச – என்றன்
போதாத காலமடா,
  போனவற்றைக் காணவில்லை
  புவியில்எதைப் பிடித்துநானும் ஏச? (பக். 39)

இதைப் படைத்துள்ள இக்கவிஞனின் உள்ளம் அவ்விரு மாக்கவிஞர்களின் உள்ளத்தோடு ஒப்ப நிற்கும் பெருமை வாய்ந்தது என்பதில் ஐயமில்லை!

காற்றை நோக்கி, உன் நிலையான முகவரி எது என்று கேட்கிறார், 'வாரஸ்ரீ'. வாடையாய், கோடையாய், கொண்டலாய், தென்றலாய் மாறி மாறித்தானே வீசுகிறாய்? உன் குடியிருப்புக்குத் தான் முகவரி இல்லை என்றால் நீ தோன்றுமிடத்திற்கும் நிலையான முகவரி இல்லையே! (பக். 44). காற்றுக்கு நிலையான முகவரி இல்லை என்று கூறும் இந்த அற்புதக் கவிதை 'வாரஸ்ரீ'க்குத் தமிழ்க் கவிதையுலகில் ஒரு நிலையான முகவரியைத் தந்திருக்கிறது என்பது திண்ணம்!

பண்டைக் கவிஞர்களுடைய உயர்ந்த கருத்துகள் 'வாரஸ்ரீ'யின் பாடல்களில் ஆங்காங்கே உறைந்திருப்பதையும் காண்கிறோம்! "ஒரு நிலத்தின் வளத்தை, அதில் வளரும்

பயிரைக்கொண்டு அறிந்துகொள்ளலாம். அதுபோல ஒருவனுடைய குலத்தை அவன் நாவில் தோன்றும் சொற்களால் அறியலாம்" என்கிறார், திருவள்ளுவர்.

நிலத்திற் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்

என்னும் குறளின் சாயலை 'வாரஸ்ரீ'யின்,

மண்தன் தரத்தைப் பேசிடுமோ? – பயிர்
வண்ணம் அன்றோ பாடிவரும் (பக். 60)

என்னும் பாடலடிகளில் காண்கிறோம்.

'இசை ஆறு' என்னும் பகுதியில் உள்ள ஏழு பாடல்களும் இசைத்து மகிழ்வதற்கு ஏற்றனவாய் உள்ளன. மேலும் அவை கருத்தோவியங்களாகவும் சிறந்து விளங்குகின்றன.

பறவைக் கூட்டம் பாட்டுப்பாட
பல்லவியார் தந்தது? (பக். 79)

இவ்வளவு அருமையான பாடல்களைப் பாட இந்தக் கவிஞருக்குப் பல்லவி யார் தந்தது?

கூட்டாக நிற்கின்ற தென்னந் தோப்பு – புயலின்
கொட்டத்தில் மரத்திற்கோ அதுவே காப்பு (பக். 82)

என்னும் அடிகள் ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் அடிகளாகிச் சிறக்கின்றன.

அமுதக் கவிஞர்

இந்தக் கவிஞர் தன்னம்பிக்கை கொண்டவர்;

தன்னம்பிக்கை கொண்டவன்நான் – அதன்
தடத்தில் வாழ்வை நடத்துகிறேன். (பக். 61)

என்னும் இக்கவிஞர், காலமெலாம் கவிதையில் ஆழ்ந்திருப்பதாகவும் கூறுகிறார்.

கவிதைப் பாவை ஈர்த்தாள் என்னைக்
கால மெலாம்நான் ஆழ்கின்றேன். (பக். 62)

கவிதையில் ஆழ்கின்ற இவர், தாம், 'ஆக்கிய அடிகள் தகுதியைப் பெற்றால் அதுவே எனக்குச் சந்தோஷம்' என்கிறார். அமுதினும் இனிய கவிதையைப் படைக்கும் வல்லமை தமக்கு உண்டு என்பதையும் அவர் உணர்ந்திருக்கிறார்.

.........நாளை
தேவர் அமு(து) எடுக்க வல்ல தேவன்நான் நான்! (பக். 63)

தன்னம்பிக்கை மிக்க கவிஞர், 'வாரஸ்ரீ' அமுதொத்த கவிதைகளை அள்ளி அள்ளி வழங்குவார் என்னும் அழுத்தமான நம்பிக்கையைக் கொள்ள இந்நூல் சான்று பகர்கிறது.

தொடர்ந்து இவருடைய கவிதை நூல்கள் வெளிவந்து கொண்டேயிருக்க வேண்டுமெனும் விருப்புடன் இந்தக் கவிஞரை- நல் இளைஞரை - ஏற்றமிகு சொல்லாளரை - உளம்நிறை உவப்புடன் வாழ்த்துகிறேன்.

நூல் ஆக்கம்	கவிஞர் வாரஸ்ரீ
வகைமை	கவிதை
வெளியீடு	மயன் பதிப்பகம், சென்னை. (1991)

(15)

சிரிக்கும் பூக்கள்

குழந்தை இலக்கியம் – புதுவரவு

குழந்தை இலக்கியம் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு புதுவரவு. அவ்வாறாயின், தமிழில் இதற்கு முன்னர்க் குழந்தை இலக்கியம் இருந்ததில்லையா? தொல்காப்பியம் ‘பிசி’ என்னும் ஓர் இலக்கிய வகையைக் குறிப்பிடுகிறது.

‘பிசி’ என்பது விடுகதை. "விடுகதை சிறுவர்களுக்குரியது. எனவே, சங்க காலத்திற்கு முன்பிருந்தே குழந்தைப்பாடல்க ளிருந்தன" என்பர், ஆய்வாளர். விடுகதைகள் குழந்தைகட்கு விருப்பமூட்டுவன என்றாலும் அவை குழந்தைகட்கே உரியன என்று கூற முடியாது.

கிரேக்கப் பழங்கதையில், ‘ஸ்பிங்ஸ்’எனும் மனிதத் தலையும் சிங்க உடலும் கொண்ட ஒரு விலங்கு இடம் பெற்றுள்ளது. அது ஒடிபசு என்னும் வீரனிடம், "முதலிலே நான்கு கால்; இடையிலே இரண்டு கால்; முடிவிலே மூன்று கால் கொண்டவர் யார்?" என்று கேட்டபோது ஒடிபசு, ‘மனிதன்’ எனச் சரியான விடை கூறியதால், தன் விடுகதைக்கு மனிதன் ஒருவன் விடையளித்துவிட்டானே என்ற வருத்தத்தால் அவ்விலங்கு உயிரை விட்டுவிட்டதாம். கிரேக்கப் பெருங்கவிஞர் ஹோமர், தாம் ஒரு விடுகதையை விடுவிக்க முடியாததற்காக நாணமுற்று உயிர் துறந்தார் எனக் கூறப்படுகிறது. எனவே, விடுகதைகள் முற்றிலும் குழந்தைகளுக்கே உரிய இலக்கிய வகை எனக் கூறமுடியாது.

கி.பி. 16ஆம் நூற்றாண்டளவில் ஔவையார் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி என்ற நூல்களையும், அதிவீரராம பாண்டியன் வெற்றிவேற்கை எனும் நூலையும் பாடியுள்ளனர். 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய உலகநாதர் உலக நீதியைப் பாடினார். இவை குழந்தைகட்குக்

கற்பித்துத் தரப்படுகின்றன என்றாலும், இன்று நாம் கண்டுவரும் குழந்தை இலக்கிய வகையில் இவை அடங்குமெனக் கூறுதற்கில்லை.

குழந்தை இலக்கியத் தோற்றம்

குழந்தைகட்கே உரிய, குழந்தைகள் பாடியும் ஆடியும் பயன்கொள்ளத்தக்க கவிதைகள் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் எழுந்தன. கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள் கி.பி. 1901இல் குழந்தைகட்கெனத் தனித்த கவிதைகளை எழுதினார். அவர் ஆசிரியராயிருந்ததால், மேனாட்டில் இருந்தது போன்ற தனித்த குழந்தைக் கவிதைகள் தமிழில் இல்லையென்ற குறையை உணர்ந்து, அக்குறை நீங்கும் வண்ணம் அருமையான பாடல்களை இயற்றினார்.

மேனாடுகளில் குழந்தை இலக்கியம்

இங்கிலாந்தில் கி.பி. ஆறாம் நூற்றாண்டளவிலேயே பாதிரிமார்களும் கற்றறிந்தோரும் குழந்தைகட்கெனத் தனியே பாடநூல்கள் எழுதலாயினர். ஆல்தெல்ம் (Aldhelm) (604-709) என்னும் பாதிரியாரே இங்கிலாந்தில் முதன்முதல் குழந்தைகட்குப் பாடநூல் எழுதியவர். அது வினா-விடைக் கவிதைகளாய் அமைந்திருந்தது. அல்குயின் (Alcuin) என்பார் எட்டாம் நூற்றாண்டில் எழுதிய பாடநூல், உரையாடல் முறையிலிருந்தது. பத்தாம் நூற்றாண்டினரான ஏயெல்பிரிக் (Aelfric) எனும் கல்வியாளர், குழந்தைகள் அன்றாடம் வாழ்வில் பயன்படுத்தும் பொருள்களைப் பாடுபொருளாய்க்கொண்டு வினா-விடை முறையில் எழுதினார். பதினொன்றாம் நூற்றாண்டில் குழந்தைகட்கான கலைக்களஞ்சியம் முதன்முதல் வெளிவந்தது. எலூசிடாரியம் (Elucidarium) எனப் பெயர் பெற்ற இக் களஞ்சியத்தைக் காண்டர்பரியின் தலைமைப் பாதிரியாரான ஆன்செல்ம் (Anselm) (1033-1109) என்பார் எழுதியுள்ளார். ஜான் அமோஸ்முகானமிஸ் என்பவரால் எழுதப்பட்டு, 1751இல் வெளியிடப்பட்ட நூலே ஐரோப்பாவில் முதன்முதலாய்ப் பட விளக்கங்கள் கொண்ட பாடநூலாய் அமைந்தது. குழந்தைகளின் விருப்பு வெறுப்புகளை அறிந்து, அவர்களின் மன உணர்வுகளை நிறைவு செய்யும்வண்ணம், பதினெட்டாம் நூற்றாண்டில் ஜான் நியூபெர் (1713-1767) என்னும் புத்தக விற்பனையாளர் குழந்தைகட்கெனத் தொடர் வெளியீடாய்ப் பல நூல்களை வெளியிட்டார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் குழந்தைகட்கெனப் படைப்பிலக்கியங்களும் தோன்றலாயின.

தமிழில் குழந்தை இலக்கிய வளர்ச்சி

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ஆங்கிலக் கல்வி முறையும் நம் நாட்டில் நுழைக்கப்பட்டதால் அவர்களுடைய பாடநூல்களை யொப்பத் தமிழ்நாட்டுக் குழந்தைகட்கும் பாடநூல்கள் எழுதப் படலாயின. தொடக்கப்பள்ளி மாணவர்கட்கென எழுதப்பட்ட நூல்களில் இடையிடையே பாடல்கள் இடம் பெற்றன. 'அ' இது ஓர் அத்திப்பழம்..... என்பது போன்ற பாடல்களை முதன் முதலில் எழுதி வெளியிட்டவர், திரு. கா. நமசிவாய முதலியார் ஆவர். அவரையொட்டி மணிமங்கலம் திருநாவுக்கரசு அவர்களும், மயிலை சிவமுத்து அவர்களும் பாடநூல்களில் பாடல்கள் எழுதினர்.

ஆணிவேர் அழ. வள்ளியப்பாவே

இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்துதான் பாடநூல்கள் அல்லாத, குழந்தைகட்கென்றே தனியாய் எழுதப்பட்ட பாடல் நூல்கள் வெளிவரலாயின. இவ்வகையில் முன்னோடியாய் விளங்கியவர், அழ.வள்ளியப்பா அவர்களே! அவர் எழுதிய குழந்தைக் கவிதைகள் அடங்கிய, 'மலரும் உள்ளம்' (முதற்றொகுதி) 1954 இல் வெளிவந்தது. பின்னர், 1961 இல், 'மலரும் உள்ளம்' (இரண்டாம் தொகுதி) வெளிவந்தது. இன்று நூற்றுக் கணக்கானோர் அவர் நடையைத் தம் நடையாகவும், .அவர் கருத்தைத் தம் கருத்தாகவும், அவர் உத்தியைத் தம் உத்தியாகவும் கொண்டு கவிதைகள் எழுதி வருகின்றனர். ஊரென்றாலே, 'உறையூர்'; பூவென்றாலே, 'தாமரை' என்பதுபோல, 'குழந்தைக் கவிஞர்' என்றாலே அழ. வள்ளியப்பாவைக் குறிப்பதாகவே அமைந்துவிட்டது. கவிமணி குழந்தை இலக்கியத்திற்கு வித்திட்டார்; முளைத்து வளர்ந்துள்ள குழந்தைக் கவிதையெனும் ஆலின் அடிமரமாகவும் ஆணிவேராகவும் இருப்பவர் அழ. வள்ளியப்பாவே ஆவர். இன்று நூற்றுக்கணக்கில் அந்த ஆலின் விழுதுகள் கவிதை நிலத்திலூன்றிக் கவின் செய்கின்றன.

"குழந்தைகட்கு எழுதுபவர்கள் தம் அறிவாற்றல் புலமைகளையெல்லாம் ஒருபுறம் ஒதுக்கிவிட்டு, தாமும் குழந்தையாகி, குழந்தைகளின் மன இயல்புகளை ஓர்ந்து அவர்கள் சுவைக்கும் விதத்தில் கவிதைகளைப் படைக்கவேண்டும்" என்பதை முற்றிலும் கடைப்பிடித்து எழுதியவர் - எழுதி வருபவர் - திரு. அழ. வள்ளியப்பா ஆவர்.

கற்பிக்கும் ஆசிரியர்

எதையும் நேரடியாய்க் கற்பிப்பதைவிடக் கதை வாயிலாகவோ, பாடல் வாயிலாகவோ கற்பிக்கும்போது குழந்தைகள் அவற்றை எளிதில் கற்றுக்கொள்ளுகின்றன. கவிஞர் அழ. வள்ளியப்பா,

அ, ஆ என்றேனே
  அத்தை வீடு சென்றேனே;
இ, ஈ என்றேனே
  இட்டலி எட்டுத் தின்றேனே.....

என அகர வரிசையையும்,

எங்கள் வீட்டில் குழந்தைகள்
  என்னைச் சேர்த்து நான்குபேர்;
தங்கைப் பாப்பா ஒன்று,
  சமர்த்துப் பையன் இரண்டு,

சின்னக் கண்ணன் மூன்று,
  சிரிக்கும் முருகன் நான்கு

என எண்களையும்,

ஏழும் ஏழும் பதினாலாம்
  எலியா ருக்கு முழம்வாலாம்

எனக் கணக்கையும்,

கண்டங் களிலே மிகவும் பெரிய
  கண்டம் ஆசியா....

என நில நூலையும்,

தாஜ்மகாலைக் கட்டியவர்
  யார்? யார்? யார்?
சக்ரவர்த்தி ஷாஜகானாம்
  கேள், கேள், கேள்

என வேடிக்கைப் போக்கில் வரலாற்றுச் செய்திகளையும்,

வண்ண வண்ணப் பூக்கள் – நல்ல
  மணம்நி றைந்த பூக்கள்
நீலம் பச்சை சிவப்பு – இன்னும்
  நிறங்கள் பலவும் உண்டு

என நிறங்களையும்,

பூவன் மொந்தன் ரஸ்தாளி
  பேயன் நேந்திரம் மலைவாழை....

எனப் பழ வகைகளையும்,

சம்பத்துக்கு வீடுஉண்டு
தாம்ப ரத்திலே
பட்டுவுக்கு வீடுஉண்டு
பல்லா வரத்திலே

எனச் சென்னை நகரப் பகுதிகளையும்,

கங்கை சிந்து பிரம்ம புத்ரா
பிறக்கும் இமயமாம்

என இமயத்தையும் அதில் தோன்றும் நதிகளையும் பாட்டுப் போக்கிலேயே குழந்தைகள் நெஞ்சில் பதியவைத்துவிடுகிறார்;

கூட்டம் கூட்ட மாகவே
குருவி பறந்து சென்றிடும்

எனத் தொடங்கும் பாடலில், கற்கள் குவியல்குவியலாய்க் கிடக்கும்; பழங்கள் கூறு கூறாய் விற்கும்; திராட்சைகள் குலை குலையாய்த் தொங்கும் என அடுக்குத் தொடர்களை அழகுறக் கற்பிக்கிறார்.

ஒலி நய உத்தியர்

பொருளுக்கு முக்கிய இடமின்றி ஓசை நயத்தை மட்டுமே கருத்திற்கொண்டு குழந்தைப் பாடல்கள் இயற்றப்படுவதுண்டு. அவை பொருளில் பாடல்கள் (Nonsense Rhymes) எனப்படும். நம் குழந்தைக்கவிஞரோ ஒலி நயத்தோடு பொருளுக்கும் இடந்தந்து இனிய பாடல்கள் பலவற்றைப் படைத்துள்ளார்.

அண்ணாமலை அண்ணாமலை
என்ன சொன்னானாம்?
ஆனை முதுகில் ஏறிச்செல்ல
ஆசை என்றானாம்!

கத்திக் கப்பல் செய்து வைத்தேன்
கால்வாய் கூடத் தோண்டி வைத்தேன்.

வா, மழையே, வா
வா, மழையே, வா.

எனும் பாடல்கள் சான்றாம். சொன்ன சொற்களே மீண்டும் மீண்டும் வருமாறு பாடுவது குழந்தைகளை எளிதில் கவரும் தன்மையதாம். அவ்வுத்தி இப்பாடல்களிலும் இன்னும் இவையொத்த வேறு சில பாடல்களிலும் கையாளப்பட்டுள்ளது.

சின்னச் சின்னக் குழந்தையம்மா
எங்கள் பாலமுருகன் – புன்
சிரிப்புக் காட்டி மயக்கிடுவான்
எங்கள் பாலமுருகன்

எனும் முதல் பாடல் தொடங்கி நூல் முழுதும் நிறைந்துள்ள ஒலி நயப் பாடல்கள் நம்மை முருகனின் புன்சிரிப்பினும் மயக்குவதைக் காண்கிறோம்!

நாட்டுப்பற்றாளர்

'நான் இந்தியன்' என்று சொல்வதில் ஒவ்வொருவரும் பெருமைகொள்ள வேண்டும். காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையுள்ள ஒவ்வொருவரும் உடன்பிறந்தவர் என்ற உணர்வு வேண்டும். நாட்டுக்காக உழைத்த நல்லவர்கள், என்றும் நெஞ்சில் நிலைபெற்றிருக்க வேண்டும். சாந்தமூர்த்தியும் சத்திய வடிவுமான காந்தி வழியே நாம் வாழும் வழி என்ற செய்திகளைக் கூறி இளம் உள்ளங்களில் நாட்டுப்பற்றைக் கவிஞர் ஊட்டுகிறார்; இந்த எண்ணம் இணையப்பெற்ற குழந்தைகள்,

இன்று நேரு வாழ்வது
எங்கள் பிஞ்சு நெஞ்சிலே

எனப் பாடிக் களிப்பதைப் பார்த்துப் பரவசம் கொள்கிறார்.

'அது அந்தக் காலம், இது இந்தக் காலம்' என நகைச்சுவை மன்னர் என்.எஸ். கிருஷ்ணன் பாணியில் உள்ள ஒருபாடலில், நாடு அன்றிருந்ததைவிட இன்று பல்வகையிலும் முன்னேறி யுள்ளதைச் சுட்டிப் பெருமை கொள்கிறார்.

சொந்த நாடு என்பது போலவே, 'சொந்த ஊர்' என்பது ஒரு சுகமான உணர்வைத் தோற்றுவிப்பது இயல்பே. அவ்வகையில் கவிஞர் தம் சொந்த ஊரான இராயவரத்தையும், இளமையில் அங்கு அவர் செய்த நாட்டு விடுதலைத் தொண்டினையும் எண்ணி இறும்பூதெய்துகிறார்.

சீரிய சிந்தனையாளர்

பாடல்வாயிலாகப் பல சீரிய சிந்தனைகளைக் குழந்தைகட்குப் பாலில் தேன் கலந்தது போலச் சுவையுடன் தருவதில் வல்லவராய் விளங்குகிறார், நம் கவிஞர்.

செடி நட்டு வளர்க்க வேண்டும். விண்கலத்தில் ஏறி நிலாவுக்குச் செல்லும் விஞ்ஞான அறிவு வளர வேண்டும். எண்ணம், வாக்கு, செய்கையிலே இனிமை இருந்தால் வாழ்வே இன்பமாம். ஆண்டவன் தந்த கையால் அனுதினமும் வேலை

செய்து அனைவர்க்கும் உதவி செய்யவேண்டும். கட்டியணைத்து வளர்த்த அன்னையின் கை கடவுள் போன்றது. ஆசிரியரை மதிக்க வேண்டும் என்றெல்லாம் சிந்தனைகளைப் பக்கந்தோறும் பெய்து செல்கிறார்.

பிறந்த நாள் என்றால் குழந்தைகட்குத் தின்பண்டங்களும் புத்தாடைகளும் பரிசுப் பொருள்களுந்தாம் நினைவுக்கு வரும். நம் கவிஞரோ அந்நாளை,

அன்பு காட்டி வாழவும்,
அறிவை வளர்த்துக் கொள்ளவும்,
என்றும் நன்மை செய்யவும்,
எண்ணிப் பார்க்கும் நல்லநாள்

என்கிறார். பள்ளிக்கூட மணி, பலரும் போற்ற நல்ல பெயர் எடுக்கச் சொல்லியும், படித்தபடி வாழ்க்கையிலே நடக்கச் சொல்லியும் ‘டாண் டாண்’ என ஒலிக்கிறதாம்!

உயரிய உவமையாளர்

உவமை வாயிலாய்ச் சொல்லப்படும் செய்திகள் உள்ளத்தே நன்கு பதியும். ‘பாய்ந்தான்’ என்பதையே, ‘புலி போலப் பாய்ந்தான்’ என்னும்போது பொருள் அழுத்தம் பெறுகிறது. உவமையைப் பொருத்தமுறக் கூறுவதில் அழ. வள்ளியப்பா தனித்த திறம் காட்டுகிறார்.

கொக்கின் மூக்கிற்கு ஈட்டியையும், அன்னத்தின் நிறத்திற்குப் பாலையும் உவமையாக்குகிறார். எட்டு மாடிக் கட்டடத்தின் மேலே நின்று கீழே சாலையைப் பார்க்கும்போது அது, ‘தலையில் வகிடு எடுத்ததைப்போல்’ இருப்பதாய்க் கூறுவது அருமையான உவமை.

தட்டில் இருந்த சோளப் பொரியை
விட்டு எறிந்த தார்? – பின்
நட்ட நடுவே அந்தவெள்ளித்
தட்டை வைத்தது யார்?

என உடுக்களைச் சிதறிக்கிடக்கும் சோளப் பொரியாகவும், நிலவை அவற்றினிடையே கிடக்கும் வெள்ளித் தட்டாகவும் சுட்டிக் குழந்தைகட்கு உருவகத்தையும் அறிமுகப்படுத்திவிடுகிறார். குழந்தைகள் அறிந்தும் உணர்ந்துமுள்ளவற்றையே கவிஞர் பயன்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

நயமிகு நகைச்சுவையாளர்

அனைவர்க்குமே நகைச்சுவை இனிமை பயப்பது. குழந்தைகட்கோ அது கொள்ளை இன்பம் தருவது. அழ.

வள்ளியப்பா அவர்கள் வேடிக்கைப் பாடல்கள் என்றும், நகைச்சுவைப் பாக்கள் என்றும் பல கவிதைகள் புனைந்துள்ளார்.

சுப்பு வுடைய பாட்டி வயது
  தொண்ணூற் றொன்பது – அவள்
சுறுசுறுப்பைப் பார்க்கும் போது
  இருபத் தொன்பது!

தொண்ணூற்றொன்பதும் இருபத்தொன்பதும் செய்யும் வேடிக்கை பெருவேடிக்கை. தாடிச் சாமியார் நம்மைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைக்கிறார். இப்பாடல்களுக்கு வரையப் பட்டுள்ள படங்கள் அவற்றின் வேடிக்கைத் தன்மைக்கு மேலும் மெருகேற்றுகின்றன. பாம்பும் மீனும் கண்மூடித் தூங்குவதில்லை; ஏன் தெரியுமா என்ற வினாவை எழுப்பி, அவற்றுக்கு இமை இல்லை என்ற விடையளிப்பது நயமாய் உள்ளது.

மீன், பசு, குரங்கு இவற்றுக்கு வால்கள் ஒவ்வொரு வகையில் பயன்படுகின்றன என்று சொல்லி, நமக்கு வாலிருந்தால் எப்படி களிப்பூட்டும் என்ற வினாவைக் கவிஞர் எழுப்பியிருப்பது நகைச்சுவையாம். பத்துப்பைசா பலூனைப் பையன் பையப் பைய ஊத அது வெடிப்பதைப் படம் பிடிக்கிறது ஒரு பாடல்! எதையும் 'பைய, பைய' என்றில்லாமல் 'துறுதுறு' என்று துடிக்கும் குழந்தைக்குப் பையன் என்று ஏன் பெயர் வந்ததோ தெரியவில்லை.

கவின்மிகு கதையாளர்

அரிய நீதிகளைக் கதைகள்மூலம் குழந்தைகட்குப் புகட்டுவது எளிது. சிவாஜி வீரனானது, தாய் சொன்ன கதைகளால்தாமே! நித்தம் உழைத்துப் புதுமை காண வேண்டும்; பிறர்க்குதவுவதே பெருமகிழ்ச்சி; உண்மை பேசுதலே உயர்வு தரும்; ஒருவர்க்கொருவர் சண்டையிட்டால் உள்ளதையும் இழப்போம்; பிறரது உரிமையை மதிப்பதே சுதந்தரம் என்பன போன்ற அரிய நீதிகளை எளிய கதைகள் வாயிலாய்க் கவிஞர் குழந்தைகட்குப் புகட்டியுள்ளார்.

நன்னம்பிக்கையாளர்

குழந்தைகளை ஊக்கப்படுத்தி உயர்நிலைக்கு அவர்களைக் கொண்டுவரக் கவிஞர் பெரிதும் முயல்கிறார்.

ஏடு தூக்கிப் பள்ளியில்
  இன்று பயிலும் சிறுவரே
நாடு காக்கும் தலைவராய்
  நாளை விளங்கப் போகிறார்!

என்பது அழ. வள்ளியப்பாவின் அமுத மொழி. அதேபோல இந்நூலுள்ளும்

ஏழைக் குடிசையில் பிறந்தாலும்
  எத்தனை துன்பப் பட்டாலும்
நாளைய தலைவர் ஆவதற்கு
  நாளும் முயற்சி செய்திடுவேன்!

எனும் இப்பாடல், 'இன்று குழந்தைகளேயாயினும் இனி இந்த நாட்டினை ஆளப்பிறந்தவர் அவர்களே' என நம்பிக்கை கொண்டவர் கவிஞர் என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

சுவைத்தேன் கவியாளர்

படிக்கப் படிக்க நெஞ்சில் சுவையேற்றும் பாத்தொகுப்பே சிரிக்கும் பூக்கள் என்னும் இந்நூல். "அழ. வள்ளியப்பாவின் பாடல் 'அப்படியிருக்கிறது, இப்படியிருக்கிறது' என்று நான் சொல்ல முயல்வது, பிள்ளையே பெறாதவள், பல பிள்ளை பெற்றவளுக்கு மருத்துவம் பார்ப்பது போலாகும்! குழந்தைக்கவிதைத்துறையில் ஒப்பாரும் மிக்காருமின்றி ஓங்கி வளர்ந்துள்ள இமயம் அவர்! அதன் அடிவாரத்தில் நின்று எவ்வளவு நிமிர்ந்தாலும் உச்சியை எவ்வாறு காணமுடியாதோ, அதுபோன்ற நிலையதே என்னுடைய இவ்வுரை! நெஞ்சில் குறிஞ்சித்தேனைப் பாய்ச்சும் நம் குழந்தைக் கவிஞர் வாழ்க! அவர்தம் கவிதைத் தொண்டு வளர்க!

நூல் ஆக்கம்	குழந்தைக்கவிஞர் அழ. வள்ளியப்பா
வகைமை	குழந்தை இலக்கியம்
வெளியீடு	குழந்தை புத்தக நிலையம், சென்னை–40. (1986)

16

ஆடிப் பாடுவோம்

தமிழிலக்கியத்தில் குழந்தை இலக்கியம் இப்போது மிகு செல்வாக்குப் பெற்று வளர்ந்து வரும் ஒரு பிரிவாய் விளங்குகிறது. தமிழில் இலக்கியங்கள் தோன்றிய காலத்திலேயே குழந்தை இலக்கியமும் இருந்து வந்ததென்பதற்கான சான்றுகள் இருப்பினும், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திற்றான் குழந்தைகட்கென்றே படைக்கப்பட்ட நூல்கள் வெளிவரலாயின. பாரதியார், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, பாரதிதாசன், வாணிதாசன், பெருஞ்சித்திரனார் போன்று பெரியவர்கட்கெழுதிப் புகழ்பெற்ற கவிஞர்கள் பலர் குழந்தைகட்கெனவும் எழுதி யுள்ளனர். பாரதியாரின், 'ஓடி விளையாடு பாப்பா' பாடலும், கவிமணியின், 'தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு' பாடலும் குழந்தைப் பாடல்களுள் சிறப்பிடம் பெற்றுள்ளன.

குழந்தைகட்கென்றே - குழந்தைகட்கு மட்டுமே - எழுது பவராய்க் கவிஞர் அழ.வள்ளியப்பா இந்நூற்றாண்டின் இடைப் பகுதியில் குழந்தைக் கவிதை நூல்கள் வெளியிடலானார். அவரையடுத்து, அவர் வழியில் இன்று நூற்றுக்கணக்கானோர் குழந்தைப் பாடல்களை எழுதி வருகின்றனர். இத்தகு இன்றைய குழந்தை எழுத்தாளர்களுள் கவிஞர் செல்ல கணபதி தமக்கென ஒரு தனியிடத்தைப் பெற்றுச் சிறந்து விளங்குகிறார்.

பெரியவர்கள், நன்மை தீமைகளை அறிந்து ஆய்ந்து-நீரை அகற்றிப் பாலை மட்டுமே பருகும் அன்னம்போல - தீமைகளை ஒதுக்கி நல்லவற்றைக் கொள்ளக்கூடிய அறிவுப்பக்குவம் பெற்றவர்கள். ஆனால், குழந்தைகளோ நன்மை, தீமையைப் பகுத்தறிய முடியாது, அறியும் அனைத்தையும் பசுமரத்தாணிபோல் உள்ளத்தே பதிய வைத்துக்கொள்வார்கள். ஆதலின், பெரியவர்கட்கு எழுதுவதைவிடக் குழந்தைகட்கெழுதுவது மிகவும் கடினமான செயலாகும். தவறியும் தீயன அவர்கள் நெஞ்சில் புகுந்துவிடக்கூடாதாதலின் பெருவிழிப்புடன் எழுத வேண்டிய

கடமை குழந்தை எழுத்தாளர்கட்குண்டு. குழந்தை இலக்கியத்தில் எதைச் சொல்கிறோம் என்பதைவிட எதைச் சொல்லக்கூடாது என்பதே முக்கியம். இந்தப் பொறுப்புணர்ச்சியை உணர்ந்து எழுதுகிற கவிஞராய்ச் செல்ல கணபதி திகழ்கிறார்.

குழந்தைகள் அறிந்துள்ள சொற்கள், அறிந்துள்ள பொருள்களைக்கொண்டு அவர்கள் அறிய வேண்டியவற்றைத் திறம்பட எடுத்துச் சொல்வதில் செல்ல கணபதி வெற்றி கண்டுள்ளார். குழந்தைகளோடு குழந்தையாய் ஒன்றி, அவர்கட்கான ஒலிநயப் பாடல்கள், விளையாட்டுப் பாடல்கள், அறிவுரைப் பாடல்கள் படைப்பதில் தமக்கென ஒரு தனி வழியை அமைத்துக்கொண்டு பாடுகிறார், கவிஞர் செல்ல கணபதி. குழந்தைகளின் உள்ளப்பாங்கை நன்கு தெரிந்து, அவர்களுடைய உள்ளங்களைக் கவரத்தக்க வகையில் கவிதைகளைப் புனைந்துள்ளமை பாராட்டுக்குரியது.

குழந்தைகள், ஒலிக்குறிப்புகளில் மிகுதியும் ஈடுபாடுடைய வர்கள்.

சங்குச் சக்கர சாமி வந்து
சிங்குச் சிங்குனு ஆடிச்சாம்

எனும் குழந்தைப்பாடலை அறிவோம். பாடலைவிட அதிலுள்ள 'சிங்குச் சிங்குனு' எனும் ஒலிக்குறிப்பே குழந்தைகளைக் கவரும் தன்மையதாம்! அதைச் சொல்லும்போது அவர்களும் 'சிங்குச் சிங்கென' ஆடவே செய்வர்! கவிஞர் செல்ல கணபதி ஒலி நயக் குறிப்புகளைச் சிறப்புற இணைத்துப் பாடல்களைப் படைக்கும் திறம் பெற்றுள்ளார்.

சலக்குச் சலக்குச் சலக்குச் சலக்குச்
சலங்கைச் சத்தமாம்!
சாம்பல் நிறத்துக் குதிரை பூட்டி
வண்டி ஓடுதாம்!

சலங்கைக்கு ஏற்றதாய்ச் 'சலக்கு'ச் சத்தத்தையும், குதிரை வண்டி ஓடும்போது அச்சத்தம் உண்டாவதையும் ஒருங்கிணைத்து அழகியதொரு பாடலைப் புனைந்துவிடுகிறார்.

'பல்போனால் சொல்போச்சு' என்பது பழமொழி. பாட்டி. பல்லில்லாதவள். அவள் பேசுவது எப்படியிருக்கும்? கவிஞர் கூறுகிறார்

பல்லில் லாமல் பேசும் பேச்சு
பப்பப் பப்பாவாம்!

சிறுவர்கள் குறும்புத்தனம் மிக்கவர்கள்; பாட்டியைத் திண்டாட வைத்து வேடிக்கை பார்க்கவேண்டும். என்ன செய்வது?

அப்பம் சீடை வடை முறுக்கைத்
 தின்னச் சொல்லியே – அந்தப்
பப்பப் பப்பா பாட்டி யைநாம்
 பார்த்துச் சிரிக்கலாம்!

சிறுவர்கட்கு மட்டுமா, நமக்கும் இக்காட்சி சிரிப்பை ஊட்டத்தான் செய்யும். இப்படிக் குழந்தைகள் இயல்பறிந்து அனைத்துப் பாடல்களையும் பாடியிருப்பது கவிஞரின் தனிச்சிறப்பாம்.

குழந்தைகள் அறிந்தவைபற்றிப் பாடுவதில் குழந்தைக் கவிஞர்கள் மிகவும் கவனம் செலுத்துவர். முன்னாள்களில் ‘பாமரேனியன்’ நாய்களைப் பெரும்பான்மையாய்க் கண்டிருக்க முடியாது. இப்போது நகரங்களில் பெரும்பாலான வீடுகளில் அவை வளர்க்கப்படுகின்றன. சிறுவர்கள் ஆசையோடு அவற்றுடன் கொஞ்சி விளையாடும் காட்சியையும் கண்டு கவிஞர் பாடியுள்ளார் :

பஞ்சு போலே முடியைக் கொண்ட
 பாம ரேனியன்
கொஞ்சி அணைத்துக் கொள்ள ஏற்ற
 பாம ரேனியன்!

எனப் பாடல் தொடங்குகிறது. அந்நாயை அணைத்து மகிழ்வதற்கான காரணத்தைப் பாடலில் இறுதியில் விளக்குகிறார்.

நடுத்தெ ருவினில் சுற்றி டாத
 பாம ரேனியன்!

நடுத்தெரு சுற்றும் நாயாய் இருந்தால் அணைத்து மகிழ முடியாது. இதுவோ பஞ்சு போன்ற முடியுடன் வீட்டினுள்ளேயே வளரும் ஆசை நாயன்றோ? ஆகவேதான் அணைத்து மகிழமுடிகிறது. இவ்வாறு பாடல்கள் காரண காரியங்களுடன் அமைந்து சிறப்புறுகின்றன.

இன்றைய குழந்தைகள் நாளைய தலைவர்கள்; ஆதலின், அவர்கள் உள்ளத்தில் அதற்கேற்ற நல்லறிவை, நாட்டுப்பற்றை, நயமிகு கருத்துகளை ஏற்ற வேண்டும். இதனை உணரும் கவிஞர் செல்ல கணபதி, பாடல்களிடையே அரிய கருத்துகளைப் பக்குவமாய்த் தந்துவிடுகிறார்!

உயர்ந்த நிலைக்குப் போவ தென்றால்
ஊக்கம் வேண்டும் வாழ்விலே!....

தூக்கம் மிகுந்த சோம்பலால்
துவண்டு போகும் வாழ்க்கையே!

உழைப்பே வாழ்வின் மூலதனம்
உண்மை உணர்வால் வாழ்வுயரும்....

சேமிக்கும் பழக்கம் வளர்வத னாலே
தேசத்து மக்கள் பயன்பெறுவார்....

முயற்சி தொடர்ந்தால் முடியா தென்பது
உலகில் கிடையாது......

திறமைக் காக உன்னைத் தேடிச்
செல்வம் சேர்வ துண்டு
பிறருக் காக அதனைத் தந்து
பேண வேண்டும் அன்பு....

என்பன போன்ற உயர்ந்த கருத்துகள் குழந்தைகள் மனத்தில் பதிய வைக்கப்படுகின்றன.

கவிஞரின் பாடல்களில் தங்க மீன்களும், பாடும் வண்டுகளும் பளபளத்துப் பொலிவு பெறுகின்றன; ஊரைச் சுற்றும் விமானம் உலா வருகிறது; குண்டு மல்லிகையும் மொட்டு ரோசாவும் மணம் பரப்புகின்றன; மண்ணைக் கிளறிப் பொல பொலக்கச் செய்து நேர்த்தியாய்ப் பயிர்கள் வளர உதவும் மண்புழு நெளிகிறது; கொட்டும் மழையில் 'கொர் கொர்' என்று பாட்டிசைக்கும் தவளை தத்திச் செல்கிறது; "எலியைப் பிடித்துத் தொல்லையைத் தீர்க்கும் என்னைப் பண்டமுருட்டும் பூனை எனப் பழி சொல்வதா" என்று பூனை கேட்கிறது; பாலைக் குடித்ததால் பசி தீர்ந்து காலை உதைத்துக் கடகடெனச் சிரிக்கும் உயிர்ப் பாப்பாவும், சிங்கப்பூரு பொம்மைப் பாப்பாவும் தவழ்ந்து செல்கின்றனர். நண்டுவளை குளுமையைத் தருகிறது! நேர்மையால் உயர்ந்த நேரு மாமா ரோசாப் போலச் சிரிக்கிறார். இவற்றைப் படிக்கும் நமக்கும் "பாட்டுப் பாடலாம்" என்ற பரவசம் உண்டாகிறது.

இவர்கள் இன்று உயிருடன் வந்தால் என்ன சொல்வார்கள் என நேருஜி, ராஜாஜி, காந்திஜிபற்றி எழுதியிருப்பது புதிய பாங்காகும்.

ஆடலும் பாடலும் குழந்தைகட்குரியனவென்பதால், 'ஆடிப் பாடுவோம்' என நூலுக்குத் தலைப்பிட்டிருப்பது அருமை. குழந்தைகள் ஆடிக்கொண்டு பாடுவதற்கும், பாடிக் கொண்டு ஆடுவதற்கும் ஏற்ற பாடல்களைத் தாமும் குழந்தையாகவே மாறித் தந்திருக்கிறார். விளையாட்டாகவே குழந்தைகட்கு விழுமிய கருத்துகளை நெஞ்சில் பதிய வைப்பதில் கவிஞர் முழு வெற்றி பெற்றுள்ளார். இன்றைய இளந்தலைமுறையினர் வாயிலாய்ப் புதிய சமுதாயம் படைக்கப் புறப்பட்ட சீரிய முயற்சியே இந்நூல். இவ்வரிய பணியில் வெற்றி பெற்றுள்ள ஆசிரியர் கவிஞர் செல்ல கணபதி அவர்களை மனமாரப் பாராட்டி மகிழ்கிறேன்.

நூல் ஆக்கம்	கவிஞர் செல்ல கணபதி
வகைமை	குழந்தை இலக்கியம்
வெளியீடு	பழனியப்பா பிரதர்ஸ், சென்னை.(1986)

17

வெளுக்கப் பார்க்கும் கிழக்கு

புதுக்கவிதை படைக்கும் இளந்தலைமுறையினருள் முன்னணியில் நிற்கும் சிறப்பைப் பெற்றுள்ளவர், செல்வி சித்ரா. சித்ராவின் சிந்தனைத் துடிப்பைத் துள்ளல் நடையில் வெளிப்படுத்துகிறது, இந்நூல். குற்றம் செய்தவர் எவரேயாயினும் அவர் நிலை கருதாது அக்குற்றத்தைக் கண்டிக்கும் நக்கீரப் போக்கையும், சமுதாயக் கொடுமைகளைத் தொகையாக்கி அவற்றைத் தூள் தூளாக்கும் துடிப்பையும் இங்கே நாம் காணமுடிகிறது.

செல்வி சித்ராவின் கவிதைப் படைப்புக்கு அடித்தளமாய் அமைவன பாரதியின் பாடல்களேயாம்.

உன்
பாடலைப் படித்த பின்பே
என்
கைவிரல்கள்
எழுதுகோலைத் தீண்டும்
வலிமை பெற்றன

என்றும்,

உன்
கவிதை மாளிகையில்
என்
விழிகளால் நடந்து
இதயத்திற்குப்
பயிற்சி கொடுக்கிறேன்

என்றும், பாரதியே தமக்கு உற்ற வழிகாட்டியாகவும் ஊக்கத் தூண்டுகோலாகவும் இருப்பதைக் கவிஞர் புலப்படுத்துகிறார்.

பாரதியாம் பாட்டுப் பாட்டனைப் பின்பற்றுகின்ற பேரப்பிள்ளையாம் இக்கவிஞர் அப்பாட்டனுக்குத் தம் பாட்டையே பரிசாக்கி மகிழ்கிறார்.

உன்
தங்க விரல்களுக்கு
என்
பாட்டு மோதிரத்தையே
பரிசாக வைக்கிறேன்

எனப் பெருமை கொள்கிறார்.

பாரதியைப் பின்பற்றி உண்மையாகவும் கடினமாகவும் உழைத்திருந்தால் நாடு இன்று உயர்ந்த நிலை எய்தியிருக்கும். பாரதியின் கருத்துகளை ஏற்று நடைமுறைப்படுத்தாமையே நாட்டின் இன்றைய ஏழ்மை நிலைக்குக் காரணம் எனக் கவிஞர் சுட்டிக் காட்டுகிறார்!

பாரதி
உனக்கு நாங்கள்
உண்மையாக
இருந்திருந்தால்
இன்று—
உலக வங்கிக்கு
உண்மையாக
இருக்க வேண்டிய
விபத்து நேர்ந்திருக்காது

என்று கவிஞர் கூறுவது உண்மைதானே?

தேசிய ஒருமைப்பாட்டுக்கு,

கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம்
சிங்க மராட்டியர்தம் கவிதை கொண்டு
சேரத்துத் தந்தங்கள் பரிச ளிப்போம்

எனப் பாரதி குரல் கொடுத்தார்; பாவேந்தர் பாரதிதாசனோ,

இமையச் சாரலில் ஒருவன் இருமினான்
குமரி வாழ்வான் மருந்துகொண் டோடினான்

என ஒருமைப்பாட்டுக் குரலுக்கு வலிமை சேர்த்தார். செல்வி சித்ராவோ,

குமரிக்கடல் மீன்கள்
காஷ்மீரத்து ஆப்பிள்களை
கடித்துச் சுவைத்திட...
தஞ்சை வயல்களில்
தார்ப்பாலை வனத்து ஒட்டகங்கள்
மேய்ந்து திரிந்திட...

வேண்டுகின்றார். குமரி நெய்தலும், காஷ்மீரக் குறிஞ்சியும், தஞ்சை மருதமும், தார்ப்பாலையும் ஆக நானிலங்களும் ஒன்றிணையும் அருமைப்பாட்டை இங்கே காண்கிறோம்.

கவிஞர், 'சிவப்புச் சிந்தனையில்' உள்ளம் பறிகொடுத்தவர் என்பதை உணர முடிகிறது.

இதைவிட (சிவப்பைவிட)
உயர்ந்த நிறம்
உலகத்தில் இன்னும்
கண்டுபிடிக்கப்படவில்லை...

ஏழ்மை நிலவுமிடங்களிலெல்லாம் சிவப்பு படர்ந்தே தீருமென்பதை,

அடிபட்ட ஏழைகளின்
ஆத்திரங்கள்
ஒருநாள்
அளவற்றுப் பெருகும்போது
நிறங்கள் மட்டுமல்ல
நீங்களும் சிவப்பீர்கள்!

எனக் கவிஞர் கோடிட்டுக் காட்டுகிறார்.

எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்திய மக்கள்....

ஏழை யென்றும் அடிமை யென்றும்
எவரு மில்லை சாதியில்
இழிவு கொண்ட மனித ரென்பது
இந்தி யாவில் இல்லையே...

என்ற சமத்துவக்குரலைப் பாரதி எழுப்பினார். பாவேந்தரோ சற்று வன்மையாய்,

ஓடப்ப ராயிருக்கும் ஏழையப்பர்
உதையப்பர் ஆகிவிட்டால் ஓர்நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம்மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவர் உணரப்பா நீ!

என்றார். இதே போக்கில் செல்வி சித்ராவும்,

அடிமட்டம் மேல்மட்டம்
தரைமட்டம் எனவாகி
அனைத்தும் சமமாக
அனைவர்க்கும் சமமாக
அளிக்கப்படும் திருநாளே
சாகாத சரித்திர
சொர்க்கத்தின் திறப்புநாளாம்!

என அடிமட்டம் மேல்மட்டம் என்ற நிலை மாறி, அனைத்தும் சம மட்டம் எனும் நிலை உருவாக வேண்டுமென்பதை உணர்த்துகிறார்.

'மக்கள் பூசையே மகேசுவரன் பூசை' எனப் பேரறிஞர் அண்ணா குறிப்பிடுவார். செல்வி சித்ராவோ, 'பாமர சாதிக்குச் செய்யும் பூசையே பார்த்தசாரதிக்குச் செய்யும் பூசை' எனப் புதுமொழி படைக்கிறார்.

பார்த்த சாரதியின்
உண்டியை நிரப்புவதைவிட
பாமர சாதிகளின்
உண்டியை நிரப்புவோம்
அதில்தான்
உண்மையான தரிசனத்தைக்
காண முடியும்!

ஆணும் பெண்ணும் சமத்துவம் என்பது பேச்சளவில் உள்ளதே தவிர நடைமுறையில் இல்லையே எனக் கவிஞர் வருத்தப்படுகிறார்.

ஆணும் பெண்ணும்
நிகர் என்பது
அரிச்சுவடியில் மட்டுமே
அங்கீகரிக்கப் பட்டது.

பெண்கள் தாமே சிந்தித்துச் செயலாற்றும் திறனைப் பெறாதவரை பெண் சுதந்தரம் என்பது பேச்சளவிலேதான் இருக்க முடியும்.

சுதந்தரம் பெற்றாலும்
பறக்க முடியாத
ஜோதிடனின்
கிளி போல்,
சமத்துவம் பெற்றாலும்
எண்ணச் சிறகுகளை
வடிவுக்குக் கொண்டுவர
முடியாத
ஊமைக் கிளிகள்.

இவ்வாறு இன்று பெண்ணினம் இருந்துகொண்டிருப்பதை அழகிய உவமை மூலம் கவிஞர் விளக்கிவிடுகிறார்! சோதிடனின் கிளி - நினைந்து நினைந்து போற்ற வேண்டிய உவமை!

பெண்கள் மென்மையாய் இருக்க வேண்டியதுதான்; ஆயினும், அதுவே தங்கள் தன்மை என்று அவர்கள் கொண்டுவிடக்கூடாது என எச்சரிக்கிறார்.

பெண்களே!
மென்மை உங்கட்குத்
தேவைதான்;
அதுவே நம் தன்மை
என்பதுதான்
மாற்றப்பட வேண்டும்.

"காய்கறியைத் துண்டுபோடுவதோடு பெண்களின் விரல்கள் நின்றுவிடக்கூடாது; அநீதியைத் துண்டுபோடவும் அறிந்திருக்க வேண்டும். அவர்களின் விரல்கள் விழிகளில் மை தீட்டுவதோடு மட்டும் நின்றுவிடக்கூடாது. ஆண் வர்க்கத்தின் அதிகாரத்தை எதிர்க்கும் வித்தகமும் அவற்றிற்குத் தெரிந்திருக்க வேண்டும்" - என்பன போன்ற பெண்விடுதலைக் கருத்துகளைச் சுவையாகவும், மனத்தில் தைக்கும்வண்ணமும் இப்பெண் கவிஞர் எடுத்துரைக்கிறார்.

இன்று பெண்ணினத்தைப் பெரிதும் பீடித்துள்ள கொடுமை, வரதட்சணை.

நீ
சின்னஞ் சிறுவயதில்
சிற்றில் கட்டுகையில்
பொம்மைகள் வாங்கித் தந்தேன் – கண்ணம்மா
பொம்மைகள் வாங்கித் தந்தேன்
நீ
பெரிய மனுஷியாகி
புஷ்பித்து நிற்கையிலோ
கணவனை வாங்கிடவே – கண்ணம்மா
காசுதான் இல்லையடி; கையில்
காசுதான் இல்லையடி

எனக் கலங்கி நிற்கும் பெற்றோரைச் சோலை இளம்பரிதி எனும் கவிஞர் தம் கவிதையிலே காட்டுவார்.

செல்வி சித்ரா, திருமணத்தைத் 'தேர்தல்' என்றால், வரதட்சணையே அதனுடைய 'டெபாசிட்' எனக் கூறும் வேகம் நம் நெஞ்சைத் தொடுகிறது.

வக்கரித்துப் போன
ஆண்மனம்
கல்யாணத் தேர்தலிலோ
கற்பை விட்டுவிட்டுக்
காசு பணத்தையே
'டெபாசிட்' செய்யச் சொல்கிறது.

'டெபாசிட்' எனும் ஆங்கிலச் சொல்வழி ஆழமான கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

சமூகக் கொடுமைகளை எள்ளல் போக்கில் புலப்படுத்து வதில் கவிஞர் தேர்ந்தவராயிருக்கிறார்.

இப்போதெல்லாம்
மதம்பிடித்து அலைவது
யானைகள் அல்ல
இங்குள்ள மதங்கள்!

சமாதான தேவர்கள்தான்
இன்று புறா மாமிசத்தைப்
புசித்து மகிழ்கிறார்கள்!

சுதந்தரப் பயிரைப்
பரம்பரை வேலிகளே
அனுபவித்து வருகிறது!

இன்று கண்ணன்களே
கௌரவர்கள் பக்கம்தான்!

குருவுக்குக் கட்டைவிரலையே காணிக்கையாகத் தந்தான் அன்றைய ஏகலைவன்! ஆனால்,

காப்பியடிக்க விடாத
ஆசான்களின்
கட்டையையே சாய்க்கிறார்கள்
இன்றைய ஏகலைவர்கள்!

இன்றைய கல்வி முறை காலத்துக்கு ஏற்றதாய் இல்லை.

பல்கலைக் கழகத்திற்கு
125 வயதாகிவிட்டது;
துணை வேந்தர்கள்
மாறி இருக்கிறார்களே
தவிர, நம்
கல்வி முறைகள்
மாறியதாகத் தெரியவில்லை

என்பது கவிஞரின் குற்றச்சாட்டு!

சிறந்த கவிதைகட்கு இருக்க வேண்டிய எல்லா உணர்வு களும் செல்வி சித்ராவின் கவிதைகளில் காணப்படுகின்றன.

காணாத காற்றுக்குக்
காட்டுமரம் அசைந்து,
போகின்ற வழிதன்னைப்
புலப்படுத்தல் போல—

இஃது ஒரு புதிய உவமை. 'யாரைத் தேடுவேன்?' எனும் கவிதை அவருடைய கவிதை உள்ளத்திற்கு ஒரு சான்றாய்த் திகழ்கிறது எனலாம்.

அமுதிருக்கும் மலர்களிலே அழகைக் காண்கிறேன் - இது கவிப்பார்வை.

ஆற்றங்கரை ஓரத்திலே அமைதி தேடுகிறேன் - இது கவிச் செயல்.

நினைவுகளை மிதக்கவிட்டு ஆழ்ந்து செல்கிறேன் - இது கவி உள்ளம்!

செல்லும் நெறியறியாது வேண்டா வழியில் செல்லும் இளைஞர்கள், சுதந்தரம் பெற்றும் பெறாத பெண்ணினம், பொதுநலப் போர்வையில் தன்னலம் தேடும் கொடுமை, சாதிக் கொடுமை ஆகிய இவற்றை ஆரங்களாய்க்கொண்டு தம் கவிதை வட்டங்களைக் கவிஞர் வரைந்துள்ளார். ஆரத்துக்கு ஏற்ப வட்டப் பரப்பு விரிவடையும். செல்வி சித்ராவின் கவிதை வட்டமும் மேலும் மேலும் விரிந்து பெருகவேண்டும்.

இளைய சமுதாயம் புறப்பட்டுவிட்டது
பாய்ந்துவரும் புயல் நாங்கள்
பாவங்களே எச்சரிக்கை!

என்கிறார், சித்ரா! ஆம்! இளைய சமுதாயம் புறப்பட்டுவிட்டது. அதன் முன்னணியில் செல்வி சித்ரா வீறு நடை போட்டுச் செல்கிறார்.

வருங்காலக் கவிதை வானில் சித்ரா ஒளிவீசும் தாரகையாய் மிளிர்வார் என்பதை இந்நூல் உறுதிப்படுத்துகிறது.

வாழ்க சித்ரா! வளர்க அவர்தம் கவிப்பணி!

நூல் ஆக்கம்	கவிஞர் செல்வி சித்ரா
வகைமை	புதுக் கவிதைகள்
வெளியீடு	திருமகள் நிலையம், சென்னை.(1983)

18

இதுதான் ஹைகூ

ஹைகூ, ஜப்பானியக் கவிதை வகையினுள் ஒன்று. ஒவ்வொரு பாடலும் மூன்றடி கொண்டதாய் இருக்கும். அடிகள் ஒவ்வொன்றும் முறையே 5, 7, 5, அசைகளைப் பெற்றிருக்கும். ஜப்பானிய ஸென் புத்த மதத் தத்துவங்கள் ஹைகூக் கவிதையின் உள்ளடக்கமாய் இருக்கும். ஹைக்கூ-ஐக்கூ என்றும் எழுதப்படுவதுண்டு.

"கவிதை வடிவமும், விளம்பு முறையும், உயிரோட்டமும் ஜப்பானில் ஒரு கவிதை இயக்கத்தையே உருவாக்கியது. இந்த, 'ஐக்கூ' இயக்கம் நாடு கடந்து, மொழி கடந்து, இன்று உலகளாவிய ஒரு பேரியக்கமாய் வளர்ந்திருக்கிறது" என்பர், ஆய்வாளர்.

"உலகக் கவிதை வடிவங்களிலேயே எனக்கு மிகவும் பிடித்தது, 'ஹைகூ'தான். அது சின்னதாய் இருக்கும் பெரிய அற்புதம். வடிவத்தைப் பார்த்தால் வாமனன் மாதிரி; ஆனால், 'தாரை' வார்த்தாலோ விண்ணுக்கும் மண்ணுக்குமாய் 'விசுவரூபம்' எடுத்து மூவுலகையும் அளந்துவிடுகிறது. திரிவிக்கிரமன் மாதிரி, 'ஹைகூ'வுக்கும் மூன்றடி தான்" என்பார், கவிஞர் அப்துல் ரகுமான்.

பாரதியார் ஏறத்தாழ தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னர் 'ஹைகூ' கவிதை வடிவம்பற்றிக் குறிப்பிட்டுள்ளார் என்பதை அறியும் போது நமக்கு வியப்பேற்படுகிறது. 'ஜப்பானியக் கவிதை' என்னும் தலைப்பில், 1916, அக்டோபர் 16இல், சுதேசமித்திரன் இதழில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். உயோ நே நோகுச்சி எனும் சப்பானியப் புலவர் கல்கத்தா இதழொன்றில் எழுதிய கட்டுரைக் கருத்துகளை முதன்மைப்படுத்திப் பாரதியார் எழுதிய கட்டுரை அது.

'இங்கிலீஷ் கவிதையைக்காட்டிலும் ஜப்பானியக் கவிதை சிறந்தது'. 'ஜப்பானிய பாஷையில் பதினேழசை கொண்ட ஹொக்கு என்ற பாட்டு ஒரு தனிக் காவியமாய் நிற்கும்.'

'ஜப்பானிலே பதினெட்டாம் நூற்றாண்டில் 'யூஸோன் யோஸாஹோ' என்ற ஜப்பானியக் கவிராயர் ஒரு ஹொக்கு பாடியிருக்கிறார். அதன் மொழிபெயர்ப்பு :

பருவ மழையின்
மழையொலி கேட்பீர்
இங்கென் கிழச்செவிகளே.

இந்த ஒரு வசனம், ஒரு தனிக் காவியம். பாட்டே இவ்வளவுதான். மேற்படி ஹொக்குப் பாட்டைப் படித்துவிட்டுத் திரும்பத் திரும்ப மனனம் செய்ய வேண்டும். படிப்பவனுடைய அனுபவத்திற்குத் தக்கபடி அதிலிருந்து நூறு வகையான மறைபொருள் தோன்றும்.

"சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல், ஜப்பானியக் கவிதையின் விசேஷத் தன்மையென்று நோகுச்சிப் புலவர் சொல்வதுடன், ஆங்கிலேயரின் கவிதை இதற்கு நேர்மாறாய் நிற்கின்றதென்றும் சொல்லுகிறார். நமக்குள்ளே திருக்குறள் இருக்கிறது. 'கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்.' கிழக்குத் திசையின் கவிதையிலேயே இவ்விதமான ரஸம் அதிகந்தான். தமிழ்நாட்டிலே முற்காலத்திலே இது மிகவும் மதிப்பெய்தி நின்றது" எனப் பாரதியின் இக்கட்டுரைப்பகுதியை ஹைகூ நூல் ஒன்றன் அணிந்துரையில் பேராசிரியர் இரா. இளவரசு எடுத்துக்காட்டியுள்ளார்.

இவ்வாறான ஜப்பானிய ஹைகூ கவிதைகள் பிறந்த கதையையும், வளர்ந்த விதத்தையும், இன்று பெற்றுள்ள செல்வாக்கையும் தமிழ் ஆராய்ச்சியாளர்களுள் முன்னணியில் இருந்து வரும் முனைவர் தி.லீலாவதி அம்மையார் அவர்கள் இந்நூலுள் மிகச்சிறப்பாய் விளக்கியிருக்கிறார்கள். ஹைகூ கவிதைகளின் தன்மைபற்றி ஆய்வு முறையில் தமிழில் எழுந்துள்ள முதல் நூல் இதுவேயாம்.

மூலக்கூறுகளை ஆய்ந்து, "கீழ்த்திசைப் பௌத்தச் சிந்தனையில் முகிழ்த்து, சீனத்துப் பண்பாட்டில் திளைத்து, ஜப்பானிய அழகுப் பார்வையில் மலர்ந்து, கவிதை மணம் வீசுவது ஹைகூ" என நூல் நுவல் பொருளை ஆசிரியர் இந்த ஒரு தொடரில் அழகாய்க் கூறிவிடுகிறார். மேலும், மகாயான பௌத்த உண்மைகளை நடைமுறைப்படுத்துவது, ஸென் தத்துவம். ஸென் பார்வையில் படிந்த உலகம், ஹைகூ கவிதைகளில் மீளப் படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளது என்பதையும் ஆசிரியர் நன்கு நிறுவுகிறார்.

சீனக் கவிஞர்களின் கவிதைகள் ஜப்பானியர்களைப் பெருமளவில் பாதித்துள்ளதையும், கன்பூஷியஸ் கோட்பாடுகள் ஹைகூ கவிதைகளில் மிக ஆழமாய்ப் படிந்திருப்பதையும் தக்க சான்றுகளுடன் புலப்படுத்துகிறார்.

ஹைகூ படைப்பாளியின் ஸென் மனநிலையைப் பதின்மூன்று பிரிவுகளாக்கி, ஒவ்வொரு பிரிவையும் தக்க எடுத்துக்காட்டுகளுடன் விளக்கியிருப்பதுவும், ஹைகூ கவிதை என்பது (அ) ஒரு வகைக் கருணைப் பெருக்கு; (ஆ) இயற்கைக்குத் திரும்பல்; (இ) ஊடுருவிப் புகும் நிலை; (ஈ) நூலில் எழுதி வைத்துள்ள சொற்களல்ல; (உ) முழுப் பார்வையின் வெளிப்பாடு என்பவற்றை எடுத்தியம்பி, இவற்றை நிறைவுபடுத்த ஹைகூ கவிஞர்கள் கையாளும் உத்தி நெறிகளை ஒன்பது வகையான அமைப்புகளில் எடுத்துக்காட்டியிருப்பதுவும் இந்நூலின் தனிச் சிறப்புகளாய்க் குறிப்பிடத்தக்கன. மேலும், ஹைகூ கவிதை வரலாற்றின் மூல நாயகர்களாய்ச் சுடர்விடும் பாஷோ, பூஸன், இஸா, ஷிகி ஆகிய நால்வரின் வாழ்க்கைச் சூழலை விவரித்து, அவர்களுடைய முக்கியமான சில பாடல்களின் மொழி பெயர்ப்பையும் தந்து ஆசிரியர் நூலுக்கு அணி சேர்த்துள்ளார்.

ஹைகூவின் பண்புகளாய் இடையிடையே ஆசிரியர் சுட்டிச் சென்றுள்ளதைத் தொகுத்துப் பார்க்கும்போது நமக்கு ஒரு தெளிவு கிடைக்கிறது.

அ) ஹைகூ கவிஞர்கள் மிகைப்படப் புகழ்தலைத் தவிர்த்தனர்.

ஆ) எளிமை என்பது ஹைகூவின் மிக முக்கியமான இயல்பு.

இ) ஹைகூவில் சொல்வதைக்காட்டிலும் சொல்லாமல் விடுவதே அதிகம்.

ஈ) ஹைகூக்களின் உயிர்நிலை முரண்கள்தாம்; எல்லாப் பொருள்களையும் உள்ளடக்கியனவாயும், எதனையும் உள்ளடக்கியது அல்லாதனவாயும் தோன்றும்.

உ) ஹைகூவைச் சுவைப்பதே தனிக்கலை.

ஊ) ஹைகூ, நகைச்சுவையுணர்வைவிடக் கவிதைக்கே சிறப்பிடம் தருகிறது. ஹைகூ கவிதைகள் வாய்விட்டுச் சிரிக்க வைக்கும் நகைச்சுவை வெடிகள் அல்ல; மெல்லப் புன்னகை சிந்த வைக்கும் மென்னகை மலர்கள்.

எ) ஜப்பானிய மொழியின் சரளத்தன்மை ஹைகூவில் முழு வெற்றியடைந்துள்ளது.

ஏ) 'எதையும் பெருமைப்பட நினைப்பவனுக்கு எதுவுமே சிறியதில்லை' என்பார், ஜான்சன். இதுவே ஹைகூவின் மேற்கோள் உரை.

ஐ) ஒன்றன் உண்மையையும் இன்மையையும் ஒருசேர வெளிப்படுத்தும் கவிதை உருவாக்கந்தான், ஹைகூ.

இவ்வாறான சிறப்புகளை நன்கு அறியும்வண்ணம் நூல் விரிந்து செல்கிறது.

"ஜப்பானிய ஹைகூவை மேலோட்டமாய்ப் பார்த்தால் ஏதோ ஒரு வருணனை போலத் தோன்றும். ஆனால், விளக்கவுரையில்லாமல் புரிந்துகொள்வது எவருக்கும் எளிதன்று. சங்கப் பாடல்களில் உள்ளுறை உவமம், இறைச்சி ஆகியவற்றை விளக்கத் தேவைப்பட்ட 'நச்சினார்க்கினியர்கள்' ஜப்பானியக் கவிதைகளுக்கும் தேவை போலும்" என நயம்படக் கூறுகிறார், ஹைகூ கவிதை படைத்துள்ள கவிஞர் தமிழன்பன். 'இனியில்லை காமம்' என்று நிம்மதிப் பெருமூச்சு விடும் மனிதனை இதயத்தில் எங்கோ எஞ்சிக் கிடக்கும் அதன் கங்கு ஆவேசங்கொண்டு சீறியெழுந்து ஆர்ப்பரிப்பதை,

மன்மதச் சாம்பலில்
மறைந்து கிடந்தது ஒரு கங்கு
சிவன் எரிந்தான்

எனும் ஹைகூ கவிதை அஃகியகன்ற அர்த்தப் பரப்போடு சுட்டுகிறது எனத் தம் கவிதை ஒன்றுக்கு அவர் விளக்கமும் தந்துள்ளார்.

ஒரு காட்சியைக் காட்டுவதோடு ஹைகூவின் வேலை முடிந்துவிடும். அதில் பொதிந்துள்ள பொருளைத் தன் மன வளத்துக்கேற்ப அறிந்துகொள்ள வேண்டிய பொறுப்பு சுவைஞனைச் சார்கிறது. இதனை இந்நூலாசிரியர், "துண்டு துணுக்குகளாய்ச் சிதறிக் கிடக்கும் உண்மைகளுக்கு வடிவம் கொடுப்பது ஹைகூ கவிஞன் வேலை. எல்லாவற்றையும் ஒருங்கிணைத்துப் பார்த்துப் பொருள் கொள்வது படிப்பவரின் வேலை. எனவே, இங்குக் கவிஞனும் சுவைஞனும் ஒரே நிலையில் நிற்கின்றனர். எனவே, ஒன்றன் பாதியைக் கவிஞன் தர, அதன் மீதியைச் சுவைஞன் உணர, முழுமை அனுபவம் கிடைக்கிறது" எனக் குறித்துள்ளது, ஹைகூவைத் துய்க்கும் முறையை நன்கு உணர்த்துகிறது. இக்கருத்தையே கவிஞர் தமிழன்பன், "வாசகனைக் கவிதை எழுதச் சொல்லித் தரப்படுகிற தலைப்புத்தான் ஹைகூ" எனச் சுவைபடக் குறிப்பிடுவார்.

ஹைகூவின் இலக்கணத்தை அப்படியே பின்பற்றி 5, 7, 5 என்ற அசைக்கணக்கில் தமிழில் இதுவரை எவரும் எழுதவில்லை. மூன்றடிகள் இருக்க வேண்டும் என்னும் முறையை மட்டும் பின்பற்றியுள்ளனர். "ஹைகூவைத் தமிழுக்குக் கொண்டு வருகிறபோது அதன் எல்லா மரபுகளையும் தூக்கிக்கொண்டு வர வேண்டியதில்லை" எனக் குறிப்பிடும் அப்துல் ரகுமான், "ஹைகூவின் முதல் இரு அடிகள் ஒரு கூறு; ஈற்றடி ஒரு கூறு; ஹைகூவின் அழகும் ஆற்றலும் ஈற்றடியில்தான் இருக்கிறது. அது ஒரு திடீர் வெளிப்பாட்டை உணர்த்தி, அதிர்ச்சியை ஏற்படுத்தி முழுக் கவிதையையும் வெளிப்படுத்தும்.

"மற்றொரு மரபு, ஹைகூவின் மொழியமைப்பு. ஹைகூவின் மொழி, ஊழல் சதையற்ற மொழி; தந்தி மொழியைப் போல அவசியமற்ற இணைப்புச் சொற்களை அது விட்டுவிடும். உயிர்நாடியான ஈற்றடியில் ஆற்றல் மிக்க வெளிப்பாட்டிற்காகப் பெயர்ச்சொல்லையே பயன்படுத்தும்" என ஹைகூவின் இரு முக்கிய மரபுகளையும் குறிப்பிடுகிறார். இந்த மரபுகளைக் கொண்டு ஹைகூ கவிதைகள் வெளிவர வேண்டும்.

தமிழில் இதுவரை வெளிவந்துள்ள ஹைகூ கவிதைகள் சோதனை நிலையிலேயே அமைந்துள்ளன. ஜப்பானியக் கவிதைகளின் இயல்புகள் அனைத்தையும் கொண்டனவாய்த் தமிழ் ஹைகூக்கள் அமைந்துள்ளன என்று சொல்வதற்கில்லை. மொழி பெயர்ப்பு வழியாய் ஹைகூவின் முக்கியத் தன்மைகளைக் காட்ட முடியாது என்பது உண்மையே என்றாலும், தமிழ் 'ஹைகூ' செம்மையுற்று ஆக்கம் பெற இந்நூல் சிறந்ததொரு வழி காட்டியாய்த் திகழும் என்னும் நம்பிக்கையோடு நூலாசிரியரைப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

நூல் ஆக்கம்	முனைவர் தி. லீலாவதி
வகைமை	ஆய்வு நூல்
வெளியீடு	பூங்கொடி பதிப்பகம், சென்னை.(1990)

(19)

ஹைக்கூ அந்தாதி

"மலரினில் நீல வானில் மாதரார் முகத்தில் எல்லாம்" அழகு குடி கொண்டு கிடக்கிறது. எதற்காக? ஓவியர் இரவி வர்மா தம் அலகிலா அறிவுக்கண்களால் அனைத்தையும் நுகர்ந்து ஓவியமாய்த் தீட்டுவதற்காகவே என்பார், பாரதியார்.

காலையிளம் பரிதியிலே அவளைக் கண்டேன்
கடற்பரப்பில் ஒளிப்புனலில் கண்டேன்! அந்தச்
சோலையிலே மலர்களிலே தளிர்கள் தம்மில்
தொட்டஇடம் எலாம்கண்ணில் தட்டுப் பட்டாள்!
மாலையிலே மேற்றிசையில் இலகு கின்ற
மாணிக்கச் சுடரிலவள் இருந்தாள்; ஆலஞ்
சாலையிலே கிளைதோறும் கிளியின் கூட்டந்
தனில்அந்த அழகென்பாள் கவிதை தந்தாள்

என்பார், பாவேந்தர் பாரதிதாசன்.

அழகைக் கண்டு இரவி வர்மா ஓவியம் வரைந்தார்; பாவேந்தரோ கவிதை புனைந்தார். ஆனால் அமுதபாரதியோ, அழகைக் கண்டு ஓவியத்தையும் வரைகிறார்; கவிதையையும் படைக்கிறார். எனவே, இவரை ஓவியர் அமுதோன் (அமுதபாரதி) என்று வழங்குவதைவிட, 'கவி ஓவியர் அமுதபாரதி' என்று வழங்குவதே சாலப் பொருத்தமாகும்.

இவர் ஓவியமும் கவிதையும் இயற்றும் திறமையை உவமைக் கவிஞர் சுரதா,

காவியமும் ஓவியமும் தீட்டித் தந்து
    கலீல்கிப்ரான் புகழ்பெற்றார்; வெர்டி என்பார்
ஓவியமும் காவியமும் தந்த தாலே
    உறங்காத புகழ்பெற்றார்—

சேவைசெய்த நாமக்கல் ராம லிங்கம்
    சிறப்புற்றார் ஓவியத்தால் காவி யத்தால்

அத்தகையோர் போன்றவராம் எனது நண்பர்
அமுதபா ரதிஎன்பார், நமது நாட்டில்
சித்திரங்கள் வரைவதிலும் சந்தத் தோடு
செய்யுட்கள் புனைவதிலும் சமர்த்த ராவார்

என வரலாற்றுக் குறிப்புத் தந்து பாடியுள்ளார்.

ஹைக்கூ, ஜப்பானியக் கவிதை வகையினுள் ஒன்று. ஒவ்வொரு பாடலும் மூன்றடி கொண்டதாய் இருக்கும். அடிகள் ஒவ்வொன்றும் முறையே 5, 7, 5 அசைகளைப் பெற்றிருக்கும்.

ஜப்பானில் 16ஆம் நூற்றாண்டில் தொடங்கிய இக்கவிதை 17, 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் வளர்ந்து பெரும் செல்வாக்குப் பெற்றது.

ஹைக்கூ கவிதை, பாரதியின் சிந்தையைப் பெரிதும் கவர்ந்திருக்கிறது. 1916ஆம் ஆண்டில் சுதேசமித்திரன் இதழில் யூஸோன் யோஸாகா, ஹைகூஷி ஆகியோரின் ஹைக்கூ கவிதைகளைத் தமிழில் பெயர்த்து வெளியிட்டுள்ளார்.

எழுபது ஆண்டுகட்குப் பிறகு தமிழ்நாட்டில், கடந்த சில ஆண்டுகளாய் ஜப்பானிய ஹைக்கூக்களைத் தமிழில் பெயர்ப்பதையும், ஹைக்கூ வடிவில் தமிழிலேயே கவிதைகள் எழுதுவதையும் காண முடிகிறது. ஹைக்கூ வடிவில் இன்று புதுக்கவிதைகள் நிறைய வருகின்றன.

கவிஞர் அமுதபாரதி முன்னரே, 'புள்ளிப் பூக்கள்', 'காற்றின் கைகள்' என்னும் இரு ஹைக்கூ கவிதை நூல்களை வெளியிட்டுள்ளார். ஹைக்கூ வகையில் அவருடைய மூன்றாவது நூலாய் 'ஐக்கூ அந்தாதி' என்னும் இந்நூல் வெளிவருகிறது.

ஹைக்கூவின் இலக்கணத்தை அப்படியே பின்பற்றி 5, 7, 5 என்ற அசைக்கணக்கில் தமிழில் எழுதுவதில்லை. மூன்றடிகள் இருக்க வேண்டும் என்னும் வரையறையை மட்டுமே பின்பற்றுகின்றனர். 5, 7, 5 அசைகளில் எழுத முற்பட்டிருப்போரும் தமிழில் உள்ள நேர், நிரையசைகளை அசைகளாய்க் கொண்டுள்ளனர். ஜப்பானியக் கவிதையில் உயிரொலி ஒவ்வொன்றும் ஓர் அசையாகும். அவ்வாறாயின், மெய்யெழுத்து தவிர்த்த ஒவ்வோர் எழுத்தையும் ஓரசை எனக் கொள்ள வேண்டும். அவ்வாறு அசை கணக்கிட்டு எழுதுவது தமிழில் இல்லையென்றே சொல்ல வேண்டும். அது தேவையுமன்று.

ஜப்பானிய ஹைக்கூவைப் பார்த்த அளவிலே மேலோட்டமாய்ப் பொருள் புரிந்துகொள்ள இயலாது. பூட்டைத்

திறக்கத் திறவுகோல் வேண்டும். ஹைக்கூவின் உள் நுழைந்து பார்க்க விளக்கவுரை எனும் திறவுகோல் வேண்டும்.

உதிர்ந்து விழுந்த மலர்
கிளைக்குத் திரும்புகிறது....
ஓ! வண்ணத்துப்பூச்சி

இது மோரி டேகே என்னும் கவிஞரின் ஹைக்கூவின் மொழிபெயர்ப்பு.

கவிஞர் மரத்தைப் பார்த்துக்கொண்டே இருந்தார். இலையுதிர் காலம். இலைகள் உதிர்ந்துகொண்டே இருந்தன. அப்போது திடீரென ஒரு வண்ணத்துப்பூச்சி கீழிருந்து மேலே பறந்து சென்று கிளையில் அமர்ந்துகொள்கிறது என்பதனை மேலுள்ளவாறு பாடுகிறார். 'மலர் கிளைக்குத் திரும்புகிறது' - இது வண்ணத்துப்பூச்சி! இது மேலெழுந்தவாரியான பொருள். இதைப் படிப்போர் தம் அறிவின் பரப்பிற்கேற்பப் பல்வேறு நுணுக்கமான பொருள்களைக் கண்டு மகிழலாம்!

எல்லாவற்றையும் வெளிப்படையாய்ச் சொல்லாமல், படிப்பவர், வேண்டிய அளவுக்கு விரிவுபடுத்திக்கொள்ளும் வண்ணம் புதுப்புதுப் பொருள்களை உள்ளடக்கியிருப்பதே ஹைக்கூவின் தனிச் சிறப்பு!

ஹைக்கூவை, 'ஐக்கூ' எனத் தமிழ் வடிவில் தந்து, அதற்குப் பொருள், 'சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல்' என்கிறார், கவிஞர் அமுதபாரதி.

'ஐ - கடுகு. கூ - பூமி. ஐ + கூ = ஐக்கூ. "கடுகளவுள்ள சிறிய பாடலில் நிலத்தளவு பெரிய பொருளைக் காண முடியும் என்பதால் இப்பாடலை ஐக்கூ எனக் கூறலாம்" என்னும் அமுதபாரதியின் விளக்கம் புதுமையானது.

தமிழில் சுருங்கிய கவிதை வடிவு குறளே! இடைக்காடர்,

கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்

எனக் குறளைப் புகழ்ந்துரைத்தது 'ஐக்கூ'வுக்கும் பொருந்தும். ஹைக்கூவை, 'ஜப்பானியக் குறள்' என்று சொல்லலாம் என அமுதபாரதியின் விளக்கம் நமக்கு அறிவிக்கிறது.

அந்தாதி, தமிழிலுள்ள சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. ஒரு பாடலின் இறுதி எழுத்தோ அசையோ சீரோ சொல்லோ அடியோ அடுத்த பாடலின் தொடக்கமாய் அமையும்படி பாடுவது அந்தாதி

எனப்படும். கடைசிப் பாடலின் முடிவு, முதற்பாடலின் தொடக்கமாய் இருக்கும்.

அந்தாதி யாப்பமைப்பில் நூல்கள் பிற்காலத்தில்தான் தோன்றின என்றாலும், சங்க இலக்கியங்களில் அந்தாதி அமைப்புக்கான கருக்கள் அமைந்து காணப்படுகின்றன. பதிற்றுப்பத்தின் நான்காம் பத்தும், ஐங்குறுநூற்றின் தொண்டிப் பத்தும் அந்தாதி யாப்பு முறையில் அமைந்துள்ளன.

அந்தாதித் தொடையில் பாடல்கள் அமையும் போது அவை உள்ளத்தில் எளிதில் தங்குவனவாய் உள்ளன.

இலக்கிய வகைக்கு இலக்கணம் கூறும் பாட்டியல் நூல்கள் ஒலியந்தாதி, பதிற்றந்தாதி, நூற்றந்தாதி, கலியந்தாதி என அந்தாதியை நான்காய்ப் பகுத்துக்கொண்டு இலக்கணம் தந்துள்ளன.

நூறு பாடல்களைக் கொண்டது நூற்றந்தாதி. இதில் நூறு வெண்பாக்கள் அல்லது நூறு கலித்துறைப் பாக்கள் இடம் பெறும்.

இவை தவிர இயமக அந்தாதி, திரிபு அந்தாதி, நிரோட்டக யமக அந்தாதி, சிலேடை அந்தாதி போன்றனவும் உள்ளன. அந்தாதி இலக்கிய வகை பிற்காலத்தில் தோன்றி வளர்ந்ததாயினும் இன்று கிடைத்துள்ள 850-க்கு மேற்பட்ட அந்தாதிப் பெயர்களால் அவ்விலக்கிய வகை மக்களிடையே பெற்றுள்ள செல்வாக்கினை உணரமுடிகிறது. (தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழக வாழ்வியற்களஞ்சியம், தொகுதி ஒன்று - (பக். 337-40)

காரைக்காலம்மையார் இயற்றியுள்ள அற்புதத் திருவந்தாதியே இதுகாறும் தமிழில் கிடைத்துள்ள அந்தாதி இலக்கியங்களுள் முதலாவதாய் விளங்குகிறது.

கவிஞர் அமுதபாரதியின் இந்நூல் நூறு ஐக்கூக்களைக் கொண்டுள்ளதால் இஃது ஒரு நூற்றந்தாதியாகும். 'ஹைக்கூ வடிவில் அந்தாதி யாப்பில் எழுந்துள்ள முதல் நூல் இது' என்னும் பெருமையைப் பெறுகிறது.

ஜென் புத்தமதத் தத்துவங்கள் ஹைக்கூ கவிதையின் உள்ளடக்கமாய் அமைந்தன. தமிழில் அந்த மரபு அப்படியே பின்பற்றப்பட வேண்டுமென்பதில்லை.

ஜப்பானிலேயே பழைய இறுக்கமான கட்டுப்பாடுகளி லிருந்து நீங்கி ஹைக்கூ, 'சென்ரியூ' என்னும் புதிய வளர்ச்சியைப் பெற்றுள்ளது. 'சென்ரியூ', அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளை உள்ளடக்கமாய் எடுத்துக்கொண்டது.

கவிஞர் அமுதபாரதி தமிழ்நில மரபுக்கேற்ப, இன்றைய நடப்புகளை இயல்பான முறையில் பாடியிருப்பது அவருடைய ஐக்கூவின் சிறப்பாகும்.

அலையில் கூடவா பூமலரும்?
அருமை! அருமை! அருமை!
கூந்தல் அலையில் மலர்!

நெளிந்த கூந்தலை அலையாக்கி, மங்கை, மலர் சூடியிருப்பதை, 'அலையில் மலர்' என்கிறார்! பூச்சூடியுள்ள மங்கைபற்றிய கவிதை ஓவியம் இது.

அலையில் தோன்றும் வெண்மைக் கீற்றுகளை (அல்லது நுரையை)க்காணும் போது அலையில்கூடவா பூ மலரும் எனும் முதல் அடியே தனிப்பொருளுக்கு உரியதாகவும் அமைகிறது. கூந்தலின் மலரை அலையின் நுரையோடு ஒப்பிட்டும் மகிழலாம்!

பெண்களின் கண்களைக் கயல் என்பர்.

கயல்எழுதி வில்எழுதிக் காரெழுதிக் காமன்
செயல்எழுதித் தீர்ந்தமுகம் திங்களோ காணீர்

எனச் சிலப்பதிகாரக் கானல்வரி கூறுகிறது. கண் கயல், புருவம் வில், கூந்தல் மேகம், முகம் திங்கள் என்ற விளக்கத்தோடு அந்த முகத்தில் காதல் தேங்கியிருக்கிறது என்பதைக் 'காமன் செயல் எழுதி' என்ற தொடரால் இளங்கோ அருமையாய் விளக்குகிறார்.

கவிஞர் அமுதபாரதி காட்டும் முகமோ கண்ணீர் வடிக்கும் முகம்.

சாளரத்திற்கு அருகே பெண் ஒருத்தி நின்றுகொண்டிருக்கிறாள். அவள் கண்களில் நீர் தாரைதாரையாய்ப் பெருக்கெடுக்கிறது. என்ன கருதி அவள் அழுகிறாளோ? உயிருள்ளவளின் வருத்தம் உயிரற்ற சாளரத்துக்கு எங்கே தெரியப்போகிறது? அதனால்தான் அவள் வருத்தம் கண்டும் தேற்றாது மௌனமாய்ப் பார்த்திருக்கிறதோ?

மீன்கள் மீன்கள்
மருகி மருகி அழுகின்றன;
மௌனமாய் அந்தச் சன்னல்.

மீன்கள், மருகி, மௌனம் என்ற மூன்று சொற்களைக் கொண்டு அமுதபாரதி வரைந்துள்ள சொல்லோவியம் இது!

பகலவன் மறைகிறான். பாடுகிறார், கவிஞர் :

பூ! இவ்வளவு தானா?
வானத்தையே வெளுத்தவன்
விழுந்தானே மலை வாயிலில்.

மிகச்சிறப்பாய் ஒன்றைச் செய்யும்போது, 'வெளுத்துக் கட்டிவிட்டான்' என்று சொல்வது பேச்சு வழக்கு. வானத்தையே ஒரு கைபார்த்து வெளுத்தவன் (வெற்றி பெற்றவன்) இப்போது விழுந்துவிட்டானே! பூ! இவ்வளவுதானா அவன் வீரம்! வானத்தை வெளுப்பாக்கியவன் என்ற கருத்தில் 'வெளுத்தவன்' என்ற சொல்லைப் பயன்படுத்தி, அதற்குப் பேச்சு வழக்குப் பொருளை ஏற்றி, 'பூ' என்னும் ஏளனக் குறிப்பை இணைத்துப் பாடியிருப்பது அருமை!

முள்மரத்தை இளையதாய் இருக்கும்போதே வெட்ட வேண்டும்; காழ்ப்பு ஏறி முதிர்ந்தபோது, வெட்டுகின்றவரின் கையையே அது வருத்தும்.

> இளைதாக முள்மரம் கொல்க; களையுநர்
> கைகொல்லும் காழ்த்த இடத்து

எனத் திருவள்ளுவர் பகையை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும் என்றார். ஆனால், அமுதபாரதியோ, பகையினும் அஞ்ச வேண்டியது வட்டிக்குக் கடன் வாங்கும் கொடுமைக்கே என்கிறார்.

> முளையிலேயே கிள்ள நினைத்தேன்,
> முடியவில்லை, தவிக்கிறேன்;
> வட்டிக்கு வாங்கிய கடன்.

'கடன்பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான்' என்ற தொடரை நினைவூட்டுவதாயும் இப்பாடல் அமைந்துள்ளது.

பேனா இருப்பது அலங்காரத்துக்கன்று. சமுதாயத்திற்குப் பயன்படத்தக்க வகையில் எழுதிக்கொண்டே இருப்பதற்காகும் என்பதை,

> பேனாக்களே!
> கிரீடங்களைக் கழற்றி விட்டுத்
> தலை குனியுங்கள்!
> நீங்கள் இருப்பது
> தாள்களுக்காக,
> பைகளுக்காக அல்ல!

என அப்துல் ரகுமான் குறிப்பிடுவார். இதையே அமுதபாரதி வேறொரு கோணத்தில் காண்கிறார்.

ஓரிரு நூல்கள் எழுதியவுடனேயே தமக்குப் பெரும் புகழ் வந்துவிட்டதாகவும், இனி எழுத வேண்டியது எதுவும் இல்லையென்பது போலவும் கருதிக்கொள்பவர்களைப் பார்த்துக் கவிஞர் சொல்கிறார்

பேனாவைப் புகழ்ந்தேன்;
பெருமைகளை நினைந்தேன்;
புட்டிக்குள் சிரிக்கிறது மை!

பேனா கொண்டது கொஞ்சம் மைதான். புட்டி நிறைய மை இருக்கிறதே! எழுத்தாளர்களே! நீங்கள் எழுதியுள்ளது கை அளவு! எழுதப்பட வேண்டியதோ உலகளவு! என எடுத்துக்காட்டுகிறார்.

உழைப்பவன் ஒருவன். பயன் அனுபவிப்பவன் வேறொருவன். பயனை அனுவிப்பவன் எவ்விதப் பாடும் படாமல், பிறர் உழைப்பைத் திருடுகிறானே! இது கொடுமையிலும் கொடுமை.

பயிர் வளர்த்தான்;
பாடுபட்டான்;
வளைமுழுதும் நெல்!

வளை நிறையத் திருடி நெல் சேர்க்கும் எலிகளை ஒழிக்க வேண்டாவா?

தரும்பொழுது வருகிறது
தவறாது புகழ் எழுது;
காலத்தின் மார்பு பெரிது!

இந்நூலை யாத்ததன்வழி என்றும் நிலைத்து நிற்கத்தக்க புகழைக் கவிஞர் காலத்தின் மார்பில் எழுதிக்கொண்டிருக்கிறார். வாழ்க அவர் பெயர்! வளர்க அவர் புகழ் எழுத்து!

நூல் ஆக்கம்	ஓவியக் கவிஞர் அமுதபாரதி
வகைமை	ஹைக்கூ கவிதை
வெளியீடு	பாமா பதிப்பகம், சென்னை. (1995)

20

மச்சகந்தி

இன்றுள்ள கவிஞர்களுள் முதுபெரும் புலவராய் விளங்கி வருபவர் நம் கலைமாமணி ஐயா கா.மு. ஷெரீப் அவர்கள் ஆவர். அவர் எழுதியுள்ள 'மச்சகந்தி' எனும் குறுங்காவியத்தின் இரண்டாம் பதிப்புக்கு முன்னுரை எழுதுமாறு பணித்து என்னைப் பெருமைப்படுத்தியுள்ளார்கள்; அதற்கென் உளமார்ந்த நன்றியை உரித்தாக்கிக்கொள்கிறேன். ஐயா அவர்களின் தெளிந்த புலமை, தீந்தமிழ் நடை, சிந்தனைச் செறிவு ஆகியவற்றிற்கு ஓர் எடுத்துக் காட்டே இக்குறுங்காப்பியம்.

பாரதத்திலுள்ள செய்திகளைக் கருப்பொருள்களாய்க் கொண்டு கதைகள் பல புனையப்பட்டுள்ளன. பெரும்பாலும் கிருட்டிணன் தூது, திரௌபதி துகிலுரியப்படுதல், கீசகவதம் போன்றனவே நாடகங்களாகவும் குறுங்காவியங்களாகவும் வெளிவந்துள்ளன. கவிஞர் கண்ணதாசன் அவர்கள் இந்நூலின் முதற்பதிப்பின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளதுபோல, "தமிழில் இதுவரை வெளிவாராத ஒரு கருவினை வைத்துக்கொண்டு இக் குறுங்காப்பியத்தைக் கவிஞரவர்கள் பின்னியிருக்கிறார்கள்!" பாரதியார் 'பாஞ்சாலி சபத'த்தைப் பாடியுள்ளார்; நம் கவிஞரோ 'பீஷ்ம சபதத்தை'ப் பாடுகிறார்.

பாரதம் ஆதி பருவத்தில் குருகுல அரசமரபு பேசப்படுகிறது. அம்மரபில் தோன்றியவன் சந்தனு மன்னன். ஒருநாள் சந்தனு வேட்டையாடிக் களைத்துக் கங்கைக் கரையை அடைந்தபோது அங்கே கங்கை பெண்ணுருவில் தோன்றினாள். சந்தனு அவளை விரும்பி, "நீ கன்னிகையாயின் என்னை மணக்க மனமுண்டோ?" எனக் கேட்டான். "நான் என்ன செய்யினும் தடுப்பதில்லை என உறுதியளித்தால் மணப்பேன்" என அவள் கூறச் சந்தனுவும் அவ்வாறே உறுதியளித்து அவளை மணந்தான்.

கங்கையாள் கருவுற்று, ஓர் ஆண் மகவைப் பெற்றெடுத்தும் அதைக் கங்கையாற்றில் எறிந்தாள்; தன் வாக்குப்படி மன்னன் ஏன்

எனக் கேட்க முடியவில்லை. பின்னும் ஆறு ஆண் மகவுகளைப் பெற்றுக் கங்கை முன்போலவே ஆற்றில் வீசியெறிந்தாள். எட்டாவதாகவும் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதைக் கங்கையில் எறிய வேண்டாமென மன்னன் கூறினன். மன்னன் தான் உறுதியளித்ததை மீறிக் கங்கையின் செயலைத் தடுத்ததால் அவள் மன்னனைப் பிரிவதாகக் கூறினாள். அக்குழந்தையைத் தானே சில காலம் வளர்த்து உரிய பருவமடைந்ததும் சந்தனுவிடம் ஒப்படைப்பதாய்க் கூறிக் கங்கை, குழந்தையுடன் மறைந்தாள். அக்குழந்தை காளைப் பருவமடைந்ததும் அதனைச் சந்தனுவிடம் கங்கை சேர்ப்பித்தாள். அம்மகன் ‘தேவவிரதன்’ என்னும் பெயருடன் சந்தனுவின் மகனாய் நிலவுலகில் வாழ்ந்து வந்தான்.

பின்பொருநாள், நதிக்கரையில் யோசனைத் தொலைவு மணங்கமழும் மேனியளான பெண்ணொருத்தியைச் சந்தனு மன்னன் கண்டு, அவளை மணக்க விரும்பினான். அவள் மச்சகந்தி என்னும் பெயரினள் என்றும், மீனவர் தலைவனின் மகள் என்றும் அறிந்தான். தான் அவளை மணக்க விரும்புவதைத் தன் தேர்ப்பாகன் வாயிலாகச் சொல்லியனுப்பினான். மீனவர் தலைவனோ, "மச்சகந்திக்குப் பிறக்கும் குழந்தைக்கு முடிசூட்ட அரசன் இசைந்தால் மணக்கலாம்" என மறுமொழி தந்தான். மூத்தவள் மகனாகிய தேவவிரதனிருக்க, இளையவளுக்குப் பிறக்கும் குழந்தைக்கு முடி சூட்டுவது முறையாகாது என்பதால் சந்தனு வேதனையுடன் அரண்மனை திரும்பினான்.

மச்சகந்தி நினைவால் அவன், உடல் மெலியலானான். தந்தையாரின் கவலைக்கான காரணத்தை அறிந்த தேவவிரதன் மீனவர் தலைவனிடம் சென்று, தனக்கு அரசு வேண்டுவதில்லையென்றும், மச்சகந்திக்குப் பிறக்கும் மகனே அரசாளலாமென்றும், மச்சகந்தியைத் தன் தந்தைக்கு மணமுடிக்குமாறும் வேண்டினான். மீனவர் தலைவன் தேவவிரதனிடம், “நீர் அரசை வேண்டாமெனத் துறந்தாலும் உம் மகன் அரசமுறைப்படி அரசாட்சிக்குரியவன் ஆவனே" என்றபோது தேவவிரதன், “நான் திருமணம் செய்து கொண்டால்தானே குழந்தை தோன்றுவான்! எனக்கு இந்த அரசும் வேண்டாம்; நான் திருமணமும் செய்துகொள்ளேன்" எனச் சூளுரைத்தான். தேவவிரதனின் சூளுரையைக் கேட்ட உலகம் வியந்தது! அன்றிலிருந்து அவன் ‘கடும் சூளுரையாளன்’ எனப் பொருள்படும் 'பீஷ்மன்’ என்ற பெயரால் வழங்கப்பட்டான்.

சந்தனுவுக்கு மச்சகந்தியை மீனவர் தலைவன் மணம் செய்து வைத்தான். தந்தைக்காய் மகன் செய்த தியாகமே 'பீஷ்ம சபதம்’.

இந்நூலுக்கு 'மச்சகந்தி' என்னும் பெயரைவிட, 'பீஷ்ம சபதம்' அல்லது 'வீடுமன் சூளுரை' என்பதையே பெயராய்த் தந்திருக்கலாம் எனத் தோன்றுகிறது.

மச்சகந்தியைச் சந்தனு மன்னன் சந்திக்கும் பகுதியிலிருந்து காவியத்தை ஆரம்பித்து, அவளை அவன் மணந்திடும் அளவில் கவிஞர் காவியத்தை முடித்துள்ளார்.

தந்தையின் நலனுக்காக மகன் செய்த தியாகத்தை-அஃதாவது, பீஷ்ம சபதத்தை கவிஞரவர்கள் சுவைபட இந்நூலுள் எடுத்தியம்பியுள்ளார்கள். இந்நூல் அடிக்கு அடி சுவையேற்றும் கற்கண்டுக் கட்டிகளால் ஆக்கப்பட்டிருக்கிறது; சிற்சில துண்டுகளை மட்டும் இங்கே சுவைக்கத் தந்துளேன்.

தமிழ்நிலமே உலகிற்றோன்றிய முதல் நிலம் என்பர். ஆசிரியர் தேசிய நீரோட்டத்தில் திளைத்தவராதலின் தமிழ்நாடு பாரத நாட்டின் பகுதி என்பதை மனத்தே கொண்டு,

வானும் கடலும் முதன்முதல் கண்ட
மலையோ இமயம், மண்ணோ பாரதம் (பக். 2)

என்பார்.

ஆட்சியிலிருப்பவர் மக்களின் அல்லல் தீர்ப்பவராய் விளங்க வேண்டும்; நீதி, நேர்மையின் உறைவிடமாய் அவர்கள் திகழ வேண்டும்.

மீனவன் விடுத்த. வினாவினை மீறிச் சந்தனு அப்பெண்ணைக் கைப்பற்றியிருக்கலாம். அது முறையன்று; அவன் மனம் அப்போது சிந்திக்கிறது.

மற்றவர் தீங்கு புரிந்திடில் உன்னிடம்
  மக்கள் முறையிடுவார்; புகழ்க்
கொற்றவா! நீபிழை செய்திடில் அன்னவர்
  யாரிடம் போயுரைப் பார்!தான்
பெற்ற குழந்தையைக் கொன்றிடத் தாயே
  புறப்படும் விந்தையைப் போல்,நிலை
அற்றதோர் காம வெறியால் குடிமக்கள்
  தன்னைநீ சீறுவதோ.

நாட்டு மக்களிடம் நற்றாயாய் விளங்கி, அவர்களுடைய துன்பத்தைத் துடைக்கத் தன் இன்பத்தையும் அரசன் துறக்க வேண்டும் என்ற அரசாட்சி முறையைச் சந்தனுவின் மன ஓட்டமாய்க் கவிஞர் புலப்படுத்துகிறார்.

கவிஞரின் வருணனைகள் இயல்பான தன்மையுடன் மிகப் பொருத்தமானவையாய் அமைந்து நம்மை மகிழ்விக்கின்றன.

பூங்குயில்கள் சோலைமீது கூவிடும் காலம்;
பொதும்பரெங்கும் மாமலர்த்தேன் சிந்திடும் காலம்;
பாங்குடனே தென்றல்உலா வந்திடும் காலம்;
பருவமதை வேனிலெனச் சொல்லிடும் காலம்; (பக். 6)

இயைபுத் தொடையில் வேனில் விளக்கம் இங்கே நம்மைக் குளிர்விக்கிறது.

பரதவர் சேரியின் வெளிச் சூழலை ஓர் ஓவியன், உள்ளது உள்ளவாறே எழுதிக் காட்டுவதுபோல, அங்குள்ளோரின் உள்ளச் சூழலைக் கவிஞர்,

ஓலை யறியாக் கூரையிங் குண்டு;
ஓதலும் படிப்புமில்லா மானுடர் உண்டு;
சேலை வாங்கியே மேனி மறைக்கத்
தினமுழைத்தும் காசில்லாக் கன்னியர் உண்டு;
காலை முதலாய் மாலை வரையில்
கள்ளையுண்டு சண்டையிடும் ஆட்களிங் குண்டு; (பக். 39)

என அழகிய சொற்கோலமாக்கிச் சொக்க வைக்கிறார்.

நதிக்கரையில் மச்சகந்தியைக் கண்ட சந்தனு அவளை எண்ணி மகிழ்வதாய்க் கவிஞர் படைத்துள்ள பாடல்கள் மிகவும் சுவை வாய்ந்தவை.

தண்மதியச் சாறு கொண்டு,
சந்தனத்தில் சேறுசெய்து,
வண்ணமுறும் அழகையெலாம்
வாரியதில் கொட்டுவித்தே,
அன்புறவே நான்முகத்தான்,
அணங்கிவளைப் பன்னெடுங்கால்
எண்ணியெண்ணிப் படைத்தனனோ? (பக். 9)

சந்தனு உள்ளத்தைக் கொள்ளை கொண்ட மச்சகந்தியின் அழகை, எளிய சொற்களில் கவிஞர் நம் நெஞ்சில் பதிய வைத்துவிடுகிறார்.

நான்முகன் எண்ணியெண்ணிப் பெண்ணைப் படைத்ததை வியப்பதைப் போலவே, சொற்களைத் தேர்ந்து தேர்ந்து அவற்றைச் சுவையில் தோய்த்துத் தோய்த்துக் கவிஞர் படைத்துள்ள இக்கவிதையும் நம்மை வியப்படைய வைக்கிறது.

........கவிதைக் கனிபிழிந்த
சாற்றினிலே, பண்,கூத்து எனும்இவற்றின் சாரமெலாம்
ஏற்றி; அதனோடே இன்னமுதைத் தான்கலந்து;
காதல் வெயிலிலே காயவைத்த கட்டியினால்,
மாதிவளின் மேனி வகுத்தான் பிரமன்என்பேன்

எனும் பாரதியின் பாடலை இதனோடு ஒப்புநோக்கி மகிழலாம்.

பண்டைய இலக்கியக் கருத்துகளைக் கவிஞர் பாங்குடன் எடுத்து வைக்கிறார்.

இருநோக்கு இவள்உண்கண் உள்ளது; ஒருநோக்கு
நோய்நோக்கு;ஒன்று அந்நோய் மருந்து (குறள் 1091)

என்னும் குறட்கருத்து,

அவள்கண்ணில் ஒருகண்ணைத்
  தீத்துண் டென்றான்;
அடுத்தகண் குற்றாலக்
  குளிர்ச்சி யென்றான் (பக். 21)

எனக் குற்றால அருவியினும் குளுமை சேர்ப்பதாய்க் கவிஞரிடம் வெளிப்பட்டிருப்பதைக் காண்கிறோம்!

கதைமாந்தர் உரையாடல் மிகச்சிறப்பாய் அமைக்கப் பட்டுள்ளது. மீனவன், "மகனுக்குப் பெண் கேட்பான், தந்தை; சந்தனுவின் வாரிசே! பெற்ற தந்தைக்கு மகன் பெண் கேட்பதை இதுவரை நான் எங்கும் கேட்டதில்லை! அது சரி! உனக்கு அரசு வேண்டாம் என்கிறாய்; ஆனால், உன் மகனுக்கு அரசாட்சி வேண்டுமென மக்கள் கூறுவரே! அதற்கு நீங்கள் என்ன கூறமுடியும்?" என்று தேவவிரதனிடம் மீனவன் கேட்கிறான்.

மிக எளிய குடிமகனும் அரசனிடம் நேரில் பேசமுடியும்; விளக்கம் கேட்கமுடியும் எனும் நிலையை உணர்கிறோம். தேவவிரதன் கூறுவான் "நான் திருமணம் செய்துகொள்ளேன். அது மட்டுமன்று,

இன்னொன்றும் கேட்டுக்கொள்; இதுவரை, பெண்
  இன்பம் அறியாத காளைநான்;
அன்னதுமட்டும் அல்ல காண்,என்
  ஆண்மை யளித்திடும் வீரியம்,
என்னை அறியா நிலையிலும்,இனி
  எந்தவோர் பெண்ணின் உடம்பிலும்,
சின்னஞ் சிறுதுளி யாகிலும்,படச்
  சிறிதும் இடங்கொடேன் நம்பிடு.

என்ன கடுமையான சூளுரை! இடத்துக்கு ஏற்றவாறு சுருக்கெனச் சொற்கள் வந்து கொட்டுகின்றன.

சூள் உரைத்தது உரைத்ததுதான்; அதை எக்காரணம் கொண்டும் திரும்பப் பெறமுடியாது என்பதை விளக்க,

கறந்த பால்தனை முலையினுள் புகுத்தக்
கற்ற மானுடன் உலகினில் உண்டா?
பிறந்த குழந்தையை மீண்டும் கருப்பையில்
புகுத்திட முடியுமா? (பக். 55)

என வீடுமன் கூறுவதாய்க் காட்டப்பட்டுள்ள உவமை போற்றத் தக்கதாயுள்ளது.

பாத்திரப் படைப்புப்பற்றிக் கவிஞரே கூறுகிறார் :

ஆசை அழியும்; தியாகம் நிலைக்கும்;
என்பதை உணர்த்தும் பீஷ்மன் பாத்திரம்,
இலக்கியம் தன்னில் இணையிலாப் படைப்பு.

காவியம் ஓர் உறுதிப் பொருளை மக்கட்கு உரைப்பதாய் இருக்க வேண்டும். அவ்வாறாயின் இக்காவியம் கூறும் உறுதிப் பொருள் யாது என்ற வினாவுக்கு,

செத்தும் சாகா வாழ்க்கை வாழ்வதை
இலட்சிய மாகக் கொள்ளல் வேண்டும் (பக். 56)

எனக் கவிஞரே விடையளித்துவிடுகிறார்!

செத்தும் சாகா வாழ்க்கையைப் பெறக் கலைமாமணி கா.மு. ஷெரீப் அவர்களின் கருத்துரைகள் நமக்குப் பெருந்துணை புரிவனவாம்!

நூல் ஆக்கம்	கவிஞர் கா. மு. ஷெரீப்
வகைமை	குறுங்காவியம்
வெளியீடு	மில்லத் பிரிண்டர்ஸ், சென்னை–1. (1987)

21

குறுந்தொகைப் பெருஞ்செல்வம்

எட்டுத்தொகை

பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் சங்க நூல்கள்; பலரால் பாடப்பட்ட பாடல்களைக் கொண்டு தொகுத்தமைக்கப்பட்ட தொகைநூல். நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பன எட்டுத்தொகை நூல்கள். பின்வரும் வெண்பா இதனை உணர்த்தும்.

நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூ(று)
ஒத்த பதிற்றுப்பத்(து) ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோ(டு) அகம்புறம்என்(று)
இத்திறத்த எட்டுத் தொகை.

இவ்வெட்டு நூல்களுள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு ஆகிய ஐந்தும் அகப்பொருள்பற்றியவை. இவ்வைந்தனுள் குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு ஆகிய மூன்றும் அடிவரையறை கொண்டு தொகுக்கப்பட்டவை. நான்குமுதல் எட்டு அடிவரையான பாடல்களைக் கொண்டது, குறுந்தொகை. (307, 391 - இவ்விரு பாடல்கள் மட்டும் ஒன்பது அடிகள் கொண்டுள்ளன). ஒன்பது முதல் பன்னிரண்டு அடிகள் கொண்ட பாடல் தொகுப்பு, நற்றிணை. அகநானூற்றில் பதின்மூன்று முதல் முப்பத்து ஒன்று அடிகள்வரைகொண்ட பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

குறுந்தொகை

நாவலர்களால் 'நல்ல' எனும் அடைமொழியோடு வழங்கப்படும் சிறப்பைப் பெற்றது, குறுந்தொகை. இதில் 205 புலவர்கள் பாடியுள்ள 401 பாடல்கள் உள்ளன. (ஆசிரியர் எண்ணிக்கையில் வேறுபாடுகள் சொல்வதுண்டு). சில பாடல்களை

இயற்றிய புலவர்கள் பெயர்கள் தெரியவில்லை. வேறு சில பாடல்களை எழுதிய புலவர்களின் இயற்பெயர் தெரியவில்லை;[1] அப்பாடல்களில் உள்ள சிறந்த தொடர்களாலேயே அவர்கள் வழங்கப்படுகின்றனர். காட்டுயானை ஒன்று, வளர்ந்துள்ள இளம் மூங்கிலைத் தன் கையால் வளைத்து அதன் குருத்தைத் தின்ன முயல்கிறது. அது வேளை அங்குத் தினைப்புனம் காவல் செய்வோர் கவண் கல்லை வீசுகின்றனர். புதிய அவ்வொலி கேட்ட யானை பயந்து, தான் வளைத்திருந்த மூங்கிலை விட்டுவிடுகின்றது. வளைந்த மூங்கில் 'விசுக்'கென மேலேறிய காட்சி, மீன் பிடிப்பவன் மீன் சிக்கியவுடன் தூண்டிலை விரைந்து மேலே தூக்கியது போன்றிருந்தது என்பதைப் புலவர்,

> ஏனல் காவலர் கவணொலி வெரீஇக்
> கான யானை கைவிடு பசுங்கழை
> மீன்எறி தூண்டிலின் நிவக்கும்.... (குறுந். 54)

எனப் பாடியுள்ளார். இவர் பெயர் தெரியவில்லை. மீனெறி தூண்டிலை உவமையாக்கிக் கூறியமையால் இவர் மீனெறி தூண்டிலார் என்றே வழங்கப்படுகிறார். இவ்வாறு தொடராட்சி யால் இத்தொகுப்பில் பெயர் பெற்றுள்ள புலவர்கள் வருமாறு
1. அணிலாடு முன்றிலார் (பா.எ. 41). 2. ஓரிற்பிச்சையார் (277). 3. கங்குல் வெள்ளத்தார் (387). 4. கல்பொரு சிறுநுரையார் (290). 5. கயமனார் (9). 6. கவை மகனார் (324). 7. கள்ளிலாத்திரையனார் (293). 8. காலெறி கடிகையார் (267). 9. குப்பைக்கோழியார் (305). 10. குறியிறையார் (394). 11. செம்புலப்பெயல்நீரார் (40). 12. தும்பிசேர் கீரனார் (61). 13. நெடுவெண்ணிலவினார் (47). 14. பதடி வைகலார் (323). 15. மீனெறி தூண்டிலார் (54). 16. விட்ட குதிரையார் (74). 17. வில்லக விரலினார் (370).

குறுந்தொகை உரைகள்

தொகைநூல்களுள் முதலாவதாய்த் தொகுக்கப்பட்டது குறுந்தொகையே என்பர். நூலின் இறுதியில், 'இத்தொகை முடித்தான் பூரிக்கோ' என்னும் குறிப்புக் காணப்படுகிறது. பிற நூல்களில் நூலைத் தொகுத்தவரும், தொகுப்பதற்குத் துணை செய்தவரும் தொகுத்தோர், தொகுப்பித்தோர் எனக் குறிக்கப்படுகின்றனர். 'தொகை முடித்தான்' எனும் குறிப்பினால் பூரிக்கோ தொகுத்தவரா தொகுப்பித்தவரா என்பது அறியக்

1. குறுந்தொகையில் 191, 201, 256, 313, 321, 326, 375, 379, 381, 395 ஆகிய பத்துப் பாடல்களுக்கு ஆசிரியர் பெயர் காணப்பெற வில்லை.

கூடவில்லை. இந்நூலில் 20 பாடல்கள் நீங்கலாய் ஏனைய வற்றிற்குப் பேராசிரியர் உரையெழுதியுள்ளார். அவரெழுதாத 20 பாடல்களுக்கும் நச்சினார்க்கினியர் உரை வரைந்துள்ளார். இதனை,

நல்லறி வுடைய தொல்பேர் ஆசான்
கல்வியும் காட்சியுங் காசினி யறியப்
பொருள்தெரி குறுந்தொகை இருபது பாட்டிற்(கு)
இதுபொருள் என்றவன் எழுதாது ஒழிய
இதுபொருள் என்றதற்கு ஏற்ப உரைத்துந்
தண்டமிழ் தெரித்த வண்புகழ் மறையோன்

எனும் நச்சினார்க்கினியர் உரைச் சிறப்புப் பாயிரத்தால் அறியலாம். இவ்விரு உரைகளும் நமக்குக் கிடைக்கப்பெறவில்லை.

குறுந்தொகையை 1915இல் முதன் முதலில் திரு.சௌரிப் பெருமான் அரங்கன் என்பார் உரையுடன் அச்சேற்றினார். 1920இல் கா. நமச்சிவாயர் பதிப்பித்தார். திரு. சேஷாசலம் அவர்கள் நடத்தி வந்த, 'கலா நிலையம்' இதழில் திரு. இராமரத்னம் குறுந்தொகை உரை எழுதி வந்தார் (1930). டாக்டர் உ.வே.சா. அவர்கள் 1937 இல் குறுந்தொகையைப் பதிப்பித்தார்கள். அதே ஆண்டில் திரு. சோ. அருணாசலத் தேசிகருடைய உரையும் வெளிவந்தது. பெருமழைப் புலவர் சோமசுந்தரனாரின் உரையுடன் சைவ சித்தாந்தக் கழகப் பதிப்பு 1955 இல் வெளியானது. 1957இல் மர்ரே திரு. எஸ். ராஜம் தக்க பதிப்பாசிரியர் குழுவைக்கொண்டு பல ஏடுகளை ஒத்திட்டுக் குறுந்தொகை மூலத்தை மட்டும் வெளியிட்டார். 1958இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகம், பேராசிரியர் ரா. இராகவையங்கார் அவர்கள் குறுந்தொகையின் சில பாடல்களுக்கு எழுதிய உரையைக் 'குறுந்தொகை விளக்கம்' என்னும் தலைப்பில் வெளியிட்டது. அதே ஆண்டில் சக்திதாசன் சுப்பிரமணியத்தின் குறுந்தொகை விளக்கமும் வெளிவந்தது. 1965இல் திரு. புலியூர்க் கேசிகனின் குறுந்தொகைத் தெளிவுரை மலிவுப் பதிப்பாய் வெளிவந்தது. டாக்டர் மு.வ., புலவர் கோவிந்தன் போன்ற அறிஞர் பெருமக்கள் பலர் குறுந்தொகைப் பாடல் விளக்கக் கட்டுரைகளை எழுதி வெளியிட்டுள்ளார்கள்.

இவ்வரிசையில் இப்போது தமிழறிஞர் சாமி. சிதம்பரனார், 'குறுந்தொகைப் பெருஞ்செல்வம்' எனும் தலைப்பில் குறுந் தொகைப் பாடல்களுக்கு எழுதியுள்ள தெளிவுரை வெளிவருகிறது. சாமி. சிதம்பரனார் 1961, சனவரி 17இல் இயற்கை எய்தினார். அவர் முன்னரே எழுதி வைத்திருந்த இவ்வுரையை அவர் துணைவியார்

திருமதி சிவகாமி சிதம்பரனார், தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறை நிதி உதவியுடன் வெளியிடுகிறார்.

உவமைகள்

குறுந்தொகையில் உள்ளங்கொள்ளை கொள்ளும் உவமைகள் பல உள்ளன. "பொருத்தமான உவமைகளை எடுத்துக் காட்டுவதில் தமிழ்ப்புலவர்கள் தலைசிறந்தவர்கள். உவமைகளின் மூலம் உண்மைகளை விளக்குதற்கு ஆற்றல் வேண்டும்; அனுபவமும் வேண்டும்; ஆராய்ச்சியும் வேண்டும். இத்தகைய திறமைசாலிகள் உதாரணங்களைத் தேடுவதற்கு அங்குமிங்கும் அலைய மாட்டார்கள். உவமைகள் தாமாகவே அவர்கள் கண் முன்னே வந்து நடமாடும்'' எனச் சாமி. சிதம்பரனார் குறிப்பிடுகிறார்.[1] இயற்கையைத் துருவி ஆராய்ந்து புலவர்கள் தந்துள்ள உவமைகள் தரும் இன்பம் உவமையிலா இன்பமாகும். இயற்கையை எந்த அளவுக்குக் கூர்ந்து நோக்கியுள்ளனர் என்பதற்குக் கீழ்வரும் உவமைகளை, உரையில் அவ்வப்பாடலில் உரையாசிரியர் நன்கு விளக்கம் தந்து செல்கிறார்.

1. காஞ்சி மரத்தின் பூங்கொத்து, பயறு போன்றிருக்கும் (பாடல் 10).

2. கரும்பின் அரும்பு, கருக்கொண்ட பச்சைப்பாம்பு போன்றிருக்கும் (35).

3. தாழையின் முள், அணிற்பல் போன்றிருக்கும் (49).

4. ஞாழல் மலர், வெண்சிறு கடுகை ஒக்கும் (50).

5. புன்கு மலர், பொறி போன்றிருக்கும் (53).

6. கூம்பிய ஆம்பல் மலர்கள், கொக்கின் முதுகு போல் தோன்றும் (122).

7. கற்களின்மேல் வேங்கை மலர் உதிர்ந்து கிடக்கும் தோற்றம், புலிக்குட்டிகள் படுத்திருப்பன போல் இருக்கும் (47).

8. கற்களின்மேல் காந்தள் மலர் பூத்துக்கிடப்பது, செம்புள்ளிகள் நிறைந்த யானையின் முகத்தை ஒக்கும் (284).

9. வாகை மலர்க்கொத்து, மயிலின் கொண்டையை ஒத்திருக்கும் (347).

10. பூத்த காயா மரக்கிளை, மயிலின் கொண்டையை ஒத்திருக்கும்; (காயாம் பூ நிறம் மயிலின் கழுத்து நிறத்தது) (183).

---

1. இந்நூல் பக். 294

11. சேம்பின் இலை, யானைக் காதை ஒத்திருக்கும் (76).

12. நொச்சி இலை, மயிலின் காலடியைப் போன்றிருக்கும் (138).

13. அடும்பின் இலை, மானின் அடியைப் போன்றது (243).

14. தாமரை இலை, களிற்றின் காதை ஒக்கும் (246).

15. வௌவால் இறகு, ஆம்பல் இலையின் அடிப்புறத்தை ஒத்திருக்கும் (352).

மகளிர் மாமைக்குப் பாதிரி மலரும் (147), பசப்பிற்குப் பீர்க்கின் மலரும் (98), தேமலுக்குத் தாமரைத் தாதும் (300) உவமைகள் ஆக்கப்பட்டுள்ளன.

வீழும் அருவிக்குப் பாம்பின் சட்டையும் (235), அருவி ஒலித்தலுக்கு முரசொலியும் (365), அருவி நீர் கற்களிடையே வளைந்து வளைந்து ஓடுவதற்குப் பாம்பு நிலத்தில் ஊர்தலும் (134). மலையில் படர்ந்துள்ள இற்றியின் வெள்ளை வேர்கட்கு மலையினின்றும் வீழ்கின்ற அருவிநீர் ஒழுக்கும்(106) உவமைகளாய்த் தரப்பட்டுள்ளன.

மகிழ்ச்சிக்குத் திருவிழாக் காலத்து மக்களின் நிலைமையும், துன்பத்திற்குப் பாழடைந்த வீடும் உவமைகளாய் வந்துள்ளன (41).

குயில், மாம்பூக்களின் நறுமணமுள்ள மகரந்தங்களைக் கோதுகின்ற பொழுது அதன் கரிய இறகிலே மஞ்சள் நிறமுள்ள தாது படிந்திருப்பது பொன்னுரைத்த கல்லைப் போலத் தோன்றுகிறது (192).

குறவர்கள் கவலைக் கிழங்கைக் கல்லியெடுத்த குழியில் கொன்றை மலர்கள் பரவிக் கிடப்பது, பொன் பொதிந்த பெட்டி திறந்து கிடப்பதுபோல் காணப்படுகிறது (233).

வேப்பம் பழங்களைக் கிளிகள் தங்கள் அலகுகளில் கௌவிக்கொண்டு உட்கார்ந்திருப்பது, பொற்கொல்லர்கள் தங்கள் கூரிய நகங்களில் பொற்காசைப் பிடித்துக்கொண்டு இருப்பது போலக் காணப்படும் (67).

'நெருஞ்சியின் மலர் அழகாய் இருக்கும். அதுவே முள்ளாய் மாறி நாம் அடி வைக்கும்போது சுருக்கென்று தைக்கும். இதைப் போலவே, முன்பு நம்மோடு கூடி மகிழ்வு தந்த காதலர் இப்போது பிரிந்து சென்று துன்பம் தருகிறார்' என்கிறாள், தலைவி. முன்பு இன்பமும் பின்பு துன்பமும் தந்த தலைவனுக்கு முறையே நெருஞ்சியின் மலரும் முள்ளும் உவமைகளாய்க் கூறப்

பட்டுள்ளன (202). இவ்வாறு இன்னும் நூற்றுக்கணக்கான உவமைகளைக் கொண்டு குறுந்தொகை ஓர் உவமைக் களஞ்சியமாய்த் திகழ்கிறது.

வரலாற்றுக் குறிப்புகள்

குறுந்தொகைப் பாடல்களுள் சிலவற்றில் வரலாற்றுக் குறிப்புகளும் இடம் பெற்றுள்ளன. சங்க காலத் தமிழ்நாட்டு வரலாற்றை ஆய்பவர்க்கு இது பெரிதும் துணை செய்யும். உரையாசிரியர் இக்குறிப்புகட்குத் தக்க விளக்கங்கள் தந்துள்ளார். அதியமான், ஓரி, ஆய் அண்டிரன், பாரி, மலையன் ஆகிய வள்ளல்கள்பற்றிய குறிப்புகள் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன.

அதியமான் அஞ்சி தகடூரை ஆண்டவன்; ஓயாது ஈபவன்; அவன் பகைவர் நாட்டில் உள்ளார், அச்சத்தால் எப்போதும் துயில் பெறாது வருந்துவர்; அத்தகு போர்வலிமை பெற்றவன் என்பதை,

ஓவாது ஈயும் மாரி வண்கைக்
கடும்பகட்டு யானை நெடுந்தேர் அஞ்சி,
கொல்முனை இரவூர் போல,
சிலஆ குகநீ துஞ்சும் நாளே! (குறுந். 91)

என்னும் பாடலால் அறியலாம்.

ஓரி கடையெழு வள்ளல்களுள் ஒருவன்; சிறந்த வில் வீரன்; கொல்லி மலைக்கு உரிமையானவன். அம்மலையின் மேற்புறம் அழகிய கொல்லிப்பாவை இருந்தது என்பதை,

வல்வில் ஓரி கொல்லிக் குடவரைப்
பாவை..... (குறுந். 100)

என்னும் அடிகளாலும், அவன் வலிய தேரையுடையவன்; அவன் மலையில் உள்ள பூக்களை அளைந்துவரும் காற்று நறுமணம் மிக்கது என்பதை,

.... திண்தேர்க்
கைவள் ஓரி கானம் தீண்டி
எறிவளி கமழும்........ (குறுந். 199)

என்னும் அடிகளாலும் நாம் அறிய முடிகிறது.

கழல்தொடி ஆஅய் மழைதவழ் பொதியில்
வேங்கையும் காந்தளும் நாறி (குறுந். 84)

என்பதால் ஆய், பொதியமலையின் தலைவன் என்பதையும், அம்மலையில் வேங்கையும் காந்தளும் மலர்ந்து மணம் வீசும் என்பதையும் அறிகிறோம். இவன் கடையெழு வள்ளல்களுள் ஒருவன்; இவனை ஆய் அண்டிரன் என்றும் குறிப்பிடுவர்.

வள்ளல் பாரி வாழ்ந்த மலை, பறம்பு. அந்த மலையில் இருந்த சுனைநீர் மிகுந்த இனிமையும் குளிர்ச்சியும் உடையது. இதனை,

பாரி பறம்பில் பனிச்சுனைத் தெண்ணீர் (குறுந். 196)

என்னும் பாடலடி தெரிவிக்கிறது.

கடையெழு வள்ளல்களுள் மலையன் என்பானும் ஒருவன். இவனுடைய முழுப்பெயர் மலையமான் திருமுடிக்காரி என்பதாம். முள்ளூர்க் கானம் இவனுக்குரிய நாடு. அங்கு விளைந்த சந்தனம், மணத்திலே சிறந்தது; இதனை,

...... அடுபோர்
எஃகுவிளங்கு தடக்கை மலையன் கானத்து
ஆரம் நாறும் (குறுந். 198)

எனும் அடிகளால் அறியலாம். இதே கருத்தை,

முரண்கொள் துப்பின் செவ்வேல் மலையன்
முள்ளூர்க் கானம் நாற வந்து (குறுந். 312)

எனும் பாடலடிகளும் தெரிவிக்கின்றன. "சேர சோழ பாண்டியர் களுள் எவர் பக்கத்தில் காரி இருக்கிறானோ அவருக்கே போரில் வெற்றி கிடைக்கும். ஆதலால், இவன் 'முரண்கொள் துப்பின் மலையன்' எனப் பாராட்டப்பட்டான்"[1] என இவ்வுரையாசிரியர் விளக்கம் தருகிறார்.

கட்டி என்பவன் சேரனுண்டய படைத்தலைவர்களுள் ஒருவன்; சிறந்த வீரன்; கொடையாளி; இவன் கங்க நாட்டுத் தலைவன் என்று கூறப்படுகிறான்.

குல்லைக் கண்ணி வடுகர் முனையது
பல்வேல் கட்டி நன்னாட்டு உம்பர்
மொழிபெயர் தேஎத்தர்...... (குறுந். 11)

"மொழிபெயர் தேயம் - வேறுமொழி வழங்கும் நாடு என்பது பொருள். இது வேங்கடத்துக்கு அப்பால் இருந்த தெலுங்கு நாட்டைக் குறித்தது. வடுகர் எனும் சொல் தெலுங்கரைக் குறிக்கும். தமிழர் பொருள் தேடத் தெலுங்கு நாடு சென்று வந்தனர் என்பதை இது குறிக்கிறது" என உரையாசிரியர் குறிப்பிடுகிறார்.[2]

கோசர்கள் என்பார் நான்கு பிரிவினராய் உள்ளவர்கள். அவர்கள் பழமையான ஆலமரத்தின் அடியில் பொதுச் சபைகளில்

1. இந்நூல் பக். 637
2. மேலது, பக். 34

கூடுவார்கள். நேர்மை தவறாமல் நீதி மொழிவார்கள். அவர்கள் உறுதிமொழி என்றும் நிலைத்து நிற்கும்.

தொல்மூது ஆலத்துப் பொதியில் தோன்றிய
நாலூர்க் கோசர் நல்மொழி போல
வாய்ஆ கின்றே (குறுந். 15)

எனும் பாடல் மேலுள்ள செய்தியைச் சொல்கிறது. கோசர்கள் சிறந்த போர் வீரர்கள்; தாம் கூறிய வஞ்சினத்தை நிறைவேற்றுவர். இவர்கள் ஒரு காலத்தில் நன்னன் நாட்டின்மீது படையெடுத்து அவனுடைய காவல் மரமாகிய மாமரத்தை வெட்டி வீழ்த்தினர் என்பதைப் பின்வரும் பாடல் தெரிவிக்கிறது.

.... நன்னன்
நறுமா கொன்று நாட்டில் போக்கிய
ஒன்றுமொழிக் கோசர் போல...... (குறுந். 73)

வேளிர் என்பார் வடநாட்டுத் துவாரபதியிலிருந்து இந்நாட்டில் குடியேறியவர் என்று கூறுவர்; இது பொருந்தாது.

தொன்றுமுதிர் வேளிர் குன்றூர் (குறுந். 164)

எனும் அடி, வேளிர் தமிழ்நாட்டுப் பழங்குடியினர் என்பதை உணர்த்துகிறது. வேளாளர் இந்நாட்டுப் பழங்குடியினர். வேளாளரே வேளிர் எனப் பெயர் பெற்றனர் என உரையாசிரியர் குறிப்பிடுகிறார்.[1]

கொல்லிமலை சேரர்கட்குச் சொந்தமானது. கொல்லிப் பாவை அம்மலையில் அமைந்திருந்தது.

பெரும்பூண் பொறையன் பேஎமுதிர் கொல்லிக்
கருங்கண் தெய்வம் குடவரை எழுதிய
நல்லியல் பாவை (குறுந். 89)

தொண்டி, மேற்குக்கரையில் உள்ள நகரம். இதுவும் சேரருக்குச் சொந்தமானது (குறுந். 128).

மரந்தை என்னும் நகர் சேரர்களுக்குரியது. அவ்வூரை அடைந்தவர்கள் எல்லா நலன்களையும் பெற்று இன்புறுவார்கள்.

முனாஅது யானைஅம் குருகின் கானல்அம் பெருந்தோடு
அட்ட மள்ளர் ஆர்ப்பிசை வெரூஉம்
குட்டுவன் மரந்தை அன்ன...... (குறுந். 34)

மரந்தை மேற்குக் கடற்கரையில் உள்ள ஊர். அவ்வூர்க் கடற்கரைச் சோலையில் பறவைக் கூட்டங்கள் நிறைந்திருக்கும். போரிலே வெற்றி பெற்று வந்த வீரர்கள் கடற்கரையிடத்தே களிப்பினால் ஆரவாரிப்பார்கள். அது கேட்டுப் பறவைகள் அஞ்சி நடுங்கும்.

1. இந்நூல் பக். 389

தகடூரை ஆண்ட அதியமான் அஞ்சி, எழினி எனப்பட்டான். சிறந்த போர் வீரன்; போர்க்களத்தில் உறுதியாய் நின்று பகைவரை வெற்றி கொள்வான். தன் நாட்டுப் பசு மந்தையை எதிரிகள் கவர்ந்தபோது அவர்களை எதிர்த்து வென்று பசு மந்தையை மீட்ட செய்தியை,

.... வெம்போர்
நுகம்படக் கடக்கும் பல்வேல் எழினி
முனைஆன் பெருநிரை போலக்
கிளையொடும் காக்க....... (குறுந். 80)

எனும் பாடல் விவரிக்கிறது. இவன் அஞ்சியின் மகனான பொகுட்டெழினி என்பாரும் உளர்.

வேள் எவ்வி என்பான் சிறந்த கொடையாளி; உழுவித் துண்ணும் வேளாளர் தலைவன்; மிழலைக் கூற்றம் எனும் நாட்டின் தலைவன். கடற்கரையிலிருந்த, 'நீழல்' என்னும் ஊரிலே உறைந்தவன்.

எவ்வி இழந்த வறுமையாழ்ப் பாணர்
பூஇல் வறுந்தலை போலப் புல்என்று
இனைமதி (குறுந். 19)

என்பதால் அவன் பாணர்களின் பசியைப் போக்கி, அவர்களை வாழ்வித்து வந்த தலைவன் என்பது புலனாகிறது.

திண்தேர் நள்ளி கானத்து அண்டர்
பல்ஆப் பயந்த நெய்யில், தொண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோறு (குறுந். 210)

என்பதால் கண்டீரக்கோப்பெரு நள்ளியின் காட்டிலே பசுவும், தொண்டியில் சுவை வாய்ந்த நெல் விளைவும் மிகுதி என்பது தெரிகிறது.

பாசவல் இடித்த கருங்காழ் உலக்கை
ஆய்கதிர் நெல்லின் வரம்புஅணைத் துயிற்றி
ஒண்தொடி மகளிர் வண்டல் அயரும்
தொண்டி அன்னஎன் நலம்........ (குறுந். 238)

என்பதால், தொண்டி நெல் வயல்கள் நிறைந்த நகரம் என்பது தெரிகிறது. அவலை இடித்த உலக்கையை, நெல் வயலின் வரப்புகளில் வைத்துவிட்டு, அந்நகரப் பெண்கள் விளையாடி மகிழ்வர்.

வளங்கெழு சோழர் உறந்தைப் பெருந்துறை (குறுந். 116)

உறையூர் என்பது உறந்தை என வழங்கப்படுகிறது. இது சோழர்களின் தலைநகர். இதற்குப் பக்கத்தே காவிரியாறு ஓடுகிறது.

விச்சிக்கோ குறுநில மன்னன். விச்சி மலையைச் சூழ்ந்துள்ள நாட்டை ஆண்டவன். பாரி இறந்த பின்னர் அவன் மகளிரைக் கபிலர் விச்சிக்கோவிடம் அழைத்துச் சென்று, அம்மகளிரை மணந்துகொள்ளும்படி வேண்டினர் எனும் செய்தி புறநானூறு 200ஆம் பாடலில் குறிக்கப்பட்டுள்ளது. இவன் விற்படையுடைய சேனைகளுக்குத் தலைவன். குறும்பூர் என்னுமிடத்தில் எதிரிகளை எதிர்த்துப் போர் செய்தான்.

வில்கெழு தானை விச்சியர் பெருமகன்
வேந்தரொடு பொருத ஞான்றை.....
....
கலிகெழு குறும்பூர் ஆர்ப்பு...... (குறுந். 328)

நன்னன் குறுநில மன்னன். இவன் தன் பூம்பொழிலில் சிறந்த மாமரம் ஒன்றை வளர்த்து வந்தான். அம்மரத்தின் கனியை வேறு எவரும் உண்ணக்கூடாது என்பது ஆணை. அம்மரத்தில் பழுத்த கனி ஒன்று அருகிலிருந்த ஆற்றில் விழுந்து மிதந்து வந்தது. ஆற்றில் நீராடிய பெண் ஒருத்தி அக்கனியை அரசன் மரத்துக்கனி என அறியாது உண்டுவிட்டாள். செய்தி கேட்ட நன்னன் அப்பெண்ணைக் கொலை செய்ய ஆணையிட்டான். பெண்ணுக்கு உறவினர் அவளை மீட்கும்பொருட்டு எண்பத்தொரு களிற்று யானைகளுடன் அவள் எடை கொண்ட பொன்னால் செய்த பாவையைத் தண்டமாய்த் தருவதாய் வேண்டியும் ஏற்றுக் கொள்ளாதவனாய் நன்னன் அப்பெண்ணைக் கொலை செய்தான்.

மண்ணிய சென்ற ஒள்நுதல் அரிவை
புனல்தரு பசுங்காய் தின்றதன் தப்பற்கு
ஒன்பதிற்று ஒன்பது களிற்றொடு அவள்நிறை
பொன்செய் பாவை கொடுப்பவும் கொள்ளான்
பெண்கொலை புரிந்த நன்னன்......... (குறுந். 292)

தொண்டை நாட்டரசர்கள் சிறந்த போர்வீரர்கள். அவர்கள் சிறந்த தேர்களையுடையவர்கள். அவ்வரசர்களுடன் போர்செய்து தோற்றுப்போனவர்களின் நாட்டிலே விளைந்த பொருள்களை அவர்கள் யானைகள் உண்டு வாழும். தொண்டை மன்னர்களின் மலைச்சாரல்களில் சுரபுன்னை மரங்கள் நிறைந்திருந்தன.

.... பொருவார்
மண்எடுத்து உண்ணும் அண்ணல் யானை
வண்தேர்த் தொண்டையர் வழைஅமல் அடுக்கம்... (குறுந். 260)

அகுதை என்பான் ஆடுமகளிர்க்குப் பெண் யானைகளைப் பரிசிலாய்க் கொடுத்தான் (குறுந். 298).

அழிசி என்பவன் ஆர்க்காட்டிலிருந்து ஆட்சிபுரிந்தவன்; அவன் மகன் சேந்தன் தந்தை. இச்சேந்தன் என்பான் காவிரிக் கரையில் மருதமரத்தோடு யானையைப் பிணித்து, நீராடுவோரின் துயரத்தைப் போக்கினான் (குறுந். 258).

பூழி நாட்டினர்க்கு வெள்ளாடே சிறந்த செல்வமாய் விளங்கியது (குறுந். 163).

அருமன் என்பானின் ஊர் குறுந்தொகை 293 ஆம் பாடலில் பேசப்படுகிறது.

கொங்கர் என்பவர் கொங்கு நாட்டினர்; பசும்பூண் பாண்டியனைப் பகைத்துப் போரிட்டனர். பாண்டியன் கொங்கரை அடக்க அதியன் என்னும் தளபதியை அனுப்பினான். அதியன் கொங்கரோடு போரிட்டு வாகைப் பறந்தலைக் களத்திலே பட்டு வீழ்ந்தனன்.

> கூகைக் கோழி வாகைப் பறந்தலைப்
> பசும்பூண் பாண்டியன் வினைவல் அதிகன்
> களிறொடு பட்ட ஞான்றை
> ஒளிறுவாள் கொங்கர் ஆர்ப்பு..... (குறுந். 393)

வடபுலத்தில் பாடலி நகர் பண்டு சிறந்திருந்தது. இது சோணையாற்றின் கரையிலிருந்த தலைநகரம். இவ்வாற்றில் யானைகள் நீராடும். பாடலி நகரத்தே பொன் மிக்கிருந்தது என்பதை,

> வெண்கோட்டு யானை சோணை படியும்
> பொன்மலி பாடலி (குறுந். 75)

என்னும் பாடலடிகள் விளக்குகின்றன.

குறுந்தொகையில் ஆரிய அரசன் யாழ்ப் பிரமதத்தன் பாடியது 184ஆவது பாடலாய் உள்ளது. இவன் வடபுலத்திலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்தவனாய் இருக்கலாம். இவன் தமிழ்ப்புலவன்; யாழ் இசைப்பதில் வல்லவன் என்பதை இவனுடைய பெயர் சுட்டுகிறது.

இவ்வாறு குறுந்தொகையில் இருபத்தொன்பது பாடல்கள் வரலாற்றுக் குறிப்புகளை உள்ளடக்கியனவாய் உள்ளன என்பதை இவ்வுரையாசிரியர் விளக்கியிருக்கிறார். ஆதலின், குறுந்தொகை ஒரு வரலாற்றுக் களஞ்சியமாகவும் விளங்குகிறது எனலாம்.

இயற்கை எழில்

சங்க காலப் புலவர்கள் தம் நுண்மாண் நுழைபுலத்தை இயற்கை எழிலில் ஊடுருவச்செய்து, அதன்கண் கண்டதை உன்னி

உன்னி ஆராவின்பத்தை அடைந்தனர். தாம் பெற்ற பெருமகிழ்வை வையகமும் பெற வேண்டுமெனும் நன்னோக்கினால் இயற்கையின் இயல்புகளை உயர்வு நவிற்சியின்றி, உள்ளது உள்ளவாறே சுவைபட எடுத்து இயம்பியுள்ளனர். சங்கப்புலவர்களின் இச்சிறப்பை உணரக் குறுந்தொகை பெருமளவில் துணை செய்கின்றது.

குறிஞ்சி

குறிஞ்சியில் பூத்த காந்தள் மலர்கள் பாறைகள்மீது கிடக்கின்றன; குறிஞ்சி, கூதளம் முதலிய மலர்கள் மலர்கின்றன. உருளைக்கற்களின்மீது மாணைக் கொடிகள் படர்ந்திருக்கின்றன. மலைச்சாரலில் மிளகுக் கொடிகள் நிறைந்திருக்கின்றன.

பழத்தோட்டங்கட்கு மூங்கிலே வாழ்வேலியாய் அமைந்திருக்கிறது. பலா மரத்தின் சிறிய கொம்புகளில் பெரிய பழங்கள் தொங்குகின்றன. வேங்கை மரங்கள் பொன்னிறப் பூக்களால் பொலிவு பெற்றுள்ளன. அருவிகள் வீழ்ந்து அழகு செய்கின்றன.

மரங்களில் ஏறி ஆண் குரங்குகள் இனிய கனிகளை உதிர்க்க, அவற்றைப் பெண் குரங்குகள் தம் குட்டிகளோடு பொறுக்கி உண்ணுகின்றன. வெயிலை விரும்பிப் பாறைக்கு வந்த குரங்குக் குட்டிகள், அப்பாறையிடுக்குகளில் மயில்கள் இட்டிருக்கும் முட்டைகளைப் பந்துகளாய் உருட்டி விளையாடுகின்றன. கானவன் பலாப்பழங்களைக் காவல் செய்கிறான். அவன் அயர்ந்த வேளை ஒரு குரங்கு பக்கத்திலிருந்த மரத்திலிருந்து பலாவின்மீது குதித்துக் கனிகளை உண்டு செல்கிறது. குரங்கு ஏமாற்றியதை யறிந்த கானவன் ஒவ்வொரு மரத்திலேயும் வலையைக் கட்டி விடுகிறான். மீண்டும் கனியுண்ண வந்த குரங்கு ஏமாந்து நிற்கிறது.

குறவர்கள் யா மரங்களை வெட்டிச் சுட்ட இடங்களில் தினையை விதைக்கின்றனர். தினை முதிர்ந்த காலத்தில் அதனை உண்ணவரும் பறவையினங்களைக் குறமகளிர் கவணெறிந்து ஓட்டுகின்றனர். விரட்டப்பட்ட கிளிகள் மேல் மலையை நோக்கிப் பறக்கின்றன. தினையின் மறுகாலில் பனிக்காலத்தில் அவரைக் கொடிகள் படர்ந்து பூக்கின்றன.

அருவி பாய்கின்ற இடங்களில் மலைவாழ்நர் மலைநெல்லை விளைக்கின்றனர். அந்நெல்லிடையே களைகளாய் முளைக்கும் மலை மல்லிகையையும் மரலையும் களைந்தெறிகின்றனர். மலைவாழ்நர் வீடுகள் புல்லால் வேயப்பட்டிருக்கின்றன.

அவ்வீடுகளின் முன் பெண்யானைகள் தம் கன்றுகட்குப் பால் கொடுத்துக்கொண்டே அருகிலுள்ள தினைப்பயிரை மேய்ந்து கொண்டிருக்கின்றன. குறவர்கள் ஈன்ற குழந்தைகள் யானைக் குட்டிகளோடு விளையாடி மகிழ்கின்றனர். மலைகளில் யானைகள் புலிகளோடு போரிட்டு அவற்றை வீழ்த்துகின்றன.

மரையா என்னும் மான், மூங்கில் இலைகளை உண்டு மரநிழலில் தூங்குகின்றது. நெல்லிக்காயை உண்ட மான்கள் சுனைகளில் சென்று நீரருந்துகின்றன.

வெளவால்கள் இரவு நேரங்களில் பலாப் பழங்களை நாடிப் பறக்கின்றன; பகலில் மூங்கிலில் தொங்கித் தூங்குகின்றன.

முல்லை

முல்லையில் கார் காலத்தில் கொன்றை மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன. கொன்றை மலர்கள் குண்டு குண்டாய்ச் சதங்கைகள் போலக் காட்சியளிக்கின்றன. குறவர்கள் கவலைக் கிழங்கு தோண்டுவதால் ஏற்படும் குழிகளில் கொன்றை மலர்கள் குவிந்து கிடக்கின்றன.

மாலையில் முல்லைப்பூக்கள் எங்கும் நிறைந்து மணக்கின்றன. யானைகள் மேய்புலத்தை நாடிச் செல்கின்றன. முல்லைக்கொடி படர்ந்த பகுதியில் அவை செல்லும் போது கொடிகள் அவற்றின் கொம்புகளில் சிக்கி அறுபடுகின்றன. அறுபடுகின்ற அக்கொடிகள் யானைகளின் கொம்புகளில் கிடந்து அவற்றுக்கு அழகு சேர்க்கின்றன.

மழையில்லாத காலத்தில் காயா மரங்கள் பொலிவிழந்து நிற்கின்றன. மழை பெய்ததும் தளிர்த்துக் கிளைதோறும் மயிற்கழுத்தின் நிறமொத்த பூக்கள் நிறைகின்றன.

ஆடுகளை மேய்ப்பவர்கள் பட்டிகளில் ஆட்டின் திரளோடு தங்கிவிடுகின்றனர். ஆடுகளிடம் கறந்த பாலை இடையர்கள் வீடு சேர்த்து, மேய்ச்சல் நிலத்தில் ஆடுகளோடு இருப்பவர்க்குச் சோறு கொண்டு மீளுகின்றனர். மழை பெய்யும்போது இடையர்கள் பனையோலையால் செய்யப்பட்ட பறியோலையால் தம்மை மறைத்துக்கொள்கின்றனர்.

உளுந்தின் காய்களையும் அறுகம்புல்லையும் உண்ணுகின்ற மான் கூட்டங்கள் பரல் கற்களிடையே தேங்கி நிற்கும் நீரைக் குடித்துப் பூக்கள் மணம் வீசும் புதர்களின் நிழலில் படுத்துத் தூங்குகின்றன.

முல்லை நிலச் செம்மண் நிலங்களில் வரகு செழித்து வளர்கிறது. பெருமழை பெய்யும்போது காட்டாறுகள் பெருக்கெடுத்து ஓடுகின்றன. அவற்றின் கரையிடத்தே அசைந்து செல்லும் தோகை மயில்கள் கார்மேகக் கூட்டங்களைக் கண்டு அகவுகின்றன. 'கொக் கொக்' எனக் குரல் கொடுத்தவண்ணம் காட்டுக்கோழிகள் புதலருகே இரை தேடுகின்றன.

காலையில் மேய்புலம் சென்ற மாடுகள் கழுத்து மணியசைய, மாலையில் வீடு திரும்புகின்றன. வயிறு நிறைய மேய்ந்த அவை மெதுவாய் அசைந்து நடப்பதால் அதற்கேற்பக் கழுத்து மணிகளும் மெதுவாய் அசைந்து இனிய ஒலியை எங்கும் நிறைக்கின்றன.

மருதம்

நீர் நிறைந்த வயல்களில் நீர்ப்பூக்கள் பூத்துக் கிடக்கின்றன. கயல் மீன்களும் வாளை மீன்களும் அங்கே துள்ளி விளையாடு கின்றன. கரைகளிலுள்ள மாமரங்களிலிருந்து வயல்களில் வீழ்கின்ற கனிகளை வாளை மீன்கள் துள்ளிக் கவ்வுகின்றன. மீன்களைக் கொத்தியுண்ணக் கொக்குகள் வயல்களிலே காத்து நிற்கின்றன. உழவர்கள் வயலை உழும்போது பூக்கொடிகள் கொழுவில் சிக்கி அறுபடுகின்றன. அவற்றை வரப்பின் மேல் எடுத்தெறிதலால் அவை வாடிப் பொலிவிழந்து கிடக்கின்றன.

வயற்புறங்களில் கரும்புகள் செழித்து வளர்கின்றன. வாடைக்காற்று வீசும் கூதிர்க் காலத்தில் கரும்பின் அரும்புகள் மலர்கின்றன. வயற்கரைகளில் உள்ள காஞ்சி மரங்களின் நிழலில் உழவர்கள் ஓய்வுக்காகத் தங்கும்போது அவர்கள்மீது மலர்த்தாது கொட்டுகிறது. நீர் நிலைகளில் பகன்றை மலர்கிறது. நீர்நாய்கள் நீர் நிலைகளில் உள்ள வாளை மீன்களை உண்ணுகின்றன. மழைக் காலத்தில் புதல்களின்மீது பீர்க்கங்கொடிகள் படர்ந்து மலர்கின்றன. பசிய புதலிடையே பீர்க்கின் மஞ்சள் நிறப் பூக்கள் அழகிய காட்சியைத் தருகின்றன.

வீடுகளின் முன்புறம் உலர்த்தப்பட்டுள்ள தானியங்களைக் குருவிகள் உண்ணுகின்றன; எருவின் நுண்ணிய பொடியைக் குடைந்து விளையாடுகின்றன; வீடுகளின் இறப்புகளில் கூடுகளைக் கட்டுகின்றன. ஆண் குருவி, கருவுற்றிருக்கும் தன் பேடைக்குக் கரும்பின் பூவைக் கொழுதிக் கொணர்ந்து மெத்தென்ற கூடு கட்டுகிறது.

வீட்டுக்கோழி வேலியோரம் தன் குஞ்சுகளுடன் இரை தேடுகிறது. அங்கே காட்டுப்பூனை ஒன்றைக் காணுகின்ற

தாய்க்கோழி எல்லாக் குஞ்சுகளையும் தப்பியோடி வர ஒருவகைக் குரல் கொடுத்து அழைக்கிறது. மின்னுகின்ற கரிய இறகுகளை யுடைய குயில்கள் மாமரங்களின் பூக்களைக் கொழுதுகின்றன.

காலையில் மேய்புலம் சென்ற பசுக்கள் மாலையில் வீடு திரும்புகின்றன. அவை தம் கன்றுகளை நினைந்தமையால் வழிநெடுக மடியிலிருந்து பால் தானே ஒழுகிட விரைந்து வருகின்றன. எருமை ஒன்று அணிமையில் ஈன்ற கன்றினை உழவன் கயிற்றில் கட்டியிருக்கிறான். கன்றைப் பிரிய மனமில்லாத எருமை அதனினின்றும் அகலாது அதைப் பார்த்தவண்ணமே பக்கத்தி லுள்ள பயிர்களை மேய்கிறது.

காலையில் விதைக்கும்பொருட்டுச் செல்லும் உழவன் மாலையில் வீடு திரும்புகையில் விதையைக் கொண்டுசென்ற வட்டிகளில், வழியில் பூத்திருந்த பூக்களைப் பறித்து நிறைத்து வருகின்றான்.

நெய்தல்

கடலையடுத்துள்ள உப்பங்கழிகளில் நெய்தற்கொடிகள் படர்ந்துள்ளன. அவற்றின் அகன்ற இலைகள் நீர்ப்பரப்பை மூடியுள்ளன; பூக்கள் பசிய இலைகட்கு மேலே உயர்ந்து தோன்றுகின்றன. கடற்கரைப்பரப்பில் முள்ளி எனும் ஒரு வகைச் செடி வளர்கிறது. இதனுடைய கரிய மலர்கள் காற்றால் சிதறி, நூலற்று உதிர்ந்த முத்துகளைப் போல, நீர்த்துறையெங்கும் பரவிக் கிடக்கின்றன. வாடைக்காற்று கழியிலுள்ள நீல மலரை மலரச்செய்து, புதலில் உள்ள கருவிளை மலர்களை அலைத்து, ஈங்கையின் மலர்களை உதிர்த்து வீசுகிறது. கடற்கழியில் படர்ந்துள்ள அடும்பின் மலர்கள் குதிரைகளின் கழுத்திலிடும் சதங்கை மணிகள் போன்று தோற்றமளிக்கின்றன. மணல் மேடுகளில் உள்ள புன்கு மரங்களிலிருந்தும் ஞாழல் மரங்களி லிருந்தும் உதிர்கின்ற மலர்கள் கலந்து கிடந்து கடற்கரையை அழகு செய்கின்றன. காற்று வீசும்போது ஞாழல் மலர்கள் கழியில் மலர்ந்துள்ள நெய்தல் மலர்களில் சென்று படிந்து அவற்றை நிறைக்கின்றன. மணற்பரப்புகளில் புன்கு மரங்கள் நிறைந் துள்ளன; கடலலைகள் வீசும்போது எழும் சிறுநீர்த் திவலைகள் பட்டு அவை மலர்கின்றன.

கடற்கரையை அடுத்த மணல் மேடுகளில் பனைமரங்கள் வளர்ந்துள்ளன. சுழல் காற்று அடுப்பங்கொடியோடு கூடிய மணலைக் கொண்டுவந்து அப்பனைகளின் அடிமரங்கள்

மறையும்படி குவிக்கின்றது. கடற்கரையில் வளர்ந்துள்ள தாழை மரங்கள் வேலிபோல் அமைந்துள்ளன.

உப்பங்கழிகளில் மீனை எதிர்பார்த்துக் கொக்குகள் நிற்கின்றன. நீரால் நனைந்த கொக்கு வாடையால் வருந்துகிறது. நாரைகள் ஆரல் எனும் ஒருவகை மீனை ஆசையோடு அருந்துகின்றன. சிறகுகளின் வலிமை போய்விட்டதால் முதிர்ந்த நாரை ஒன்றால் பறந்து சென்று இரை தேட முடியவில்லை; ஆதலால், தண்ணீரைத் தொட்டுக்கொண்டிருக்கும் ஒரு புன்னையின் கிளையில் தங்கி, மீன் அங்கே வாராதா என ஏக்கத்தோடு காத்திருக்கிறது. அடும்பின் மலர்கள் சிதைய மீன்களைக் கொத்தியுண்ணும் நாரைகள் இரவு நேரங்களில் தாழையில் தங்கி, கடல் அலைகளின் ஓசையைச் செவி மடுத்தவண்ணம் தூங்குகின்றன.

கடற்கரையில் சாம்பல் நிறம் கொண்ட காக்கைகள் இருக்கின்றன. கழிகளில் பசிய இலைகளைக் கலக்கி இரை தேர்ந்துண்ணும் இக்காக்கைகள் பின்னர்ப் பூ மணம் வீசும் கடற்கரைச் சோலைகளில் சென்று தங்குகின்றன. புன்னை மரங்களில் கொக்குகள் தங்குகின்றன. பனை மரங்களில் கொழுவிய மடல்களினிடையே அன்றில்கள் சுள்ளிகளால் கூடுகள் கட்டி வாழுகின்றன. நெய்தல் நிலக் குளங்களில் பிரப்பங் கொடிகள் தூறு தூறாய் வளர்ந்திருக்கின்றன. கெண்டை மீன்கள் துள்ளியெழும்போது பிரப்பங்கொடிகளில் உள்ள முதிர்ந்த கனிகளைக் கவ்வுகின்றன. அலைகள் வீசும்போது இறால் மீன்களைக் கரையில் எறிந்துவிட்டுச் செல்கின்றன. ஞாழல் மரத்தின் வேர்களில் நண்டுகள் வளை செய்துள்ளன. அலைகள் அந்நண்டு வளைகளை அழித்துச் செல்கின்றன. கடற்கரையில் விளையாடிக்கொண்டிருக்கும் நண்டுகள் கொக்குகளைக் கண்டதும் விரைந்தோடி மறைகின்றன. கழிகளில் உள்ள முதலைகள் நீர்வழிச் செல்வோரைத் தடுத்துத் துன்புறுத்துகின்றன.

கழியிடத்து மலர்ந்துள்ள மலர்களை மகளிர் பறித்தும் அலைநீரில் விளையாடியும் மகிழ்கின்றனர்; கடற்கரை நண்டுகளை அங்குமிங்கும் அலைத்து மகிழ்கின்றனர். நண்டு ஒன்று மகளிர் அலைக்கப்படாத பாடு படுகிறது; நல்ல வேளை! அலையொன்று வந்து அதனைக் கடலுள் இழுத்துச் சென்றுவிடுகிறது. கடல்நீரில் ஆடி மகிழ்ந்த பின்னர் மகளிர், கடற்கரைச் சோலையிடத்தே சிற்றில் கட்டி விளையாடிக் களிக்கின்றனர்.

பரதவர்கள் கடலுள் சென்று மீன் பிடிக்கின்றனர். எறிவளி என்னும் ஓர் எறிகருவியைச் சுறாமீன் மீது எறிந்து கொல்லு கின்றனர். சில வேளைகளில் சுறா மீன் தாக்கிப் பரதவர்கள் புண்படுவதும் உண்டு. செம்படவப்பெண்கள் உப்பை விற்றுக் கிடைக்கும் பொருளைக்கொண்டு தங்கள் உணவுக்கு வேண்டிய பொருள்களை வாங்குகின்றனர்.

கடலையடுத்துக் கடற்கரைச் சோலை; அதனையடுத்து நெய்தல் நில ஊர்கள்; ஊரைச் சுற்றிலும் பனைமரங்கள் நெருங்கி யுள்ளன. நெய்தல் நில ஊர்களில் உள்ள வீடுகளின் முன்றில்களில் அலைகள் வந்துவந்து மீளுகின்றன. பரதவர்கள், கடலில் பிடித்த மீன்களையும் கழியில் பிடித்த இறால்களையும் மணல்மீது கிடத்தி உலர்த்துகின்றனர். அதனால் மணல் புலால் நாற்றம் பெறுகிறது.

பாலை

பாலையில் வாகை, இலுப்பை, உகாய், ஓமை, மரா மரங்கள் உள்ளன. முற்றிக் காய்ந்த வாகையின் காய்கள்மீது காற்றுப்படும் போது பறை போல ஒலி எழுகிறது. வேனிலால் வெம்பியிருக்கும் மாமரத்தின் உலர்ந்த பூங்கொத்து ஒன்றில் தேன் நாடிச் செல்லும் வண்டு தேனின்மையால் ஏமாந்து திரும்புகிறது.

பாலை நிலத்தில் நீர் கிடைக்காமையால் யானைகள் நீர் வேட்கை தணிக்க ஓமை மரத்தின் பட்டைகளை உரித்து அவற்றில் கிடைக்கும் சிறிது ஈரப்பசைக்காக மெல்லுகின்றன. ஆண் யானை ஒன்று பெண் யானையின் நீர் வேட்கையைத் தணிக்க யா மரத்தின் பட்டையை உரித்துப் பார்க்கிறது. அதிலும் நீர்ப்பசையில்லாமை யால், பிடியின் வருத்தத்தைத் தீர்க்க முடியவில்லையே என்னும் ஏக்கத்தால் தன் துதிக்கையை விண்ணை நோக்கி உயர்த்திப் பிளிறுகிறது. நீர்வேட்கையால் யானைகள் வலிமையிழந்து மரக்கிளைகளை முரிக்கக்கூட முடியாமல் வருந்துகின்றன.

பாலை நில மான், இரைக்காக மரப்பட்டைகளைக் காலால் உதைத்துப் பெயர்த்தெடுக்கிறது. அதை முதலில் குட்டிக்குத் தந்து எஞ்சியதைத் தான் உண்ணுகிறது. நிழலற்ற பாலையில் தன் துள்ளுநடைக் குட்டிக்கு மான் தானே நிழலாகி நிற்கிறது. கானலை நீர் என எண்ணி ஓடும் மான்கள் ஏமாந்து நிற்கின்றன.

கள்ளிகளில் புறாக்கள் தங்கியிருக்கின்றன. கள்ளி ஒன்றில் ஆணும் பெண்ணுமாகிய இணைப்புறாக்கள் வீற்றிருக்கின்றன. ஆண்புறா பேடையின் மென்மையான தூவியினைக் கோதிவிட அவை இரண்டும் இன்பத்தில் திளைத்திருக்கின்ற அவ்வேளையில்

கள்ளியில் ஒரு காய் வெடிக்கிறது. அவ்வொலி கேட்டு அஞ்சிய இணைப்புறாக்கள் பறந்தோடி மறைகின்றன.

பாலை நிலப் பறவைகளுள் வங்காவும் ஒன்று. ஓர் ஆண் வங்கா தன் பேடையைக் கூட்டிலிருத்திவிட்டு இரை தேடிச் செல்கிறது. தனித்திருக்கும் பெண் வங்காமீது எழால் எனும் பறவை பாய்கிறது. அஞ்சிய பெண் வங்கா, தன் ஆண் துணையைக் குழல்போலும் இனிய குரலால் கூவி அழைக்கிறது. பருந்து ஒன்று ஊன் உணவு கிட்டாதா என ஞெமை மரத்தின்மீது ஏக்கத்தோடு காத்திருக்கிறது.

கணந்துள் பறவைகள் கூட்டங்கூட்டமாய்ப் பாலையில் வாழ்கின்றன. தமக்கு ஊறு செய்யும் வேடுவர்களைக் கண்டதும் இவை அச்ச ஒலி எழுப்பும் இயல்புடையவை. இவ்வொலியைக் கேட்போர் அங்கு வழிப்பறி செய்யும் வேடுவர்கள் உள்ளதை அறியலாம்.

பாலையில் சிற்சில இடங்களில் நீர் குறைவாய் உள்ள சுனைகள் இருக்கும். காட்டுமல்லிகை மலர்களும் இலைகளும் வீழ்ந்து அழுகிப்போயிருப்பதால் அந்நீர் அழுகல் நாற்றம் உடையதாய் இருக்கும். அதைவிட்டால் வேறு வழியில்லை யாதலின் வழிப்போக்கர் அதை வேகமாய் உட்கொள்கின்றனர். நீண்ட நேரம் நீரின்றி உலர்ந்துள்ள தொண்டைவழியே நீர் செல்லும் போது, 'தவக் தவக்' எனும் ஒரு வகை ஒலியெழுகிறது.

பாலையில், கொல்லன் உலைக்களம் போன்ற வெப்பம் மிக்க பாறைகள் எங்கும் உள்ளன. ஆறலை கள்வர் மறைந்திருந்து, அவ்வழிச் செல்வோரைக் கொன்று அவர்களிடமுள்ள பொருள்களைப் பறிக்கின்றனர். அவர்கள் கொல்வதால் தமக்குக் கிடைக்கப்போகும் புலாலை எதிர்நோக்கிப் பருந்துகள் மரக்கிளைகளில் காத்திருக்கின்றன.

காட்சி வருணனைகளில் குறுந்தொகைப் பாடல்கள் சிறந்து விளங்குகின்றன. கதிரவன் மேற்கில் மறைகிறான். இருள் மெல்ல மெல்லக் கவிகிறது. அகன்ற வானத்தே வளைந்த சிறகுடைய பறவைகள் கூட்டை நோக்கிப் பறக்கின்றன. தங்கள் குஞ்சு களுக்குக் கொடுப்பதற்கான இரையை அவை வாயிலே கவ்விக் கொண்டு, குஞ்சை நினைந்தனவாய் விரைந்து பறக்கின்றன.

ஞாயிறு பட்ட அகல்வாய் வானத்து
அளிய தாமே கொடுஞ்சிறைப் பறவை;
இறைஉற ஓங்கிய நெறியயல் மராஅத்த

பிள்ளை உள்வாய்ச் செரீஇய
இரைகொண் டமையின் விரையுமால் செலவே! (குறுந். 92)

மாலைக் காலத்தை இப்பாட்டு நம் கண் முன்னே கொண்டு வந்து நிறுத்துகிறது. குறுந்தொகை, வருணனை நிறைந்த இயற்கைக் களஞ்சியமாகவும் விளங்குகிறது.

செறிவுரைகள்

குறுந்தொகையில் பொருள் செறிந்த மொழிகள் பல உள்ளன. வாழ்வில் மக்கள் பொன்போல் போற்றத்தக்க உறுதிச் செய்திகள் பல உரைக்கப்பட்டுள்ளன.

1. இரப்போர்க்குக் கொடுத்தலும், இன்பங்களை நுகர்தலும் செல்வமில்லாத வறியவர்கட்கு இல்லை.

ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல். (குறுந். 63)

2. நல்குரவுடையோர் இன்பத்தை நுகர விரும்பினாலும் அஃது அவருக்குக் கிடைக்கமாட்டா. ஆதலின், அவருக்குத் துன்பமே மிஞ்சும்; பொருள் இல்லார்க்குப் போகம் இல்லை!

இல்லோன் இன்பம் காமுற் றாஅங்கு
அரிதுவேட் டனையால் நெஞ்சே! (குறுந். 120)

3. ஒவ்வொரு நாளும் இரப்போர்க்கு ஈதல் வேண்டும். இரப்போரைக் காணாமலும் அவர்க்கு உதவி செய்யாமலும் கழியும் நாள் வீண் நாளேயாம்! 'ஈதல் இசைபட வாழ்தலே' வாழ்க்கையின் ஊதியம்! (குறுந். 137)

4. செல்வம் நிலையாதது; புகழ் ஒன்றே நிலையானது. நீதி நிறைந்த நெஞ்சையுடையவன் பிறர்க்கு உதவி புரியப் பின்வாங்க மாட்டான். அவன், செல்வத்தைச் சேர்த்து வைக்காமல் பிறர்க்கு உதவுவதிலேயே செலவு செய்வான். (குறுந். 143)

5. கற்றறிந்து அடக்கமுடன் வாழ்பவர்கள் பொய்க்கரி கூற மாட்டார்கள். உயிரே போவதாயினும் உண்மையையே உரைப்பர்.

அறிகரி பொய்த்தல் ஆன்றோர்க்கு இல்லை. (குறுந். 184)

6. சான்றோர் தம்மைப்பற்றிப் புகழும்பொழுதே நாணுவர். அவ்வாறிருக்க அவர்களை இகழ்ந்தால் அதை அவர்கள் எவ்வாறு பொறுப்பர்?

.... சான்றோர்
புகழும் முன்னர் நாணுப
பழியாங்கு ஒல்பவோ காணுங் காலே? (குறுந். 252)

7. பொய்யை உண்மையைப் போலச் சொல்வதால் ஒரு பயனும் இல்லை.

....................வாய்போற்,
பொய்ம்மொழி கூறல்அஃது எவனோ? (குறுந். 259)

8. பெரியோர்களைக் கண்டால் எதிர்கொண்டு அழைத்தல், இன்சொற்கூறி வரவேற்றல், இருக்கை அளித்தல், களைப்புத் தீரப் பேணுதல் முதலியவை கடமையாகும் "சான்றோர் கண்ட கடனறி மாக்கள் போல" எனும் குறுந்தொகைத் தொடரால் இதனை அறியலாம். (குறுந். 265)

9. நம் வாழ்வு நிலையற்றது. கூற்றுவன் எப்பொழுது கொண்டுசெல்வான் என்று கூற முடியாது. ஆதலால், இளமை யிருக்கும்போதே இன்பத்தை நுகர்ந்து கழிப்பதுதான் நலம். (குறுந். 267)

10. எண்ணியதை நிறைவேற்றியவர்கள் இன்பம் அடைவார்கள். 'செய்வினை முடித்த செம்மல் உள்ளம்' என இது சிறப்பிக்கப்படுகிறது. (குறுந். 270)

11. தம் முன்னோர் தேடி வைத்துள்ள செல்வத்தைச் செலவழித்து வாழ்க்கை நடத்துவது வாழ்க்கையாகாது. முயற்சி செய்து, பொருளீட்டி வாழாமல் முன்னோர் பொருளைச் செலவழித்து வாழ்பவர்களின் வாழ்வு பிச்சையெடுத்து வாழ்வதைவிட இழிவானதாகும்.

உள்ளது சிதைப்போர் உளர்எனப் படாஅர்;
இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவு. (குறுந். 283)

12. இரக்கம் காட்டினால்தான் வாழ முடியும் என்னும் நிலையில் உள்ள வறியவர்கள்பால் இரக்கம் காட்டாமல் இருப்பது மிகவும் கொடுமையானது. (குறுந். 327)

13. மக்கள் வாழ்விலே துணையாய் நிற்பவற்றுள் முதன்மை யானது, நம்பிக்கை. முயற்சிக்கும் உழைப்புக்கும் முதற்காரணம் நம்பிக்கைதான். நம்பிக்கையற்றவர்களின் வாழ்க்கை சிறவாது. உயிர் வாழ்வதற்கு அடிப்படை நம்பிக்கைதான்.

வலியா நெஞ்சம் வலிப்ப
வாழ்வேன் தோழி! (குறுந். 341)

14. தம்மை விரும்பியிருப்பவர்களின் துன்பத்தைத் தீர்க்கும் பயனுள்ள செயலில் ஈடுபடாதிருப்பது பண்புடைமையாகாது. (குறுந். 342)

15. இரந்தவர்க்குக் கொடுத்த ஒரு பொருளை மீண்டும் திருப்பிக் கேட்பதைவிட உயிர் விடுவதே மேல்!

இடுக்கண் அஞ்சி இரந்தோர் வேண்டிய
'கொடுத்தவை தா'என் சொல்லினும்
இன்னா தோ?நம் இன்னுயிர் இழப்பே! (குறுந். 349)

16. நீரிடத்தே நீண்டபொழுது விளையாடின் கண்கள் சிவந்துவிடும். இனிப்புடைய தேனாயினும் நெடுநாள் பருகியோர்க்குப் புளித்துவிடும். இஃது உலக இயற்கை.

நீர்நீடு ஆடின் கண்ணும் சிவக்கும்;
ஆர்ந்தோர் வாயில் தேனும் புளிக்கும். (குறுந். 354)

17. இந்நிலவுலகம் இடம் மாறினாலும், நீரினுள்ளே தீத் தோன்றினாலும், கடலே வற்றிப்போனாலும் மாறாததே உண்மையான நட்பாம். (குறுந். 373)

18. தீய சொற்களைக் கூறுவதற்குத்தான் அஞ்ச வேண்டும். நல்ல சொற்களைக் கூறுவதற்கு அஞ்ச வேண்டியதில்லை. நல்ல சொற்களை எப்போதும் யாரிடத்தும் சொல்லலாம்.

நன்மொழிக்கு அச்சம் இல்லை. (குறுந். 392)

19. தாய் சினந்து அடிக்கும்போதும் குழந்தை, 'அம்மா' என்று அலறி அத்தாயையே புகலடையும்.

தாய்உடன்று அலைக்கும் காலையும், வாய்விட்டு
அன்னாய் என்னும் குழவி..... (குறுந். 397)

20. தமது வீட்டிலிருந்து தமது முயற்சியால் சேர்த்த உணவை உண்ணுதல் இனிமையாகும். அது கூழேயாயினும் அமிழ்தத்தினும் மேலாம்.

தம்இல் தமதுஉண்டு அன்ன சினைதொறும்
தீம்பழம் தூங்கும் பலவு. (குறுந். 83)

பலாப்பழத்தின் இனிமைக்குத் தமது முயற்சியால் பெற்றுண்ணும் உணவு உவமையாக்கப்பட்டுள்ளது.

21. உயிருள்ளவரை உழைப்பது ஆண்கள் கடமை. அவர்கள் உழைப்புக்குத் துணை செய்து அவர்களுடன் ஒன்றுபட்டு வாழ வேண்டியது பெண்கள் கடமை.

வினையே ஆடவர்க்கு உயிரே; வாள்நுதல்
மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர். (குறுந். 135)

கடமை கணவனுக்கு உயிர்; மனைவிக்கோ அக்கணவனே உயிர்!

அரிய செய்திகள்

குறுந்தொகை வாயிலாகப் பண்டைத் தமிழர் வாழ்வியல் பற்றிய பல அரிய செய்திகளை அறிகிறோம்.

1. பண்டைக் காலத்தில் மணமாகாத பெண்கள் தம் காலில் ஒரு வகைச் சிலம்பு அணிந்திருந்தனர். மணமான பின்பு அதைக் கழற்றிவிடுவார்கள். இதற்கெனத் திருமணத்தில், 'சிலம்பு கழித்தல்' எனும் சடங்கு உண்டு. பெண்ணின் காலை நோக்கிய அளவிலேயே அவள் திருமணமானவளா அன்றா என்பதைத் தெரிந்து கொள்ளலாம். (குறுந். 7)

2. காதலி விளையாடப் பதுமைகள் செய்து கொடுப்பது அக்காலக் காதலனின் வழக்கம். பதுமைகள் பசுமையான கோரைப் புல்லால் செய்யப்படும். (குறுந். 276)

3. மலர்களையும் தழைகளையும் தொகுத்து ஆடையாய்த் தரித்துக்கொள்வது பெண்களின் வழக்கம். (குறுந். 342)

4. சுவரில் கோடுகள் இட்டு, அவற்றை எண்ணிப் பெண்கள் நாள் கணக்குப் பார்ப்பார்கள். (குறுந். 358)

5. விழாக் காலங்களில் பெண்கள் கைகோத்துத் துணங்கைக் கூத்து ஆடுவார்கள். (குறுந். 31)

6. கூந்தலில் உள்ள எண்ணெய், சிக்கல் ஆகியவற்றைப் போக்குவதற்காக மகளிர் களிமண்ணைத் தேய்த்துக் குளிப்பது வழக்கம்.

கூழைக்கு எருமணம் கொணர்கம். (குறுந். 113)

7. கருவுற்ற மகளிர் புளிப்பை விரும்பி உண்பர்.

பசும்புளி வேட்கைக் கடுஞ்சூல் மகளிர். (குறுந். 287)

8. பெண்கள் பத்துத் திங்களே கருக்கொண்டிருப்பது இயல்பு. சிலர் பன்னிரண்டு திங்கள் கருவுற்றிருப்பதும் உண்டு.

முந்நால் திங்கள் நிறைபொறுத்து அசைஇ. **(குறுந். 287)**

9. குறப்பெண்கள் தினைப்புனங்களில் படியும் கிளிகளைக் குளிர் என்னும் கருவியை இசைத்து ஓட்டுவர்.

படுகிளி கடியும் கொடிச்சிகைக் குளிரே
இசையின் இசையா இன்பா ணித்தே! **(குறுந். 291)**

மூங்கிலை வளைத்து, அதிலே நரம்பைக் கட்டி, விரலால் தெரித்து ஓசையெழுப்பும் கருவிக்குக் 'குளிர்' என்பது பெயர்.

10. குறி கூறும் பெண்கள் வெண்மையானதும் கூர்மை யுடையதுமான சிறு கோலைக் கையிலே கொண்டிருப்பார்கள். அவர்களை, "வெண்கடைச் சிறுகோல் அகவன் மகளிர்" எனக் குறுந்தொகை குறிப்பிடுகிறது. (குறுந். 298)

11. வண்ணாத்தி துணிகட்குக் கஞ்சிப்பசையூட்டித் துவைத்து அழுக்கைப் போக்குவாள். (குறுந். 330)

12. விளையாடுவதற்கெனத் தச்சர்களால் செய்யப்பட்ட குதிரைகள் பூட்டப்பட்ட சிறிய மரத்தேர்களை இளஞ்சிறார்கள் இழுத்து விளையாடி மகிழ்வர்.

தச்சன் செய்த சிறுமா வையம்
ஈர்த்து இன்புறூஉம் இளையோர். (குறுந். 61)

13. புலிப்பல் கோத்துச் செய்யப்பட்ட ஒருவகை அணியைக் குழந்தைகளின் மார்பில் அணிவிப்பர். இது புலிப்பல் தாலி எனப்படும். இவ்வணிகலனை அணிந்த குழந்தைகள், 'புலிப்பல் தாலிப் புதல்வர்' எனக் குறிக்கப்பெறுகின்றனர். (குறுந். 161)

14. வீடுகளில் வெளியில் யாரும் விருந்தினர் தங்கியிருப்பரோ என ஆராய்ந்து .வினவிய பின்னரே கதவடைப்பது வழக்கம். (குறுந். 118)

15. நாழிகைக் கணக்கர் இரவில் உறங்காது, நாழிகையை அறிந்து, அதனை மணியோசையின்மூலம் ஊரார்க்கு அறிவிப்பர். (குறுந். 261)

16. தண்ணீரில் வாழ்கின்ற மகன்றில் பறவைகள், ஆணும் பெண்ணும் எப்போதும் பிரியாமல் இணைந்து வாழும் இயல்புள்ளவை. இணைபிரியாமல் நீரில் செல்லும் அப்பறவைகள், எதிர்ப்படும் பூவால் சிறிது நேரமே விலக நேர்ந்தாலும், அச்சிறு காலப் பிரிவையும் பல ஆண்டுப் பிரிவுபோலக் கருதி அவை துன்புறுமாம்.

பூஇடைப் படினும் யாண்டு கழிந்தன்ன
நீர்உறை மகன்றில் புணர்ச்சி. (குறுந். 57)

17. யானைகள் கூட்டமாய்ப் போகும் போது வலிமையுள்ள ஆண்யானை ஒன்று அக்கூட்டத்தை முன் நின்று நடத்திச்செல்லும். (குறுந். 180)

18. மதங்கொண்ட யானையின் மத்தகத்திலே வாழைக் குருத்தினால் தடவினால் மதம் தணியும்.

சோலை வாழைச் சுரிநுகும்பு இனைய
அணங்குடை இருந்தலை நீவலின், மதன்அழிந்து
மயங்குதுயர் உற்ற மையல் வேழம். (குறுந். 308)

19. இரு கோழிகள் சண்டையிடத் தொடங்கினால் ஆத்திரத்துடன் ஏதாவதொன்று மடியும்வரை தாக்கிக்கொள்ளுமே தவிர இடையில் அவை சண்டையை நிறுத்தா. யாராவது விலக்கினால் மட்டுமே கோழிப்போர் நிற்கும்.

உய்த்தனர் விடாஅர் பிரித்துஇடை களையார்
குப்பைக் கோழித் தனிப்போர் போல. (குறுந். 305)

எனக் கோழிப்போரைப் பாடிய புலவர், குப்பைக் கோழியார் என்றே பெயர் பெற்றார்.

20. பாலை நிலத்திலே, வழிச்செல்வோரின் தாகத்தைத் தணிக்கும்பொருட்டு நெல்லி மரங்களை வளர்ப்பார்கள். இஃது ஓர் அறச்செயலாய்க் கருதப்பட்டது. (குறுந். 209)

21. தாகம் தணிய நெல்லிக்காயை உண்பர். நெல்லிக்காயை உண்டதும் நீர் அருந்தினால் இனிக்கும். "நெல்லிதின்ற முள்ளெயிறு தயங்க உணல்'' என்பது இப்பழக்கத்தை உணர்த்துகிறது. (குறுந். 262)

22. உகாய் மரத்தின் பட்டையை மென்று நீர்வேட்கையைத் தணிப்பர். (குறுந். 274)

23. அணங்கு தாக்கிய மகளிர்க்கு அந்நோய் நீங்க முருகனுக்குப் பூசை செய்வர். ஆட்டின் கழுத்தை அறுத்து, அவ்விரத்தம் கலந்த தினைப்பலியை வைத்து, நீரோடும் ஆற்றின் நடுத்திட்டிலே பல்வகை இசைக்கருவிகள் ஒலிக்க இப்பூசை நடக்கும்.

மறிக்குரல் அறுத்துத் தினைப்பிரப்பு இரீஇச்
செல்ஆற்றுக் கவலைப் பல்இயம் கறங்க
....
வேற்றுப்பெருந் தெய்வம் பலவுடன் வாழ்த்திப்
பேஎய்க் கொளீஇயள் இவள்எனப் படுதல்.... (குறுந். 263)

24. பண்டைத் தமிழ்நாட்டில் பார்ப்பனர்கள் இருந்தனர். அவர்கள் வேதம் கற்றவர்கள்; தவக்கோலம் பூண்டவர்கள். நார் உரிக்கப்பட்டு வெண்மையாய் விளங்கும் முருக்க மரத் தண்டைத் தோளில் தாங்கி, அதில் கமண்டலத்தைத் தொங்கவிட்டிருப்பர்; விரத உணவை உண்பர்.

பார்ப்பன மகனே பார்ப்பன மகனே
செம்பூ முருக்கின் நல்நார் களைந்து
தண்டொடு பிடித்த தாழ்கமண் டலத்துப்
படிவ உண்டிப் பார்ப்பன மகனே. (குறுந். 156)

25. பழந்தமிழ்நாட்டில் துறவிகள் இருந்தனர். அவர்களை அறிஞர்களென அனைவரும் மதித்தனர். அவர்கள் புலால் உண்ண மாட்டார்கள். குற்றமற்ற தெருவிடத்தே, நாய் இல்லாத வீட்டில் சென்று, ஒரே வீட்டில் கிடைக்கும் பிச்சைச் சோற்றை உண்பர்.

ஆசில் தெருவில் நாய்இல் வியன்கடைச்
செந்நெல் அமலை வெண்மை வெள்இழுது
ஓர்இல் பிச்சை ஆர மாந்தி.... (குறுந். 277)

பண்டைக் காலத்தில் புலால் உண்ணாதவர் வீட்டில் நாயும் கோழியும் காணப்படுவதில்லை. அவர்கள் இவற்றை வளர்க்க மாட்டார்கள். பிச்சை ஏற்போர்க்கு ஓரில்லிலேயே வயிறு நிரம்பக் கிடைக்கும். ஆதலின், 'ஓரிற்பிச்சை' எனப்பட்டது. இவ்வழகிய தொடரை யாத்த அருமை நோக்கி இப்பாடலை இயற்றிய புலவர் 'ஓரிற்பிச்சையார்' என வழங்கப்பட்டார்.

நம்பிக்கைகள்

பண்டைத் தமிழ்மக்கள் கொண்டிருந்த சில நம்பிக்கைகளையும் கொள்கைகளையும் அறிவதற்கும் குறுந்தொகை துணை செய்கிறது.

1. மறுபிறப்பு உண்டென்பது பழந்தமிழர் நம்பிக்கை. தலைவி தலைவனிடம், "இப்பிறப்பு ஒழிந்து மறுபிறப்பு நேர்ந்தாலும் நீதான் என் காதலனாய்ப் பிறப்பாய். நான்தான் உன் உள்ளத்திலே என்றும் குடி கொண்டிருக்கும் காதலியாய்ப் பிறப்பேன்" என்கிறாள்.

இம்மை மாறி மறுமை ஆயினும்
நீயா கியர்எம் கணவனை;
யான்ஆ கியர்நின் நெஞ்சுநேர் பவளே! (குறுந். 49)

2. "தலைமகளிடம் கொண்டுள்ள என் காதல் அழியக்கூடிய ஒன்றன்று. மறுபிறப்பிலும் தொடர்ந்து நிலைத்துப் பயன்தரும்" எனத் தலைவன் ஒருவன் குறிப்பிடுகிறான்.

மைஈர் ஓதி மாஅ யோள்வயின்
இன்றை யன்ன நட்பின், இந்நோய்
இறுமுறை எனஒன்று இன்றி
மறுமை உலகத்து மன்னுதல் பெறுமே! (குறுந். 199)

3. மறுபிறப்பைப் போலவே ஊழ்வினையிலும் தமிழர் நம்பிக்கை கொண்டிருந்தனர். காதல் மணத்திற்குக்கூட விதிதான் காரணம் என்று எண்ணினர். ஊழ்வினையே அவர்களைச் சந்திக்கச் செய்தது; காதலை வளர்த்தது என்பதே காதலர் துணிவு. (குறுந். 229)

4. சொர்க்கம், நரகம் என்னும் எண்ணமும் தமிழ் மக்களிடம் இருந்து வந்தது. நன்மை செய்தவர் சொர்க்கம் சென்று நலம் பெறுவர் என்றும், தீமை செய்தவர் நரகத்தில் கிடந்து உழல்வர் என்றும் நம்பினர். (குறுந். 292)

5. "இனிதுஎனப் படூஉம் புத்தேள் நாடே" என்பதால் தேவருலகம் இன்பம் நிறைந்த உலகம் என நம்பி வந்தனர் எனவும் தெரிகிறது. (குறுந். 288)

6. செங்கடம்பு மரத்திலே அச்சம் தரும் தெய்வம் குடிகொண்டிருக்கும்; அது கொடியவர்களைத் தண்டிக்கும் எனும் கருத்தும் இருந்து வந்தது.

மன்ற மராஅத்த பேஎமுதிர் கடவுள்
கொடியோர்த் தெறூஉம் என்ப! (குறுந். 87)

7. சகுனம் பார்க்கும் பழக்கமும் பண்டைத் தமிழகத்தில் இருந்தது. பச்சோந்தியைக் கண்டால் அது நல்ல சகுனம் என்று கருதினர். (குறுந். 140)

8. அகவன் மகளிர் ஆவேசம் கொண்டு, பாடிக் குறி சொல்வதுண்டு. (குறுந். 23)

9. வீட்டுக் கூரையின்மேல் காக்கை உட்கார்ந்து கரைந்தால் விருந்தினர் வருவர் எனும் நம்பிக்கை இருந்து வந்தது. புலவர் நச்செள்ளையார் 'விருந்து வரக் கரைந்த காக்கையைப்' பாடியதால் 'காக்கை பாடினியார்' என்று அடைமொழி கொடுக்கப்பட்டுச் சிறப்பாய் வழங்கப்படுகிறார்! (குறுந். 210)

10. தினை, நெல் முதலியவற்றை விளைவிப்போர் ஓர் ஆண்டின் விளைவினை முதலில் தெய்வத்திற்குப் படைத்த பின்னரே உண்பர். தெய்வத்திற்குப் படைப்பதற்கென வைக்கப்பட்டிருக்கும் பண்டத்தினைப் படைக்குமுன் யாரும் உண்ணக்கூடாது. உண்டால் அஃது எச்சிலாகிவிடும் என்றும், அதனால் தெய்வக் குற்றம் நேரும் என்றும் கருதினர்.

.... கடவுட் கிட்ட செழுங்குரல்
அறியா துண்ட மஞ்ஞை......
.... வெய்துற்று நடுங்கும்! (குறுந். 105)

11. 'அரவு நுங்கும் மதி' என்பதால் நிலவைப் பாம்பு விழுங்குவதாலேயே நிலவு மறைப்பு (சந்திர கிரகணம்) உண்டாகிறது எனக் கருதினர் எனத் தெரிகிறது. (குறுந். 395)

காதல் உள்ளம்

பண்பு நலஞ்சான்ற காதலர் உள்ளங்களைக் குறுந்தொகை சிறப்புற எடுத்தோதுகிறது.

பெண்கள் தம் மனத்தால் வரித்த காதலனையே என்றும் கணவராய்க் கொள்வர்; வேறொருவரை மணக்க மனம் கொள்ள மாட்டார்கள். (குறுந். 31)

காதலித்த பின்னர் உலகமே பரிசாய்க் கிடைப்பதாயினும் அதைக்காட்டிலும் காதலையே பெரிதெனக் கருதுவர்.

கடல்சூழ் மண்டிலம் பெறினும்
விடல்சூ ழலன்யான் நின்னுடை நட்பே! (குறுந். 300)

என்பது காதலன் ஒருவனின் உறுதியுரை. அதே போல் காதலி, காதலனுடன் தான் கொண்ட நட்பு உறுதியாகக் கட்டப்பட்ட தாகும்; வேறு எவராலும் பிரிக்க முடியாதது என்பதை,

.... துறைவனொடு
யாத்தேம்; யாத்தன்று நட்பே;
அவிழ்த்தற்கு அரிதுஅது; முடிந்துஅமைந் தன்றே (குறுந். 313)

எனக் குறிப்பிடுகின்றாள்!

காதலர், உடல் அளவாலே ஒருவரையொருவர் பிரிவரன்றி உள்ளத்தாலே எப்பொழுதும் பிரிதல் இலர். தலைவி, "நம் தலைவர் நம்மைப் பிரிந்து மிகவும் சேய்மையில் உள்ள நாட்டிடத்தே உறைபவராயிருந்தாலும் நம் நெஞ்சிற்கு மிகவும் அண்மையராகவே உள்ளார்."

நெடுஞ்சேண் நாட்டார் ஆயினும்
நெஞ்சிற்கு அணியர் (குறுந். 288)

எனத் தோழியிடம் தலைவி குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

காதலர் பிரிந்திருந்தாலும் ஒருவரையொருவர் மறக்க மாட்டார்; ஒருவர் நலத்தை மற்றவர் நாடியவண்ணமே இருப்பர். பொருள் தேடிச் சென்று மீளும் காதலன், வழியில் வீசும் வாடைக் காற்றிடம், "வாடையே! என் தலைவி, வீட்டிலே இருக்கிறாள். அவளை வருத்தாமல் காப்பாயாக" என வேண்டிக்கொள்கிறான் (குறுந். 235). தான் வருந்தினும் தன் துணை வருந்தக்கூடாதெனும் தண்ணளியை உணர்கிறோம்.

நெருஞ்சி மலர் ஞாயிற்றையே நோக்கி நிற்கும் தன்மை யுடையது; ஞாயிற்றின் ஒளியில் ஈடுபட்டு, அதன் இயக்கத்தோ டொத்துத் திரும்பும். அது போன்றே, தலைவியும் தலைவன் அன்பில் ஈடுபட்டு அவன் செயலோடே எப்போதும் ஒத்து இயங்குவள்!

.... ஓங்குமலை நாடன்
ஞாயிறு அனையன் தோழி!
நெருஞ்சி அனையஎன் பெரும்பணைத் தோளே! (குறுந். 315)

என்பது தலைவி கூற்று. தலைவன் போக்கே தலைவி போக்காம்!

மனைவி சமைத்துள்ள உணவைச் சுவையுள்ளது, இனிமை யானது என்று கணவன் சொன்னால் அதைவிட மனைவிக்கு

இனிமை தரத்தக்கது வேறெதுவும் இல்லை. கணவன் மகிழ்ந்துண்பதைக் காண்பதைத் தவிரப் பெண்ணுக்கு வேறு சிறந்த மகிழ்வு இருக்க முடியாது.

தான்துழந்து அட்ட தீம்புளிப் பாகர்
இனிதுஎனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே! (குறுந். 167)

கணவனின் நலமே தன் நலமாய்க் கருதும் அன்புள்ளம் மனைவியுள்ளம்.

உரைப்போக்கு

தமிழறிந்தார் அனைவருமே கற்றுணர்தற்கேற்ற வகையில் சாமி. சிதம்பரனாரின் உரை எளிமையானதாகவும் தெளிவான தாகவும் அமைந்துள்ளது. ஒவ்வொரு பாடலுக்கும் பாடல் எழுந்த சூழ்நிலை, அதற்கான விளக்கம், பாடலின் பொருள் ஆகியவற்றை முதலில் தந்துள்ளார். அதையடுத்துப் பாடல் தரப்பட்டுள்ளது. முன்னர் உள்ள விளக்கக் கட்டுரையைப் படித்த பின்னர்ப் பாடலைப் படிக்க நேர்வதால், பாடலின் முழுப்பொருளும் படிப்போர்க்குத் தெற்றென விளங்கும். பாடலின் கீழே பதவுரை தரப்பட்டுள்ளது. அதையடுத்துச் சுருக்கமாய் ஓரிரு அடிகளில் பாடலின் கருத்துத் தரப்பட்டுள்ளது. இறுதியில், பாடலில் உள்ள முக்கியத் தொடர்கள், சொற்கள், கருத்துகள் ஆகியவற்றுக்கு விளக்கம் சொல்லப்பட்டுள்ளது. பாடல் தலைப்பே பாடலின் உட்கருத்தை விளக்குவதாய் அமைகிறது.

துக்கத்தால் தூக்கம் இல்லை!
கனாக் கண்டேன் தோழி!
ஆண்மை தந்த அல்லல்!
யான் இங்கே, என் நலன் அங்கே!
தழைத்த சோலையில் தலைவியைக் காணலாம்!
இருந்தால் இன்பம், பிரிந்தால் துன்பம்!
வேப்பங் காயும் வெல்லக் கட்டி!

தலைப்புகள் கவிதை அடிகள் போல விளங்கிக் களிப்பூட்டுகின்றன. இந்நூலில் 41 பாடல்களுக்கு (75, 76, 77, 117, 118, 119, 147, 148, 149, 168, 169, 170, 171, 172, 173, 177, 178, 179, 211, 212, 213, 225, 226, 227, 228, 244, 245, 246, 272, 280, 281, 282, 292, 293, 294, 295, 296, 297, 352, 353, 354) உரை இல்லை. பேராசிரியர் எழுதாத இருபது பாடல்களுக்கு நச்சினார்க்கினியர் உரை கண்டார். அதே போல் சாமி. சிதம்பரனார் உரையில் விடுபட்ட 41

பாடல்களுக்கும் தக்காரைக்கொண்டு அவர் போக்கிலேயே உரை கண்டு, அடுத்த பதிப்பில் சேர்க்க வேண்டுமென்பது என் விழைவு. உரையிடையே அவர் சில நிகழ்ச்சிகட்கு விளக்கம் தந்து செல்வது மிகவும் சிறப்பாய் உள்ளது. சில காட்டுகள் :

திருமணம்

பண்டைத் தமிழர் திருமணத்தில் வாத்தியங்கள் முழங்கின. உற்றார் உறவினர்கள் கூடி மணமக்களை ஊரார்க்கு அறிவிக்கும் வகையில் சில சடங்குகளையும் செய்தனர். இதைப் 'பறைபடப் பணிலம் ஆர்ப்ப' எனும் தொடர் உணர்த்துகிறது. (பக். 46)

வயது முதிர்ந்தோரைப் பெண் கேட்க அனுப்புவார்கள். அம்முதியோர் கையில் தடியுடன் தலையில் தலைப்பாகை அணிந்திருப்பர். பெண் கேட்க வரும்போது எல்லாம் நன்மையாய் முடியட்டும் என்னும் கருத்தில், 'நன்று நன்று' எனச் சொல்லிக் கொண்டே வருவார்கள். அவர்களை வரவேற்போரும், 'நீங்கள் வந்த நாள் நன்னாள்' எனச் சொல்லி வரவேற்பார்கள். இத்தகைய வாழ்த்தும் வரவேற்பும் காரியம் நிறைவேறும் என்பதற்கான அறிகுறிகள். (பக். 355)

தான் காதலித்த பெண்ணை உறவினர் மணம் செய்து கொடுக்க மறுத்தால் நீதிமன்றத்திலே வழக்கிட்டு அப்பெண்ணைப் பெறும் உரிமை காதலனுக்கு இருந்தது. (பக். 585)

உடன்போக்கு

பெற்றோர் தமது மணத்துக்கு இடையூறாய் இருந்தாலும் தமது காதல் ஒழுக்கம் ஊராருக்குத் தெரிந்து, அவர்களால் பழி கூறப்பட்டாலும், காதலர் இருவரும் ஒருவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் புறப்பட்டுவிடுவார்கள். அவ்வாறு புறப்பட்ட செய்தியை ஊராரும் உற்றார் உறவினரும் அறிந்து அவர்கள் செய்தது சரியென ஒப்புக்கொள்வர். தலைவியை இப்படி அழைத்துச் சென்ற தலைவன், சடங்குகளுடன் மணம் புரிந்து கொள்வதும் உண்டு; அன்றி அப்படியே இணைந்து இல்லறம் நடத்துவதும் உண்டு. இதுவும் கற்பு மணமேயாம். (பக். 24 & 25)

பொருள் தேடல்

மணம் புரிந்துகொண்டபின் தனிக் குடித்தனம் செய்வது பண்டைத் தமிழர்கள் வழக்கம். கூட்டுக் குடும்ப முறையைத் தமிழர் பின்பற்றவில்லை. குடும்பம் நடத்தப் பொருள் வேண்டுமன்றோ? ஆதலின், மணம் புரிந்துகொள்வதற்கு முன்போ, மணம்

புரிந்துகொண்ட பின்போ பொருள் தேடப் போவது வழக்கம். (பக். 19 & 20)

உழைக்காமல் பிறர் செல்வத்தைக்கொண்டு வாழும் வழக்கம் பண்டைத் தமிழகத்தில் இல்லை. இக்காலத்தைப்போலப் பெற்றோர் பிள்ளைகட்குப் பொருளீட்டி வைப்பது என்ற முறைகூட அக்காலத்தில் இருந்ததில்லை. வயது வந்த ஒவ்வொருவனும் தான் வருந்திச் சம்பாதித்த செல்வத்தைக் கொண்டே வாழ்வு நடத்தி வந்தான். (பக். 168).

செல்வம் எளிதில் கிடைப்பதன்று; முயற்சியினால்தான் கிடைக்கும். ஆண்கள் அருஞ்சுரம் பலவற்றைக் கடந்து, வேறு நாடுகளுக்குச் சென்று, பொருளீட்டிக் கொண்டுவந்த பிறகுதான் தாம் காதலித்த கன்னியரைக் கடிமணம் புரிவர்; மணம் புரிந்துகொண்ட பின்பும் மனைவியைத் தனியே விட்டுப் பொருள் தேடப் புறப்படுவர். (பக். 247)

பொருள் தேடப் புறப்படுவோர் பெரும்பாலும் வேனிற் காலத்தில்தான் புறப்படுவார்கள். கார் காலம் வருவதற்கு முன்பே திரும்பிவிடுவார்கள். சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி ஆகிய மாதங்கள் வேனிற்காலம். ஆவணி, புரட்டாசி ஆகிய மாதங்கள் கார் காலம். இல்லறம் நடத்துவோர் நான்கு மாதங்கள் பொருள் தேடப் பிரிந்து, எட்டு மாதங்கள் இல்லாளுடன் பிரியாமலிருந்து இன்புறுவர். (பக். 260)

ஆசிரியர் முடிவுகள்

தமக்குச் சரியெனத் தோன்றிய சில கருத்துகளைச் சாமி. சிதம்பரனார் தம் உரையில் ஆங்காங்கே கூறிச் செல்கிறார். சில இடங்களில் இன்றைய நோக்கிற்கேற்பவும் பொருள் கண்டுள்ளார்.

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி" எனத் தொடங்கும் குறுந்தொகைப்பாடலை, "நெற்றிக்கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே" என நக்கீரர் வாதிட்ட கதைக்கு அடிப்படையாய்ச் சொல்வர். கூந்தலுக்கு இயற்கை மணம் உண்டா எனும் பாண்டிய மன்னனின் ஐயமே இப்பாடல் எழுந்ததற்குக் காரணம் எனக் கூறுவர். நக்கீரர் கதையோடு குறுந்தொகைப்பாடலை இணைப்பது பொருத்தமற்றது எனச் சிதம்பரனார் சிறப்பாகச் சுட்டிக் காட்டுகிறார். (பக். 10-12)

துணங்கைக் கூத்துக்கு இன்றைய முறையில் விளக்கம் கூறுகிறார், உரையாசிரியர். "துணங்கைக் கூத்து பெண்கள்

கை கோத்தாடும் ஒரு வகைக் கூத்து. இத்துணங்கைக் கூத்தில் வீரர்களும் கலந்துகொள்வார்கள். அவர்கள் தமக்கு விருப்பமான பெண்களைத் தழுவிக்கொண்டு கூத்தாடுவார்கள். இன்று ஆண்களும் பெண்களும் கலந்து ஆடுகின்ற நடனம் மேல் நாட்டினரிடம் காணப்படுகின்றது. இதுபோன்ற ஒருவகை நடனம் பண்டைத் தமிழகத்திலும் இருந்தது என்பது தெரிகிறது" - இஃது உரையாசிரியர் விளக்கம் (பக். 730). இவ்விளக்கம் சரியா என்பது ஆய்தற்குரியது; தம் கூற்றை மெய்ப்பிப்பதற்கான சான்றுகளின்றி யூகத்தின் அடிப்படையில் இது சொல்லப்பட்டுள்ளது.

பாலையில் ஆறலை கள்வர் உறைதற்குப் பொருளாதார நோக்கில் காரணம் காட்டுவது சிறப்பாய் உள்ளது. பாலையில் உணவுப்பண்டங்கள் போதுமான அளவு கிடைக்காது. ஆதலால், அங்குள்ள மக்கள் வழிப்பறி செய்வதை வாழ்க்கையாய்க் கொண்டனர். இது பாலை நிலத்தார் இயல்பு. இதனால், "வறுமையுள்ள இடத்தில், பஞ்சமுள்ள இடத்தில் திருட்டு, கொலை முதலிய குற்றங்கள் நிலைத்து வளரும் என்ற உண்மையை உணரலாம்" என்பது ஏற்புடைய கூற்றேயாம். (பக். 48)

சிறுவர்கள் ஐம்படைத்தாலியை அணிந்திருந்த செய்தியைக் கூறவருமிடத்தில், ஆசிரியர், தமிழகத்தில் திருமணத்தில் தாலி கட்டும் வழக்கம் இருந்ததில்லை எனக் குறிப்பிடுகிறார். தமிழ் நாட்டில், 'பண்டைத் திருமணத்தில் தாலி உண்டா' என்பது வாதத்திற்குரிய ஒரு பொருளாய் இருந்துவருகிறது. சாமி. சிதம்பரனார், "தாலி என்பது குழந்தைகள் அணியும் நகை. பின்னாளில்தான் தாலி என்பது மனைவிக்குக் கணவன் கட்டும் ஓர் அணிகலனுக்குப் பெயராய் வழங்கிற்று. பண்டைக் காலத்தில் திருமணத்தில் தாலி கட்டும் வழக்கம் இல்லையென்பதற்கு இப்பாடலும் ஓர் ஆதரவு. ஐம்படைத்தாலி என்பது குழந்தைகள் அணியும் கலனையே குறிக்கும்" என்கிறார். (பக். 382)

பரத்தை வீடு சென்று வரும் தலைவன்பற்றிய பாடலுக்கு விளக்கம் கூறுமிடத்தில் அவர் கூறுகிறார் "பண்டைத் தமிழன் ஒரு வகையில் பெண்களை அடக்கித்தான் ஆண்டான். தன் விருப்பம்போல் பெண்கள் பலரை மணந்துகொண்டான். இதைத் தவிரப் பரத்தையர் - விலைமாதர் - பொது மகளிர் என்று சொல்லப்படும் பெண்களையும் நேசித்து வந்தான். இது பண்டைத் தமிழனுடைய வழக்கமாய் இருந்தது. ஆனால், அக்காலத்திலேயே பெண்கள் இவ்வழக்கத்தை வெறுத்தனர். ஒருவனைப்

பற்றியிருத்தலே பெண்கள் கடமை கற்பு - அறம் என்று கருதப்பட்டது. ஆண்கள் மட்டும் இந்த அறத்திற்கு விரோதமாய் நடந்துவந்தனர். ஆயினும், எந்தப் பெண்ணும் தன் கணவன் பரத்தையர்பால் நேசம் கொண்டதை விரும்பவில்லை; தன் காதலன் பரத்தையர் வீட்டுக்குப் போய் வந்தான் என்று தெரிந்தால் போதும், அவன்மீது சினந்துகொள்வாள்; அவனிடம் முகம் கொடுத்தும் பேசமாட்டாள்; அவனுடைய நடத்தையைக் கண்டிப்பாள். இது வழக்கமாய் ஒவ்வொரு வீட்டிலும் நடந்து வந்தது" (பக். 450). கற்புநிலை என்று சொல்ல வந்தால் அதை ஆண் பெண் இருவர்க்கும் பொதுவாய் வைக்க வேண்டுமெனும் கருத்தை ஆசிரியர் இங்கே வலியுறுத்துகிறார்.

நலம் பெறுவோமாக

புலவர் பெருமக்களால் பெரிதும் போற்றப்படும் குறுந்தொகையை அனைவரும் படித்துச் சுவைத்துப் பயன்கொள்ளும் வகையில் எழுந்துள்ள இவ்வுரைநூலைத் தமிழுலகு நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். திரு. சாமி. சிதம்பரனார் தொடர்கட்டுரைகளாய் எழுதிச் சென்றிருந்த இதனை அவர்தம் துணைவியார் திருமதி சிவகாமி சிதம்பரனார் அச்சில் கொண்டுவருகிறார்கள். தம் கணவரின் சமுதாய, இலக்கியப்பணிகளை அவர் வழியிலேயே நின்று தொடர்ந்து ஆற்றி வருகின்ற அன்னை சிவகாமி சிதம்பரனார் பெரிதும் பாராட்டுக்குரியவர். சிதம்பரனாரின் 'குறுந்தொகைப் பெருஞ் செல்வத்தைத்' துய்த்து நலம் பல பெறுவோமாக!

நூல் ஆக்கம்	அறிஞர் சாமி. சிதம்பரனார்
வகைமை	உரை விளக்கம்
வெளியீடு	திருமதி சிவகாமி சிதம்பரனார். (1983)

22

பட்டுக்கோட்டையார் பாடல்கள்

திரைப்படங்களில் பாரதியார், பாரதிதாசன் பாடல்களுக்கு இசையமைத்துப் பயன்படுத்தியபோது நாட்டு விடுதலை உணர்வு, சமுதாயச் சிந்தனைகள்பற்றிய கருத்துகள் நல்ல தமிழில் நம் காதுகளில் ஒலிக்கக் கேட்டோம். அவர்களையடுத்துத் திரைத்துறைப் பாடல்களில் மூன்று முக்கியத் திருப்பங்கள் ஏற்பட்டன. சீர்திருத்த - பகுத்தறிவுப் பாடல்களை எளிய இனிய தமிழில் உடுமலை நாராயணக்கவி எழுதினார்; காதல், வாழ்வியல், தத்துவப் பாக்களைப் பண்டை இலக்கியப் பாங்கில் பாடியளித்தார், கவிஞர் கண்ணதாசன். தொழிலாளர் உயர்வையும், பொதுவுடைமைக் கொள்கைகளையும் கவிஞர் பட்டுக்கோட்டை கலியாணசுந்தரத்தின் பாடல்கள் முதன்மைப்படுத்தி ஒலித்தன.

கலியாணசுந்தரம் பட்டுக்கோட்டையில், மிக எளிய வேளாண்மைக் குடும்பத்தில் பிறந்தவர்; இளம் வயதிலேயே துன்பங்களால் சூழப்பட்டவர்; 29 ஆம் வயதுவரை வாழ்ந்த அவர், தோழர் ப. ஜீவானந்தம் சொல்வதுபோல, தம் வாழ்வில் 17 தொழில்களில் ஈடுபட்டிருந்தவர்; பொதுவுடைமைக் கட்சியில் பங்கு கொண்டு அருந்தொண்டாற்றியவர்; பாவேந்தர் பாரதிதாசனிடம் உதவியாளராய்ப் பணியாற்றித் தன்மானக் கருத்துகளை நன்கு உணர்ந்தவர். ஆதலின், அவருடைய பாடல்களில் தொழிலாளர் முன்னேற்றம், பொதுவுடைமைக் கொள்கைகள், தன்மானக் கருத்துகள் ஆகியன இயல்பாகவே இடம் பெற்றுள்ளன. ஆயினும், கலியாணசுந்தரம் தொழிலாளர் கவிஞராகவும் பொதுவுடைமைக் கவிஞராகவும் முன்னிலைப் படுத்தப்படுகிறார்.

கவிஞர் கலியாணசுந்தரம் மிகக்குறைந்த வயதுக் காலமே வாழ்ந்திருந்தார். அதற்குள்ளாக அவர், தம் உள்ளத்தே முகிழ்த்த கருத்துகளையெல்லாம் அணையுடைத்த வெள்ளம்போலப் பெருக்கெடுத்து ஓடச் செய்திருக்கிறார். பட்டுக்கோட்டையார்

என்றாலே தம்மையே குறிக்குமளவில் கவிஞர் கலியாணசுந்தரம் தம் பெருமையை உயர்த்திக்கொண்டுள்ளார். பொது மேடைகட்கும், நாடகங்களுக்கும், திரைப்படங்களுக்குமே இவர் பெரும்பான்மையான பாடல்களை எழுதியமையால் அவை இசைப்பாடல்களாகவே அமைந்தன. எளிய நடை, உள்ளத்தைப் பிணிக்கும் ஆற்றல், உணர்ச்சிக் கொந்தளிப்ட, ஆகியவற்றின் இணைப்பே பட்டுக்கோட்டை கலியாணசுந்தரத்தின் பாடல்கள்.

முன் எவரும் சொல்லாத வகையில்...

பட்டுக்கோட்டையார் உழவர் குடும்பத்தைச் சார்ந்தவராத லாலும், உழவுத்தொழிலில் நேரடியாய் ஈடுபட்டவராதலாலும், அவர்கள் முன்னேற்றங்காண வேண்டுமெனும் தணியா ஆர்வமுடையவராதலாலும் அவருடைய உவமைகள் பெரும்பாலும் உழவுச்சூழலையே கொண்டிருப்பனவாய் அமைந்திருக்கக் காண்கிறோம்.

ஆற்றோரம் மேவும் அடர்சோலை போல
படர்காத லாலே பலன்காணுவோம்[1]

◆

மடைதாண்டி விழுந்த வாளைமீன் போல்
வள்ளி துள்ளி வரப்பில் குந்தினள்![2]

◆

அவன் ஏருலே கட்டின மாடுக போல
இணைஞ்சு வாழலாம் – நாம
இணைஞ்சு வாழலாம்!
அவள் புளிச்ச சேறுல நட்ட நாத்துப்போல
செழிக்க வாழலாம் – குடும்பம்
செழிக்க வாழலாம்.[3]

◆

வாழைத்தோட்டம் போல்தழைத்து
மங்கலமாய் வாழ்வாரு![4]

◆

மாறாத அன்பாலே பாரிலே
வளர்மூங்கி லைப்போல நாமும் வாழுவோம்.[5]

1. பட். பாடல், படம் படித்த பெண், 1954
2. மேலது, ஜனசக்தி, 17-7-55
3. மேலது, படம் பாசவலை, 1956
4. மேலது, கற்புக்கரசி, 1956
5. மேலது, தனிப்பாடல், 1959

வாளை மீன், அடர்சோலை, ஏரிலே கட்டப்பட்ட மாடுகள், வாழைத் தோட்டம், வளர்மூங்கில், புளித்த சேற்றில் நட்ட நாற்று ஆகியவை உழவர்களோடு தொடர்புடையவை. அவை கவிஞருக்கு உவமப் பொருள்களாகியுள்ளன. அடர்ந்த சோலையின் நிழல் இடைவெளியேதுமின்றிக் குளிர்ச்சி மிகுந்திருப்பதுபோலக் காதலும் இடையறவின்றி இனிப்புடையதாயிருக்க வேண்டும் என உவமை விளக்கம் பெறுகிறது. புளித்த சேற்றிலே நட்ட நாற்று செழித்து வளரும் என்னும் உழவுத்தொழிலுண்மை புலப்படுத்தப்பட்டுள்ளது. வாழையடி வாழையெனத் தொடர்ந்தும், மூங்கிலைப் போல் ஒருவர்க்கொருவர் பிடிப்புடனும் வாழவேண்டும் என்பதும் உணர்த்தப்படுகிறது.

அறிந்த செய்திகளேயாயினும் பட்டுக்கோட்டையார் உவமைகளைத் தனித் தன்மையோடு, முன் எவரும் சொல்லாத வகையில் சொல்லுகிறார்.

> பெரும்வெயிலால் வண்டல்நிலம் வெடிப்ப தைப்போல்
> பிளவுபட்டுப் பிளவுபட்டு[1]

மக்கள் வாழ்கின்றனரே என வேதனைப்படுகிறார்.

ஒருவன் கேட்டது இன்பம்; கிடைத்ததோ துன்பம். எதிர்பார்த்தது நிழலை; ஆனால்; அடைந்ததோ வெயிலை என்பதை இஃது ஒத்ததாயிற்று.

வாழ்க்கைப்பாதை நேராய் அமையாது போனால் நேரிடுவது துன்பமே, திண்டாட்டமே என்பதை,

> தண்டவாளம் விட்டிறங்கித் தத்தளிக்கும் எஞ்ஜினைப்போல்
> கொண்டவன் தனைமறந்து திண்டாடும்[2]

நிலைக்கு ஒப்பிடுகிறார்.

இராஜா தேசிங்கு,

> உறையி லிருக்கும் போர்வாள் போலே
> அறையி லிருந்தான்.[3]

வீரம் அடங்கியிருக்கிறது; வாள் வெளியேறின் அங்கு வீரம் விளையாடும்.

இராஜா தேசிங்கின் தோழன் முகம்மதுகான். அவன் பொன்நிற மேனியன். போரில் வெட்டுண்டு குருதியிலே வீழ்ந்தான். இதனைக் கவிஞர்,

1. பட். பாடல், ஜனசக்தி, 15-8-58
2. மேலது, படம் படித்த பெண், 1954
3. மேலது, ரங்கோன் ராதா, 1956

தங்கத் தூணொன்று குங்குமச் சேற்றில் சாய்ந்ததோ[1]

என்கிறார். குருதியைக் குங்குமச் சேறாக்கி, பொன்னிறமுடைய முகம்மதுகானைத் தங்கத் தூணாக்கி, குங்குமச் சேற்றில் விழும் தங்கத் தூண் எனக் கூறப்பட்டுள்ள உவமை தரும் இன்பம் உவமையிலா இன்பம்.

ஜாரின் கொடுங்கோன்மையால் மக்கள் படாத பாடு பட்டனர்; அடியுண்டனர்; உதையுண்டனர். அவர்கள் வாழ்வோ சின்னபின்னமாகிச் சிதைவுண்டது. மக்கள்,

செக்கிலிட்ட தேங்காய் போல்[2]

ஆயினர். மக்கள், 'நசுக்கப்பட்டனர்' என்பதற்கு இஃதொரு சரியான உவமையன்றோ?

பெண்ணின்,

நளினநடை அன்னம் போலே
நெளியும்இடை மின்னல் போலே
ஆடைகொடி பின்னல் போலே
அன்புமொழி கன்னல் போலே[3]

என உவமைகளைப் பட்டுக்கோட்டையார் அடுக்கிச் செல்லும் அழகே ஒரு தனியழகு!

பெரிதாக ஊதப்பட்டுள்ள பலூன்,

மாடிவீட்டுச் சீமானைப்போல் வயிறுபெருத்த[4]

தோற்றத்திலே இருக்கிறதாம்! மாடி வீட்டுச் சீமானின் வயிற்றின் தோற்றத்தைக் காட்டுவதிலே எத்துணை குத்தல், எத்துணை நையாண்டி!

அழிக்க முடியாத உணர்ச்சிகள்

தொழிலாளர் நிலை குறித்தும், அவர்கள் உயர்வு குறித்தும் திரைப்படப் பாடல்களில் உள்ளம் உருகப் பாடியவர்களுள் பட்டுக்கோட்டையார்க்கே முதலிடம் என்பதை யாரும் மறுக்க முடியாது! அவருடைய பாடலடிகள் மக்கள் மனத்திலே உணர்ச்சி பொங்க எழுதப்பட்டு, அழிக்க முடியா நிலையைப் பெற்றுள்ளன.

---

1. பட். பாடல், படம் : ரங்கோன் ராதா, 1956
2. மேலது, ஜனசக்தி, புரட்சிமலர், 7-11-54
3. மேலது, படம் : அமுதவல்லி, 1959
4. மேலது, தனிப்பாடல், 1954

தேனாறு பாயுது – வயலில் செங்கதிரும் சாயுது,
ஆனாலும் மக்கள் வயிறு காயுது[1]

இந்த அடிகளை உச்சரிக்காத வாயே தமிழ்நாட்டில் இல்லை எனலாம். உழைக்கும் மக்கள் உரிய பலனின்றி வாடுவதைக் காணும் கவிஞருள்ளம் வெதும்புகிறது.

நாடு செழிக்க உழைக்கும் எளியவர்
நாதியின்றி உள்ளம் நைந்திடக் கண்டேன்[2]

என ஏழை எளிய மக்களின் துன்பத்தைக் கண்டு கவிஞருள்ளம் நைந்திடுவதை இவ்வடிகள் நன்கு புலப்படுத்துகின்றன.

காடு வௌஞ்சென்ன மச்சான் – நமக்குக்
கையுங் காலுந்தானே மிச்சம்![3]

இந்த வினா மறைவது எந்நாள்? அந்நாளே நமக்கு நன்னாள்.

நாடு செழிக்க மாடாய் உழைப்பவர்கள் அரை வயிற்றுக் கஞ்சியுமின்றித் துடிக்கின்றனர். இனியும் அவர்கள் பொறுமை யோடிருக்கப்போவதில்லை; பொங்கி எழத்தான் போகிறார்கள்! அப்போது என்னாகும்? பட்டுக்கோட்டையார் பதிலளிக்கிறார்.

பொறுமை ஒருநாள் புலியாகும் – அதற்குப்
பொய்யும் புரட்டும் பலியாகும்

◆

பொறுமை ஒருநாள் பொங்கி எழுந்தால்
பூமி நடுங்குமடா!
கொடுமை புரியும் பாதகனை – அவன்
குறைகள் விழுங்குமடா![4]

ஏழை - முதலாளி, உள்ளவன் - இல்லாதவன், தாழ்ந்தவன் - உயர்ந்தவன் என்ற தன்மைகள் நிலவியிருப்பதை இனியும் இளைத்தவர்கள் கைகட்டிப் பார்த்திருக்க மாட்டார்கள்!

வசதி யிருக்கிறவன் தரமாட்டான் – அவனை
வயிறு பசிக்கிறவன் விடமாட்டான்[5]

இது பட்டுக்கோட்டையாரின் கணிப்பு. இதுவே பாரோரின் கணிப்பாகவும் மாறி வருவதால் ஏழைகளின் இருண்ட வாழ்வில்

---

1. பட். பாடல், படம் : ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, 1960
2. மேலது, நாடகம் : கண்மணிகள், 1954
3. மேலது, படம் : நாடோடி மன்னன், 1958
4. மேலது, இரத்தினபுரி இளவரசி, 1959
5. மேலது, கண் திறந்தது, 1959

விரைவில் புதிய ஒளி பரவும் எனப் பட்டுக்கோட்டையார் உறுதியாய் நம்புகிறார். எனவே,

ஏழைகளின் புதுஉலகம் தெரியுதடா! – நாம்
ஏமாந்து வந்தநிலை ஒழியுதடா![1]

எனப் பாடுகிறார். உழைக்கும் மக்கள் ஒன்றுசேர்ந்தால், ஏய்த்துப் பிழைக்கும் கூட்டம் இருந்த இடம் தெரியாமல் ஓடி மறையும்.

ஏமாத்தும் போர்வையிலே ஏழைகளின் வேர்வையிலே
எக்காளம் போடுற கூட்டம் – நாட்டில்
எக்காளம் போடுற கூட்டம் – மக்கள்
எதிர்த்துக்கிட்டா எடுக்கணும் ஓட்டம்[2]

என்பதையும் பட்டுக்கோட்டையார் சொல்லி வைக்கிறார்.

சிந்தனை வீச்சும் சொல்லாட்சியும்

பட்டுக்கோட்டையார் பொதுவுடைமை இயக்கத்தில் பணியாற்றியவர். அவ்வியக்கத்தினரின் நாடகங்களுக்குப் பாடல்கள் எழுதித் தந்தவர்; அந்நாடகங்களில் நடித்தவருங்கூட. அவர் பொதுவுடைமை இயக்கத் தோழர். அவருடைய உயிர்நாடியான பொதுவுடைமைக்கொள்கை அவருடைய பாடலெங்கும் பரவிக் கிடக்கின்றது.

சாலையில் பழுது நீக்கும் வேலை நடைபெறுகிறது. போக்குவரத்தை எச்சரிக்க அங்கொரு சிவப்புக்கொடி கட்டப்பட்டிருக்கிறது. சாலையின் பழுது நீக்கப்பட்டு மேடு பள்ளங்கள் நிரவப்பட்டுச் சமமாக்கப்படும். இதைக் காணும் கவிஞர்,

ஏற்றத் தாழ்வு இருக்குமிடம் எங்குமே – மாற்றம்
காணவே, பறக்கும் – செங்கொடி[3]

ஏற்றத் தாழ்வு சாலையில் மட்டுமன்று, எங்கே இருந்தாலும் அதைப் போக்க அங்கே செங்கொடி பறக்குமெனப் பொதுவுடைமைக் கட்சியின் கொடிப்பெருமையைப் பாடுகிறார்.

ஜார் எனும் கொடுங்கோலனை உருசிய மக்கள் வென்று வீழ்த்தினர். குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு, மேன்மையுறக் குடியரசு தோன்றியது.

---

1. பட். பாடல், படம் : வாழவைத்த தெய்வம், 1959
2. மேலது, படம் : எல்லோரும் இந்நாட்டு மன்னர், 1960
3. மேலது, தனிப்பாடல், 1954

பொறுமை யிழந்தனர் மக்களெ லாம்,மனம்
பொங்கி எழுந்தனர் எரிம லைபோல்;
உரிமை பறித்த உலுத்தர் எதிர்த்தனர்;
ஒருமித்த ஜனசக்தி வென்றது வென்றது[1]

மக்கள் சக்தி வென்றது என எக்களிப்புடன் கலியாணசுந்தரம் பாடிப் பரவசமடைகிறார். பொதுவுடைமை இயக்க ஏடான 'ஜனசக்தி'யின் பெயரைக் குறிப்பிட்டு அது, 'வென்றது வென்றது' என நினைக்கும்படியாகவும் இப்பாடலை அமைத்திருக்கிறார்.

உருசியாவில் லெனினும் ஸ்டாலினும் செய்த புரட்சியினாலேயே கொடுங்கோலாட்சி ஒழிந்து குடியாட்சி மலர்ந்தது.

அடக்குமுறைக் கஞ்சாத லெனின் ஸ்டாலின்
ஆரம்பித்த புரட்சியிலே அமைதி கண்டார்;
'நடத்துஎன்றார் சோவியத்தை' மக்கள்; அன்னார்
நட்டுவைத்த செம்பயிரும் நட்பும் வாழ்க![2]

மக்களாட்சி தோன்றியது என்பதை, 'செம்பயிர் நட்டு வைக்கப்பட்டது' என்கிறார். அச்சில் வந்த பட்டுக்கோட்டையாரின் முதல் கவிதையில் உள்ள இந்த அடிகளில் கவிஞர் தம், 'சிவப்புச் சிந்தனை'யைத் திறம்படச் செய்துள்ளார். சிவப்புப் பயிர் என்றும், செம்மையான பயிர் என்றும் இரு வகையில் எண்ணுவதற்கு இடமளிக்கிறது இச்சொல்.

எல்லார்க்கும் எல்லாம் என்னும் பொதுமை தோன்றி விட்டால் நாட்டில் பொல்லாமை எதுவுமே இராது.

கொடுக்கிற காலம் நெருங்குவதால் – இனி
 எடுக்கிற அவசியம் இருக்காது;
இருக்கிற தெல்லாம் பொதுவாய்ப் போனால்
 பதுக்கிற வேலையும் இருக்காது;
 ஒதுக்கிற வேலையும் இருக்காது![3]

மனிதரைப்போல் வம்புகள் வேண்டா

மக்கள் மதம், சாதி என்ற பெயர்களால் சிதறுண்டு கிடக்கின்றனர். ஒற்றுமையை வளர்ப்பதற்கு மாறாய் இவை வேற்றுமைக்கே வித்திடுகின்றன. பட்டுக்கோட்டையார் பல்வேறு காரணங்களால் வேறுபட்டுக் கிடக்கும் மனித இனம் ஒன்றுபட்டு வாழ வேண்டுமென வலியுறுத்துகிறார்.

---

1. பட். பாடல், நாடகம் கண்மணிகள், 1954
2. மேலது, ஜனசக்தி, 7-11-1954
3. மேலது, படம் : திருடாதே, 1960

ஓடஞ்சிபோன நமதுஇனம்
ஒண்ணாவந்து பொருந்தணும்[1]

அப்போதுதான் நாம் முன்னேற்றம் காணமுடியும்.

இயற்கையில் மரஞ்செடி கொடிகள், விலங்கினங்கள், பறவைகள் எல்லாம் தம்முள் வேற்றுமையின்றி ஒன்றுபட்டு வாழ்கின்றனவே!

மனிதரைக் காட்டிலும் மரமும் கொடியும்
வளரும் பயிரும் மாடும் பறவையும்
சேர்ந்து வாழுது; சிறந்து விளங்குது;
வீழ்ந்தாலும் எழுந்தாலும் வேற்றுமை யில்லே.[2]

ஆறறிவு பெற்றுள்ள மனிதன் இவற்றைக் கண்டேனும் திருந்திக்கொள்ளக்கூடாதா?

ஓங்கி உயர்ந்த மலையில் தோன்றும் அருவிகள் ஒன்று கலக்கும்போது வேற்றுமை பார்ப்பதில்லையே; ஒன்றாய்ச் சேர்ந்து கடலிலே சென்று கலக்கின்றனவே! மனிதனோ, சமுதாயம் எனும் பெருங்கடலில் அணைந்துகொள்ளவோ ஒன்றிவிடவோ மறுக்கிறானே! ஏன்?

உச்சி மலையிலே ஊறும் அருவிகள்
ஒரே வழியில் கலக்குது;
ஒற்றுமை யில்லா மனித குலம்
உயர்வும் தாழ்வும் வளர்க்குது![3]

ஒற்றுமையை வலியுறுத்தப் பல்வேறு எடுத்துக்காட்டு களைப் பட்டுக்கோட்டையார் எடுத்துக்காட்டுகிறார். பாவையர், பாவு ஓட்டிச் சித்திரக் கைத்தறிச் சேலைகளை நெய்கிறார்கள். பாவில் அத்தனை நூலும் ஒழுங்காய் இருந்தால்தான் அழகிய ஆடை கிடைக்கும்; ஒரு நூல் அறுந்து போனாலும் குளறுபடிதான்!

ஒற்றுமை யோடு அத்தனை நூலும்
ஒழுங்கா வந்தால் வளரும் – இதில்
ஒருநூ லறுந்தால் குளறும்.[4]

சாதியோ, மதமோ எதுவாய் இருந்தாலும் அது பாவினை இணைக்கும் ஊடை நூல்போல் ஒன்றுபடுத்த வேண்டும்! மாறாக, இன்று சாதியும் மதமும் நேர்த்தியான ஆடையை - ஒன்றுபட்ட சமுதாயத்தை - வெட்டித் துணிக்கும் கத்தரிக்கோல்களாய் அல்லவா விளங்குகின்றன?

1. பட். பாடல், படம் : அரசிளங்குமரி, 1957
2. மேலது, அமிர்தம், பொங்கல் மலர், 1959
3. மேலது, படம் : கன்னியின் சபதம், 1958
4. மேலது, புதையல், 1957

புதரில் மூங்கில்கள் ஒன்றையொன்று தழுவி வளர்கின்றன; எல்லாம் சேர்ந்து ஒரே வேர்ப்பிடிப்பில் உள்ளன; ஒன்றன் வளர்ச்சியை மற்றொன்று தடுப்பதில்லை. மனித குலமும் ஒரே வேர்ப்பிடிப்புக் கொண்டதாய் இருக்க வேண்டாவா?

ஓங்கி வளரும் மூங்கில் மரம்
ஒன்னையொன்னு புடிச்சிருக்கு;
ஒழுங்கா குருத்துவிட்டு
கெளைகெளையா வெடிச்சிருக்கு;
ஒட்டாம ஒதுங்கிநின்னா ஒயர முடியுமா? – எதிலும்
ஒற்றுமை கலைஞ்சுதுன்னா வளர முடியுமா? [1]

மல்லிகைப்பூவுக்கும் ரோசாப்பூவுக்குமிடையே, தம்முள் எப்பூ உயர்ந்தது என்னும் வாக்குவாதம் நடந்தது. ஒவ்வொரு பூவும் தான்தான் உயர்ந்தது என்று சொல்லவே, வாக்குவாதம் நீண்டது; முடிவுகாண முடியவில்லை. அவ்விரண்டும் தாமரை யிடம் சென்று,

தங்கச்சி தங்கச்சி, தாமரைத் தங்கச்சி,
எங்களுக் குள்ளே எவதான் சிறந்தவ,
எடுத்துச் சொல்லு தங்கச்சி!

என்று கேட்டன. தாமரை சொல்லியது. 'மலர்வனவெல்லாம் உதிர்வதுண்டு; மனிதரைப்போல வம்புகள் பேசி அழிந்திட வேண்டா' என்று அறிவுரை கூறி, சமாதானப்படுத்திவிட்டு, முடிவில்,

.... எல்லோரும் – ஒன்றாய்
இருக்கவேணும்! – அப்போதுதான்
உலவும் சமாதானம் – எங்கும் நிலவும் சமாதானம் [2]

என்று கூறியது. செடியிடம் உள்ளதாய்க் கவிஞர் காட்டும் நல்லறிவு மனிதரிடம் இல்லையே!

'காக்காய்க்கும் காக்காய்க்கும் கல்யாணமாம்' என ஒரு பாடல் தொடங்குகிறது. அதில் காக்கைகள், மனிதர்கள் தங்களைப் போல் ஒற்றுமையாய் வாழக் கற்றுக்கொள்ளாமல் ஒருவரை யொருவர் கொத்திக்கொள்கிறார்களே என்று கேலியாகப் பேசிக் கொண்டனவாம்! காக்காய்க் கல்யாணத்தில்,

வீட்டுக்கு விடு விருந்துகளாம்
வில்லுவண்டிக் கூண்டுமேலே ஊர்வலமாம்!
பழங்களும் விதைகளும் பரிசுகளாம் – அதன்
பரம்பரை மொழியிலே வாழ்த்துகளாம்!

---

1. பட். பாடல், படம் : எதையும் தாங்கும் இதயம், 1962
2. மேலது, மக்களைப் பெற்ற மகராசி, 1957

ஒற்றுமை யில்லாத மனிதரைப்போல் – அது
ஒண்ணஒண்ணு கொத்திக்கிட்டு ஓடலையாம்[1]

பட்டுக்கோட்டையாரின் அழகிய சொல்லோவியம் இது. 'காக்கையிடத்திலுள்ள ஒற்றுமை கண்டு, நாம் வாழ்க்கை நடத்தினால் நன்மையுண்டு' என்பதை நயமாகவும் நெஞ்சில் படும்படியாகவும் எடுத்துரைக்கிறார். காக்கைகள், 'பரம்பரை மொழியிலே வாழ்த்துகள் கூறின' என்று சொல்வதன்வாயிலாக நம் வீட்டுத் திருமணங்கள் நம் தாய்மொழியில்தான் நடக்க வேண்டும்; நம் பரம்பரை மொழியில்தான் வாழ்த்துகள் ஒலிக்க வேண்டும் என்னும் கருத்தையும் புலப்படுத்தியிருக்கிறார்.

மதக்கொடுமைகள் மாய வேண்டும் என்பதில் கவிஞர்க்குத் தனித்த அக்கறை உண்டு. செஞ்சிக்கோட்டை மன்னன் இராஜா தேசிங்கு. அவன் நண்பன் முகமத்கான்; வேற்று மதத்தவன். போரில் குண்டடிபட்டு முகமத்கான் இறந்தான். அப்போது இராஜா தேசிங்கு கூறுவதாகப் பட்டுக்கோட்டையார் பாடுகிறார் :

தனித்தனி மதத்தில் பிறந்த நமது
சரித்திர மேஒரு புதுமையடா!
இணைந்தநம் குரலின் ஒற்றுமை முழக்கம்
என்றும் அழியாத பெருமையடா![2]

என்றும் அழியாத பெருமையுடன் மதங்கள் ஒருமைக்குரல் எழுப்ப வேண்டுமென ஆசைப்படுகிறார். ஆனால், மதவெறியர் களின் படுபாதகச் செயல்களால், 'என்றும் ஒழியாத சிறுமைக் குரல்கள்' அல்லவா நாட்டில் கேட்டவண்ணம் இருக்கின்றன. இதற்கொரு முடிவே இல்லையா?

காதல் எழுப்பும் சாதி மறுப்பு

சாதி விளைக்கும் கொடுமைகள் எத்துணை எத்துணை! ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் காதலிக்கின்றனர்! சாதி பார்க்கும் பழங்காலப் பைத்தியங்கள் அந்த இளங்காதலை ஏற்குமா என்னும் வினா எழுப்பிக் கவிஞர், காதலின் இலக்கணமே சாதி மறுப்புத்தான் என்கிறார்.

காரணம் விளங்கியும் கதையேண்டி;
காதலின் இலக்கணம் இதுதாண்டி;
வீணர்கள் இட்டசாதி வேலிதாண்டி
விந்தைகள் புரிவதும் அதுதாண்டி![3]

1. பட். பாடல், படம் : பிள்ளைக்கனியமுது, 1958
2. மேலது, ரங்கோன் ராதா, 1956
3. மேலது, ரங்கோன் ராதா, 1956

வெற்றியோ, தோல்வியோ சாதியை எதிர்க்கும் சக்தி காதலுக்காவது இருக்கிறதே!

யாருமேலே கீறினாலும் இரத்தம் ஒண்ணுதானே![1]

அப்படியிருக்கப் பிறப்பிலே உயர்வு தாழ்வு கற்பிப்பது ஏன்?

இவ்வாறாகச் சாதிக் கொடுமை, மதவெறி, உயர்வு தாழ்வு, ஆண்டான் அடிமை என்னும் அனைத்து வேறுபாடுகளும் அழிய வேண்டும் - அழிக்கப்பட வேண்டும் என்பதைக் கவிஞர், வாய்ப்பு நேர்ந்த இடத்திலெல்லாம் வலியுறுத்தத் தவறியதே இல்லை!

பரம்பரைச் செல்வம் - வெட்கம்

பட்டுக்கோட்டையார் காதல் பாடல்களை மிகவும் சுவையாய் எழுதியுள்ளார். காதலியைக் காணும் காதலன் அவளை,

ஆடைகட்டி வந்த நிலவோ? – கண்ணில்
மேடைகட்டி ஆடும் எழிலோ?[2]

என்று புகழ்கிறான். அவள் ஆடை கட்டி வந்த நிலவு. காதலியைப் பற்றி மற்றவரும் பாடியுள்ளனர். ஆனால், அவளைக் காதலன் கண்ணிலே மேடை கட்டி ஆடுகின்ற எழில் என்பதாகப் பட்டுக்கோட்டையார் மட்டுமே பாடியிருக்கிறார். அவனுடைய கண்மேடையிலே எழில் ஆடுகிறதாம்! கற்பனையின் உச்சிக்கே இங்கே கவிஞர் சென்றுவிடுகிறார்.

காதலர் இருவரும் நல்ல இளம் பருவத்தினர். இருவருக்கும் ஆசை துடிக்கிறது; ஆனால், வெட்கம் தடுக்கிறது.

பருவமனசு ரெண்டும் துடிக்குது – ஆனா
பரம்பரை வெட்கம் வந்து இடிக்குது[3]

'பரம்பரை வெட்கம்' என்பதிலே உள்ள நயம் நம்மைச் சொக்க வைக்கிறது.

கூந்தல், மேகம் போன்றது; விழி, அம்பை ஒத்தது என்று கூறுவது மரபு. அதையே நயமேற்றி

மோகத் தென்றலில் ஆடும் கூந்தல்
மேகத் தோடு சிநேகம் – குறி
யாகப் பாய்ந்திடும் நாணப் பார்வைகள்
வீரன் கணையிலும் வேகம்[4]

எனப் பாடுகிறார்.

1. பட். பாடல், படம் : ஆளுக்கொரு வீடு, 1960
2. மேலது, அமுதவல்லி, 1959
3. மேலது, கையெழுத்துப்படி
4. மேலது, படம் : அமுதவல்லி, 1959

ஒருத்தி மற்றொருத்தியைக் கேட்கிறாள் 'என் முகத்திலே மஞ்ச புடிச்சிருக்கா?' அதற்கு மற்றவள், 'உன் மச்சானைக் கேட்டா தெரியுமடி' என்கிறாள்.

ஒருத்தி மாரியக்கா மாரியக்கா
மஞ்சப் புடிச்சிருக்கா – எம்முகத்திலே
மஞ்சப் புடிச்சிருக்கா?

மற்றொருத்தி : மரிக்கொழுந்து மரிக்கொழுந்து – உன்
மச்சானைக் கேட்டா தெரியுமடி – புது
வடிவும் அழகும் வடியுமடி – அதில்
புரியா விஷயமும் புரியுமடி[1]

அழகை மச்சான்தான் பாராட்ட வேண்டும்; அதிலேதான் ஒரு தனிச் சுகம் உண்டு' எனும் மரபுவழிப் பண்பாட்டை நாட்டுப்புறப் பெண்களின் உரையாடலிலே காட்டிவிடுகிறார்.

காதலி ஒளி மிகுந்தவள் என்று கூற வேண்டும். இங்குக் கவிஞர் கூறியிருப்பது சொல்லச் சொல்ல இனிப்பதாய் இருக்கிறது. காதலன் காதலியிடம்,

இல்லத்தில் நீயிருந்தால் இருள்வர அஞ்சுதடி;
மெல்லத் தமிழ்உனது சொல்லில்வந்து கொஞ்சுதடி![2]

கவிஞரின் தமிழ், நம் செவிகளிலும் உள்ளங்களிலும் வந்து கொஞ்சி விளையாடுகிறது என்பது உண்மையிலும் உண்மை.

காத்லனைப் பிரிந்திருக்கும்போது காதலியின் நிலை என்ன? கவிஞர் கூறுகிறார் :

எல்லாமே கசக்குதுங்க
ஈர மலரும் சுடுதுங்க[3]

"காதலன் வாராதபோது காதலிக்குப் பாலும் புளிக்கும்; பண்ணியங்களும் கசக்கும்; சந்தனக் கலவையும் சுடும்" எனப் பாடுவது உண்டு.

மடியில் மணக்கும் மதுரத்தேன்

இன்று குழந்தைகளாய் இருப்பவர்கள் வருங்காலத்தில் இந் நாட்டினை ஆளும் வாய்ப்புள்ளவர்களாவர். ஆகவே, அவர்கள் சரியான முறையில் வளர்க்கப்பட வேண்டும். பிஞ்சு உள்ளத்தில் பதியும் கருத்துகள்தாம் வாழ்வின் எந்த நிலையிலும் நிலைத்து

1. பட். பாடல், படம் : ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு, 1960
2. மேலது, தனிப்பாடல், 22-3-57
3. மேலது, படம் : தங்கப்பதுமை, 1956

நிற்கும். ஆகவே, வளரும் குழந்தைகளுக்கு வளமான கருத்துகளை வாரி வழங்கியிருக்கிறார், பட்டுக்கோட்டையார்.

தொட்டிலில் உறங்கும் குழந்தைக்குத் தாலாட்டிலேயே,

அப்பா அம்மா சொன்னதைக் கேளு;
அறிவு வந்ததும் சிந்திச்சுப் பாரு;
அலட்சியமா இருந்திடாதே சின்னத் தம்பி,
அதிகவேலை காத்திருக்குது உன்னை நம்பி![1]

என சிந்தனையைத் தூண்டிவிடுகிறார்.

குழந்தைகள் சுறுசுறுப்பாய் இருக்க வேண்டும். ஆதலால்,
சூரத் தமிழ்ப்பயலே, 'தொட்டில் உதைக்கையிலே'
'சோம்பல் அழிக'வென்று சொல்லிஉதை

எனச் சோம்பலை உதைத்து எறியச் சொல்லுகிறார்.

குழந்தைகளுக்கு ஆசிரியர் பாடம் நடத்துவதாய் இரு பாடல்கள் உள்ளன. ஒன்று, அகர வரிசையைச் சொல்லிக் காட்டுகிறது; மற்றொன்று, பெருக்கல் வாய்பாட்டினைக் கற்றுக் கொடுக்கிறது. ஒரொன்று ஒன்று.... பத்தொன்று பத்து எனும் அவ்வாய்பாட்டில் ஒவ்வோர் எண்ணுக்கும் ஒன்றாகப் பத்து முத்தான கருத்துகளைக் குழந்தைகளுக்குப் புரியவைக்கிறார். ஒன்று - உள்ள தெய்வம் ஒன்று; இரண்டு - ஆண் பெண் ஜாதி இரண்டு என இவ்வாறு கருத்துகள் தொடர்கின்றன. மேலும் அப் பாடலிலேயே,

பேதங்கள் தீர்த்து, பெருமையை உயர்த்து,
நீதியைக் காத்து, நேர்மையைக் காட்டு[2]

என்பன போன்ற சத்தான கருத்துகளையும் பிஞ்சு மனத்தில் வித்துகளாய்த் தூவிவிடுகிறார்.

குழந்தையை, 'ஆடி வரும் தேனே' என்றும், 'துறவிக்கும் வேட்கையைத் தரும் இன்பக் கட்டு' என்றும் புலவர்கள் போற்றுவர். பட்டுக்கோட்டையார் குழந்தையை,

மடியிலாடி மழலை பேசி மணக்கும் மதுரத்தேனே[3]

என்கிறார். மேலும்,

பட்டுப்போலே – தங்கத் தட்டுப்போலே – கரும்புக்
கட்டுப்போலே, கெடந்து கண்ணைப் பறிப்பான்[4]

என்றும் மனங்குளிரப் பாடுகிறார்.

1. பட். பாடல், படம் : தேடி வந்த தெய்வம், 1958
2. மேலது, மகனே கேள், 1963
3. மேலது, உலகம் சிரிக்கிறது, 1959
4. மேலது, கல்யாணப் பரிசு, 1959

பொக்கை வாய்க்கும் புகழ்சேர்க்கும் தமிழ்

தமிழின் உயர்வையும் சிறப்பையும் தக்கவாறு பட்டுக்கோட்டை பாடியிருக்கிறார்.

தாயால் வளர்ந்தேன்; தமிழால் அறிவுபெற்றேன் [1]

என்கிறார்.

மனைவியின் பேச்சு, கணவனுக்குத் தமிழாய் இனிக்கிறது.

சொல்லச் சொல்ல சுவையேறு தமிழில்
வள்ளியுரைக் கின்றாள் மச்சா னிடத்தில் [2]

தேன், சொட்டுச் சொட்டாய் விழுந்து சுவையேற்றுவதுபோலத் தமிழின் இனிமையைக் கவிஞர் எடுத்துரைக்கிறார்.

நாட்டுப்புறத்தினர் பழக்கவழக்கங்களை நன்கறிந்தவர், நம் கவிஞர். அவர்கள் பயணம்பற்றிப் பாடல் ஒன்று பாடப் பட்டுள்ளது.

நாட்டுப் புறத்தினர் நடக்கும் போது,
பாட்டும் பேச்சும், பலபல கதையும்,
வீட்டு நடப்பும், வேற்றார் விபரமும்,
கேட்டும், விளக்கியும் செல்வது வழக்கம்;
கிழவியின் தமிழ்வாய் சும்மா இருக்குமா?[3]

பயணக் குழுவிலிருக்கும் கிழவி ஒருத்தி பேசுகிறாள். அவள் வாயை, 'தமிழ் வாய்' என்கிறார், கலியாணசுந்தரம். பொக்கைவாய் கூட, தமிழால் பெருமை பெற்றுவிடுகிறது.

காதலன் காதலியைப் பிரிந்து சங்கடப்படுவதை,

தன்னந்தனி யாக நாளைக் கழிப்பது
சங்கட மன்றோ தமிழ்ச்சுடரே! [4]

என்றுரைக்கிறான். காதலி அவனுக்குத் தமிழ்ச்சுடராகிறாள்.

கடலை, 'தமிழ்க்கடல்' எனக் கூறிப் பெருமை கொள்கிறார்.

சந்தன மரக்கிளையும் தமிழ்க்கடலும் – தழுவி
சந்த மிசைத்துத் தென்றல் தவழ்ந்து வரும்.[5]

தமிழ்நாடு, ஆந்திரநாடு, கன்னடநாடு, மலையாளநாடு ஆகிய நான்கு நாடுகளின் ஆண்களும் பெண்களும் தத்தம் நாட்டின்

1. பட். பாடல், தனிப்பாடல்
2. மேலது, ஜனசக்தி 17-7-1955
3. மேலது, அமிர்தம், பொங்கல் மலர், 14-1-1959
4. மேலது, படம் : கல்யாணிக்குக் கல்யாணம், 1959
5. மேலது, கலை அரசி, 1963

பெருமை பேசுவதாய் ஒரு பாடல் உள்ளது. தமிழ்நாட்டுப் பெண், தமிழ் மக்கள்,

மதுரத்தமிழ் வழிந்து, உதிரத் தொடுகலந்து,
மனதில் துணிவுகொண்டு, வாழ்ந்தவர்[1]

எனப் பாடுகிறாள். வெங்குருதிதனில் கமழ்ந்து வீரம் செய்வ தாய்த் தன் மொழிப்பெருமை பேசுகிறாள். மற்ற நாட்டவர்கள் நீர்வளம், நிலவளம்பற்றிப் பாடுகின்றனரே தவிர, மொழி பற்றிப் பாடுவதாய்க் கவிஞர் எழுதவில்லை. தமிழின்றித் தமிழ் நாடு இல்லை; தமிழ்நாட்டை நினைக்கையிலேயே அமுதத் தமிழ் மொழிதான் முன் நிற்கிறது என்பதை இப்பாடல்வழி பட்டுக்கோட்டையார் உணர்த்துகிறார்.

குறளின் ஒளிச்சுடர்

தமிழ்ப்புலவர்களுள் திருவள்ளுவர்மேல் பட்டுக் கோட்டையார் தணியாத பற்றுக்கொண்டிருக்கிறார். திருக்குறள் வாழ்வியல் நூல். திருவள்ளுவர் வழியே நம் வாழ்க்கை வழி. அவ் வழியில் நடப்பதுவே அறிவுடைமை என்னும் கருத்துகளைப் பாடல்களில் கவிஞர் வெகு சிறப்பாய் எடுத்துரைக்கிறார்.

வள்ளுவன் வழியினிலே – இனி
வாழ்க்கை ரதம்செல்லுமே [2]

◆

மனிதரை மனிதர் சரிநிகர் சமமாய்
மதிப்பது நம்கடமை;
வள்ளுவப் பெருமான் சொல்லிய வழியில்
வாழ்வது அறிவுடைமை.[3]

திருக்குறள் நூலைப் படிப்பதுதான் சிறு குழந்தைகளின் முதல் வேலையாய் இருக்க வேண்டும் என அறிவுரை கூறப்படுகிறது.

திருக்குறள் நூலை
சிறந்தமுப் பாலை
கருத்துடன் காலை
படிப்பதுன் வேலை[4]

---

1. பட். பாடல், படம் : திருமணம், 1958
2. மேலது, தங்கப்பதுமை, 1956
3. மேலது, இரும்புத்திரை, 1960
4. மேலது, மகனே கேள், 1963

ஆசிரியை பிள்ளைகட்குப் பாடம் நடத்துகிறார். வினாவும் மறுமொழியுமாய் வகுப்பு தொடர்கிறது.

ஆனா ஆவன்னா அறிவை வளர்த்தவன்
பேரென்ன? சொல்லு[1]

என்கிறார், ஆசிரியை. சிறுவர்கள், 'வள்ளுவன்' என மறுமொழி சொல்லுகின்றனர்.

திருவள்ளுவரின் திருக்குறளை மனத்தில் கொண்டு, அக்குறட்கருத்துகளைத் தம் மொழியில் கவிஞர் பல இடங்களிலே பாடியிருக்கிறார்.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்[2]

என்பது திருக்குறள். இக்குறளையும், உழவு அதிகாரத்தில் உள்ள இதையொத்த திருக்குறட்பாக்களையும் மனத்தில் கொண்டு,

ஒருவன் : ஓதுவார் தொழுவாரெல்லாம்
உழுவார் தலைக்கடையிலே...
மற்றவன்: உலகம் செழிப்பதெல்லாம்
ஏர்நடக்கும் நடையிலே[3]

எனப் பட்டுக்கோட்டை பாடியிருக்கிறார்.

பின்னர் நினைந்து வருந்துவதற்குக் காரணமான செயல்களைச் செய்யக்கூடாது. ஒருகால் அப்படிச் செய்து விட்டாலும் மீண்டும் அதைச் செய்யாதிருப்பது நன்று எனும் பொருள் கொண்ட குறள் ஒன்று உண்டு.

எற்றென்று இரங்குவ செய்யற்க; செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று.[4]

இக்குறளை மனத்தில் கொண்டு பட்டுக்கோட்டையார் எழுதுகிறார் :

சிந்தித்துப் பார்த்து, செய்கையை மாத்து – தவறு
சிறிசா இருக்கையில் திருத்திக்கோ;
தெரிஞ்சும் தெரியாமே நடந்திருந்தா – அது
திரும்பவும் வராம பார்த்துக்கோ[5]

---

1. பட். பாடல், படம் : அன்பு எங்கே, 1958
2. திருக்குறள், 1033
3. பட். பாடல், படம் : அரசிளங்குமரி, 1957
4. திருக்குறள், 655
5. பட். பாடல், படம் திருடாதே, 1960

அஞ்சுவ(து) அஞ்சாமை பேதைமை; அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்[1]

என்னும் திருக்குறளை நம் கவிஞர்,

அஞ்சுவதில் அஞ்சி நின்றால் அச்ச மாகுமோ?[2]

என ஒரு கேள்விக்குள் அடக்கிவிடுகிறார்.

நெசவுத்தொழிலைக் குறிப்பிடும்போது, அது வள்ளுவர் செய்த மேன்மைத் தொழில் என்கிறார்.

வள்ளுவரின் வழிவந்த பெரும்பணி – வாழ்வில்
நன்மை யுண்டாகும்; தன்மானம் காக்கும்.[3]

திருவள்ளுவரைப் போலவே ஔவையாரையும் கவிஞர் பெரிதும் மதிக்கிறார். 'ஔவை சொல் கேள்' என்கிறது ஒரு பாடல்.

ஆதிமகள் அவ்வை சொல்லை
அலசிப் பார்த்தா மனசிலே,
நீதியென்ற நெல்விளையும்
நெருஞ்சி படர்ந்த தரிசிலே![4]

ஈராயிரம் ஆண்டுகளாய்த் தொடர்ந்து வரும் இலக்கிய மரபுக் கருத்துகள் பட்டுக்கோட்டையார் நெஞ்சிலும் ஆலம் விழுதுகளெனப் படர்ந்துள்ளன.

பாய வந்த புலியைத் தமிழ் மறத்தி முறத்தினாலே அடித்து விரட்டினாள் எனத் தமிழர் வீரம்பற்றிக் குறிப்பிடுவதுண்டு. இங்கே, புலியை விரட்டினாள் என்று மட்டுமே சொல்லப்படுகிறது. கலியாணசுந்தரம் காட்டுகின்ற மறத்தியோ, புலியை அடக்கி, ஏறி மிதித்து, அதன் பல்லைப் பிடுங்குகிறாள்.

வேங்கைதனைத் துரத்தி விளையாடும் மறத்தி,
வேலன் பேருசொல்லி வில்லை எடுப்பா,
மீறிவரும் புலியை வீரத்தினால் அடக்கி,
ஏறி மிதிச்சுக்கிட்டு, பல்லை எடுப்பா.[5]

பாண்டியன் நெடுஞ்செழியன், "என்னை எதிர்ப்பவர்கள், தூங்குகின்ற புலியை இடறிய குருடன்போல அழிந்தொழிவர்; அவர்கள் பிழைப்பதென்பது ஒருகாலும் முடியாது" என வீரவுரை பகர்கிறான்.

1. திருக்குறள், 428
2. பட். பாடல், படம் : ஆளுக்கொரு வீடு, 1960
3. மேலது, புதையல், 1957
4. மேலது, அரசிளங்குமரி, 1957
5. மேலது, அமுதவல்லி, 1959

துஞ்சுபுலி இடறிய சிதடன் போல
உய்ந்தனன் பெயர்தலோ அரிதே![1]

என அவன் வஞ்சினம் உரைப்பதாய்ப் புறநானூற்றுப்பாடல் மொழிகிறது. பட்டுக்கோட்டையார், புலியின் கடுங்கோபம் தெரிந்திருந்தும் அதன் வாலைப் பிடித்து ஆட்டுபவர் நிலை என்னவாகும் என எண்ணிப் பார்க்கச் சொல்கிறார்.

................புலியின்
கடுங்கோபம் தெரிஞ்சிருந்தும்
வாலைப்பிடிச்சி ஆட்டுது[2]

மணிமேகலைக் காப்பியத்தில் அரசமாதேவி, தன் அரண்மனைக்கு வந்த அறவண அடிகளை, 'அடிகளே! நீவிர் யாண்டு பல வாழ்ந்து முதுமை பெற்றிருந்தாலும், நாத் தளர்வில்லாதவராய் அறம் கூறி வருகிறீர்கள்! நீவிர் இன்னும் பல்லாண்டு வாழ்க' என வாழ்த்தி வரவேற்கிறாள்.

யாண்டுபல புக்கநும், இணையடி வருந்த,என்
காண்தகு நல்வினை நும்மையிங் கழைத்தது;
நாத்தொலை வில்லா யாயினும், தளர்ந்து
மூத்தவிவ் யாக்கை, வாழ்கபல் லாண்டு.[3]

இதே கருத்தை உள்ளடக்கியதாய் நம் கவிஞர் பாடல் ஒன்று அமைந்துள்ளது.

முடிகள் நரைத்தாலும் மூளை நரைக்காமல்
முன்னேறி வந்தவரே – ஐயா – உங்கள்
பொன்மேனி வாழியவே![4]

என்பது அப்பாடல். மணிமேகலைக் காப்பிய அடிகளுக்கு உரையாசிரியர்கள் விளக்கம் தரவேண்டும். பட்டுக்கோட்டையார் பாடலோ, எழுதப் படிக்கத் தெரியாதவர்களே என்றாலும், கேட்ட அளவிலேயே புரிந்துகொள்ளத்தக்க - உணர்ந்துகொள்ளத்தக்க - வகையில் எளிமையாய் இனிக்கிறது.

மக்கள் மொழியில் மக்களுக்காக

பேசும்பொழுதும் எழுதும்பொழுதும் பழமொழிகளை எடுத்துச் சொல்லி, விளக்கமுறச் செய்வது இயல்பு. மக்க ளிடையே பெருவழக்கில் இருந்துவரும் பழமொழிகளைப்

---

1. புறநானூறு, 73 : 8-9
2. பட். பாடல், படம் : சக்கரவர்த்தி திருமகன், 1957
3. மணிமேகலை, 24 : 97-100
4. பட். பாடல், படம், ஆளுக்கொரு வீடு, 1960

பட்டுக்கோட்டையார் தம் பாடல்களில் பல இடங்களில் பயன்படுத்தியிருக்கிறார்.

பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சுமா?[1]

◆

பிள்ளைப் பூச்சியை மடியில் கட்டிக் கொண்டு
புராணம் படித்தவன் போல[2]

◆

அவலை நினைச்சு உரலை உருட்டுவதுபோல[3]

◆

கொம்பொடிஞ்ச மாடு குதிச்சு என்ன புண்ணியம்?[4]

◆

கந்தைத்துணி ஆனாலும் கசக்கிக் கட்டிக்கிட்டா[5]

◆

பலசேலையுள்ள சீமாட்டி தினம் ஒன்றைக் கட்டிக்கலாம்[6]

(கூந்தலுள்ள சீமாட்டி அள்ளி முடிஞ்சிக்கலாம் என்பதைச் சற்று மாற்றி எழுதியுள்ளார்.)

வெந்த வீட்டிலே கெடைச்சது லாபமென
விழுந்து சுருட்டுறான்.[7]

மக்களுக்காக மக்கள் மொழியில் எழுதுவதால் மக்களுடைய பேச்சு வழக்கு அவருடைய பாடல்களில் பொருத்தமாய் வந்து இணைகிறது.

பாரதி வழியில்

பாரதியின் விடுதலை உணர்வு, பொதுவுடைமை நோக்கம், பெண் விடுதலை ஆகியவற்றில் பட்டுக்கோட்டையார் உள்ளம் பறிகொடுத்தவர். பாரதியைப்பற்றி அவர் பாடியுள்ள பாடலில் வீரம் கொப்புளிக்கிறது; அறிவு மணக்கிறது; சோர்வு அழிகிறது.

---

1. பட். பாடல், படம் : குலதெய்வம், 1956
2. மேலது, குலதெய்வம், 1956
3. மேலது, சௌபாக்கியவதி, 1957
4. மேலது, உலகம் சிரிக்கிறது, 1959
5. மேலது, ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, 1960
6. மேலது, ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, 1960
7. மேலது, தனிப்பாடல்.

பாரதிக்கு நிகர் பாரதியே, – மண்ணில்
யாரெதிர்த் தாலும், மக்கள்
சீருயர்த்தும் பணியில், (பாரதி)
பாதகம் செய்பவரைப் பாட்டாலே உமிழ்ந்தான்;
பஞ்சைகளின் நிலையைப் பார்த்துஉள்ளம் நெகிழ்ந்தான்.[1]

'பாரத ஜனங்களின் தற்கால நிலை' எனும் தலைப்புள்ள பாடலில் பாரதியார், நாட்டு மக்கள் நிலை கெட்டிருப்பதை எண்ணி நெஞ்சு பொறாமல், அவர்கள் அஞ்சியஞ்சிச் சாகும் அவல நிலையைப் புலப்படுத்துகிறார்.

நெஞ்சு பொறுக்கு திலையே, – இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்;
அஞ்சி யஞ்சிச் சாவார், – இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே;
வஞ்சனைப் பேய்கள் என்பார் – இந்த
மரத்தில் என்பார்; அந்தக் குளத்தில் என்பார்;
துஞ்சுது முகட்டில் என்பார், – மிகத்
துயர்ப்படுவார் எண்ணிப் பயப்படுவார்; (நெஞ்சு)[2]

இந்தப் பயத்தை ஓட்டி விரட்டவேண்டும் எனச் சின்னப் பயலுக்கு வீரமூட்டுகிறார், பட்டுக்கோட்டை.

வேப்பமர உச்சியில் நின்னு, பேயொன்னு ஆடுதுன்னு,
விளையாடப் போகும்போது சொல்லிவைப்பாங்க; – உன்
வீரத்தைக் கொழுந்திலேயே கிள்ளிவைப்பாங்க;
வேலையற்ற வீணர்களின், மூளையற்ற வார்த்தைகளை
வேடிக்கை யாகக்கூட நம்பிவிடாதே; – நீ
வீட்டுக் குள்ளே பயந்து கிடந்து,
வெம்பிவிடாதே; – நீ வெம்பிவிடாதே.[3]

சிறு வயதிலேயே மடமைக் கருத்துகளுக்கு இடங் கொடாமல் இந்நாட்டு இளைஞர்கள் பகுத்தறிவுடனும் வீரத்துடனும் ஏறு நடை பயில என்னவெல்லாம் சொல்ல வேண்டுமோ அத்துணையையும் சொல்லி அறிவுறுத்துகிறார், பட்டுக்கோட்டையார்.

பாரதியின் சில அடிகளிலே உள்ளம் பறிகொடுத்த பட்டுக்கோட்டை, அவ்வடிகளை அவ்வாறே தம் பாடல்களில் எடுத்தாள்கிறார்.

---

1. பட். பாடல், தனிப்பாடல்
2. பாரதியார் பாடல், பாரத ஜனங்களின் தற்கால நிலைமை
3. பட். பாடல், படம் : அரசிளங்குமரி, 1957

பெண் : ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
ஆண் ஒற்றுமை நீங்கிடில் தாழ்வு[1]

என ஆண் ஒருவனையும் பெண் ஒருத்தியையும் பாடவைக்கிறார், பட்டுக்கோட்டையார்.

இருவர் பாடலும் இணையும்போது,

ஒன்றுபட் டால்உண்டு வாழ்வே – நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே[2]

எனும் பாரதியின் பாடலடிகள் கிடைக்கின்றன.

எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்,
எல்லாரும் இந்திய மக்கள்;
எல்லாரும் ஓர்நிறை, எல்லாரும் ஓர்விலை,
எல்லாரும் இந்நாட்டு மன்னர்; – நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்; – ஆம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்[3]

எனப் பாரதியார், இந்திய மக்கள் அனைவரையும், 'எல்லாரும் இந்நாட்டு மன்னர்' என மும்முறை அழுத்தந்திருத்தமாய் உரைக்கிறார். பட்டுக்கோட்டையார் பாரதியின் இவ்வடிகளை ஒரு பாடலுக்குத் தொடக்கமாகவே அமைத்துக்கொள்கிறார்.

எல்லோரும் இந்நாட்டு மன்னரே – நாம்
எல்லோரும் இந்நாட்டு மன்னரே.[4]

நல்லார் - பொல்லார், உள்ளார் - இல்லார் எவரேயாயினும் எல்லோரும் இந்நாட்டு மன்னரே எனக் குரல் கொடுக்கிறார்.

இல்லை என்ற கொடுமை – உலகில்
இல்லை யாக வைப்போம்[5]

என்கிறார் பாரதியார். பட்டுக்கோட்டையோ,

கஞ்சி யில்லை என்ற சொல்லைக்
கப்ப லேற்றுவோம்; – செகத்தை
ஒப்ப மாற்றுவோம்[6]

என்கிறார்.

---

1. பட். பாடல், படம் : ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, 1960
2. பாரதியார் பாடல், வந்தேமாதரம்
3. மேலது, பாரத சமுதாயம்
4. பட். பாடல், படம் : ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, 1960
5. பாரதியார் பாடல், இலக்குமி துதி
6. பட். பாடல், தனிப்பாடல்

பட்டுக்கோட்டையார் பாரதியாரிடம் பற்றுக்கொண்டவர்; பாரதிதாசனோடு பழகியவர். அவர்கட்கிருந்த பெண் விடுதலை நாட்டம் இவரிடமும் படிந்திருக்கக் காண்கிறோம்.

ஆணுக்குப் பெண்கள் அடிமைகள் என்று
  யாரோ எழுதிவைச் சாங்க; – அன்று
  யாரோ எழுதிவைச் சாங்க; – அதை
அமுக்கிப் பிடிச்சுக்கிட்டு விடமாட் டேன்னு
  ஆண்கள் ஒசந்துகிட் டாங்க; – பெண்கள்
  ஆமைபோல ஒடுங்கிப்போ னாங்க.[1]

பெண்கள் அடிமையானதற்கான காரணத்தை விளக்குகின்ற கவிஞர், ஆணொடு பெண் சரிநிகர் சமானமாய் வாழ வேண்டும்; ஆணுக்கு அளிக்கப்படும் உரிமைகள் பெண்களுக்கும் அளிக்கப் பட வேண்டும் என்றும் வலியுறுத்துகிறார். திருமணத்தில் பெண்ணுக்கு ஆண் தாலி கட்டுவது பெண்ணடிமையைச் சுட்டுவதே! தந்தை பெரியார் தாலி அணிவித்தல் கூடாதென்றார். தாலி கட்டத்தான் வேண்டுமென்றால் பெண்ணுக்கு ஆண் கட்டுவதுபோல, பெண்ணும் ஆணுக்குக் கட்டவேண்டும் என்றும் கூறினார். இக்கருத்தை வழிமொழிவதுபோல, பட்டுக் கோட்டையார் பாடுகிறார் :

ஆண் போட்டுக்கிட்டா ரெண்டு பேரும்
  சேர்ந்து போட்டுக்கணும்; – ஒலகம்
 புதுசா மாறும்போது, பழைய
  மொறையை மாத்திக்கணும் –தாலி
(போட்டுக்கிட்டா)[2]

பட்டுக்கோட்டையார் தாலி வேண்டும் என்னும் கருத்துடையவராய் இருந்திருக்கிறார்.

பெண் கழுத்திலே தாலி கெடந்தா
  காலிகூட மதிப்பான் – கொஞ்சம்
  கண்ணியமா நடப்பான் – அந்தக்
 கயிறு மட்டும் இல்லை யின்னா
  கழுதை போல இடிப்பான்
ஆண் ஆம்பு ளைக்கும் தாலி கெடந்தா
  அடுத்த பொண்ணு மதிப்பா – கொஞ்சம்
  அடங்கி ஒடுங்கி நடப்பா – இந்த
 அடையாளம் இல்லை யின்னா
  அசட்டுத் தனமா மொறைப்பா[3]

1. பட். பாடல், படம் புதுமைப்பெண், 1959
2. மேலது, வீரக்கனல், 1960
3. மேலது

பெண்களை ஆண்கள் கரவு உள்ளத்தோடு பார்ப்பதும், தனித்து வரும் பெண்களிடம் வம்பு செய்வதுமாய் உள்ளனர். ஆதலால்,

சீவி முடித்துத், திருமணக்கும் பொட்டுவைத்து,
கோவிலைச் சுற்றிவரும் குலமகளே; – பாவியரின்
கண்ணில் அகப்பட்டுக், களங்கம் வராவண்ணம்
உன்னைநீ காப்பாற்றிக் கொள்[1]

என்கிறார். பெண்களை நேரத்தோடு வீட்டுக்குச் சென்றுவிடு மாறும் கூறுகிறார். கயமைத்தனம் செய்யும் ஆண்களுக்குப் பெண்கள் எப்படிப் பாடம் புகட்ட வேண்டும், எப்படி எதிர்த்து நிற்க வேண்டும் என்பது குறித்துப் பட்டுக்கோட்டையார் பாடல் எதுவும் இல்லை. பாரதி காட்டிய புரட்சிப்பெண் போன்ற படைப்பைக் கவிஞர் எழுதுவதற்கான வாய்ப்பு எவ்வாறோ இல்லாமல் போயிற்று.

பாரதிதாசன் பரம்பரை

பாவேந்தருடைய எண்ணங்களோடு பட்டுக்கோட்டையார் ஒன்றிக் கலந்தவர். பாவேந்தர், 'நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்' என்றார். இக்கருத்து பட்டுக்கோட்டைக்கு மிகவும் பிடித்திருக்கிறது; மணமக்கள் இத்தொடரை மனத்திலே கொள்ள வேண்டும் என்கிறார்.

'நல்ல குடும்பம்ஒரு பல்கலைக் கழகம்' என்று
தெள்ளு தமிழ்க்கவிஞன் தெளிவுரை சொன்னதுண்டு;
இல்லறம் ஏற்பவர்கள் இதனை மனதில்கொண்டு,
இன்பமுடன் நடந்தால் வாழ்வுக்கு மிகநன்று.[2]

பாவேந்தரின் தொடர் எந்த அளவுக்குப் பட்டுக்கோட்டையை ஆண்டிருக்கிறது என்பதை இப்பாடல் தெரிவிக்கிறது.

பாவேந்தருடைய பாடலடிகள் பட்டுக்கோட்டையின் பாடல்களில் பல இடங்களில் பயின்று வருவதைக் காணலாம்.

எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே!
பொங்கு தமிழர்க் கின்னல் விளைத்தால்
சங்காரம் நிசமெனச் சங்கே முழங்கு![3]

எனப் பாவேந்தர் முழங்குகிறார்.

1. பட். பாடல், தனிப்பாடல், 1953
2. மேலது, படம் : கல்யாணிக்குக் கல்யாணம், 1959
3. பாரதிதாசன் கவிதைகள், தொகுதி-1, 27. சங்கநாதம்

பொங்கும் தொழிலாளர்க் கின்னல் புரிந்திடும்
பன்மனப் போக்கிரிகள், – மங்கி
எங்கோ மறைந்தனர், என்றோ ஒழிந்தனர்,
என்னுங் குரல்கள் எழுப்பிடுவோம்![1]

எனக் குரலெழுப்புகிறார், பட்டுக்கோட்டை!

ஆடவரின் காதலுக்கும் பெண்கள் கூட்டம்
அடைகின்ற காதலுக்கும் மாற்ற முண்டோ?
பேடகன்ற அன்றிலைப்போல் மனைவி செத்தால்,
பெருங்கிழவன் காதல்செயப் பெண்கேட் கின்றான்;
வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்,
மணவாளன் இறந்தால்பின் மணத்தல் தீதோ?
பாடாத தேனீக்கள், உலவாத் தென்றல்,
பசியாத நல்வயிறு, பார்த்த துண்டோ?[2]

எனக் கேட்கிறார், பாவேந்தர். கைம்பெண் மணத்தை மறுப்பது மட்டுமா? அவர்கட்கு மானக்கேடு நேருமாறு வீண் கதைகளையும் கட்டிவிடுகின்றனரே எனக் கவலைப்படுகிறார், பட்டுக்கோட்டை.

மனைவி இறந்தபின் வயதான தாத்தாவும்
மறுமணம் பண்ணிக்கிட உரிமையுண்டு; – இளம்
மங்கையை முடிப்பதுண்டு மண்டைவரண்டு; – தன்
கணவனை இழந்தவள், கட்டழகி யானாலும்,
கடைசியில் சாகமட்டும் உரிமையுண்டு; – இதில்
கதைகளும் கட்டிவிடும் ஊர்திரண்டு.[3]

'சாக மட்டும் உரிமையுண்டு' எனும் தொடரில் பொதிந்துள்ள சோகம், சினம், வேகம் எத்துணை எத்துணை!

கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டிவிட்டால்
மண்ணில் குமரருக்கு மாமலையும் ஓர்கடுகாம்[4]

என்பது பாவேந்தர் பாட்டு. இது, பட்டுக்கோட்டையாரிடம்,

மங்கைஎன் பார்வையில் மலையசையும்[5]

என அருமையாய்ச் சுருக்கம் பெறுகிறது.

காதலி காதலனுக்கு எழுதும் கடிதத்தில், 'இருக்கின்றேன், சாகவில்லை; என்றறிக' என முடிப்பதாய்ப் பாவேந்தர் பாடுகிறார்.

---

1. பட். பாடல், ஜனசக்தி, 16-10-55
2. பாரதிதாசன் கவிதைகள், தொகுதி-1,
   16. காதலைத் தீய்த்த கட்டுப்பாடு
3. பட். பாடல், படம் : புதுமைப்பெண், 1959
4. பாரதிதாசன் கவிதைகள், தொகுதி-1, சஞ்சீவி. சாரல்
5. பட். பாடல், படம் மகாலட்சுமி, 1960

இறக்கவில்லை இருக்கின்றேன்; இதுதான் நிலைமை[1]

எனக் காதலன் காதலிக்கு எழுதுவதாகப் பட்டுக்கோட்டை பாடுகிறார்.

பாவேந்தர் எழுதியுள்ள புரட்சிக்கவி எனும் காப்பியத்தில்,

ஆரத் தழுவி அடுத்தவி நாடிக்குள், உயிர்
தீர வரும்எனினும், தேன்போல் வரவேற்பேன்[2]

என்கிறாள், மன்னன் மகள் அமுதவல்லி, தீந்தமிழ்க் கவிஞன் உதாரனிடம். அம்பிகாபதி அமராவதிக்கு எழுதும் கடிதமாக, பட்டுக்கோட்டையார் ஒரு பாடல் எழுதியுள்ளார். அதில் அம்பிகாபதி,

விருப்பம்போல் சேர்ந்து விளையாடி மறுகணத்தில்
நெருப்பில் குதிப்பதென்றால் நிம்மதியாய் ஏற்பேன்[3]

என அமராவதிக்கு எழுதுகிறான்.

கூழுக்குப் பலபேர் வாடவும் – சிற்சிலர்
கொள்ளையடித்தலைச் சகியோம்[4]

எனும் பட்டுக்கோட்டையின் பாடல்,

கூழுக்குப் பற்பலர் வாடவும் சிற்சிலர்
கொள்ளை யடிப்பதும் நீதியோ – புவி
வாழ்வதுதான் எந்தத் தேதியோ?[5]

எனும் பாவேந்தர் பாடலின் தாக்கமாகும்.

காதலன் ஒருவன், தமிழ் தெரியாத - அறியாத - ஒருத்தி தனக்குக் காதலியாய் இருக்கக் கூடாது என்கிறான்.

என்மீதில் ஆசைவைக் காதே; – மயிலே
என்னைப் பார்த்தும்சிரிக் காதே!
உன்மேல்நான் ஆசைவைக்க வில்லை; – நீதான்
உண்மையிலே தமிழ்மகள் இல்லை; (என்)

மாதொருத்தி வேண்டும் எனக்கும் – தமிழ்
மகளாய் இருந்தால்தான் இனிக்கும்; ஆதலால்[6] (என்)

என்கிறான், காதலன். காதலில் சாதிகள் அழிந்திட வேண்டும்; ஆனால், தமிழ் வீழ்ந்திடக் கூடாது.

1. பட். பாடல், தனிப்பாடல்
2. பாரதிதாசன் கவிதைகள் - தொகுதி-1, 2. புரட்சிக்கவி
3. பட். பாடல், கையெழுத்துப்படி
4. மேலது, தனிப்பாடல்
5. பாரதிதாசன் கவிதைகள் - தொகுதி-1, 55. சாய்ந்த தராசு
6. பாரதிதாசன், காதற்பாடல்கள், பக். 70

ஒருவன் பாட்டுப் படியாதவன்; ஆனாலும் பத்து இலட்சம் சொத்துடையவன். அவனைத் தன் வீட்டுப் படியேற வேண்டாம் என்று துரத்திவிட்டாள், ஒருத்தி. சென்றவன், 'திருக்குறளைப் படித்துத் தெளிந்தேன்' என்று திரும்பி வந்தான். "அப்படியானால் வா! உன்னிடமிருந்து படித்தேன் அளவான இன்பத்தைப் பெற்றுக்கொள்வேன்; கொடு" என அவனை ஏற்றுக்கொள்கிறாள் எனும் கருத்தமைந்த பாவேந்தர் பாடல் ஒன்று உண்டு.

பாட்டுப் படியானாம்; பத்திலக்கம் உள்ளவனாம்;
வீட்டுப் படியேற வேண்டாம்என் றோட்டினாள்;
'வள்ளுவன்ப டித்தேன்'என் றான்;'நீ வழங்கிடு;நான்
கொள்ளுவன்,ப டித்தேன்'என் றாள்.'[1]

திருக்குறள் படித்தவனே - தமிழறிந்தவனே - தனக்குக் காதலனாய் இருக்க வேண்டும் என்கிறாள், காதலி.

இப் பாடல்களின் தாக்கத்தால் பட்டுக்கோட்டை, மாமியார் ஒருத்தி தனக்கு மருமகளாய் வருபவள் எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்று சொல்லும்போது, அவள் திருக்குறள் படித்தவ ளாகவும் இருக்க வேண்டும் என்று சொல்வதாகப் பாடுகிறார்.

மணமக ளாகவரும் மங்கை எவளோ? – என்
மருமகளா யிருக்கத் தகுந்தவளோ?

பொறுக்கி எடுத்த முத்துக் கருத்தைத்
தொகுத்து வைத்த திருக்குறள்
முப்பாலும் படிப்பவளோ....ஆ....கனல்
தெறிக்கக் கொதித்த,மணிச் சிலம்பை யுடைத்து,நீதி
தெரிவித்த கண்ணகியைத் துதிப்பவளோ?[2]

என்பது அப்பாடலின் ஒரு பகுதி.

'அழகு' எங்கும் உள்ளது. அதனை நசையோடு நோக்க வேண்டும் என்பார், பாவேந்தர்!

அடடே! செந்தோள்
புறத்தினிலே கலப்பையுடன் உழவன் செல்லும்
புதுநடையில் பூரித்தாள்; விளைந்த நன்செய்
நிலத்தினிலே என்விழியை நிறுத்தினாள்.[3]

கலப்பை தூக்கிச் செல்லும் உழவன், விளைந்த நன்செய் நிலம் - இங்கெல்லாம் அழகு சிரிப்பதைப் பாவேந்தர் காண்கிறார்.

1. பாரதிதாசன், காதற்பாடல்கள், பக். 72
2. பட். பாடல், படம் : குமார ராஜா, 1961
3. பாரதிதாசன், அழகின் சிரிப்பு, 1. அழகு

பட்டுக்கோட்டையாரும் பாவேந்தரைப் போலவே அழகைக் காணுகிறார்.

> **கண்ணை இழுக்கும் அழகொன்று கண்டேன்**
> **காவியம் ஓவியம் யாவையும் கண்டேன்.**[1]

அழகைக் காண்கிறார்; அதுவே அவருக்குக் காவியமாகவும் ஓவியமாகவும் திகழ்கிறது. அழகை எங்கே கண்டார்? ஏரோட்டும் விவசாயி எருதுகளை ஏரியிலே நீராட்டுவது; அவன் மனைவி, பானையைத் தலையிலே வைத்துப் பக்குவமாய் நடப்பது; ஆண்களும் பெண்களும் வயலிலே வேலை செய்வது; பொன்னைப் பழிக்கும் கதிர்கள் ஒன்றையொன்று பின்னி அசைந்தாடுவது ஆகிய இவற்றிலெல்லாம் அழகு நடனமிடக் காண்கிறார்.

> **வண்ணக் கலையங்கு வாழ்ந்திடக் கண்டேன்**[2]

என அந்த அழகையே கலையாய்க் கண்டு மகிழ்கிறார்.

பட்டுக்கோட்டையார் பாரதியாரை மதித்தவர்; அவருடைய பாடல்களில் திளைத்தவர்; அவருடைய கொள்கைகளைப் போற்றியவர்; எனினும், அவரை நேரில் பார்த்தறியாதவர். ஆனால், பாவேந்தருடனோ பணியாற்றியிருக்கிறார்; அவரை உயிரினும் மேலாய்க் கருதியிருக்கிறார்; தாளின் மேற்பகுதியில் 'வாழ்க பாரதிதாசன்' என்று குறித்த பிறகே பாடல்களை எழுதியிருக்கிறார்; பாவேந்தரின் பாடற்கருத்துகளைப் பெருமளவில் எடுத்தாண் டிருக்கிறார்; பாவேந்தரின் தலைமையில்தான் அவருடைய திருமணமே நடைபெற்றிருக்கிறது. இவ்வளவிருந்தும் பாரதியாரைப்பற்றித் தனியே ஒரு பாடல் எழுதியதுபோல, பாவேந்தரைப்பற்றித் தனியே ஒரு பாடல் எழுத வாய்ப்பில்லாது போனது ஏனெனத் தெரியவில்லை.

கற்பனையில் புதுமை

கலியாணசுந்தரம் சமுதாய அவலங்களை ஒழிக்கப் போர்க்குரல் கொடுப்பவராய் இருந்தபோதிலும், அவருடைய உள்ளம் மென்மையானது. இரவு வேளை; நிலா, ஒளி பொழிகிறது; கவிஞர் மகிழ்ந்திருக்கிறார். காரிருளுள் நிலவு மறைகிறது. கவிஞர் நெஞ்சம் கனக்கிறது; அவர் பூ உள்ளம் பாடுகிறது.

---

1. பட். பாடல், தனிப்பாடல், 1954
2. மேலது, நாடகம் கண்ணின் மணிகள், 1954

குமுதம் வாய்திறந்து குலுங்கும் வேளை
குலவியுடன் ஒளிதனில் குளிக்கும் வேளை
அமுதான நிலைகண்டு கருமேகம் புகுந்தால்
அதைநானும் சகியேனே! கலை வெள்ளமே![1]

நிலவே, முகிலை நீக்கி வெளியே வா வா! என்கிறார். நிலவை, 'கலை வெள்ளமே' என்பது சிறந்த தொடராட்சி.

இயற்கையைக் கற்பனையோடு பாடுவதில் பட்டுக் கோட்டையின் பாங்கு தனித்திருக்கிறது. நிலவையும் விண்மீன்களையும் பாடாத கவிஞரே இலர் எனலாம். நிலவுப் பெண்ணைக் காவல் காக்கும் தோழியராய் விண்மீன்களைச் சொல்வதும், நிலவில் உள்ள கறையை நிலவுப்பெண்ணின் முகத்திலுள்ள காயமாய்க்கொண்டு, 'இது உன் காதலன் கிள்ளியதால் ஏற்பட்ட காயமோ?' என்று கேட்பதும் புதுமையான கற்பனைகள்.

கண்விழிக்கும் தாரகைகள் வெண்ணிலாவே; – உன்னைக்
காவல்காக்கும் தோழியரோ வெண்ணிலாவே!
கன்னத்தில் காயமென்ன வெண்ணிலாவே; – உன்
காதலன்தான் கிள்ளியதோ வெண்ணிலாவே![2]

எனும் பட்டுக்கோட்டையின் பாடல் தனிச்சுவை கொண்டது.

வளர்ச்சியும் மகிழ்ச்சியும்

மக்கள் அறிவு நிறைந்தவர்களாய், அறிவியற்கருத்துகளை உணர்ந்தவர்களாய்த் திகழ வேண்டும் என்பது பட்டுக் கோட்டையார் எண்ணம்.

ஆளும் வளரணும்; அறிவும் வளரணும்
அதுதாண்டா வளர்ச்சி;[3]

என்பது அவர் வாக்கு. அறிவு வளர்ச்சியினாலே மனிதன் இன்று விண்வெளியில் உலா வருகிறான். அறிவினால் மனித சக்தி சந்திரனைத் தொட்டுச் சரித்திரத்தையே மாற்றிவிட்டது. விண்ணுலகு உண்டு; அதற்கு அரசன் இந்திரன் என்பவற்றை யெல்லாம் அறிவியல் வளர்ச்சி மாற்றிவிட்டது.

இந்திரன்தான் விண்ணாட்டின் அரசன் என்ற
இலக்கணத்தை மாற்றியது மனித சக்தி!

---

1. பட். பாடல், படம் : சௌபாக்கியவதி, 1957
2. மேலது, எல்லாரும் இந்நாட்டு மன்னர், 1960
3. மேலது, அரசிளங்குமரி, 1957

இந்திரனும் முடியரசாய் இருக்கொ ணாது
எனும்குறிப்பைக் காட்டியது மனித சக்தி![1]

இந்திரன் விண்ணுலகின் முடியரசன் என்றால், மனிதன் அவன் நாட்டில் நுழைந்து சந்திரனைத் தொட்டபோது எங்கே போனான்? விண்ணுலகிலும் முடியரசு வீழ்ந்து குடியரசு மலர்ந்து விட்டது! இவற்றையெல்லாம் - இந்த அறிவியல் வளர்ச்சியை யெல்லாம் - ஏற்படுத்தியது எது? மந்திரமன்று; மனித சக்தி - ஆம், மனித சக்தி. மனித சக்தி மகத்தானது.

அறிவு வளர்ச்சி வேண்டும்; ஆனால், அது அழிவுச் சக்தியாய் மாறிவிடக்கூடாது என்றும் கவிஞர் எச்சரிக்கிறார். அன்பில்லாத அறிவு, அழிவையே தரும். அன்பின் வழியதே உயிர்நிலை!

அன்பில்லாத அறிவாலே நேரும்
அழிவைக் கேளுங்கோ!

வேட்டுவச்சுப் பலநாட்டை அழிக்கவே
விஞ்ஞான ஆராய்ச்சி – செய்து
ஆட்டிப் படைப்பதும் அன்பில்லாத
அறிவாலே உருவாச்சு! [2]

அன்பில்லா அறிவு பாழ் என உணர்தல் வேண்டும்.

திரையில் ஒரு புரட்சி

திரைப்படங்களில் பக்திப் பாடல்கள் எழுதியாக வேண்டிய கட்டாயம் ஏற்படவே செய்யும். அவ்வாறான கடவுட்பாடல்கள் எழுதும்போதும் பட்டுக்கோட்டையார் மக்களை மறந்து விடுவதில்லை. தெய்வத்தின் பெருமையைப் பேசுவதைவிட, தெய்வம் மக்களுக்கு என்ன செய்ய வேண்டும் என எழுதுவதே அவர் நோக்கமாகிறது. மக்கள் தெய்வங்களிடம் பக்தி கொள்வதை விடுத்து, தெய்வங்கள் மக்களிடம் பக்தி கொள்ள வேண்டும் என்கிறார்.

முருகனைப் பாடும்போது,

வாழப் பிறந்தவரை வாழவிடு – முருகா – வாழவிடு
வாழவேண்டு மென்றால் நீயும் நீதிகொடு – முருகா – நீதிகொடு
இங்கே உழைத்துப் பிழைப்பவர்க்கு
என்ன இருக்கு? – முருகா – என்ன இருக்கு?[3]

---

1. பட். பாடல், ஜனசக்தி இதழில், 1957
2. மேலது, தனிப்பாடல், 1951
3. மேலது, தனிப்பாடல், 1953

எனக் கேள்விக்கணைகளால் முருகனையே திண்டாட வைத்து விடுகிறார்.

சித்திரைத் தேரோடும் தென்மதுரை வாழும் சக்தி மீனாட்சித் தாயை வேண்டுவதாய் உள்ள பாடலில்,

அன்பும் அறிவும் நெஞ்சில் ஆக்கமும் உண்டாக
அல்ல லின்றி உலகம் அமைதி யுடன்விளங்க[1]

இன்ப நீதி அருள்வாய் என இறைவிக்கே கட்டளையிடுகிறார்.

'சிவசக்தி! வல்லமை தாராயோ! இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே' என வேண்டினார், பாரதியார். பட்டுக்கோட்டை யார்,

சத்தியமே லட்சியமாய்ச் சேவை செய்யவே
பராசக்தியே நீ வரம்தா[2]

எனப் பிறருக்குழைக்கும் பெற்றியே உண்மையான தெய்வ பக்தியாய் இருக்க முடியும் என்பதைச் சுட்டிக் காட்டுகிறார்.

சமயபுரத்து மாரியம்மனைப் பார்த்து, அம்மா,

இன்பம் என்ற சொல்லைக் கேட்டதுண்டு – அது
எங்க வீட்டுப் பக்கம் வந்ததுண்டா?[3]

என்று கேட்கிறார். அனைவர்க்கும் தாயான அம்மன், ஏழை வீட்டுப் பக்கம் எட்டிப் பார்க்காதது ஏனோ? அது மட்டுமா, மேலும் வன்மையாய்க் கூறுகிறார்

எந்தச் சாமிக்கும் காது கேக்கலே
இல்லா தவனை எட்டிப் பார்க்கலே[4]

உண்மையான பக்தியோடு கோவில்களுக்குச் செல்பவர்கள் மிகச்சிலரே! தம் தேவைகளை நிறைவு செய்துகொள்ள ஆண்டவனை வேண்டுதலே வேண்டுதலாய் இருக்கிறது. ஆலயங்கட்குச் சென்று, "அப்பாநான் வேண்டுதல்கேட் டருள் புரிதல் வேண்டும் ஆருயிர்கட் கெல்லாம் அன்பு செய்தல் வேண்டும்!" என்று வேண்டுபவர் எத்தனை பேர்? கடவுளை வழிபடுவதற்குச் செல்வதைவிட்டு, அங்குத் தரும் சுண்டலுக்காகச் செல்வது பக்தியாகுமா?

---

1. பட். பாடல், கையெழுத்துப்படி 2-4-55
2. மேலது, படம் : மகேஸ்வரி, 1955
3. மேலது, பதிபக்தி, 1958
4. மேலது, ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, 1960

பக்த ஜனங்க கவன மெல்லாம்
தினமும் கிடைக்கும் சுண்டலிலே
பசியும் சுண்டல் ருசியும் போனால்
பக்தி யில்லே பஜனை யில்லே[1]

பக்தி இறைவன்மீதா சுண்டலின்மீதா?

பக்தர்கள் தாம் விரும்பும் வகையில் இறைவனைச் சென்று தாமே வழிபட வேண்டும். இடைத்தரகர் கூடாது. இறைவன்தான் எல்லா இடத்திலும் இருப்பவனாயிற்றே! அவனைக் கற்கோயிலுள் வைத்துப் பூட்டிக் காசு பறிப்பது ஏமாற்று வித்தையன்றோ?

காசுதந்தால்தான் உன்னைக்
 காணும்வழி காட்டுவதாய்க்
கதவுபோட்டுப் பூட்டி வைத்துக்
 கட்டாயம் பண்ணுவதைப் பார்த்தாயா?[2]

எனக் கடவுளையே கேட்கிறார். இதைக் கேட்டால் நாத்திகன் என்ற பட்டமா?

கடவுள் இருப்பதும், இல்லை என்பதும்
கவைக்குதவாத வெறும் பேச்சு,
கஞ்சிக் கில்லாதார் கவலை நீங்கவே
கருதவேண்டியதை மறந்தாச்சு – பழங்
கதைகளைப் பேசிக் காலம் வீணாச்சு![3]

கடவுளை வழிபடுபவர்கள் கடவுள் காட்டும் வழியில் செல்ல வேண்டாமா? முருகன், குறமகள் வள்ளியை மணந்தான். சாதி வேலியை முதலில் தாண்டியவன் அவன்தான். முருகனே கலப்பு மணத்துக்கு முன்னவனாய் இருக்க, அவனை வணங்கும் பக்தர்கள் அதனை மறுப்பதேன்? அப்படியானால் கடவுள் காட்டிய வழியையே மறுக்கிறார்களா? முருகனிடம் கவிஞர் கேட்கிறார் :

மாறாது உனைவந்து வணங்கும் மனிதர் – சொந்த
வாழ்வில்மட்டும் சாதிமயக்கம் வந்தது ஏனையா?[4]

முருகா! உனக்குச் சாதி மயக்கம் இல்லையே! உன் பக்தர்களுக்கு அது எப்படி வந்தது? 'நானே சாதி பார்க்கவில்லை; உனக்கெதற்குச் சாதி?' என்று தட்டிக் கேட்க வேண்டாமா? கவிஞரின் வினாக்கள் இவ்வகையில் அமைகின்றன. முருகனின் மறுமொழி யாதோ?

---

1. பட். பாடல், படம் நான் வளர்த்த தங்கை, 1958
2. மேலது, நான் வளர்த்த தங்கை, 1958
3. மேலது, பதிபக்தி, 1958
4. மேலது, தனிப்பாடல்

கடவுளைப் பாடும்போதும் கலியாணசுந்தரம், மக்கள் நலனைக் கருத்தில் கொண்டிருந்தாரே தவிர, கடவுளைப் போற்றிப் புகழ்வதைப் பொருட்படுத்தவில்லை. திரைத்துறையில் இவ்வளவு பெரிய மாற்றத்தைச் செய்திருப்பது உண்மையிலேயே பெரும் புரட்சி.

மிக உயர்ந்த தத்துவக் கருத்துகளை மிக மிக எளிமையாய்க் கூறும் ஆற்றல் பட்டுக்கோட்டையார்க்குக் கைவந்த கலையாய் இருக்கிறது. 'பாடுபட்டுத் தேடிப் பணத்தைக் குவித்து வைப்பவர் களே! கூடுவிட்டு ஆவி போன பிறகு அதை நீங்கள் அனுபவிக்க முடியுமா?' என்று யாக்கை நிலையாமையைக் கூறி, "இருக்குங் காலத்திலேயே நல்லதைச் செய்து புகழ் தேடுங்கள்" என்று பெரியோர் சொன்னதைப் பட்டுக்கோட்டையும் மிகத் தெளிவாக வும், அனைவரும் உணரும்வண்ணமும் எடுத்துரைக்கிறார்.

செவருவச்சுக் காத்தாலும் செல்வமெலாம் சேர்த்தாலும்
செத்தபின்னே அத்தனைக்கும் சொந்தக்காரன் யாரு? – நீ
துணிவிருந்தா கூறு [1]

ஏதேதோ சொந்தம் என்று கொண்டாடி, வம்புகள் பேசி, வாதுகள் செய்து, நெஞ்ச அமைதி அழிகிறாயே! உனக்கென்று இறுதியில் சொந்தமாகப்போவது எது என்று எண்ணிப் பார்த்தாயா?

சட்டப்படி பார்க்கப்போனால் எட்டடிதான் சொந்தம்[2]

வாய்விட்டு உரக்கச் சிரிக்காமல், உள்ளத்திலேயே நினைந்து நினைந்து சுவைக்கும்படியான மென்மை நகைச்சுவையை எழுத்தில் கொண்டுவருவது எளிய செயலன்று. பட்டுக்கோட்டை யின் பாடல்களில் இவ்வாறான நகைச்சுவை ஆங்காங்கே இழையோடிப் பாட்டு நெசவை நேர்த்தியாக்கியிருக்கிறது. பிள்ளையார் திருமணமாகாதவர்! அவரை ஒருவர் வணங்குகிறார்; வணங்குபவரும் திருமணமாகாதவர்! அவரைப் பார்த்துச் சிலர் கேலி செய்வதாக ஒரு பாட்டு.

தனக்கொருத்தி யில்லாமே தனித்திருக்கும் சாமியிடம்
எனக்கொருத்தி வேணுமின்னு கேட்க வந்தாரோ?[3]

பிள்ளையார் தமக்கே பெண் தேடிக்கொள்ள முடியவில்லை; இவருக்கு அவர் எங்கே பெண் தேடித் தரப்போகிறார்; சிந்திக்கச்

1. பட்.பாடல், படம் : பாசவலை, 1956
2. மேலது, பாசவலை, 1956
3. மேலது, படம் : பாகப்பிரிவினை, 1959

சிந்திக்க மனத்துள்ளேயே நகைச்சுவையை எழுப்பும் சிறப்பான அடிகள் இவை.

நகைமேல் மட்டுமே நாட்டங்கொள்ளும் பெண்களை நறுக்கென்று குட்டுமாறு செய்யும் ஒரு நகைச்சுவை.

காசுமாலை போடாமே கழுத்து சுளுக்குதுன்னு
கண்ணீர்விடும் பெண்களுக்கு மருந்துண்டோ?[1]

என்றொருவன் கேட்க, மற்றொருவன் மருந்து சொல்கிறான்:

இருக்கு,
மூசைத் தங்கத்தைக் கம்பி நீட்டி சூடுகாட்டி
முதுகிலே ரெண்டு வாங்கினா குணங்கிடைக்கும்

நினைக்க நினைக்க மனக்கண் முன்னே நின்று நகைப்பூட்டிக் கொண்டேயிருக்கும் காட்சி இது.

நான் யார்?

பட்டுக்கோட்டையார் முதன் முதலில் எழுதிய பாட்டு, மக்கள் ஏமாற்றுக்காரர்களிடமிருந்து விடுபட்டு நலம்பெற வேண்டும் என்னும் கருத்துடையதே!

ஓடிப்போ ஓடிப்போ கெண்டைக் குஞ்சே – கரை
ஓரத்தில் மேயாதே கெண்டைக் குஞ்சே!
தூண்டில் காரன்வரும் நேரமாச்சு – ரொம்பத்
துள்ளிக் குதிக்காதே கெண்டைக் குஞ்சே![2]

என்பதுதான் அப்பாடல். மக்கள் ஏமாந்து பலியாகி உயிரை இழப்பவர்களாய் இருக்கக்கூடாது; எச்சரிக்கையுடன் வாழ வேண்டும் என்னும் இவ்வெண்ணத்தின் வளர்ச்சியாகவே அவருடைய பாடல்கள் வளர்ந்தன.

அவர் எழுதிய கடைசிப் பாடல்,

செக்கச் சிவந்த செழுங்கதி ரோனும்
கிழக்கினில் வந்துவிட்டான் – புவி
மக்கள் மதிக்கண் விழித்துக் கிளம்பிட
வானில் உதித்துவிட்டான்

எனத் தொடங்கி,

ஏழை – உத்தமர் வாழ்வை உறிஞ்சும் உலுத்தரின்
கொட்டம் அடங்கிடுதே – மக்கள்
வெற்றி நெருங்கிடுதே![3]

1. பட். பாடல், படம் : கற்புக்கரசி, 1956
2. மேலது, தனிப்பாடல், 1944
3. பட்டுக்கோட்டையின் கடைசிப் பாடல், 15-8-59, ஜனசக்தியில் வெளிவந்தது.

என முடிக்கிறார். கொண்ட கொள்கையில் வெற்றி காணும் வேளை நெருங்கிவிட்டது எனச் சொல்வதே அவருடைய கடைசிப் பாடல். 'நான் வந்த வேலை முடிந்துவிட்டது' என்று அவர் சொல்வது போன்ற ஓர் உணர்வு நம்முள் தோன்றுகிறது.

கடைசியாக, ஒரு ப்டத்திற்குப் பல்லவி மட்டும் எழுதிவிட்டுப் பாடலை முடிக்காமலேயே மறைந்துவிட்டார்!

தானா எவனும் கெடமாட்டான்
தடுக்கி விடாம விழமாட்டான்!
போனா எவனும் வரமாட்டான் – மேலே
போனா எவனும் வரமாட்டான் – இதைப்
புரிஞ்சிக் கிட்டவன் அழமாட்டான்'

'நான் மனிதன்; இறந்தவன் இறந்தவன்தான்; இதைப் புரிந்த நீங்கள் எனக்காக அழ வேண்டா! உங்கள் பணியைத் தொடருங்கள்! வெற்றி காணுங்கள்' எனச் சமுதாயத்திற்குப் பட்டுக்கோட்டை சொல்லிச் சென்றது போல இருக்கிறது, இப் பல்லவி. பல்லவியைத் தொடரும் பாட்டுப் போல, 'என் பணியின் தொடர்ச்சியாய் உங்கள் பணி அமையட்டும்' எனச் சொல்லாமல் சொல்லிச் சென்றிருக்கிறார், பட்டுக்கோட்டையார்.

ஜீவபாரதி தொகுப்பின் சிறப்பு

பாரதியார் எழுத்துகளையும் செய்திகளையும் திரு.இரா.அ. பத்மநாபனும் திரு. சீனி. விசுவநாதனும் தொகுத்துச் சேர்த்தனர். பாரதிதாசன் பாடல்களையும் மற்றும் அனைத்து எழுத்துகளையும் அவர் மகன் மன்னர்மன்னன் பாதுகாத்துள்ளார்; இன்னும் சிலரும் அப்பணியில் ஈடுபட்டுள்ளனர். வடலூர் வள்ளலார் பாடல்களையும் உரைநடைகளையும் சேகரித்துத் தொழுவூர் வேலாயுத முதலியார் பதிப்பித்தார். பட்டுக்கோட்டை கலியாண சுந்தரம் எழுதியுள்ள எல்லாப் பாடல்களையும் கிடைத்தவரை சேகரித்துத் தொகுத்து வைத்திருக்கிறார், அருமைக் கவிஞர் ஜீவபாரதி. இப்பணியை ஜீவபாரதி உயர் பணியாகவும், தம் உயிர்ப் பணியாகவும் கொண்டிருக்கிறார். பட்டுக்கோட்டை எழுதிய துண்டுத்தாள் ஒன்று கிடைப்பதாய் இருந்தாலும், அது எங்கிருந்தாலும் எவ்வளவு பொருட்செலவுடையதாயினும் பொருட்படுத்தாது சேகரித்துப் பாதுகாத்து வைத்துள்ளார்.

---

1. நடிகை பண்டரிபாய் தயாரித்த மகாலட்சுமி என்ற திரைப்படத்திற்கு எழுதிய இந்தப் பல்லவிதான் பட்டுக்கோட்டையார் எழுதிய கடைசிப் பல்லவி.

பட்டுக்கோட்டையார் கைப்பட எழுதிய படிகள், அவருடைய உதவியாளர் படியெடுத்தவை ஆகியவற்றைத் தேடிச் சேகரித்ததுடன், பட்டுக்கோட்டையோடு உடனிருந்தவர்கள், பழகியவர்கள் ஆகியோரிடம் பெற்ற குறிப்புகளையுங்கூட விடுபடாமல் சேமித்துள்ளார்! ஜீவபாரதி சேமித்துள்ள பெருஞ் சொத்து இதுவே!

கவிஞர் எழுதிய முதல் பாடல், அச்சில் வந்த முதல் பாடல், அவ்வப்பொழுது எழுதிய தனிப்பாடல்கள், அவர் எழுதிய கடைசிப் பாடல், கடைசியாக ஒரு பாட்டுக்கு எழுதிய பல்லவி ஆகிய இவற்றையெல்லாம் மெய்வருத்தம் பாராது, கண் துஞ்சாது, அயர்வின்றி, அரும்பாடுபட்டுக் கண்டெடுத்திருக் கிறார்.

ஒவ்வொரு பாடலின் கீழும் ஜீவபாரதி போதிய அடிக் குறிப்புகள் தந்திருக்கிறார்; சில இடங்களில் உள்ள வேறுபாடு களை ஆய்ந்து தம் முடிவையும் தந்திருக்கிறார்.

சிலர் எழுதத் தொடங்கும்போது முருகன் துணை, ஸ்ரீராமஜெயம் என்று தெய்வத்தின் துணையைக் குறித்துவிட்டுப் பிறகு எழுதுவது வழக்கம். பட்டுக்கோட்டையார் 'வாழ்க பாரதிதாசன்' என்று முதலில் எழுதிவிட்டுத்தான் பிறகு பாடல் எழுதியிருக்கிறார் என்னும் சேதியை அவருடைய கையெழுத்துப் படிகளைப் பார்த்த ஜீவபாரதி தந்திருக்கிறார்; 'பிள்ளையார் சுழி' போட்டுங்கூட எழுதியிருப்பதாகவும் கூறுகிறார். பிள்ளையார் சுழி இடப்படுவது கடவுள் நம்பிக்கையால் அன்று; எழுதத் தொடங்கும் போது ஊற்றுக்கோல் சரியாய் இருக்கிறதா என்பதைச் சோதிப்பதற்காகப் போடப்படுகின்ற குறி அது. அப்பழக்கம் பட்டுக்கோட்டையார்க்கும் இருந்திருக்கிறது.

திரைப்படங்களுக்கு எழுதிய பாடல்களைவிடக் கவிஞர் எழுதிய தனிப் பாடல்கள், இதழ்களுக்கு எழுதிய பாடல்கள் ஆகியவற்றிலேதான் அவருடைய தனித் தன்மையையும் ஆளுமையையும் உள்ளபடி அறிய முடியும். அவ்வாறான பாடல்களை கிடைத்தவரை, இதுவரை யாரும் தாராத அளவுக்கு - ஜீவபாரதி தந்திருக்கிறார்.

பட்டுக்கோட்டையார் பாடல்களைத் தொகுக்கும் பணியில் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்திலுள்ள திரு.பி.இ.பாலகிருஷ்ணன் ஈடுபட்டுள்ளார் என்றாலும், ஜீவபாரதி அதற்குமேலும் பல அரிய தகவல்களைத் திரட்டி

அளித்திருக்கிறார்; மேலும் பாடல்களைக் கால வரிசைப் படுத்தியும் தந்திருக்கிறார்.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் முதன் முதலில் பாரதியார் பாடல்களைக் கால வரிசைப்படுத்தி வெளியிட்டது. அடுத்ததாக ஜீவபாரதியின் முயற்சியால் பட்டுக்கோட்டையாரின் பாடல்கள்தாம் கால வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் கவிஞர்களின் பாடல்களை ஆண்டுவாரியாய் வெளியிடும் முயற்சி இல்லையென்றே சொல்லலாம். பாரதிதாசன், கண்ணதாசன் மற்றும் இவர் போன்றவர்களின் கவிதைக் கால அடைவு வெளிவரும் முயற்சியில் அறிஞர்கள் ஈடுபட வேண்டும். கால அடைவு இல்லாததால்தான், கவிஞன் முன்னுக்குப் பின் முரண்படுகிறான் என்பன போன்ற நியாயமற்ற திறனாய்வுகள் வெளிவர நேர்ந்துவிடுகின்றன.

பட்டுக்கோட்டையார் திரைப்படப் பாடல்கள் எழுதிய போது, ஒரே கருத்துக்குப் பலவிதமான அடிகளை எழுதித் தந்திருக்கிறார். திரைத்துறையினர் அவற்றுள் தங்களுக்குப் பிடித்தமான அடிகளை எடுத்துக்கொண்டிருக்கின்றனர். என்றாலும், அவர் எழுதி, படமெடுப்போர் ஏற்றுக்கொள்ளாத அடிகளை, அவ்வப்பாடலின் கீழேயே ஜீவபாரதி அடிக் குறிப்பாய்த் தந்திருக்கிறார். அத்தகைய அடிகளுள் திரைப்படத் துறையினர் ஏற்றுக்கொண்டுள்ள அடிகளைவிட, ஏற்றுக் கொள்ளாத அடிகள் இலக்கியச் செறிவுடையனவாய் இருக்கக் காண்கிறோம்.

முகத்தில் முகம்பார்க்கலாம் – விரல்
நகத்தில் பவளத்தின் நிறம்பார்க்கலாம் (முகத்தில்)
வகுத்த கருங்குழலை மழைமுகி லெனச்சொன்னால்
மலரினை இதழோடு இணைசேர்க்கலாம்[1]

இது திரைப்படப் பாடல். கடைசி இரு அடிகளை

வகுத்த கருங்குழலில் வளந்தனை மலைநாட்டின்
மழைமுகி லோடுநல் லிணைசேர்க்கலாம் – குமுத
மலரினை இதழோடு இணைசேர்க்கலாம்[2]

எனவும் கவிஞர் எழுதியிருப்பதை ஜீவபாரதி அடிக்குறிப்பில் தருகிறார். பாடலில் இடம் பெற்றுள்ள அடிகளைவிட, விட்டுவிட்ட இவ்வடிகளில் பொருள் குறைவின்றிப் பொருந்தி,

1. பட். பாடல், படம் : தங்கப்பதுமை, 1956
2. ஜீவபாரதி, பட். பாடல், தொகுப்பு, பக். 39

இலக்கிய வளத்தோடிருப்பதைக் காண்கிறோம். ஒருவேளை, இசை கருதியும் சுருக்கம் கருதியும் திரைப்படப்பாடலில் உள்ள அடிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கக்கூடும். இப்படிப் பல்வேறு ஆய்வுச் செய்திகளை அறிந்துகொள்ளும் வகையில் ஜீவபாரதியின் அடிக்குறிப்புகள் மிகு விரிவாகவும் தெளிவாகவும் உள்ளன.

'எழுதுவதைவிட எழுதாமல் உற்சாகத்தோடு பாட வேண்டும்; பாடிய பின் எழுத வேண்டும். இப்படி எழுதும் பாடல்கள் எக்காலத்திலும் சாகா' என்பது பட்டுக்கோட்டையின் கருத்து. அவருடைய பாடல்கள் இவ்விதம் பிறந்தவையாகத்தாம் இருக்கவேண்டும். அவருடைய எழுத்துகளில் இதுவரை கிடைத்தவை போக, இன்னும் விடுபட்டவை இருக்குமாயின் அவற்றையும் எவ்வாறேனும் தேடிக்கொணர வேண்டுமென்னும் அயரா ஆர்வத்துடன் ஜீவபாரதி உழைத்து வருகிறார். அவருடைய முயற்சி முழு வெற்றி பெற வேண்டும்; பட்டுக்கோட்டையின் படைப்புகளுள் ஓர் எழுத்தும் விடுபடாமல் நமக்குக் கிடைக்க வேண்டும் என மனமார விழைகிறேன்.

மக்களின் இன்றைய தேவைக்கேற்ற புதுமையான கருத்தாட்சி, மக்கள் மொழியில் எழுதியுள்ள எளிய சொல்லாட்சி, கேட்போர் - படிப்போர் மனத்தில் தைத்து நிற்கும் பாடல் திறனாட்சி ஆகிய முத்திறத்திலும் பட்டுக்கோட்டையார் முத்திரை பதித்திருக்கிறார்.

பட்டுக்கோட்டையின் பாடல் வளத்தில் திளைப்போம்!

ஜீவபாரதியின் பணி, வெற்றி பெற வாழ்த்துவோம்!

நூல்ஆக்கம்	ஜீவபாரதி (தொகுப்பாசிரியர்)
வகைமை	திரையிசைப் பாடல்கள்
வெளியீடு	கற்பகம் புத்தகாலயம், சென்னை.(1997)

23

தமிழ் விருந்து மூன்று

பாவலர் ம. அரங்கநாதன், ஆசிரியராய்ப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். 'நல்லாசிரியர்' விருது பெற்றவர். தாம் ஏற்ற பணியில் முழுமனத்துடன் ஈடுபட்டுச் சிறந்தவர். ஆண், பெண் ஆகிய இருபாலாரும் இளமையில் செம்மை நலத்துடன் வளர்க்கப் பட்டால் அவர்கள் எதிர்காலம் உயர்ந்தோங்கிச் சிறக்கும் என்பதை நன்குணர்ந்தவர்.

மேலைநாட்டு அறிஞரொருவர், பள்ளியில் படித்த தம் மகனுக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டார் : "மகனே! நீ நூறு ஆண்டுகள் வாழ்வதாய் வைத்துக்கொள். இதில் முதல் பதினெட்டாண்டுகள் நீ அடங்கி வாழ்ந்தால் - அஃதாவது, பெற்றோர்க்கடங்கி, ஆசிரியர்க்கடங்கி, ஊருக்கடங்கி வாழ்ந்தால் - பின்னருள்ள எண்பத்திரண்டு ஆண்டுகளுக்கு உலகம் உன்னைச் சுதந்தரமாய் வாழவிடும். மாறாய், முதல் பதினெட்டாண்டுகளின் போது ஊருக்கும் உலகுக்கும் வீட்டுக்கும் நாட்டுக்கும் நீ அடங்காதவனாய் வாழ்ந்துவிட்டால் பின்னருள்ள எண்பத்திரண்டு ஆண்டுகள் உலகில் நீ அடிமையாய் அல்லற்பட்டு வாழநேரிடும். எனவே, முதலில் உள்ள 18 ஆண்டுகள் அடங்கி வாழ்வதன்மூலம், பின்னர் உள்ள 82 ஆண்டுகள் சுதந்தரமாய் வாழ விரும்புகிறாயா அல்லது முதலில் 18 ஆண்டுகள் சுதந்தரமாய் வாழ்வதாய் நினைத்து அடங்காதவனாய், அறிவற்றவனாய், ஒழுக்க நெறிகளை அறிந்து கடைப்பிடிக்காதவனாய் வளர்ந்து, பின்னர் உள்ள 82 ஆண்டுக் காலத்தில் பிறரால் வெறுத்தொதுக்கப்பட்டு அடிமை வாழ்வு வாழப்போகிறாயா? இந்த இரண்டனுள் எதை நீ விரும்புகிறாயோ அதனை நீ ஏற்கலாம்" என்றெழுதினார்.

இளமையில் நல்லொழுக்கங்களில்படுபவன் வாழ்க்கை பிற்காலத்தில் சிறப்புற அமையும்; இளமையில் தீய பண்புகளை ஏற்றுவிட்டாலோ அவை என்றும் நின்று, நிலைத்து, வாழ்க்கை முழுவதையும் துன்பத்துக்குள்ளாக்கிவிடும் என்பதையே அவ்வறிஞர் தம் மகனுக்கு இவ்வாறு எடுத்தியம்புகிறார்.

"அடக்கம் அமரருள் உய்க்கும்; அடங்காமை ஆரிருள் உய்த்துவிடும்" என்னும் திருவள்ளுவப் பெருந்தகையின் கருத்தை அம்மேலை நாட்டு அறிஞர் தம் மகனுக்கு அறிவித்ததைப்போலவே இந்நூலாசிரியர் அரங்கநாதனும் இந்நூலுள் இளைய சமுதாயம் நற்பண்புகளை அறிந்து, ஏற்றுப் புகழ்பெற்று வாழவேண்டும் என்பதை வலியுறுத்துகிறார்.

இந்நூல் 'தாய்மை', 'மானம் ஆறாறு', 'முருகு முப்பத்தாறு' என மூன்று பிரிவுகளாய் அமைந்திருக்கிறது.

சிறுமியரைக் குழுவாக்கிக் கல்விதந்து
 சீர்பெறுதல் பேரின்பம்;

அச்சிறுமியர்க்கு, முளைக்கையிலேயே நலமுறக் கல்வி தந்து, அவர்களிடம் நல்லொழுக்கங்களை ஏற்றிவைத்தால் எதிர் காலத்தில் அவர்கள் 'குடிக்கொரு நல்விளக்காய்' ஒளிவீசிப் பெருமை செய்வர்; இன்றேல் 'குடை சாய்ந்த வண்டியெனக் குடும்பம் வீழும்' என்பதை ஆசிரியர் 'தாய்மைப்' பகுதியில் நன்கு விளக்குகிறார்.

ஒருவன் வாழ்க்கை சிறப்படைவது அவனுக்குத் துணை நிற்கும் இல்லாளால்தான். வயது முதிர்ந்த நிலையிலும் நரையின்றி இருந்த பிசிராந்தையாரிடம் அதற்குக் காரணம் கேட்டபோது, 'என் மனைவி நல்லவள்' என்றார். நரைக்குக் காரணம் கவலை என்பர். ஆகவே, கவலையின்றி வாழ ஒருவனுக்கு அடிப்படையாய் அமைய வேண்டியது நல்ல இல்லாளே என்பதனைப் பிசிராந்தையார் புலப்படுத்துகிறார். இல்லாள் ஏறுமாறாய் இருப்பாளேயாயின் ஒருவனுக்கு வாழ்க்கையில் எத்துணைச் செல்வமிருந்தாலும், சிறப்பிருந்தாலும் அவற்றால் அவன் நலம் பெறமுடியாது என்பதை,

மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்

எனத் திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்.

பெண்மையைப் பேருயர்வாய்ப் பேசுவது தமிழ் மரபு.

வாழுகின்ற நாடு, தாய்நாடு;

பேசுகின்ற மொழி, தாய்மொழி;

கல்விக்கொரு கடவுள், கலைமகள் - பெண்;

செல்வத்திற்கொரு கடவுள், இலக்குமி - பெண்;

ஓடுகின்ற நதி, காவிரி - பெண்;

வாழும் மண், நிலமகள் - பெண்

என இவ்வாறு உயர்ந்தவை எவற்றையும் பெண்மையின் வடிவிற்கண்டு போற்றுவது இந்நாடு என்பர், பெரியோர்.

பெண்களை இத்துணை உயர்வாய் மதித்த இந்நாட்டிலேயே, 'சேலைகட்டிய மாதரை நம்பினால் தெருவில் திகைத்து நிற்பரே' என்ற பாடலும் எழத்தான் செய்தது. கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் ஆகியன அடங்கியது, கணக்கு. மேலைநாட்டில் ஒருவன் தன் மனைவியைக் கணக்கு எனச் சுட்டிக்காட்டுகிறான். ஆம்! பட்டுப் புடைவை வேண்டும், தங்க நகை வேண்டுமெனத் தேவைகளைக் கூட்டும் கூட்டல் என்றும், தன்னிடமுள்ள பணத்தைக் கழிக்கும் கழித்தல் என்றும், தொல்லைகளின் பெருக்கல் என்றும், நண்பர்களையெல்லாம் பிரித்துவிடும் வகுத்தல் (My wife is an addition of cares; subtraction of pocket money; multiplication of troubles and division of friends) என்றும் குறிப்பிட்டான்.

இவ்வாறு உலகமெங்கும் பெண்களை மிக உயர்வாய் ஒரு புறமும், மிகவும் தாழ்வாய் ஒருபுறமும் பேசுதற்குக் காரணம் யாது? எவன் சிறந்த 'வாழ்க்கைத்துணை' அமையப்பெறுகிறானோ, அவன் பெண்மையைப் போற்றுகிறான்; எவனுக்கு வாழ்க்கைத் துணை செம்மையாய் அமையாது அல்லலுக்கு ஆட்படுகிறானோ அவன் பெண்மையைத் தூற்றுகிறான். குடும்ப வாழ்வில் இன்பமும் துன்பமும் நேருதலான் அவற்றிற்கேற்பப் பெண்மையும் போற்று தலுக்கோ பழிப்புக்கோ ஆளாகிறது!

பெண்மை மிகமிக உயர்வானது என்பதில் எவருக்கும் மறுப் பில்லை; ஆனால், வாழ்க்கை இணைப்பில் இடர் விளைக்கும் போது பழிப்புக்கும் ஆளாகிவிடுகிறது. ஆதலாற்றான், இல்லாளை 'வாழ்க்கைத்துணை' என்று கூறுதலோடமையாது, அத்துணை யானது நலமாயும் அமைந்தாற்றான் பெருமையும் பீடும் துலங்கும் என்றும் வலியுறுத்துகிறார். எனவே, இல்லாளைப்பற்றிக் கூறும் திருக்குறள் அதிகாரம் 'வாழ்க்கைத்துணை' என்பதோடமையாது 'வாழ்க்கைத் துணைநலம்' என்னும் பெயரையும் பெற்றது.

ஆணும் குடும்பநலம் நாடும் நல்லொழுக்கம் உடையவனாய் விளங்க வேண்டும்; குடிகாரனாகவோ, பிறனில் விழைபவ னாகவோ, சூது களவு நிறைந்தவனாகவோ இருந்தால் அக் குடும்பப்பெண் படும் அல்லல் சொல்லி முடியாததாம். இருவர் பொறுப்புகளும் சமபங்கினவே என்றாலும் இல்லப் பொறுப்புகளை முற்றிலுமாய் ஏற்பவள் பெண் என்பதால் அப்பெண்மை உரிய சிறப்புடன் அமைய விழையும் கருத்துகளே

பெருமளவில் வெளிப்படுவதாகின்றன. இந்நூலாசிரியர் இக் கருத்தையே,

> பெண்ணியற்கை கண்டார்கள் பெருமை கண்டார்;
> பேருலக மெல்லாமும் பெண்மை யாட்டம்;
> நன்மையெனிற் கடலாகும்; தீமை யென்றால்
> நானிலமும் வானகமும் நடுங்க வைக்கும்

என நயமாய்க் குறிப்பிடுகின்றார். பெண், தெய்வமெனப் போற்றத்தக்கவள் என ஆசிரியர் பெருமைபெறப் பேசுகிறார்.

> காப்பாக நிறைகொண்டு வாழ்வு முற்றிக்
> கனிந்தா(ள்)ஓர் பெண்ணென்றாற் கடவுள் அன்றோ!

இத்தகைய பெருமைக்குரிய பெண்கள் அவர்கட்குரிய பெருமைகளின்றி இருந்தால்,

> புண்ணுக்கே ஈமொய்த்தாற் போலே ஆண்கள்
> புலனுக்கே விருந்தாகிப் போவா ரன்றி,
> எண்ணுக்கே அடங்காத இன்பம் ஈந்தார்
> இல்லறத்தை வாழ்வித்தார் என்ப தாமோ?

என்ற வினாவை எழுப்பிச் சிந்திக்க வைக்கிறார். போற்றுதற்குரிய பெண்மையினைச் சாடுவதாய் எவரும் எண்ணிவிடக்கூடாதே என்பதால்,

> தாய்க்குலத்தைச் சுடுசொல்லால் தாக்க வில்லை;
> தகவிழந்தார் எப்பகுதி தனிலும் உண்டு;
> மாய்க்கவரும் புலியதனைக் கிழிக்க வல்ல
> மங்கையரும் இருக்கின்றார்; வாழ்க அன்னார்!

எனத் தற்காப்பும் செய்துகொள்கின்றார்.

பெண்ணேயாயினும் ஆணேயாயினும் தகவுடையார் வாழ்த்துதற்குரியவராவர்; தகவிழந்தாரோ பெருமையைச் சாய்த்து நிலத்துக்குப் பெருஞ்சுமையாவர் என்பதே இந்நூலிலுள்ள 'தாய்மை'ப் பகுதியின் திரண்ட கருத்தாய் விளங்குகிறது.

அடுத்து 'மானம் ஆறாறு', 'முருகு முப்பத்தாறு' என இரு பகுதிகள் உள்ளன. மானத்தைப்பற்றிப் பொதுவான கருத்தை முதல் ஆறு பாடல்களில் கூறிய பின்னர்,

> வீறெடுத்துப் பணிபுரியப் பெண்மானம்,
> ஆண்மானம், வியன்பார் முற்றும்
> சீரெடுத்த மொழிமானம், இனமானம்,
> இடமானம்

ஆகியவற்றைத் தனித்தனியே தலைப்புக்கேற்ப 'ஆறாறு' பாடல்களில் பாடியுள்ளார். இப்பகுதியிலுள்ள ஒவ்வொரு

பாடலிலும் மிக உயர்வான கருத்துகளைத் தந்து தனித்தமிழ் நடையில் மானமெனும் உயிர்நிலையை உயர்த்தியுள்ளார்.

இறைமுன்னும் தமிழில்லை; திருமணத்தில்
 தமிழில்லை; இயங்கு வாழ்க்கைத்
துறைதோறும் வடமொழிக்கே சிறப்பென்றால்,
 தமிழுருயிர் துறத்தல் நன்றே!

என ஆசிரியர் கூறியுள்ளதை நன்கு ஓர்ந்து, 'எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்' என மொழிமானம் காத்தலை நம் முதற்கடமையாய்க் கொள்ளவேண்டும்.

கவிஞர்கள் உலகச் சிந்தனையாளர்களேயென்றாலும் சொந்த ஊர் என்றபோது தனித்த பற்றும் பாசமும் ஏற்படுவது இயல்பே! ஆசிரியரின் சொந்த ஊரில் அவர் தந்தையார் மண்சுவரும் ஓலைக்கூரையுமாய் எழுப்பிய முருகர் திருக்கோவில் கற்கோவிலாய் கவினுறத் திகழ வேண்டுமென எண்ணியெண்ணி அவர் மனமுருகப் பாடிய பாடல்களே 'முருகு முப்பத்தாறு' என அவரே குறிப்பிட்டுள்ளார். ஆசிரியரது தன்வரலாற்றின் ஒரு பகுதியாய் 'முருகு முப்பத்தாறு' விளங்குகிறது. ஆசிரியரின் அருமைத் தந்தையார் மருதமுத்து 1934இல் கட்டிய மண்சுவர்க் கோவிலை அவர் விரும்பியவாறு அவர் வாழ்நாளில் கற்கோயிலாக்க இயலாது போயிற்றெனினும், தம் தந்தையின் ஆசையை நிறைவேற்றும் தனயனாய்த் திரு. அரங்கநாதன் அரிதின் முயன்று ஆன்றோர் துணையுடன் அம்மண்கோவிலைக் கற்கோயிலாக்கி 14-5-1986 அன்று திருக்குட நன்னீராட்டு விழா நடத்த இருக்கிறார். 'இறைமுன்னும் தமிழில்லை' என்று ஏங்கும் இக்கவிஞர், தம் குடும்பக் கோவிலின் குடமுழுக்கு நீராட்டு விழாவைப் பேரூர் அருட்டிரு இராமசாமி அடிகளாரையும், கௌமார மடத் தலைவர் அருட்டிரு சுந்தரசுவாமிகளையும் கொண்டு தமிழில் வழுத்திச் செய்ய இருக்கிறார் என்பது மகிழ்தற்குரியது.

ஆசிரியரின் கவிதைகள் மரபு வழாது, இனிய எளிய தூய தமிழில் அமைந்து சிறக்கின்றன. கருத்துகளை அவர் வளமுற எடுத்துச் சொல்லும் பாங்கு போற்றத்தக்கதாயுள்ளது.

தாயாகிப் பால்சுரந்து மகவ ளர்த்துத்
 தண்மையினும் பொறுமையினும் தழைத்து நிற்கும்

எனத் தாய்மையையும்,

அடக்கமிரு பாலார்க்கும் பொதுவென் றாலும்
அரிவையருக் காற்றல்தரு மாற்ற லாகும்

எனப் பெண்களின் அடக்கத்தையும்,

பருந்தெடுத்து விழுங்கியவோர் மீனைப் போலப்
பாவைமறை யாராலும் பறிக்க லாகா

எனப் பாவையரின் மறைப்பையும்,

ஆனவுனை யிழந்தாரேல் அனைத்தையுமே
யுடனிழந்தா ரறிவேம், நன்றே

என மானத்தின் மாண்பையும்,

மோழைக்கிரு கோடொப்புறு மானத்தொடு பொறுமை
மூழ்கப்புரி மாயைக்கனல் வேறற்கருள் முருகே!

என இறையை மனமுருகி வழுத்துவதையும் இந்நூல்வழி அறிந்து மகிழ்கிறோம்!

முள்நிறைந்த கள்ளியினைக் காவல் செய்ய
முல்லையினை வேலிவைக்கும் முறைமை யுண்டோ?

வழுக்கித்தான் மூழ்குபவன் காப்பதற்குப்
போனானை வலிந்து மூழ்க
இழுக்கின்ற வாறன்றோ?

எனும் வினாக்கள் வாயிலாய் ஆசிரியர் சுவைமிக்க உவமைகளைக் கூறியுள்ளார்.

நல்லாசிரியரின் நல்லுள்ளம் வாழி! நாளும் அவர் புலமை வாழி!

நூல்ஆக்கம்	பாவலர் ம. அரங்கநாதன்
வகைமை	கவிதை
வெளியீடு	வானதி பதிப்பகம், சென்னை. (1986)